உ

சிவமயம்.

# ஸ்ரீ திருவாஞ்சிய க்ஷேத்திர புராணம்.

ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்தது.

(ஸ்காந்த, பிரம்மாண்ட, ஸாம்போப, ஆக்னேய புராணங்களில் கூறப்பட்டது.)

திருவாஞ்சியம்,
S. பாலசுப்ரமணிய செட்டியாரால்,
பதிப்பிக்கப்பட்டது.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

ஸ்ரீமஹாபாரத பிரஸ்,
கும்பகோணம்.

1939.

Copyright Registered.] விலை ராப்பர் பைண்டு ரூ. 0-10-0.

இந்தப் புஸ்தகத்தின் கையெழுத்துப் பிரதியை ஸம்ஸ்கிருத மூலத்தோடு ஒத்துப்பார்த்துக் கொடுத்த பிரம்மஸ்ரீ M. கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள், S. கிருஷ்ணமூர்த்தி அய்யர், N. கிருஷ்ணசாமி சாஸ்திரிகள் முதலியோர்களுக்கும், இதை அச்சிட்டுக்கொடுத்த குடந்தை, ஸ்ரீமஹாபாரத அச்சுக்கூடத்தாருக்கும் என் நன்றியறிதலை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுபம்!

ஸ்ரீவாஞ்சியம், 10-10-39. S. பாலசுப்ரமணியம் செட்டியார்.

சிவமயம்.

# திருவாஞ்சிய க்ஷேத்திர புராணம்.

## பொருளடக்கம்.


| அத்யாயம். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| | **ஸ்காந்தபுராணம்.** | |
| 1 | முனிதீர்த்தம் புகழ்தல் ... ... | 1 |
| 2 | பராசர தீர்த்தம் புகழ்தல் ... ... | 7 |
| 3 | அத்திரி தீர்த்தமகிமைகூறல் ... ... | 12 |
| 4 | புண்ணியபுட்கரணிப் புகழ்ச்சியில் அரி தவஞ்செய்தல் | 16 |
| 5 | கண்ணன் இலக்குமியின் சேர்க்கை ... ... | 19 |
| 6 | இந்திரசாபம் நீங்குதல் ... ... | 24 |
| 7 | விகுக்ஷி மனைவியின் சாபநீக்குதல் ... ... | 28 |
| 8 | மாகமகிமை கூறல் ... ... | 32 |
| 9 | துர்க்கமகிமை கூறல் ... ... | 36 |
| 10 | ஸ்தலப்பெருமை கூறல் ... ... | 39 |
| | **பிரம்மாண்டபுராணம்.** | |
| 11 | திருவாஞ்சிய நாதரது மந்திரகல்பம் ... ... | 45 |
| 12 | அகஸ்தியர் இருடிகள் சம்வாதம் ... ... | 49 |
| 13 | பரமசிவன் பார்வதிக்கு ஸ்தலமகிமை கூறுதல் ... | 52 |
| 14 | ஷை ... ... | 55 |
| 15 | ஷை ... ... | 56 |
| 16 | கைலாயத்திலிருந்து சிவபிரான் வருகை கூறல் ... | 59 |
| 17 | பார்வதி சிவபிரானை வழிபடுதல் ... ... | 62 |
| 18 | அயனுக்கு வரங்கொடுத்தல் ... ... | 64 |
| 19 | ஷை ... ... | 68 |
| 20 | திருவாஞ்சேசர் மகிமை ... ... | 70 |
| | **சாம்போபபுராணம்.** | |
| 21 | கார்த்திகை முதல் ஞாயிற்றுக்கிழமையின் பெருமை— விஸ்வபத்ரன் அந்தணன் கொலைபாவத்தினின்று நீங்குதல் ... ... | 75 |

| அத்யாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 22 | கார்த்திகை இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையின் பெருமை—தாயுமணி கட்குடித்தபாவம் நீங்குதல் ... | 81 |
| 23 | குப்தகங்கையின் இயற்கையும் பெருமையும் வருணித்தல் ... ... | 85 |
| 24 | கார்த்திகை மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையின் பெருமை—சுகோளனது களவு நீக்கம் ... | 89 |
| 25 | கார்த்திகை நான்காவது ஞாயிற்றுக்கிழமையின் பெருமை—துர்போதனர் தாயுடன்கூடிய குற்றம் நீங்குதல் ... ... | 93 |
| 26 | கார்த்திகை ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமையின் பெருமை—காலஜித் என்பவனுடைய ஸம்ஸர்க்க தோஷ மோக்ஷம் ... ... | 97 |
| 27 | கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை நீராட்டவிதி ... | 102 |
| 28 | திருவாஞ்சிய லிங்கமகிமை வருணனை ... ... | 108 |
| 29 | ஆருத்திராதரிசன மகிமை ... ... | 113 |
| 30 | வியதீபாத மகிமை ... ... | 116 |
| 31 | மகர சங்கராந்தி புண்ணியபலன் ... ... | 119 |
| 32 | அமாவாசை மகிமை ... ... | 125 |
| 33 | அர்த்தோதய மகோதய புண்ணியகால நீராட்டவிதி ... | 128 |
| 34 | பிரத்யக்ஷ அனுபவங்களால் மரணமறிதல் ... | 130 |
| 35 | பூதானம் முதலியதானங்களின் மகிமை ... | 133 |
| 36 | பிரம்ம தீர்த்தத்தின் தோற்றம் ... ... | 138 |
| 37 | அக்னி தீர்த்தம் தோன்றல் ... ... | 141 |
| 38 | யமகுண்ட மகிமை ... ... | 146 |
| 39 | ஸர்வதீர்த்த மகிமை ... ... | 151 |
| 40 | இந்திரதீர்த்தத்தின் புகழ்ச்சி ... ... | 153 |
| 41 | ஞாயிற்றுக்கிழமைப் புகழ்ச்சி ... ... | 157 |
| 42 | தக்ஷன் வேள்வி கூறல் ... ... | 159 |
| 43 | ததீசி சாபங்கூறல் ... ... | 161 |
| 44 | தக்ஷன் வேள்வி சிதைத்தல் ... ... | 162 |
| 45 | ஸ்ரீவாஞ்சிய க்ஷேத்திர மகிமைகூறல் (சிவரகஸ்யம்) ... | 172 |
| 46 | ஹரியைக்குறித்து சிவபிரான் கூறிய திருவாஞ்சிய மகிமை (சிவரகஸ்யம்) ... ... | 174 |

| அத்யாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 47 | குடமுனிவர் திருவாஞ்சியத்தில் வசித்தது ... | 175 |
| 48 | இராமதீர்த்தப் புகழ்ச்சி ... ... | 177 |
| 49 | சேஷ இலக்குமி தீர்த்தப் புகழ்ச்சி ... ... | 181 |
| 50 | சக்கர தீர்த்தம், வீரகதீர்த்தம், ராமதீர்த்தம் தேவ தீர்த்தம் இவைகளின்பெருமை ... ... | 185 |
| 51 | தப்ராளிவனப் பெருமை ... ... | 189 |
| 52 | சிறுவண்டூர் மகிமை ... ... | 193 |
| 53 | தப்ராளிவனப் பெருமை ... ... | 197 |

ஆக்னேயபுராணம்.

| | | |
|---|---|---|
| 54 | பிராகிருகேஸ்வர மகிமை ... ... | 200 |
| 55 | ஷை ... ... | 204 |
| 56 | ஷை ... ... | 208 |
| 57 | ஷை ... ... | 212 |
| 58 | ஷை ... ... | 215 |
| 59 | கடன் என்றவேடன் கதை ... ... | 217 |
| 60 | வேடத்தம்பதிகள் சாயுஜ்யமடைதல் ... ... | 222 |
| 61 | திருவாஞ்சிய மகிமை புராணங்கூறுபவனைப் புகழ்தல் | 22 |


பொருளடக்கம் முற்றிற்று.

சிவமயம்.

# திருஞானசம்பந்த சுவாமிகளருளிச்செய்தது.

## திருவாஞ்சியம்—பண்—இந்தளம்.

வன்னி கொன்றை மதமத்த மெருக்கொடு கூவிளம்
பொன்னி யனற்சடையிற் பொலிவித்த புராணனார்
தென்ன வென்று வரிவண்டிசை செய்திரு வாஞ்சிய
மென்னையாள் வுடையானிட மாகவுகந்ததே (க)

காலகாலர் கரிகானிடை மாநட மாடுவர்
மேலர் வேலைவிட முண்டிருள் கின்றமிடற்றினர்
மாலை கோலமதிமாட மன்னுந் திருவாஞ்சிய
ஞாலம் வந்துபணியப் பொலி கோயினயந்ததே (உ)

மேவிமலான்றர் விரிவுற்ற விரண்டினர் மூன்றுமாய்
நாவி னாலருடலஞ் சினராறரே ழோசையர்
தேவி லெட்டர் திருவாஞ்சிய மேவிய செல்வனார்
பாவந்தீர்ப்பர் பழி போக்குவர் தம்மடியார்கட்கே (ந)

சூலமேந்திவளர் கையினர் மெய்சுவண்டாகவே
சாலநல்ல பொடிப்பூசுவர் பேசுவர் மாமறை
சீலமேவு புகழாற் பெருகுந் திருவாஞ்சிய
மால முண்டவடி கன்னிட மாகவமர்ந்ததே (ச)

கையிலங் குமரியேந்துவர் காந்தளம் மெல்விரற்
றையல் பாகமுடையா ரடையார் புரஞ்செற்றவர்
செய்ய மேனிக் கரிய மிடற்றார் திருவாஞ்சியத்
தையர்பாத மடைவார்க் கடையாவரு நோய்களே (ரு)

அரவம் பூண் பரணியுஞ் சிலம் பார்க்கவகந்தொறு
மிரவினல்ல பலிபேணுவர் நாணிலர் நாமமே
பரவுவார் வினைதீர்க்க நின்றார் திருவாஞ்சிய
மருவியேத்த மட மாதொடு நின்றவெம்மைந்தரே (சு)

விண்ணிலானபிறை சூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணினாலங் கனனுடலம் பொடியாக்கினார்
பண்ணிலான விசைபாடன் மல்குந் திருவாஞ்சியத்
தண்ணலார் தம்மடி போற்றவல்லார்க் கில்லையல்லலே (எ)

மாடநீடு கொடி மன்னிய தென்னிலங்கைக்குமன்
வாடியூடவரை யாலடர்த் தன்றருள் செய்தலர்
வேடவேடர் திருவாஞ்சிய மேவிய வேந்தரைப்
பாடநீடு மனத்தார் வினை பற்றறுப்பார்களே (அ)

செடிகொணோ யினடையார் திறம்பார் செறுதீவினை
கடிய கூற்றமுங் கண்டகலும் புகழான்வரு
நெடிய மாலொடயனேத்த நின்றார் திருவாஞ்சியத்
தடிகள் பாதமடைந்தா ரடியாரடியார்கட்கே (கூ)

பிண்ட முண்டு திரிவார் பிரியுந் துவராடையார்
மிண்டர் மிண்டு மொழி மெய்யல பொய்யிலை யெம்மிறை
வண்டு கெண்டிமருவும் பொழில் சூழ் திருவாஞ்சியத்
தண்ட வாணனடிகை தொழுவார்க் கில்லையல்லலே (க0)

தென்றலன்று பொழில் சென்றணையுந் திருவாஞ்சியத்
தென்று நின்ற விறையானை யுணர்ந்தடி யேத்தலா
னன்று காழிமறை ஞான சம்பந்தன செந்தமி
ழொன்று முள்ளமுடையாரடை வாருயர் வானமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு சுவாமிகளருளிச் செய்தது.

### திருவாஞ்சியம்—திருக்குறுந்தொகை.

படையும் பூதமும் பாம்பும் புல்வாயதள்
உடையுந் தாங்கிய வுத்தம ஞர்க்கிடம்
புடைநிலாவிய பூம்பொழில் வாஞ்சியம்
அடைய வல்லவர்க் கல்லலொன் றில்லையே (க)

பறப்பையும் பசுவும் படுத்தும் பல
திறத்தவும் முடையோர் திகழும் பதி
கறைப் பிறைச் சடைக்கண்ணுதல் சேர்தரு
சிறைப் புடைத் திருவாஞ்சியஞ் சேர்மினே (உ)

பற்றி லாடர வோடப் புனன்மதி
செற்று செஞ்சடைத் தேவர் பிரான்பதி
சுற்றுமாடங்கள் சூழ் திருவாஞ்சியம்
பற்றிப் பாடுவார்க்குப் பாவ மில்லையே (ந)

அங்க மாறு மருமறை நான்குடன்
றங்கு வேள்வியர் தாம் பயிலுங்நகர்
செங்கண் மாலிட மார் திருவாஞ்சியம்
தங்குவார் நம்ம மரர்க் கமரரே (௪)

நீறுபூசி நிமிர்சடை மேற்பிறை
யாறு சூடி மடிகளுறைபதி
மாறு தானொருங்கும் வயல்வாஞ்சியந்
தேறி வாழ்பவர்க்குச் செல்வ மாகுமே (௫)

அற்றுப் பற்றின்றி யாரையு மில்லவர்க்
குற்ற நற்றுணை யாவனுறைபதி
தெற்று மாடங்கள் சூழ் திருவாஞ்சியங்
கற்றுச் சேர்பவர்க்குக் கருத்தாவதே (௬)

அருக்க னங்கிநம னொடு தேவர்கள்
திருத்துஞ் சேவடி யான் றிகழுங்நகர்
ஒருத்தி பாக முகந்தவன் வாஞ்சியம்
அருத்தி யாலடை வார்க்கில்லை யல்லலே (எ-க0)

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிச் செய்தது.

### திருவாஞ்சியம்—பண்—பியந்தைக்காந்தாரம்.

பொருவனார் புரிநூலார் புணர்முலை யுமைவளோடு
மருவனார் மருவார்பால் வருவதுமில்லை நம்மடிக
டிருவனார் பணிந்தேத்துந் திகழ்திரு வாஞ்சியத்துறையு
மொருவனா ரடியாரை யூழ்வினை நலியவொட்டாரே. (௧)

தொறுவிலா னிளவேறு துண்ணென விடிகுரல்வெருவிச்
செறுவில் வாளைகளோடச் செங்கயல் பங்கயத் தொதுங்கக்
கறுவிலா மனத்தார்கள் காண்டகு வாஞ்சியத்தடிகண்
மறுவிலாத வெண்ணீறு பூசு தன் மன்னு மொன்றுடைத்தே (௨)

நூர்த்தர் மூவையிலெய்து சுடுநுனைப் பகழியதொன்றாற்
பார்த்தனார் திரடோண்மேற் பன்னுனைப்புகழிகள் பாய்ச்சித்
தீர்த்தமாமலர்ப் பொய்கைத்திகழ் திருவாஞ்சியத்தடிகள்
சாத்துமா மணிக்கச் சங்கொரு தலைபல தலையுடைத்தே (௩)

சள்ளை வெள்ளையங் குருகுதான துவாமெனக்கருதி
வள்ளை வெண்மலரஞ்சி மறுகியோர் வாளையின் வாயிற்
றுள்ளு தெள்ளுநீர்ப்பொய் கைத்துறைமல்கு வாஞ்சியத்தடிகள்
வெள்ளை நுண்பொடி பூசும் விகிர்தமொன் றொழிகிலர்தாமே (௪)

மைகொள் கண்டரெண்டோளர் மலைமகளுட னுறைவாழ்க்கை
கொய்த கூவின மாலை குலாவிய சடை முடிக்குழகர்
கைத நெய்தலங் கழனி கமழ் புகழ் வாஞ்சியத்தடிகள்
பைதல் வெண்பிறையோடு பாம்புடன் வைப்பது பரிசே (௫)

கரந்தை கூவிளமாலை கடிமலர்க் கொன்றையுஞ் சூடிப்
பரந்த பாரிடஞ் சூழ வருவர் நம்பரமர் தம்பரிசாற்
றிருந்து மாடங்க ணீடுதிகழ் திருவாஞ்சியத்துறையு
மருந் தனாரடியாரை வல்வினை நலியவொட்டாரே (௬)

அருவிபாய் தரு கழனியலர் தருகுவ ளையங்கண்ணார்
குருவியாய் பிளிசேர்ப்பக் குருகினமிரி தருகிடங்கிற்
பருவரால் குதிகொள்ளும் பைம் பொழில் வாஞ்சியத்துறையு
மிருவராலறி யொண்ணு விறைவனத றைகழல் சரணே (௭)

களங் களார் தரு கழனியளிதரக் களிதருவண்டு
வுளங் களார் களிப்பாடலும் பரிலொலித்திடுங்காட்சி
குளங்களா னிழற்கீழ் நற்குயில் பயில் வாஞ்சியத்தடிகள்
விளங்கு தாமரை ப்பாதநினைப்பவர் வினை நலிவிலரே (௮)

வாழையின் கனிதானுமது விம்முவருக் கையின்சுளையுங்
கூழை வானரந்தம் மிற்கூறிது சிறிதெனக்குழறித்
தாழை வாழையந் தண்டாற் செருச்செய்துதருக்கு வாஞ்சியத்து
ளேழை பாகனை யல்லாலிறைெயனக் கருதுதலிலமே (௯)

செங்நெலங் கலங் கழனித் திகழ் திருவாஞ் சியத்துறையு
மின்னலங் கலஞ்சடை யெம்மிறை வனதறை கழல்பரவும்
பொன் னலங்கல நன்மாடப் பொழிலணி நாவலாரூ ரன்
பன்னலங் கனன்மாலை பாடு மின்பத்தருளீரே (௧௦)

திருச்சிற்றம்பலம்.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

# ஸ்ரீவாஞ்சியம் - திருப்புகழ்.

தனத்தனந்தன தானன தானன
தனத்தனந்தன தானன தானன—தனதான

இபமாந்தர் சக்ரபதி செறி
படையாண்டு சக்ரவரிசைக
ளிடவாழ்ந்துதிக்கு விசயமண்—ணரசாகி

இறுமாந்து வட்டவணைமிசை
விரிசாந்து வெற்றிமலர்தொடை
யெழிலார்ந்தபட்டி வகைபரி—மளலேபந்

தபனங்க ரெத்நவணிகல
னிவைசேர்ந்த விச்சைவடிவது
தமர்சூழ்ந்து மிக்கவுயிர்நழு—விடபோது

தழல்தாங் கொளுத்தியிடவொரு
பிடிசாம்பல் பட்டதறிகிலர்
தனவாஞ்சைமிக்க னடிதொழு—கிலையாரே

உபசாந்த சித்தகுருகுல
பவபாண்டவர்க்கு வரமரு
ளுருவோன் பிரசித்திநெடியவன்—ரிஷிகேசன்

உலகீன்ற பச்சையுமையண
னடவேங்கடத்தி லுறைபவ
னுயர்சார்ங்க சக்ரகரதலன்—மருகோனே

திரிபுராந்தகர்க்கு வரசுத
ரதிகாந்தன் மைத்துன முருக
திறல்பூண்ட சுப்ரமணிய சண்—முகவேலா

திரைபாய்ந்த பத்மதடவய
லியல்வேய்ந்த முத்தியருள்தரு
திருவாஞ்சியத்திலமரர்கள்—பெருமாளே.

சிவமயம்.

ஶ்ரீவாஞ்சேஶ்வராய நம: ||

# திருவாஞ்சிய க்ஷேத்திர புராணம்.

## ஸ்காந்த புராணம்.

வந்தே வாஞ்சேஶ்வரம் லிங்கம் வந்தே மங்களநாயிகாம் |
வந்தே வாஞ்சேஶ க்ஷேத்ரம் வந்தேஹம் முநிதீர்த்தகம் ||
ஸம்ஸாரஸஞ்சிதபாபௌகவிச்சேதநவிசக்ஷணம் |
விக்நாந்தகார ஸூர்யாபம் விக்நராஜமஹம் பஜே || || ௨ ||
வாஞ்சேஶ்வர பவாந்த ஶம்போ வாஞ்சிதார்த்தப்ரதாயக |
வாஞ்சாமேதவ பாதாப்ஜே பக்திம் தாம் தேஹி ஶாஶ்வதீம் || ௩ ||
கங்காப்ரவாஹ வரதாம் கங்காஶிரோமநோஹராம் |
மங்களாயதநாம் தேவீம் வந்தே மங்களநாயிகாம் || || ௪ ||

### முதலாவது அத்யாயம்.

திருவாஞ்சீசுவர லிங்கத்தையும், மங்களநாயகியையும், திருவாஞ்சிய க்ஷேத்திரத்தையும், முனிதீர்த்தத்தையும் வணங்குகின்றேன்.

ஸம்ஸாரத்தில் ஸஞ்சிதமாகக்குவிந்த பாபங்களையகற்ற ஆற்றலுடையவனும் இடையூறுகிய இருளகற்றும பகலவனும், இடையூறுகட்கு அரசனுமான விநாயகரை வணங்குகின்றேன்.

திருவாஞ்சிய க்ஷேத்திரத் தலைவனான சம்புவே! வேண்டியோர் வேண்டிய பலனை அளிப்பவனே! உனது திருவடித்தாமரைகளில் நிலைபெற்ற பக்தியை விரும்புகிறேன். அதனை எனக்கு அளித்தருள வேண்டுகிறேன்.

கங்கைப் பெருக்குப்போன்ற வரங்களையுடையவளும், கங்கைசூடியின் மனங்கவர்பவளும், மங்களங்களுக் கிருப்பிடமானவளும் ஆகிய மங்களநாயகியை வணங்குகின்றேன்.

இருடிகள் கூற்று:—"வியாசரின் சீடரும், வியாசர்போல் பற்றற்றவரும், பிரம்மஞானியாயும் இருக்கிற, ஏ! சூதபகவானே!

நீர் நைமிசாரண்யத்தில் வசிக்கின்ற எங்களுடைய பாக்கியமாகவும், வியாசரால் செய்யப்பட்ட புராணங்களின் உட்பொருளை அறிந்தவராயும் இருக்கிறீர். தீர்க்கஸத்திரத்தில் (யாகம்) உட்கார்ந்து கொண்டிருக்கிற நாங்கள் கதை கேட்பதில் ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம். எங்களுக்கு அவற்றைச் சொல்லவேண்டும். இப்புவியில் காசிக்குச் சமமாயோ அன்றி மேம்பட்டோ இருக்கின்ற க்ஷேத்ரங்களை எங்களிடத்தில் அருளிருக்கும்பக்ஷத்தில் கிருபையோடு சொல்லவேண்டும். உமது முகத்தாமரையினின்று வெளிபடும் ஸ்தலமகிமையுடன்கூடிய கதையாகிய இனிய அமுதத்தை எம் காதுகளாகிய பருகும் கருவிகொண்டு அடிக்கடி பருகவேண்டுமென்ற விருப்புடையேம்."

சூதர் :—"நீங்கள் கேட்ட கேள்வி ஸாதுக்களால் கேட்கத்தக்கதும், புண்ணியமானதும், பாவக்காட்டிற்குக் காட்டுத்தீபோன்றதும், உலகத்திற்கு மிகுந்த உபகாரமுமாயும் இருக்கின்றது. ஆதலின் மேன்மைதங்கிய வியாசரின அருள்பலத்தால் ஜாபாலிக்கும் அரசனுக்கும் கங்கையும யமுனையும் கூடும் சங்கமத்தில் நடந்த ஸம்வாதமாகிய கதையைக் கூறுகின்றேன்."

ஜாபாலி :—'அரசனே! காசிக்குச் சமமாயும காசிக்கு மேம்பட்டதாயும் திருவாஞ்சியம் என்று ஸ்தலமிருக்கிறது. அது இவ்வுலகில் ப்ரளயத்திலும் அழிவதன்று. அந்த ஸ்தலத்தில் தேவதைகளாலும் இருடிகளாலும் அடையப்பட்ட சிறந்த தீர்த்தமொன்றுண்டு. அது தேவர், அந்தணர், முனிவர் இவர்கட்கிருப்பிடமாயும் வேண்டும் பயனளிப்பதாயுமிருக்கிறது. அதற்கு கிருதயுகத்தில் மிகத் தூயபுண்யபுஷ்கரணியென்றும, திரேதாயுகத்தில் அத்ரி தீர்த்தமென்றும், துவாபரயுகத்தில் பராசர தீர்த்தமென்றும், கலியுகத்தில் கலிகல்மஷங்களைப் போக்கும் முனிதீர்த்தமென்றும் யுகங்கள்தோறும் பெயர் மாறுபடும். ஏ! அரசனே! அதன் காரணத்தைப் ப்ரதிலோமமாகக் கேட்பாயாக.'

பிருகத்ஸேனர் :—'ஏ! முனிவரே! அனுலோமமாகச் சொல்லும்படியிருக்கப் பிரதிலோமமாகச் சொல்வானேன்? அதன் காரணத்தைப் பின்பு விரிவாகச் சொல்லும.'

ஜாபாலி :—'சூரியவம்சத்தில் தோன்றிய மகாராஜனே! உலகிற்கு உபகாரத்தின்பொருட்டுத் தன் காரணமாகவே கேட்கின்றாய். திருவாஞ்சியத்தின் பெருமையை விரிவாகச் சொல்வதாயிருந்தால் ஆதிசேடனும் முடியாது. மானிடனாகிய நான் எம்மாத்திரம்.

எனக்குத் தெரிந்தவரையிலும் முழுதும் சொல்லுகின்றேன். கேட்பாயாக. சக்யம் என்ற சிறந்த மலையின் அடிவாரத்தினின்றும் காவேரி என்ற நதி தோன்றுகிறது. அது தூய நீர்ப்பெருக்குடையதாயும், அழகியதாயும், நல்ல புண்ணியமான மரங்களுடன் கூடியதாயும், கிரவுஞ்சங்கள், அன்னக் கூட்டங்கள், ஓங்கி நடக்கும் மயில்கள் இவற்ருேடு கூடியதாயும், அம்மலையின் அருகில் பூமியின் தோளில் அணியப்பட்ட சிறந்த தூய முத்துக்களாகிய மாலைபோன்றதாயும், கிழக்குக் கடலைச் சார்வதாயுமிருக்கிறது. இப்புவியில் அந்நதியின் பெருமையை உணர்ந்த இருடிகள், சித்தர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், சாரணர்கள் முதலியோர் அதன் கரையில் இருக்கின்ருர்கள். அந்தத் தீர்த்தத்தில் நீராடவிரும்பித் தேவரும், 'எப்பொழுது பூமியில் மனிதராகப் பிறந்து காவேரியில் ஸ்நானம் செய்வோம்' என்று விரும்புவர். இங்ஙனம் தேவரால் வேண்டப் பட்டதாயும் முன்னோரால் அடையப்பட்ட தாயுமிருக்கிற நதியானது சக்ய மலையிலிருந்து கிழக்கடல்வரையிற் சென்று பிராணிகளுக்குத் திருப்தியை விளைவிக்கின்றது. அதன் இருகரைகளிலும் தேவதானியங்களும, நீவாரங்களும், யவமும், கோதுமையும், உளுந்தும், பயறும், நவதானிய முதலியவைகளும், காட்டில் விளையும் முனிவரது உணவான கிழங்கு வேர் முதலியவைகளும் அந்த ஆற்றின் கரையில் எப்பொழுதும விளைகின்றன. சதங்கையடைந்த மேகலையின் ஒலிபோன்ற கலஹம்சங்களின் ஒலியுடன் கூடிய அவ்வாறு இலக்கணமெல்லாமமைந்த ஓர் பெண்போல் மனங்கவரும் தன்மைத்து. அவ்வாருகிய பெண் மரக்கூட்டங்களால் எக்காலத்தும் அலரும் மலருடன் கூடியிருக்கின்ருள். ஒலிக்கும் மதமுடைய வண்டுகளின் வீதிகளால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிருள். சிலவிடத்தில் சிற்ருற்றின் சேர்க்கையால் நிறைந்து அழகிய சுழிகளாகிய கொப்பூழை உடையவளாகயிருக்கிருள். சிலவிடங்களில் மிகவும் ஆழமாயும் ஸ்தப்தமாயும் இருக்கிற வழிகளிற் செல்பவளாயும் கடல் சேருமளவும் வேறு தீர்த்தங்களில் சேர்ந்து அவற்றைப் புனிதமாக்குபவளாயும் புண்ணியமானவளாயும் நுரையால் விளங்குபவளாயும் மீனுகிய கண்களையுடையவளாயும் இருந்துகொண்டு உலகினைத் தூய்மைப்படுத்துகிருள். இவ்வாறு நாகதீர்த்தம், ஹேமதீர்த்தம், கூர்மதீர்த்தம், ஸ்ரீரங்கம், நாகாரண்யம், பலாசவனம், புண்ணியமான பஞ்சநதம், பிரஸ்தானபுரம், சக்கரேஸ்வரம் வசித்த சக்கர தீர்த்தம், மத்யார்ஜுனம், கோவடுகம், புண்ணியத்தை வளர்க்கும் மாயூரம், திருவெண்காடு ஆகிய இவற்றை முறையே அடைந்து

கீழ்க்கடலே அடைகின்றாள். இங்ஙனம் உலகு புரந்து தனது தண்ணீரால் எல்லாப் பிராணிகளேயும் இரவு பகல் பாதுகாக்கின்றாள். சிரத்தையுடனே, அன்றி அசிரத்தையுடனே மோக்ஷத்தைக் கொடுப்பவளாய் எப்பொழுதும் நீராமல் இருக்கிறாள். பாபிகளும் அயனத்திலும் விஷுவிலும் சங்கிரமணத்திலும் கிரகணத்திலும் நீராடின் மோக்ஷத்தைப்பெறுவர். எள்ளுடன் சேர்ந்த காவேரி தீர்த்தத்தால் பிதுர்க்களேக்குறித்துத் தர்ப்பணம் செய்வோன் அப்பிதுர்க்களுக்கு முக்தியளித்தவனுகின்றான். ஏ! அரசனே! காவேரியின் தெற்கில் இரண்டுயோஜனே தூரத்தில் பரமசிவனுக்கு மகிழ்ச்சி விளேவிக்கின்ற திருவாஞ்சியமென்ற ஸ்தலம் இருக்கின்றது. காசியபர், அத்திரி, பரதவாஜர், தபோநிதியான ஜாமதக்னி, விஸ்வாமித்திரர், சிறந்த வசிட்டர், சிறந்த தபசியானகௌதமர் ஆகிய சிறந்த முனிவர்கள் கலியைக்கண்டு அஞ்சி உலகுக்கு உபகாரத்தின்பொருட்டு மற்றும் நூறு முனிவர்களுடன் திருவாஞ்சியம் வந்து கொடிய தவங்களேச் செய்து வரன்களேப்பெற்று மகிழ்ந்து வரம்பெறுங்காலத்தில் தனித்தனி இங்ஙனம் வேண்டினூர்கள். 'ஏ! தேவகுருவே! இப்புவியில் இந்தச் சிறந்த புண்ணிய தீர்த்தம் இக்கலியுகம் முடியுமளவும் எமது பெயரால் மக்களது பாவத்தையகற்றும் முனிதீர்த்தமென்று பிரசித்தியடையட்டும். இவ்வரம் தரத்தக்கதாயின் தங்களது வரத்தைப் பெறக்கூடியவர்களாக யாம் ஆகின்றோம்' என்று தேவர் தலேவனே வேண்டி இவ்வரத்தை அவர்கள் பெற்றனர். அதுமுதல் அத்தீர்த்தம் முனிதீர்த்தமென்று பெயர்பெற்றது. இப்புண்ணிய தீர்த்தத்தில் நீராடுபவன் இப்புவியில் முனிவர்க்குச் சமமாகின்றான். இன்றேல் வேறு வழியில்லே. பஞ்சமாபாதகம் செய்தவரும் உபபாதகம் செய்தவரும் நீராடினவளவில் தூயோராவர். இதில் ஐயமில்லே. அத்தீர்த்தத்தில் முயற்சியுடனும் தூய்மையுடனும் கன்னிகாதானம செய்வோன் இருபத்தொரு தலேமுறை குலத்தை உத்தரிப்பித்து முடிவில் பிரம்மலோகத்தில் வஸிப்பான். அரசனே, வைசியனே பிரம்மப்பிரதிஷ்டை செய்யின் ஏழு கோத்ரங்களுடைய நூற்றொரு குலத்தை கடைத்தேறச் செய்கிறான். இந்தத் தீர்த்தக்கரையில் ஒழுக்கமுடையோரும் தூயோருமாகிய அந்தணர்க்கு நிலமும் வீடும் நூற்றுக்கணக்காகக் கொடுத்து அமைப்பவன் ஏ! பிருகத்ஸேனனே! இங்கு சாம்ராஜ்யத்தைப் பெற்று பிரம்மாவின யுகம் முடியுமளவில் இந்திரனது ஒரு பாதிஆஸனத்தில் இருப்பான். ஒன்றிலிருந்து பத்தளவான அந்தணர்களேத் திருடமாகத் தானம் செய்து நிலேக்கும்படி செய்யவேண்டும். அதற்குச் சக்தியில்லாதவன்

அதிற் பாதியாவது, பாதியிற்பாதியாவது தனது சக்திக்குத்தக்க படி தானஞ்செய்யவேண்டும். அந்த நிலம் எப்படியிருக்கவேண்டு மெனின் வேறு நிலத்தை எதிர்பாராததும், நீர் நிறைந்ததாயும், எல்லாப்பயிரும் விளையத்தக்கதாயும், வாய்க்கால் உடையதாயும மிக்க கழனி சூழ்ந்ததாயும் இருக்கவேண்டும். இங்ஙனம் முறை யாக கிராமத்தை அந்தணனுக்கு மகிழ்ச்சி விளைவிப்பதாகச் செய்ப வனுடைய புண்யபலத்தைப் பரமசிவனாலும் சொல்லமுடியாது. அவன் இவ்வுலகில் பலவிதமான நிறைந்த போகங்களை அநுபவித்து, புத்ர, பௌத்ர, செல்வ, தன, தான்யம் இவற்றால் நிறையப்பெற்ற வனாய் முடிவில் சிவ ஸாலோக்யத்தை அடைந்து முக்திபெறுகிறான். மகன் பித்ருக்களைக் குறித்து காளைமாடு தானம் செய்துவிடவேண் டும். பத்து லக்ஷணங்களோடு கூடியதும், முடமில்லாததும் நீண்ட வாலுடையதும், குட்டைக்கொம்புடையதும், நீலக்கண்களையுடைய தும், சூடு போடாததும், கால் சிவந்ததும், கறுத்த கழுத்துடைய தும், நீளமான காற்குளம்புடையதும், ஸ்ரீவத்ஸத்துடன்கூடியதும், பிறகு தோன்றிய கன்றுக்குட்டியையுடையதும் ஆகியவிருஷபத்தை, அந்தணனோ, அரசனோ, வைச்யனோ, ஸ்திரீயோ, சூத்ரனோ, அறி வுடையோன் ஸ்வர்க்கத்தின்பொருட்டோ, சிவலோகத்தின்பொருட் டோ, மோக்ஷத்தின்பொருட்டோ, பித்ருக்களுக்கு முக்தியுண்டாக வேண்டித் தானஞ்செய்யின், அந்த விருஷபத்தின் மயிரின் எண் ணளவு, ஏ! அரசனே! தேவ வருஷம் பிரம்மபுரத்தில் நிச்சயமாக இருப்பான். முடிவில் பிரும்மலோகத்தையுடைய சக்ரவர்த்தியும் ஆகின்றான். கன்றுடன் கூடியதும பட்டுமாலையுடையதும், பொற் கொம்புடையதும், வெள்ளிக்குளம்புடையதும், வெண்கலக் கறவைப் பாத்திரத்தையும் நல்ல சீலமுடையதான பசுமாடு ஒன்றோ, இரண்டோ, மூன்றோ, நான்கோ, ஐந்தோ தரித்திரனுயும், ச்ரோத் ரியனுயும் குடும்பியாயும் வேதாத்யயனத்தில் பற்றுடையவனுயும் நல் லொழுக்கமுடையவனுயும் ஸந்தோஷமுடையவனுயுமிருக்கும் அந்த ணனுக்கு தர்ம விருப்புடையோன் அளிப்பின் தனது ஸந்ததி அற் றுப்போகும்வரையில் பிரம்மஸபையில் வசிப்பான். தானம் வாங் கினவன் அக்கோவை விற்பின், அவனுக்கு அக்கோ, ரௌரவ நர கத்தை அளிக்கும. ஆகையால் கோவை தானம் வாங்கி விற்கக் கூடாது. அக்கோவை வாங்கினவன், அதனை ஒப்புக்கொண்டவன், நடுநிற்பவன், பொருளைக்கொடுத்தவன் ஆகிய எல்லோரும் நரகத்தை அடைவர். ஏ! பிருகத்சேனனே! இங்ஙனம் செய்தவரெல்லோரும் பிரம்மாமுதல் புல்வரையிலும் உப்புக்குழியில் வசிப்பர். நிஷ்க

மார்த்தமான தனத்தைத் தரித்திரனை அந்தணனுக்கு செல்வம் வளரவேண்டித் தன்னுலியன்ற அளவு கொடுக்கவேண்டும். பசி தாகத்தால் வருந்தும் பிராமணன் ஒருவனுக்கோ அல்லது இருவருக்கோ நன்கு பக்குவமான அன்னமும், ஒரு திவலையாவது நெல்லி சம்பந்தமான பருகு நீரும் கொடுப்பின் அந்த அன்னம் மலைபோன்றும், தீர்த்தம் கங்கைபோலும் பூர்வபக்ஷ மதிபோல் நாடோறும் வளரும். செல்வமுடையவன் தனங்கொடுக்கவேண்டும். தனமில்லாதவன் சோழி கொடுக்கலாம்; அவ்விருவருக்கும் அந்தஸ்தலத்தில் புண்ணியம் ஒன்றாகவேயிருப்பது வியக்கத்தக்கதாம். இவ்வளவு இலக்கணமமைந்த தீர்த்தத்தில் கலியுகத்தில் அந்தணர் மீண்டும் நீராடி, சிவபிரானைப் பூஜையால் மகிழ்வித்து முனிதீர்த்தத்தை மூன்றுதரம் சொல்லி, சங்கல்பித்து அந்த தீர்த்தத்தில் நீராடி, ஆசமனம் செய்து, தேவர், ரிஷி, பிதுர்தர்ப்பணங்கள் தனித்தனி செய்து, கரையேறி, முறைப்படி அனுஷ்டானம் செய்து, மேருவுக்கு வடக்கே சென்றார்கள். ஆதலால், அதுமுதல் அத்தீர்த்தம் முனிவரால் அடையப்பட்டதாய் உலகில் சிறந்தபுகழை அடைந்து இப்பொழுதும் எப்பொழுதும் இருக்கிறது. அது மரக்கூட்டங்களால் மறைந்ததாயும் பக்ஷிகளுடன் கூடியதாயும் இருக்கிறது. அஞ்ஞானமுடையவருக்கு அது அறியமுடியாதது. மகுடவர்த்தனசோழன் பகைவரால் வருந்தியவனுய் தெய்வச்செயலாய் முனிதீர்த்தத்திற்கு வந்து, நீராடி, சிவபிரானை முறைப்படி வழிபட்டு ஒரு நொடியில் பகைவரை வென்றான். பிறகு அவ்வரசன் அச்சிவபிரானுக்குக் கிராமங்கள் தானம் செய்து அதற்கு வடக்கே ஒரு ஆற்றையும் தோண்டினன். அந்நதிக்கு அவ்வரசன் பெயரிட்டு அந்த ஸ்தலத்தையும் பிரகடனம் செய்தான். அதுமுதற்கொண்டு அந்தஸ்தலமும் அந்தத்தீர்த்தமும் முன்பு உனக்குச்சொல்லப்பட்டன.

இதற்குமேல் பராசரதீர்த்தத்தையும் அதன் காரணத்தையும் உனக்குச் சொல்லுகிறேன். ஏ! அரசனே! புத்திக்கு எட்டுமளவும் கேட்பாயாக.'

சூதர் :—"புண்ணியமுடையதும், மிக்க பயனளிப்பதும், கேட்டதாலேயே புண்ணியத்திற்குக் காரணமாயிருப்பதும், நேர்ந்த பாபத்தைப் போக்கடிப்பதும், ஜனனமரணங்களைப் போக்கடிப்பதும், வித்வான்களால் சிந்திக்கத்தக்கதும் ஆகிய முனிவர் சரிதம் இங்ஙனம் கூறப்பட்டது. இது மிகவும் ரஹஸ்யமனது. ஆஸ்திகமில்லாதவர்க்குச் சொல்லத்தகாதது. இதனை மடத்திலாவது கோவிலிலாவது

கேட்கச் செய்யவேண்டும். அன்றி அத்தீர்த்தக் கரையிலாவது கேட்போன் மேலான கதியையடைவான். ஒரு வாரமோ இரு வாரமோ படிக்கவோ படிப்பிக்கவோ செய்வோன் வீட்டில் இலக்குமி மகிழ்ச்சியுடன் எப்பொழுதும் பொருந்தியிருப்பாள். விரித்துக் கூறின் என்னை! அறிஞன் எப்பொழுதும் கேட்கவேண்டும்."

[ஸ்காந்தபுராணத்தில் ஸனத்குமார சம்ஹிதையில் மேல்பாகத்தில் திருவாஞ்சிய மஹாத்மியத்தில் முனிதீர்த்தம் புகழ்தல் என்ற 49-ம் அத்யாயம் முற்றிற்று.]

---

## இரண்டாவது அத்யாயம்.

சூதர் :—"முன்பு ஜாபாலி பிருகத்சேனருக்குக்கூறியதும் பாராசரதீக்ஷணருக்கு நடந்த ஸம்வாதமுமான பராசர தீர்த்ததைப் பற்றிக் கூறுகின்றேன். சௌனகர் முதலிய முனிவர்களே! கவனமாகக் கேட்பீராக."

இருடிகள் :—"மிக்க புண்ணியமளிப்பதான பராசர சுதீக்ஷண சம்வாதம் ஜாபாலியால் எங்ஙனம் கூறப்பட்டது? யாம் சிரத்தையுடையோராயிருத்தலின் எமக்கு அம்மறைப் பொருளைக் கூறியருள்க."

சூதர் :—"முன்பு கங்கைக்கடல் சங்கமத்தில் பராசர சுதீக்ஷணர் தவம் செய்யக் குடிலமைத்தனராகிக் கொடிய தவம் செய்தனர். அவரது மகிமையால் இயற்கை அகப்பகையுடையவையும பகையற்றிருந்தன. அவ்வாச்சிரமம் புண்ணியம் வளர்ப்பதும் மருவ மலரால் நிறைந்ததும் பறவைகளமைந்ததுமாயிற்று. அவ்வாசிரமத்தில் முற்பிறப்பில் செய்த தவவலியால் ஒரு பூதம் காணப்பட்டது. அது மிக்கப் பயங்கரமானதும் அச்சந்தரும் முகத்துடன் கூடினதும் பசி தாகத்துடன் கூடியதுமாக இருந்தது. அப்பூதத்தினைப் பார்த்து அவ்வாசிரமத் தலத்து மரங்களில் சென்று மான்களும் பக்ஷிகளும் ஒளிந்தன. எங்கும் கலங்குவது கண்ட இருடிகள் இது யாதென்று பேசிக்கொண்டு பூதத்தை விளித்து அன்புடன் வினவினர்."

இருடிகள் :—'நீ எங்கிருந்து வந்தாய்? ஆச்சரியமாயும் பயங்கரமாயும் பிராணிகளுக்கு மாறாயும் மிகக் கொடுமையாக இருக்கும் இவ்வுருத் தாங்கியது என்? சமாசாரத்தைச்சொல். ஐயமின்றி விடுவிக்கிறோம்' என்றனர்.

பிருமராக்ஷஸன் :—'யான் செய்த தீவினையைச் சொல்வதற்கும் ஆற்றலற்றவனாயினும் உண்மையைக் கூறுகிறேன். கேட்டருள்க.

காஷ்மீரத்தில் நான்கு வருணத்தவருடன் செல்வமெல்லாம் நிறைந்ததும் அமராவதிக்கொத்ததும், இருயோஜனைப் பரப்புடையதுமான சிங்கனம் என்ற பட்டணம் ஒன்றுண்டு. அதன்கண் சிறந்த செல்வமுடையவனும் காலாள், குதிரை, யானை இவைகளின் படையுடையவனுமான வீரதனு என்ற ஒரு அரசன் இருந்தான். யான் அவனுக்கு மகனாகப் பிறந்து வீரத்துடன் வளர்கையில் கல்விகளெல்லாம் கற்பிக்கப்பட்டேன். அப்பொழுது எனது தந்தை எனக்கு இளவரசுப் பட்டாபிஷேகம் செய்வித்தார். பிறகு யான் அரசினை ஏற்று நான்கு வருணத்து மக்களையும் காத்துவருகையில் தந்தை தவஞ்செய்ய எண்ணிக் காடுசென்று வீடுபெற்றார். பின்பு யான் அவர் வீடுபெற்றதற்காகச் சிறந்த இருடிகட்கும் அந்தணர்க்கும், தவத்தினர்க்கும் பல்வகைத் தனதானியங்களும் அளித்தேன். தக்ஷிணைகளும் விரிவாகக் கொடுத்தேன். இவ்வேள்வியியற்றுகையில் பார்ப்பனருக்கு பசு, பூமி, ஆடை இவற்றைக் கொடுத்தேன். இங்ஙனமிருந்தும் காலதருமத்தால் கூற்றுவன் நகரம் சென்றேன். அங்கு யமனுக்கும் எனக்கும் விவாதம் நடந்தது. யமன் என்னை நோக்கி 'நீ அனேகம் புண்ணியம் செய்தும் ஒரு பாபஞ்செய்தாய். அது என்னவெனில் பார்ப்பனருடைய சொத்தை அபகரித்ததாம். அரசின் விரைவாலும் மதலோபங்களாலும் மயங்கி நீ அதனை அறிந்தாயில்லை. ஆதலால் புண்ணியத்தை முதலில் அனுபவிக்கின்றாயா? அல்லது பாவத்தின் பலனையனுபவிக்கின்றாயா?' என்று வினவினன். காது பிளக்கும் இவ்வாச்சரியமான மொழிகளைக் கேட்டு, மிக்கத் துயரத்துடன் விபரம் கேட்டேன். உடனே தருமத்தின் உண்மை அறிந்த யமன், 'அரசே! வேள்வியின்கண் ஆதரவுடன் நீ தானம் செய்த பல ஆநிரைகளுள் அதனைப்பெற்ற அந்தணனொருவரது பசுவொன்று உனது குழுவிற் கலந்துவிட்டது. உனது இடையர்கள் அப்பசுவைப்பிடித்து அவ்வந்தணனிடம் சேர்ப்பிக்கவில்லை. அப்பசுவிற்கு மூன்று கன்றுக்குட்டிகள் பிறந்தன. அவை குடம் பால் கறப்பனவாயும் ஆயின. நீ அதனையறியாது அவ்வாவின் பால் பல்தரம் பருகினாய். அதனால் உனக்குப் பாவம் வந்திருக்கிறது. அதற்கு இப்பொழுது யாது செய்யவேண்டும்? அதனைக் கூறுவாய்' என்று சொல்லினன். அதற்குக் கைகூப்பி யாதென்று யான்கேட்க யமன் கூறினான்.

யமன் :—'இருபது வருடம் நரகம் அனுபவித்து மூன்று யுகம் அரக்கனாகயிருந்து அதிலிருந்து விடுபட்டு மேலுலகம் அடைவாய் என்று கூறினன். தெய்வச்செயலாய் யான் நரகத்திலிருந்து நீங்கி, ஒரு யுகமாயிற்று. இன்னும் மிக வருத்தும் இருயுகங்கள் இருக்கின்றன. பசி தாகத்தால் மிக்க துயருற்று இளைத்தேன். உங்களைத் தெரிசித்ததால் தேர்ச்சி உண்டாயிற்று.'

ஜாபாலி :—'அவ்விருமுனிவரும் இதனைக்கேட்டு சிறிது சிந்தித்து அந்தணர்க்குரிய செயல் பிறருக்கு நன்மை செய்வதாகும். அதிலும் இருடிகள் விசேஷமாகப் பிறருக்கு உபகாரம் செய்யவேண்டும். ஆதலில் இக்கொடிய வரக்கனை மிகவருத்தும் பாவத்தை நீக்க வழி யாதென்று ஆலோசித்து நின்றனர். இதற்கிடையில் பராசரர் ஒரு இடத்தை நினைத்து அறிந்து மகிழ்வால் அலர்ந்த கண்ணுடையவராகி அருகிலுள்ள இருடியைப்பார்த்துப் 'பகவானே! உண்மையாகத் திருவாஞ்சியம் என்ற ஸ்தலமிருக்கின்றது. அத்தூய தலத்திற்கு இவனை அழைத்துக்கொண்டுபோய்விட்டு மீண்டும் ஆச்சிரமத்துக்கு வருவோம்' என்றனர். உடனே சுகீக்ஷணர் 'காலத்தில் பலனளிக்கும் ஸ்தலங்கள் பலவிருக்கின்றன. இவனுக்கு ஒரு யுகமாகியிருக்கின்றது. மற்றும் இரண்டு யுகங்கள் இருக்கின்றன. இதற்குள் அத்தன்மை எங்ஙனம் நீங்கும்' என்று கர்வத்துடனும் பரிகாசத்துடனும் மறுத்துப் பேசினர். அயன் மகனான பராசரர் இதனைக்கேட்டு, 'தலம் என்பதில்லையென்று கூறினீரல்லவா. நான் இவனை இப்பொழுதே தூய்மைப்படுத்துகிறேன்! காண்பீர்' என்று கோபத்துடன் கூறினர். இதனைக்கேட்ட சுகீக்ஷணர் மீண்டும் பராசரரைப்பார்த்து, 'நீர் மிகவும் மயங்கியவராக ஆகி இளம்பிள்ளைபோல் கூறுகின்றீர். இது செய்யப்பட்டால் மிகவும் ஆச்சரியந்தான். பிரம்மராக்ஷஸனை விடுவித்தால் அத்தலம் சிறப்புறும். காசிக்கு ஒத்த தலங்களுக்கு இம்மாதிரி சிறப்பு இன்று காசிக்கும் பெருமையின்று. இங்ஙனமிருக்க இவன் விடுபடுதல் எங்ஙனம் கூடும்' என்றனர்.

பராசரர் :—'காசியிலும் சிறந்த தலம் இருக்கின்றது. இம்மாதிரி கூறின் மிக்க பாவம் உண்டாகும். தெய்வமில்லையென்றிருப்பது, இழிந்தவிருத்தி, தலநிந்தை, பிராம்மணநிந்தை, தீர்த்தநிந்தை, துறந்தோன் நிந்தை, புராணநிந்தை, வேதம், பசு இவற்றின் நிந்தையாகிய இவை முன்னைய நல்வினையை அழிப்பனவாகும்' என்று கூறினராகி, 'மீண்டும் உமக்குப் பரிகாசமாகப்போகிறது. இம்மாதிரி ஆளுடன் கூடிய பலமொழிகள் கேட்கப்பட்டிருக்கிறேன். பல கூறிப்பய

னென்ன. நீர் அந்தணரில் தாழ்மைப்பட்டோனாயிருத்தலின் இங்ஙனம் கூறினீர். ஆகையால் இதுமுதல் ஆறுமாதகாலம் குட்டநோயால் மிகவும் துன்புறுவீர்' என்று சபித்து திருவாஞ்சியம்செல்லவெண்ணி, இராக்ஷதனையும் கைக்கொண்டு தென்முகமாகச் சென்றார். தேவர்களுக்கும் கிட்டுதற்கரிய தலத்துக்கு ஒரு முகூர்த்தத்துக்குள் வந்துசேர்ந்தார். அங்குவந்து முக்காலமும நீராடி, கடவுள் தீர்த்தம் பார்வதி இவர்களை வணங்கி தீர்த்தத்தைப் பாத்திரத்திற் கொண்டு, தர்ப்பைகளால் அபிமந்திரித்து ஐந்தெழுத்தை நினைத்துக்கொண்டு அவ்வரக்கன்மேல் புரோக்ஷித்தார். அதனால் அவ்வரக்கன் அத்தன்மையினின்றும் விடுபட்டு பராசரரால் பாவம் நீக்கப்பட்டவனாகித் தேவனானன். அரக்கன் விடுபட்டவுடன் ஆகாயத்தினின்று மலர்மாரிபெய்தது. தேவதூதர் சிறந்த விமானம்கொணர்ந்து இவனைப்பார்த்துச் சொன்னார்கள். 'அரசனே! நீ முன்செய்த துன்பம் இப்பொழுது தாய்ந்தாய். பராசரரால் புண்ணியதீர்த்தம் தெளித்ததால் பாவம் நீங்கினாய். பெரியோரது தரிசனத்தால் எதுதான் நிகழாது. ஆதலால் பராசரரை வணங்கி இதன்கண் ஏறுவாய்' என்றனர். உடனே தூதர் ஏவல்கொண்டு அரசன் பராசரரை வணங்கி மூன்றுதரம் வலம்வந்து துறக்கமெய்தினன். அங்குள்ள பிரமவாதிகளான சிறந்த முனிவர்கள் இத்தகைய ஆச்சரியமான செய்தியைக்கேட்டு, பராசரரை வரவழைத்துத துதித்தனர். பராசரர் அவர்களது மொழிகேட்டு மகிழ்ந்து அத்திருவாஞ்சியத்தில் அத்தீர்த்தத்திற்குத் தன்பெயரால் புகழை விரும்பி நீண்டகாலம் கொடிய தவம் செய்தார். பின்பு அவர் தவத்தால் மகிழ்ந்த ஈசன் அவருக்கு வரங்கொடுக்கவெண்ணி, 'உனக்கு மங்களமுண்டாகுக. வேண்டுவது யாது? அதனைச்சொல்; வரங்கொடுக்கவே ஈண்டு வந்துளேன்! உனது பக்தியாலும் தவத்தாலும என் மனம் மிகவும் மகிழ்ந்தது. அன்றியும் பிரம்மராக்ஷஸனை விடுவித்ததினால் மிக்க வரங்கொடுக்க உரியவனானாய்' என்று கூறினார். அதனைக் கேட்டு, அவ்வாஞ்சியத்தலைவனை பக்தியுடன் துதித்து வரம் வேண்டினன்.

பராசரர்:—'உலகுக்கெல்லாம் தலைவனும் தேவர் தலைவனும் தொண்டர் துயர்களைபவனும் பாவம் கடிபவனுமாகிய உமக்கு வரங்கொடுக்க எண்ணமிருப்பின் இத்தீர்த்தம பிரம்மராக்ஷஸனைப் போக்கியதால் இதற்கு இதுமுதல் துவாபரயுகம்வரையில் பராசர தீர்த்தமென்று எனது பெயர்கொண்டு உமதருளால் வழங்கட்டும்' என்று வேண்டினர். மற்றும் ஏனை பிரம்மராக்ஷஸர்களுக்கும் இந்நீரின் திவலைபடுவதால் விடுபடட்டும் என்று வேண்டினார்.

ஈசன் :—' நீ கூறியவண்ணமேயாகுக. நீ கூறியது மாறுபடுமா? ஏ! பிராம்மணனே! வரங்கொடுத்தேன். பாராசர தீர்த்தமென்றே யாகுக' என்று வரமளித்தனன்.

பாராசரர் இங்ஙனம் வரம்பெற்றுத் தனது குடில்நோக்கிச்செல்ல எண்ணினர். அச்சமயத்தில் இருடி சாபமேற்று மயங்கி வருந்தும் குஷ்டரோயாளரான சுதீக்ஷ்ணர் அம்முனிவர் வருமளவும் தெற்கு முகமாகவே இருந்தார். அங்ஙனம் அவர் இருக்கையில் பாராசரர் தனது குடிலுக்குள் புகுந்து முன்போலிருந்தார். சுதீக்ஷ்ணர் மிக்க வருத்தத்துடன் அவ்விருடியின் சமீபத்தில் வந்து முறைப்படி வணங்கி, சமீபத்தில் நின்றுகொண்டு மன்னிக்கவேண்டுமென்றும் என்று சொல்லி சாபம் நீங்கவேண்டினர். பாராசரர் அருள்பாராட்டியும், முன்னேய நட்பினை நினைத்தும் வணங்கி வழிபட்டதால் கோபத்தைவிட்டுக் கூறுவார்.

'முனிவரே! உங்களுக்கு மங்களமுண்டாகுக. நீர் முத்தி அடைய திருவாஞ்சியம்சென்று என் பெயரால் வழங்கும் தீர்த்தத்தில் நீராடி அத்திருவாஞ்சிய ஈசனைத் தரிசிப்பீராயின் நிச்சயம் முக்தி உண்டாகும். இதன் கண் ஆராயவேண்டாம். அத்தீர்த்தத்தின் துளிபட்டாலேயே சாபத்தினின்றும் விடுபடுவீர்' என்று கூறினர். 'மேலும் உனது வடிவம் மாத்திரம் வேறுபடாது. அதன் காரணங்கள் கூறுகிறேன்.'

முற்பிறவியில் வைகுண்ட நிலையனுன விஷ்ணுவிடத்தில் குற்றப்பட்டாய். அப்பொழுது அவர் நீ அடுத்த பிறவியில் சிறந்த குலத்தில் அந்தணனுகப் பிறந்து பராசரரிடம் குற்றப்பட்டு திருவாஞ்சியம் செல்லப்போகின்றாய். அப்பொழுது யான் விஷ்ணுவின் அம்சத்தில் நான்கு கைகளையுடையவனுகப் பிறந்து உன் ப்ரீதிக்காக அங்கு வரப்போகிறேன் என்று கூறினர். ஆதலால்தான் யான் உனக்கு இங்ஙனம் கூறினேன். நாராயணன் வசுதேவருக்கு மகனுகப் பிறந்து திருவாஞ்சியம் வந்து உனது இயற்கையான வடிவு பெறச் செய்வார். அதுவரையில் கண்ணனைப் பார்க்கவேண்டுமென்று அங்கேயே இருப்பீர்' என்றும் உத்தரவுமளித்தார். அம்முனிவர் பராசரர் சொற்கொண்டு திருவாஞ்சியமடைந்து உயிருள்ளளவும் அங்கேயே யிருந்து வீடுபெற்றார்.

சூதர் :—"அது முதல் அத்தீர்த்தத்திற்கு பாராசர தீர்த்தமென்று பெயர் வந்தது. இப்புண்ணிய சரித்திரம் கேட்போருக்குச் சாபம்,

குற்றம், குஷ்டநோய் இவையுண்டாவதின்று. ஜாபாலியால் அரசனுக்குச் சொல்லப்பட்டதும் பராசர சுதீக்ஷண சம்வாதமும் பிரம்மராக்ஷஸனை விடுவித்தும் புண்ணியமும் பழமையானதுமான இச்சரித்திரத்தினை உங்களுக்கு கூறினேன். இதனை மறைவாக வைத்துக்கொள்ளுங்கள். நாஸ்திகனுக்கும், முட்டாளுக்கும், செருக்குற்றோனுக்கும் சொல்லவேண்டாம்.

[ஸ்காந்தபுராணம் சனத்குமார ஸம்ஹிதையில் மேற்பகுதியில் திருவாஞ்சிய மகிமையில் பராசர் தீர்த்தம் புகழ்தலென்ற 51-ம் அத்யாயம முற்றிற்று.]

---

## மூன்றாவது அத்யாயம்.

ஜாபாலி :—'அதற்குமேல் அத்திரி தீர்த்தத்திலிருந்து தோன்றியதும் புண்ணியமளிப்பதும் ரகஸ்யமானதும் இதிகாஸத்துடன் கூடியதுமான பழையதொரு சரிதம் கூறுவேன்.

கோத்திரத்திற்குக் கர்த்தாவும மிக்க அறிவோரும் தவம் செய்வோரும் கல்விக்கடலும் மமதையற்றவரும் எப்பொழுதும் தூய எண்ணமுடையவரான ஒருவர் இருந்தார். அவருக்கு ரிஷ்யசிங்கரின் குலத்திற் தோன்றியவளான சுயக்ஞை என்ற மனைவி இருந்தாள். அவர் அவளுடன் நீண்டகாலம் இல்லறம் நடத்திக்கொண்டு புஷ்பபத்திரை நதிக்கரையில் இலைவீடமைத்து இருடிகளுடனும் சீடர்களுடனும் வேதாத்யயனத்திலேயே பற்றுடையவராக இருந்து தக்ஷிணைகளால் மிகப்பரந்த பல்வகை வேள்விகளியற்றி யானைத் துதிக்கை அளவான பெருத்த தாரையையுடைய வசுதாரையினால் தேவர்களுக்கும் மகிழ்ச்சி விளைவித்துக்கொண்டு பிரம்மாவை ஒத்தவராக இருந்தார். ஒருகாலத்தில் அவ்வந்தணர் தலைவன் பன்னிரண்டு வருடத்துடன் கூடிய பனனிரண்டு நாள் வேள்விசெய்யக் கருதி தமது சீடரை வரவழைத்து, 'பன்னிரண்டு வருடத்துடன்கூடிய பன்னிரண்டு நாள் வேள்வி செய்யபபோகிறேன். உங்கள் உதவியுடன் மற்றுமுள்ள அந்தணர்களும் உதவியாக இருக்கட்டும். நீங்கள் மிக்க கவனமுடையவராகி உதவி புரியுங்கள். வேள்விக்காக உண்டாகும் இடையூறுகள் எங்கெங்கு நிகழ்கின்றனவோ ஆங்காங்கு நீங்கள் எப்பொழுதும் முயற்சியுடையவராயிருங்கள்' என்று வேண்டினா். பிறகு அவர் இருடிகளையும் சீடர்களையும் இங்ஙனம் வேண்டி, வேள்விக்குரிய நக்ஷத்திரத்துடன் கூடிய சுபமான யோகத்தில் நல்ல

திதியில் சூத்ர விதிப்படி ருத்விக்குக்களை வரித்து, வசிஷ்டர், வாமதேவர், அயன் மகனான கௌதமர், கடர், கண்ணுவர், மங்கணகர், ஷடமருஷணர், பெருங்கண்ணர், நீள்பாதர், குறுங்கழுத்தர், ஜமதக்னி, பரத்வாஜர், குத்ஸர், காத்யாயனர், யக்ஞவல்கர், தேவராதர் ஆகிய எல்லாரையும் வரவழைத்தார். இங்ஙனம் கோத்திர விருடியான அத்ரியானவர் பன்னிரண்டு வருடம் வேள்வி செய்தார். முனிவர் தலைவனும் அயன் மகனுமான நாரதர் வீணைகானத்துடன் தெய்வச்செயலாய் அங்கு வந்துசேர்ந்தார். சாஸ்திரமறிந்த அத்திரியானவர் தத்துவமறிந்த நாரதர் வந்ததையுணர்ந்து எதிர்சென்று, வணங்கி வழிபட்டு ஆசாரப்படி அர்க்கியமளித்து தர்ப்பாஸனத்தில் அமர்த்தினர். அப்பொழுது நாரதர், வழிபாடேற்று, வெகுமானித்து இருடிகள் முன்னிலையில் சொன்னார். அறுகுணம் பொருந்திய நாரதர் அவ்வத்திரிமுனிவரை விளித்து யோகக்ஷேமம் விசாரித்து, 'நீர் க்ஷேமமா? உமது தவம் நன்கு நடைபெறுகின்றதா? உமது குடில் இடையூறின்றி இருக்கிறதா? உமது மனைவியும் குழந்தைகளும் சௌக்யமா?' என்று கேட்டார்.

இங்ஙனம் கேட்கப்பட்ட அத்திரியானவர், 'யாவரும் க்ஷேமம்' என்று மங்களகரமான பதில் கூறினர். 'தனது மக்கள் சௌக்யமா?' என்ற கேள்விக்குமாத்திரம் பதில்கூறவாற்றாது மிகவருந்தி ஒன்றும் சொல்லமுடியாமல் நின்றார்.

இங்ஙனம் துயரால் மயங்கிக் கிடக்கும் முனிவரைத் தவமகிமையாலுணர்ந்து இம்மொழி கூறத்தொடங்கினார்.

நாரதர் :—'சிறந்த முனியாகிய அத்திரியே! இனி கவலையொழிக. பாபங்களெல்லாம நீங்கிவிட்டது. இனி உமக்கு மக்கட்பேறு உண்டாகும். அதற்குரிய உபாயம் கூறுகிறேன். எனது மொழி கேட்பாய்.'

அத்திரி :—'மகாமுனிவா! எனக்கு உபாயம்கூற வேண்டுகிறேன். பிள்ளையற்றவனுக்கு நல்லுலகமின்று. அதற்கு வேதமே பிரமாணமாகும். இத்தகைய வேதவிதியை நினைத்து வருந்துகின்றேன். இத்தருணத்தில் கொடிய துயரினின்றும் இப்பொழுது கடக்கும் உபாயம் கூறவேண்டுகின்றேன். இவ்விஷயத்தில் தேவரீரே சிறந்த கதியாவீர்' என்று நாரதரை வேண்டினர்.

அருளுறைவுளான நாரதர் இங்ஙனம் வினவப்பட்டவராகித் தியானித்து பூவுலகில் புண்ணியபூமியான நாவலந்தீவில் தென்பகுதியில் காவேரியின் தென்கரையில் பரமசிவனுக்கு மகிழ்ச்சிவிளைவிக்

கும் திருவாஞ்சியத்தில் விஸ்வேஸ்வரசன்னதியில் மிகப்புகழ்வாய்ந்த தீர்த்தம் இருப்பதனை மனதால்நினைத்து மகிழ்வுடன் அவருக்கு மக்கட்பேறு உண்டாக எண்ணிக் கூறினர்.

நாரதர் :—' மானியான அத்திரியே! உபாயங்கூறுவேன். கவனமாகக் கேட்பாய். அது என்னல் முன்பு அனுபவிக்கப்பட்டது. அத்தலம் தலங்களுக்குள் சிறந்தது. அதன்கண் தீர்த்தங்களுக்குள் உயர்ந்த தீர்த்தம் இருக்கிறது. காவேரியின் தென்கரையில் இரு யோஜனை தூரம் இடையிட்ட திருவாஞ்சியத்தில் அத்தீர்த்தம் இருக்கின்றது. அங்கு வேள்விமுடிந்தவுடன் சென்று ஆற்றலளவு தவம் செய்வாய். அங்குத் தவம் செய்யுங்கால் முக்காலமும் நீராடி பிள்ளைக்காகத் தவம் செய்யவேண்டும். அந்தணனே! மக்களையற்ற உனக்கு வேள்வியால் பயன் யாது? முயற்சியற்றவனுக்குச் செல்வமும் சுகமாக இருப்பவனுக்குக் கல்வியும் உண்டாகாவாம். பசியற்றவன் நிறைய உண்ணமாட்டான். மகனற்றவன் மகிழ்கிறான் இல்லை. மகனற்றவன் வீடு சூனியமாகும். உறவினரற்ற தேயம் சூன்யமானதாகும். மூர்க்கனது மனம் சூன்யமானதாகும். வறிஞனுக்கு எல்லாம் இல்லாததாகும். புத்திரனில்லாவிடில் சுகமில்லை. கல்வியில்லாவிடில் கேள்வியில்லை. கேள்வியில்லாவிடில் அறிவில்லை. ஆதலால் மகனில்லாதவனுக்கு நல்லறிவு கிடையாது.' என்று இங்ஙனம் கூறி, நாரதர் வைகுண்டம் சென்றார்.

ஜாபாலி :—' அந்தணர்காள்! அவ்வத்திரியும் நாரதரால் இங்ஙனம் கூறப்பட்டவராகி, வேள்வியின் முடிவில் நாரதர் மொழியினை நினைத்துக்கொண்டு, திருவாஞ்சியம் வந்து மிக முயற்சியுடன் தூயவராகி மூவாயிரம் வருடம் மிகக் கொடியதவம் மகப்பேற்றுக்காகச் செய்து அச்சிவபிரானை வழிபட்டார். பிறகு, பகவானும் கருமையும் செம்மையும் கலந்த வடிவமுடையவரும், உமையுடன் கூடியவரும், பிறைசூடியுமான சம்புவானவர் அவருக்கு அருள எண்ணி கைலாயம்போல் வெள்ளிய இடபத்தில் ஏறிக்கொண்டு தம் கணங்களுடன் கூடியவராகி அத்திரிக்கு மகப்பேறளிக்க முன்வந்து தோன்றினர்.

இத்தகைய வடிவத்துடன் தோன்றிய அருளுடையவரும் தொண்டாளபவருமான ஈசன் ' முனிவனே! வேண்டும்வரம் கேட்பாய் ' என்று கூறினர். உடனே அத்திரியானவர் அத்தேவபிரான் மொழிகேட்டு அப்பிணகியான தேவனைக்கண்டு அடிக்கடி வணங்கி பக்தியுடன் துதிக்க ஆரம்பித்தனர்.

அத்திரி :—' தலைவனாகிய தேவரீர் இருடிகள், சிறந்த யோகிகள், சனகாதிமுனிவர் முதலியோராலும் காணமுடியாதவராயிருக்கிறீர். முதலிடைகடையற்றவரும் எல்லா உலகுக்கும் தலைவருமாக இருக்கிறீர். இச்சராசரமான உலகு உமது மாயையின் பரப்பாகும். அயன் முதலியோரும் மாயையால் மயங்கினோராகி இதனை அறிகின்றார்கள் இல்லை. அத்தகைய உயர்ந்த வடிவத்தையும் அருவாயிருக்கும் தன்மையையும் பெரியதற்கும் பெரிதாயிருக்கும் தன்மையையும் என்னைப்போன்ற எவன்தான் அறிவான். தேவரீர் எவன் கண்ணுக்கு இலக்காகின்றீரோ, அவன்தான் எப்பொழுதும் பயன் பெற்றவனாவான். அருட்கடலே! இப்பொழுது தேவரீர் எனக்கு வரங்கொடுப்பவராயிருக்கின்றீர். மக்களின்றி வருந்தும் என்னை மகிழச்செய்யும். யான் வம்சம் வளரும் மக்களைப்பெற்று எங்ஙனம் மகிழ்வேனோ அங்ஙனம் உமது பாதத்தில் வணங்கிய எனக்கு அருள வேண்டுகிறேன்' என்று இங்ஙனம் சிவபிரானிடத்தில் விஞ்ஞாபனம் செய்து தண்டனிட்டு வணங்கினார். அருட்கடலான ஈசன் அம்முனிவரை எழுப்பி வரங்கொடுத்து, 'அழகிய மகனைப் பெறுவாய். அதாவது வேள்விகளெல்லாம் தீக்ஷைபெறுபவனும், வேத வேதாந்தங்களின் உண்மை அறிபவனும் எல்லாக் குணங்களும் பொருந்தியவனுமாயிருக்கும் தத்தாத்ரேயனைப் பெற்று மகிழ்வாய்' என்று வரங்கொடுத்து தொண்டர் வேண்டுகோளளிப்பவரும் சிவவடிவருமான ஈசன் தனது சிறந்த லிங்கத்தில் மறைந்தார். அம்முனிவர் அத்தேவர் தலைவனைக் காணாது மனமயங்கி மிகத் துயர்கூர்ந்து மீண்டும் தவம் செய்தார். இங்ஙனம் அவர் ஆயிரம் வருடம் தவம் செய்தபிறகு அரன் மகிழ்ந்து மீண்டும் 'என்னை எதற்காக வரவழைத்தாய்' என்று கேட்டார்.

அத்திரி:—' தலைவா! ஏதோ சில கூறவேண்டும் என்ற எண்ணம் உண்டு. ஏதோ பயத்தால் தாமதித்துவிட்டேன். இப்பொழுது அதற்காகத் தவம்செய்ய வந்திருக்கிறேன். பிரபுவே! என்னிடத்தில் அருள் இருக்குமாயின் அதனைக் கொடுக்க வேண்டுகிறேன்.'

ஈசன் : 'முனிவா! கூறு. கூறு. எதுவிருப்பமோ அது செய்கிறேன். இதற்கு மாறுபாடின்று. தொண்டர்மொழி கேட்டு அதற்கு மாறாகச்செய்ய எனக்கு விருப்பமில்லை' என்றார். இங்ஙனம் கருணைநிதியான ஈசனது மொழிகேட்டு அத்திரி பயத்தால் தழுதழுத்த மொழியுடன் தனது வேண்டுகோள் வேண்டினார்.

**அத்திரி:**—'எந்ததீர்த்தத்தில் தேவர்களுக்கும் கிடைக்கக்கூடாத பிள்ளையை யான் பெற்றேனோ, எந்த தீர்த்தத்தின் வடகரையின்கண் வசித்தேனோ அந்தத் தீர்த்தத்திற்கு திரேதாயுகம்வரை அத்திரி தீர்த்தம் என்று புகழ் உண்டாகவேண்டும்' என்று வேண்டினார். பிறைசூடிய சங்கரர் அம்முனிவர் மொழிகேட்டு அங்ஙனமேயாகுக என்று மீண்டும் வரம் கொடுத்தார். 'இதுமுதல் எனது சூலத்தால் படைக்கப்பட்டதும் இருடிகளுக்கும் பிரீதியை அளிப்பதும், புண்ணியமானதும் எல்லாத் தேவராலும் அடையப்பட்டதும் வெளிப்படையும் இரகசியமுமான பல காரணங்களமைந்ததும் ஆகிய இத்தீர்த்தத்தில மக்களற்றவர் ஆறுமாதம் நீராடுவதால்மாத்திரம பிள்ளை பெறுவர். இததுடன் அத்தலததிலிருந்து எனது லிங்க வழிபாடு செய்தாராயின் வேண்டும் பாக்கியங்களெல்லாம் நிச்சயமாகப் பெறுவர்.'

**சூதர்:**—"திருவாஞ்சிய நாயகர் இங்ஙனம அவருக்கு வரங்கொடுதது மீண்டும தமது இருப்பிடம் அடைந்து தனது மூர்த்தியுடன் ஒற்றுமைப்பட்டார். இருடியும் வம்சத்தை வளர்ப்பவனுமான மகனைப் பெற்றனர். இங்ஙனம் ஜாபாலியால் பிருகத்சேனருக்கு உண்மையாகக கூறப்பட்டது. அந்த அத்திரி தீர்த்தத்தின் பெருமையை இப்பொழுது கூறினேன். இவ்விதிகாசத்தைப் படிப்போனுக்கு சந்ததி வளர்கின்றது. மக்கள் வளர்ச்சி விரும்புவோன் இதனைக் கேட்க வேண்டும. இதற்குமேல பாவங்களெல்லாம போக்குவதான புண்ணிய புட்கரணி எங்ஙனம முன்பு உலகிற் புகழ்பட்டதென்பதனைக் கூறுகின்றேன்."

[ஸ்காந்த புராணததில் சனதகுமார ஸம்ஹிதையில் மேற்பகுதியில் திருவாஞ்சிய மஹிமையில் 52-ம் அத்யாயம் முற்றிற்று.]

---

## நான்காம் அத்யாயம்.

"தவத்தைச்செல்வமாக உடைய சௌனகர் முதலிய முனிவர்காள் ஜாபாலி, அரசர் சம்வாதமாயும் பாபமெல்லாம் கழுவுவதுமான புண்ணிய புட்கரணியின் பெருமையை சிரத்தையுடனும் கவனத்துடனும் கேளுங்கள்."

**இருடிகள்:**—"புராணமறிந்தோரில் தலைவரும் உலகெல்லாம் பெருமைவாய்ந்தவரான சூதரே! உமது சொல் முத்துப்பெருக்கால் யாம் சிறிதும் சோம்பலற்றவராயிருக்கின்றோம். இப்பொழுது புண

ணிய புட்கரணி எங்ஙனமிருக்கின்றது? கிருதயுகத்தில் எங்ஙன மிருந்தது? அரசனுக்கு ஜாபாலிகூறிய வாங்கு தேவரீர் எமக்குக் கூறவேண்டும் என்றனர்."

சூதர்: —"இங்ஙனம் அரசனால் வினவப்பட்ட ஜாபாலி கூறினர்."

ஜாபாலி:—'எல்லையற்ற வன்மையமைந்த கண்ணன் தனது எண் ணம் நிறைவேறவேண்டி வில்வேல்வரரைக் குறித்து முன்பு நீண்ட காலம் எவ்விடத்தில் தவம் செய்தாரோ அத்தலமாகும்.'

பிருகத்சேனர்:—'எல்லையில்லா வாற்றலுடையவரும் யாவருக் கும் தலைவரும் பயனெல்லாமளிப்பவனுமான கண்ணன் எதற்காக உடலெல்லாம் வற்றச்செய்தார்? சாத்திரமெல்லாம் அறிந்தவரே! இதனை விரிவாகக்கூறியருள்க. உம்மைப்போல் ஐயங்களைபவர் இவ் வுலகிலின்று.'

ஜாபாலி: —'கடவுட்கெல்லாம் தலைவரான கண்ணன் வைகுண் டத்தில் பொற்கட்டிலின்கண் சனகாதிமுனிவர் துதிக்க இலக்குமி பூமியுடன் யோகநித்திரை செய்ய, இலக்குமியும் பூமியும் நற்கதைகள் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது மாற்றுள் போராட்டம் நிகழ்ந்தது. இதற்கிடையில் தேவர், கந்தருவர், சித்தர்கள், வித் யாதரர், உரகர், தேவேந்திரன முதலியோர் தேவபிரானை ஹரி யைத் துதிக்கவந்து இலக்குமி மணாளனும் முடிவில்லாதவனும் பிற ரால் தோற்கடிக்கப்படாதவனுமான கண்ணனைத் துதிகளாலும், வைதீக வாக்கியங்களாலும், மற்றும் பல்வகைப் பேச்சுமொழிகளா லும் நூறுமுறை துதித்து வலம்வந்து தங்கள் விமானமேறி வந்த படி சென்றனர். அப்பொழுது துயிலெழுந்த கண்ணன் கலகத்தால் மயங்கிக்கிடக்கும் இலக்குமி பூமிதேவிகளைப் பக்ஷபாதத்துடன் பார்த்து பூமியை வலது கையாலும் இலக்குமியை இடது கையா லும் அணைத்துக் கலகம் வேண்டாமென்று சமாதானம் செய்தார். இலக்குமி ஹூம் என்று சொல்லிச் சிவந்த கண்ணுடையவளாகி, 'துட்டனே! கையை விடு' என்று சொல்லிக் கையை அவர் கையிலிருந்து உதறிக்கொண்டு கொடுஞ்சொற் கூறினள்.

இலக்குமி: —'செய்ந்நன்றி கொன்றவனே! கெட்ட புத்தியை உடையவனே! துட்டனே! நீ நந்தன் வீட்டில் உரலில் கட்டுண்ட தையும் பாண்டவருக்குத் தேர்ப்பாகனாகியதையும் பிறன் மனை விழைந்ததையும் கோபியரை மணந்ததையும் நினைத்துப் பார்ப்பாய். செய்ந்நன்றியற்றவனே! என்னை மணக்கும் சிரமத்தை நினைத்துப்

பார்ப்பாய்.' என்று கோபங்கொண்ட மனத்துடன் சினத்தை நடித்துக் காட்டுபவளாகித் தனது சக்தி சம்பந்தமான அம்சங்களெல்லாம் கொண்டு காட்டிச் சென்றாள். சாரமறிந்தவரும் நீதிகள் அறிந்தவரும் சாமதானாதி உபாயங்களறிந்தவருமான கண்ணன் சக்திநழுவியதினால் நடுங்கிய மனமுடையவராகிக் குற்றமின்றியே விட்டுஓடும் அவ்விலக்குமியை சாம முதலிய உபாயங்களின் வகைகளாலும் வியாகரணப்பொருத்தமுடைய நன்மொழிகளாலும் தேற்றினார். இம்மொழிகேட்ட இலக்குமியானவள் தனது கணவனைப்பார்த்துக் கூறினள்.

இலக்குமி :- 'இவ்வஞ்சனைச் சொல்லினை பூமியிடத்துக் கூறுவீர். இதுவரை அனுபவித்தது போதும். தட்டரே! இனி விடும். உமது கெட்ட எண்ணத்தைச் சனகரிடம் போய்க் கூறுகின்றேன். நீர் ஓரம் செய்பவராதலின் நிற்பீராக. பூமியுடன் சேர்ந்து வாழ்வீர்' என்று கூறி சனகர் வீடுசென்றாள். பிறகு, கணவன் நாம் இலக்குமியால் விடுபட்டோம். எங்கு செல்வோம். யாது செய்வோம் என்று சிந்தித்துத் தனது மனதிலேயே துன்பத்தைச் சிறிதுசிறிதாக விலக்கிக்கொண்டு இலக்குமியை வரவழைக்க வழியாதென்று சிந்தித்திருந்தார். அப்பொழுது ஆகாயவாணியானது 'கண்ணனே! அஞ்சேல். திருவாஞ்சியம் இருத்தலால் கவலையையகற்றுவாய்' என்று கூறியது. இம்மொழி கேட்ட கணவன் விரைவில் வைகுண்டத்தினின்றும் புறப்பட்டுத் திருவாஞ்சேசுவரரையடைந்து விஸ்வேஸ்வரன் சன்னிதியில் விஸ்வேஸ்வரருக்கும் மகிழ்வுண்டாக தேவவருடத்தால் பதினாயிரம் வருடம் கொடிய தவம் செய்தார். அவரது கொடுந்தவத்தால் உச்சந்தலையினின்றும் தீ தோன்றி மூவுலகினையும் அயன் அண்டத்தையும் எரித்தது. அவர் கோடையில் ஐந்தங்கிற்கிடையிலும் கார்காலத்து மேற்பரப்பின்றியும் பனிகாலத்தில் மடுவின்கண்ணுமிருந்தும் தவம் செய்தார். பூதங்களுக்கெல்லாம் தலைவரான அவரது கொடிய தவத்தைக்கண்டு, தேவர் கந்தர்வர் முதலியோர் ஆலோசித்தனர். இங்ஙனம் தேவரது மந்திராலோசனைக்கிடையில் நாரதர்வந்து தேவர்களுக்கெல்லாம் காரணப்பொருத்தங்கொண்ட சில சொற்கள் நடந்தபடி கூறினார். இங்ஙனம் நாரதரால் உண்மையறிந்த தேவர்களும் இருடிகளும் யாம் மகிழ்ந்தவராகிச் செய்யவேண்டுவன செய்தவராயினம். இலக்குமியை அழைத்துவர யாது செய்யவேண்டும் என்று நினைத்துக் கொண்டு விரைவில் இலக்குமி இருக்குமிடம் செல்வோமா

என்றும் ஆலோசித்தனர். பிறகு புவியிலெங்கும் திறமைவாய்ந்தவராகிய தேவர் அந்தணர் வடிவங்கொண்டு மேருவுக்கு அப்பால் வடபுறத்தில் இலக்குமிப் பொய்கை வனமடைந்து அங்கு பூதேவியினும் மேன்மை விரும்பிநிற்கும் தலைவியைக்கண்டு இங்ஙனம் கூறினர். 'தேவியே! செந்தாமரைக்கண்ணி! எவ்வுலகுக்கும் தாயே! தலைவனைப் பிரிந்ததனால் தோன்றிய மனத்துயரத்தினையகற்று. மனம் சாந்தியடைவாய். கண்ணன் அருகில்வா. மிக வருந்திய எம்மைக் காப்பீர். உலகுக்குத் தாய்தந்தையரான நீவிர் சினந்தீராயின் எங்கட்குவிடமளித்து இஷ்டம்போலிருங்கள்' என்று தேவர்கள் தெரிவித்துக்கொண்டனர். இதற்கும்தலைவி ஒருசொல்லும்கூறாது நொதுமல்போலிருந்தாள். தேவர் மீண்டும்மீண்டும் பல்வகை முயற்சியுடன் தேற்றியும் முடிவில ஊக்கம் குன்றியவராகி ஒரு ஆலோசனை செய்தனர். பிறகு, அவர்கள் கண்ணன் தவமடக்க வேறு ஒரு உபாயம் விரும்பியவராகிக் கைலாயம் சென்று சிவபிரானை மீண்டும் வேண்டினர்.

தேவர்:—'உலகுக்கெல்லாம் நன்மைசெய்யும் மகாதேவனை தேவர் தலைவா! கண்ணன் இலக்குமி இவ்விருவரையும் விரைவில் சமாதானம் செய்வீர்' என்று வேண்டினார்கள். இங்ஙனம் தேவரால் வேண்டப்பட்ட ஈசன், 'அங்ஙனமேயாகட்டும். தேவர் காரியத்தைச் செய்கின்றேன். இலக்குமியுடன் விஷ்ணு சேருவார். திருவாஞ்சியத்தில் தவம்செய்யும அவருக்குத் தவத்தின் சித்தியளிக்கிறேன். உமதிடம் செல்லுங்கள். துயரகற்றுவீர். விரைவில் விஷ்ணுவுக்கு மாறின்றித் தவப்பேறுண்டாகும்' என்று கூறினர். மன எண்ணங்கட்கு நன்மை விளைவிப்பதும் அருள் நிறைந்ததும் துன்பமெல்லாம் நீக்குவதுமான ஈசனது மொழியாகிய அமுதினைப் பருகியவராகித் தேவர் தம்தம் உறையுட் புக்கனர். சிவபிரானும் பார்வதியுடன் விஷ்ணுவின் சமீபம் சென்றார்.

[ஸ்காந்தபுராணத்தில் சனத்குமார ஸம்ஹிதையின் மேற்பகுதியில் திருவாஞ்சியப்பெருமையில் புண்ணியபுட்கரணிப் புகழ்ச்சியில் அரிதவஞ் செய்தலென்ற 53-ம் அத்யாயம் முற்றிற்று.]

---

## ஐந்தாவது அத்யாயம்.

எல்லோராலும் வணங்கப்படும் பகவானாகிய இறைவன் திருவாஞ்சியம் சென்று மதுஸூதனரைப் பார்த்துக் கூறினர். 'காசியைவிடச் சிறந்த புண்ணியபலன் அளிப்பதும் அப்பூமியில் வசிப்பவருக்கு

வீட்டின்பம் அளிப்பதும் உனது யோகத்தால் மிகவும் விளங்குவதும் குற்றமற்றிருப்பதால் பூஜிக்கத்தக்கதும் பெரியோரால் அடையப்பட்டதுமாகிய திருவாஞ்சியத்தில் கொடிய தவத்தில் மிக்க பக்தியுடன் பூஜிக்கப்பட்டவனாகி உன்முன் வந்துளேன். இருடிகளாலும் சிங்கங்களாலும் மான், புலி, பன்றி இவைகளாலும் பல்வகை ருதுக்களாலுண்டான நானாவித புட்பங்களால் அணியப்பட்ட உனது குடிலைப்பார்த்து மகிழ்ந்தேன். வேண்டுவதைக் கேள். இந்திரனும் தேவரும் உனது கொடிய தவத்தைக்கண்டு இது என்ன என்று பயந்து நாரதரால் அறிவித்தவராகி இலக்குமிப் பொய்கை வனத்தில் பார்க்கவரது ஆசிரமத்தை அடைந்து உலகுக்குத்தாயும் உலகால் வழிபடப்பட்டவளும் ஆகிய இலக்குமியைவேண்டி மனமுடைந்தவராயும் உயிரற்றவராயும் ஒளியற்றவராயுமாகி சிறந்தவெள்ளிமலையில் என்னைச்சார்ந்து ஈசுவரியையும் என்னையும் வழிபட்டு இலக்குமியின் விரகத்தைத்தெரிந்து வந்தபடி சென்றனர். ஆகையால் யான் உனது எண்ணத்தை நிறைவேற்றப் பார்வதியோடு இடபத்தில் ஏறிக்கொண்டு முனிவர்தொழும் வெள்ளிமலையினின்றும் வந்தேன்' என்று அன்னவர் சொன்னவுடன், கண்ணன் யோகப்பயிற்சியினின்றும் ஒழிந்து எழுந்து மெல்லக்கண்ணைத்திறந்து அழிவற்றநீலகண்டரைப்பார்த்தார். பிறகு கை குவித்து பரமாத்மவடிவரும் எண்ணங்கடந்தவருமான இறைவனைத் தன் தண்டவடிவமாக வணங்கினர். வணங்கித் துதித்து நீர் மறைந்த கண்ணராயும் மயிர்க்கூச்செறிந்தவராயுமாகிக் காலில் விழுந்தனர். சிவன் எழுப்பி உச்சிமுகந்து 'மனவெண்ணம் யாது' என்று கேட்டார். மறை மொழிக்கும் எட்டாத தலைவரும் வேதங்களால் ஓதப்பட்டவருமான பெருமானைச் சர்வலோகத் தலைவனை கண்ணன் ஆனந்தக் கண்ணீரால் தடைபட்டு குழறுகின்ற நாவுடையவராகித் துதிக்க ஆரம்பித்தனர். 'ஏ தேவதேவனே! மகாயோகியே! பார்வதி கணவனே! பிரபுவே! சாந்தமான வடிவனே! கருணைக்கடலே! தலைவர் தலைவா! உனக்கு வந்தனம். தொண்டர் துயர் களைபவனே! சிவனே! உன் கழலேயே காவலாக அடைந்த தொண்டனாகிய என்னைக் காப்பாற்றுவாய். மொழிக்கெட்டாதவனே! இவன் தொண்டனென்று அன்புவைத்துக் காப்பாற்றுவாய். அயன் வணங்கும் திருவடிக்கமலம் உடையவனே! உனக்கு வந்தனம்' என்று துதித்தனர். இப்படித் துதிக்கப்பட்ட மகாதேவர் தெளிந்த முகமுடையவராகி லோகமாயையை ஆச்ரயித்து இலக்குமியை வரவழைத்தார். சனகர் ஏவலால் மேருவுக்கு வடக்கேயிருக்கிற இலக்குமி யோகமாயையின் பலத்தால் அருகில் வந்துவிட்டாள். 'அம்மா!

தேவி!' கொங்கைகளின் பாரத்தால் வெட்கப்பட்டுத் தலை குனிந்து தேவஸேனையும் தேவியையும் தனக்கு மகிழ்ச்சி உண்டுபண்ணினவராதலின் வணங்கினாள். சிவன், இலக்குமி கண்ணன் இருவரையும் தேற்றி மகிழ்வோடு ஒருவருக்கொருவர் அன்புண்டாக்கி வைத்துச் சினத்தைத் தணிவித்தார். அவ்விருவரும் ஒருவருக்கு ஒருவர் சேர்ந்த அன்பால் அலர்ந்த கண்ணராகி இத்தலத்திற்குப் புகழுண்டாகவேண்டி ஒருவரம்வேண்டினர். 'இந்நிலவுலகில் இத்தலம் இதுமுதற்கொண்டு திருவிழைந்ததென்று பொருள் பொய்க்காதபெயருடன் புகழடையட்டும். புண்ணிய புஷ்கரணிக்கரையில் ஆதிபகவானை நாராயணன் செய்தகுடியில் பார்வதியுடன் எப்பொழுதும் நீர் என்னிடத்தில் அருள் இருக்குமாயின் இருக்கவேண்டும். இவ்விடம் இதற்குமுன் தலமாத்திரமும் இப்பொழுது லிங்கத்துடன் கூடியதுமாக இருக்கிறது. திருவாஞ்சியம் என்று காலையில் எழுந்தவுடன் மூன்றுதரம் சொல்லவேண்டும். புண்ணிய புஷ்கரணியில் நீராடி ஒருமுறை அதன்கரையிலுள்ள லிங்கத்தை வணங்குகிறவன் கர்மங்களினின்றும் விடுபடுகின்றான். மூவுலகிலும் உள்ள தீர்த்தங்கள் இப்புண்ணிய புஷ்கரணியில் சேர்ந்திருக்கின்றன. விஷு, அயனம், சங்கராந்தி முதலிய புண்ணியநாட்களில் எவனொருவன் நீராடுகிறானோ அவன் சாந்திரவிதியில் குறைந்து நடப்பவனாயினும் முக்தனாகிறான். ஒரு கணமாயினும் அரைக்கணமாயினும் எவன் இத்தலத்தில் உறைகின்றானோ அவன் திக்பாலர்களால் பணியப்படுவான். அரசனிடத்தில் பணியாளர்போல தூதுதொழிலைச் செய்பவனாயினும் பரமாத்மாவான உனது சாயுஜ்யத்தை அடையட்டும்' என்று வேண்டப்பட்ட சிவன் அவருக்கு அவ்வரங்களை அளித்து ஸர்வலோக சரண்யனை பகவானைப்பார்த்துச் சொன்னார். 'மிகவும் மறைபொருளாயும் எவ்வுலகினுக்கும் பயன்படுவதும் பாபமெல்லாம் கடிவதுமான திருத்தல மகிமையைக் கேட்பாய்.

உரோமேசா என்ற அந்தணர் தனது மனைவி சீடர் முதலியோரோடும் புண்ணிய தீர்த்தங்களிலெல்லாம் நீராடவிரும்பி புவியைச் சுற்றி ஒரு தீர்த்தத்திலிருந்து மற்றொரு தீர்த்தத்திற்கும், ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கும், ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டிற்குமாகத் திரிந்துகொண்டு காவேரியை அடைந்து சீடருடன் நீராடினர். பிதுர்க்களைக் குறித்துத் தர்ப்பணம்செய்து கரையேறினர். புராணம் சொல்லிக்கொண்டிருப்பதும் சௌனகர் முதலியோருடன் கூடியதும் அதிலும் சிரத்தையினால் மிகவும்

புண்ணியந்தருவதுமான திருவாஞ்சிய மகிமையைச் சொல்லிக்கொண்டிருக்கிற இருடிகள் கூட்டத்தைக் கண்டனர். 'சௌனகர் முதலிய சிறந்த தபசிகளே! காசிக்கு ஒத்ததலம் எங்கிருக்கிறது? அதைப் பார்க்க ஆவலாயிருக்கின்றது. 'ரோமேச இருடியே! வேதம் மறைமுடியின் கரை கண்டவரே! தேவரீர் இங்கு எம்மால் காணப்படுகிறீர். உம்மை ஒத்தவன் இவ்வுலகிலில்லை. இத்தலத்தைக் காசிக்கு மேற்பட்டதாகக் கருதும். இது திருவாஞ்சியமென்ற பெயருடையது. இதை நினைத்தால் முக்தியளிக்கும். மேலும் காசிக்கு மேற்கொண்ட மற்றொரு விஷயத்தைச் சொல்லுகிறேன். இது மிகவும் சித்திரமாயும் சிறந்த தலமாயும் இரகசியமாயும் பாவங்கடிவதுமாயும் இருக்கின்றது. காசியிலும தெய்வச்செயலால் பாவிகளான மக்கள் இறப்பாராயின் அவரது பாவம் நீங்க பைரவர் ஒரு கணப்பொழுதில் தண்டிப்பார். அத்தகைய உபத்திரவம் இங்கில்லாததால் இது காசிக்கு அதிகமாகும். ஒத்ததாகச் சொல்ல இயலாது.' இம்மாதிரி தலமகிமையைக் கேட்டறிந்த இருடியானவர் திருவாஞ்சியத்துக்கு எப்பொழுது செல்வோம் என்று மனதால் நினைத்துக்கொண்டு மறைமுடிப் பொருளராயும் தனது சீடர்களை அனுப்பிவிட்டுத் தான் புண்ணிய புஷ்கரணிசென்று முக்தியின் பொருட்டு அங்ககரின் வடகீழ்திசையில் குடிலமைத்துக்கொண்டு தியானம், மௌனம், யோகம், ஜபம், வேள்வி, நோன்பு முதலியவைகளால் தவஞ்செய்தார். அக்கினித்துயம்பனன் என்ற சீடன் சடைபுனைந்து குருவுக்குப் பணிவிடைசெய்வதில் புத்தியைச செலுத்தினவனுகிப் பணிமேற்கொண்டு ஒழுகினன். தினந்தோறும் பணிவிடை செய்பவனும் வணக்கமுடையவனும் குருபக்தியுடையவனுமாகிய அந்தப் பிரம்மசாரியால் இவ்விருடியானவர் பணிவிடை செய்யப்பட்டு வந்தனர். இவர் தவத்தால் விளங்கிக்கொண்டு இங்ஙனம இருக்க, இந்திரன் முதலிய தேவரெல்லாம் பயந்தவராகி இவருக்கு இடையூற்றைச்செய்தனர். ஊர்வசி, அரம்பை, மேனகை, திலோத்தமை, சித்திரை, விசித்திரை, நாகர், கந்தருவர், சித்ரகேதனனுகிய சவிதா, மகாரதனுகிய சித்திரரதன், காமதேவன் முதலியவர்கள் இந்திரனுல் ஏவப்பட்டவராகித் துறக்கத்தினின்றும் வந்து நடனம் சங்கீதம் முதலிய புலனைக்கவரும் தொழில்களால் இடையூறு விளைவித்தனர். இவருடைய சிறந்த தவத்தால் அவரும் மனமுடைந்தவராகி, கோட்டான் சூரியனை நோக்கிச் செல்லவாற்றது இருளை நோக்கிச் செல்வதுபோல் இவர்கள் திரும்பித் தலைகவிழ்ந்தவராகி இந்திரனைப்பார்க்க மனமாற்றது பட்டணம் சென்றுவிட்டனர். தேவ மங்கையர், உரோமேசரது தவத்தின் கூட்டமான

ஒளியின் கூட்டம் 'யாம் அணிமையிற் சென்றவுடன் எங்களை எரித்து ஓடிவந்து விட்டோம்' என்றனர். இதைக்கேட்ட இந்திரன் உடனே குருவினிடம் சென்று வணங்கி, 'எமக்கு அபயம் அளிக்கவேண்டும். இப்பொழுது யாம் உரோமேசரது தவத்தால் கலங்கியவரானோம். அதினின்றும் நீங்கவழியறி வீராயின் எமக்குக் கூறியருள்க' என்று கூறினன். இதைக்கேட்ட குரு இந்திரனைப் பார்த்து, 'அப்பா பயப்படாதே. அவர் முத்தி வேண்டுகிறார்' என்றனர். உடனே குருவை உபசாரங்களால் பூஜித்தான். ஈசுவரன் ஆகாரமின்றி இங்ஙனம் தவம் செய்யப் பனிரெண்டாண்டு ஒரு கணமாக நீங்கிய பிறகு அவ்வந்தணனது தவத்தால் மகிழ்ந்து அப்பொழுது மாணவருடன் கூடிய அவருக்கு முத்தியளிக்க தேவரிஷியாகிய நாரதர் பிரம்ம ரிஷியாகிய சனகர் முதலியோரோடும் மருத்துக்களோடும் தேவ மங்கையரோடும் கூடினவராகி பார்வதியோடு இடபம் ஏறிக்கொண்டு சென்றனர். அவ்விருவ ஞாயிறை ஒத்த செந்நிறமான தனது மனத்தாமரையில் காலக்கிரியைகளால் செய்யப்பட்ட எண்கோணத்திற் கிடையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டுள்ள பரமாத்ம தத்துவமாயும் வெளியில் வந்து தோன்றினவனும் நீறு பூசியவனும், பாச, முச்சூலம், டக்கை, அங்குசம், அபயஹஸ்தம் இவைகளைத் தரித்தவனும் பிறை மௌலியனும் அழகிய மனைவியுடன் கூடியவனும் கண்டு, கைகுவித்து, பூமியில் விழுந்து வணங்கித் துதித்தனன். அங்ஙனம் துதித்த அவ்விருவர்கட்கு முத்தியடைய வரமளித்து மற்றொரு சாலோக்ய வரமுமளித்தனன். இந்த உரோமேசர் மோக்ஷமடைந்த அத்யாயத்தை எந்த அந்தணன் படிக்கிறானோ அவன் அந்தணருக்கு இடையே நான்முகன் நகரையடைகிறான்.

திருவாஞ்சிய மகிமையோடு கூடிய இந்தச்சிறந்த இதிஹாஸத்தை எவன் எற்பாடு காலையில் எழுந்து ஓதுகிறானோ, வரைகிறானோ, நினைக்கிறானோ அவன் எல்லா இன்பமும் இவ்வுலகில் துய்த்து யாண்டும் துன்பமின்றி அச்சிவ நகரையடைவான். இப்புண்ணிய சரித்தை நாராயணனுக்குச் சொல்லி, சிவன் தனது நகருக்குச் சென்றார். அத்தருணம் நாராயணர் சொன்னதாவது: 'தேவ தேவரே! என்னிடத்தில் அருள் இருக்குமாயின் இத்தலத்தில் வசிக்கவேண்டுகிறேன். எவர் என்னைத்தெரிசிக்கப் போகிறார்களோ அவர்களுக்கு முத்தியளிப்பவனாய் இல்லாவிடில், இத்தலம் உலகத்துப்புகழ்பெறாது. திருவாஞ்சியமென்று புகழ்பாப்ப வேண்டியயாவரும் இத்தலத்துத் தவம் செய்து தமது வேண்டுகோளையடையட்டும்.'

'எனது அன்பனும் அவன் வடிவமானவனும் நற்புத்தியுடைய வனுமான தேவனால் வேண்டப்பட்ட தேவர்தலைவனான சங்கரன் கருணைக்கடலாதலால் தொண்டனிடத்துள்ள அன்பால் அங்கு தானே உறைந்தார். புண்ணிய புட்கரணி எங்கு இருக்கிறதோ அங்கு திருவாஞ்சியேசுரர் இருக்கிறார். எங்கு வாஞ்சேசர் இருக் கிறாரோ அந்த இடம் காசியைவிட நூறுமடங்கு அதிகமானது. ஏ! அரசனே! உனது வேண்டுகோளைப்பெற நீயும் அவசியமா இங்கு வசிப்பாய். எப்போகங்களும் துய்த்து ஈற்றில் நற்கதி யடைவாய்.'

[ஸ்காந்த புராணம் ஸனத்குமாரஸம்ஹிதையில் மேற்பகுதியில் கண்ணன் இலக்குமியின் சேர்க்கை என்ற 54-ம் அத்தியாயம் முற்றிற்று.]

## ஆறாவது அத்யாயம்.

ஜாபாலி:—'அநந்தாங்குபவருக்குத் தலைவனான அரசனே! எப்பொழுதும் யாகம் செய்பவனாகவே யிருக்கின்றாய். இப்பொழுது புண்ணிய புட்கரணியின் மகிமையைச் சொல்லுகிறேன்; கேள். வட திசையில் மிதிலை யென்றொரு பட்டணம் இருக்கின்றது. அதனரு கில் கௌதமர் என்ற முனி ஒருவர் இருந்தார். அவருக்கு அகலிகை என்ற மனைவி இருந்தாள்; அவள் மிகுந்த கற்புடையவள், தூய புன்னகை உடையவள்; இளையோள்; மிக்க அழகு வாய்ந்தவள்; மீனைனப் பிறழும் கண்ணி; நற்பருவமுடையவள். இவ்வாறு எல்லா அவயவங்களிலும் குறைவின்றிச் சிறந்தவளாயும் கன்னல்போன்ற கிளவியும் குயிலை வெல்லும் குரலும் மான்போல் மருண்டபார்வையும் மிகுந்த கற்புடையவளாகி இருந்தாள். அவளுடைய அழகிய உருவம் போன்று மூன்று உலகிலும் தேடினாலும் அகப்படாது. அமுதத்தை அடையவேண்டிக் கடல் கடைந்தபோது தற்செயலாக இவள் தோன் றினாள். இவளது அழகின் சரிதத்தை அடிக்கடி கேட்டு மயங்கி, ஜார வடிவத்துடன், அந்த இருடி அனுட்டானம் செய்யும்போது, இந்திரன் அவளை வலிதில் அணைந்து செல்லவெண்ணினன். பின்லார் இந்திரனை இருடியால் பார்க்கப்பட்டவனாகி மனங்கலங்கி பூனைவடிவங்கொண்டு அங்கணத்தின் நேரேயே சென்றனன். அங்ஙனம் சென்றவனைக் கௌதமர் பார்த்து இவன் யார் என்று எண்ணினார். மனைவியையும் கேட்டார். அவள் அவர்காலில் விழுந்து வணங்கித் தலை விரிந்தவ ளாகிக் காற்றால் அலைக்கப்பட்ட வாழைபோல் மனங் கலங்கிச் சொன்னாள்.

அகலிகை:—'ஏ தலைவா! இன்னாரென்று தெரியாது. ஆனால் அவருக்கு ஆயிரங் கண்கள் இருந்தன. அவர் யாரென்று எனக்குத் தெரியவில்லை. அவர் வலுவில் சேர்ந்து இஷ்டப்படி விலங்குவடிவம் மேற்கொண்டார்' என்று சொல்லியவுடன், கௌதமர் கோபமிகுந்தவராகி, 'நீ பேசாமலிருந்ததற்காகக் கல்லாய்க்கிடப்பாய்' என்று சபித்தார். இவ்வாறு கணவன் சொல்லியவுடன், கொடிய காற்றால் அலைக்கப்பட்ட கொடிபோல் கல் வடிவமாகி விழுந்தாள். மீண்டும் அவளிடத்தில் குற்றமில்லாததால் அருள் பாராட்டிக் கருணைக்கடலாகிய கௌதமர் ஒருவரங்கொடுத்தார். 'எப்பொழுது ராமன காட்டிற்கு வருகின்றானோ அப்பொழுது முன்னைய வடிவங்கொள்வாய்,' என்று தனது மனைவிக்குச் சாபம் கொடுத்துவிட்டு பூனை வடிவங்கொண்ட சாரன் இந்திரன் என்றறிந்து அந்த முனிவர் கோபத்தால் 'பிறன் மனைவிழைத்தவனும் காமியும் பிறர் பொருளை விரும்பியவனும் மாயைசெய்தவனும ஒருயோனியில் மயங்கியவனும் ஆகிய இவனுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தவேண்டி அவனதுடலுள்ள கண்களெல்லாம் பெண் குறியாகட்டும். இதைக்கண்டு சுதர்மா என்னும சபை சகிக்காமல் துன்புறட்டும் என்று சபித்தார். இங்ஙனம் அவ்வந்தண இருடி கூறியவுடன உடலிலுள்ள கண்களெல்லாம பெண் குறியாயின். அப்படியானது கண்டு அவையை பார்த்து வெட்கத்துடன் மறைந்து நின்று அவன், 'எனக்கு மீண்டும் கண்களாக எப்பொழுது ஆகும்? இதற்குக்கழிவாய் யாது? சுதர்மையானது என்னை எங்ஙனம் பார்க்கச் சகிக்கும். யான் எவ்வழியாய்க் கரையேறுவேன். யான் இழைத்த தீவினையால் உருவர் கெட்டவனாயினேன். யாவரும் என்னைக்கண்டு நகையாநிற்பார்' என்று பலவிதமாக அழுது மானதப் பொய்கை சென்று தாமரையில் உட்புகுந்து அந்தணர் சாபத்தால் வருந்துபவனாகித் தன்னை மக்கள் அறியாதவரையில் இங்கேயே இருந்துவந்தான். அப்பொழுது மறுநாள் தேவர்கள் இந்திரனைப் பார்க்கவந்து, தேடிப்பார்த்தும் காணாது 'ஒருகணத்திற்குள் எங்களுக்குத் தென்படவில்லையே. எங்கு சென்றார்' என்று நடுங்கினர். 'இப்பொழுது சுதர்மை என்னும சபை சந்திரனற்ற சரத்கால இரவு போலும், நீரற்ற கங்கைபோலும மங்கல மிழந்த நங்கைபோலும சோபமுள்ள கல்விபோலும, நாணமில்லாக் குலமாதர்போலும் இவ்விந்திரனில்லாமல் விளங்கவில்லை. ஆகலின் குருவே இச்சபை விளங்குமண்ணம் விரைவிலோர் உபாயம் தேடிச்செய்வீர்' என்று தேவர் வேண்ட, குருவானவர் ஞானக்கண்ணால் கண்டு சொன்னார்.

'அவன் பாபச்செயல் அறிந்தேன். கௌதமன் மனைவியைக் கைப்பற்றித் துன்புற்றுச் சாபம் ஏற்று மானதப் பொய்கையில் இருந்துகொண்டு சாபம் நீங்குமுபாயம் தேடிக்கொண்டிருக்கிறான். அவனது கண்கள்யாவும் பெண் குறிகளாயின. தேபோ நிதியான இந்திரன் ஒளி மயங்கியவனாகித் தனக்குச் சாபமுக்தி எப்பொழுது நேருமென்றும் தெய்வச்செயல் தாண்ட முடியாதென்றும சிந்தித்துக்கொண்டு தாமரைக்கிடையில் மறைந்திருக்கின்றான். இராக்கதர் அவன் அங்ஙனம் இருப்பதனை அறிவதற்குள் அங்கு நாமெல்லோரும் சென்று அறுகுணம் பொருந்திய சசி கணவனை இந்திரனை உபாயங்களால் தேற்றி மனவருத்தமகற்றி அழைத்துவர முயற்சிப்போம்' என்று குரு கூறினார்.

இதனைக்கேட்ட தேவர், 'ஹா, ஹா,' என்று அழுது, இவருக்கு மனிதர்போல் எங்ஙனம் அறிவின்மை தோன்றிற்று. இவர் இங்ஙனமாயின் எமக்குக் கதியாது? காற்று மேரு மலையைப்பேர்க்கின்ற காலத்து மரத்துக்கு என்ன நிச்சயம், என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டு இந்திரன் சம்பந்தமான கவலையால் மனம் வெம்பியவராய் இந்திரனிருக்கும் மானதப் பொய்கை சென்று இந்திரன்வர வேண்டுமென்ற கவலையால் வருத்தத்துடன் நீராடினர். குருமுதலிய தேவர் இந்திராணியை அருகில் அழைத்துக்கொண்டு சென்று நியாயமானதும் நன்மை விளைவிப்பதும் தேவரை மகிழ்விப்பதுமான பல நன்மொழிகள் கொண்டு ஒவ்வொருவரும் தனித்தனியாக இந்திரனைத் துதித்தனர்.

தேவர் :—'தலைவனும் நூறுவேள்வி செய்தவனுமான இந்திரனே! நீர் இல்லாததினால் யாம் இன்பமற்றவராகிய மக்கள்போல் வருந்தி உழல்கிறோம். உமது ஏவலாளரான எம்மை விரைவில்வந்து காப்பாற்றும். தவறு யாருக்குத்தான் நேராது. பெரியோருக்கும் உண்டாகின்றது. குருமுதலிய யாம் உமது துன்பம் அகற்றுவோம். கவலைப்படாது நீரிலிருந்து வெளிக்கிளம்புவீர். சசியும் மிகவருந்துகின்றாள்' என்று கூறினர். இங்ஙனம் தேவர் கூறியதனைக் கேட்ட இந்திரன் சிறிது தேற்றிக்கொண்டு நாணத்தால் உயிரற்றவனாகி இருந்தும் மெதுவாகக் கிளம்பினான். பெருமையற்ற இந்திரன் தேவரையெல்லாம் கட்டிக்கொண்டு குருவை வணங்கியும் தனது தீயகன்மத்தின் செயலைத் தெரிவித்துப் பேசாது முன்பு நின்றான்.

குரு :—'சிறந்த புத்திமையுடையவனே! துன்புறேல். உனக்

குச்சாப நீக்கமுண்டாகும். அதற்குவழி கூறுகின்றேன். காவேரியின் தென்கரையில் இருயோஜனை தூரத்தில் திருவாஞ்சியமென்ற சிறந்த தலமிருக்கின்றது. பலமுனிவரும் கூடிய அத்தலத்தில் நீர் சென்று சாந்தராயணம் முதலிய திவ்யமான அநேக கிருச்சிரங்கள் செய்து தவம் செய்வாயாகில் தேவர் மகிழ்ந்து உமது சாபம் அகற்றுவார். மீண்டும் அக்கண்கள் தோன்றும். ஐயமின்று. சுதர்மாவும் வாஞ்சேசனுடைய அருளால் உன்னைப் பொறுக்கும். இதன்கண் ஐயமின்று. தவஞ்செய்ய விரைவிற்செல். தாமதியாதே. உனக்குச் சாபமுக்தி உண்டாகும் வரை உதவியாக நானும் அங்கே இருக்கிறேன்' என்று கூறினர்.

பாவமெல்லாம் அடக்கக்கூடிய தேவகுருவினது மொழிகேட்ட இந்திரன் மகிழ்வேற்ற பொறியுடையவனாகித் தவஞ்செய்ய மனதின்கண் எண்ணிச்சென்றான். மிகுந்த பொறுமையையுடைய தேவகுரு, ஸ்ரீவாஞ்சியேசரை நினைத்து மகிழ்ந்து இந்திரனுக்கு இதமான காரியம் செய்ய எண்ணி இந்திரனொடு திருவாஞ்சியஞ் சென்றார். சிறந்த அறிஞராகிய அக்குரு சிடர் இருவரும் குற்றம் நீங்கத் திருவாஞ்சியம் விரைவில் வந்து சேர்ந்தனர். இந்திரன் வந்தது முதல் நியமங்களாலும் உபவாசங்களாலும் சிறந்த நோன்புநோற்றுக் குருவைச் சகாயமாகக்கொண்டு அந்தணர் சாபம் நீங்கவேண்டியும் திருவாஞ்சி ஈசுவரரது அருளுண்டாகவேண்டியும் காலமானபடி தேவ வருடத்தால் ஆயிரம் வருடம் கொடிய தவம் செய்தான். அவனது தவத்தைக்கண்டு மெச்சி வாஞ்சேசுவரர் அவன்முன் தோன்றினர்.

திருவாஞ்சியேசுரர் :—'இந்திரனே! உனது தவத்தாலும் நியமத்தாலும் மகிழ்ந்தேன். உனக்கு வேண்டும் வரம் கேட்பாய்' என்றனர். தேவ தேவனும் வேண்டும் வரம் அளிப்பவனும் சிறந்த திருவாஞ்சியத் தலைவனுமான ஈசனால் அங்ஙனம் சொல்லப்பட்ட இந்திரன் ஒருவரங்கேட்டான். 'புண்ணியம் வளரச்செய்யும் இப்புண்ணிய புட்கரணியில் யான் முன் செய்த பாபத்தினின்றும் விடுபட்டேனாதலின் இதற்குப் புண்ணிய புட்கரணியென்று பெயர் பழமையாக வழங்கிவரட்டும். இதன்கண் நீராடியவர் பிறன் மனை விழைந் தோராயினும் இதுமுதல் பாப சங்கத்தினின்றும் விடுபடட்டும். ஆகிய இதுதான் நான் வேண்டுவது. இது கொடுக்க அருளிருப்பின் கொடுப்பீராக' என்று வேண்டினன். இங்ஙனம் இந்திரன் வேண்டியபடி அளித்து உமையுடன் தனதிருப்பிடம் சென்றார். இங்

திரனும் வேண்டுவது பெற்றுத்தனது குருவுடன் நகரம் சென்றான்.
சூதர்:—'அதுமுதல் அப்பொய்கைக்கு புண்ணிய புட்கரணி என்று பெயர்வாய்ந்தது. அதனை நினைத்தாலும் சொன்னாலும் அந்தணர் கொலைபாவம் நீங்கும். இது இந்திரனால் தூய்மையடைய வசிக்கப்பட்டது. தாமரைக்கணணரான ராமேசர் முக்தியடையவும் இலக்குமி சுகம்பெறவும் இங்குவசித்தனர். இதுதான் தோற்றுவாயின் முறை. இதனை உனக்குக் கூறினேன். வேண்டுவதெல்லாம் அளிப்பதும் மந்திரவடிவமானதுமாகிய இந்திர சாப மோக்கம் என்னும் இவ்வத்தியாயத்தை ஜபிப்பவன் எவ்வுலகிலும் பூஜிக்கப் படுவான். திருவாஞ்சியத் தலத்தில் புண்ணிய புட்கரணியிருக்கும் தேசத்தில் உள்ளவர்கள் பாபமாகிய கயிறுகளால் கட்டப்படுகிறார்களில்லை'.

[ஸ்காந்தபுராணம் சனத்குமார ஸம்ஹிதையில மேற்பகுதியின் திருவாஞ்சிய மகிமை புண்ணிய புட்கரணி புகழ்தல் என்ற 55-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## ஏழாவது அத்யாயம்.

ஜாபாலி:—"ஏ! பிரகத்சேன அறிஞனே! இப்பொழுது தான் ஞாபகத்துக்குவரும். நான் ஒன்று சொல்லுகிறேன் கேள். விருகூஷி என்ற அந்தணன் ஒருவன் நர்மதைக்கரையில் நிற்பவனும் தனது கர்மத்திலே பற்றுடையவனும் இருந்தான். அவனுக்குச் சுமந்துவின் பெண்ணும் கற்புடையவளாயும் எல்லா அங்கங்களிலும் அழகுமிக்கவளாயும் இலக்கணங்களும் அமைந்தவளாக இருக்கும் சாருமதியென்ற மனைவி இருந்தாள். அவன் அவளோடுகூடி இல்லறத்தை நடத்தியும் தெய்வ வழிபாடு, ஓமம் வளர்த்தல், வேதமோதுதல் முதலியவற்றில் பற்றுடையவனும், சிவபூஜையில் பற்றுடையவனும் உருத்திர சூக்தம் ஜபிப்பவனும் அடக்கமுடையவனும் மௌனத்துடன்கூடிய நல்லொழுக்கம் அமைந்தவனும் வேதவாதம், வேதாந்தம், முதலியவற்றிற் பற்றுடையவனும் நீதி சாஸ்திரங்கள் அறிந்தவர்களுக்குள் தலைவனும் பத்துக்குணங்களும் எடுத்துக்காட்டக் கூடியவனுமிருந்தான். இங்ஙனம் அவன் இருந்துவருகையில் ஒருகால மாறுபாட்டால் வெள்விக்காத வாருண உலகுக்குச் சென்றபொழுது எப்பொழுதும் தியானத்தையே மேற்கொண்டுள்ள கார்க்கியர் என்ற முனிவர் அவர் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது அவ்விருகூஷியின் மனைவியாகிய சாருமதி மிகுந்த வியாதியால் வருந்தியவளாய்ச் சீரையால் மூடிக்கொண்டு பூமியில் படுத்

திருந்தாள். அதனால் வழிபாட்டுக்குரிய அவ்வந்தணரையும் கவனியாமல் மயங்கிக்கிடந்தாள். அப்பொழுது கணநேரம் வீட்டிற்குள் காத்திருந்து அவமதிக்கப்பட்ட கார்க்கியர் பூமியில் படுத்திருக்கும் அவளைப்பார்த்து, 'வெண்குட்டம் உன்னைப்பற்றட்டும்' என்று சபித்துக் கோபத்துடன் வெளிவந்து வேறொரு வீட்டிற்குச்சென்று உண்டு, வந்தவழியே சென்றார். அவள் விழித்தெழுந்து துன்பத்தால் கலங்கி அழுதாள். முன் செய்த பாபத்தால் துன்புறுத்தப்பட்டேன் என்று கலங்கிய அவளை வெண்குட்டம் கைப்பற்றியது. ஒழுக்கம் குறைந்தவளாயும் பிசாசுபோல் இருந்தாள். இங்ஙனமிருக்க விருகூஷியும் யாகம் முடிந்தவுடன் ஆச்ரமத்திற்குவந்து சேர்ந்தார். அவள் இதுயாதென்று கலங்கிக் காலில் விழுந்தாள். விருகூஷி காலில் விழுந்த பிசாசுபோல்வாளைக்கண்டு ஐயுற்றுத் தெய்வத்தை நினைந்துகொண்டு, 'உனது வடிவம் ஏனிப்படி இருக்கிறது' என்று தனது மனைவியைக் கேட்டார். 'ஏ! காதலி! பயப்படாதே. துக்கமயக்கங்களைவிடு. என் காலில் விழுந்தவருக்குப்பயம் இன்று' என்று கணவன் சொல்ல, சாருமதி சொல்வாள். 'ஏ! பிராணநாதா! தாங்கள் யாகத்தின் பொருட்டுவாருணம் உலகம் சென்ற பிறகு யான் நோயால் துன்புறப் பெற்றவளாகிச் சீரையால் மூடிக்கொண்டு துயின்றேன். அப்பொழுது ஒரு அந்தணன் பசிதாகத்தால் வருந்தி பிக்ஷைக்காக வந்து ஆசை நிறைவேறாதவராய்ச் சென்றார். அறியாதே தூங்கும் என்னைப்பார்த்து எள்ளி இம்மாதிரியான சாபத்தை உச்சிப்பொழுதிலிட்டுச் சென்றார். ஏ! நாதா! அக்கணத்திலேயே சாபத்தீ மிகவும் பற்றியது. வெண்குட்டமாகிய பெருநோய் உடலெல்லாம் எரிந்தது. பாவமில்லாத என் விஷயத்தில் இம்மாதிரி சபித்து அவ்வந்தணன் சென்றபொழுது முன்னைய பாபத்தின் பயன் நுகரு என்ற தெய்வத்தின் ஏவல் இது என்று எண்ணுகிறேன். என்னிடத்தில் அருள் இருக்குமாயின் உன் திருவடிகளில் வணங்கியவளும வேறுதலைவனற்றவளும் மாறுபட்ட வடிவமுள்ளவளான என்னை முன்போலச் செய்யுங்கள்' என்று வேண்டினள். அவள் வாக்கை விருகூஷிகேட்டு ஞானயோக வன்மையால் மனைவியின் சாபம் நீங்குதற்கு வழி யாது என்று உன்னினார். அப்பொழுது அசரீரியான வாக்கு ஆகாயத்தில் நன்றாகக்கூறிற்று. 'இப்பார்ப்பனி முன்பு ஒரு பார்ப்பனனை வீணாகச்சபித்தாள். முற்பிறப்பில் செய்த அப்பாவத்தின் பயனாக இத்தன்மையை அடைந்தனள். திருவாஞ்சியத்தில் இதற்குத் தீர்வுண்டாகும்' என்று கூறிற்று. தர்மமறிந்த அவ்வந்தணர் அம்மொழியைக்கேட்டு வணக்

கத்தோடு மனைவியுடன் திருவாஞ்சியத்திற்கு வந்து கிரச்சிரம் சாந்திராயனம் இவைகளால் உடலைத் தூய்மை பண்ணிக்கொண்டு மார்கழி மாதத்தில் புண்ணிய புட்கரணியில் நீராடி அதன் கரையிலே உபவாசம் இருப்பவர்களாய் வலம் வருதல், வணங்குதல், துதித்தல் இவைகளால் பரமசிவனை வழிபாட்டும் பார்வதி, துர்க்கை, மகிஷமர்த்தனி இவர்களை முறையே வழிபட்டும் கொடைப்பொருளோடு திருத்தல மகிமையைக் கேட்பவராயும் துதிப்பாட்டுப் படித்தலில் பற்றுடையவராகிக் காலத்தைக் கழிப்பவராயும் பலவகைப் பூஜைகளாலும் உபசாரங்களாலும் பகலும் இரவும் வாஞ்சேசரது மனமகிழ்ச்சியை விரும்பியவராயும் தீர்வு எப்பொழுதுண்டாகும்; சாபத்தீ எப்பொழுது அடங்கும்; எப்பொழுது மனக்கவலையின்றி இருப்போம். இம்மங்கையோடு நாமும் எப்படி இல்லறத்தை நடத்துவோம் என்ற எண்ணமுடையவராகி வழிபாட்டுவந்தனர்.

சூதர் :—' அவ்விருவரும் இங்ஙனம் கவன்றவராகி மார்கழி மாதம் வரையிலும் அங்கே இருந்தனர். அங்ஙனமிருக்கையில் மாசிமாதம் வந்தது. அவர்கள் மன ஒருமைப்பட்டவராகி நீராடுதலில் பற்றுடையவராகி மாகஸ்னானம் செய்துவந்து நோன்பு நூற்றனர். அவ்விருகக்ஷியின் மனைவி நோன்பால் இளைத்த உடம்புடையவளாகிக் காற்று, இலை இவைகளை உணவாக உண்பவளாகியும் புண்ணிய புட்கரணிக் கரையிலமைத்த குடிலுடையவளாயும் பத்தியில் மிக்க மனமுடையவளாயும் வசித்து வந்தாள். திருவாஞ்சியேசர் இங்ஙனம் பத்திமிக்கவராகித் தரிசிக்க விரும்புகின்ற இவ்விருவருக்கும் அருளவெண்ணி மாகமாதத்தின் முடிவில் சிவராத்திரி பூஜை முடிவில் இவர்கள் துதிக்கத் திரிசூலம் அபய ஹஸ்தம் இவற்றைத் தரித்தவராகி உமையோடு இவர்கள் முன்னிலையில் தோன்றினர். உடனே அவ்விருவரும் தேவர் தலைவனை சிவபிரானைக்கண்டு துதித்தனர். தண்டம்போல் காலில் விழுந்து வணங்கினர்.

பிரகத் சேனர் :—' சாபத்திலிருந்து விடுபடச்செய்வதும் அத்தம்பதிகளால் துதிக்கப்பட்டதுமான தோத்திரத்தை மயிர்க்கூச்செறியும் எனக்குச் சொல்லவேண்டுகிறேன்.'

ஜாபாலி :—' மிகவும் ரகஸ்யமாயும் தீவினைகளை யெல்லாம் போக்குவதும் ஜபிப்பவருக்கு எத்தகைய போகங்களை யளிப்பதும மங்களகரமானதுமான இத்துதியை உனக்குச் சொல்லுகிறேன்.'

தம்பதிகள் :—விருகக்ஷியின் துதி :—' ஏ ! ஸ்வாமியே ! உலகுக்கெல்லாம் குருவே ! ஏ ! சிவமகாதேவா ! ஈசனே ! தேவர் தலைவனே !

உயிர்க்காதாரமே! உலகையிருப்பிடமாகவுடையவனே! உலகுக்குத் தலைவா! கடலிற்றோன்றிய இலக்குமிக்கு உடன் பிறந்தவனே! பசுபதியே! சிறந்த தேவராலும் துதிக்கப்படுபவனே! சாபத்தீயால் எரிக்கப்பட்டு உனது திருவடி நிழலைச்சார்ந்த என்னை இப்பொழுது பாதுகாப்பாய். நீதான் உண்மையானபொருள். உயர்ந்தவனுக்கு மேலுயர்ந்தவன் நீதான் எல்லாவற்றிற்கும் சான்றவாய். வேறு உலகிலிருந்தும் காற்று தீ முதலிய வடிவங்களால் உலகுக்கு ஆதாரமாய் இருக்கிறாய். சூரியன், தீ, மதி இவற்றைக் கண்ணாக உடையோய்! பாம்பரையனைப் பூண்பவனே. நீ முன்பு இப் புவிக்குப் பாரமான முப்புரத்தையும் எரித்தாய். அயன் முதலிய முனிவர் தலைவர்களுக்கெல்லாம் உன்னைத்துதிக்கக் குறைந்த புத்தியுடையார்களெனில் மனிதர்களுக்குள் நான் என்ன சொல்லப் போகிறேன். ஏ! தேவதேவனே! எல்லாராலும் வழிபடக்கூடிய வனாயிருக்கின்றாய். மந்திரங்களுக்கெல்லாம் மேற்செல்பவனாக இருக் கின்றாய். நல்லறிவுடைய சிறந்த முனிவர் மனங்களிலும் உறை பவனே! அறிவு வடிவ உலகில் செல்வமெல்லாம் தோற்றுவிப பவனே! நீதான் யோகிகளுக்கெல்லாம் அடையுமிடமாயிருக்கிறாய். ஆனந்தானுபவ வடிவனே! யோகிகளுக்கு ஒளி உண்டுபண்ணு பவனே! மாயைகடந்த மனப்பான்மையினும் கட்டடங்காதவனே! சத்துவ வடிவனே! சமயம்வந்தபோது சத்வாதி குணங்களோடுகூடி யவனாய் இருந்தும் உண்மையற்ற வடிவாக இருக்கிறாய். கவிகள் குணமின்மையைக் கூறுகிறார்கள். யோகிகள் உருவமுடைமையைக் கூறுகிறார்கள். நீ முதன்மையானவனாக இருக்கிறாய். கருணைக் கடலே! சிறந்த உடலுடையோனே! விஞ்ஞையை ஆள்பவனே. கள்ளமனம் நீங்கிய மனமுடையவரும் பிராணாயாமம் பயில்பவரு மாகிய தேவரீரை எவர் ஜீவாத்ம பரமாத்ம வடிவராயும் கிரியாதி களுடன் கூடியவராயும் திவ்ய வஸ்திரமணிந்தவராயும் வேதியரால் அறியப்படுபவராயும் வேறுபட்ட கணவுடையவராயும் தியானிக்கின் றனரோ அத்தகைய ஆதி தேவனை வணங்குகிறேன்.'

ஜாபாலி:—'இவ்வாறு துதிக்கப்பட்ட பரமசிவன் மகிழ்ந்த வராய் வரத்தைக்கேள் என்று தேவியுடன் வந்து நின்றார். கருணைக் கடலாகிய கடவுளது மொழியைக்கேட்டு அத்தம்பதிகள் சாபந்தீர வும் வெண்குட்டம் நீங்கவும் வேண்டினர். திருவாஞ்சியேசுரர் சாபம் தீரவும் வெண்குட்டம் நீங்கவும் ஆகுக. வடிவமும் வடிவமாறு பாடும் ஒழிக. புண்ணிய புட்கரணியில் நீராடுவதால் இவ்வளவு

தீமையும் ஒழிக. இது முதல் புண்ணிய புட்கரணி குட்டம் நீக்கு வதும் சாபம் நீக்குவதுமாக இருக்கட்டும். இச்சாருமதிக்கும் முன்னைய உரு உண்டாகப் போகிறது. என்னிடத்தில் சலியாதபக்தியும் உண்டாகுக. புண்ணிய புட்கரணி ஜலத்திலும் அத்தகைய பக்தி உண்டாகட்டும் என்று அந்தத் திருவாஞ்சியத்தில் வசிக்கும் முனிவருக்கும் அவர் மனைவிக்கும் வரம்கொடுத்து அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் பரமசிவன் மீண்டும் இலிங்கத்தில் புகுந்தனர்.'

சூதர்:—'விருகக்ஷி செய்த (சாபம் போக்கிய) துதியை எவன் ஒருவன் படிக்கிறானோ அவனுக்கு குட்டம் முதலிய நோய்கள் ஒரு பிறவியிலும வராது. முத்தியும் இவ்வுலகில் சுகமும் உண்டாகும். சிவலோகத்தில் நூறுகல்பம் வசித்து உயர்ந்த சிவ சாயுஜ்யத்தை அடைகிறான்.'

'ஏ! அரசனே! பாவத்தை நீக்குவதும் நாயுய பொருள் கூட்டுவதும் துறக்கமட, வீடு இவற்றைத் தருவதுமாகிய புண்ணிய புட்கரணி மகிமையை உண்மையாக உனக்குச் சொன்னேன். மற்றும் உனக்கு விருப்பமிருப்பின் திருவாஞ்சியத்தின் தோற்றத்தைக் கூறுகின்றேன். சோம்பலின்றிக் கேட்போன் பிறவியிலிருந்து விடுபடுகிறான்.

[ஸ்காந்தபுராணம் சனத்குமாரஸம்ஹிதையின் மேற்பகுதியில் திருவாஞ்சிய மகிமையில் புண்ணிய பொய்கைத்துதியில் விருகக்ஷி மனைவியின் சாபநீக்குதல் என்ற 55-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## எட்டாவது அத்யாயம்.

பிருகத்சேனர்:—'ஏ! ஜாபாலி! இப்பொழுது சுருக்கமாகச் சொல்லியுள்ள சிறந்த புண்ணிய சரிதத்தை விரிவாகக் கூறியருள்வீர். உமது சொல்லாகிய அமுது பருகுபவருக்குத் திருப்தியுண்டாவதில்லை. ஏ! அந்தணனே! கதைக்கிடையே மகாஸ்நானம் என்று கூறினீர். அதைச் சுருக்கமாக இப்பொழுது சொல்லவேண்டும்.'

ஜாபாலி:—'ஏ! அரசனே! மனிதர்க்குப் பாபம் நீக்குவதும் வேண்டியகொளிப்பதும் செல்வமெல்லாம் தருவதுமான மாகத்தைப் பற்றி முன்பு உனக்குச் சொல்லவில்லை. இப்பொழுது அதிகமாக விரிக்காது சுருக்கமாகச் சொல்லுகிறேன். நீராடும் விதியும் நியம

மும் சிரத்தை உள்ளவனும் சாதுவும் அருளுடையவனுமாகிய உனக்குச் சொல்லத்தக்கது. செய்ந்நன்றியற்றவனுக்கும் கடவுளில்லையென்பவனுக்கும் முட்டாளுக்கும் சொல்லக்கூடாது. உனக்குப் பாக்கியவசத்தினால் தர்மங்களைப்பற்றிக் கேட்பதில் ஊக்கமும் அநேகம் பிறவிகளால் இத்தகைய புத்தியும் தோன்றுகிறது. இப்புண்ணிய சரித்திரத்தைத் தத்தாத்ரேயர் கார்த்த வீரியனுக்குக் கூறினர். அதை உனக்குச் சொல்லுகிறேன்.'

தத்தாத்ரேயா:—'நற்குணங்களால் வெளுத்ததும் நற்குணங்களமைந்ததுமான விசாலை என்ற பட்டணத்தில் தர்மத்வஜன் என்ற மிகுந்த தர்ம எண்ணமுடைய வைசியன் இருந்தான். அவன் கொடை, வேட்டல், அத்யயனம் இவைகளில் பற்றுடையவனாக இருந்தான். இங்ஙனமிருக்கையில் அவனுக்கு மகப்பேறின்றி இருந்தது. அங்ஙனமிருக்கத் தெய்வச் செயலாய் கௌதம முனிவர்வந்து சேர்ந்தார். அவருக்கு வைசியன் அர்க்கிய முதலிய வழிபாடுகளியற்றினன். அதனால் வழிபடப்பட்ட அந்தணர் ஞானக்கண்ணால் பார்த்து அவனுக்கு மகவு தோன்றச் செய்யவெண்ணி, 'ஏ! வைசியனே! நான் மனதினால சிந்தித்து உனக்கு மக்கட்பேற்றுக்கு உபாயம் ஒன்று சொல்லுகிறேன். பக்தியுள்ளவனாதலின் நான் சொல்வதை ஆதரவுடன் கேள். சோழ தேசத்தினிடையில் காவேரியின் தென்கரையில் புண்ணிய புட்கரணியென்றொரு சிறந்த தீர்த்தமொன்றுண்டு. அதன்கண் உனது மனைவியோடு நோன்பு நோற்றுக்கொண்டு மாகஸ்நான விதிப்படி வனமைக்குத்தக்கபடி நீராடு. திருவாஞ்சியமென்று மூவுலகிலும் புகழ்பெற்ற தலம் அது. மாகஸ்நானத்தின்விதியையும் பயனையும் சொல்லுகிறேன். அப்பொழுது சூரியன் சிறிது உதிக்கும்போது மூன்று மந்திரங்களோடு பேசாமல் சூரியனைப்பார்த்துத் தர்ப்பணம் செய்யவேண்டும். மகர சூரியனில் கோபியர்த் தலைவனைநினைத்து, 'ஏ! தேவ தேவனே! நீராடுகின்றேன். எனக்குப்பயனோடு கூடியதாகச்செய். தாமரைக் கண்ணா! மகர சூரியமுக்கணா! ஏ! தேவ தேவா! நீராட்டத்தின் பயனையும் பாவம் கடிதலையும்செய். பயங்கரமான பற்களோடுகூடிய முகமுடையவனே! ஆச்சர்யமான தோற்றமுடையவனே! மாக நீராட்டத்திற்கு விடைகொடு' என்ற மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு தினந்தோறும் நீராடி முடிவின் அதன் நிறைவேற்றத்தில் அந்தணர்க்குப் போசனமிடுக. இம்மாதிரி நோன்புடன் நீராடுவாய். முடிவில் ஈசன் பயன் அளிப்பர்.'

ஜாபாலி:—'பெரியாராகிய கௌதமரது இந்த மொழியைக் கேட்டு அந்தவைசிய தம்பதிகள் நீராடத் திருவாஞ்சியத் திருப்பதி வந்து சேர்ந்தனர். சொன்னபடிக்கு நீராடினர். அவர்களது வழிபாட்டாலும் நோன்பாலும் மகிழ்ந்த ஈசன் அவர்களுக்கு அந்தப் புண்ணிய புட்கரணிக்கரையில் இரண்டு பிள்ளைகளை அருளினார். அவர்கள் சிறந்த புத்தியுடையவராய்ப் பரமசிவனிடமிருந்துவரம் பெற்று மகிழ்ந்து விசித்திரமான ஆடையணிகளும் திவ்வியமான இரத்தினங்களும் மிக்க பயிர்நிறைந்த கிராமத்தையும் கொடுத்தார்கள். பிறகு சிவனருளால் அவர்களுக்குச் சீக்கிரமாக பிள்ளைகள் பிறந்தன. பன்னிரண்டு வயதானவுடன் வேதவிதிப்படி உபநயனஞ்செய்து வேதம் பயில்வித்தனர். இங்ஙனம் பிள்ளைகள் வேதம் பயின்றவராயும் பெற்றோர் பணிவிடையில் முயன்றவராயுமிருந்தனர். அங்ஙனமிருக்கும் நாளில் அவ்வைசியன் தவத்திற்காகக் காட்டிற்குப் போகவெண்ணி புண்ணிய புட்கரிணிக்கரையில் குடிலமைத்து முக்காலமுமநீராடித் திருவாஞ்சியேசரிடத்தில் பற்றியமனமுடையவனாகி வானப்பிரஸ்த நிலையுடையவனாயிருந்து உயர்ந்ததவம் செய்தான். நற்காலம்வாய்த்தவுடன் தத்துவபாவத்தோடு கூடியவனாகி விமானத்தில் ஏறிச்சிவலோகம் சென்றான். இங்ஙனம் மாகமகிமை உண்மையாகக் கூறப்பட்டது. நீ புண்ணிய புட்கரணியில்நீராடு. எவர்அதன்கண் நீராடவில்லையோ அவரதுபிறவி வீணாம். மாகஸ்ஞானம் செய்பவனுக்குப் புண்ணியம் வளருகின்றது. சூரியனைக்கண்ட பனிபோல் பாவம் நீங்கும். மாகஸ்ஞானம் செய்யாதவரும் ஏகாதசி உபவாசமில்லாதவரும் புண்ணிய புட்கரணி ஸ்ஞானம் செய்யாதவரும் எதற்காக இவ்வுலகில் இருக்கின்றனர்?'

பிருகத்ஸேனர்:—'அறிஞனே! மாகநீராட்டத்திற்குரிய புண்ணிய தீர்த்தங்களும் மேற்கு முகமாகவும், கிழக்கு முகமாகவும் செல்லுகின்ற ஆறுகளும் புண்ணியமான பொய்கைகளும் யாவை? அவற்றைக் கூறியருள்க.'

ஜாபாலி:—'பிரயாகை, நைமிசம், காசி, கேதாரம், புட்கரம், கண்டகி, சந்திரபாகை, சரயூநதி, கோதாவரி, பீமரதி, பாபமகற்றும் பாலாறு, நோய்க்கடியும் நருமதை, சுவாலைமாலை, சோணை, சிந்து, கிரிணிநதி, சுவாலைமுகி, தாரை, அசைந்தோடும் கங்கை, அழகிய மாகேஸ்வரி, பாபங்கடியும் கரளை, வீரை, மோகம் நிறைந்த விசாலை, விமலை, நிர்மலை, துங்கபத்திரை, கிருஷ்ணை, வேணிகை, பிரஹரை, ஹரை ஆகிய இவ்வாறுகளும் பிரபாசம், ஹேமகூடம், பாஞ்சஜன்யப்பொய்கை, குருக்ஷேத்திரம். பாபமில்லாமற்றும் ஞானகுண்

டம், பிசாசமோசன தீர்த்தம், பாதாளகங்கை, கிருஷ்ணையும் கடலும் கூடுமிடம், மகரீதலம், கௌரீ, காமப்பொய்கை, விரூபாக்ஷம், வேகானந்தப்பொய்கை, குப்தபாரதி, பாபங்கடியும் அமிர்தை, காற்றினால் பெருகும் காவேரி, நாவலம் பொய்கை, சந்திரபுட்கரணி, பலாச தீர்த்தம், வசிட்ட தீர்த்தம், ஹேமபுஷ்கரணி, வராகதீர்த்தம், மத்யார்ஜுனத்தில் காருண்யாமிர்த தீர்த்தம், ஸ்வேதாரண்யத்தில் காயத்ரீ, சாவித்ரி, ஸரஸ்வதி, மாயூரத்தில் குற்றமற்றகாவேரி, பேரளத்தில் அக்னி புட்கரணி, வன்மீகத்தில் தேவதீர்த்தம், கிருஷ்ணையில் நித்திய புட்கரணி, பிராகிருஹத்தில் (கீழகரம) மதுதீர்த்தம், அக்ஷலங்தியில் (அச்சுதமங்கலம்) விசாலகம், முக்தியளிக்கும் திருவாஞ்சியத்தில் புண்ணிய புட்கரணி ஆகிய இவை சிறந்தனவாகும். இப்புண்ணியபுட்கரணியில் அரிமுதலியோரும் தமது வேண்டும்பொருள்பெற்றனர். மக்கள் தலைவா! இத்தகைய தீர்த்தங்களில் மகர ஞாயிறு நீராட்டம்செய்பவர் பாபமற்றவராகித் துறக்கம் அடைவர். இத்தீர்த்தங்களுக்குள் புண்ணிய புட்கரணி தானே பகலும் இரவும் மகிழ்வுடன் நன்கு பாபத்தினின்றும் தூய்மைப்படுத்துவேனென்று உறுமுகின்றது. ஆகையால் நீயும் இப்புண்ணிய புட்கரணி தீர்த்தத்தில் பாபம் நீங்கவும் பிறவிப்பந்தமழியவும் வெற்றியின் பொருட்டும் மாக நீராட்டத்தை விதிப்படி தினந்தோறும் செய். இது ரகஸ்யமானதும் தூயதும் ஆகும். இச்சிறந்த பொருளின் சாரத்தை உனக்குக் கூறினேன். புவியில் மக்கள் மாக நீராட்டத்தால் துறக்கமெய்தி தேவர்களாகின்றனர். யாம் எப்பொழுது பாரதபூமியை அடைந்து பெரும் பாபம் நீங்கவும் குறைவற்ற புண்ணியம்பெறவும் தேவ உலகினின்றும் நீங்காதிருக்கவும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவோமென்று தேவர் கதறுகின்றனர்.

ஜாபாலி:—'அரசனே! மாகநீராட்டத்தின் விதியின்பயனை ஏதோ பேச்சுக்கிடையில் கூறினேன். இது இதிஹாஸத்துடன் கூடியது. முன்பு நிகழ்ந்தது. இம் மாகநீராட்டமகிமையை எவன் தூயவனாகி முயற்சியுடன் படிக்கின்றானோ அவன் பாபங்கள் எல்லாவற்றினின்றும் விடுபடுவதுடன் தேவமங்கையராலும் வழிபடப்படுகின்றான். நீராடலாற்றலற்றவன் தேவகோட்டத்திலாயினும் மடத்திலாயினும் படித்தாலும் படிப்பித்தாலும் அந்நீராட்டப்பயன் அடைகின்றான்.'

[ஸ்காந்தபுராணம் சனத்குமார ஸம்ஹிதை மேற்பகுதியில திருவாஞ்சிய மகிமையில் மாகமகிமைகூறல் என்ற 57ம் அத்யாயம் முற்றிற்று.]

## ஒன்பதாவது அத்யாயம்.

பிருகத்ஸேனர் :—' மாகமகாத்மியம் கேட்டேன். என்னிடத்தில் அருள் இருப்பின் மகிஷாசுரனைக்கொன்றதும் பெரும்போரில் அரசர்க்கு வெற்றியளிப்பதும் உண்மை யானதுமான துர்க்கை மகிமையை இப்பொழுது எனது பகைவர் அழியக் கிருபையோடு சொல்லவேண்டுகிறேன் என்ற கேள்விக்கு ஜாபாலி கூறியதை இப்பொழுது நான் சொல்லுகிறேன்; கேளுங்கள்.'

ஜாபாலி :—'அரசப்புலியே! பகைவர்க்குப் பயங்கரனே! ஜயமளிக்கும் மகிடாசுரமர்த்தனியின் மகிமை கூறுகிறேன்; கேட்பாய். லவணாசுரன் என்ற அரசனுக்கு முதற்பிள்ளை யொருவன் பெரிய எருமைக்கடா வடிவமுள்ளவனும் நன்மக்களை வருத்துபவனுமாக இருந்தான். மூவுலகிலும் உள்ள அழகிய பெண்கள் அவனால் கவரப்பட்டும் கற்பழிக்கப்பட்டவருமாகி சிறையிலடைக்கப்பட்டு மிகவருந்தியவராயும் நீர் மலிந்த கண்ணினராயும் கலமான ஒலியையுடையவராயும், தாய் தந்தை மக்கள் உடன்பிறந்தவர் எல்லோரையும் விட்டு நீண்டவருத்த முடையவராகி அடிமைத்தொழில் பூண்டும் நின்றனர். தேவரும் யாகங்கட்கு இடையூறு உண்டாதலின் ஹவ்ய கவ்யங்கள் இல்லாதவராயும மகிழ்ச்சியற்றவராயும் செய்யப்பட்டார்கள். மகிடாசுரன் என்ற பேர் கேட்டமாத்திரத்திலேயே நடுங்கினர். அவன் அறியாது தேவர்கள் மறைந்தவர்களாகிக் காடுகளிலும் மலைப்பாங்குள்ள புதர்களிலும மற்றும் பலபல இடங்களிலும் பற்றற்றவராகித் தேவேந்திரனில்லாது தலைவனற்றவராகி வருந்தி பிருகஸ்பதியை யடைந்து தம்மைப் பாதுகாக்கவும் இராக்கதனை அழிக்கவும் உபாயந்தேடவேண்டிய சிறந்த புத்தியையுடையவரும் தேவருக்கு நன்மை செய்பவருமான பிரகஸ்பதியைப் பார்த்து, 'ஏ! வியாழனே! கேளும். உம்மை நம்பித்தான் யாம் பிழைத்திருக்கிறோம். இப்போது அரக்கரால் பீடிக்கப்பட்டிருக்கிறோம். மகிடாசுரன் எங்களை வருத்துகிறான். எங்களைப்பாதுகாக்க வேண்டும்' என்று இந்திரன் முதலிய தேவர்களால் வேண்டப்பட்ட வியாழன் உன்னி உபாயம் கூறினார்.'

பிருகஸ்பதி :—' ஏ! தேவரே! கேளுங்கள். உங்களுக்குச் சொல்லுகிறேன். நாம் எல்லோரும் சேர்ந்து துன்பம் நீக்குபவளான துர்க்கையை முயற்சியுடன் விதிப்படி பணிந்து சுற்றிலும் உப்பரிகை

கள் அமைந்ததும் புண்ணியமாயும் அநேக வீதிகள் அமைந்ததும் கடைகளால் அணியப்பட்டதும் நால்வகை வருணத்தவர் அமைந்ததும், விடநர்த்தனர்கள் வேசியர்கள் இவர்களோடு கூடியதுமான திருவாஞ்சியத்தில் திருவாஞ்சியேசுரர்க்கு வடபுறத்தில் மகுடனால் பூஜிக்கப்பட்டவளும் பரமசிவனுக்கு மிக்க அன்பு விளைவிப்பவளுமான எட்டுகைகளோடுகூடிய துர்க்கை இருக்கிறாள். அவள் நமது வேண்டுகோள் நிறைவேற்றுவாள் என்பது உறுதி.'

ஜாபாலி :—' என்றுயாவரும் தனித்தனி துதித்தனர்.'

தேவர் :—' ஏ! தேவி! மகிடாசுரனிடம் பயத்தால் உனது பாதங்களை வந்தடைந்தோம். ஹவ்ய கவ்வியங்களில்லாதவராகிறோம். அஞ்சினவராயும் நடுக்கத்தால் மயிர்க்கூச்செறிந்து உடைந்த உடலுடையவராயுமானோம். மனமுடையவளே! அச்சங்கடிபவளே! அம்பிகே! தாயே! வேதாந்தத்தால் அறியப்படுபவளே! கருமை தங்கியமேனியுடையவளே! அழகியவளே! வளர்ந்தமுன் மயிரையுடையவளே! மிக்க ஒளியையுடையவளே! யோகினியே! நீலகண்டர் மனைவியே! முச்சூலந்தரித்தகையளே! எல்லாச் சிறப்பும் அமைந்த வடிவினளே! பயமகற்றுபவளே! மதியணிபவளே! நெற்றிக் கண்ணி! ஹே! மஹா கௌரீ! மகாலக்குமி! ஏ! சரஸ்வதீ! ஏ! சர்வதேவி! உன்பொருட்டு நமஸ்காரம் செய்கோம். ஒரு பெரு எருமைக்கடாவால் பயந்தவரும் உனது திருவடியே காவலாக அடைந்தவருமாகிய எங்களுக்கு நீயேதான்கதி. ஏ! அம்பிகே! எமக்கு வேறொருவருமின்று. கருணைசெய்வாய்; காப்பாற்றுவாய்; உனக்கு வந்தனம்.'

ஜாபாலி :—' என்று யாவராலும் தனித்தனி துதிக்கப்பட்ட தொண்டர் துயர்களைபவளும் தலைவியுமாகிய துர்க்கை மகிழ்ந்து துதித்த தேவர்களைக் குறித்து போரில் அம்மகிடனைவென்று காலின் கீழ் வைத்துக்கொண்டு உமக்கு நன்மைசெய்கிறேன் என்ற துர்க்கை மொழியைக்கேட்ட தேவர்கள் போரைக் காணவிரும்பி அவனோரிடத்தில் மறைந்திருந்தனர். துர்க்கை சீகிரமாக சோணமலைசென்று குகையிலிருந்த மகிடனைக் கொம்புபற்றி திருவாஞ்சியத்திற்கு இழுத்துவந்து அருகிற்போட்டு அவனது பலத்தைபபார்க்கவேண்டி சிறந்த எட்டாயுதங்களோடும் போருக்கெழுந்தாள். அவள், சூலத்தை எடுத்துக்கொண்டு கொம்பைப்பற்றி இழுத்ததால், குனிந்த வணுகி பெண்ணுருக்கொண்டவளான தலைவியைப் பின் தொடர்ந்து

ஓடினான். அவன் வருவதையும் பயங்கரமான சூலத்தையும் பார்த்து துர்க்கை கதையால், சூலத்தையும் அவன் கையையும் அடித்தாள். அப்பொழுது அடிபட்டதால் சினந்து நெருப்பெழுங் கண்ணுடைய வனுகி கூர்நுழிச் சூலத்தால் பிணைந்து அடித்தான். சூலம் துர்க்கையின் கையில்விழுந்து துண்டு துண்டாகி முத்தலைப் பாம்பு சுவர்க்கத்தினின்றும் விழுவதுபோல் விழுந்தது. அவன் சூலம் பொடிபட்டவுடன் மிகுந்த கோபமும் கொடிய பலமுமுடையவனுகி பெருங்கல்லை எடுத்து எறிந்தான். பெரும் போரில் மலைக்கொத்த அது எதிர்த்து வருவதைக்கண்ட துர்க்கையானவள் முஷ்டியால் அடித்து எள்ளுப்பொடி யாக்கினாள். கற்பாறை பொடியானதைக்கண்டு மீண்டும் தோமரம், பிண்டிபாலம், என்ற இரண்டு ஆயுதங்களையும் துர்க்கை படைத்தாள். அவற்றை வலது கையில்கொண்டு பெரு முழக்கமிட்டுக்கொண்டு மீண்டும் துர்க்கையைக்கொல்ல ஏவினான். அவள் அவற்றை ஒருகையால் பற்றி முஷ்டியால் அடித்தாள். அவனும் மீண்டும் அவற்றை எற்றி அவளை அடித்தான். பதினான்கு மண்டலமும் சுற்றிவந்து இருவரும் ஒருவர்க்கொருவர் வெற்றி விரும்பி, கத்தியாலும் பரிகைதனியாலும் கையாலும் உலக்கையாலும் சூலம், முட்டி, பாசம், தோமரம், குந்தம் இவைகளாலும் இம்மாதிரி அனேகவிதமான ஆச்சர்யகரமாயும் வேறொருவராலும் செய்தற்கரியதுமான போரைத் தேவர்களெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க ஆயிரமாண்டு நிகழ்த்தி இனி இம்மாதிரி அனேகமாண்டு போர்புரிந்தும் பயனென்னவென்றெண்ணி அவனது கொம்பைப்பற்றி இழுத்துக் காலால் உதைத்தாள். அவன் அவ்வடிக்காற்றாது பாதாளம் புகுந்தான். அப்பொழுது தலை இடையில நின்றுகொண்டு அழகாக விளங்கினாள். அச்சமயம் தெய்வச்செயலாக மலர்மாரி பெய்தது. தேவ துந்துபி முழங்கப்பட்டது. தேவருட இது நன்றென்று கூறினர். பின்னர் தேவர்கள் விரைவாக வேள்வி முதலியனசெய்தனர். விமானத்திலேறி மனம் போனபடியெல்லாம் இயங்கினர். மேலும் தேவர் தேவியை வந்தடைந்து தோத்திரம் செய்தனர். தேவர் மகிழ்ச்சியுடன் தம்தம் உறைவிடம் சென்றனர். தேவமங்கையர் மழைக்கால மேகங்கள் விடுபட்ட சரத்கால சந்திரகலைகள்போல் சிறையிலிருந்து விடுபட்டு விளங்கினர்.'

சூதர்:—" துர்க்கை மகிட சரித்திரத்தை ஜாபாலி அரசனுக்குச் சொன்னபடி உங்களுக்குச் சொன்னேன். இதைப் போற்றி யுத்த காலத்தில் இதை அந்தணரைக்கொண்டு படிப்பித்தாலும் படித்தாலும்

பகைவர்வழிபடுவர்; வெற்றியுமுண்டாம். மிகுந்த துன்பம் வந்த இடத்தும், காடு, துர்க்கங்கள், ஆற்றங்கரை, பகைவரிடை விவாதம், நோய் துன்பம் முதலிய உற்றவிடத்து இத்துதியைக்கூறில் வெற்றி உண்டாவது நிச்சயம். எவனொருவன் மகாநவமியில் தேவிதுதியைக் கொண்டு நூறு தர்ப்பணம் செய்தலாவது, செய்வித்தலாவது செய்கிறானோ அன்றியும் ஆறுதிங்கள் புலனடக்கி முக்காலம் நீராடி பிச்சையெடுத்துண்பவனும் ஆகாரமற்றவனாகியுமிருந்து கொண்டு ஜபிக்கிறவன் விரும்பின இச்சையைப்பெறுகிறான். மற்றும் எதைக் கோருகிறானோ அதை அடைகிறான். அரசுவிரும்பின் அரசுபெறுவான். பெண் விரும்பினால் அதனையும் அடைவான். வியாதி நீங்க விரும்பின் நோய் நீங்குவான். கட்டுப்பட்டவன் விடுபடுவான். மக்கள் விரும்பின் மக்களடைவான். எல்லாம் விரும்பியவன் எல்லாம் அடைவான். வெற்றிமுதலிய அளிக்கக்கூடிய மகிடாசுரமர்த்தன கதையைச் சொன்னேன். இதைமறைத்து வைப்பாய். இதை நாஸ்திகருக்குச் சொல்லாதே. இதை ஜபிக்கவருக்கும் ஜபிக்கத்தகுந்த துதி இதுவே.'

[ஸ்காந்த புராணத்தில் ஸனத்குமாரஸம்ஹிதையில் மேற்பகுதியில் திருவாஞ்சிய மகிமையில் துர்க்காமகிமை கூறலென்ற 57-ம் அத்யாயம் முற்றிற்று.]

---

## பத்தாவது அத்யாயம்.

பிருகத்ஸேனர்:—'இத்தலமகிமையைக்கூறினீர். நான் விரிவாகக்கேட்டு மனமகிழ்ந்தேன். புண்ணிய புஷ்கரணியின்கண் வசித்தற்கு உரிய காலமும் அதன்பயனும் திதிவாரயோகங்களையும் கருணையுடன் எனக்குக் கூறுவாய்.'

ஜாபாலி:—'உலகின் உபகாரத்திற்கு நன்றாகக் கேட்டாய். முறைப்படி உனது கேள்விக்கு விடை சொல்லுகின்றேன். ஸௌரம், சாந்திரம், சாவனம் என்று மூன்று வேறுபாடுகள் உண்டு. அதற்கிடையே சாந்திரமான ரீதியாக யோக நிச்சயம் கூறுமவன் சைத்திர மாதத்து சுக்லாஷ்டமி திங்கள்கிழமை வருமாயின் அதில் திருவாதிரையும் நேருமாயின் அதனைக் கௌரி சங்கரமென்று அறிவார்கள். பெரியோர்கள் அதில், காலையில் எழுந்து வெளிமலம் நீக்கி, பல்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

துலக்கி, முழந்தாள்நீரில் நின்றுகொண்டு மூன்று தர்ப்பணங்களும் செய்து மூன்றுதரம் பேசாமல் நீராடவேண்டும். மந்திரம்:— 'இந்த கௌரீ சங்கரயோகத்தில் புண்ணியமான புண்ணிய புட்கரணியில் நீரில் பாபம் நீங்க, ஏ தேவர்தலைவ! நீராடுகிறேன்.' பின்னர் எழுந்து ஆடைகள் உடுத்து தீர்த்தத்திற்கு வடபுறத்தில் மறுநாள் வரையில் இருக்கவேண்டும். நவமியில் காலையில் எழுந்து நீராடித் துதிக்க வேண்டும். திருவாஞ்சியேசரை வணங்கிப் புண்ணிய புட்கரணியை மூன்றுதரம் வலம் வந்து அதன்கரையில் பாரணை செய்ய வேண்டியது. இதற்குக் கௌரீ சங்கரயோகமென்று பெயர். இது பிரம்மஹத்தியையும் நீக்குவது. அதேமாதத்தில் தேய்பிறையில் செவ்வாய்க்கிழமை அசுவனி நக்ஷத்திரம் கூடுமாயின் எமயோகமென்று ஜோதிடர் கூறுகிறார். உங்களுக்கு மிகவும் மறைவாயுட் அரக்கர்களை விலக்குவதும் பூதங்களையடக்குவதும் வறுமைநீக்குவதுமாகிய அதன்கண் நீராட விதியைககூறுகிறேன். அறுகம்புல், அக்ஷதை, கரும் எள், இவைகளை எடுத்துக்கொண்டு புண்ணியபுட்கரணிக் கரைக்குச்சென்று முன் சொன்னவிதிப்படி யமனுக்குநேராக நின்றுகொண்டு தானங்கள் செய்தும் யமஸூக்தம் ஜபித்தும் உஞந்து, சோற்றுபபலியுட் கொடுக்கவேண்டும். இம்மாதிரி செய்யின் தண்டபாணி மகிழ்ந்தவராகி வரம் கொடுப்பார். அவனுக்குக் கூற்றுவனல் ஒரு இடையூறும் எப்பொழுப் நேராது. பிதுர்க்களும் மகிழ்வர். வரமுட் கொடுப்பர். பிதுர்க்கள் மகிழ்ந்தால் செல்வம வளரும். நரகத்திலுள்ளோர் துறக்க மெய்துவார். புத்தேளிர் அயன்பதமடைவார். அயன் கலத்திலுள்ளோர் சிவானந்தத்தையும அங்கு முக்தர்களாகவுட் ஆகின்றார்கள். இனி பெரியோர் சொல்லியபடி வைகாசிமாதத்து ஒரு யோகததையும் அதனதன் விதியையும் நேமத்தையும் சொல்லுகிறேன். வளர் பிறைத் திருதியையில் ரேவதியும் வெள்ளிக்கிழமையுட் சேருமாயின் அதற்கு பார்கஸ்பத்திய யோகமென்று புத்தியுடையோர் கூறுவார். அப்புண்ணியமான யோகத்தில் இமமை மறுமைப் பயனளிக்குட் திருவாஞ்சியத்தில் ஆயிரம் தாமரை கொணர்ந்து மாலைகட்டி சிவபூஜை முக்காலும் மனமொழி மெய்களை அடக்கியவனுகி எவன் செய்கிறனே அவன் சிவசாலோக்யத்தையுட் அடைந்து சிவனேடு மகிழ்கிறன். இதன்கண் மகிடமர்த்தனியான துர்க்கையைச் செல்வத்திற்காக நூற்றெட்டு மலர்களால் நற்புத்தியுடையோன் வழிபாடு செய்வானுயின் மிகவிரைவாகச் சொல்வன்மையுணடாம். ஓராவர்த்தி கேட்பினும் அவன் மனம் விட்டகலாதிருக்குட். ஆனிமாதததில் வளர்

பிறை அட்டமியில் பரணியும் கூடுமாயின் ஜேஷ்டாஷ்டமி என்று பெயர். பிதுர்க்களுக்கெல்லாம் மோக்ஷத்தைக்கொடுப்பது. அந்த புண்ணிய புட்கரணி தீர்த்தத்தில் பிதுர்க்களுக்கெல்லாம் மோக்ஷம் உண்டாகத் தங்கள் பிதுர்க்களின் பெயர், கோத்திரங்களைச் சொல்லிக்கொண்டும் இரண்டாம் வேற்றுமை முடிவாகவும் மூன்று தடவைகள் தர்ப்பணம் செய்துகொண்டு வருகிறேனே அவனது மரபிற் தோன்றியவர்கள் திங்கள், நாண் மீன்கள், விண் மீன்கள் உள்ளளவும் மிகவும் மகிழ்ச்சியை யடைந்தவராவர். ஆடிமாதத்தில்பௌர்ணிமை அமாவாசையில் மிருகசீரிஷ நக்ஷத்திரம் சேர்ந்த நாளில் சந்திரனுக்கு ஆசையுண்டாக ஜலதான விருதம் செய்யவேண்டும்.

பிருகத்சேனர்:—'ஜலதான விருதம் என்பது யாது? அதை முன்பு யார் அனுஷ்டித்தார்? அதன் புண்ணிய பயன் யாது? அதற்குச் செய்யவேண்டியது யாது?'

ஜாபாலி:—'தீக்ஷிதர்களுக்குள் தலைவரும் சிறந்த அந்தணருமான சுதபா என்பவர் கௌதமி ஆற்றங்கரையில் சீரை மான்தோலுடுத்தியும் சடை தரித்தும் மௌனியாயும், தூயவராயும், புலனடக்கியவராயும், பிரம்மக்ஞானம் வேதமோதல் செய்பவராயும் இருந்தார். நற்குணம் யாவுமடைந்த சுயஞ்ஞர் என்ற தமது சீடருக்கு அச்சுதபா என்பவர் பிதுர்க்களின் முக்தியின் பொருட்டு இவ்விரதத்தைக் கூறியருளினார்.'

சுதபா:—'சுயஞ்ஞா! உனது பிதுர்க்களுக்கு முக்தியளிப்பதும் இம்மை மறுமைப் பயனளிப்பதும் புண்ணியமுமான ஜலதான விரதத்தைச் சொல்லுகிறேன் கேள். ஆஷாடமாதத்து பூர்ணிமையில் மிருகசீரிட நக்ஷத்திரம் கூடிய யோகத்தில் சந்திரனை வழிபட்டு தூய அந்தணருக்கு அறுசுவையுணவளித்து மகிழ்விப்பாயாயின் அந்தணனாகிய சந்திரன், இவரை வழிபடுதலால் மகிழ்கிறான். அந்த சோமவரசர்கள் பிராமணர்கள் என்று வேதம் கூறுகின்றது. அறியப்பட்டவரும் அறியப்படாதவரும் ஆகிய தமது பிதுர்க்கள் யாவரும் அதனால் அப்பொழுதே மகிழ்கின்றனர். ஆகையால் முக்தியளிக்கும் புண்ணிய புஷ்கரணிக்கரையில், தனது மரபினரைக் குறித்து நீரைப் பாத்திரங்களிற்கொண்டு அவ்விரதத்தை இப்பொழுதே செய்.' இங்ஙனம் ஆசிரியரால் கட்டளையிடப்பட்ட சீடன் அவ்விரதத்தைச் செய்தான். அந்த பிதுர்க்களும் மகிழ்ந்து துறக்கம் எய்தினர். இப்புண்ணிய யோகங்களில் விரதமிருப்பவ

ளுகிய சிறந்த மனிதன் இந்திரனது லோகத்தை அடைகின்றனன். எந்த அந்தணன் ஒருவன் இதனை பக்தியுடன் கேட்பிக்கிருனே அன்றியும் கேட்கிருனே அவன் வேறு தேயம் சென்றிருந்தவனுயினும் எப்பாபங்களினின்றும் விடுபடுகின்றுன்.'

பிருகத்ஸேனர் :—' நான்கு பக்கங்களில் சுற்று வட்டத்திற்கு எவ்வளவுதூரம் இத்தலத்தின் பரப்பு உண்டு? அதையும் அதன் பெருமையையும் இப்பொழுது எனக்கு உண்மையாகச் சொல்ல வேண்டுகிறேன்.'

ஜாபாலி :—' அரசனே! கேள். இதைச்சொன்னுலும் புண்ணியம் வளரும். கிருதயுகத்தில் திருவாஞ்சியேசர் விமானத்திற்குச் சுற்றுவட்டம் இரண்டு யோஜனை தூரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் வசிக்கும் மக்கட்கு முக்தியளிப்பது நிச்சயம். திரேதாயுகத்தில் அதற்குப்பாதியளவும் துவாபரயுகத்தில் அதிலும் பாதியும் கலியுகத்தில் ஐந்து குரோசம் (ஐந்து நாழி வழி) என்று சொல்லப்படும். புவியிலிருக்கிற அறிவுடையவர்களும் அறிவிலிகளும் சண்டாளர்களுமாகிய மக்கள் பூர்வகர்ம பரிபாகத்தால் இப்பஞ்சக்ரோசத்திற்குள் மரணமடைவாராயின் விரூபமான கண்கள் உடையவராகி வெள்ளி மலையில் உறைகின்றனர்.

சிவாலயத்தில் ஒருகணப்பொழுது எவன் ஒருவன் உறைகிருனே அவன் பாம்பணிந்தவனுகி கணங்களுக்கு அதிபதியாயிருக்கும் தன்மையை அடைகிருன். எவன் நீர் விழாவாவது வஸந்த விழாவாவது செய்கிருனே அவன் சிறந்த விமானமேறிச் சிவ சன்னதியில் வசிக்கிருன். தயிர், பால், நெய், தேன், வாழைப்பழம், தேங்காய் இவை கொண்டு மகாபூஜை எவன் செய்கிருனே, எவன் சிறந்த அணிகலங் கொண்டும், சிறந்த துதி பாடல்கொண்டும் திருவாஞ்சியேசரை வழிபடுகிருனே அவன் சிவனேடும் வசிக்கிருன். பிரகாரம், மண்டபங்கள், கோபுரங்கள் கட்டிவைப்போன் இங்குச் சிறந்த அரசனுகி எல்லாம் துய்த்துச் சிவசாயுஜ்யம் அடைவான். குடை, சாமரம், விசிறியும், அருகு, அகில் கட்டை- இவைகளின் வாசனையோடும் குங்குமம், அக்ஷதை, சிறந்த மலர்கள், கற்பூரம் அநேக விளக்குத்தண்டுகள் கொடிமரங்கள் இவைகளோடும் பாட்டுவாத்தியம் இவைகளது முழக்கங்களோடும் பேரிகை, பணவம், கோமுரசு, மத்தளம் முதலியவைகளோடும், டக்காளம், தேர்க்கருவி, தொணைக்கருவி இவைகளோடும், திருத்தேர் விழாவை யாவன் ஒருவன் செய்கிருனே அன்றியும் செய்விக்கிருனே அவன் சிறந்த மங்கையர்களுடன் கூடியும் பல போகங்

களை யனுபவித்தவனாகியும் தேவமங்கையரும் கந்தர்வரும் பகலும் இரவும் துதிக்க நூறு கற்பகோடி காலம் தனது உடலோடு தேவனுக்கு முன் வசிப்பான். முனிதீர்த்தத்திலிருந்து ஒருபாரம் மண் எவன் ஒருவன் எடுக்கிறானோ அவன் இரு மரபையும் உயர்த்தி, தானும் கணபத்யத்தை அடைகிறான். அங்கு தேவ ஆண்டில் ஆயிரமாண்டு இருந்து மோக்ஷத்தையும் சிவ சாயுஜ்யத்தையும் அடைகின்றனன். சத்திய விரதத்திலும் அபயப் பிரதத்திலும் இருந்தால் எவ்வளவு புண்ணியமோ அவ்வளவு புண்ணியத்தையும் இங்கு ஒரு கணமிருப்பினும் அடைகிறான். இதன் கண் ஐயமின்று. தீர்த்தத்திற்கிடையில் நுகரும் பாசியையோ அழுக்கையோ சிறிதும் மிகுதியின்றி நீக்குகின்றானோ. அன்றி நீக்க நிற்கின்றானோ அவன் தனது கோடி குலத்துடனும் சிவலோகத்தை நிச்சயமாக அடைகின்றான். ஓராண்டுக்கு மட்டும் செய்யும் ஒருவன் அதில் பாதிப்பயனையடைகிறான். சிவபெருமானுக்கு முன்பு தீர்த்தத்திற்கு எவன் படிக்கட்டுகள் அமைக்கின்றானோ அவன் விடையின் மேல் ஏறிக்கொண்டு சிவலோகத்தில் ஐயமின்றி வசிப்பான். ஆடையையாவது மலரையாவது மந்திரத்துடன் அல்லது மந்திரமின்றித் திருவாஞ்சேசருக்கு இடுகின்றானோ அவன் கோடி குலத்தை உயர்த்துகின்றான். கழுவாயற்ற பாபங்களுக்கும் பாபிகளுக்கும் திருவாஞ்சியேசரை தரிசித்தாலும் முனி தீர்த்தத்தில் நீராடுவதாலும் முக்தியுண்டாகிறது. இத்தகைய முக்தி வேறொரு இடத்தில் கோடிகோடியிலும் பெறமுடியாது. தர்மத்திலிருந்து விலகியவர்களுக்கும் சாதியிலிருந்து விலகியவர்களுக்கும் திருவாஞ்சியத்தில் வசிப்பதால் பிரம்மஹத்தியிலிருந்து விலகிவிடுகிறார்கள். வேறு தேசத்திலுள்ள மக்கள் திருவாஞ்சியத்திலுள்ள மக்களைப் பார்த்து கைதொழுகின்றனர். ஏனெனில், அவர் சிவ துல்யராதலால் அவரைத் தரிசித்தாலும் பிரம்மஹத்தி போய்விடும். அச்சிவபிரானது வெள்ளிய கோபுரத்தை யாவன் சுண்ணாம்பினாலும் வெல்லச் சாரத்தாலும் கட்டுகிறானோ அன்றிக் கட்டுவிக்கிறானோ அவனது பெயரைச் சொல்லினும் பாபம் நீங்கும். தெய்வப் பொருளைக் கவர்ந்த துரோகிகளும் ஆங்கு ஒருவருடம் இருந்தால் அப்பாவமகலும். பாவத்தால் மயங்கி ரௌரவாதி நரகங்களில் விழுந்தவர்களும் இருபதுயுகம் அவர்கள் இருந்து ராக்கதப்பிறவி எடுத்தும் கடைசியில் திருவாஞ்சியத்தில் வசித்தமகிமையாலும் தெய்வச்செயலால் புண்ணியபுட்கரணியில் நீராடுவதாலும் பாபத்தினின்று விடுபடுகின்றனர். அரசனே! இத்தலத்துச் சிறந்த

இருடிகளும் பாவம் நீங்கவும் முக்தியடையவும் விரும்பி வசிக்கத் தக்க வரெணின் அதிகமாகச் சொல்வதில் பயன் யாது. அறிந்தோ, அறியாமலோசெய்த பாவங்களும் வேண்டுமென்றுசெய்த பாவங்களும் இத்தல மகிமையைக் கேட்டமாத்திரத்தாலேயே அழிந்துவிடுகின்றது. எவனுடைய வீட்டில் இப்புராணம் ஒரு கணமாவது எழுதப்படுகிறதோ அவனுடைய வீட்டில் இலக்குமி செல்வம், நோயின்மை இவற்றை மேன்மேலும் வளர்க்கிறாள். எவ்வந்தணன் திருவாஞ்சியத்திற்குப் போகவேண்டுமென்று தினந்தோறும் ஒரு கணமாவது அரைக்கணமாவது நினைக்கின்றானோ அவன் அசுவமேத யாகம்செய்த பலத்தைப்பெறுவான். திருவாஞ்சியத்திலெவன் அரைக் கணமாவது வசிக்கிறானோ அவன் இந்திரன் அருகில் ஊர்வசியின் சேர்க்கையைப் பெறுவான். தன்னை வளர்த்துக்கொண்டு எவன் திருவாஞ்சியத்தில் வசிக்கிறானோ அவன் சிறந்த விமானத்தில் ஏறி அயன் பதத்தில் சஞ்சரிக்கிறான். வேதமறிந்தவரால் சிந்தித்தறியத் தக்கதாயும் பாவமெல்லாம் அகற்றுவதாயும் நல்லோரால் பாடப்படுவதாயுமிருக்கும் இந்தச்சிறந்த இதிஹாஸத்தை எல்லையற்ற இன்பத்திற்காக எவன் பக்தியோடு கேட்கின்றானோ அவன் மூவகை மக்கள் இன்பங்களையும் துய்த்து முக்தியுமடைகிறான்.'

[ஸ்காந்த புராணம் சனத்குமாரஸம்ஹிதையில் மேற்பகுதியில் திருவாஞ்சியத்தல மகிமையில் ஸ்தலப்பெருமை கூறல் என்ற 58-ம் அத்தியாயம் முற்றிற்று.]

ஸ்காந்தபுராணம் முற்றிற்று.

# பிரம்மாண்ட புராணம்.

## பதினோராவது அத்தியாயம்.

பகவானாகிய விஷ்ணு நாரதரைப்பார்த்துக் கூறினர்: குழந்தாய்! சிறந்த அறிஞனே! சிறந்தவரான குருமுதலியோர் எந்த மந்திரத்தை ஜபித்து ஒப்பற்ற சிறந்தவாக்கும் செல்வமும் கல்வியும் அடைந்தாரோ, சரஸ்வதி, இலக்குமி, பார்வதிகளும் எந்த மந்திரத்தை ஜபித்துத் தத்தமக்குப் பிரியமான நான்முகன் முதலியோரைக் கணவர்களாகப் பெற்றனரோ அத்தகைய சிறந்த மந்திரம் சொல்லுகிறேன்; கேள். காவேரியின் தென்கரையில் இரு யோஜனை தூரத்தில் விஷ்ணுவால் ஏற்படுத்தப்பட்ட திருவாஞ்சியமென்ற சிறந்த தலமிருக்கிறது. அதில் இலக்குமி இம்மந்திரத்தை ஜபித்து வேண்டுகோளைப் பெற்றனள். வேதமறிந்தவர் திருவால் விழையப்பட்டதால் திருவிழைவு என்று அறிகின்றார். இருடிகளால் ஏற்படுத்தப்பட்டதால் முனிதீர்த்தம் என்று அத்தீர்த்தத்திற்குக் காரணப் பெயர் வந்தது. குழந்தாய்! அங்கு கங்கைக்கு ஒத்ததான தீர்த்தம் இருக்கிறது. அதன்கண் நீராடுபவன் எப்பாவங்களினின்றும் நீங்குகிறான். இப்பொழுது விஸவனாதன் ஆறுதலங்களில் பிராம்மணர் க்ஷத்திரியர் முதலியோர்களது வீடுகளுடன் எழுந்தருளி இருக்கின்றார். திருவாஞ்சியம், வேதாரண்யம், கௌரீமாயூரம், அர்ஜுனம், சாயாவனம், பஞ்சநதம் என்ற இவ்வாறும் காசிக்கு ஒத்ததென்று கூறுவதில் ஐயமில்லை. இவற்றுள் திருவாஞ்சியம் தவசித்தியின் பொருட்டுச் சிறந்ததென்பது நிச்சயம். ஒன்று கோடி மடங்காகும் என்று வேதங்களில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. மந்திரத்தியானத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்; சாவதானமாகக் கேள். இம்மந்திரத்திற்குச் சமானமானது இக்கலியுகத்தில் வேறொன்றுமில்லை. "க்ரீங் கார பீஜ மித்யுக்தம் ஸ்வாஹாசக்திரத: பரம்." வினியோகம் வேண்டும் பொருள் ஆகிய இவற்றை ஜபிக்குமுன் சொல்லிக்கொள்ள வேண்டியது. மந்திரம்:—

'ஓம் நமோ பகவதே ச, சிவாய ச தத: பரம்.
வாஞ்ச்ய நாதாய ச ததோ மேதாம் ப்ரக்ஞாம் ததைவச
பரியம் மேத்ய ப்ரயச்சேதி.'

பகவானும் வாஞ்சியத் தலைவனுமுள்ள சிவபிரானுக்கு வந்தனம். எனக்கு அறிவும் மேன்மையிற்றோன்றுமறிவும் விரும்பும் பொருளும்

ஆகிய இவற்றை இப்பொழுதுகொடுக்கவேண்டும். இதற்கு இருடி பரமாத்மா காயத்திரி, சந்தஸ், தேவதை வாஞ்சிநாதர், தியானம் முச்சுடர்க்கண்ணனும் பார்வதிக்குத் தலைவனும் வெள்ளியங்கிரிக்குத் தலைவனும். அயன் அரியால் வணங்கப்படுபவனும் செல்வம் தருபவனும் எல்லா வேதங்களாலும் அறியப்படாதவரும் முனிவர் மனத் தியானத்தால் அறியத்தகுந்தவரும் பாம்பு மாலையை அணிந்தவரும் பிறை சூடியவருமான திருவாஞ்சியேசரை யான் அடைகிறேன். நான்குலக்ஷம் ஜபிக்கவேண்டியது. அதில் பத்தில் ஒன்று தர்ப்பணம் செய்யவேண்டும். அங்ஙனமே ஓமாதிகளும் செய்யவேண்டும். மேலும் இஷ்டங்களைப்பற்றிச் சொல்லுகிறேன்; நாரதரே! கேள். திருவாஞ்சியேசரது அருளால் காமியமானவைகளுக்கெல்லாம் சித்தியளிப்பது இம்மந்திரம். முப்பது லக்ஷம ஜபித்தால் நிர்வாணத்தை அடைகின்றான். கோடி ஜபித்தால் சிவதத்துவத்தை நிச்சயமாக அடைகிறான். துறக்கம் விரும்புபவன் பத்துலக்ஷம் ஜபிக்கவேண்டும். எட்டுலக்ஷம் ஜபித்தால் சிவபிரானுக்கு மிகுந்த பிரீதியுள்ளவனுவான். கல்வி விரும்பியவன் நான்குலக்ஷம் ஜபித்தால் கல்வியடைகிறான். இதில் ஐயமின்று. மூன்றாவது, இரண்டாவது, ஒன்றாவது லக்ஷம் ஜபித்தால் மனிதன் காதால் கேட்கப்படாத வேதசாஸ்திரங்களையும் சொல்லுவதில் ஐயமின்று. ஒருலக்கம் ஜபித்ததினாலேயே கவிகள் தலைவனாகின்றான். ஐம்பதினாயிரம் ஜபித்தால் கவியாகிறான். இருபதாயிரம் ஜபித்தால் கேட்டபொருள் தரித்திருக்கும். பதினாயிரம் ஜபித்தால் வாக்கு சித்திக்கும். மந்திரத்தை நன்கு அறிந்தவனாகி எவன் மூன்றுலக்கம் ஜபிக்கின்றானோ அவன் செல்வம் விரும்பின் அரசலக்குமி அவன் வீட்டில் தொண்டு புரிந்துகொண்டு நீண்ட காலம் இருப்பாள். இருலக்கம் ஜபித்தால் ராஜ்யலக்குமியை அடைகின்றனன். ஒருலக்கம் ஜபிக்கின்றவன் தன தானியங்கள் நிறைந்தவனாகிறான். இருபது ஆயிரம் ஜபித்தால் பூமியை அடைகிறான். பதினாயிரந்தரம் ஜபித்தால் லக்குமி இவனைப் பார்க்கிறாள். மக்கள் விரும்பியவன் புலனடக்கியவனாகி ஒரு லக்கம் ஜபிக்கவேண்டும். அங்ஙனம் செய்தால் நல்ல லக்ஷணமெல்லாம் அமைந்தவனும் கலை எல்லாமறிந்தவனும் அணிமா முதலிய எல்லா வைபவத்துடன் கூடியவனும் அளத்தற்கரிய சோதிவடிவனும் எல்லாமறிந்தவனும் அறிஞனும் சிறந்தவனுமாகிய மைந்தனை அடைவான். அழகுடைய கந்தர்வ மங்கைக்கொப்பான பெண் பெறுவான். உடல் வன்மை வேண்டுபவன் பதினாயிரம் அல்லது இருபதாயிரம் ஆவர்த்தி மந்திரம் ஜபிக்க வேண்டும். அத்தேயத்தில் வேண்டிய மழையை இந்திரன்

அளிக்கிறான். ஒருலக்கம் ஜபித்தால் அரச வசியம் உண்டாகிறது. அறுவித கர்மமும் பெற இம்மந்திரத்தை இருபதாயிரம்தரம் ஜபிக்க வேண்டும். மந்திரம் உச்சரிப்பவன் எவ்வப்பொருளை விரும்பு கிறானோ அப்பொருளையெல்லாம் ஐயமின்றி அடைகிறான். புலனை டக்கி பலாசசமித்துக்கொண்டு ஓமம் எவன் செய்கிறானோ அவன் ஞாயிறு மண்டலத்தை பிளந்துகொண்டு சிறந்த கைவல்யத்தை அடைகின்றனன். கல்வி விரும்புபவன் நாடோறும் நாயுருவி சமித் துக்களாலாவது ஆவின் நெய்யாலாவது ஆட்டின் நெய்யாலாவது வேள்விசெய்யவேண்டும். தேஜஸ் விரும்புபவர் தேஜஸ்ஸினாலாவது ஓமம் செய்யவேண்டும். செல்வம் விரும்பினவன் தூய்மையனாகித் தாமரை வில்வ சமித்தினாலாவது செய்யவேண்டும். நெய்யோடுகூடிய தன்னலமுதாலாவது கருப்பஞ்சாற்றாலாவது மிகுதியாக வேட்க வேண்டும். மக்கள் விரும்புபவன் புத்திர ஜீவந்திகை சமித்துக் களால் ஆவின் நெய்யுடன் வேள்வி புரியவேண்டும். மற்று அரசங் குச்சிகளால் வேட்டலியற்றவேண்டும். காரிகையை விரும்புகிறவன் பொரியாலும் பால் விரும்புகிறவன் பாலாலும் வேள்வி செய்ய வேண்டும். க்ஷேத்திரங்கள் விரும்புபவன் கிருகசாந்தியின் பொருட்டு எருக்கஞ்சுள்ளி கொண்டு செய்யவேண்டும். தேனால் ஓமம் செய்யின் அரச வசியமுண்டாம். மல்லிகை, தாமரை, எருக்கு, அரசு, மருத சமித்து, அரளி இவைகளை நெய்புடன் வேள்வி யியற்றவேண்டும். எல்லாக் கருமங்கட்கும் அவிஸ் உண்டு. எல்லா பிரயோகங்கட்கும் நெய் அவிஸ் என்ற இரண்டும் உண்டு. அன்றியும் அறிஞன் கன்னலமுதலாவது வேள்வி செய்யவேண்டும். குழந்தாய்! யந்திரத்தின் மகிமை சொல்லுகிறேன்; கேள். பத்திதழ் தாமரை எழுதி அதில் மந்திரத்தின் எழுத்துக்களைப் பதிந்து எழுதி பக்கத்தில் தோன்றியதோடு கூடியவைகளாகிப் பிறகு வட்டம் எழுதி அதில் பத்து சூலங்கள் எழுதி கல்வியளிப்பதும் சிறந்த மகிமையுடையதும சரஸ்வதியால் செய்யப்பட்டதுமான இந்த யந்திரத்தில் முன்பு வட்டம் எழுதி பத்து எட்டுக் கமலங்கள் எழுதித் தலங்களில் மந்திர எழுத்துக்களை ஸ்ரீ பீஜத்தோடு எழுதி நடு வட்டத்தில் ஸ்ரீ பீஜத்தை எழுதி வட்டமான தாமரையில் மாதிரு கைகளும் அதற்குமேல் நாற்கோணமும் எழுதவேண்டியது. இந்த யந்திரத்தை நினைப்பதால் லக்குமி பிரசன்னமாகிறாள். நிச்சயம். இது விஷ்ணுவாகிய என்னால் செய்யப்பட்டது. இதை மற்று யாருக்கும் வெளிப்படுத்தக்கூடாது. நான்கு தளம் எழுதி அதற்குமேல் ஆறு கோணம் எழுதி அனங்க பீஜத்தோடு

கூடியதாக மந்திர எழுத்துக்களைக் கோணங்களில் அமைக்க வேண்டும். பின்னர் தளங்களில் வரையவேண்டும். சாத்திய கோணத்தின் முடிவில் சந்திர மண்டலம் எழுத வேண்டியது. உயிர்களைப் பின்பு எழுதி மறுபடியும் சந்திர மண்டலம் வரைய வேண்டும். இந்த யந்திரத்தை விஷ்ணு தானே அமைத்தது. இஃது சந்தானத்தை அளிக்கும். மிகவும் மறைவானதும் கனை கூடாக பயனளிப்பதுமாக இருக்கிறது. அறுகோணம் முன்பு வரைந்து அதன்மேல் திங்கள் மண்டலம் அந்த கோணங்களில் மந்திர அக்ஷரங்களை உருத்திர பீஜத்தோடு கூடியதாக வரையவேண்டும். சாததியனுடைய எழுத்துக்களை இடையில் எழுதவேணடும். இதழ் களில் பீஜங்களை யெழுதவேண்டும். மந்திரத்துடன் கூடிய பல்ல வங்களை பிந்துவின் மண்டலத்தால் வட்டமாக வரையவேண்டும். இந்த யந்திரத்தினது நான்கு திக்குகளிலும் சூலம் அமைக்க வேண்டும். வீடுபோலிருக்க வேண்டும். இயக்கர், அரக்கர், வேதாளம், பிசாசு, பிரம்மராக்ஷஸம், மற்றும் இழிந்த தேவதைகள் முதலிய நவக்கிரஹங்களின் நோயை யெல்லாம அழிக்கும். இச் சிறந்த யந்திரம் நேராகப் பயனளிபபது. இது சிவபிரானல் முன் ஞெரு காலத்தில் சொல்லபபட்டது. வட்டமாக முன்பு யெழுதி பதினெட்டு தளம் அதற்குமேல் துர்க்க பீஜத்தோடு கூடியதாக மந்திரத்தை எழுதவேண்டும. அதற்கு வெளியில் மாதிருகை எழுதவேண்டும். துர்க்கை பீஜத்தோடு கூடியதும் பிந்துவோடு கூடியதுமாக எழுதவேண்டும். அதற்குப பின்னர் பூகோளம் எழுத வும். திக்குகளில் சூலங்கள் எழுதவேண்டும். சாத்திய எழுத்துக் களை பீஜத்துடனும் பிந்துவுடனும் இடையில் எழுதவேணடும். எல்லாச் சூனியங்கட்கும் இது சாதாரணமாகச சொல்லப்பட்டிருக் கிறது. அந்தந்த ஆவசிய பிரசித்தியின் பொருட்டு அந்தந்த பீஜத் தோடு கூடியதாக எழுதவேண்டும். இந்த யந்திரமமைத்து மந்தி ரத்தை இம்மாதிரி செய்யவேணடும. மந்திர முதலியவைகளை அர்த்தநாரீசுரரது பீஜத்துடன் முன்போல் எழுதவேண்டும். அந் தந்த ஆகிர்ஷணத்திற்கு அந்தந்த மந்திரத்துடன் எழுதவேணடும. அப்பொழுதுதான் இது இயந்திரம் என்றும புகழ்படும். இந்த ஆகர்ஷணம் சிறந்ததாயிருக்கும். இந்த யந்திரத்தில் எம பீஜத் துடன் முன்போல் எழுதினல் விரைவாக ஸ்தம்பனம உண்டாகிறது. இம்மந்திரம் ரகஸ்யமானது. வஸ்யம், ஆகர்ஷணம், ஸ்தம்பனம் இவைகட்கு யந்திரம் சாதாரணமாகும். இந்த உயர்ந்த ரகஸ்யம் பரமசிவனல் முன்பு சொல்லப்பட்டது. முக்கோண முன்பும் பின்

னர் அறுகோணமும் எழுதி அக்கோணங்களில் காலருத்ர பீஜங்களுடைய மந்திரத்தின் எழுத்துக்களை எழுதவேண்டும். அதற்கு மேல் மாதிருகை எழுத்துக்களையும் அதற்குப் பின்னர் வட்டமும் எழுதவேண்டும். பின்னர் பத்துச்சூலங்கள் அமைத்து அதனிடையில் சாத்திய பீஜத்தை பிந்துவோடுகூட எழுதவேண்டும். இது பகைசெய்வதிற் சிறந்தது. ரகஸ்யமானது. மறைத்து வைக்கத்தகுந்தது. இது பரமசிவனால் முன் சொல்லப்பட்டது. இந்தச் சிறந்த மந்திரத்தை மீண்டும் உச்சாடனத்திற்கு எழுதி அக்னி பீஜத்துடன் தளிரோடு கூடிய சாத்தியத்தை எழுதினால் இது பகைவரை அழிக்கும். இது பெரியோரால் மறைத்து வைக்கத்தக்கது. துவேஷம், உச்சாடனம் இவற்றுக்குப் பொது. இது மிகுந்த மறைவாய் உள்ளது. இதுபார்வதி பாகனாற் சொல்லப்பட்டது. எட்டு தளம் பத்மம் எழுதி அதில் மந்திர எழுத்துக்களை எழுதி அந்தந்த காரியத்திற்கு எது அதிதேவதையோ அதன் பீஜத்தோடு கூடியதாக எழுதவேண்டும். அதன் முடிவில் வட்டம் எழுதி அதன் முடிவில் பிரதிபலித்ததோடு கூடிய வட்டம் மீண்டும் வரைந்து எண் சூலத்தை அதற்குப் பின்னர் எழுதவேண்டும். இது எல்லாம் பிரயோகத்திற்குச் சிறந்த மந்திரம். உனக்கு இம்மந்திரத்தைச் சொன்னேன். புத்தியுடையவன் அறு கருமத்திற்கும் மந்திரத்தின் பீஜத்தை எழுதக்கூடாது. (வசியம், ஆகர்ஷம், ஸ்தம்பனம், துவேஷம், உச்சாடனம், நாசம்.) சுபகருமங்கள் எல்லாவற்றிற்கும் இந்த மந்திரத்தை எழுதவேண்டும். இதில் ஐயமின்று. வாஞ்சியநாதரது மகிமை என்னால் சொல்லி முடியாது' என்று விஷ்ணு சிறந்த நாரதருக்குச் சொன்னார்.

[பிரம்மாண்ட புராணத்தில் மந்த்ர ரகஸ்ய[illegible] பிரம்ம நாரதர் சமவாதத்தில் திருவாஞ்சிய நாதரது ம[illegible]மென்னு[illegible] 25-ம் அத்தியாயம் முற்றிற்று.]

---

## பனிரண்டாவது அத்யாயம்.

---

இருடிகள் :—'இலக்குமி, சரஸ்வதி, உமை, மூவரையும் வணங்கி, மலய மலக்கொடுமுடியில் வசிஷ்டர் முதலிய முனிவர் அகஸ்தியரைப்பார்த்து இங்ஙனம் கூறினர். 'ஏ பகவானே! எவ்வுண்மையுமறிபவனே! முக்கால நிகழ்ச்சியையும் அறியும் ஆற்றலுடைய

வனே! பதினெட்டு புராணமறிந்தவனே! சிறந்த பாக்கியசாலியே! இருடிகட்கெல்லாம் தலைவனே! அறம் பொருளின்பம் பயப்பதும், வீடாகிய கைவல்யமளிப்பதும் ஆகிய ஒருதலம் பூமியில் எதுவாகும்; அதைச்சொல்வீர்.' அகஸ்தியர் அம்முனிவரது கேள்வியைக்கேட்டு மனமகிழ்ந்து அம்பிகையுடன் கூடிய சிவ பெருமான் கணபதி குரு கந்தன் கைலாயகிரியாகியவற்றை வணங்கி வசிஷ்டரெல்லையான எல்லா இருடிகளேயும் பார்த்துக்கூறினர்.

அகஸ்தியர்:—' நீங்கள் யாவரும் சிவதலங்களின் புகழைக் கேளுங்கள். நீங்கள் புவியில் சிவதியானத்தால் குற்றமற்ற பாக்கிய முடையவராயினீர். ஆதலால் உங்கட்கு நன்மையுண்டாகும். சம்பு என்ற பெயர் அவருக்கு வாய்ந்திருப்பதால் பாவிக்குக்கூட அவரை நினைப்பின் க்ஷேமமுண்டாகும். சம்புவைப் பூஜிப்பதால் மக்களுக்கு நன்மை உண்டாகும் என்று அந்தணர்கள் சொல்லுகிறார்கள். ஆக லால் தான் சம்பு என்று சொல்லபபடுகிறது. சம்புபூஜை செய் பவருக்கு உலகில் கிடைக்கக்கூடாததொன்றில்லை. ஏ! முனி சிரேஷ்டர்களே! இவ்வுலகில் அறுபத்தாறுகோடி தீர்த்தமும ஆறு கோடி நூறு சிவதலங்களும் இருக்கின்றன. அத்தீர்த்தங்களில் எல்லாவற்றிலும் சிறந்தது கங்கை. சிவபெருமானது எல்லாத்தலங் களிலும் சிறந்தது காசியுமாகும. அக்காசியைவிடச் சிறந்த தலமும் புவியில் இருக்கிறது. அதுயாதெனில் காவேரியின் தென்கரையில் இருயோஜனை தூரத்தில் புகழ்வாய்ந்ததும இம்மை மறுமைப் பயன ளிப்பதும் கலிப்பாவம் கழுவதும் சதாசிவனது மனதிற்குப் பிரிய மானதும் திருவாஞ்சியம் என்பது. திருவாஞ்சியத்தில் பிரம்மகோடி களும் விஷ்ணு கூட்டங்களும் இருடிகளின் அநேக கூட்டங்களும மகேஸ்வரனைப் பூஜித்து திருவாஞ்சேசரது அருளால் தமது வேண்டும் பொருள் பெற்றனர். இவ்வுலகில் எவன் திருவாஞ் சேசருக்குத் தீபம் போடுகிறானோ அவனுக்கு ஆயுள், பலம், தேஜஸ், மகட்பேறு, தனம, தமிழ், கல்வி, உடல்வளர்ச்சி சூர்யன்போன்ற மேனியழகு இவையுண்டாகிக் கடைசியில் திருவாஞ்சியேசரது அரு ளால் சிவ சாயுஜ்யமும் உணடாகின்றது. திருவாஞ்சியேசநாதருக்கு எவன் தூபமளிக்கிறானோ அவன் கடன்கடலிலிருந்து விடுபட்டவ னாகி அழிவின்மையையும், பிள்ளை தாரம் இவரது நன்மையால் உண்டாகிய சுகமும் கந்தருவருடன் ஒத்துப்பழகும் மனதையும அனுபவித்துச் சுவர்க்கத்தையும் அடைவான். பசுவின் குளம்படி மாத்திரம் பூமியை சுரோத்திரியனான அந்தணனுக்காகவும் யோகியா யும் சிவபக்தனும் அறியனும் இருக்கிற அந்தணனுக்கு எவன்

கொடுக்கிறுனே அவன் நான்கு கடல் எல்லையான பூமியைப்பெற்றுத் தமது மக்களுடனும் மனைவியுடனும் தனதான்யங்களுடனும் நால் வகைச்சேனைகளுடனும் அநேக போகங்களை அனுபவித்து மக்களிடத்தில் பூபாரத்தை வைத்துவிட்டுப் பிறகு சிவபுரம் செல்வான். ஒருவன் திருவாஞ்சியத்தில் பிர்ம்மப் பிரதிஷ்டை செய்து இந்திரனது மனையில் அரசச் செல்வங்களை அனுபவித்து பிரம்ம கல்பம் வரையில் இருந்து திருவாஞ்சியத்தல மகிமையால் கடைசியில் சிவசாயுஜ்யத்தை அடைகிறுன். திருவாஞ்சியத்தலத்தில் புண்ணிய புட்கரணி சிறந்தது. அதில் நீராடுவதால் மக்கட்குப் புண்ணியம் தருவது. எப்போதும பாக்கியத்தையும் அளிப்பது. ஒருகாலத்தில் புண்ணியப் பொய்கையில் நீராடுவதாலேயே மக்களது பாவங்களெல்லாம் கங்கையின் தரிசனத்தாலேயே பாவங்கள் நீங்குவதுபோலும் சூரியனைக் கண்டு இருள் ஒழிவதுபோலும் பாவங்களெல்லாம் ஓடுகின்றன. அங்ஙனமே திருவாஞ்சியேசற்கு வடக்கே பொய்கைக் கரையில் ஓமம் செய்யப்பட்டதும் ஜபிக்கப் பட்டதும் செய்யப்பட்ட புண்ணியமும் காசியைக் காட்டிலும் கோடிப்பங்கு அதிகமாகின்றது. திருவாஞ்சியேசரது மகிமையை நூறு வருஷங்களாயினும் ஆதிசேஷனும் பிரம்மாவாலும் இந்திரன் முதலிய தேவராலும் சொல்ல முடியாது. அங்ஙனமிருப்பினும் திருவாஞ்சியத்தில் அவரை வழிபடுவோர்க்குண்டாகும் நன்மையைச் சொல்லுகிறேன். வேண்டுவதையடையும் பிரம்மாதிகட்கு அவருடைய இஷ்டம்போல் சித்தியுண்டாகின்றது. அறம், பொருள், இன்பம் பெறும் பொருட்டு கவனமாகக் கேளுங்கள். உமைக்கு அன்பரும் அருளுக்கு இருப்பிடமான திருவாஞ்சியேசரை அயன் வணங்கி வழிபட்டு அஷ்டமா சித்தியைப் பெற்று மகாதேவரை பூஜித்துத் தமதிருபபிடம் சென்ருர். கௌதமர், ஜமதக்னி, காச்யபர், அத்ரி, விஸ்வாமித்திரர், பரத்வாஜர், வசிஷ்டர், பராசரர், வால்மீகி, மகுடவர்த்தன அரசன், வீரதனுஸ் என்ற சோழதேசத்தரசன் ஆகியோரும் பரப்பிரம்மமாயும் உலகத்தலைவனும் விஷ்ணு வடிவமாயும் இருக்கிற கிருஷ்ணனும் விஷ்ணுவுக்கு அன்புடையவளான இலக்குமியும், இந்திரனும் சிறந்த இருடியான விருகூஷியும் அவர் மனைவி சாருமதியும் திருவாஞ்சியேசரை வழிபட்டு தத்தம் வேண்டுகோள் பெற்றனர். இம்மாதிரி அநேக அரசர்களும் இருடிகளும் மகேஸ்வரரை இத்தலத்தில் வழிபட்டு கற்பகத்திற்குச் சமானமான திருவாஞ்சியத்தில் தத்தம் வேண்டுகோள் பெற்றனர். இத்தலத்திற்கு பிரளய காலத்திலும் பயமில்லை. அழியாது. ஒப்பற்றத் திருவாஞ்சியத்தலத்தை பூகைலாசமென்றும் மகாகாசியைக்

காட்டிலும் சிறந்த தலமென்றும் இந்த முனிவர் கூறுவர். திரு. வாஞ்சியேசற்குச் சுற்றுவட்டம் இரண்டு யோஜனை தூரமும் காசியைக் காட்டிலும் அதிக பயன் அளிக்குமென்றும் சம்புவான திருவாஞ்சியேசரது கோபுரம் தெரியும்வரை உள்ள தலம் கைலாயத்திற்கொத்ததென்றும் எல்லாத்தலங்களிலும் சிறந்ததென்றும் முனிவர் கூறுவர். ஐந்து நாழிகை வழிக்குட்பட்ட தீர்த்தங்கள் மிகவும் குறைவாயிருப்பினும் கங்கைக்கொத்ததாகும். கற்கள் சிவலிங்கங்கள் மரங்கள் கற்பகமரங்கள் மக்கள் கணநாதர்கள் மங்கையர் தேவமங்கைகள் கொசு முதலியவைகளும் திருவாஞ்சியத்தை அடைந்தவைகளுமாகிச் சிவாமசமாகின்றன. தங்கம் திருடுபவன், கட்குடியன், சூத்திரஸ்திரியை கைக்கொண்டவன், குருவுக்குத் துரோகம் செய்தவன், நண்பர்களுக்கு தீமைவிளைவித்தவன், மற்றும் பாதகிகள் புண்ணிய புட்கரணியில் நீராடித் திருவாஞ்சியேசரைத் தரிசிப்பதால் பாபங்களினின்று விடுபடுகிறார்கள். ஒரு தினம் ஆங்கு வசித்தாலும் கைலாயம் அடைகிறான். பாபம் நீங்குகிறது. முனிவர்காள்! எவன் ஒரு கணமாவது அரைககணமாவது திருவாஞ்சியேசரை நினைக்கிறானோ அவன் சிவபதம் அடைகிறான். அங்ஙனமாகின் மற்றைய செலவங்களைப்பற்றிக் கேட்பானேன். திருவாஞ்சியேசரது மகிமையைப் பரமசிவன் கைலாயகிரியின் சிகரத்தில் பார்வதிக்கு கூறியபடி, ஏ! முனிவர்களே! இப்பொழுது உங்களுக்குச் சொல்லுகிறேன். கவனமாகக் கேளுங்கள். கைலாசத்திற்கும் புவியில் செல்வத்திற்கும் ஆதிகாரணம் கூறுகிறேன். நன்கு கேளுங்கள்.'

[பிரம்மாண்ட புராணம் திருவாஞ்சியத்தல மகிமையில் அகஸ்தியருக்கும் மற்றுமுள்ள இருடிகளுக்கும் தோன்றிய சம்வாதத்தில் முதல் அத்தியாயம் முற்றிற்று.]

---

## பதிமூன்றாவது அத்தியாயம்.

---

அகஸ்தியர் :—' திருவாஞ்சியத்தில் திருவாஞ்சிய நாயகியானவள் பாக்கியவாக் பிரதாப கல்யாணி, கௌரீ என்றும் புகழடைந்து இருக்கிறாள். திருவாஞ்சியேசரது காதலம்பிகையின் இம்மூன்று பெயரும் அறம்பொருளின்பம் அளிக்குமென்று முனிவர் கூறுவர். ஈசன் மனங்கவரும் அழகு வாய்ந்தவளான திருவாஞ்சிய நாயகியை எவர் மூன்று சந்தியிலும் நினைக்கின்றாரோ அவர் அறம் பொருள் இன்

பம் பெறுவார். லிங்கத்தில் வழிபடுகின்ற பிரம்மசாரிகளுக்கும் யோகிகளுக்கும் அறம்பொருளின்பம் கிடைக்கும். முன்பு கற்பக மரங்கள் நிறைந்த கைலாய சிகரத்தில் கங்கை பெருக்கு முதற்கொண்டு காமதேனுவின் பாலால் குழம்பிய இடபத்தின் காலடி வெப்புடையதும் தங்கத்தாமரையின் ஒளியுடையதும் ஆம்பல் முதலிய மலர் நிறைந்ததும் படிக்கட்டுகள் அமைந்ததுமான குளங்களால் விளங்கியதும் உருக்கிய தங்கமயமாயும் சுபமாயும் இருக்கிற பல கொடிமுடிகளோடு கூடியதும் முக்குணமமைந்த சித்தர், கந்தருவர், கின்னரர், தேவமங்கையர் இவர்களால் சூழப்பட்டதும், குளிர்ந்ததும் ஆகிய இவற்றால் சூழப்பட்டதுமான மேரு தலத்தில் சந்திரசாலைக்கிடையில் உமையுடன் சதாசிவர் ஊர்வசியால் செய்யப்பட்ட உமை மண நடனத்தை அரம்பை முதலியோரோடும் கந்தன் நந்தி தேவர் முதலியோரோடும் பார்த்து வந்தார். அப்பொழுது பார்வதியானவள் ஒரு தங்கமயமான விமானத்தைப் பார்த்தாள். நீறு பூசியவரும் அரவக் குழையரும் திரிபுண்டரமணிந்த முகமுடையவரும் கணநாதரும் சிவ வடிவரும் ஆகிய பிறைசூடியைக் கண்டாள். அத் தங்கவிமானத்தில் விளங்கும் மங்களமான வடிவையுடைய கணநாதரைப்பார்த்து, ஆச்சரியப்பட்டுக் கைகுவித்தவளாகித் தன தன்பாகிய சதாசிவரை வணங்கிக் கேட்டாள். 'தொண்டாள்பவனும் அருட்கடலுமான எனதன்பார்ந்த கணவருமாகிய சம்புவே! உன்னைச்சரண் புகுந்தேன். பூமியிடத்தில் இக்கங்கைப் பொய்கைக் கரையில் சுமேருவின் தங்கமயமான விமானத்தில் உன் வடிவமான கணநாதர் இருக்கிறார். அவர் யார்? அவர் எந்த புண்ணியத் தலத்திலிருந்து வந்தார்? என்னிடத்தில் அருள் இருக்குமாயின் கூறியருள்க.' என்று சுமேருவின் சிகரத்தில் பார்வதியால் வேண்டப்பட்ட பரமசிவன் தமது காதலியாகிய பார்வதியைப்பார்த்து கங்காபுஷ்கரணிக்கரையில் சொன்னார்.

'பார்வதி! திருத்தல மகிமையைக்கேள். அம்மேருவைச் சுற்றி ஒன்பது வருடங்கள் முறையாக விருக்கின்றன. அதைச்சொல்லுகிறேன். மிகுந்த கவனத்துடன் கேள். மேருவின் பக்கத்தில் இளாவர்த்தமும் ஒப்புயர்வற்ற ஹரி வருஷமும, திவ்ய வருஷமும், கிம்புருஷ வருஷமும், பாபங்கடியும் பத்ராசுவமும், கேதுமாலமும், ரமண ஹமும் புண்யமானஹைமவதமும், பாரத வருஷமும் ஆக ஒன்பது வருஷங்கள் முறையாகச் சொல்லப்படுகின்றன. மேருவின் தென்பக்கத்தில் நாவலந்தீவு இருக்கின்றது. அந்த நாவலந்தீவானது லக்ஷயோஜனைதூரம் பரப்பு உடையது. அத்தூய நாவலந்தீவின்கண்

விளங்கும் தேவர், விலங்கு, மக்கள் மூன்றும் இரட்டையாக நிறைந் திருக்கின்றன. சுமேருவின் தென்புவியான பாரத வருஷத்தில் காசியில் முத்தியளிப்பதான கங்கைபெருகி வருகின்றது. சரயூ, யமுனை, நர்மதை, சரஸ்வதி, கிருஷ்ணை, வேணி, துங்கபத்திரை, கௌதமி, காவேரி, ஆகிய இவை கங்கையின் தோழிகள். இவைகளும் முத்தியளிப்பனவே. கங்கைக்கரையில் மூன்றுநாள் வசிப்பவருக்குத் தூய்மை உண்டென்று சொல்லப்படுகின்றது. யமுனு நதிக்கரையில் ஐந்துநாளும் காவேரிக்கரையில் ஒரு கணமும் உறைபவருக்குச்சாவு வரையிலுள்ள பாபங்களெல்லாம் அழிந்துவிடுகின்றன. காவேரிக் கரை இரண்டிலும் கலிதோஷத்தை நீக்கக்கூடிய தலங்கள் ஆராயிரம் இருக்கின்றன. அவைகளெல்லாம் என் தலங்களாகும். அக்காவிரி யிலுள்ள ஆராயிரம் தலங்களுள்ளும் காசிக்கு ஒத்தது ஆறுதலங்கள். அந்த ஆறுதலங்களுக்குள்ளும காசிக்கு மேற்பட்டதொன்று இருக் கின்றது. காவேரியின் தென்கரையில் இரண்டுயோஜனை தூரத்தில் கலிதோஷம் போக்கக்கூடியதான திருவாஞ்சியமென்று புகழ்பெற்ற தலமிருக்கிறது. காசிக்கு மேற்பட்ட தாமரைக்காடு நிறைந்த அத் தலத்தில் புண்ணியத் தாமரை யென்றொரு பொய்கை இருக்கின்றது. அது கங்கா புஷ்கரணியென்றும் புண்ணிய புட்கரணியென்றும் மூவுலகிலும் புகழ்வாய்ந்தது. அப்புண்ணிய புட்கரணிக்கரையில் மிகவும் தூயதும் ஜோதிவடிவானதும் ஒப்புயர்வற்றதுமான எனது லிங்கம் இருக்கின்றது. அயன் திருவாஞ்சிேசனை எனது லிங் கத்தை வழிபட்டு மூவுலகும் படைக்கும் திறம்பெற்று பூராதிபுலகங் களைப் படைத்தான். கோடிக்கணக்கான அனேகர் இப்பொய்கை யின் கண்ணிருந்து வழிபட்டுச் செல்வத்தால் நிறைந்தவராயினர். புண்ணிய புட்கரணிக்கரையில் திருவாஞ்சிய மென்றொரு தலம் புகழ் பெற்றிருக்கிறது. அயனும் மற்றுமுள்ள அனேக முனிவரும் விஷ்ணுவும் தேவர்களும திருவாஞ்சியத்தில் தீமரைக் காட்டில் திருவாஞ்சிேசராகிய எனது லிங்கத்தை வழிபட்டு எல்லாச் செல்வங்களும் பெற்றனர். ஆதலால்தான் அதற்குத் திருவாஞ்சியம் என்ற புகழ்வந்தது. திருவாஞ்சியத்தில் லிங்கத்தில் பிரத்யக்ஷ மாய்த்தோன்றியதின் காரணம் இதுதான். புண்ணிய புட்கரணி யின் காரணமும் அயன் பூஜித்ததென்பதால் ஏற்பட்டது. ஏ! பார்வதி! காசியைக் காட்டிலும் அதிக மகிமைக்குக் காரணம் சொல்லுகின்றேன். படைத்தல் அனேகவிதம். அதன்கண் ரௌத் திர சிருஷ்டி என்னைப்பற்றியது. விஷ்ணுசம்பந்தமான படைத்தல், அயன் சம்பந்தமான படைத்தல் ஆகிய விரண்டும் என்னிடமிருந்து

தோன்றியன. அயன் படைத்ததற்குக் காரணம் தாமரைக்காடு இலக்காயிருக்கின்றது. திருவாஞ்சியத்திலிருந்து கணநாதன் மீண்டும் மேருவுக்கு வந்ததன் காரணம் என்வாயால் கூறுகின்றேன்; கேள்.'

'[பிரம்மாண்ட புராணம் திருவாஞ்சியப் பெருமையில் 2-வது அத்தியாயம் முற்றிற்று.]

---

## பதினொவது அத்யாயம்.

---

ஏ! பார்வதி!—'ராதாந்திரக் கல்பத்தின் முடிவில் புட்கலாவர்த்தம் முதலியவைகள் பெருந் நீர்தாரையாக யானையின் துதிக்கையளவு பூமியில் பெய்தன. கடல் நீரால் எல்லாவுலகும் சூழப்பட்டது. நல்லிடையாய்! அயனால் படைக்கப்பட்ட எல்லாவுலகும் குறைவற்ற செல்வமும் வஷட்காரங்களும் வேத முதலிய மங்களம் செய்பவளாயும் மகேஸ்வரியாயும் மாயையாயும் இருக்கிற வாஞ்சேசரது நாயகியின்கண் புகுந்தன. ஸ்வேதாரணியம் முதலிய எனது தலங்களில் பைரவரது கட்டளையால் கடலினின்றும் பயமில்லை. திருவாஞ்சியத்தில் வசிக்கும் மக்களுக்குத் துன்பமே இல்லை. திருவாஞ்சியத்தில் வசிப்பவருக்கு எமனது வேதனையுமில்லை. அத்தலத்தில் காலக்கிரமத்தால் இறந்தவருக்குக் காதில் ஐந்தெழுத்தாகிய சிறந்த மந்திரத்தை மெய்யாகக் கொடுக்கிறேன். காவேரியின் நீர் குடித்தும்கூட பொய்பேசுபவரது பாவச்சுமையை தாங்கவாற்றளாய் பூமாதேவி மேருவுக்குவந்து ஈசானனாகிய என்னைத்துதித்தாள். பூமியின் துதியால் மகிழ்ந்த யான், 'பார்வதியே! பூமியின் பிரீதியின் பொருட்டு மக்களுக்குச் செல்வம் முக்தி இவ்விரண்டுமளிக்க உலகின் நன் பாவம் நீக்கக்கூடிய ஆயிரம் அளவுள்ள தங்கவொளியுடையதுமான புண்ணியத தாமரைகள் நிரைந்ததும் ஆகிய மேருமலையின் சிகரத்தை மேருவிலிருந்து பிளந்து காவேரியின் தென்பகுதியில் இரு யோஜனை அளவில் ஹரிநதியின் தெற்கில் மூன்றரை நாழி வழியில் சிறந்ததிற் சிறந்ததான பிரகதீஸருக்கு மேற்கே முன்பு ஆசிரமமாக இருந்த பூமியின் பகுதியுமான எனது திருவாஞ்சியத்தில் இந்த தாமரைக்காடானது தாபிக்கப்பட்டது. இக்கொடிமுடி கலசத்துடன் கூடிய அறம் பொருள் இன்பம் வீடு அளிப்பது என்று புகழ்பெற்றது. ஸ்வயம்புலிங்க வடிவமுடன் அனேக சக்தியுடையவனாகி வழிபடுவோருக்குச் சித்தியளிப்பவனாகி இந்த லிங்கத்தில் வசிக்

கிறேன். எல்லையற்ற அழகு வாய்ந்தவளே! கல்யாண ஒளிமயமான மேருவினது கைலாய சிகரத்தினின்றும் கைலாயத்திற்கு ஒத்த இடபத்தின்மேல் என்னுடன் ஏறிக்கொண்டு குமாரர்களுடனும் தேவமங்கையர்கள் கூட்டங்களுடன் புறப்பட்டுக் கங்கைப் பொய்கையின் முக்கியமான சிறந்த கோடிதீர்த்தங்கள் சூழ்ந்த தீர்த்தங்கட்கிடையில் விளையாடவும் வழிபடும் மக்கட்குச் செல்வமளிக்கவும் உலகினைக் காக்கவும் பூமியின் ப்ரீதிக்காகவும் எவள் வந்து சேர்ந்தனளோ அத்தகைய எல்லையற்ற ஆற்றலுடையவளும் உலகின் விளையாட்டை மேற்கொண்டவளும் சச்சிதானந்த வடிவமுடையவளுமான அவள் புண்ணிய புட்கரணிக்கும் திருவாஞ்சியேசராகிய எனக்கும் வட ஈசான்யப் பகுதியின்கண் கல்யாணி என்று புகழ்பெற்றவளாயினள். அவளுக்கு பாக்கியவாக் பிரதாபகல்யாணி (வாழவந்த நாயகி) என்று மூவுலகிலும் புகழ்வாய்ந்தது. திருவாஞ்சியேசரது மனைவியான பாக்கியவாக் பிரதாபகல்யாணியையும் எனது லிங்கத்தையும் கைலாசபதியான என்னையும் எவ்வந்தணர் தரிசிக்க வேண்டி வந்து காவேரி மணல்மேட்டில் தாமரைக்காட்டிடத்தில் தரிசிக்கின்றாரோ அவர் மீண்டும் மீண்டும் அரசர்களாகின்றனர். எதனால் இத்தலம் கைலாயத்திலிருந்து வந்ததோ அதனால் பூகைலாயம் என்று இத்தலம் புகழ்பெற்றது என்றும் தொண்டருக்கு செல்வமளிப்பதென்றும் உலகில் புகழ்பெற்றது.

[பிரம்மாண்டபுராணம் திருவாஞ்சிய மகிமை
3-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## பதினைந்தாவது அத்யாயம்.

---

ஈசுவரன்:—' முனிவர்காள்! காசிக்கு மேற்பட்ட வாஞ்சியத் தலத்தின் பெருமையும் புண்ணிய புட்கரணியின் பெருமையும் கேட்பாய். கூறுகிறேன். இதனைக்கேட்பதினாலேயே மக்களுக்குக் காணுபத்தியம வரும். காசியின்கண் கங்கையில் மாகமாதத்திலும் புஷ்ய மாதத்திலும் நீராடும் பயன் இதன்கண் நீராடுதலால் விசேஷமாகக் கிடைக்கின்றது. மாக அமாவாசை முதல் பிரையாகையில் கங்கையில் நீராடும் பயனும் கங்கையில் அமாவாசைமுதல் பிரதமைவரையில் நீராடிப் பிதுர்க்களைக் குறித்துத் திருப்திக்காகக் கயா சிரார்த்தம செய்யும் பயனும் இங்கு நீராடுவதால் மிகுதியாகக்கிடைக்கிறது. திரு

வேணியிலும் மணிகர்ணிகை ஜலத்திலும் புஷ்கரம் முதலிய தீர்த்தங்களிலும் மற்றும் சிறந்த நதிகளிலும் அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் எங்ஙனம் வந்து சேருகின்றனவோ அதுபோல் இப்புண்ணிய புட்கரணியில் எல்லாம் தமது பாவம் நீங்க மாகத்திரயத்திலும் வந்து சேர்கின்றன. புண்ணியபுட்கரணிக் கரையில் திருவாஞ்சியத்தில் மகரத்தில் சூரியனிருக்கும் தைமாதத்தில் ஒரு நாள் நீராடுபவனுக்குக் கீழ்க்கூறிய பயன் கூறப்பட்டிருக்கின்றது. காசியில் வடக்கு முகமாக ஓடும் கங்கையில் அகமருடண சூக்தங்கள் ஜபித்துக்கொண்டு ஐந்துகோடி வருடம் நீராடிய பலன் இதனால் கிடைக்கின்றது. திருவாஞ்சியத்தில் மாக மாதத்தில் சூரியன் சிறிது உதிக்கையில் புண்ணிய புட்கரணியில் நீராடுதல் பாபிகளுக்குத் தக்க கழுவாய் ஆகும். மாகமாதத்தில் தேய்பிறை அட்டமியில் புண்ணிய புட்கரணியின்கண் அந்தணர் எள்ளினுலும் அரிசியினுலும் தர்ப்பணம் செய்தனர். அவை அப்புண்ணிய புட்கரணிக் கரையில் வந்திருந்தன. அவற்றை உண்பதற்காகத் தவளையொன்று கரைக்கு வந்தது. பார்வதி! இங்ஙனம் தவளை வந்துண்டதைக்கண்ட பாம்பொன்று தான் வசிக்கும் புண்ணிய புட்கரணியின் கீழ்க்கரையிலுள்ள சந்தன மரத்தினின்றும் வெளிப்பட்டுத்தாவி, அத்தவளையை இலக்குவைத்துப் பிடித்தது. பாம்பு கைப்பற்றிய தவளை அப்பொழுது திருவாஞ்சியத்தில் புண்ணிய புட்கரணிக்கரையில் மரித்தது. உடனே யான் உன்னுடன் சென்று அத்தவளையின் வலது காதில் ஒப்புயர்வற்ற ஐந்தெழுத்தை உபதேசித்தேன். வாழவந்த நாயகியே! யான் அங்ஙனம் செய்ததால் அத்தவளை தனது உடலைவிட்டு கணேஸ்வரனுகி எனது வடிவத்துடன் தன்னைப்பற்ற வந்த பாம்பைக் கழுத்தில் மாலைபோல் அணிந்துகொண்டும் விபூதி ருத்திராக்கம் அணிந்துகொண்டும் பொன்மயமான விமானத்தில் ஏறிக்கொண்டு மேருமலையின் கங்கைப் பொய்கையின் கரையில் இக்கைலாயமாகிய எனது திருவாஞ்சியத்தில் மகேஸ்வரி, நீயும் நானும் பார்த்திருக்கையில் இருவர் முன்பு வந்து சேர்ந்தது. ஆகையால்தான் திருவாஞ்சியம் என்ற தலம் பூ கைலாயம் என்று சொல்லப்படுகின்றது. பார்வதீ! காசியில் மரித்தவருக்கு ஒரு கணமாயினும் பைரவ வாதனை உண்டு. இத்திருவாஞ்சியத்தில் மரித்தவருக்கு அவ்வாதனையுமின்று, வீற்றிருக்கும் பைரவர் அருளால் அவர் கைலாயம் அடைகின்றனர். ஆகையால் இது காசியினும் மேற்சிறந்தது. ஸ்வர்ணம் திருடியவன், கட்குடியன், அந்தணர் கொலைஞன், சூத்திர மங்கையைப் பெண்டாண்டவன், குரு

மனைவியைக் கைக்கொண்டவன், செய்நன்றி கொன்றவன், மகாபாபம் செய்தவன், கெட்ட பொருளேற்றவன், தானம்வாங்கிப் பொருள் சுமப்பவன், ஆகிய இவர் எனது தரிசனத்தாலும் திருவாஞ்சியத்திலிருந்து இருயோஜனை தூரத்திற்குள் வசித்தாலும் அன்னதானத்தாலும் பிராயச்சித்தம் செய்துகொள்வதாலும் புண்ணிய புட்கரணியில் நீராடுதலாலும் தூய்மை அடைவர். பார்வதி! திருவாஞ்சியத்திற்கு நான்கு பக்கங்களிலுமுள்ள அரசனோ வைசியனோ சூத்திரனோ எவனாயினும் பாபியாயிருப்பின் அவன் எனக்கு வழிபாடுசெய்து தூய்மையடைகின்றான். ஆண்மகவு வேண்டுவோன் திருவாஞ்சியத்தில் விதை நெல் தானம் செய்வதால் பெறுவான். மேரு ஒத்த செல்வம் பெறவாயினும் எனது மனமகிழ்ச்சிக்காயினும் திருவாஞ்சியத்தில் வறியனுக்கு அன்னமிட்டுப் பொருளும் கொடுக்கவேண்டும். காத்தியாயினீஸ்வரி! திருவாஞ்சியத்தில் கங்கைப் பொய்கையில் நீராடுவதால் புண்ணியங்கள் தோன்றுவது திணணம். திருவாஞ்சியத்திலிருக்கும் புண்ணிய புட்கரணி உலகில் புகழ்பெற்றது. சித்திரைமாதத்தில் வளர்பிறை, அஷ்டமி சோமவாரம் ஆருத்திரை நக்ஷத்திரத்துடன் கூடிய தினத்தில் அந்தணர் கொலைபாவம் நீங்க நீராடவேண்டும். புண்ணிய புட்கரணிக்கரையில் ஒருநாள் வசித்து, அதில் நீராடி லிங்கதரிசனம் செய்தல் முக்தியளிப்பதாகும். திருவாஞ்சியேசரான எனது தலத்தில் வசித்தல் ஒருகணமாயிருப்பினும் நிச்சயமாக முக்தி உண்டாகும். மகேஸ்வரி! புண்ணிய புட்கரணியில் நீராடியதால் அத்தவளைக்கு நேர்ந்த காணுபதயத்தையும் சதாசிவ முகத்திலிருந்து கேட்டு மயிர்சிலிர்த்தவளாகிப் பரமசிவனைப் பார்த்து ஒருவரம்வேண்டினள். 'தொண்டரன்பரான சதாசிவனே! உமக்குவந்தனம். உம்மைச்சரணம் புகுகின்றேன். மகேஸ்வரனே! வரமளிக்க வேண்டும். கைலாயத்திலிருந்து மக்களுடனும் உம்முடனும் புறப்பட்டுத் திருவாஞ்சியம்சென்று காசியிற் சிறந்ததலத்தில் புண்ணிய புட்கரணியில் அததீர்த்தத்தில் ஒப்புயர்வற்ற உமது லிங்கதரிசனம் செய்யவும் எனக்கு விருப்பமிருக்கின்றது. அங்ஙனமே நீர் அவசியம் செய்யவேண்டும். ஆண்டு வசிக்க ஆவலாயிருக்கிறது' என்று பார்வதி வேண்டினள். இங்ஙனம்வேண்டப்பட்ட பரமசிவன் இடபத்தில்மேலேறி பார்வதியைமடிமேல் ஏற்றிவைத்துக்கொண்டு கணங்களுடனும் கைலாயத்திலிருந்து புறப்பட்டு சூரியன் உதயகிரியில் கிளம்புவது போல் திருவாஞ்சியம் செல்லவெண்ணி ஆகாயத்தில் கிளம்பினர். அங்ஙனம் பரமசிவன்கிளம்பித் தெற்குமுகமாக நின்றுகொண்டு காசிக்

கும் கைலாயத்திற் கொத்ததவையுமான தலங்களிருக்கின்றன. அவற்றுள் உயர்ந்த தலத்தை இங்கு கூறுகின்றேன். அதனைக்கேட்பாய்.

[பிரம்மாண்ட புராணத்தில் திருவாஞ்சியத்தல மகிமையில்
4-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## பதினொருவது அத்யாயம்.

---

சதாசிவர்:—'ஏ! பார்வதி இங்கு மாகிஷ்மதீக்கரையில் காசி கைலாயத்திற்கொத்ததும எனக்குப் பிரியமானதுமான மகா காளத்தைப்பார். காளிந்தீ புஷ்கரணிக் கரையில் முக்தியளிப்பதும் காசிக்கொத்ததுமான மதுரை இருக்கின்றது. அம்மதுரையில் யான் வசிக்கிறேன். இங்கு கோதாவரிக்கரையில் கைலாயம காசிக்கொத ததுமானதும் மங்களகரமான திராக்ஷச்சோலை இருக்கின்றது. அதிலும் யான் வசிக்கிறேன். பார்த்ததினாலேயே முக்தியளிப்பதான ஸ்ரீசைலம் இருக்கின்றது. இங்கு நந்திபழங்களை எல்லாம் புசிக்கின்றார். அது பிரத்யக்ஷமாகவே காணப்படுகிறது. இங்கு கோடிக் கணக்கான கணேசுரர்களோடும் பிரமராம்பையுடனுங்கூடி வசிக்கின்றேன். அதற்குமேல் ஸ்வர்ணமுகிக் கரையில் பார். கலிப்பாவம் கடியும் காளஹஸ்தி லிங்கம் இங்கிருக்கின்றது. அங்கு நான் மக்கட்கு ஞானமளிப்பவனாகி உனது ஞானபுஷ்பாம்பிகையோடு கூடிமகிழ்ந்து யானையின் கைவடிவமான எனது லிங்கத்தில் யான் வசிககிறேன். அங்கு மங்களகரமான பாலாற்றங்கரையில் மிக்க சோபையுடையதும் காசி கைலாயங்களைவிட சோபையுடையதும் ஆகிய எனது காஞ்சி நகரம் இருக்கிறது. அது பிராணனுக்கு ஒத்ததலமாகும். ஏ! பார்வதீ! அதன்கண் உலகுக்கெல்லாம் தாயும் உனக்கும் மும்மூர்த்திகளுக்கும் காரணமானவரும் கருணை வடிவமானவருமான காமாக்ஷி தேன்மாமரததடியில் உலகு பாதுகாக்கவேண்டி கம்பைக் கரையில் தவம் செய்பவளாகித் தொண்டரிடததன்புடன் வசித்து வருகிறாள். காமாக்ஷியின் கொங்கையடையாளமமைந்த அழகிய எனது ஏகாம்பர லிங்கம் விளங்குகிறது. அழகிய வடிவமான காமாக்ஷிதேவியையும் ஏகாம்பரேசனான என்னையும் எவர் இங்கு தியானம் செய்து வழிபடுகிறார்களோ, அவர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களும் அணிமா முதலிய செல்வங்களும் முக்கால கலையோடுகூடிய ஆன்ம ஞானமுமுண்டாகின்றன' என்று ரசாலமரத்தின் கீழிருக்கும் காமாக்ஷியைத் தெரிவித்தும் வலமாக ஆகாயத்தில் இடபாரூடராகித் தென்முகமாகச் சிவபிரான்நின்று மீண்டும் பார்வதியைப் பார்த்துக்கூறுவார்.

'ஏ! பார்வதீ! பாலாற்றுக்குத் தெற்கே கைலாயத்திற்கு ஒத்த எனது விரிஞ்சி நகரத்தைப்பார். நினைத்ததினாலே முக்தியளிப்பதான எனது துரோண மலையைப்பார். அங்கு மிக விளக்கமான இருடிகளால் வணங்கப்பட்ட எனது லிங்கம் இருக்கின்றது. பார்வதி! அந்த இருடிகள் வணங்கும் லிங்கத்தில் பாலபிஷேகம் செய்யும் காலத்தில் உனது வடிவம் தெரிகின்றது பார். அதற்குமேல் எனது மணிமுத்தாநதிக்கரையில் திருமுதுக்குன்றத்தைப் பார். ஏ! காதலி! இந்த எனது தலத்தில் எவர் இறக்கின்றாரோ அவ்வவர்க்கு வலது காதில் விருத்தாசல சிகரத்தில் முக்தியின்பொருட்டு உன்னாலும் என்னாலும் உயர்ந்த பஞ்சாக்ஷரம் உபதேசம் பண்ணப்படுகிறது. தலைமையான காவேரியின் புண்ணியமான வடகரையில் சிதம்பரத்தில் எனது ஞானசபையானது விளங்குகின்றது. இச்சிற்றம்பலத்தை நான்கடிவைத்தாயினும் சென்று எவராவது தரிசிக்கின்றாரோ அவர் முக்தராவர். என் வடிவமான சதாசிவரது சச்சிதானந்தத் தாண்டவத்தையும் சிதம்பரசபை அம்பிகையான தேவியையும் சிதானந்தத்தையும் எவர் தரிசிக்கின்றாரோ அவர்கட்கு அவர்களது கடாக்ஷத்தால் ஒருக்ஷண காலத்தில் மூவகையான ஆனந்தம் உண்டாகின்றன. இதற்கு அடையாளம் மயிர்க்கூச்செறிதலாகும். சிவகாமேஸ்வரியையும் ஸ்ரீமூலரையும் எனது சச்சிதானந்தத் தாண்டவத்தையும் முன்பு கோடி அயன்கள் பார்த்தனர். விஷ்ணு கூட்டங்களும் அயன் மனதிற் தோன்றிய இருடிகளும் கோடிக்கணக்கான தேவரும் பூசித்தனர். பார்வதீ! அந்த அயன் முதலிய தேவருக்கும் சனகர் முதலிய முனிவருக்கும் சச்சிதானந்தம் அளிக்கக் கூடிய நான்குலக்ஷம் சபையை இடமாக உடைய நர்த்தனம் செய்யப்பட்டது. சிதம்பராதி தேவர்களின் மத்தியஸ்தானத்தை உடைய சித்ஸபேசரின் அடையாளமாக சிவகங்கை காணப்படுகிறது. இக்கங்கையில் அமாவாசையில் எவர் நீராடுகின்றாரோ அவர் சிவ வடிவம் பெற்று எனது சபை அடைகின்றார்கள். அதற்குமேல் காசி கைலாயத்தை ஒத்த பிரம்மபுரி (சீர்காழி) காவேரியின் வடகரையில் விளங்குகின்றது. காவேரியின் தெற்கில் திருவெண்காடும் உயர்ந்த நிழற்காடும் காவேரியின் தென்கரையில் 1 குடபுரமும் காசிகைலாயத்திற்கொத்த வன்மீகக்காருபுரமாகிய கமலாலயம் என்ற பெயருடையதான் தலமிருக்கின்றது. கடலின் மேல்கரையில் காசிக்குச் சமானமான வேதாரண்யம் இருக்கின்றது. தாமிரவர்ணிக்கரையில் திருநெல்வேலி (சாலிவாடீஸ்வரம்) இருக்கின்றது பார். இதற்கு எனது

1 குடபுரம் - திருககடையூர்.

பூகைலாயம் என்று பெயர். மதுரா நகரமாகிய சுபமான தலத்தை இங்குபார். இது காசிகைலாயத்தை ஒத்தது. மதுரையின்கண் உனது அம்சமாயும் கருணைமூர்த்தியுமான மீனாக்ஷியோடும் கணங்களோடும்கூட வசிக்கிறேன். காவேரியினிடையில் எனது தலமாகிய கஜாரண்யத்தை (ஆனைக்காவை)யும், காசிகைலாயத்திற்கொத்தத் திருவையாற்றையும்பார். காவேரியின் தென்கரையில் கும்பகோணம் என்னும் கைலாயத்துக்கொத்த எனது தலத்தையும் பார். கும்பகோணத்திற்குக் கீழ்திக்கில் மிக்கதூயதும் காசிக்கொத்ததுமான திருவிடைமருதூரையும் காவேரியின் வடகரையில் மங்களநாயகியும் மாங்காட்டையும் வன்னீசர் முக்கோடிகுடமுனி தோன்றிய தலத்தையும் ஸ்ரீ தாளாரண்யம் (திருப்பனைந்தாள்) பண்ணட்னமைந்த சங்கரரையும் பார். பார்வதி! காசிக்கொத்த கௌரீ மாயூரமும் காவேரியின் தென்கரையில் இரண்டு யோஜனை தூரத்தில் புண்ணிய புட்கரணிக்கரையில் திருவாஞ்சியமென்னும் தலமும் இருக்கின்றது. இத்திருவாஞ்சியம் காசிக்குமேற்பட்டதும் புவியில் கைலாயத்திற் கொத்ததுமாகும். இதனைப்பார். பார்வதீ! காசிமுதலான அறுபத்தாறுகோடி தலங்களுக்கிடையே பூமியில் திருவாஞ்சியத் தலமுயர்ந்தது. தீர்த்தங்களுக்குள் மிகவும் உயர்ந்தது புண்ணிய புட்கரணி,' என்று சிவபிரான் பார்வதியைப்பார்த்துச் சொல்லிவிட்டு ஆகாயத்தில் இடபவாகனத்தை நிறுத்தித் திருவாஞ்சியத்தைப் பார்த்து, திருவாஞ்சிய பூமியில் மேற்கு முகமான லிங்கத்தில் மாசிமாதத்தில் சுக்கிலபக்ஷ மகத்தில் மங்களகரமான நல்ல முகூர்த்தத்தில் சதாசிவர் தோன்றினர். அக்காலத்துப் புட்கல முதலிய மேகங்கள் மலர்களைப் பொழிந்தன. பிறகு லிங்கத்தில் புகுந்தவுடன் தேவ மங்கையர் நடித்தனர். திருவாஞ்சியநாயகர் மாசி மகத்தில் தோன்றிய திருவிழைவு தினத்தில் தேவதுந்துபிகள் ஒலித்தன. இந்த சம்புவான இடபவாகனர் குமாரர்களோடும் கணங்களோடும் உத்ஸவ வடிவராகவும் உலகுக்குத் திருவிழா வளிப்பவருமாக இருக்கிறார். பரதேவதையாகிய பார்வதிதேவி இடபத்தில் நின்றிரங்கி மகிழ்ச்சியுடன் கைகுவித்தவளாகிக் கற்பகமரம் நிறைந்ததும் யோகிகள் சித்தர்களால் அடையப்பட்டதுமான திருவாஞ்சியத்தலத்தைச் சுற்றிப் புண்ணிய புட்கரணிக் கரையிலடைந்தாள்.

[பிரம்மாண்ட புராணத்தில் திருவாஞ்சியத்தல மகிமையில் கைலாயத்திலிருந்து சிவபிரான் வருகை கூறல் என்ற 5-வது அத்யாயம் முற்றிற்று.]

# பதினேழாவது அத்யாயம்.

அகஸ்தியர் :—' கைலாயத்திலிருந்து வந்த பார்வதியானவள் சுபமான புண்ணிய புட்கரணியை மூன்றுதரம் வலம்வந்து திருவாஞ்சியேசரை மீண்டும் மீண்டும் வணங்கிப் புண்ணிய புட்கரணிக் கரையின் கீழ்பாகத்தை அடைந்து பக்தியோடு கூடியவளாகிப் பவித்ரத்தை அணிந்துகொண்டு கங்கையைச் சங்கல்பித்துக்கொண்டு உலகிற்றோன்றியவர்களுக்குத் தூய்மை செய்யும் புண்ணிய நீரின தீர்த்தத்தில் புட்கரம் முதலிய புண்ணிய தீர்த்தங்களை நினைத்தாள். ஏ! முனிவர்களே! பார்வதி நினைத்தமாத்திரத்திலேயே மகரவாகனையான கங்கையானவள் அணிகலங்களெல்லாவற்றினாலும் விளங்குபவளாகி நர்மதை முதலிய நதிகளோடும் நுரைகளோடும் தூயபால நிகர்க்கும் நீருடன் வந்து சேர்ந்தாள். முனிவர்களே! மாகமாதத்தில் சுக்கிலபக்ஷ மகத்தில் புண்ணிய புட்கரணியில் தோன்றிய தேவநதியைப் பார்வதி பணிந்தவளாகி, மகிழ்ந்து நோக்கி வணங்கிப் பன்னிரெண்டுதடவை மந்திரஜெபம் செய்துகொண்டு மூன்றுதடவை நீராடிப் பாவமெல்லாம் அகற்றும் புண்ணிய புட்கரணித் தீர்த்தத்தில் நீராடி, தாமரைக் கையில் நமோந்தமான ஐந்தெழுத்தைச் செபித்துக்கொண்டவளாகி அழகிய கரையேறி மங்களகரமான வெண்பட்டையுடுத்திக்கொண்டு பாவமகற்றும் விபூதியைக் கொண்டு ஜலத்தை விட்டுக்குழைத்து நெற்றி முதலியவிடத்தில் திரிமூர்த்திகளின் வடிவமான திரிபுண்டரத்தை நன்கு ஒளிரும்படித் தரித்து, ஒருமுகமுடையதும் அழகியதும் பவழம்போல் இருப்பதுமான ருத்ராக்ஷமாலை தரித்து, நாற்பெட்டு தடவை ஆறங்கத்துடன் ஐந்தெழுத்தைச் செபித்து பஞ்சகவ்யம் (ஆவின்பால், நெய், தயிர், தூய தீர்த்தம்) உட்கொண்டு தனது உள்ளக் காதலனை திருவாஞ்சிய சங்கரலிங்கத்தில் ஆவாஹனம்செய்து வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழங்களாலும் நீர்களாலும் பஞ்சாக்ர ஜலத்துடன் திருவாஞ்சிய மகாலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து ஒருகண நேரத்திற்குள் தனது கணவருக்குத் தாமரைப் புஷ்பங்களாலும் அணிகலன்களாலும் நன்கு அலங்கரித்து சந்தனத்தால் மறைத்து சந்தனாபிஷேகம் செய்து ஆவின் நெய்கொண்டு தீபங்களைத் துலக்கி நெய்யுடன் கூடிய தூபம் சமர்ப்பித்து விசிறி சாமரம் இவற்றைக்கொடுத்து அறுசுவையன்னம், பாயஸம், சுரபியின் பால், தயிர், பழம், இவற்றைப் பக்தியுடன் ஈசனுக்கு நைவேத்தியம் செய்து மீண்டும்

நளினியில் தோன்றிய புட்பத்தைத் தனது நாதனுக்கு மீண்டும் 'யோபாம்' என்ற மந்திரத்தைக் கொண்டு பார்வதியளித்து நீராசனம்செய்து திருவாஞ்சியேசரான சம்புவைத் துதித்தாள். 'திருவாஞ்சியேசனே! கருணை உறைவிடமே! தொண்டரன்பனே! சிவனே! சிவதரனே! உனக்கு வந்தனம்' என்று துதித்தாள். இவ்வாறு துதிக்கப்பட்டத் திருவாஞ்சிபநாயகரான மகாதேவர் பாக்கியவாக் பிரதாபகல்யாணியான பார்வதிக்கு முனபு விளங்கியவராகி லிங்கத்தினின்றும் இடபவாகனரூடராயும் அநேக சூரியனுக்கொத்த ஒளியுடையவராயும் கங்கை சந்திரன் இவற்றைச் சடைமுடியில் தரித்தவராயும், தோலாடையுடையவருமாயும், பிநாகத்தைத் தரித்தவராயும், சூலம் முதலிய ஆயுதங்களைக் கையில் தரித்தவராயும தெள்ளிய முகக்கமலத்தையுடையவராயும் சிவபிரான் மாகமாதத்தில் பகல் முடிவில் பூர்ணிமையில் உலகத்திற்கு விழாவான மகத்தில் தோன்றிப் பார்வதியை அணைந்துகொண்டு சொன்னார். 'பார்வதி! உனது பூஜையாலும் பக்தியாலும் மிகவும் மகிழ்ந்தேன். எல்லையற்ற வேதத்திற்குச் சிறந்ததாயும் எழுகோடி சிறந்த மந்திரங்களுக்குள் முதன்மையான எனது பஞ்சாக்ஷரத்தாலும் துதியினாலும் ஒரேநாளில் மகிழ்ந்து பிரத்யக்ஷமாகத் தோன்றினேன். உனக்கு எது வேண்டுகோளோ அதைகேள்; கொடுக்கிறேன்' என்றனர். உடனே பார்வதியானவள் திருவாஞ்சிபத்தில் தேவர் தலைவனான சிவபிரானைப் பார்த்து வரம் கேட்டாள்.

'திருவாஞ்சியேசனே! உம்மிடத்தில் எனக்கு ஒப்பற்ற பக்தியிருக்கட்டும்; மேலும் எவர் உனை என்னால் பூஜிக்கப்பட்ட இந்த லிங்கத்தில் தாமரைகள் மற்றும் பலவகை மலர் கொண்டு வழிபடுகிறார்களோ எவர்என்னால்செய்யப்பட்ட கிணற்றின் நீர்கொண்டும் புண்ணிய புட்கரணி நீர்கொண்டும் அபிஷேகம் செய்து மாகமாதத்தில் மகதினத்தில் எனக்கு நீர் பிரத்யக்ஷமான தினத்தில் தமது ஆற்றலைவு நிவேதனமும் பூஜையும் செய்கின்றார்களோ அன்றியும் இதன்கண் நுழைகின்றார்களோ, சம்புவே! நீர் அவர்களுக்கு எக்காலத்திலும் பிரசன்னராகவேண்டும். நீர் இந்தப் புண்ணிய புட்கரணிக் கரையில் திருவாஞ்சிய லிங்கத்தில் மிகவும் சாந்நித்யமுடையவராயும் எட்டுவித செல்வம் அளிப்பவராயுமிருக்கின்றீர். விசேஷமாக, மாகமாதத்தில் திருவாஞ்சிய லிங்கத்தில் சாந்நித்ய மடைந்திருக்கிறீர். மேலும் உமது உத்ஸவத்தில் தங்கள் பிரீதியின் பொருட்டு கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை திங்கள்கிழமைகளில் விசேஷமாகநீராடி காணிக்யத்தைத் தரிசிக்கின்றார்களோ அவரது உடலின்

கண்ணுள்ள இழிந்த தேவதைகளது கூட்டத்தைச் சிவபிரானே, நீ யழிப்பாய். புண்ணிய புட்கரணிக் கரையில் ஓமம் செய்யப்பட்டதும் ஜபிக்கப்பட்டதும் சிறிதாயினும் காசியைக்காட்டிலும் சிறந்த கோடி அளவான புண்ணியம் அளிப்பதாக வேண்டும் என்னும், இவ் வரமும் கொடுக்கவேண்டும்' என்று வேண்டினாள்.

சிவபிரான் :—'திருவாஞ்சியத்தில் புண்ணிய புட்கரணிக் கரையில் உன்னோடு விளையாடவும் செல்வம் அனுபவிக்கவும் வேண்டிக் குமாரர்களுடன் கைலாயத்திலிருந்து வந்த கணங்களோடும் இங்கு வசிக்க யான் விரும்புகிறேன்' என்று தேவியைக் குறித்து அவள் வேண்டிய வரங்களுடன் மற்றவையும் அளித்து இப்பொழுது உலகு பார்த்துக் கொண்டிருக்கையில் பார்வதியின் வரத்தால் கைலாயத்திலிருந்து இத்தலத்தில் வந்து பார்வதியுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார். அப்பார்வதியானவள் மிக்க பக்தியுடையவளாக இருக்கிறாள். சதாசிவர் தனது அம்சத்தைக் காட்டிலும் மாறுபடாத வாழவந்த நாயகியுடன் இத்திருவாஞ்சியத்தில் புகுந்த அளவில் ஆற்றலுடைய வராயும் அறம் பொருள் இன்பம் வீடு அளிப்பவராயுமிருக்கிறார்.

[பிரம்மாண்ட புராணத்தில் திருவாஞ்சியப் பெருமையில் 6-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## பதினெட்டாவது அத்யாயம்.

---

'முனிவர்களே! திருவாஞ்சியேசரது பெருமையும் நலிநாஸன காரணமும் புண்ணிய புட்கரணி என்ற பெயர்க் காரணமும் கூறுகின்றேன். கேட்பீராக! இது பிரம்ம ஆன்மாவிவற்றை நன்கு அறிவிப்பது. கடல்நீரால் கைப்பற்றப்படாத பாத்மகல்பத்தின் முதலில் திருவாஞ்சியத்தலத்தில் அண்டங்களைத் தம்மிடத்து தரித்திருந்த கல்யாணியோடு திருவாஞ்சேசர் புண்ணிய புட்கரணி நீரில் ரகஸ்யமாக மகிழ்ச்சியுடன் நீர் விளையாடிக் கரையேறித் திருவாஞ்சியத்தில் உயர்ந்த லிங்கத்தில் வசித்தார். அழகிய தேவியானவள் உலகினது ஆக்கம் செல்வம் இவற்றைக் கருதி புண்ணிய புட்கரணி நீரில் பார்த்தாள். இங்ஙனம் வாழவந்தநாயகி கடாக்ஷித்தவுடன் அவ்வருளால் உலகின் நன்மையின் பொருட்டுத் திருவாஞ்சிய பூமியின் புண்ணிய புட்கரணியில் ஆயிரவிதழ் தாமரை உண்டாயிற்று. அதன்கண் தோன்றிய அயன் வேறு ஆசனமின்றி அதன் கண்ணே அமர்ந்து

நினைத்தான். பிறகு நான்கு திசையிலும் அப்புட்கரணியைச் சுற்றிப்
பார்த்தான். உடனே தென்புறத்தில் வாழவந்தநாயகியையும் ஜோதி
லிங்கத்தையும் புண்ணிய புட்கரணி என்ற தூய அழகிய பொய்கை
யினையும் உலகின் தோற்றத்துக்குக் காரணமாகக் கல்யாணியையும்
மேற்கு முகமான சிவபிரானையும் பார்த்து மகிழ்ந்து, நமக்குப் படைக்
குந்திறல் இப்பொய்கையில் நீராடுவதால் கிடைக்குமென்று நினைத்
துப் புண்ணிய புட்கரணித் தீர்த்தத்தில் தர்ப்பைப் பவித்திரம் தரித்
துச் சங்கற்பித்துக்கொண்டு கங்கை யமுனை அப்புலிங்கம், மந்திரம
இவைகளைச்சொல்லிக்கொண்டு அத்தீர்த்தத்தில தேவர் இருடி பிதுர்க்
கள் இவர்களுக்குத் தர்ப்பணஞ்செய்து வெண்பட்டுடுத்து திருநீரணிந்
தான். அதன் விதியாவது:— ஆறு அங்கமான மந்திரத்துடனும்
அக்னியென்னும் மந்திரத்துடனும் ஈச்வரனுடைய பெயருடனும்
அத்திருநீற்றினை எடுத்துக் கையில்வைத்துக்கொண்டு 'ஆபோவா'
என்ற மந்திரத்தைக்கொண்டாவது ஆறெழுத்தைச் செபித்துக்
கொண்டாவது தீர்த்தம் எடுத்துச்செபித்து, அங்ஙனம் மந்திரம்
ஏற்றப்பட்டதும நனைந்ததுமான திருநீற்றை 'மானஸ்தோகே' என்ற
மந்திரத்தைக்கொண்டு மோதிரவிரல், கட்டைவிரல் இவைகளைக்
கொண்டாவது அல்லது நடு மூன்று விரல்களைக்கொண்டாவது மீண்
டும தலையில் திருபுண்டரமிட்டும நெற்றியிலும், இருதயத்திலும்,
புயங்களிடையிலும் மணிக்கட்டுக்களிலும் கொப்பூழிடையிலும் முகத்
திலும் காதிலும் முழங்காட்கிடையிலும் முறையாகப் புண்டரம
ணியவேண்டும. அங்ஙனம் அணிந்து அஞ்சலியையும் திருநீற்றின
வாசனையையும் நுகர்ந்து தூயஆசமனமசெய்து 'ஓம' என்று பன்
னிரெண்டுதரம் தெளித்து உளுந்து மூழ்கும் நீரைக்கையில் எடுத்து
மூன்றுதரம் குடித்துப் பிறகு தூய ஆசமனஞ்செய்து அங்கங்
களைத் தொட்டு சந்தியாவந்தனங்களை முறைப்படிமுடித்துக் காலை
யில வேதத்திற்சன்னையான காயத்ரி தேவதையை நூற்றெட்டு
தரம் பக்தியுடன்ஜெபித்து பிரம்மயக்ஞம்செய்து முடித்து ஐந்து
எழுத்தை நூற்றெட்டுதரம் பிரணவத்துடன் ஜபித்து ருத்திரபூஜை
விதிப்படி வேதத்தின்விதிகொண்டு திருவாஞ்சியேசற்குப் பூஜைசெ
யது பஞ்சகவ்யம், பால், தயிர், தேன், நெய், சர்க்கரை, தேங்காய்,
உயர்ந்த வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், எண்ணெ, கருப்பஞ்
சாறு இவைகளைக்கொண்டு ஏலம், இலவங்கத்துடன் புண்ணிய புட்க
ரணி நீரைத் தங்கக்குடத்தில்நிரப்பி மேல்வரும் வேண்டுகோளை
நிறைவேற்றுவதான திருவாஞ்சியலிங்கத்தை நினைத்துக்கொண்டு

அவ்வயன் உயர்ந்த சதருத்ரீயத்தையும் நீரின் மந்திரமான ‘பாவமானி’ என்ற மந்திரத்தையும் யசுஸ்ஸிலிருந்து தோன்றி அப்புமந்திரத்தையும் சாந்தி மந்திரத்தையும் பன்னிரெண்டுதரம் ஜபித்து திருவாஞ்சியநாதரான லிங்கத்துக்கு அபிஷேகம்பண்ணி அணிகலன்களையணிந்து சாலியன்னம், பாயசம், பால், நெய், வெல்லம், அறுசுவை அடிசில பலவின் ரசம் பொரியல் ஆகிய இவற்றை நிவேதனம் செய்து தாம்பூலத்தை சம்புவின் பொருட்டு அவ்வயன் கொடுத்தான். மீண்டும் நீராஸனம் செய்து மந்திர புட்பம் சமர்ப்பித்துத் திருவாஞ்சேசரான சம்புவை அப்பிரமன் துதிக்க ஆரம்பித்தான்.

‘உலகுக்கு ஆதாரமானவனும் தொண்டரன்பனும் எல்லாத் தேவர்களின் தலைவனும் பார்வதிபதியாயும் சந்திர சூரியர்களாயும் ருத்ரராயும் சத்தியராயும் மேலான வடிவமுடையவராயும் பரப்ரம்மமாயும் கருப்புஞ் சிவப்பும் கலந்த வடிவமுடையவனும் மேனோக்கிய வீரியமுடையவனும் வேறுபாடான கணணுடையவனும் உலகு வடிவனும் உலகுள உண்மைவடிவமோகத உடலுடையவனுமாகிய உன் பொருட்டு வந்தனம். உனக்குப பாம்புகள் எங்ஙனஞ் சிறந்த ஆபரணமாய் இருக்கின்றனவோ அங்ஙனம் பொன்னாபரணமாகின்றதில்லை. ஏ! திருவாஞ்சியேசரே! மகாபாகரே! அடைக்கலமடைந்தோர் அன்பனே! உன்னையே காவலாக அடைந்தேன். உன்னிடத்தில் இடைவிடாத பக்தி இருக்கவேண்டும். எனக்குப் படைக்குந்திறனும் வேண்டிய செல்வமும் கொடுப்பாய். நான் செய்த துதியால் நீ மகிழ்ந்தவனாவாய்.’ இங்ஙனம் அயனது துதியால் மகிழ்ந்த திருவாஞ்சேசர் பாக்கியவாக் பிரதாபகல்யாணியோடு விருடபாரூடராய் மாகமாத மகத்தில் தோன்றியருளினார். அங்ஙனம் தோன்றிய கடவுள் எத்தன்மையாகத் தோன்றினார் எனில் கங்கைபிறையை அணிந்த முடியினையுடையவரும் திருநீறணிந்த மேனியரும் நெற்றியில் முப்புண்டரீகமணிந்தவரும் அரவமாலையணிந்தவரும், மணி, குண்டலம், தங்கவளையல்களை அணிந்தவரும் செம்பரத்தம் மலர்போன்ற தங்க ஜடையுடையவரும் பூணூல் அணிந்தவரும், முத்துபவழமாலைகளை அணிந்தவரும் ஒருமுகமுடைய உருத்திராக்கமுடையவரும் சந்தனப் பொட்டுடையவரும் கால் சதங்கைகள் ஒலிக்கும் கழலுடையவரும் கோடிஞாயிறு போன்ற ஒளியுடையவரும் கல்யாணியோடும் குமாரர்கள் கணங்கள் நந்திமுதலானவர்களுடன் கூடியவரும் ஹிரண்ய பாகுவுடையவரும் திருவாஞ்சிய லிங்கத்திற்றோன்றியவரும் தாமரை

யை ஒத்த கைகளால் சூலம் முதலானவற்றைத் தரிப்பவரும் இடபத்தில் ஏறியவரும் உலகுகாக்கும் தொழிலுடையவரும் அருள் பொழிபவருமான திருவாஞ்சியேசர் தேவரைப்பார்த்து மயிர்க்கூச்சலிட்டு அயன், மனதிற்றியானித்து எட்டுறுப்புடன் அவர் திருவடியில் வணங்கினார். அருளுறைவிடமான திருவாஞ்சியேசர் கைகளால் அயனை அணைத்து எழுப்பி உச்சிமுகந்து மிகவும் மகிழ்ந்தார். தேவர் அயனது பூஜையால் அயனைக்குறித்துச்சொன்னார்.

'தாமரைமலராலும் எனது கண்ணிலிருந்து தோன்றிய மூன்று இதழுடைய வில்வதளங்களாலும் அபிடேகத்தாலும் பக்தியோடு நிவேதனம் செய்ததாலும் மகிழ்ந்து உனக்குமுன் தோன்றினேன். மேலும், எனது திருவாஞ்சிய லிங்கத்தை மாகமாதத்திய தேய்பிறைச் சதுர்த்தசியுடன் கூடிய மகதினத்தில் ஒருநாள் வழிபாட்டினாலேயே யாவர்க்கும் இன்மை விளைவிக்கும் சிவராத்திரி தினத்தின் முடிவில் உன்முன் தோன்றினேன். உனது துதியாலும் வணக்கத்தாலும் மகிழ்ந்தேன். உன்னால் வேண்டப்பட்ட படைக்கும் திறனும் அளித்தேன். என்னிடத்தில் பத்தியும், வேண்டும செல்வமும் கொடுத்தேன். அயனே! நீ நீண்ட ஆயுளுடையவனாய் உன்னால் பூஜிக்கப்பட்ட எனது திருவாஞ்சிய லிங்கத்தில் வில்வ தளங்களாலும் தூய நீர் கொண்டும் புண்ணிய புட்கரணி, கல்யாணிக் கிணறு தீர்த்தங் கொண்டும் பக்தியுடன் அபிஷேகம்செய்து தூப தீப நிவேதனங்களை ஆற்றலளவு கடவுளுக்களித்து உன்னால் வழிபடப்பட்ட திருவாஞ்சேசரான என்பொருட்டு மாகமாதத்தில் விசேடமான சிவராத்திரி தினத்திலும் சித்திரை முதலான மாதங்களிலும் துவாதசிகளிலும் திங்கள் ஞாயிறு கிழமைகளிலும் சங்கராந்தியிலும் பூர்ணிமையிலும் அமாவாசையிலும் வேறு எந்த தினத்திலும் பூஜையும ஆற்றலுக்கொத்தபடி அன்னபான முதலானவற்றால் நிவேதனமும் செய்து எவர் எனக்கு பூஜைசெய்து இத்தலத்தில் வசிக்கிறார்களோ அவர்கள் அங்கு ஒருநாள் இருப்பினும் ஆயுள்வன்மை, மகப்பேறு, செல்வம், தானியம், மரபுவளர்ச்சி இவைகளைத் திருவாஞ்சேசரது அருளினாலும் அடைந்து தேகமுடிவில் சிவனாகி என்னை அடைவார்கள். காசியினும் சிறந்த ஐந்துநாழி வழியளவுள்ள புண்ணியநதிக்கரையில் எனது லிங்கத்தருகில் எவனாகிலும் ஹோமமும், ஜெபம், பூஜை, இவை சிறிதாவது செய்யின் காசி, குருக்ஷேத்ரம் இவைகளில் செய்வதைக் காட்டிலும் நூறுமடங்கு அதிகமாக எனது கட்டளையால் பயனடைகிறான். புண்ணியபுட்கரணி தீர்த்தத்திலாவது அத்தலத்தில் கங்கைக்

கொத்த ஐந்துநாழி வழிபாட்டினுக்குள்ள தீர்த்தங்களிலாவது நீராடி சிவபூஜை விதிப்படி 'சிவாய' என்ற மந்திரத்துடன் மீண்டும் ஆறெழுத்து மந்திரத்துடனும் திரியம்பகமென்னும் ருக்காலும் என் சூக்தத்தாலும் மந்திரத்தாலும் எவன் பூஜை செய்கின்றானோ அவனுக்கு அறம் பொருள் இன்பம் வீடு இவை கிடைக்கின்றன. மகப்பேறு, நட்புப்பேறு முதலிய செல்வங்கள், மரபு வளர்ச்சி முதலியன எனது கட்டளையால் அவனுக்குண்டாகி இவ்வுலகிற்றுய்ப்பனதுய்த்து, இறுதிக் காலத்து என்னை அடைகிறான்' என்று பரமசிவன் கூறியருளித் திருவாஞ்சியத்திலுள்ள உயர்ந்த லிங்கத்திற்றோன்றித் திருவாஞ்சியத திற்றொண்டு புரியும் மக்கட்குப் பிரசன்னராயும் வேண்டுவனவளிப் பராயுமானார். பரமசிவன் உத்தரவினால தாமரையை விளைக்கும் மயன் திருவாஞ்சியத்தில் திருவிழாப் பணியை மகிழ்ச்சியுடன் செய்ய ஆரம்பித்தான்.

[பிரம்மாண்ட புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில்
அயனுக்கு வரங்கொடுத்ததென்னும் 7-வது
அத்யாயம் முற்றிற்று.]

---

## பத்தொன்பதாவது அத்யாயம்.

---

ஏ! முனிவர்களே! உடனே அயன் பூராதியான உலகங்களை மனத்தாற் படைத்து மேருவைக கர்ணிகை போலவும் மேருவுக்குக் கேசரங்கள்போன்றும் பூமியைத்தாங்கக்கூடிய அறுபதாயிரம் பக்க மலைகளை பூவுலகினைத்தாங்க நல்ல வண்மை யிடங்களில் இரும்பு முளைகளும் மரமுளைகளும் அடித்து இக்கன்னகன் மாஞாலத்து அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் தூய பரமசிவனது தலங்களும் அயன் ஏற்படுத்தினார். அதன்கண் காசிக்குமதிகமான திருவாஞ்சியத் தலத்தை மனத்தாலேயே அயன் படைத்தான். கருப்பக்கிரகம் இடை மண்டபங்களுடனும் அழகிய வடிவமுடைய திருவாஞ்சியர் தேவி உத்ஸவ விக்ரகங்களைத் தங்கமயமாகப் பண்ணி அந்தணர்களைக்கொண்டு சைவ வழிப்படிச் சிவபிரானைப் பிரதிஷ்டை செய்து விதிப்படி ஓமம் செய்வித்து அந்தணருக்கு அன்னமிட்டும் தெருவினை நன்கொப்பனை செய்தும் சாத்திரவிதிப்படி சுக்கிலபக்ஷ பஞ்சமியில் காமிக

ஆகமங்களறிந்தவர்களைக்கொண்டு அங்குரார்ப்பணம் செய்து வந்தும் சிவாகம விதிப்படி கொடியேற்றம் வாஸ்து ஹோமங்கள் செய்வித்தும் வேள்விச்சாலையையும் வீதிகளையும் பூர்ண கும்பங்களாலும் கொடிகளாலும் கோலமிடுதலாலும் மிகவும் விளக்கமாகச் செய்து அபிடேகம் நைவேத்தியங்களால் திருவாஞ்சேசரையும் கல்யாணி தேவியையும் மனமகிழச்செய்து முத்துக்களை அணிவித்தும தங்க அணிகளாலும் மல்லிகைமலர்களாலும அலங்கரித்து இடபவாகனத்தில் ஏற்றுவித்துக் குடை சாமரங்கள் வீசியும் பரிவாரங்களைக்கொண்டு இடபவாகனத்தைச் சுமக்கச்செய்தும நல்ல வாசனையுள்ள விசிறியை எடுத்துத் தானே பக்தியுடன் தனது கையால் வீசியும் தான் படைத்துள்ள முனிவருடனும் பிரம்மாவுடனும் திருவிழாவிற்கு வந்திருந்து தேவமங்கையர்கள் கூட்டங்களைக்கொண்டு நடிப்பித்தும் சங்கீதம் பாடச்செய்தும் வாத்தியங்களை வாசிக்கச்செய்தும் பல தீவட்டிகளுடனும் வாஞ்சேசரான மகேஸ்வரனுக்கு வாஹனத்திருவிழா நடத்தியும் காலையிலும் மாலையிலும் விசேஷமாகப் பூஜைகள் செய்வித்தும் முத்கஸார முதலிய பக்ஷியங்களும் பழங்களும் நிவேதனம்செய்தும் சாலி நெற் சோறு பால் பாயஸம நெய் தயிர் முதலிய அனைத்தும் நிவேதனம் செய்து ரதோத்ஸவத்தில் கல்யாணியையும் திருவாஞ்சேசரான நாயகரையும் ரதத்தில் ஏற்றுவித்துப் பின் தொடர்ந்துவரும் நாரதர் முதலிய முனிவருடனும் அயன் மாகமாதமகத்தில் திருத்தேர்விழாவை நடத்தித் திருவாஞ்சேசருக்குக் கிழ்புறத்தில் தீர்த்தத்தை உண்டுபண்ணி அதன்கண சிறந்த தீர்த்த உத்ஸவத்தை நடத்தி வாஞ்சேசரை அத்திருவிழாவில் துதித்தார். திருவிழாவின் முடிவில் வாஞ்சேசர் கல்யாணியோடுகூட மகிழ்ந்து அயனைக் கட்டியணைத்துச் சில பகர்ந்தார்.

திருவாஞ்சேசர்:—'ஏ! அயனே! உன்னால் செய்யப்பட்ட விழாவினாலும் பணிவிடைகளினாலும் இப்பொழுது யான் மகிழ்ந்தேன். நீ சுகமாக இருப்பாய். அயனே! நீ சத்திய உலகில் சரஸ்வதியுடன் உலகை வளர்க்கும் தன்மையை மேற்கொண்டு பிரம்மனாக இருந்து பின்பு என்னையடைவாய். உன்னால் படைக்கப்பட்ட மக்களும் எனது மகிழ்ச்சியின் பொருட்டு வளரட்டும். எவன் எனது உத்ஸவத்தில் என்னையும் கல்யாணியையும் தெரிசித்துக் காசிக்கு மேற்பட்ட இத்தலத்தில் என்னை உத்தேசித்துப் பூசை வழிபாடு தானம் ஓமம் மற்றும் பலவகை புண்ணியங்கள் சிறிதளவு செய்தாராயினும் அன்றி ஆற்றலளவு தானம் செல்வம் தான்யம், அன்னம், ஆவின்

குளம்படியான பூமி இவற்றைத் தொண்டனான சிவயோகிக்குக் கொடுத்து இதன்கண் ஓரிரவாயினும் இரண்டு அல்லது மூன்றிரவாவது, ஒருகணமாவது வசிக்கிறார்களோ அத்தகைய எனது மகிமையில் பற்றுடையவருக்கு ஆயுள்வன்மை, உடல்நலம், மகப்பேறு, பகைவரை வெல்லுதல் முதலியன உண்டாகும். அன்றியும் அவரது குலம் அயனறியும்வரை மேன்மேலும் வளருவதாக. வாஞ்சியத்தில் புண்ணிய புட்கரணிக் கரையில் உத்பவ வடிவனாயிருப்பவரும் கல்யாணி தேவியுடன் கூடியவரும் சதாசிவரும் திருவாஞ்சேசரான என்னைத்தினம் வந்து தெரிசித்தாலும் அன்றியும் எனது திருவிழாவில் திருவாஞ்சியத்தில் எந்த அந்தணர் வந்து தெரிசித்துக்கொண்டு வருகின்றாரோ, அவர்கட்கு வேண்டுகோள் நிறைவேறட்டும். அன்றியும் பூமியரசர்களாகட்டும். சுவேதவராககல்பத்தில் சிறந்த முனிவர்கட்கும் வேத வித்தையில மிக்க தேர்ச்சியுள்ளவர்களாகவுமாகட்டும்" என்று இந்த அயனுக்கு ஈசுவரன் அருளித் திருவாஞ்சியத்தில் அழகிய வடிவுடையவராயுந் தொண்டர் துன்பம் களைபவராயும் வேண்டுகோள் எல்லாம் அளிப்பவருமாக இருந்து விளங்குகிறார். நாரதர் முதலிய சிறந்த முனிவர்களும் தேவருட் பத்மகல்பத்தில அடியார்களைக் காத்தலில் முன்னிற்பவரான திருவாஞ்சேசரைப் பூசித்தனர். வேறு கல்பங்களில் முனிவரும் விஷ்ணு முதலிய தேவரும் ஒரு காரணத்தை முன்னிட்டவுடனுடையவராகி யுகந்தோறும் சம்புத்தீவில் தர்மத்தை நிலைநாட்டவேண்டி அவதாரம் செய்கின்றனர்.

[பிரம்மாண்ட புராணத்தில் திருவாஞ்சிய மகிமை
௧௯-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## இருபதாவது அத்யாயம்.

---

அகத்தியர்:— 'இந்த சுவேதவராககல்பத்தில் திருவாஞ்சியபூமியிலுள்ள திருவாஞ்சேசரது தூயமகிமையைச் சொல்லுகிறேன். எந்த மேருகண்டத்தில் சுமேருவின் மேற்பகுதியில் சிறந்த இருடி அந்தணர்களாலும் யானைகளாலும கங்கைநீர்க் கைக்கொள்ளப்பட்டதோ அத்தகையசிறந்த மேருமலையின் மேற்பக்கத்தில் சோணிதம் என்ற மண்டலமொன்று விளங்குகின்றது. அந்த சோணிதமண்

டலத்தில் பாணுசுரன் வசித்துக்கொண்டு தினந்தோறும் சுபமான நருமதை மணலில்வந்து இரண்டாயிரம் லிங்கங்களை பூஜித்தான். அப்பாணுசுரனுக்குச் சதாசிவர் காணுபத்யம்கொடுத்தார். அத்தகைய சோணிதபுரத்திற்கு மேற்கே, உயரம் பரப்பு முப்பதாயிரம் அடி அளவுள்ளதும் கடல்கடைந்த விஷ்ணுவின் தோள் அடையாளம் உடையதுமான மந்தரமலையிருக்கிறது. அதன் மேற்புறத்தில் சிறந்த ஆலமரமொன்று இருக்கிறது. அது ஆயிரம் யோஜனை உயரமுள்ளது. அதன் இலையில விஷ்ணுவாகிய ஆதிநாராயணர் வசித்தார். முதலில் சிவனும் நடுவில் அயனும் கடையில் விஷ்ணுவும் வசித்தார்கள். அதன்கண் அங்குஷ்டநகம் என்று மிகவும் உயர்ந்ததான மலை ஒன்று இருந்தது. தேவர்கள் அதிலிருந்து பார்த்தார்கள். பூவேதத்தீவில் காசி முதலிய தலங்கள் காணப்பட்டன. அவை பிரளயத்தில் அழியாமலிருந்தன. லக்ஷ்மி நாராயணரும் பார்த்தார். அங்ஙனம் பார்த்த நாராயணன் அவ்விலையினின்றும் பெயர்ந்துவந்து திருவாஞ்சியத்தில் மேற்பகுதியில் வந்திருந்தார். 'இப்பொழுது அதன் மேற்கே விஷ்ணுவாலயம் காணப்படுகின்றது.' சிவ பூஜையில் பற்றுடைய அயனும் திருவாஞ்சியம் வந்து பூஜை செய்ததினுல்தான் நளினாஸனன என்று விளங்குகிறர். காவேரியின் தெற்கே திருவாஞ்சியம் காசிக்கொத்த தலமென்றும் காசிக்கு மேற்பட்டதென்றும் எதனுல் புகழ்வாய்ந்ததோ அதனுல்தான் இது பிரளயக்கடல் ஜலத்தாலும் கைக்கொள்ளப்படாமல் இருக்கின்றது. காவேரியின் தென்கரையில் இரண்டுயோஜனை தூரத்தில் மணல் மேடுகளால் சூழப்பட்ட திருவாஞ்சியேசரது லிங்கமிருக்கின்றது. சகல சித்தியும் அளிப்பது. உலகுக்கோர் அணிகலம் போன்றது. இது அயனுல் வெளிப்படுத்தப்பட்டது. காசியபர் முதலிய மககட்கு அறிவு தருவது. இத்திருவாஞ்சிய பூமியானது லிங்கத்திற்கு அணிகலமாயிருப்பது. கௌரீ கல்யாண சமயத்தில் என்னைக் கூப்பிட்டுச் சதாசிவர் சொன்னதாவது, 'கல்யாணத்திற்கு வந்திருந்து கல்யாணத்தை இடையூறின்றி நடத்திவா' என்று கூறினர். நான் ஓடிப் பிரஸ்தவிடத்திலிருந்து வேதாரணியம்செல்ல வழியோடுவந்தேன். அப்பொழுது பரமசிவனுல் திருவாஞ்சிய தலத்தில் இவ்விலிங்கம் வெளிப்படுத்திக் காட்டப்பட்டது. இது நமது தேவஸ்தானம் ஆகும். பூஜிப்பவர்களுக்கு முறைமையும் வரம் பெறுதலையும் முறையாகச் சொல்லுகிறேன். இதை எனக்கு எட்டிய வரையில் சொல்லுகிறேன். இது அறம் பொருள் இன்பம் வீடு அளிப்பதாகும். திருவாஞ்சியத்தில் காசியபர் தேவரைப் பூஜித்து இருடிகளுக்குள் அறுவதாக ஆகாசத்

தில் விளங்குகிறார். அயனது மனதிற்றோன்றிய அத்திரி, வசிஷ்டர், கௌதமர், ஆகிய இவர் திருவாஞ்சியேசரை வழிபட்டு அவர் வரத்தால் சப்தரிஷி மண்டலத்தில் அருந்ததி அநுசூயையுடன்கூடி விபூதியினால் பரப்பிரம்மமாயிருக்கும் தன்மையை அடைந்திருக்கின்றனர். பரத்வாஜர் திருவாஞ்சியேசரை வழிபட்டுக் கவிஞரானார். மிகுந்த புகழுடைய விசுவாமித்திரர் திருவாஞ்சிய நாதரைப் பூஜித்து பிரம்ம விருடியாயினர். சிறந்த தவசியான ஜமதக்னியானவர் காசிக்கு மேற்பட்டத் திருவாஞ்சியத்தில் நீண்டநாள் இருந்து தவம் செய்து வந்தார். அந்த தீர்த்தத்திற்குக் கிருதயுகத்தில் புண்ணியம் வளருவதால் புண்ணிய புஷ்கரணியென்ற பெயர்; திரேதாயுகத்தில் அத்திரி தீர்த்தம் என்று பெயர். துவாபர யுகத்தில் பராசரம் என்று பெயர். கலியுகத்தில் கலிதோஷம் நீக்கும் முனி தீர்த்தம் என்று பெயர். மகுட வர்த்தன சோழவரசன் பகைவர் கையில் அகப்பட்டுக் கஷ்டப்படுகிறபோது பராசரரது உத்திரவால் முனி தீர்த்தத்தில் நீராடி திருவாஞ்சியேசரைப் பூஜித்துப் பகைவனை ஒரு நிமிஷத்தில்வென்றான். வீரதனுஸ என்பவனது மகனான மகாதனுஸ் க்ஷத்திரிய அரசனொருவன் திருவாஞ்சியேசரைப் பூஜித்து அரக்கராயிருக்கும் தன்மையிருந்து விடுபட்டான். வைகுண்டத்தில் பாம்பணைப் பள்ளியில் யோகநித்திரைசெய்து கொண்டிருக்கிற இலக்குமியோடுகூடிய விஷ்ணுவானவர் தேவரால் துதிக்கப்பட்டவராகி எழுந்தார். அப்பொழுது வலது கையில் பூமியையும் இடது கையில் இலக்குமியையும் அணிந்தார். அப்பொழுது இலக்குமி கோபித்துக்கொண்டு 'எனது மாற்றாளிடத்தில் மிக்க ஆதரவுகாட்டுகின்றீர்' என்றுசொல்லிவிட்டு ஜனகரது வீட்டிற்குச் சென்று வசித்தாள். உடனே விஷ்ணுவானவர் பிரிவாற்றாராகி வருந்திக்கொண்டிருக்கையில ஆகாயவாணியின் கூற்றின்படி திருவாஞ்சேசரை நினைத்து பதினாயிரவருடம் வழிபட்டுத் திருவாஞ்சியக் கோயிலுக்கு மேற்கே இலக்குமியை மீண்டும் அடைந்து பக்தியுடன் திருவாஞ்சியத்தில் தேவேசரைப் பூஜித்தார். கிருஷ்ணனது பூஜையால் சிவபிரான் கைலாயத்திலிருந்து இடபாரூடராய் வந்து இலக்குமியைக் கண்ணனோடுசேர்த்தார். ஆகையால்தான் இதற்குத் திருவாஞ்சியம் என்ற பெயர். சிவன் கட்டளையால் அரியானவர் அங்கு வசிக்கிறார். இது மிகவும் ஆச்சர்யம். அதற்கு நாராயணாசிரமம் என்று பெயர். அது திருவாஞ்சியம் கோயிலுக்குப் பின் இருக்கிறது. இந்திரன் கௌதமரால் சபிக்கப்பட்டு உடலெல்லாம் பெண்குறி வடிவாயிருந்ததால் இத்தலத்து தேவேசரை வழிபட்டு

அந்த அகலிகையின் சேர்க்கையால் தோன்றியபாவம் நீங்கியவனானன். இந்திரனது குருவின் கட்டளையால் மாகமாத மகதினத்தில் மகேசுவரனான திருவாஞ்சேசரது மகிமையைக் கேள்வியுற்று முன்போல எல்லாவிடங்களையும் தேவாலயத்தையும் சீர்படுத்திப் பக்தியுடன் மாகமாதத்தில் திருவாஞ்சேசரது அருளால் திருத்தேர்விழா நடத்தி திருவாஞ்சியநாயகரால் வளர்க்கப்பட்டவனாகி ஸ்வர்க்கமடைந்து தேவமங்கையருடன்கூடி மகிழ்கிறான். விகுக்ஷி என்பவரது மனைவியாகிய சருமதியென்பவள் கார்க்கியரது சாபத்தால் வெண்குட்ட நோய் அடைந்தவளாகிப் புண்ணியபுட்கரணியில் நீராடித் திருவாஞ்சேசரது அருளால் அந்நோயினின்றும் நீங்கினாள். தர்மத்வஜன் என்ற சிறந்த வைசியனொருவன் தனது மனைவியோடும் திருவாஞ்சியத்தில் புண்ணியபுட்கரணியில் மாகஸ்நானத்தைக் கிரமப்படி செய்து வாஞ்சேசரைப் பூஜித்துக் கடைசியில் தேகம் நீங்கும் காலத்துத் தங்கமயமான விமானம் ஏறிக் கைலாயம் அடைந்தான். இது மாக நீராட்டத்தின் பயனாகும். திருவாஞ்சியத்தில் பிரம்ம தீர்த்தம் முன்பக்கத்தில் இருக்கிறது. அக்னி திக்கில் நாரததீர்த்தம் என்ற புண்ணியதீர்த்தம் இருக்கிறது. விச்வாமித்திரதீர்த்தம் என்பது தெற்கில் மிகுந்த தூய்மை வாய்ந்ததாக இருக்கின்றது. நிருதி திக்கில் ஸர்வதீர்த்தமும் பாரத்வாஜதீர்த்தமுமிருக்கின்றது. வேண்டுவதை அளிப்பதான சேஷதீர்த்தமென்பது மேற்கே இருக்கின்றது. நாராயண தீர்த்தமும் மேற்கே இருநாழி வழி தூரத்தில் இருக்கிறது. இது மக்கட்கு வேண்டுவதளிப்பதும் விஷ்ணுவுக்குப் பிரீதி அளிப்பதாகும். வாயுதிக்கில் ராமதீர்த்தம் இருக்கின்றது. வடக்கு திக்கில் பைரவதீர்த்தமும், ஈசான்யதிக்கில் இந்திர தீர்த்தமும் கோயிலுக்குள் ஆனந்தக் கிணறும் இருக்கின்றன. அதில் நீராடில் ஆனந்தமுண்டாகும். புண்ணியபுட்கரணி என்றாலோ எல்லாச் செல்வமும் அளிப்பதாகும். வடக்கிற்கும் வடகிழக்கிற்கும் இடையில் பைரவதீர்த்தம் இருக்கிறது. திருவாஞ்சியத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களைப் பார்த்தாலும் அநேக பிரம்மஹத்திகள் எல்லாம் ஓடிவிடும். இத் திருவாஞ்சியத்தலமானது கிருதயுகத்தில் தங்கமயமாயும், திரேதாயுகத்தில் வெள்ளிமயமாயும், துவாபரயுகத்தில் தாமிரமயமாயும், கலியுகத்தில் கலிதோஷத்தால் மண்மயமாயும் ஆகின்றது. எவன் காலையில் எழுந்து தினந்தோறும் திருவாஞ்சியம் என்று சொல்லுகிறானோ அந்தச் சிறந்த மனிதனை எல்லா நற்குணங்களும்

அடைந்திருப்பதால் லக்ஷ்மியானவள் அவனைவிரும்புகின்றாள். அவன் திருவாஞ்சேசரது அருளால் மகப்பேற்றைப் பெறுவான் என்று அகத்தியரிடமிருந்து புண்ணியமான திருவாஞ்சேசரது மகிமையைக் கேட்ட எல்லா இருடிகளும் அவ்வகத்தியரது கட்டளையால் திருவாஞ்சியமடைந்து தூய பத்துத் தீர்த்தங்களிலும் நீராடித் திருவாஞ்சேசரைப் பூஜித்து அவரிடமிருந்து தமது வேண்டுகோள்பெற்றுத் தத்தம்தேசங்களை அடைந்தார்கள். இத்திருவாஞ்சேசரது மகிமையைக் கேட்பவனும் எழுதுபவனும் படிப்பவனும் விரிப்பவனும் இவ்வுலகில் செல்வம் பெற்றுக் கடைசியில் சிவபதம் அடைவர்.

[பிரம்மாண்ட புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில்
9-வது அத்யாயம் முற்றிற்று.]

பிரம்மாண்டபுராணம் முற்றிற்று.

---

# சாம்போப புராணம்.

## இருபத்தொன்றாவது அத்யாயம்.

சுயஞ்ஞர் :—' கலையெல்லாம் அறிந்தவரும் எவ்வுயிர்க்கும் இதமளிப்பவருமான சாம்பனே! பிரம்மஹத்தி முதலிய பாபங்களுக்குக் கழுவாய் கூறியருளினீர். அவற்றையெல்லாம் கேட்டேன். இம்முறை கிருத, திரேதா, துவாபர யுகங்களிற் செய்யவியலும்; கலியுகத்திற் செய்யவியலாது. ஏனென்றால் ஆயுள் அற்பமானதாலும் பலமில்லாததாலும் அது இயலாது. ஆதலால் சிறியதோருபாயம் கொண்டு பாவம் யாவையும் நீக்கவேண்டும். முனிவர் தலைவரும் சிறந்த அந்தணருமாகிய நீவிர் அத்தகைய உபாயம் ஆராய்ந்து எனக்கு எல்லாம் கூறியருள்க.

ஸ்ரீ சாம்பர் :—' சிறந்த அறிஞரும் இருடிகளிற் சிறந்தவனுமாகிய சுயஞ்ஞரே! நீர் நன்றாகக் கேட்டீர். எம்மக்கட்கும் இதம் விளைவிப்பதாகும். பிராணிகளுக்கு இதம் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு சிறிய உபாயத்தால் பெரிய பாவங்கட்கு முத்தியுண்டாகும் விதத்தைக் கூறுகிறேன். கிருஸ்ரம் செய்யாமலும் பூமி வலம் வராமலும் தீர்த்த யாத்திரையின்றியும் பிறகு மலையினின்று விழுதலில்லாமலும் வேள்வியின்றியும் கொடையின்றியும் பொருட் செலவின்றியும் நீராடுவதால் மாத்திரம் சிறந்த பாவங்களுக்குக் கழுவாய் கூறுகிறேன். இது மக்கட்கு இதம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தால் செய்வது. சஃய மலையின் அடிவாரத்திலிருந்து பெருகிவரும் காவிரியென்றொரு சிறந்த நதி இருக்கின்றது. அதன் தென்கரையில் இரு யோஜனை தூரத்தில் கலிநீக்குவதான திருவாஞ்சியமென்றொரு தலமிருக்கின்றது. அத்தல மகிமையை நூறு வருடமாயினும் ஆதிசேடன், அயன் இந்திரன் முதலிய தேவராலும் சொல்லவியலாது. பிரம்மப் பிரளயத்தில் அத்தலமாத்திரம் இவ்வுலகில் அழியாமல் இருந்தது. ஏ! முனிவனே! அத்தகைய தலத்தின் மகிமையைச் சிறிது சொல்லுகிறேன். இது கேட்பவரது எல்லாப் பாபங்களையும் போக்கும். புண்ணியத்தைக் கொடுக்கும். நான்கு புருடார்த்தமும் அளிக்கும். இத்தலத்தை நோக்கக் காசி முதலிய தலங்களும் பதினாறில் ஒரு பங்காகக்கூட ஆகமாட்டாது. ஏனெனில் அதைப்பற்றிச் சொல்லுவதில் பயன் யாது? இத்தலத்தில் இறந்தவருக்குப் பைரவ வாதனையே கிடையாது. இத்தலத்தில் மரித்த ஜந்துக்களுக்கும் வலது காதில் தாரக மந்திரமான பிரணவத்தைச் சிவபிரான் தானே

வந்து முத்தியின் பொருட்டு உபதேசிக்கிறார் என்றால் அந்தல மகிமையை முனிவனே! யாரால்தான் வர்ணிக்கப்படும்? அங்ஙனமாயினும் சிறிது சொல்லுகிறேன். இது கேட்பவருக்குப் புண்ணியமும் நான்கு வித புருடார்த்தங்களுமுண்டாகும். அங்கு திருவாஞ்சேசருக்கு வடக்கே சிறந்த தீர்த்தம் ஒன்றிருக்கிறது. தேவர்கள் அத்தீர்த்தத்திற்கு அனேக விதமான பெயர்கள் சொல்லுகிறார்கள். அனேக புராணங்களில் காலத்தாலும் காரணத்தாலும் வேறுபாடுகளிலிருத்தலின் அனேக விதமாகச் சொல்லப்படுகின்றது. அச்சிறந்த தீர்த்தத்தில் ஞாயிற்றுக்கிழமை சூரிய உதயத்தில் எவர் நீராடுகின்றார்களோ அம்மனிதர்கள் உயர்ந்த கதியையடைகின்றனர். பிறன்மனைவிழைந்தோனுக்கும் பிறர்பொருள் கைக்கொண்டாருக்கும் பிறருக்குத் துன்பம் விளைவித்தவருக்கும் நீராடுதல் சிறந்த கழிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து பாதகிகளுக்கும் உபபாதகிகளுக்கும் ஞாயிற்றுக்கிழமை நீராட்டம் பிராயச்சித்தமாக ஆகிறது. விசேஷமாக கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் முனி தீர்த்தத்தில் நீராடுபவன் எவ்வித பாதகங்கள் செய்திருந்தாலும் பரிசுத்தனாகிறான். மறுநாள் திங்கள் கிழமை எவன் நீராடுகின்றானோ அவன் மனைவி மக்கள் நண்பன் முதலியவர்களோடு வேண்டுகோள் பெற்று இவ்வுலகில் எல்லா போகங்களும் அனுபவித்து முடிவில் கைலாயம் அடைவான். ஐந்து மகா பாதகிகளும் ஞாயிற்றுக்கிழமையில் நீராடுவாராயின் ஒரு க்ஷணத்திற்குள் தூய்மை அடைவர். கலியுகத்தில் இது தவிர வேறு பிராயச்சித்தம் கிடையாது. இந்த விஷயத்தில் முன்பு நடந்த ஒரு சரிதம் உனக்குச் சொல்லுகிறேன். முன்பு கோதாவரிக்கரையில் ஐந்தக்னிபுரமென்ற ஒரு பெரிய பட்டணம் ஒன்றிருந்தது. அதன்கண் நான்கு வருணத்தவரும் கூடியிருந்தனர். சிறந்த செல்வம் தான்யம் முதலியன நிறைந்துள்ள அதன்கண் பஞ்சமென்பதே கிடையாது. பாரிபத்ரனென்ற பெயருடைய சிறந்த அந்தணன் ஒருவன் இருந்தான். வேதாத்யயனமும் நல்லொழுக்கமும் வாய்ந்தவனாயிருந்தான். அவனுக்கு மனைவி ஒருத்தி இருந்தாள். அவளுக்குச் சாருமதி என்று பெயர். அவள் கற்புடையவளாயும் எல்லாவயவங்கள் அழகினவளாயும் தருமமறிந்தவளாயும் உண்மை பேசுபவளாயும் இருந்தாள். அவனுக்கு அவளிடம் ஒரு புதல்வன் பிறந்தான். அவன் அப்புதல்வனுக்கு விஸ்வபததிரன் என்று பெயரிட்டழைத்து வந்தான். பாரிபத்ரன் தனக்கு வெகுகாலம் கழித்துப் பிறந்தவனாதலின் அவனைக் குற்றம் கடியாமலே வந்தான். சிக்ஷிக்கப்படாத பிள்ளைகள் கெடுகின்றார்கள் என்ற உலகின் வழக்கின்படி இவன் வேத

மோதாதவனும் விடனும் ஆகித் தாய்தந்தைகளை உபத்திரவம் செய்தான். அவன் கருமங்களல்லாம்விட்டுவிட்டு வேசியிடத்தில் பற்றுடையவனன். அச்சமயத்தில் வேசிப்பற்றுடைய துஷ்டனை மகனைத் தந்தையானவர் வாக்காலும் அடித்தலாலும் கண்டித்தார். பிறகு மூடனை அந்த விஸ்வபத்திரன் மிகுந்த கோபமூண்டவனுகி முரட்டுத்தன்மையால் இரவில் தூங்கிக் கொண்டிருக்கும் தந்தையைக் கொன்றுவிட்டான். உடனே பிரம்மஹத்தியானது அந்த இழிந்த அந்தணனைப் பற்றியது. மிகுந்த மூடனை அவன் தந்தையைக் கொன்ற பாவத்தால் பிடிக்கப்பட்டவனுகி ஒரு தேயத்திலிருந்து மற்றொரு தேயத்திற்கும் ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டிற்கும் சஞ்சரித்து ஓரிடத்திலும் நிலைகொள்ளாமலும் தூக்கம் கொள்ளாமலும் சுகத்தை விரும்பாமலும் மண்டலங்களெல்லாம் சுற்றி முன்னைய நல்வினையால் வசிஷ்டரது குடிலை அடைந்தான். அவன் மிகுந்த அருளுடைய வசிட்டரால் நோக்கப்பட்டவனுகி நீ யார்? என வினவப்பட்டான். அவ்வசிட்டரது அருள் நோக்கம் பாய்ந்தவுடன் நற்புத்தியும் நல்லறிவும் அவனுக்குண்டாயிற்று. அவ்விழிந்த அந்தணனை விஸ்வபத்திரன் தனது பிறப்பை நிந்தித்துக் கொண்டு தயையுடைய சிறந்த முனிவருடன் தனது வரலாற்றைக் கூறினன். விசுவபத்திரன் :— 'எரிகின்ற நெருப்பை நீரால் அவிப்பது போலத் தமது அறிவால் சினத்தை அடக்குகின்ற மகாத்துமாக்கள் சிறந்த புருடர்களாவார். கோபமூண்ட எவன்தான் பாபம் செய்யான்? கோபித்தவன் குருவையுங் கொல்வான். கொடிய சொற்களால் நல்லோரையும் இழித்துப் பேசுவான். இன்னவிடத்து இச்சொல் கூறுவது என்றுணரான். கோபித்தவனுக்குச் செய்யத் தகாத காரியமும் சொல்லத்தகாத சொற்களும் இல்லை. எவன் தன்னிடத்துத் தோன்றிய கோபத்தைப் பாம்பு சட்டையை உரிப்பதுபோல் நீக்குகிறனே அவன்தான் தன்னியனும் மக்கள் தலைவனுமாவான். தீயனும் கெட்ட புத்தியுடையவனும் வெட்கமற்றவனும் பாபம் செய்தவனுமான நான் மிக்க இழிந்தவன்' என்று தன்னை இழித்துக் கூறிக்கொண்டு மீண்டும் விசேடமாகத் தெளிந்த அறிவுடையவனுகித் தனது வரலாற்றை எல்லாம் அந்த வசிட்ட முனிவரிடம் கூறினன். 'தந்தையைக்கொன்ற பெரிய பாவத்தால் யான் மிகவும் துன்புறுகின்றேன். அறிவின்மையால் நான் எப்பொழுது தந்தையைக் கொன்றேனே அது முதற்கொண்டு அறிவற்றவனும் ஒரு கணமும் இப்புவியில் சுகம் துய்க்காதவனுமானேன். தேவரீரது தரிசனத்தால் மிகவின்பம் பெற்றேன். தேவரீரது தரிசனமானது புண்ணியமற்ற

வர்களுக்குக் கிடைக்காது. ஆதலால் நான் முற்பிறவியில் செய்த புண்ணியம் சிறிது இருக்கிறதுபோல் தோற்றுகிறது. இல்லாவிடில் உமது தரிசனம் எங்ஙனம் கிடைக்கும்? ஆகையால் அருட்கடலான முனிவரே! உமது அடியனை என்னை எண்ணி எங்ஙனம் பிரம்மஹத்தியினின்று நீங்குவேனோ அங்ஙனம் காப்பீராக. பெரியோர்களது தரிசனமானது சிறிதளவும் வீணாகாதன்றோ! அருளுடைய சாதுக்களுக்குத் துன்புற்றோரைக் காத்தல் இயற்கையன்றோ. அருட்கடலான ஏ! முனிவரே! உம்மையே சரணமடைந்த என்னைக்காப்பாற்றுவீர்' என்று பாபியான விஸ்வபத்திரனால் அக்கணத்தில் சொல்லப்பட்ட அருந்ததி கணவரான சிறந்த வசிட்டர் யோசித்தார்.

வசிட்டர்:—'ஏ! விஸ்வபத்ரனே! பிரம்மஹத்தியினின்றும் நீங்கும் வழி சொல்லுகிறேன்; கேள். இது மிகவும் ரகஸ்யமானது. இதனைத் தெய்வபக்தியில்லாதவர்க்கு வெளிப்படுத்தக்கூடாது. முன்பு கிருதயுகம் முதலியவைகளால் இந்த விஷயத்தைப்பற்றி வினவப்பட்ட பார்வதீபதியான பரமசிவன் கூறியருளினான். அதனையே இப்பொழுது கூறுகின்றேன். கவனமாக கேட்பாயாக.

முன்பு பல்வகைத் தாதுக்கள் நிறைந்ததும் அனேக ரத்தினங்கள் மணிகள் இவைகளால் நிறைப் பெற்றதுமான அனேக வீதிகள் மண்டபங்கள் இவைகளோடு கூடிய கைலாயத்தில் தேவியோடு அமர்ந்திருப்பவரும் முப்புரமழித்தவரும் அரி அயன் முதலிய தேவராலும் சிறந்த இருடிகளாலும் வணங்கப்பட்டவரும் தேவமங்கையர் கந்தருவரால் சூழப்பட்டவரும் வெற்றியைக் கூறுகின்ற ப்ருங்கி முதலிய கணாதிபதிகளால் வணங்கப்பட்டவரும் எவ்வணிகளுடனும் கூடியவரும் எத்தகைய வேண்டுகோளுக்குட்பட்டவரும் எப்பொழுதும் அம்பிகையோடு கூடியவரும் பிறையணிந்தவருமாகிய பரமசிவனை க்ருதயுகாதிகள் வணங்கிக்கூறின. 'உலகுக்குத் தலைவனும் வேண்டுகோள் எல்லாம் அளிப்பவனும் ஆகிய தலைவனே! உமது தரிசனத்தால் பயன் பெற்றவரானோம். எங்களைக் கருணையுடன் பாதுகாக்க வேண்டும். கிருதயுகம் முதலிய யுகங்களாகிய நாங்கள் உம்மைச் சரணடைந்தோம். ஏ! தலைவா! முன்பு நான்கு யுகங்கட்கும் எங்ஙனம் காலம் நிர்ணயிக்கப்பட்டதோ அங்ஙனமே யாம் அனுபவித்து வருகிறோம். அதில் க்ருத திரேதா த்வாபர யுகங்களில் பிராணிகள் கருமத்தில் பற்றுடையவராக இருந்தார்கள். உன்னாலும் அயனாலும் படைக்கப்பட்ட பூமியில் இவ்வுலகம் தாங்கப்பட்டது. இப்பொழுது எல்லா மக்களும் பாவங்களைச் செய்கின்

றனர். பிரம்மஹத்தி செய்பவரும் கட்குடியரும் பொருள் திருடு பவரும் குருமனைவிழைபவரும் அவருடன் சேர்ந்தவருமாக இருக் கின்றனர். மற்றும் உபபாதகம் எவ்வளவிருக்கின்றனவோ அத்த னையும் செய்கின்றனர். ஏ! விபுவே! அப்பாபிகளது பாரத்தால் பூமியானவள் மிக வருந்துகிறுள். ஆகையால் பூமி உம்மால் ஏற் படுத்தப்பட்ட கலிகாலத்தைத் தரிக்க ஆற்றுள். தருமமானது கலி யுகத்தில் பேச்சளவில் மாத்திரம் இருப்பதாலும் மக்கட்கு ஆயுள் மிகக் குறைவாக இருத்தலினுலும் கழுவாய் செய்ய முடியாமை யாலும் மக்கட்கு உபகாரத்தின் பொருட்டும் கலி, பூமி இவர்கட்கு உபகாரத்தின் பொருட்டும் பிரம்மஹத்தியாதி பாபங்கட்குக் கழுவாய் எத்தகைய சிறு உபாயத்தால் உண்டாகும். உலக வடிவினராகிய சங் கரனே! அங்ஙனம் ஓருபாயம் கூறியருள்க' என்று வேண்டப்பட்ட ஈசன் பிராணிகட்கு மகிழ்ச்சியுண்டாக்கவும் யுகங்கட்கு மகிழ்ச்சி உண்டாக்கவும் சொன்னுர்.

அவர் சொன்னதாவது:— 'உலகிற்கு உபகாரமாக சிறிய, பெரிய பாவங்கட்கும் நீராடுவதாலேயே பிராயச்சித்தமாகும்படி நான் இங்கு சொல்லுகிறேன். நீங்கள் எல்லாரும் கேளுங்கள். காவே ரிக் கரையின் இருயோஜனை தூரத்தில் திருவிழிமழலைக்குத் தெற் கே மூன்றுநாழி வழி தூரத்தில் திருவாஞ்சியமென்று இம்மை மறுமை அளிப்பதான பெரியதொரு தலமிருக்கின்றது. கலியுகத் தில் முனிவர் பெயர் புனைந்த புண்ணியதீர்த்தமொன்றிருக்கிறது. அதன்கண் எவன் நீராடுகின்றுனே அவன் எவ்வித பாபங்களினின் றும் விடுபடுகிறுன்; இதில் ஐயமில்லை. உலகத்தைத் தூய்மைப்படுத் தக்கூடிய ஆதிவடிவமான எனது யாதொரு சக்தியனுப்பப்பட்டதோ அது அந்தத்தலத்தில் இருக்கிறது. அதன் காரணத்தைப் பின்பு கூறுகிறேன். இப்பொழுது பிரம்மஹத்திசெய்தவர்கள் முதல் கார்த் திகை ஞாயிற்றுக்கிழமையில் நீராடினமாத்திரத்தாலே தூய்மை அடைகிறுர். எனது லிங்கதரிசனம் செய்தவுடன் எவ்வித எண்ண மும்பெற்று, இவ்வுலகில் எவ்விதபோகங்களும் துய்த்துக் கடைசியில் கைலாயமடைவான். திங்கட்கிழமை விசேஷமாக நீராடி எனது லிங்கபூஜையை சிரத்தையுடனும் பக்தியுடனும் எவன் செய்கிறுனே அவன் எனது ஸாலோக்யமடைகிறுன். உயிர்பிரியுங்காலத்து எனது உலகின்கண்ணிருந்து முக்தனுவது திண்ணம். இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை எவன் நீராடுகிறுனே அவன் கட்குடித்தலான பாபத்தினின்றும் விடுபடுகிறுன், இதில் ஐயமின்று. இரண்டாவது திங்கட்கிழமையில் எவன் என்னை வழிபடுகின்றுனே அவன் எனது

சாரூப்யத்தை அடைகின்றான். அதன்கண் ஐயமின்று. மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையில் நீராடியவன் பொன் அபகரித்தலாகிய பாபத்தினின்றும் விடுபடுகின்றான்; இதன்கண் ஐயமின்று. மூன்றாவது திங்கட்கிழமையில் நீராடிப் பூஜை எவன் செய்கின்றானோ அவன் எனது சாமீப்யத்தை அடைகிறான். இதன்கண்ணும் ஐயமின்று. நான்காவது ஞாயிற்றுக்கிழமையில் எவன் நீராடுகிறானோ அவன் குருமனைவியைக் கற்பழித்த பாபத்தினின்றும் விடுபடுவது திண்ணம். நான்காவது ஸோமவாரத்தில் இப்பொய்கைக்கண் நீராடி என்னைப் பூஜிப்பவன் எனது சாயுஜ்யத்தை அடைகிறான். இது உண்மையென்றே சொல்லுகிறேன். ஐந்தாவது கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் எவன் நீராடுகின்றானோ அவன் சம்சர்க்க பாதகத்திலிருந்து விடுபடுவதுடன் உயர்ந்த கதி அடைகிறான். ஐந்தாவது ஸோமவாரத்தில் எவன் நீராடுகிறானோ அவன் எனதருளால் நான்கு வித புருஷார்த்தங்களும் அடைகிறான். எனது ஆயுதத்தால் நிர்மாணம் செய்யப்பட்ட திருவாஞ்சியத்தில் மூவராலும் புகழ்பெற்றதும் அனேக காரணங்கள் அமைந்ததும் அனேக கதை நிகழ்ச்சிக்கு உரியதுமான புண்ணியபுட்கரணி என்ற தீர்த்தத்தில் மக்கள் பாவம் நீங்கவேண்டி நீராடியவர்களாகி இந்த ஞாயிற்றுக்கிழமைகளில் காலையிலும் இதன்கண் நீராடி எனது லிங்கத்தையும் எனது சக்தியையும் தரிசித்து ஆற்றலளவு தானம்செய்து எனது சன்னிதியில் மகிழ்ச்சியுடன் அந்தணர்க்குத் தக்ஷிணையுடனும் அன்னமிட்டு எனது பிரீதியின் பொருட்டுச் சிரத்தையுடன் எனக்குக் காணிக்கைகளைக் கொண்டு நடனம் செய்விக்கின்றாரோ அவர்களுக்கு மகிழ்ச்சி விளைவிக்கிறேன். இதைத்தான் மெய்யாகச்சொன்னேன். இதையறிந்து மனிதர்கள் ஈண்டு நீராடியமாத்திரத்தில் பாபத்தினின்றும் விடுபட்டவர்களாகட்டும்' என்று சிவபிரான் முயற்சியில்லாமல் பிராயச்சித்தத்தைக் கலி பூமிதேவிகளுக்குச் சுகத்தின் பொருட்டும், யுகங்களுக்குப் பிரீதியின்பொருட்டும் கூறியருளினார். ஆண்டு அய்யுகங்கள் பார்த்திருக்கையில் சிவபிரான் மறைந்தருளினார். அய்யுகங்கள் மகிழ்ந்து தமதிருப்பிடம் சென்றன. அதுமுதல் பாபிகளான எல்லாமக்களும் அந்த முனிதீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் நீராடி அந்தணர் கொலை முதலிய பாபங்களினின்றும் எப்பொழுதும் விடுபடுகிறார்கள். ஏ! விமலபத்ரனே! நீயும் அத்தலம் சென்று அந்தணன்கொலை நீங்குவதற்காகக் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் நீராடித் தூயவனாகி மீண்டும் ஐந்துமுறைப்புடன் நீராடி அந்தணர் கொலையினின்று விடுபடுவாய்' என்று வசிட்டர் கூறி

விட்டுத் தம் குடில் சென்றார். உடனே விஸ்வபத்ரன் பாபம் நீங்க வேண்டித் திருவாஞ்சியத் தலத்திற்குப் புறப்பட்டுக் கார்த்திகை ஞாயிற்றுக் கிழமையில் அங்குவந்து நீராடி அந்தணர் கொலைபாவத்தினின்றும் விடுபட்டான். அந்தணனைக் கொன்றவன் தந்தை தாயைக் கொன்றவன், தாயைவிழைந்தவன், குருமனைவி கற்பழித்தவன், தங்கம் திருடியவன், கட்குடித்தவன், இவர்களுடன் சேர்ந்தவனுமாகிய யாவரும் கார்த்திகை ஞாயிற்றுக் கிழமையில் ஈண்டுவந்து நீராடுவாராயின் அப்பழி பாவங்களினின்றும் விடுபடுவார்.

சாம்பர்:— 'இந்த பிரம்மஹத்தியின் நீங்குதலாகிய சரிதத்தை எவன் படிக்கிறானோ எவன் கேட்கிறானோ அவன் இந்த பாபங்களினின்றும் விடுபடுகிறான். இது அந்தணர் கொலைபாவம் கடிவது. இம்மை மறுமை இன்பமளிப்பது என்று எவன் இதை பக்தியோடு கேட்கிறானோ அவன் இம்மை மறுமைப் பயனடைகிறான்.

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சியத்தலமகிமையில் சாம்ப சுயஞ்ஞ சம்வாதத்தில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை மகிமையில் விஸ்வபத்ரன் அந்தணன் கொலை பாவத்தினின்று நீங்குவதாகிய 7-வது அத்யாயம் முற்றிற்று.]

## இருபத்திரண்டாவது அத்யாயம்.

சுயஞ்ஞர்:— சாம்பனைப் பார்த்துக் கூறுகிறார். 'தேவரீர் அந்தணர் கொலையினின்று நீங்குதலாகிய ஆச்சர்யமான விஸ்வபத்ரன் சரித்திரத்தைக் கூறியருளினீர். அதனைக் கேட்டேன். இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையில் நீராடுவதால் கட்குடித்தலாகிய பாபத்தினின்றும் மக்கள் விடுபடுகிறாரென்று கூறியருளினீர். அங்ஙனம் திருவாஞ்சியத்தில் முனிதீர்த்தத்தில் எவன் நீராடி அந்தப் பாபத்தினின்றும் விடுபட்டிருக்கிறான் என்று கேட்க விருப்பமாயிருக்கிறது. ஆதலால் இப்பொழுது அதனை நன்றாகக் கூறுவீராக' என்று வேண்டினார்.

சாம்பர்:—' சிறந்த அறிஞரே! இப்பொழுது இங்கு இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை மகிமையைச் சொல்லுகிறேன். இது கேட்போர் யாவருக்கும் வேண்டுவதெல்லாம் அளித்து, ஆயுள் உடற்பலம் இவற்றைத் தரும். மரணத்தைப் போக்கும். முன்பு

கங்கையின் அழகிய கரையில் மிருத்புஞ்சயம் என்ற பெயருடைய ஊர் ஒன்றிருந்தது. அதன்கண் நான்கு வருணத்தினரும் குழுமி இருந்தனர். அதில் சிறந்த அந்தணனொருவன் சிறந்த முனிவனை யும் சூரியனையொத்த ஒளியுடையவனும் புலனடக்கமுடையவனு யும் வேதம், ஸ்மிருதி, புராணங்கள் அறிந்தவனும் அத்யபனத்தி லேயே பற்றுடையவனும் இருந்தான். அவனுக்கு பாஷ்களன் என்று பெயர் வழங்கி வந்தது. அவனுக்கு எவ்வுறுப்பினும் மிக்க அழகு வாய்ந்தவளும் கற்புடையவளுமான மனைவி இருந்தாள். அவ ளுக்கு பேர்கநாதா என்று பெயர். அவளுக்கு அவனிடத்தில் அங்கினையொத்த ஐந்து மக்கள் தோன்றினர். அவர்களுக்கு முறையே துபுமணி, மணி, சின்மணி, மாயாநாசமணி, தரணி என்று பெயர் வாய்ந்திருந்தன. அவர்களுக்குள் தலைவனும் சிறந்தயுக்தி உடையவனுமாகிய துபுமணி என்பவன் வெய்யோன் ஒத்த ஒளியை உடையவனாகி பிக்ஷை எடுத்துண்டு குருகுலத்தில் வசித்துவந்தான். அவனது குரு அவனிடம் மகிழ்ந்து வேதாந்தங்களெல்லாம் கற்றுவித் தார். அவன் வேதங்கள், வேதாங்கங்கள், மீமாம்ஸம், முதலாகிய சாஸ்திரங்கள் பதினெட்டுப் புராணங்கள் இதிஹாஸங்கள் எல்லாம் கற்றும் தாய், தந்தை, குரு இவர்களைப் பின்பற்றி நடந்தும் முக் காலவறிவுடனும் ஒரே மனமுடனும் சிவபூஜைசெய்து சிவபிரான் அருளைவிரும்பிப் பெரியோர்களது ஒழுக்கத்தில் வழுவாமற் காலத் தைக் கழித்துவந்தான். இங்ஙனமிருக்கையில் அறிஞனான துபு மணிக்கு ஒரு காலத்தில் தீர்த்த யாத்திரை செய்யவேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. தந்தையாரால் விடப்பட்டவனாகித் தனது வீட்டினின்றும் புறப்பட்டு ஒரு தீர்த்தத்திலிருந்து மற்றொரு தீர்த் தத்திற்குச் சென்று பூமியெல்லாம் சுற்றினன். அக்காலத்தில் தெய்வச்செயலாய் துபுமணியின் சரீரத்தில் ஒரு சுரநோய் வந்தது. அப்பொழுது அங்கு அயனால் படைக்கப்பட்ட பிரம்மபுரம் (சீர்காழி) என்ற சிறந்த தலத்தைப் பார்த்தான். அங்கு நல்லிருளில் சுரத்தால் வேதனையும், இந்தச் சிறந்த அந்தணனாகிய துபுமணி, நீர்வேட்கை யுமுற்று ஒரு தாஸியின் வீட்டிற்குச் சென்று 'நீர் கொடும்' என்று மிகவும் வேண்டினன். அங்ஙனம் வேண்டப்பட்ட அக்கன்னிகை தமது வேலைக்காரியை அழைத்து அவனுக்கு நீரளிக்கச் சொன்னாள். அந்த வேலைக்காரி நீர் என மயங்கிக் கள்ளைக் கொணர்ந்து கொடுத் தாள். நோயில் துன்புறும் இவன் கள்ளென்றுணராது குடித்தான். இங்ஙனம் கட்குடித்ததால் சுரம் சிறிது நேரத்திற்குள் நீங்கிவிட்டது. சிறிது நேரத்தில் நோய் நீங்கிய இவன் நாற்றத்தால் தான் பருகியது

கள் என்றுணர்ந்து தான் தெரியாமல் நள்ளிரவில் கள் குடித்தேன். நான் கெட்டேன். எனது பிறவியும் கெட்டுவிட்டது. எது செய்தால் தூயவனுவேனோ அது செய்யவேண்டியதென்று மனதால் நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டு தூங்காமல் இரவைக் கழித்துவிட்டுக் காலையில் சினத்துடன் சுவாலித்தவனுகி வேசியைக் கூப்பிட்டுக் கோபித்தான். அந்த வேசியும் தனது சேடியை அழைத்து மிக வெறுப்புடன் கோபித்தாள். இங்ஙனம் அடிபட்ட அச்சேடியானவள் தான் தூக்க மயக்கத்தால் அறியாது அக்கள்ளைக் கொடுத்ததாகச் சொல்லிக்கொண்டு அவனது அடிகளில் பணிந்தாள். உடனே அவன் அச்சேடியின் வார்த்தையைக்கேட்டுத் தெய்வம் மிக்க வன்மையுடையது என்று நினைத்து தன்னை அடிக்கடி நினைத்து கொதி கள்ளைக்குடித்துத் தனதுயிரை நீக்கவெண்ணினுன். அந்தச் சிறந்த அந்தணன் அங்ஙனமெண்ணி நீராடித் தீ வளர்த்துக் கள்ளைக் காய்ச்சினுன். அதைப்பார்த்துப் பயந்து மிகுந்த கஷ்டத்துடன் அழுதான். 'ஏ! தெய்வமே! இத்தீயில் காய்ச்சிய கள்ளைக் குடிக்கவேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறுய்' என்று இத் துயுமணியானவன் அநேக விதமாக அழுது பயத்தால் மனம் நொந்தவனுகி இதற்குமேல் தான் என்ன செய்யவேண்டியதென்பதாகச் சிந்தித்தான். அப்பொழுது தனது தந்தை கூறிய ஒரு மொழி நினைவிற்குவந்தது. அது யாதென்றுல் தனக்கு ஏதாவது மிக்கத் துன்பம் வருகின்றபொழுது பகவானுகிய சிவபிரானை நினைக்க வேண்டுமென்பது. இதனை நமது சிறந்த மகாத்மாவாகிய தந்தை நமக்குச் சொல்லியிருக்கிறுர் என்று நினைத்து, அழிவற்றவனுகியும் அம்பிகாபதியான மகாதேவனை நினைத்து அவரைப்பலவித துதிகளால் மகிழ்விப்போம். அங்ஙனம் அவர் மகிழ்ந்தால் அவருடைய அருளால் காய்ச்சிய நெருப்புக்கொத்த கள்ளைக்குடிப்பேன். அக்கள் அப்பொழுது அமிர்தத்திற்கு ஒப்பாகும் என்று மனதால் நினைத்து அவரைத்துதிக்க ஆரம்பித்தான்.

துயுமணியின் துதி:—'உலகுக்குத் தலைவரும் உலகைத் தரிப்பவரும், கருணைக் கடலும், தொண்டரன்பனும் மூவுலகுக்கும் தலைவனும் பார்வதி கணவனும் விஸ்வேஸ்வரரும் மாறுபாடான கண்ணுடையவரும் சம்புவும் அயனுல் வழிபடப்பட்டவரும் விஷ்ணுவுக்குத்தலைவரும் பாவங்கடிபவரும் தொண்டருக்கருள்பவரும் பயத்தை நீக்குபவரும் தொண்டர் துயர்களைபவரும் பிறவித் துன்பமறுப்பவரும் உண்மையானவரும் நித்தியரும் சதாசிவரும் சிவபிரானுமான

உமக்குப் பல வந்தனம்' என்று துயுமணியானவன் பார்வதி கணவ னை மகாதேவரைத் துதித்துக் குடிக்க ஆரம்பித்ததற்குள் பரமசிவன் தோன்றினர். ஆண்டு அவன் துதிபெற்றவரான மகாதேவனைப் பார்த்து அவருடைய செந்தாமரைப் பாதங்களில் விழுந்து வணங் கினன். கருணைக்கடலும் முக்கண்ணனுமான மகாதேவர் அங்ஙனம் வணங்கும் துயுமணியைப்பார்த்துக் கம்பீரமான மொழியைக் கொண்டு கூறினர்: 'ஏ! துயுமணியே! பயப்படாதே. அதிகச் சிரமம் இல்லாமல் பிராயச்சித்தம் கூறுகிறேன். நீ கட்குடித்த பாவத் தினின்றும் நீங்குவதற்கு நான் சொன்னதைச் செய்தால் விடுபடு வாய் என்றனர். பூமிக்கு அக்னி மூலையின் காவேரியின் தென் கரையில் கும்பகோணத்திற்கு அக்னிதிக்கில் ஒன்றரை யோஜனை தூரத்தில் திருவாஞ்சியமென்றொரு சிறந்த தலம் இருக்கின்றது. அது இம்மை மறுமைப் பயனளிப்பது. அத்தலம் சென்று இரண் டாவது கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் நீராடு. இதுதான் உனது பாபத்திற்குக் கழுவாய். அங்கே எனது ஆயுதத்தால் உண்டுபண்ணப்பட்ட சிறந்த தீர்த்தம் ஒன்றிருக்கிறது. அதற்குப் பல காரணங்கொண்டு பல பெயர்கள் உண்டு. இப்பொழுது கலி யுகத்தில் தேவதைகள் ஒரு காரணங்கொண்டு முனி தீர்த்தமென்று சொல்லுகிறார்கள். கலிதோஷத்தை நீக்கக்கூடிய அத்தீர்த்தத்தில் நீராடி எனது லிங்கதரிசனம் பண்ணி விரைவில் கட்குடித்த பாவத் தினின்றும் நீங்கித் தூய்மையடைவாய்' என்று பார்வதி கணவனை பரமசிவன் அவனுக்குச் சொல்லி மறைந்தருளினர்.

சாம்பர்:—'இங்ஙனம் பரமசிவனால் அருளிச் செய்யப்பட்ட துயுமணி என்ற சிறந்த அந்தணன் செல்வமிழந்தவன் செல்வம் பெற்றவனைப்போல் மகிழ்ந்து அப்பொழுதே புறப்பட்டுப் பூகைலாய மென்னும் அத்தலத்தை அடைந்து, நீராடிப் பரமசிவனைத் தரி சித்துக் கட்குடிப் பாவத்தினின்றும் மற்றப் பாவத்தினின்றும் விடு பட்டுத் தனது இருப்பிடமடைந்தான். அறிவு மயங்கிக் கட்குடித் தவர் இத்தலம் சென்று அப்பொய்கையில் நீராடிப் பொன் முதலியன கொடுத்துத் தங்களது பொன் நாணயங்களைத் தக்ஷிணையாகக் கொடுத்து அந்தணரை உண்பித்தும் தனது பாவம் நீங்கவேண்டிப் பக்தியுடனும் பச்சாத்தாபத்துடனும் வழிபட வேண்டும். அங் ஙனம் வழிபடுபவனுக்கு சிவபிரானது மொழியால் தூய்மை உண் டாவது திண்ணம். அறிஞர் அறியக்கூடிய இப்பொருளில் எவன் ஐயமுறுகிறானோ அவனது பிறவித்தோற்றத்தில் பலவகைக் கலப்பும்

அடையும் என்று அறிஞர் அறியவேண்டும். எவன் புராணத்தை பிரமாணமாகக் கொள்ளவில்லையோ அவனது தோற்றத்திலும் சாங்கர்யத்தைக் கூறுக. இப்பொருள்களை எந்த மூடன் நம்பவில்லையோ அவனையும் அம்மாதிரி எண்ணவேண்டும். ஆஸ்திகராலேயே இது எப்பொழுதும் கேட்கத்தக்கது. வேறில்லை. தெய்வமில்லையென்பவன், செய்நன்றி கொன்றவன், மிகுந்த துஷ்டன், சார்வாகன், பாஷாண்டி, இவர்களுக்கு இதைச் சொல்லக்கூடாது. சிரத்தையுடையவனும், சாதுவும், அருளுடையவனும், பொறாமையற்றவனும் தர்மத்தை விரும்புபவனும் ஆகிய இவர்களுக்குத்தான் கூறவேண்டும். இந்த சிறந்த சரிதத்தை எவர் கேட்கிறார்களோ எவர் படிக்கிறார்களோ அவர் கட்குடி குற்றத்தினின்றும் நீங்குவர். இதன்கண் ஆராய வேண்டாம்.

[ சாம்பேரப புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் சாம்ப
சுயஞ்ஞ சம்வாதத்தில் 2-வது கிருத்திகா ஞாயிற்றுக்
கிழமையின் பெருமையில் துயுமணி கட்குடித்த
பாவம் நீங்குதல் என்ற 8-வது அத்யாயம்
முற்றிற்று. ]

---

## இருபத்துமூன்றாவது அத்யாயம்.

சுயஞ்ஞர்:— முன்பு தேவரீர் இதற்குக் குப்தகங்கை என்று பெயர்வாய்ந்ததென்றும் மனிதர் இதன்கண் நீராடவேண்டும். தானம் செய்யவேண்டுமென்றும் கூறியருளினீர். அம்முனி தீர்த்தத்திற்கு அப்பெயர் வந்த காரணத்தினை ஐயமற யானறியும்படி கூறவேண்டும்.'

சாம்பர்:—' அங்ஙனமே உனக்கு அறிவிக்கிறேன். ஒருமைப்பட்ட மனதுடன் கேட்பாயாக. மூவுலகும் புகழப்பட்ட முனிதீர்த்தத்திற்கே குப்தகங்கை எனப் பெயர். அதற்குப் பெயர் வந்ததின் காரணம் பிறருக்கு வெளிப்படுத்தக் கூடாதாயினும் நீர் நற்புத்தியுடைய சீடனாயிருத்தலின் உமக்குக் கூறுகிறேன். வணக்கமுடைய சீடனுக்குக் குருவும் தனது தருமத்தில் ஒழுகியவரும் மகனுக்குப் பிதாவும் சொல்லத் தகாதது ஒன்றுமில்லை. முன்பு துவாபரயுக முடிவில் கங்கையானவள் சிறந்த மலையான கைலாயம் அடைந்து ஆங்கு சிறந்த ஆஸனத்தில் அமர்ந்திருக்கும் தேவி சமேதனை ஈசனைப் பார்த்து வணங்கித் தனது மனதிலுள்ளதைப் பலவகையாக வேண்டினள். அன்பர் கருத்து நிறைப்பவனாகிய தலைவ! எனது

எண்ணம் நிறைவேற்றிக் காவல்புக்க என்னைக் காக்க வேண்டு கிறேன். மூன்று யுகங்களிலும் மக்கள் முறைப்படி இருந்தனர். இக்கலியில் நான்கு வருணத்தவரும் பாபம் செய்கின்றனர். அன்றியும் மக்கள் வருண நிலைகளிற்றவறியவராயும் பிறன்மனைவிழைபவராயும் பிறன் பொருள் கவர்பவராயும் பிறவுயிர்க்குத் துன்பம் விளைப்பவராயும் பரான்னமுண்பவராயும் பிறருக்கு உபகாரம் செய்யாதவராயும் உரியகாலத்து நீராடல், சந்தியைச் செய்தல் முதலியன நீங்கியவராயும் ஜபம் செய்யாதவராயும் தெய்வ பூஜையற்றவராயும் ஔபாஸனம் செய்யாதவராயும் வேதமோதுதலில் பற்றற்றவராயும் இருக்கின்றனர். மேலும் இக்கலியில் எல்லோரும் தந்தை தாய் குரு இவர்களுக்குத் தீமை எண்ணுபவராகவே இருக்கின்றனர். சிலர் கன்னிகை விற்பதும் சிலர் ரசம் விற்பதும் மற்றுஞ்சிலர் வேதம் விற்பதுமே மேற்கொண்டிருக்கின்றனர். மேலும் அந்தணர் சூத்திர அன்னமுண்பவராயும் சூத்திரர்க்குத் தொண்டு புரிபவராயும் அவருக்கே ஏவற் தொழில் பூண்டவராயும் வேத ஒழுக்கத்தில் நோக்கமற்றவராயும் தந்திரமான ஒழுக்கத்திற் பற்றுடையவராயும் திருநீறு உருத்திராக்கம் தரிப்பதிற் பற்றற்றவராயும் தானம் செய்யாதவராயும் புண்ணியமற்றவராயும் வேள்வியற்றவராயும் விருந்தோம்பாதவராயும் ஆகின்றனர். அந்தணர் சூத்திரர் பதிதர் இவர்களிடமிருந்து பொருள்கள் கைக்கொள்கின்றனர். அன்றியும் வீணை மகாதானங்கள்; ஏற்கின்றனர். இக்கலியில் மக்கள் தந்தை தாயர்களது சிராத்தம், தரிசசிராத்தம், மகாளய சிராத்தம், அட்டகா சிராத்தம் இவையெல்லாம் செய்வதில்லை. மேலும் மக்கள் தர்மசாஸ்திரம் புராணம் சொல்பவரைத் தூஷிப்பவராயும் கோள், பழிச்சொற்கள் கூறுபவராயும் பிறனுக்குத் தீமை செய்பவராயும் பிறன் பொருள் கவர முயற்சி செய்பவராயுமிருக்கின்றனர். அதிகமாகச் சொல்லின் பயன் யாது. தேவனே! மக்கள் கலியுகத்தில் பலபாவங்கள் செய்து பாபிகளாகிப் பாவங்களெல்லாம் என்னிடத்தில் விட்டு விட்டு நீராடிச் செல்லுகின்றார்கள். நான் அவர் விட்ட பாபந் தாங்கவாற்றாளாய் மிக வருந்துகின்றேன். ஆகையால் மகா பாபங்கள் நீங்கப் பெரியதும் நல்லதுமான தீர்த்தம் புவியிலிருக்குமாயின் கூறுவீராக' என்று வேண்டினள். அயனால் பூஜிக்கப்பட்டவரும் கங்காதரனுமாகிய ஹரன் இங்ஙனம் கங்கையால் வேண்டப்பட்டவராகிக் கம்பீரமான மொழிகளைக் கொண்டு கூறினர். 'கங்கையே! உன்னைவிட எனக்கு மிக்க அன்புடையார் வேறு யாருமின்று. உனக்கு பிரீதி உண்டாக இந்த மறைவான விஷயத்தைச்

சொல்லுகின்றேன். இப்பூவுலகில் புண்ணிய பூமியும் உலகமயமு மான நாவலந்தீவின்கண் காவேரியின் தென்கரையில் எனக்கு மிக்கப் பிரீதியானதும் தலங்களுக்குள் சிறந்ததுமான ஒரு தலமிருக்கிறது. அதற்குத் திருவாஞ்சியமென்றும் பூகைலாயமென்றும் பல பெயர் கொண்டதாகும். அத்தலத்தின் பெருமை என்னால் கூறவியலாது. சுருக்கமாகக் கூறின் காசியினும் நூறு மடங்கு சிறந்ததெனக் கூற லாம். இதுவும் உபலக்ஷணம் என்று நினைத்துக்கொள். கங்கையே! இதன் பெருமையினை யானறிந்தே அங்கு யானும் அம்பிகையுடனும் மக்களுடனும் அயன் அரி முதலியோருடனும் வசிக்கின்றேன். ஆதலால் அத்தலவாசிகட்குக் கிடைக்க அரியது ஒன்றுமில்லை. ஆண்டு உறைபவருக்கு முத்தி கையிலிருக்கின்றது. அத்தலத்தில் இறந்தவருக்குப் பைரவ வாதனையே கிடையாது. அங்கு அவருக்கு அதிகாரம் யான் கொடுக்கவில்லை. ஏனையபிடங்களில் பாவம் செய் தோரும் அத்தலம் புக்கவுடன் பாவம் நீங்கித் தூய்மை யடைகின் றனர். மக்கட்கு உயிர் ஐபமுறும் இறுதி காலத்து அவர் வலது காதில் தாரக மந்திரத்தை முத்திக்காக யானே வந்துபதேசிக்கின் றேன். அவருக்குப் பாவமிருப்பின் நீங்கித் தூய்மையடைவர். காசியில் பாவம் நீங்காததால் பைரவருக்கு அதிகாரம் உண்டு. மற்ற ஏனைய தலங்களிலும் பைரவருக்கு அதிகாரம் இருந்தும் இத் தலத்தில் மாத்திரம் அதிகாரம் இல்லையாதலால் சுகமாய் உட்கார்ந்து கொண்டு மயக்கமின்றி என்னை உபாசிக்கிறார். ஆதலின் இத்தலத் துக்கொத்ததொரு தலம் பூமியில் இருக்கின்றதா? யான்விட்டகலாக் கைலாயம் கமலாலயமிவற்றினும் மிக்க அன்புடைய தலம். ஆயின் திருவாஞ்சியத்தின்கண் திருவாஞ்சிய நாயகியுடன் வசிக்கின்றேன். இப்புவியில் இத்தலம் மக்கட்கு வேண்டும் பயனெல்லாம் அளிப் பதாகும் என்று கண்டறிந்து விஷ்ணு முதலியோர் என்னை வாஞ் சியநாதரென்று சொல்லுகின்றனர். உயிர்க்காதலியான கங்கையே! ஆங்கு எனக்கு இடது பாகத்தில் எனது சூலத்தால் உண்டுபண்ணப் பட்ட தீர்த்தத்தில் அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் ஆறாயிரம் கோடி தீர்த்தங்களும் வந்து சேர்ந்தன. அங்கு விரைவிற் சென்று நீராடி மக்களிடமிருந்து ஏற்ற பாவத்தினின்றும் நீங்கி ஒரு கணத் துள் தூய்மையையடைவாய். மேலும் எனது கட்டளையை மேற் கொண்டு அத்தீர்த்தத்திலேயே எப்பொழுதும் தீர்த்த வடிவமாய் வசித்து வருவாயாக. இக்கலியிற் பாபம் சுமக்கவாற்றாது பயந்து நீ அத்தீர்த்தத்தில் இருக்கிறபடியால் எப்பாபிகளும் உன்னை அங்கிருப் பவளாக அறியமாட்டார்கள். நூற்றிலொருவர் ஆயிரத்திலொருவர்

அறிவர். அழகிய கங்கையே! உனக்குக் காசியில் கேவலம் கங்கை யென்றும் அத்தலத்தில் குப்தகங்கை யென்றும் பெயர் கொடுத் தேன். யாண்டுறைபவராயினும் குப்தகங்கை என்ற பெயரறிந் திருப்பாராயின் உடனே பாபமற்றவராகட்டும். திருவாஞ்சியத்தில் குப்தகங்கையாகிய உன்னிடத்தில் நீராடுபவர் காசியினும் ஆயிரம் பங்கதிகமான பயனை எனது கட்டளையாற் பெறுவர். உன்னிடத் தில் நீராடித் தன்தாற்றலளவு தானம் செய்து எனது லிங்க தரிசன மும் செய்தவர் முத்தரேயாவர். இதன்கண் ஐயமின்று. எவர் இக்கலியில் குப்தகங்கையில் நீராடி அந்நீர்கொண்டு பிதுர்க்களுக்குத் தர்ப்பணம் செய்தும் அந்தணருக்கு அன்னமிட்டும் மகிழ்கின்ற னரோ அவர் காசியிலும் ஆயிரம் பங்கதிகமான பயன் பெறுவார். நீ அங்கு நித்தியமாக வசிக்கின்றபடியால் திருவாஞ்சியம் காசியை விட ஆயிரம் பங்கு அதிகமானதாகும். முன்பு இது காசியினும் நூறுமடங்கு புண்ணியமளிப்பதாய் இருந்தது. இப்பொழுது உனது சேர்க்கையால் ஆயிரம் பங்கு அதிகமாயிற்று. நீ இருப் பதனுல் இதன்கண் நீராடுதல் கழுவாயற்ற பெரிய பாபங்கட்கும் பிராயச்சித்தமாகும்' என்று பரமசிவன் சொல்லிவிட்டு அந்தப்புரம் புகுந்தார். பிறகு கங்கை தனது ஆயிரம் பகுதியில் ஒரு பகுதியைக் காசியில் விஸ்வநாதர் சன்னிதியில் வைத்துவிட்டு மிகுதியான தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பகுதியுடன் திருவாஞ் சியம் சென்று உலகினைத் தூய்மைப் படுத்தவும் பரமசிவனுக்குப் பிரீதியுண்டாக்கவும் முனி தீர்த்தத்திற்குள் புகுந்துவிட்டாள். சுயஞ்ஞ முனிவரே! அக்கங்கை தொளாயிரத்துத் தொண்ணூற் றொன்பது அம்சங்களுடன் அத்தீர்த்தத்தில் புகுந்தவுடன் மூவுல கினையும் தூய்மைப்படுத்துகின்றாள். தேவர் அக்கங்கையில் நீராட எண்ணி பூவுலகில் எப்பொழுது மனிதனாகி அக்குப்தகங்கையில் நீராடுவோம் என்று அடிக்கடி வேண்டுகின்றனர். இக்குப்த கங்கையின் இயற்கையைக் கூறினேன். மற்றும் ஏதாயினும் கேட்க விரும்பின் கேட்பாய்; சொல்லுகின்றேன். இச்சிறந்த சரிதம் படிப் போரும் கேட்போரும் ஆகிய இவர்கள் கரையற்ற பிறவிக்கடல் கடப்பார். இம்மறைப் பொருளை மறைத்து வைக்கவேண்டும். அதி லும் விசேஷமாக நாஸ்திகருக்கு மறைத்து வைக்கவேண்டும்.

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் சாம்ப சுயஞ்ஞ சம்வாதத்தில் குப்தகங்கையின் இயற்கையும் பெருமையும் வருணித்தல் என்ற 9.வது அத்யாயம் முற்றிற்று.]

# இருபத்துநான்காவது அத்யாயம்.

சுயஞ்ஞர்:—' யோகியான சாம்பரே! உம்மால் நன்கு அறிவிக்கப்பட்டேன். இப்பொழுதும் மகிழ்ந்தேன். ஏ! சிறந்த முனிவரே! இந்த முனிதீர்த்தமாகிய கங்கையில் நீராடி எவர் பொன் திருடும் பாபத்திலிருந்து நீங்குகிறார்களோ அவர்களைபபற்றி எனக்குக் கூற வேண்டுகின்றேன். இதுதான் இப்பொழுது உம்மைக் கேட்கின்றேன். பிரபுவே! திருடியவன் தலையைவிரித்துப் போட்டுக்கொண்டு உலக்கையைக் கையில எடுத்துக்கொண்டு அரசனிடம் சென்று தன் செயலை அவனிடம் சொல்லவேண்டுமென்றும் அவ்வரசன் அவ்வுலக்கையால் அவனைக் கொல்லவேண்டுமென்று அங்ஙனம் செய்தால்தான் அவன் களவு பாபத்தினின்றும் விடுபடுவான். இல்லாவிடில் கழுவாயின்று என்று தர்மசாஸ்திரத்தில விதிக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். இம்மாதிரி உயிர்முடிவு எல்லைக் கழுவாயின்றி வேறு நீராட்டத்தால் கழுவாய் இருக்குமாயின் தேவரீர் எல்லாமறிந்தவராதலின் அருளுடன் எனக்கு இப்பொழுது கூறியருள்க' என்று சுயஞ்ஞரால் வேண்டப் பட்டவரும் தர்மாத்மாவும் பிறவி அறுப்பவருமான சாபர் மகாதமாவான சுயஞ்ஞரைப் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார்.

சாம்பர்:—' இந்த விஷயத்தில் முன்னையது ஒரு சரிதம் சொல்லுகின்றேன். அது மிகவும் புண்ணியமானதும் கேட்போர் பாவம் கடிவதாயும் இருக்கும். வங்கதேசத்தில் மாகதம் என்ற கிராமத்தில் தெள்ளறிஞனை கலோளன் என்ற ஒரு சிறந்த அந்தணன் இருந்தான். அவன அங்கத்துடன் கூடிய நான்கு வேதங்களின் கரை கண்டவன். சிரௌதம், ஸ்மிருதி உணர்ந்தவன். சாத்திரங்களின் உண்மை அறிந்தவன். தர்மசாஸ்திரம, புராணம், ஆகமம் எல்லாமறிந்தவன். தனது நிலைக்கொத்த ஒழுக்கத்தின் கண் ஒழுகித் தனது தர்மத்திலே பற்றுடையவனும் வேதப் பயிற்சியில் பற்றுடையவனுமு அக்னிஹோத்ரம் செய்பவனும் இருந்தான். அவன் பஞ்சயக்ஞஹோமம் பெருவேள்வி செய்பவன. விருந்தோம்பலில் அன்புடையவன. பிரதிக்ரஹம கொள்ளாதவன். இங்ஙனமாக அவன் மனைவியுடன் இல்லறம் இனிது நடத்தி வருகையில் கலோளன் நண்பகல் நீராட்டம செய்ய ஆற்றுக்குச் செல்லுகையில் நடு வழியில் ஒருவனுடைய வீட்டின் சுவற்றில் மறைபெய்தலால் நிதியைக் கண்டு அதனை எடுத்துக்கொண்டு பரமசிவன் நமக்குப் பொருள்

தந்திருக்கின்றாரென்று செல்வமற்றவன் செல்வமடைந்தது போல் மிக மகிழ்ந்து ஆற்றுக்குச் சென்று நீராடி நண்பகலிற் செய்யவேண்டிய கடன்களை இயற்றி வீட்டிற்கு வந்து அன்னம், பொன், ஆடை, பசு, பூமி, எள், கன்னிகை முதலிய தானங்கள் செய்தும் இடைவிடாது அக்னி பூஜை, சிவ பூஜை செய்து அக்னிஷ்டோமம் முதலிய வேள்வியால் ஈசனைப் பக்தியுடன் வழிபட்டும் தனக்கே மிகுந்த ஈசனருள் இருக்கின்றதென்றெண்ணித் தன்னைப் பயன் பெற்றவனாக எண்ணியும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தான். இங்ஙனம் கசோளன் இருக்கையில் ஒரு சமயம் இவன் வீட்டிற்கு நண்பகலில் துருவாசர் சீடருடன் வந்தார். கசோளன் உடனே எழுந்து சீடருடன் கூடிய துருவாச முனிவரைப்பார்த்து ஆசனமிடல், அர்க்கிய பாத்யாசமனம் கொடுத்தல் முதலியவற்றால் ஆதரவுடன் வழிபட்டு வணக்கத்துடன் கைகுவித்துச் சில மொழி பகர்ந்தான். 'ஏ! முனிவரே! உமக்கு நல்வரவாகுக! சிறந்தவரான சீடருடன் என்னுடைய வீட்டிற்கு வந்தீர். இப்பொழுது நான் பயன்பெற்றவனாக இருக்கின்றேன். இப்பொழுதுதான் என்னுடைய பிறவித்தவம், இல்லறவாழ்க்கை, உயிராகிய இவை பயனுடன் கூடினவைகளாக ஆயின. என் வம்சத்தில் பிறந்தவர்களெல்லாம் தான் செய்யவேண்டியவைகளைச் செய்து முடித்தனர். உமது அருள் பார்வையால் எனது வீடு தூய்மையடைந்தது. நாங்கள் உமது பாதத் தூளிகளாற்றூய்மையடைந்தவராயினோம். எனது மனைவி உமது பாதசேவையால் தூய்மை அடைந்தாள். யாங்கள் தேவரீரது தரிசனத்தால் கிருதார்த்தர்களாகிறோம். ஏ! சிறந்த முனிவரே! சீடருடன் கூடிய உமக்கு விருந்து செய்ய விரும்புகிறேன். உமதடியான எனது வீட்டில் விருந்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.' இங்ஙனம் கசோளனால் வேண்டப்பட்ட துருவாசர் ஞானக் கண்ணினால் கசோளனது சரித்தை ஆராய்ந்து எல்லாவற்றையும் அறிந்து இக்கசோளனைப் பார்த்துச் சிரித்து மறுமொழி கூறலுற்றார். 'கசோளனே! நீ எதனால் பிறன் பொருளைத் திருடினையோ அதனால் பொன் களவு செய்தவனாயினை. ஆதலால் தர்மத்தையே விரும்பும் முனிவர் மகாபாதகனாகிய உன்னுடைய வீட்டில் உண்ணுதல் எங்ஙனம் கூடும்? மகாபாதகனோடு எவன்தான் பேசுவான்? அங்ஙனம் அப்பாதகனுடன் பேசுகிறவன் அவனுடன் சேர்ந்த பாதகனாகிறான். உன்னைப் பார்த்தாலும் பேசினாலும் நமக்கு இழிவானவை. உன்னைப்பார்த்தல், பேசுதல், சேருதல் இவை மூன்றால் எனக்குப் பாதகம் வந்து சேர்ந்துவிட்டது. இதற்கு நான் இப்பொழுதுக் கழுவாய் செய்துகொள்ள

வேண்டும். மகா பாதகனை அறிவில்லாமல் பார்ப்பவர் உடனே சூரியனைப் பார்க்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அப்பாவம் நீங்கச் சூரியனை விரைவில் சென்று பார்ப்போம்' என்று சொல்லிவிட்டு அந்த வீட்டிலிருந்து வெளியில் புறப்பட்டு வேறு வீட்டிற்குள் சீடருடன் புகுந்துண்டு தமது உறைவிடம் சென்றார். உடனே கசோளன் மிகுந்த வருத்தத்தால் மனம் நொந்து பல்வகையால் பெருமூச்செறிந்து தன்னையும் தன் பேராசையையும் அடிக்கடி நொந்துகொண்டு யாது செய்வதென்று தோன்றாது நன்றாக உட்கார்ந்து சிந்தித்தான். அவன் தான் செய்த பாவத்திற்கு உயிர்நீக்கமின்றி வேறு கழுவாயின்றென உணர்ந்து தனது உயிரின்கண் ஆசையற்று உயிர்விடவெண்ணித் தைரியத்தைப் பற்றிக்கொண்டு ஆற்றில் நீராடிப் பிறையணிந்த சாம்பரை விதிப்படி வணங்கி வழிபட்டுப் பல்வகையாகத் துதித்து எல்லாவற்றிற்கும் ஈசனான சிவபிரானைத் தண்டாகாரமாக வணங்கித் தியானித்துத் தீவளர்த்து உடனே அதற்குள் புகவெண்ணினான். அத்தீ புகுதலால் தான் தூய்மையானவன் என்று எண்ணினான்.

உடனே, அயன் அரி முதலிய தேவரைத் துதிக்க ஆரம்பித்தான். அயன், அரி, அரன், உலகுக்குத் தலைவனான வாசுதேவர், விபுவான ஷங்கர்ஷணர், பிரத்யும்னன், அநிருத்திரன் இவர்கள் எனக்கு வெற்றியின்பொருட்டு ஆகட்டும். இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, தனத்திற்குத் தலைவனானவன், சதாசிவர், அயனுடன் கூடிய எல்லாத் திக்காவலர்களும் என்னை ஈண்டு பாதுகாக்க. கீர்த்தி, இலக்குமி, திருதி, மேதை, புஷ்டி, சிரத்தை, கிருயை, மதி, யுத்தி, லஜ்ஜை, சாந்தி, துஷ்டி, காந்தி ஆகிய தாய்மார்கள் என்னைக் களவு பாபத்தினின்றும் பாதுகாக்கட்டும். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது, ஆகிய கிரஹங்கள் என்னை இப்பெரிய பாபத்தினின்றும் தூய்மைப் படுத்தட்டும். தேவர், அசுரர், கந்தருவர், இயக்கர், அரக்கர், பன்னகர்கள், மனதிற் தோன்றிய இருடிகள், மற்றும் தேவமாதர்கள், தேவபத்தினிகள், விலங்குகள், நாகங்கள் மற்றும அதிபதிகள் எல்லோரும், அப்ஸரஸ் கூட்டங்களும் அங்கி முதலிய அத்திரங்களும், அரசரும், வாஹனங்களும், கடல்களும், கங்கை முதலிய நதிகளும் மலைகள் மரங்கள் தீர்த்தங்கள், மடுக்கள் ஆகியவைகள் என்னுடைய களவு பாபத்தினின்றும் என்னைத் தூய்மைப் படுத்தட்டும். இங்ஙனம் அக்கசோளனாகிய அந்தணன் அயன் முதலான தேவதைகளை

வேண்டி அக்னியை வலம்வந்து புகச்சென்றான். அப்பொழுது ஆகாயவாணியானது தேவரால் ஏவப்பட்டதாகிக் கம்பீரமான சொற்கொண்டு கூறியது. 'ஏ! கசேகாளனே! திருவாஞ்சியமிருக்க ஏதற்காக இப்பொழுது அக்னியில் புகுந்து உடலை இழக்கின்றாய். காவேரியின் தென்கரையில கீழ்கடற்கு மேற்கே ஒன்றரையோஜனை தூரத்தில் இருமைப்பயனளிக்கும் திருவாஞ்சியமென்றொரு தலமிருக்கிறது. அதன்கண் தேவர் இருடிகள் அடையப்பெற்றச் சிறந்த தீர்த்தமொன்றிருக்கிறது. அந்தப் புண்ணிய புட்கரணித் தீர்த்தத்தில், மிக்க நீருடைய கங்கை நதியானது தொளாயிரத்து தொற்றெனபது அமசத்துடன் வந்தது. மக்களறியாதபடி வருகிறாள். அவளுக்கு அங்ஙனம் சமபுவால் வரமளிக்கப் பட்டிருக்கிறது. கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் முறையாக நீராடுபவர் பிரம்மஹத்யாதி தோஷத்தினின்றும் எனதருளால் முறைபாக நீங்கிவிடுகின்றனர்கள். ஆகையால் இநத வரதானத்தைக்கொண்டு நீ அங்கு சென்று கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில குப்தகங்கையில் நீராடின் இக் களவு பாபத்திற்கு கழுவாய் உண்டாவது திண்ணம' என்று அசரீரி கூறி நின்றது. இதைக் கேட்டவுடனே கண் மலர்ந்தவனாகிச் சோம்பலின்றி உடனே திருவாஞ்சியம் சென்று புணணிய புட்கரணி இருக்குமிடம் தேடிச் சென்று கார்த்திகை மூன்றும் ஞாயிற்றுக்கிழமையில் நீராடிய உடனே அக்களவு பாபத்தினின்றும் நீங்கினான். ஏ! சயஞ்ஞ முனிவரே! மீணடும அக்கசேகாளனைக் குறித்து தெய்வவாக்கானது எனது சொல்லைக்கூறியது. தேவரும் தபோதனரான இருடிகளுமாகிய நீங்கள் கேளுங்கள். கசேகாளன் என்பவன் களவு தோஷத்தினின்றும் நீங்கித் தூய்மை அடைந்தான் என்று மூன்று தரம் சொல்லுகிறேன் என்று சொல்லி அத்தேவவாணி நின்றது. அங்கிருந்த பிரம்ம வாதிகளான இருடிகள் அத்தேவ வாக்கியத்தைக் கேட்டு இப்பொய்கை, கொலை முதலிய பாபங்களைக் கடிவதில் ஐயமின்றென்றறிந்தவராயினர். பிறகு அக்கசேகாளன் மகிழ்ந்து அத்தலத்திற்கு அக்னி திக்கு மூலையில் மூன்று நாழிகை வழி தூரத்தில் சிறந்ததொரு குடிலை அமைத்துக்கொண்டு அங்கிருந்து தினந்தோறும் திருவாஞ்சியம வந்து வாஞ்சேசரை வணங்கியும் குப்தகங்கையில நீராடித தனது பிதுர்க்களுக்குத் தர்ப்பணத்தை மகிழ்வுடன் செய்தும தனது நிலைக்கொத்த தர்மங்களை நடத்தியும் அனேக போகங்கள் துய்ததும கடைசியில் திருவாஞ்சேசரது அருளால் சிவபதம் அடைந்தான். மிகுந்த நோன்பியான சுயஞ்ஞனே! இப்பொழுதும் அக்னி மூலையில் கசேகாளனுடைய ஆச்ரமம் இருக்கிறது.

இக் கதைகளானது அத்யாயத்தை எவர் படிக்கின்றாரோ, எவர் கேட்கின்றாரோ, அவர்களுக்குக் களவு முதலிய பாபங்கள் நீங்கி விடுகின்றன. இவ்விஷயத்தில் ஐயமுறும் மக்கட்குச் சொல்லக் கூடாது. முயன்றுவது மறைக்க வேண்டும். அங்ஙனம் நினைப் பவரை பிராம்மண விபசாரியின் பிள்ளையென்று கருதவேண்டும். தென்னாறிவுக் கடலான சுயஞ்ஞருக்கு களவின் கழுவாய் கூறிநின்றார்.

[சாம்போப புராணம் திருவாஞ்சிய மகிமையில்
கதைகளானது களவு நீக்கம என்ற
10-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## இருபத்தைந்தாவது அத்யாயம்.

சுயஞ்ஞர்:—'சாம்பரே! பிரம்மஹத்தி முதலிய மூன்று பாபங் கட்கு ஸ்நானத்தால் கழுவாயாகுமென்று தேவரீரால் இதிஹாஸத் துடன் கூறப்பட்டது. நான்காவது கார்த்திகை ஞாயிற்றுக்கிழ மையில் நீராடியவன் குரு மனைவியினிடத்தில் புகும் பாபத்தால் விடுபட்டிருப்பானாயின் கூறுவீராக. எல்லாமறிந்த சாம்பர் இங் ஙனம் சுயஞ்ஞரால் கேழ்க்கப்பட்டவராகிக் கம்பீரமாக மொழிந் தார். வங்கதேசத்தில் சந்திரிகையென்ற பட்டண மொன்றிருந்தது. அதன்கண் யக்ஞபக்தன் என்ற அந்தணனுக்கு அவன் மனைவியாகிய குமுதவதியினிடத்தில் துர்போதன என்ற பிள்ளை பிறந்தான். அவன் பிறந்தவுடனே அவன் தந்தை இறந்தான். உடனே தனது தந்தைக்கு சரமக்கடன்களை அதுதுர்போதன் யிழைத்துக் கைம்பெண் ணாகிய தனது தாயுடன் வசித்துவந்தான். அப்போது மழையில்லாது பன்னிருவருடம் பஞ்சம்நேர்ந்தது. அபபோது தனது தாயுடன் தேசாந்திரம்சென்று பிரயாகையை அடைந்து, பொருட்குவியலைக் கொண்டு நீண்டகாலம் தாயுடன் அங்கேயே சுகமாயிருந்துவந்தான். இங்ஙனம் அநேகநாள் சென்றபிறகு ஒரு நாள் இத்துர்போதன் காம மயக்கமுற்றவனாகித் தனது முன்னய தீவினைக்கூட்டத்தால் குரு டான மனமுடையவனாகி வேண்டாம் வேண்டாமென்று தாய் சொல் லிக்கொண்டிருக்கும்போதே பாதகனான துர்போதனன் வலிதில் இழுத்துத் துய்த்தான். அவன் தீயகாரியம் செய்த பிறகு மனம் நொந்தவனாகி மனதினால் பாவத்தைச் சிந்தித்து மிகவும் துன்புற்ற வனாகி அழுதான். 'ஐயோ! அதிகபாவத்தைச்செய்தேனே. பாபி களுக்குள் சிறந்தவனானேனே! காமனம்புக்கு இலக்காகி தாயைப்

பெண்டாண்ட பாபியானேனே' என்று மனதால் சிந்தித்து தனது பாபம் நீங்க எங்கெங்குமுனிவரது குடிசைகள் அமைந்திருக்கின்றன வென்று தேடிக்கொண்டு ஆங்காங்கு சென்றான். அச்சிறந்த இருடிகள் அத்துர்போதனைக் கண்டு கண்ணைமூடிக்கொண்டு மறு மாற்றங் கூறாதிருந்தனர். உடனே அத்துர்போதன் தன்னைநிந்தித்துக்கொண்டு அவ்விருடிகளைப் பார்த்துக் கூறினான்.

'சாத்திரத்தின் பொருள்களை அறிந்தவ! முனிவர்காள்! எனக்குக் குருமனைவியின் சேர்க்கையால் பாபம் நேர்ந்திருக்கிறது. அதற்குப் பிராயச்சித்தம் யாதென்று தங்களது அருளால் கூற வேண்டுகிறேன். சாதலே கழுவாயாயின் சாகின்றேன். இதில் ஐயமில்லை. நீங்கள் எது கழுவாயாகச் சொல்லுகிறீரோ அதை இப்பொழுதே செய்கின்றேன். அது சாவாயினும், மற்றும் யாதாயினும் ஆகட்டும். செய்யத் துணிந்திருக்கிறேன்' என்ற அந்தத் துர்போதனது மொழியைக்கேட்ட மக்கள் எல்லோரும் பேசாமலிருந்து விட்டார்கள். பிறகு அவன் அவிமுக்தம் என்ற தலத்தை அடைந்து அங்கு விச்வேசருக்கு முன்பு இருந்து விச்வேசரரை மனதில் நினைத்துக்கொண்டு கொடிய தவம் செய்தான்.

கோடையில் ஐந்து தீவின் நடுவிலும், மழைகாலத்தில் மேகத்தின் கீழும் மேல்பரப்பில்லாத இடத்திலும பனிகாலத்து மடுவிலும் யிருந்து கொடிய தவம் செய்துவந்தான்.

இங்ஙனம் மூன்று வருஷம் தவம் செய்த பிறகு உலகுக்குத் தலைவனான விச்வேச்வரர் விசாலாக்ஷியான உமா தேவியுடன் கைலாயத்தை ஒத்த விருஷபத்தின் மேலேறிக்கொண்டு விரைவாக அவனுக்கு முன்பு தோன்றினர். துர்போதனன் அம்பிகையோடு கூடியவரும் ஈசனும் உலகுக்குக் குருவாயுமிருக்கிற அந்த விச்வநாதனைக் கண்டு கைகுவித்து வணக்கத்துடன் தண்ட வடிவமாகப் பணிந்து துதிக்க ஆரம்பித்தான்.

துர்போதனன் துதி:— 'விச்வநாதரும், உலகைக்காப்பவரும், விசாலாக்ஷியுடன் கூடியவரும், விருடபாரூடரும், உலகக்கணவரும், உலகழிப்பவரும், உலகுபடைப்பவரும், உலகு வடிவரும், வீரரும், வீரபத்ரரும், வீதிஹோத்திரரும், வேள்வியும், வேள்வி வடிவரும், வேள்வித் தலைவரும், பசுபதியும், உலகுபதியும், அம்பிகாபதியும், துன்புற்றோர் துயர் களைபவரும், ஆதியானவருமான உமக்கு அநேக

வந்தனம் செய்கிறேன்' என்று பலவகையாக துதித்து முன்பு நின்றான்.

பக்தன் எண்ணம் நிறைவேற்றுபவரான தேவேசர் அந்த இழிந்த அந்தணனைப் பார்த்துப் பிரசன்னராகிக் கம்பீரமான மொழி கொண்டு கூறினர். 'துர்போதனனே! நீ என்னுடைய நாட்டிற்கு வந்து மணிகர்ணிகையாகிய கங்கையில் முக்காலமும் பக்தியுடன் நீராடி எனது பிரீதியின் பொருட்டுத் தவம்செய்தாய். ஆதலால் இப்போது மகிழ்ந்தேன். உனக்குக் கொடுக்கக்கூடாததொரு அபீஷ்டமும் என்னிடமுமில்லை' என்று விச்வநாதர் கூறினர்.

இங்ஙனம் விச்வநாதரால் சொல்லப்பட்ட துர்போதனன் யென்பவன் தெள்ளறிஞன் ஆதலின் தலையில் கைகுவித்து வைத்துக் கொண்டு வினயத்துடன் பிறையணிந்த சாம்பரைக் கேழ்க்கவாரம்பித்தான்.

துர்போதனன்:—'ஐயோ! நான் மிகுந்த பாபம் செய்தேன், மகாபாதகர்களுக்குள் சிறந்தவனாயிருக்கிறேன். காமனம்புக்கு இலக்காகித் தாய் கற்பழித்தேன். அத்தகைய பாபத்திற்கு ஏதாவது கழுவாய் இருக்குமாயின் கூறியருளவேண்டுகிறேன். சாதலே கழுவாயாயின் சாகின்றேன். ஐயமின்று. தேவரீர் எதனைப் பிராயச்சித்தமென்று சொல்லுகிறீரோ, அது மரணமாயினும், வேறேதாயினும் செய்யத் துணிந்திருக்கிறேன். இது உண்மை.'

மகேச்வரர் அத்துர்போதனன் மொழியைக் கேட்டு அதற்குக் கழுவாய் ஒன்று நீண்டு சிந்தித்துக் கூறினர். தாய்விழையும் பாவத்தைக் காட்டிலும் வேறொன்றும் சிறந்ததில்லை. எனது அவிமுக்தமாகிய தலத்தைவிட வேறு தலம் ஒன்றுமில்லை. எனது மணிகர்ணிகையாகிய தீர்த்தத்தைவிட வேறு சிறந்த தீர்த்தமில்லை. ஆயினும், எனக்குப் பிரீதியான ஒரு தலமும் ஒரு தீர்த்தமுமிருக்கின்றன. அத் தீர்த்தத்தில் கங்கையானவள் தொளாயிரத்துதொண்ணூற்றொன்பது அம்சத்துடன் எப்பொழுதுமிருக்கிறாள். அத்தலத்தில் தேவியுடனும், அயன், ஹரி முதலிய தேவர்களுடனும் நிறைந்த ஆநந்த வடிவனாகி யானிருக்கிறேன். அதற்கு ஒத்ததாவது மேற்பட்டதாவது இப்பூவுலகிலில்லை. மேலும் பிராயச்சித்தம் செய்து பாபத்தைப் போக்குவதில் அதற்குச் சமமானதும், மிகுந்ததும் இப்பூவுலகிலில்லை. தாய் கற்பழித்தல் ஐம்பெரும் பாபங்களினும் சிறந்த

பாதகம். ஆகையால் வேறிடத்தில் அது போகிறதில்லை யென்று பரமசிவன் யெண்ணி அந்த அந்தணனை துர்போதனனைப் பார்த்துச் சொன்னார். 'நீ செய்த இப்பாபத்திற்குக் கழுவாய் வேதத்திலும் ஸ்மிருதியிலும மரணம் தவிர வேறொன்றும் சொல்லப்படவில்லை. நீ என்னைப் பூஜித்ததால் அதிக முயற்சியின்றி அப்பாவம் நீங்கும் வழி சொல்லுகிறேன. அதைச் செய்நன்றிகொன்றவர், நாஸ்திகர், முதலியோர்களுக்கு மறைத்துக் காக்கவேணடும்.

காவிரியின் தென்கரையில் இருயோஜனை தூரத்தில், 1 ரக்தாரண்யம் என்று ஒரு ஸ்தலமிருக்கிறது. அதற்கு மேற்கில் ஒன்றரை யோஜனை வழியில் கலியில முக்தியளிப்பதான திருவாஞ்சியமென்று ஒரு ஸ்தலமிருககிறது. அதனருகே எனது சூலத்தால் உண்டுபண்ணப்பட்ட தீர்த்தமொன்றிருக்கிறது. அதில் தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது (999) அம்சத்துடன் கங்கை வந்து வசிக்கிறாள். அவள் எனது உத்திரவால் மககளறியாதபடி மறைந்து வசிக்கிறாள். இக்கங்கையானவள் இங்கு ஒரு அம்சத்தை மாத்திரம் வைத்துவிட்டு மற்ற எல்லா அமசங்களுடனும் அங்கு சென்று குப்த கங்கையென்று மூவுலகிலும் புகழபபட்டவளாயிருக்கிறாள். ஆகையால் ஐமபெரும பாதககிகள் அக்கங்கையில் நீராடி பாதகத்தினின்றும் விடுபட்டவராக எனது யிடத்தைவந்து அடைகிறாகள். ஆகையால் நீயும் அங்கு சென்று நிர்மலமான குப்தகங்கை நீரில் கார்த்திகை ஞாயிற்றுககிழமையில நீராடி இப்பாவத்தினின்று ஒரு கணத்திற்குள நீங்குவாய்' என்று சிவபிரான கூறிவிட்டு விசாலாக்ஷியோடு கூட மறைந்துவிட்டார்.

பிறகு துர்போதனன் தெளிந்தவனாகிச் சிவபிரானது மொழியைக கேட்டுத் தாயுடன் விரைவிற் கிளமபித் திருவாஞ்சியம்சென்று குப்தகங்கையில் நீராடி குரு பனைவி கற்பழித்த தோஷத்தினின்றும அக்கணத்திலேயே விடுபட்டான். பிறகு துர்போதனன் திருவாஞ்சிய ஸ்தல மகிமையையும், தீர்த்த மகிமையையும், ஞாயிற்றுக்கிழமையின் மகிமையையும எல்லாமறிந்து நீணடகாலம தாயுடன் அங்கேயிருந்து பாவத்தினின்றும விடுபட்டான்.

எந்த மனிதர் குப்தகங்கையின் மகிமையையறிந்து நீராடுகின்றனரோ அவர் எல்லாப் பாபத்தினின்றும் விடுபடுகின்றனர். இதன்

1 ரக்தாரண்யம - திருச்செங்காட்டாங்குடி

கண் ஐயமின்று. இந்தப் புண்ணிய சரித்திரத்தை எவர் கேழ்க்கின்றனரோ அன்றியும் படிக்கின்றனரோ அவர் குருதல்ப கமன தோஷத்தினின்றும் விடுபடுவார்.

[ஸாம்போபபுராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் ஸாம்பஸூயஞ்ஞ ஸம்வாதத்தில் துர்போதனர் தாயுடன்கூடிய குற்றத்தினின்று நீங்கிய பிராயச்சித்த வருணனை யென்னும் பதினைந்தாவது அத்யாயம் முற்றிற்று.

---

## இருபத்தாறாவது அத்யாயம்.

ஸூயஞ்ஞர் :—'சாம்பரே! பிர்மஹத்தி முதலிய நான்கு பாதகங்கட்கும் பிராயச்சித்தம் நன்றாகச் சொன்னீர்கள். மேலும் விசேஷமாக துர்போதனன் குப்தகங்கை நீராட்டத்தால் குருதல்ப கமன தோஷத்தினின்றும் விடுபட்டானென்றும் சொன்னீர்கள்.

கார்த்திகை ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமையில் குப்தகங்கையில் நீராடி எந்த ஐந்தாவது பாதகனாயினும் ஸம்ஸர்க்கதோஷத்தினின்றும் விடுபட்டிருப்பின் அதனைக் கூறவேண்டுகின்றேன்.'

சாம்பர் :—'ஏ! பிராமணனே! நன்றாய்க் கேட்டீர். நன்றாகச் சொல்லுகிறேன். காலஜித் என்ற ஒரு அந்தணன் வஸிஷ்டர் அருளால் குப்தகங்கையில் நீராடி ஸம்ஸர்க்கதோஷத்தினின்றும் விடுபட்டான்.'

ஸூயஞ்ஞர் :—'காலஜித் என்பவன் யாவன்? எவ்விடத்தைச் சார்ந்தவன்? அவன் தந்தை யாவன்? அவனுக்கு பாபிகளோடு சேர்க்கை எங்ஙனம் நேர்ந்தது? வசிஷ்டரருள்கொண்டு கங்கையில் நீராடியதால் எங்ஙனம் அப்பாவம் அவனைவிட்டு நீங்கியது? இவற்றை எல்லாம் கேழ்க்க விரும்புமெனக்கு அவசியமாகச் சொல்ல வேண்டுகிறேன்.'

சாம்பர் :—'மிக்க அழகிய நர்மதை நதிக்கரையில் ஸ்தபகமென்றொரு கிராமமிருந்தது. அதன்கண் கலிஜித் என்றொரு அந்தணனிருந்தான். அவனுக்கு காலஜித் என்ற உலக நன்மையே விழையும் ஒரு பிள்ளை யிருந்தான். அவன் பிறந்தது முதல் எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்யவே விருப்பங்கொண்டிருந்தான். அவன்

வேதாத்யயனம் செய்தவன். சாஸ்திரங்களெல்லாமறிந்தவனும், தூயவனும், பிரம்மச்சர்ய நிலைக்கொத்த ஒழுக்கத்தில் தவருதவனும், பிக்ஷை செய்து உண்பதால் இளைத்தவனுமிருந்தான். அவன் நியமத்துடன் வேதாத்யயனம்செய்துத் தனது குருவுக்குத் தக்ஷிணை கொடுத்துப் பிரம்மசர்ய நிலையில் செய்யவேண்டுவனவெல்லாம்செய்து இருடிகளது கடனிலிருந்து நீங்கியவனுகி மற்றைய இரண்டு கடனை நீக்க எண்ணி மணம் செய்துகொள்ளவேண்டித் தனது தந்தையருகிற் சென்று வணங்கி சில சொற்கள் புகன்றுன். 'யான் பிரம்மசர்ய நிலையிற் செய்யவேண்டுவன செய்து முடித்தேன். இனி இல்லற நிலைமேற்கொண்டு இருகடன்களையும் சீக்கிரமாகக் கழிக்க எண்ணுகிறேன். ஆகையால் தந்தையாகிய தாங்கள் உத்திரவு கொடுக்க வேணும்' என்று கேட்டான். இங்ஙனம் அவரால் கேழ்க்கப்பட்ட தாய் தந்தையர் மகிழ்ச்சியுடன் உத்திரவளிக்க அவன் அப்போதே வெளியிற் புறப்பட்டுச்சென்று தனக்கொத்த பெயர், கோத்திரம், இவைகளையுடையவளும் பொன்னுபரணமணிந்தவளுமான ஒரு பெண்ணை மணந்து இல்லற ஒழுக்கத்தை நன்கு நடத்திவரும் காலையில் கொடிய தவம்செய்து அயனிடம் வரம்பெற்று இந்திரன் முதலிய காவலாளர் உலகுகளிற் சென்று அவர்களது வெகுமதிகளைப் பெற்று மிகமகிழ்ந்து வந்தான். எப்பொழுது உலகுகளைப் பார்க்க வேண்டுமென்று ஆசையுண்டாகின்றதோ அப்பொழுதே அவன் தவ வன்மையால் வாயுவேகமாகச் சென்று உலகங்களைப்பார்த்து மீண்டும் வாயுவேகமாகத் தனது ஆசிரமத்திற்கு வந்துசேருவான். இங்ஙனம் அக் காலஜித் இருக்கையில் அவனுக்கு மிக்க தவவொளியுடையவரும் தருமநெறி பிறழாதவருமாகிய நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். இங்ஙனம் பிதிரு கடனிலிருந்து விடுபட்டவனுகி முக்கண்பெருமானை வழிபட்டுத் தேவகடனையும்கழித்து மிக்க மகிழ்ச்சியோடிருந்தான். சிலகாலம் சென்ற பிறகு, பிள்ளைகள்வளர அப்பிள்ளைகளிடத்து மிக்கபற்று இக்காலஜித்துக்கு உண்டாகி அப்பிள்ளைகளை இளம் பிராயத்தில் கல்வி கற்பிக்கும் விஷயத்தில் கண்டிக்காமல் இருந்து விட்டான். ஆகலால் அச்சிறந்தவனது பிள்ளைகள் துஷ்டர்களாயும், விடர்களது கோஷ்டியிற் கூடியவராயும், வேதாத்யயனம் நல்லொழுக்கம் இல்லாதவராயும், பிரம்மத்வேஷமுடையவராயும், மூடராயும், பிரம்மவித்தையில் பற்றற்றவராயும், சொல்லுவது கேழ்க்காதவராயும், புத்தியில்லாதவராயுமானுர்கள். பிறகு அப்பிள்ளைகள் யௌவனம் அடைந்தவுடன் இன்னது செய்யவேண்டும் இன்னது செய்யக் கூடாது என்பதையறியாதவராகி மதம்பிடித்தவராயும் ஆனுர்கள்.

அப்பிள்ளைகளுக்குப் பெயர், விச்வஜித், தன்ஜித், ஸ்வர்ஜித், ஸத்ராஜித் என்று வழங்கப்பட்டன. வேதமற்றவராயும் பிரம்மத்வேஷிகளாயுமிருக்கும் அப்பிள்ளைகள்செய்த பிரம்மஹத்தி முதலிய பாபங்கள் கணக்கற்றனவாகும். அங்ஙனம் அவற்றை உணர்ந்திருந்தும் காலஜித் பிள்ளைகளிடத்தில் பற்றுள்ளவனுயிருத்தலின் அவர்களோடு கலந்திருந்தான். இங்ஙனம் ஒருவருஷம் சென்றவுடன் காலஜித்துக்கு இருந்த வலிமை, பிராம்மணியம், உலகங்களுக்குச் செல்லுந்திறமை எல்லாம் ஒழிந்தன. வேதமறிந்த அந்தணராலும் மற்றைய மக்களாலும் இவன் மகாபாபி என்று எண்ணப்பட்டவனுகித் தனது பிள்ளைகளுடன் சேர்ந்திருந்தான். அதனுல் இவனுக்கு ஸம்ஸர்க்க தோஷம் ஐந்தாவது பாதகம் வந்திருக்கிறது. அதில் ஐயமில்லை என்று நிந்திக்கப்பட்டான்.

உடனே இக்காலஜித் மிகுந்த துக்கமுடையவனுகிக் கவன்று 'இப்பொழுதே சுவர்க்கலோகம் சென்று இந்திரன் பிருகஸ்பதி இவர்களைக் கண்டு வணங்கி எனது பாபத்திற்குப் பிராயச்சித்தம் கேட்டு வந்து அவர்கள் சொல்லுகிறபடிக்குக் கழுவாய் செய்து யாம் தூய்மையடைவோமென்று சிந்தித்தான். பிறகு அக் காலஜித் சீக்கிரமாகப் பூமியிலிருந்து கிளம்ப ஆரம்பித்தான். அவனுடைய சத்தியானது தெய்வச் செயலால் நீங்கிவிட்டபடியால் மீண்டும் எங்கு செல்வோமென்று கவன்றிருக்க, அழகிய ஆகாசவாணியானது மிகுந்த துன்பத்தையனுபவிக்கும் இவ்வந்தணனைப்பார்த்துப் 'பயப்படாதே! நான் சொல்லுகிறபடி செய். வசிஷ்டரது ஆச்ரமத்திற்குச் சென்று இதற்குக் கழுவாய் யாதென்று கேட்டு அவர் சொல்லுகிறபடி செய். அதுதான் அதற்குச் செய்யவேண்டியது. ஆதலால், ஏ அந்தணனே! நீ உனது பிள்ளைகளுடன் அங்கு சென்று அவர்கள் சொல்லுகிறபடி நடந்து இக்கொடிய பாபத்தினின்றும் தூய்மையடைவாய்' என்று ஆகாசவாணி சொல்லி நின்றது.

உடனே அக்காலஜித்துக் கிளம்பிப் பிள்ளைகளோடு வசிட்டரது ஆச்ரமத்திற்குச் சென்று தனது பாபத்திற்குக் கழுவாய் யாதென்று கேழ்க்க விரும்பியவனுகி, அங்கு அயன் மதலையான வசிட்டரைக் கண்டு வணங்கி கைகுவித்து விநயத்துடன் சொல்லவாரம்பித்தான்.

காலஜித் :—' தலைவனுன அருந்ததிக் கணவனே! எனதுவேண்டுகோளைக் கேட்டருளவேணும். நருமதை நதிக்கரையில் ஸ்பதகம் என்ற கிராமத்தில் கலிஜித் என்ற சிறந்த அந்தணன் வீட்டில் பிறந்

தவன் யான். எனக்குக் காலஜித் என்று பெயர். தவத்தால் அயனையும், அரனையும் வழிப்பட்டுஅயனருளால் உலகங்களெல்லாம் செல்லும் ஆற்றல் பெற்றேன். பிறகு சிலநாட்கள் சென்றபிறகு வேறு உலகங்களுக்குச் செல்லும் கதி தடைப்பட்டது. அதனால் யான் கலங்குங் காலையில், அசரீரி வாக்கானது சொல்லிற்று. 'ஏ காலஜித்தே! கவலைப் படாதே; உனது பிள்ளைகள் நால்வரும் நன்கு கொடிய பாபங்கள் செய்திருக்கின்றனர். நீ அவர்களுடன் ஒருவருடம் சேர்ந்திருந்ததனால் ஐந்தாவது பாதகனாக ஆயினை; ஆதலால் பாபவலிமையால் உனக்கு வேறு உலகம் செல்லும் ஆற்றல் தடைப்பட்டது. மீண்டும் அவ்வுலகங்களுக்குச் செல்லவும் செய்த தீவினைகள் நீங்கும் பொருட்டும் வசிட்டரைச் சரணமாக அடைவாய்' என்று அசரீரி வாக்குக் கூறியது.

ஏ முனிவரே! ஆதலால் பிள்ளைகளுடன் தேவரீரை வந்தடைந்தேன். ஏ அருட்கடவுளே! என்னிடத்து அருள் பாராட்டிக் காப்பீராக. அருந்ததிக் கணவரே! எங்ஙனம் பிள்ளைகளோடு கூடிய யான் பிரும்மஹத்தி முதலிய பாபங்களினின்று நீங்குவேனோ அங்ஙனம் கூறி அருளவேண்டும்' என்று காலஜித் வேண்ட, அயன் மதலையான வசிட்டர் அருளுடன் காலஜித்தைக் குறித்துச் சொன்னார்.

வசிட்டர்:—'காவிரியின் தென் கரையில் இருயோஜனை தூரத்தில் திருவாஞ்சியமென்றொரு தலமிருக்கிறது. அது மக்கட்கு இம்மை மறுமைப் பயனளிப்பது. அதற்குக் கல்ப மாறுபாட்டால் பூகைலாசம் என்றும் கந்தாரண்யம் (சந்தனக்காடு) என்றும் பெயர் வாய்த்திருக்கிறது. அதற்கு ஒத்த தலம் மூவுலகிலுமில்லை. ஆகையால் அந்தத் தலமிருக்கும்போது நீ இப்பாவத்திற்காகப் பயப்பட வேண்டாம். கங்கையானவள், (999) தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பது அம்சத்துடன் அங்கேயேயிருக்கின்றாள். ஆதலால் பாவிகளான மக்கள் யமனிடமிருந்தும், பைரவரிடமிருந்தும், நரகத்திலிருந்தும் பயப்படவேண்டியதில்லை. குப்தகங்கையில் மக்கள் நீராடவேண்டியது. அவ்விடத்தில் ஒருவருடம் இருக்கவேண்டியது. சச்சிதானந்த வடிவனும், விழைந்த பொருள் அளிப்பவருமான ஈஸ்வரரைத் தியானம் செய்யவேண்டியது. திண்ணமான அறிவுடைய எவருக்கு வேதவுணர்வு வேண்டுமோ அவனும் வீட்டையடைய விரும்புபவனும், கலியுகத்து அத்திருவாஞ்சியம் போய்ச் சேரவேண்டியது. எவன் அதிக முயற்சியில்லாமல் பிறவிக் கடல்

கடக்க எண்ணுகிறுனே அவன் திருவாஞ்சியம் போய்ச் சேர வேண்டும். இல்லாவிட்டால் வேறு வழியில்லை. நன்மை தீமை தெரியாதவரும் தமது வயிற்றையே நிரப்பிக்கொண்டிருப்பவரும் முடிவில் அந்த ஸ்ரீ கந்தாரண்யம் வந்து சேருவார். அத்தலத்து எவர் முடிவில் தமது உடலைவிட்டுப் பிரிகின்றனரோ அவர் பாபியாக யிருப்பினும் கைவல்யம் அவர் கையிலிருக்கிறது. அத்தலத்தில் ஐந்தாவது கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையாகிய புண்ணியதினத்தில் அறுபதுகோடி தீர்த்தங்களும் அறுநூறுகோடி தீர்த்தங்களும் தங்கள் தங்களது பாவம் நீங்க இவனுல் ஏவப்பட்டு அந்த நிர்மலமான குப்தகங்கை நீரில் நீராடவருகின்றனர். அதில் நீராடுதல் எல்லாப் பாவங்கட்கும் பிராயச்சித்தம் என்று அறிஞர் கூறுவார். ஒருவனே ஐந்து மகாபாதகங்கள் செய்தவனுயினும் அத் தீர்த்தத்தின்கண் ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமையில் நீராடின் நீங்கிவிடுகின்றன. இம்மை மறுமைப் பயனளிக்கும் அத்தலத்திற்குப் பிள்ளைகளுடன் சென்று ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமையில் நீராடி பாவத்தினின்றும் விடுபட்டவனுவாய்' என்று வசிட்டர் கூறித் தனது ஆச்ரமம் புகுந்தார்.

அக்காலஜித் உடனே விரைவில் தனது பிள்ளைகளுடன் சென்று காத்துக்கொண்டிருந்து ஐந்தாவது ஞாயிற்றுக்கிழமையில் குப்தகங்கையில் நீராடி இராகுவால் விடுபட்ட சந்திரன்போல பாபத்தினின்றும் விடுபட்டவனுகி விளங்கிக் கரையில் வந்து தேவாதி தர்ப்பணங்களைச்செய்து நித்தியகருமங்கள் செய்துவிட்டு திருவாஞ்சியேசரை வணங்கி ஆற்றலளவு பொருள் அந்தணருக்குக் கொடுத்து அத்தலத்திலிருப்பவருக்கு சமைக்கப்பட்ட அன்னத்தை வாஞ்சேசவரர்க்குப் பிரீதியின்பொருட்டு இட்டுத் தக்ஷிணைகள் கொடுத்து அவரது அருளால் பிள்ளைகளுடன் கூடிய இவ்வறிஞனை அந்தணன் மிக மகிழ்ந்தான். பிறகு அந்த நீராட்டத்தின் மகிமையையறிந்து நீண்டகாலம் அங்கிருந்து அநேக போகங்கள் அனுபவித்து முடிவில் திருவாஞ்சேச்வரரது அருளால் கைலாயம் அடைந்தான்.

இந்த வியப்பான சரிதத்தை படிப்பவனும் கேட்பவனும் பிரம்மஹத்தி முதலிய பாவங்களிலிருந்து நீங்கிச் சிவபதம் அடைகிறுன்.

சாம்பர்:—'ஸூயக்ஞரே! பிரம்மஹத்தி முதலிய பாவங்கள் இதில் நீராடுவதால் நீங்குமென்றுல் வேறு பாவங்கள் இதனுல் நீங்கிவிடுமென்று சொல்லவும் வேண்டுமோ? என்ன? இது ஆயுளளிக்

கும். இச்சரிதத்தைப் படிப்பவரும் கேட்பவரும் இம்மையின்பம் துய்த்து முடிவில் துறக்கமெய்துவார்.

[சாம்போபபுராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் ஐந்தாவது கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைப் பெருமையில் காலஜித் என்பவனுடைய ஸம்ஸர்க்கதோஷ மோக்ஷமென்ற பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.]

---

## இருபத்தேழாவது அத்யாயம்.

ஸூயஞ்ஞர்:—'சாம்பரது கழல் தியானத்தால் பாபம் அகற்றியவரும், கரையற்ற பிறவிக்கடலின் கரையேற்றுபவரும் பிரபுவுமுமான ஏ சாம்பரே! ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடும் பயனை இதிஹாஸத்துடன் கூறினீர். அது இம்மை மறுமைப் பயனளிப்பதாகும். இப்பொழுது, ஐந்து கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளின் நீராடும்விதி முறைகளை உள்ளபடி கூறவேண்டுகிறேன்

சாம்பர்:—' அங்ஙனமே உனக்குக் கூறுகிறேன். மனவொருமையுடன் கேழ்ப்பாய். பரமசிவன் பார்வதியால் கேழ்க்கப்பட்டவராகி இதன்விதி முறைகளைத் தனித்தனியே சொல்லியருளினார். அதைக் கேட்டாலே பிறவிப்பயனடைவாய். அங்ஙனம் நீராடவிரும்பியவன், முதல்நாள் உபவாஸமிருந்து புலனடக்கி நியமங்களை மேற்கொண்டவனாகிப் பேசாமல் திருவாஞ்சியத்தலம்சென்று, சாயங்கால ஸந்தியையும்செய்து, ஸரஸ்வதியை ஜபித்து, திருவாஞ்சேசர் கோபுர வாயில் காப்பாரையும், அபயங்கர விக்னேச்வரரையும்முதலில் வணங்கிப் பிறகு, ஸ்ரீ கந்தாரண்யத் தலைவரையும் "காப்பாற்றுவாய்" என்று ஐந்து மகாபாதகங்கள் நீங்க ஐந்துதரம் வணங்கவேண்டும். வலம் வரும்பொழுது ஒவ்வொருதரமும், பன்னிரண்டுமுறை வணங்கி வாய்பேசாமல் அடிமேலடியாக வைத்துக் கைகளை அசைக்காமல் மனதில் மகாதேவரைத்தியானித்து வாக்கால்துதித்து உலகு அன்னையான தேவியையும், தேவனையும், வேறுமனமின்றி மிகுந்த மகிழ்ச்சியுடன் ஸேவித்துப் பார்வதீ பரமேஸ்வரர்களைக் குறித்துத் தனது வேண்டுகோளைவிரும்பி அவர் கோயிலில் இரவில் விழித்திருந்து பொழுது புலருங்காலையில் உடல் தூய்மை செய்துகொண்டு தீர்த்தக்கரை சென்று, மகாசங்கல்பம் செய்துகொண்டு, தனது வேண்டுகோளையும் ஸங்கல்பித்துக்கொண்டு, தொப்பூழ் நீரில்நின்று

தீர்த்தத்திற்கு அதிதேவதையான அரியையும், பைரவரையும், க்ஷேத்திரபாலர், விக்னேச்வரர், முருகன், ஸ்ரீ கந்தாரண்யத் தலைவர், தலைவி, மகிஷாஸுரமர்த்தனியான அம்பிகையையும் நினைத்து வேண்டிக்கொண்டுத் தனது பாபம்நீங்க மேற்கூறும் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு நீராடவேண்டும்.

மந்திரம்:—வாஸுதேவனும், ஹரியும், (விஷ்ணுவும்) பூதபாவனரும், கேசவரும், ஜனார்த்தனரும், விஷ்டரச்ரவசும், நீர்க்குத் தலைவரும், இலக்குமிக் கணவருமாகிய விஷ்ணுவே! உமக்கு வந்தனம் செய்கிறேன். உன் தீர்த்தத்தில் நீராட எனக்கு உத்தரவளிக்க வேண்டுகின்றேன். மிகப்பயங்கரமான உடலுடையவரே! கற்ப முடிவுத் தீ போல்வனே! சுவானத்தை வாகனமாக உடையவனே! வாஞ்சேசத் தலக்காப்போனே! கங்கையணிசடையனே! உட்கார்ந்த பைரவனே! விபுவே! உமக்கு வந்தனம் செய்கிறேன். எனக்கு உத்திரவு கொடுத்து அருள்செய்யவேண்டும். மிக்க அச்சம்தரத்தக்கப் பற்களுடைய ஏ விபுவே! எனக்குத் தீர்த்தப் பயனளிப்பாய். அபயமளிக்கும் விக்னேச்வரரும் கணபதியுமான யானைமுகக் கடவுளே! உமது அருளால் தீர்த்தப்பயன் அளிக்கவேண்டுகிறேன். மயில் கொடியோனும், தேவர்த் தலைவனும், பன்னிரண்டு கண்ணுள்ளவனும், பன்னிரண்டு கையுமுடையவனாகிய ஏ சுப்ரமண்யரே! உமக்கு வந்தனம். தீர்த்தத்தை எனக்குக் கொடுக்கவேண்டும். இருடபத்வஜரும், மாறுபாடான கண்ணுடையவரும், ஸ்ரீ கந்தாரண்யவல்லபருமாகிய மகேச்வரரே! பாபமெல்லாம் நீங்க எனக்குத் தீர்த்தம் கொடுக்கவேண்டும். திருவாஞ்சேசரும் எல்லாவற்றிற்கும் ஈச்வரரும், எல்லா தீர்த்தங்கட்கும் பயனளிக்கும் ஈசருமானவரே! இம்மை மறுமைப் பயனளிக்கும் இத்தீர்த்தத்தில் நீராட எனக்கு உத்திரவு கொடுக்கவேண்டும். ஸ்ரீ கந்தாரண்ய நாயகியும், மகேச்வரியுமான ஹே அம்பிகையே! உன்னை வணங்குகிறேன். மகிஷாசுரனைக்கொன்றவளும், மகாமாயையும், வாசுதேவனுக்கு உடன்பிறந்தவளும், எல்லா வித மங்களமுடையவளும், சுபையாயுமிருக்கிற தே[illegible]யே! உன்னை வணங்குகிறேன். எனக்குத் தீர்த்தப் பயனளிக்க வேண்டும்.

இம்மாதிரி விஷ்ணுமுதலியோரைத் துதித்து வேண்டித் தங்களது மகாபாதகங்கள் நீங்கவேண்டி மக்கள் ஸ்ரீ கைலாஸநாதரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் வேண்டி குப்தகங்கையில் நீராடி சூர்யோதயத்துக்கு முன்பு நீராடவேண்டும்.

பிரார்த்தனை மந்திரம்:—

பிரம்மஹத்தி, புருணஹத்தி முதலிய தோஷங்கள் என்னைப் பற்றக்கூடாது. ஆலகாலவிஷமானது எங்ஙனம் தேவியின் அருள் பார்வையால் எங்ஙனம் தூய நீராக ஆயிற்றோ அதுபோல், கொலைக் குற்றம் என்னிடத்தில் பற்றாது இருக்கும்படிச் செய். குடிக்கப் பட்ட கள்ளானது இக் குப்தகங்கையில் நீராடுவதால் அமுதாக ஆகட்டும். திருடருக்குத் தலைவரான உமக்கு வந்தனம். பொன் திருடிய என்னை இங்கு நீராடுவதால் தூய்மைப்படுத்துவாய். கருணைக் கடலே! சந்திரனுக்குக் குருதல்பகமன தோஷமில்லாதது போல், எனக்கும் குருமனைவி விழைந்த குற்றம் குப்தகங்கையில் நீராடுவதால் நீங்கக்கடவது. அயனது ஐந்தாவது தலையை பலமுடைய பைரவனாகிய நீ அறுத்திருக்க, உனது சேர்க்கை எங்ஙனும் குற்றமுடையதாக ஆகவில்லையோ, அதுபோல் எனக்கும் மகாபாதகிகளின் சேர்க்கைக் குற்றமானது குப்தகங்கையில் நீராடுவதால், ஒரு கணத்திற்குள் நீங்கட்டுமென்று ஸ்ரீ கந்தாரண்யேசரான தேவரை வேண்டி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும், அந்த மந்திரங்களைச் சொல்லி, ஆதரவுடன் மூன்றுதரம் முழுகி தேவ இருடிகள், பிதிர்த் தர்ப்பணங்களைச் செய்து, ஆடை உடுத்திக்கொண்டு விதிப்படி நீறு அணிந்து பவித்திரத்தைக் கையிலணிந்துகொண்டு ஸந்தியாவந்தனத்தை விதிப்படிசெய்யவேண்டும். வேதமாதாவான காயத்ரீயைத் தியானத்துடன் நூற்றெட்டு முறை மாத்திரம் ஜபித்து உபஸ்தானம் (எழுந்திருந்து) செய்தபிறகு, தலசிராத்தம் செய்யவேண்டும். சிராத்தம் இரண்டுவகைப்படும். அது ஆமச்ராத்தம், அன்னச்ராத்தம், என இரண்டுவகைப்படும். அன்னச்ராத்தத்தைக் காட்டிலும் ஆமச்ராத்தம் நூறுமடங்குவிசேஷமாகும். அன்ன சிராத்தம் இல்லத்த வருக்கும் ஊர்தோறும் செல்லும் பிரயாணிகளுக்கும் ஆமசிராத்தமும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஆமசிராத்தம் தக்ஷிணையுடன் செய்யவேண்டும். தக்ஷிணை இல்லாத சிரார்த்தம் ஆசுரம் என்று சொல்லப்படும். இரண்ய சம்பந்தமான சிராத்தம் ஆமசிராத்தத்தைக் காட்டிலும் சிறந்தது. தானமில்லாத ஸ்நாநமும், ஓமமும், ஜபமும், வீணாகும். தானத்தால்தான் எல்லாம் நிரம்புகின்றன. ஆகையால் தானம்தான் சிறந்தது. ஆதலால் அத்தல வாசிகளான அந்தணருக்குத் தனது பொருளளவிற்கேற்ப எல்லாத் தானங்களையும் [illegible]பிறகு, தேவாலயம்சென்று வேண்டும் பொருட் பயனளிப்பவரான ஈசனையும் திருவாஞ்சிய நாயகியாளான அம்பிகையையும்,

காலபைரவரையும் மகாபிஷேக நைவேத்தியங்களால் சந்தோஷத்துடன் வழிபட்டு சிறந்த அந்தணருக்கு அறுசுவை அடிசில் ஆதரவுடன் கொடுத்துத் தன் நோன்பின் பூர்த்தியின் பொருட்டே உண்டவருக்குத் தக்ஷிணை கொடுத்து வணங்கித் தனது வேண்டுகோளை வேண்ட வேண்டும். பிறகு ஏழைகளையும் அநாதைகளையும் மகிழ்வித்து அந்தணரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு தனது உறவினருடன் தான் சாப்பிடவேண்டும். இங்ஙனம் சிராத்தத்தின் விதிப்படி எவன் நீராடுகிறானோ அவனுக்குப் பாவங்களெல்லாம் ஐயமின்றி நீங்கிவிடுகின்றன.'

சுயஞ்ஞர்:—'மீண்டும் குப்தகங்கையின் மகிமையும் ஸ்நானம், தானம், இவைகளுக்குரிய காலமும் அவற்றின்கண் மிக வியப்பான தானங்களும் யாவை? அவற்றைச சொல்லவேண்டுகிறேன்.

சாம்பர்:—'ஏ முனிவரே! இம்மாதிரி இலக்குமியானவள் தனது கணவனாகிய விஷ்ணுவைக் கேட்டதற்கு அவர் கூறியதாவது: இம்மை மறுமைப் பயனளிக்கும் இலக்குமியே உனக்கு எல்லாம் கூறுகிறேன். ஒரே மனமுடையவளாய் கேட்பாய்' என்றனர்.

வீர நக்தஞ்சன் என்ற ஒரு அரக்கன் கொடிய மனமுடையவனாகி முனிவரை உண்டு புவியெல்லாம திரிந்து வந்தான். அங்ஙனமிருக்க ஒருகாலத்தில் தெய்வச் செயலாய் ஸ்ரீ கந்தாரண்யத்தலத்தில் சென்று சில நாட்கள் இருந்தான். அப்போது ஏதோ காரியமாக அகத்தியர் அங்கு வந்திருந்தார். வீரராக்ஷஸன் அவர் அங்கு நிற்பதைக்கண்டு அவரை உண்ணாக்கையால் பற்றினன். அப்பொழுது அக்குடமுனிவர் வேடிக்கையாக இடதுகாலால் அவனது மார்பில் உதைத்தார். அந்த அடியால் அவ்வரக்கன் முற்பிறவியின் தவமகிமையால் குப்தகங்கையில் போய் விழுந்தான். உடனே பாவம் நீங்கியவனாகி அவ்வரக்கன் தேவமங்கையரால் சூழப்பட்டவனாகி இஷ்டப்படிச் செல்லும் விமானத்தில் ஏறிச் சிறந்த துறக்கமெய்தினன்.

அந்த வீர அரக்கன் அகத்தியர் பாதசம்பந்தத்தாலும் தீர்த்த மகிமையாலும் அதில் முழுகியதாலும் முக்தனானான். அவன் பெயர் கொண்டு இப்பொழுது ஓர் இடமிருக்கிறது. அது அத்தீர்த்தத்திற்கு முன்பு ஒரு நாழி வழி தூரத்தில் "வீராக்கன்" என்ற பெயருடையதாயும் மிகுந்த செழித்த பயிருடையதாயும் இப்பொழுது

மிருக்கிறது. எவரும் தெரிந்தோ தெரியாமலோ பக்தியுடனாவது பக்தியில்லாமலாவது நீராடின் ஐயமின்றி எல்லாப்பாவங்களினின்றும் விடுபடுவார்.'

சுயக்ஞர்:—'ஐயங்களெல்லாம் நீக்குகின்றவரே! குடமுனிவர் அங்கு எப்பொழுது சென்றார்? அதனை உள்ளபடி எனக்குச் கூற வேண்டும்.'

சாம்பர்:—'ஈச்வரர் வேதாரண்யத்திற்கு அகத்தியரையனுப்பினார். அதற்காக அகத்தியர் வேதாரண்யத்திற்குச் செல்லுகையில் திருவாஞ்சியம் சென்று காசியைவிட ஆயிரம் பங்கு அதிகமகிமை அதற்கிருப்பதை உணர்ந்து, ஒரேயிடத்தில் குப்தகங்கையில் அறுபத்தாறுகோடி தீர்த்தங்களுடைய ஸாந்நித்யமிருப்பதைக் கண்டு மகிழ்ந்து இதற்கு ஒத்த ஸ்தலம இப்புவியிலில்லையென்றறிந்து சில நாள் அங்கேயே வசித்துவந்தார். அப்பொழுது திருவாஞ்சிய லிங்கத்திற்கு அக்னிதிக்குசமீபத்தில் உயர்ந்த சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து விதிப்படி வழிபட்டு வேதாரண்யம் சென்றார். இப்பொழுதும் அகத்தியேசுவரர் என்ற பெயருடன் இலிங்கம் அங்கு இருக்கிறது.'

சுயக்ஞர்:—'குப்தகங்கை வைபவத்தைப்பற்றி நன்கறிந்தேன. ஸ்நானத்திற்குக் காலத்தைப்பற்றி விசேஷமாக யுள்ளபடி கூறியருள வேண்டும.'

சாம்பர்:—'சூரியன் விருச்சிகத்தை அடைந்திருக்கும்போது (கார்த்திகை மாதம்) முப்பது நாளும் நீராடுபவனுக்குப் பாவங்களெல்லாம் நீங்குவதுடன வேண்டிய பொருளெல்லாம் உண்டாகும். விஷு அயன காலங்களிலும், மற்றும் எல்லா புண்ய காலங்களிலும் ஏகாதசி, அட்டமி, அமாவாசை, சூரிய சந்திர கிரகணங்கள், வியதீபாதம், துவாதசி, யுகாதிகள், மன்வாதிகள், சங்கராந்தி, அர்த்தோதயம், மகோதயம், ஆவணி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இவைகளில் எவர் நீராடுகின்றனரோ அவரது முற்பிறவியிலுண்டான மகா பாதகங்களது கூட்டங்கள் நசித்துவிடுகின்றன. எந்த ஸ்திரீகள் குப்தகங்கையில் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடுகின்றனரோ அவர் தக்க கணவர், செல்வம், மக்கட்பேறு, ஆயுள், உடல் நன்மை, நற்குலப் பிறவி, எல்லா அபீஷ்டங்களையும் இவ்வுலகில் பெற்று, சிறந்த போகங்களை அனுபவித்து, மறுமைப் பயனடைவார். ரஜஸின்

சேர்க்கை முதலிய பாபங்களினின்றும் விடுபடுவார். ஆகையால் இக் காலங்களில் நீராடுதல் எப்பொருளுமளிக்கும். இத்தகைய சிறந்த காலங்களை உனக்குச் சொன்னேன். தான விஷயத்திலும் ஆதரவுடன் தானம் செய்யவேண்டும் விதத்தையும் சொல்லுகிறேன்.

உலகில் பாவம் புண்ணியம் இவைகளுடைய பயன் நன்கு வெளிப்படையாகத் தெரிகிறது. தேவர், தானவர், மனிதர், விலங்கு, புழு, பறவைகள் முதலியனவும் பல்வகைய பிறவிகளில் பிறத்தலும், பலவகை நோயுறுதலும், சாவு இல்லாமையும், மூப்பும் குருட்டுத்தன்மையும், கூன்தன்மையும், செல்வமும், பெருமையும், பண்டிதனாயிருக்கும தன்மையும், அறிவின்மையும், ஆகிய இவைகளும், மற்றும் எல்லாம் உலகில் இயற்கையாக உண்டாகின்றன. இவை எங்ஙனம் மாறுபடும்? எவர் இக்கரும பூமியில் நியாயமாகப் பொருளீட்டி நற் பாத்திரங்கட்குக் கொடுக்கின்றனரோ அவர்தான் தனிகர்கள். அவர்தான் தமக்கு இதம் செய்தவராவர்.

உடலை வருத்திச் சிறிதோ பெரிதோ பொருளீட்டிச் சிரத்தையுடன் நல்லோர்க்குக் கொடுத்தால் அது எல்லையற்றதென்று சொல்லப்படும். தானங்களுள் சிறந்தது அன்னதானம். அன்னதானந்தான் மனிதருக்குப் பிராணனாயிருப்பதால் அன்னமிடுபவர் பிராணனளித்தவராக மதிக்கப் படுவார். உலகில் அன்னமிடுபவன்தான் பசு உடையவனாகவும், புண்ணியம் செய்தவரில் சிறந்தவனாகவும் மக்கட்குப் பிரீதி செய்பவனாகவும் பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டவனாகவும் ஆவான். அன்னமிடுபவன் எல்லாம்கொடுத்தவன் என்று எண்ணப்படுவான். ஆகையால் அன்னந்தான் சிறந்தது. பானீயம் (நீர்மோர்) எல்லா மக்கட்கும் அப்பொழுது மகிழ்வுண்டாக்குவதாம். இந்த சிறந்த பானீய தானத்தால் நாரதர் மேன்மையடைந்தார். பொன், செல்வம், இரத்தினம், ஆவினம், தானியம், வீடு, யானை, தேர், ஆடை, கிராமங்கள், பயிர்நிறைந்தபூமி, கன்னிகை, கல்வி, மருந்து, மந்திரம், குடை, பாதக்குறடு, சிறந்த ஆஸனம், படுக்கை, வெற்றிலை, பாக்கு, மாலை, விசிறி, சிறந்த மான்தோல், பூணூல், கழி, குளிர்காலத்தில் தீயிடுதல், எண்ணெய், பழம், எருது, காவல்புகுந்தோரைக்காத்தல் இவை எல்லாம் இரண்டு உலகங்களையும் விரும்புபவர் செய்யவேண்டிய நற்குணங்களாம். கொடுக்கப்பட்ட பொருள்தான் துறக்கத்தில் துய்க்கின்றான். ஆகையால் நல்ல சுரோத்திரியர்களுக்கு முயற்சி செய்தாவது அன்னதானம் செய்யவேண்டும். ஆகை

யால் ஒருநாள்கூட தவறாமல், தானம் செய்யவேண்டும். முன்பு கொடுக்கப்படாதது ஒரு மனிதனாலும் இப்பொழுது அடையப்படுகிறதில்லை. ஆகையால் தானத்திற்கு நற்பாத்திரமறிந்து விசாரித்துக் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் சாம்பலில்செய்த ஓமம் போலாகும். ஆதலால் புக்தி, முக்தியளிப்பதான அத்தீர்த்தத்தில் அவசியமாகத் தானம்செய்யவேண்டும். தானத்திற்குப் பாத்திரங்கள் யாவரென்று சொல்லுகிறேன்; ஒரே மனதாகக் கேள்.

வேத வேதாந்தங்களின் உண்மையறிந்தவரும், சாத்திரமறிந்தவரும் புலன்வென்றவரும், சிரௌதஸ்மார்த்த கர்மத்தைச்செய்பவரும், வறிஞரும், குடும்பிகளும், தவம்செய்தவரும், தீர்த்தயாத்திரை செய்பவரும், செய்நன்றியறிபவரும், மிதமாகப்பேசுபவரும், குருபணிவிடையிற் பற்றுள்ளவரும், தினந்தோறும் வேதாத்யயனத்தில் பற்றுள்ளவரும், சூத்திரான்னம் உண்ணாதவரும், சூத்திரனிடத்தில் தொண்டுபுரியாதவரும், மகாதேவனை வழிபடுபவரும், திருநீறு உருத்திராக்ஷம் அணிந்தவரும், பிறனுக்குத் தீமை செய்யாதவருமாகிய அந்தணர்தான் இத்தானத்திற்குப்பாத்திரர்கள் என்று சொல்லப்படுவார்கள். அன்னபலத்தை விரும்புபவர் இவர்கட்குக்கொடுக்க வேண்டியது. ஏனையோர்க்குக் கொடுக்கக்கூடாது.

சுயக்ஞனே! கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடுதலின் முறையைப்பற்றி உனக்குச் சொன்னேன். இந்த விதியை எவன் தேவாலயத்திலாவது மடத்திலாவது அந்தணரது கூட்டத்தின்கண்ணாவது சொல்லுகிறானோ அவனுக்கு சிவபிரான் அருள் புரிகிறார். இந்த முறையை எவன் கேட்டுத் தான் அப்படிச் செய்கிறானோ அவன் எல்லா பாவங்களினின்றும் விடுபட்டு சிவலோகத்தையடைவான்.'

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை நீராட்ட விதியென்ற பதின்மூன்றாவது அத்யாயம் முற்றிற்று.]

---

## இருபத்தெட்டாவது அத்யாயம்.

சுயக்ஞர் :—'சாம்பரே கைலாய முதலிய சிறந்த தலங்களிருக்க திருவாஞ்சியத்தில் சிவபிரான் வந்திருக்கக் காரணம் யாது? அதனை எனக்குச் சொல்லவேண்டும்.'

சாம்பர்:—' ஆதிகல்பத்தில் சிவபிரானது இடது பக்கத்தி லிருந்து தோன்றிய மகாவிஷ்ணுவானவர் உலகைக் காப்பாற்ற ஆற்றல் பெறவேண்டி திருவாஞ்சியத்தையடைந்து, சாம்பரைக் குறித்துக் கொடிய தவம் செய்துவந்தார். அவருக்கு அவ்விடத்தில் அநேக கோடி வருடங்கள் கடந்தன. இருந்தும் பூகைலாசநாதர் அவருக்குப் பிரசன்னமாகவில்லை. பிறகு இலக்குமி கணவனுகிய விஷ்ணுவானவர் மிகவருந்தித் தனது தலையை அறுத்து அக்னியில் ஏறிய விரும்பினபொழுது ஜோதிலிங்க வடிவரான மகாதேவர் முன்பு தனது ஒளியால் உலகெல்லாம் ஒளிரச்செய்து வந்து தோன்றினர். அநேக சூரியனுக்கு ஒப்பானவரும் அநேக அக்னிக்கு ஒப்பானவருமான சுயம்பூதமான இலிங்கத்தை விஷ்ணுவானவர் பார்த்து மகிழ்ந்து, இனிமையான வாக்கால் ஈசனைத் துதித்தார்.

மறைமுடியால் அறியக்கிடப்பவரும் எல்லையற்ற சுகமுடையவரும், கல்யாணங்கட்கு உறைவிடமும், தொண்டர் துயர் கடிபவரும், சுவயம்பிரகாசரும், மாயையறுப்பவரும், ஆகிய உமக்கு வந்தனம்செய்கின்றேன. மகேச்வரரே! எனக்கு இபபுவியைக் காக்கும் திறமை அளிக்கவேண்டும் என்று வேண்டினர். உடனே பிறைசூடியான சாம்பர் இலிங்கத்தினின்றும் வெளிக்கிளம்பிச் செந்தாமரைக் கண்ணரான ஹரியைப்பார்த்துக் கூறினர்.

'அரியே! முன்பு பிரளய காலத்தில் வேதங்களெல்லாம் என்னை வந்தடைந்தன. அவ்வேதங்களிலிருந்து உலகம் காக்கும் திறலறியலாம். ஆகையால் காக்கும் விஷயங்களைக் கூறும் வேதத்தை என்னிடமிருந்து கைக்கொள்வாய்' என்று அரிக்கு அரன் உபதேசஞ் செய்தார். அரியானவர் மகிழ்ந்து அரனிடமிருந்து வேதத்தின் பொருளையும் காக்கும் தொழிலையும் கற்றறிந்து மிக மகிழ்ந்து பரமசிவனைக்குறித்துச்சொன்னர். 'அருட்கடலாகிய பரமசிவனே! இக்கலியுகத்தில் எப்பொழுதும் நீர் பிராணிகளுக்கெல்லாம் நன்மை விளைவிக்க லிங்கவடிவமாகயிருக்கவேண்டும்' என்று அரி வேண்டினர். பகவான் அங்ஙனம் இருக்க ஒப்புக்கொண்டு மறைந்திருக்கிறார். இந்த லிங்கம் சுவயம்புவாயும் தனது ஒளியுடையதும் நிரஞ்சனமாயும் திருவாஞ்சியத்தில் தோன்றுகிறது. இந்தலிங்கத்தைப் பார்த்தாலும் சிறந்த பாவங்களெல்லாம் நீங்கிவிடுவனவாகும். கைலாயம் முதலிய பல தலங்களிருந்தும் விஷ்ணுவுக்கு அருள் செய்யவேண்டித் திருவாஞ்சியத்தில் பரமசிவன் இங்ஙனம் இருந்து கொண்

டிருக்கிறார். இப்பொழுதும், அந்தலத்தில் விஷ்ணுவும் இலக்குமி யின்றித் தனியாகயிருந்துகொண்டு உலகு காக்கும் ஆற்றலை பரம சிவனிடம் வேண்டிககொண்டிருக்கின்றார். அந்தத் திருவாஞ்சியத் தில் இலிங்கததின் மகிமை மிகவும் ஆச்சர்யமானது. அதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்' கேட்பாயாக.

ஸ்வயம்பு லிங்கங்கள் மேரு மந்திர, கைலாச, காசி, ஸ்ரீசைலம் முதலிய சித்தியளிக்கும் பல தலங்களிலும் தோன்றுவதற்கு முன்பே, ஸ்ரீ கந்தாரண்யத்திற்கு இடையே லிங்கமானது தோன்றிற்று. ஆகையால் இதற்கு ஒத்ததும் இதனைப்போன்றதுமான பழமையா னதும் இல்லை. வேதம் ஸ்மிருதி புராணங்களிலுமில்லை. முனிவரே! இது வேண்டும் பொருளெல்லாம் தருமாற்றலுடையது. ஆதலின் வாஞ்சிநாதன் என்று பெயரிட்டனர். ஸ்ரீ கந்தாரண்யத்தில் தோன் றியதால், ஸ்ரீ கந்தாரணயர் என்றும், பூகைலாசத்திலிருப்பதால் பூ கைலாயநாதரென்றும், அந்தணர் கொலைப்பாவம் நீக்கியதால் பூரு ணக்நேசர் என்றும் பெரியோர் பெயர் அறிவர். மற்றும் பல காரணங் களைக்கொண்டு பல பெயரும் வாய்த்திருக்கின்றன. அந்த லிங்கத் துக்கு ஒத்தது இதுவரையிலுமில்லை. இனியும் உண்டாகப்போவது மில்லை. நான்குவித புருடார்த்தங்களுக்கும் இருப்பிடமானது. ஆகையால் யாவரும் எல்லா இலிங்க மயமானதும், சிறந்ததும், உண் மையுமான இவ்விலிங்கமானது எல்லோராலும் தெரிசிக்கத்தககது. யாகங்கட்குள் அச்வமேதமும, மலைகளுள் இமயமும், நோன்புகளுள் சோமவார நோன்பும், மநதிரங்களுள் ஆறெழுத்தும், தானங்களுள் அன்னதானமும, சாதிகளுக்குள் அந்தணரும், பாத்திரங்களுக்குள் சிவபக்தரும், தேவருக்குள் மகாதேவரும், தருமங்களுக்குள் சிவ தருமமும, மரங்களுக்குள் கற்பகமும், ஆவிற்குள் காமதேனுவும், தீர்த்தங்களுக்குள் குப்தகங்கையும், இரத்தினங்களுக்குள் இந்திர மணியும், ஆகிய இவை எங்ஙனம் சிறந்தனவோ அதுபோல இலிங் கங்களுக்குள் திருவாஞ்சிய லிங்கமும சிறந்தது. அந்த லிங்கந்தான் உலகிற்குக் காரணமும், பரம் பொருளுக்கும் பரமானதும், சிறந்த வடிவமானதும் சக்தியெல்லாம் அளிப்பதுமாகும். அத்திருவாஞ்சிய லிங்கத்துக்குள் சதாசிவர் வசித்துவருகிறார். உலகிலுள்ள சுயம்பு லிங்கங்களெல்லாம திருவாஞ்சிய நாயகரைத் தெரிசிக்க வந்து சேரு கின்றன. எந்த மக்கள் இந்த ஸ்வயம்பு லிங்கத்தை பக்தியுடன் தெரிசிக்கின்றனரோ அவர் கைலாயநாதரை நேரில் தெரிசித்தவரா வார். சூர்யோதயமானவுடன் இருள்போலவும், சிங்கத்திற்கு எதி

ரில் யானைபோலவும், நல்லறிவின் முன் அவித்தை போலவும், கருடன் முன் பாம்புகள் போலவும், பெருங்காற்றின்முன் மேகங்கள் போலவும், இந்திரன்முன் மலைகள் போலவும் திருவாஞ்சியேசரைத் தெரிசிப்பதால் பாபங்கள் நீங்கிவிடுகின்றன. இன்னும் காமத்தால் புத்தியும், குரோதத்தால் தபசும் போலவும், குற்றங்களெல்லாம், செருக்கினால் கல்விபோலும், சிறந்த ஔடதத்தால் நோய்கள்போலும், உலோபத்தால் நற்குணங்கள் போலவும், நெருப்புத் தணலால் பஞ்சுப்பொதிபோலவும், நீங்கிவிடுகின்றன. காலையில் ஒருதரம் தரிசித்தால் நாற்கடல் சூழ்ந்த பூமி தானம்செய்த பலனடைவான். மத்தியானத்தில், ஸ்ரீ கந்தாரண்யேசரைத் தெரிசித்தால் ஆயிரம்கோடி காராம்பசு தானத்தின பலனடைவான். சாயங்காலத்தில் தெரிசித்தால் கோடி கோதான பலனையடைகிறான். கொலைபாதகம் தீர்தத இந்தத் திருவாஞ்சியேசரை நள்ளிரவில் ஒருதரம தரிசித்தால் அச்வமேதம் முதலிய யாகங்களின் பலனடைகிறான். நல்லறிஞன் இம்மாதிரி ஆராய்ந்து நாளுக்கு நாள் புண்ணியம் வளர்ந்தாலும் திருவாஞ்சியேசரை அந்த வேளைகளில் வலம வருதல், வணங்கல், துதித்தல், முதலியவைகளால் வழிபடுவானாயின் பாபங்களினின்றும் நீங்கியவனாகிச் செல்வமெல்லாம் பொருந்தி இங்கு சிறந்த போகங்களெல்லாம் துய்த்து ஸாயுஜ்யத்தையும் அடைகிறான். அவ்விலிங்கத்தை மனதில் நினைத்தாலும் பத்துப் பிறவிகளில் சேர்த்துவைத்த பாபம் தீயால் பஞ்சுப் பொதிபோல் நிச்சயம அழிந்துவிடுகின்றன. திருவாஞ்சியேசரைத் தெரிசிக்கவேண்டுமென்று வீட்டைவிட்டுப் புறப்படுபவனுக்கு ஆயிரம் பிறவிகளில் செய்த பாபங்கள் விலகிவிடுகின்றன. இலிங்க வடிவமான திருவாஞ்சியநாதரைத் தெரிசிப்பதால் ஆயிரம் அச்வமேதத்தின் தன்மையை அடைகிறான். துதிகளாலாவது ருத்திர ஸூக்தங்களாலாவது திருவாஞ்சியேசரைத்துதித்தால் ஆயிரம் ராஜஸூயத்தின் பலனையடைகிறான். இத்தலத்தில் ஆசமனம்செய்யக் கைக்கொள்ளும் நீரளவு நீர்கொண்டு இலிங்கத்திற்கு அபிஷேகம்செய்தார், ஏனைய தலங்களில் பல பொற்குடங்களால் மங்களாபிஷேகமசெய்த பலனை அடைவார். ஒருவன் பக்தியுடையோனாய்த் திருவாஞ்சியேசருக்கு பஞ்சகவ்யமும் பஞ்சாமிருதமும சந்தனம் தூயநீர் முதலியவைகளைக் கொண்டு சிறந்த பூஜை செய்தால், அவன் நான்கு புருடார்த்தமும் பெறுவான். ஆடையால் வடிக்கட்டிய தூயநீர் கொண்டு அபிஷேகம் செய்தோன், லக்ஷம் அச்வமேதப் பயனை ஒரே கடவையில் பெறுகிறான். சந்தனம், கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம்

முதலிய கந்தங்களைக்கொண்டு அணிபவன் தேவமங்கையருடன் மிக்க உத்சவத்தைப் பெறுவான். அத்திருவாஞ்சிய லிங்கத்திற்கு ஒரு மலர்கொண்டு அர்ச்சனை செய்வானாயின் ஏனைய பிடங்களில் நூறு பொன் மலர் கொண்டு வழிப்பட்ட பூசையின் பலனடைவான். ஒருக் கால்தூபம் அளித்தால் ஈசன் ஆயிரங் குற்றங்களையும் மன்னித்துக் கடன் கடலினின்றும் அவனைத் தூக்கி விடுவான். நைவேத்தியம் சமர்ப்பித்தவுடன் கற்பூர ஆரத்தி செய்யவேண்டும். கந்தாரண்ய நாதருக்குத் தாம்பூலமளிப்பவன் இங்கு எல்லாயின்பமும் துய்த்துச் சிவலோகத்தில் பெருமை பெறுகிறான். எவன் பக்தியுடன் திருவாஞ்சியேசரது பூஜைக்காக, மணி, அபிஷேகக் குடம், தூப பாத்திரம், தீப பாத்திரம், அர்க்கிய பாத்திரங்கள் கொடுக்கிறானோ அவன் பாவங்களினின்றும் நீங்கி எல்லா இன்பங்களும் அனுபவிக்கிறான். எவன் இப்புவியில் திருவாஞ்சியரைப் பக்தியுடன் வணங்குகிறானோ அவன், மூவுலகும் வணங்கும் கழலுடையவனாகி இப்பூமிக்கு அரசனாகவும் ஆவான். அவரது சன்னதியில் ஓமமும், ஜபமும், கொடையும், சிறிதளவாகச் செய்தாலும், சிறந்த புண்ணிய பலனளிப்பதில் ஐயமின்று. ஸ்ரீ கந்தாரண்யத்திலிருக்கும் திருவாஞ்சியேசரது மகிமையைச் சொல்ல யாருக்குத்தான் ஆற்றலுண்டு. ஸ்ரீ கந்தாரண்யத்திற்கு ஒத்த தபோவனமும், குப்தகங்கைக்கு ஒத்த தீர்த்தமும் ஸ்ரீ கந்தாரண்யேசரது லிங்கத்திற்கு ஒத்த லிங்கமும், வேறு எங்குமில்லை. இருடிகளிற் சிலர் திருவாஞ்சியேசரை இலிங்க வடிமான மகாலிங்கமென்றும், பூகைலாயத் தலைவரென்றும், மற்றும் சிலர் ஸ்ரீ கந்தாரண்யேசனென்றும், கொலைபாதகம் தீர்த்தானென்றும், மற்றும் சிலரும் விச்வநாதரென்றும் கூறுவர். ஸ்ரீ கந்தாரண்யத்தில் சிவராஜதானியில் உலகின் நன்மைக்காக ஏழு பாதாள உலகிலிருந்தும் தானே தோன்றியதாக இவ்விலிங்கமிருக்கிறது. அயனது பிரளய காலத்தில் தேபு வடிவமாக அச்சிவலிங்கமிருக்கிறது. கிருதயுகத்தில் அந்த லிங்கம், இரத்தின மயமாயும், திரேதாயுகத்தில் பொன் மயமாயும், துவாபரயுகத்தில் வெள்ளி மயமாயும், கலியுகத்தில் கல்மயமாயுமிருக்கின்றது.

இங்ஙனம் இப்பொழுது இந்த லிங்கத்தின் மகிமை இருடிகட்கெல்லால் உபகாரமாகச் சொல்லப்பட்டது. இச் சிறந்த இலிங்க மகிமையை தேவகோட்டத்திலாவது, ஆற்றங்கரைகளிலாவது, தினந்தோறும் எவன் படிக்கிறானோ, எவன் கேழ்க்கிறானோ, அவனது பர்பங்களெல்லாம் நிச்சயமாக அழிந்துவிடுகிறது. இதனை உண்

மையாகச் சொன்னேன். அவன் எண்டு போகங்களெல்லாம் துய்த்து சுவர்க்கம் அடைகின்றான்.

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சிய லிங்கமகிமை வருணனை என்ற பதினான்காம் அத்யாயம் முற்றிற்று.]

---

## இருபத்தொன்பதாவது அத்யாயம்.

சாம்பர் :—'இதற்குமேல் திருவாதிரை மகிமையைக் கூறுகிறேன். முனிவனே கேட்பாயாக! இம்மை மறுமைப் பயனை அளிப்பதும் முக்தியளிப்பதும் பூகைலாயமென்று பெயர் பெற்றதுமான திருவாஞ்சியத்தில மார்கழிமாதத்தில் திருவாதிரையில் குப்தகங்கையில் நீராடித் திருவாஞ்சிய நாதரையும் சபாபதியான நடராஜரையும் பக்தியுடன் எவர் தெரிசிக்கின்றாரோ, அவர் பிறவிக கடலினின்று விடுபடுவார். அவர் முக்தியடைவதும் திண்ணமாம். எவர் ஸ்ரீ கந்தாரண்யத்திலுள்ள நடராஜரைச் சேவிக்கின்றனரோ அவர் ரௌரவம முதலிய நரகங்களை அடைவதில்லை. ஊன் கண்ணீர் நிறைந்த ரௌரவம் என்னும் நரகமும், வைதரணீ நதியும், நாய் தின்றலும், சிறுநீர் பருகுதலும், இரத்தம் குடித்தலும், நாய் மாம்சம தின்றலும், புழுத் தின்றலும், தீப்புகுதலும, முள்ளிலமேறுதலும், தீப்பொழிதலும், காலசூத்திரம் என்ற கற்பொழிதலும், காய்ச்சிய சூலத்தேற்றலும, காய்ச்சிய கருங்கல்லை ஏற்றுதலும், மலத்தின் மடுவிற் பொகட்டலும், மலமுண்ணச் செய்தலும், ரேதஸைக் குடிக்கச் செய்தலும், அரம்பத்தால் அறுத்தலும, என்பு மூட்டுகளில் உடைத்தலும், கற்பொழி யந்திரத்தால் வருத்தலும், காற்றடித்து வீழ்த்துதலும், மேலும் கீழுமாகத் தூக்கி யெறிதலும், உலக்கையால் அடித்தலும், கதையால் அடித்தலும், ஆகிய இந்த நரகங்களை ஆருத்திராதெரிசனம் செய்தவன் பார்ப்பதில்லை. சபாபதியைத் தெரிசித்தவர்கள் பாசக் கயிற்றினால் கட்டுண்டலும், புகை குடித்தலும், பல்வகை சூலத்தால் ஏற்றப்படுதலும், முகம், மூக்கு இவைகளில் மிளகாய் நீர் தெளித்தலும், 'யானையின் தந்தங்களால் அடிக்கப்படுதலும், மலைப்பாம்புகளால் கடிக்கப் படுதலும், ஸ்நாயுவைக் கறத்தலும், என்பு முறித்தலும், காரநீர் குடித்தலும், கொதிக்கும் இரும்பு குடித்தலும், மிகவும் வெப்பமான நீர் குடித்தலும், கீழ்முகமாக இருமுங்கோழை நீர் குடித்தலும், பித்த நீர்

குடிப்பித்தலும், சிறுநீர் குடிப்பித்தலும், ரேதஸைக் குடிப்பித்தலும், மிக வெப்ப மண்மேட்டில் நீராடுதலும், கொதி இரும்பிற் படுத்தலும், கொதிநீர் கொட்டுவித்தலும், முகம் கண்களிற் ஊசியேற்றுதலும், ஆண்குறியிலும் விருஷணத்திலும் இரும்புக் குண்டு கட்டுதலும், மிகக்கூறிய அம்புப் பாயில் படுத்தலும், மற்றும் கும்போகம் முதலிய பல நரகங்களையும் பார்ப்பதில்லை.

திருவாஞ்சியேசரான சபாபதியைத் தரிசித்தோன், மீண்டும் தாய்ப்பால் குடியாதவனாகிப் பிறவிக்கடலினின்றும் முத்தியடைகிறான். இதில் ஐயமின்று. ஆகையால் அன்றைய தினத்தில் சபாபதிக்கு மகிழ்ச்சியின் பொருட்டுச் சிறந்த அந்தணருக்கு அறுசுவை உண்டி பக்தியுடன் எவன் அளிக்கிறானோ, அவனை முத்தியாகிய பெண் விரும்புகின்றனள். ஆகையால் முனிவரே அன்று அவசியமாக அன்னமிடவேண்டும். இம்மை மறுமைப் பயனளிக்கும் திருவாஞ்சியத்தில் ஆருத்திரையில் காலையில் எழுந்து குப்தகங்கையில் நீராடி நடேசனுக்கு அபிஷேகஞ் செய்து தனது ஆற்றலுக்குத் தகுந்தபடி நெய், அன்னம், தயிர், பால், மற்றும் பல பதார்த்தங்களையும் கொண்டு நிவேதனம் செய்கிறானோ அவனது புண்ணிய பலன்களையும் சொல்லுகிறேன்; கேள்.

முனிவரே :—' அவன் பிள்ளை, நண்பர், மனைவி, முதலிய பேருடன் சண்டு நீண்டகாலம் எவ்வித போகமும் துய்த்து முடிவில் நடேசரது அருளால் சிவலோகத்தில் நீண்டகாலம் வசிப்பான். மார்கழி மாதம் ஆர்த்திரையில் ஒரு அந்தணனுக்காயினும் அன்னமிடவேண்டும். பிறவியின்றி நீங்க எண்ணமுடையவன நீராடித் திருவாஞ்சியேசரையும், சபேசரையும் தரிசிக்கவேண்டும்.

சுயக்ஞர் :—' குப்தகங்கையில் மார்கழித் திருவாதிரையில் நீராடி ஸ்ரீ கந்தாரண்யேசரையும், சபேசரையும் தெரிசித்துப் பிறவியினின்று முத்தியடைந்தவன யாராவது இருக்கிறானாயின் எனக்குச் சொல்லவேண்டும்.

சாம்பர் :—' இந்த விஷயத்தில் முன்னையதோர் சரிதம் உனக்குக் கூறுகிறேன். அறிவுகடல் என்ற அந்தணன் ஒருவன் இருந்தான். அவன பிறந்தது முதல் பிறவியிலிருந்து விடுபட விரும்பியவனும், நற்புத்தியுடையவனும், புலன் வென்றவனும், இருந்தான். அவன் சாத்திரங்களெல்லாம் படித்து வேதாந்த நூல் முத

லிய பல நூல்களிற் பலகால் பயின்றும் மேன் மேலும் கற்க விருப்பமுடையவனும் இருந்தான். அங்ஙனமிருந்தும் அவனுக்கு அறிவு உண்டாகவில்லை. ஆதலால் வருந்தியவனாகி வசிட்டரின் கொள்ளுப்பேரனான வியாசரைச் சரண்புகுந்து விதிப்படி வணங்கித் துதித்து அறிவு வடிவாயும், தவக்கடலுமான வியாஸரைப் பார்த்துக் கேட்டான்.

ஞானப்தி:—'சத்தியவதியின் மகனும், மறைக்குக் காரணனும் அருட்கடலுமாகிய வியாசரே! எனது வேண்டுகோளைச் செவி சாய்ந்து என்னிடத்து அருள்வைத்து எளியேனை அடியனாகக் கருதி முக்தி உபாயம் கூறவேண்டுகிறேன். ஞானத்தினால் பிறவியினின்றும் முக்தியுண்டாகுமென்று மறை முடிவு கூறலால் வேதாந்த சாத்திரங்கள் அத்யாத்ம நூல்கள் இவற்றைப் பலகால் கற்றும் எனக்கு அறிவு தோன்றவில்லை. மக்கட்கு இக்கலியில் பிறவி கடக்க வழி யாது?' என்று கேட்டான்.

இங்ஙனம் கேட்கப்பட்ட வியாசர் ஞானப்தியைப் பார்த்து ஞானப்தியே! பிறவி கடக்கக் காரணம் உனக்குக் கூறுகிறேன். இக்கலியில் மக்கட்கு அறிவு தோன்றுவது முற்றிலும் முடியாது. அங்ஙனமிருந்தும், வீடு பெறவிரும்பும் உனக்கு வீடு பெறுதற்குரிய மிக்க தூயதான காரணத்தைச் சனத்குமாரர் முதலிய முனிவரால் கேட்கப்பட்ட அப்பன் அவர்கட்குக் கூறியபடி இப்போது சொல்லுகிறேன்.

'பூமியில் அக்னி மூலையில் வன்மீகம் என்ற திருவாரூர் தலத்திற்கு வாயுதிசையில் அரையோஜனை தூரத்தில் பூகைலாயம் என்ற பெயருடைய தலம் இக்கலியில் திருவாஞ்சியமென்ற பெயருடையதாமாக இருக்கிறது. அது காசிக்கும் சிறந்ததென்றும் பிரமவாதிகளான இருடிகள் கூறுவர். அங்கே சென்று மார்கழி திருவாதிரையில் முனி தீர்த்தத்தில் நீராடித் திருவாஞ்சியேசரான விச்வேசரையும், சபாபதியையும், திருவாஞ்சியநாயகியையும், முக்திக்காகத் தரிசிப்பாய். இல்லாவிடின் இக்கலியில் அறிவில்லாமல் வீடு கிடைக்காது. ஆகையால் மிக்க முயற்சியுடன், ஆங்கு ஆர்த்திரைதரிசனஞ் செய். ஞானபதியே! யாவரும் இதனையறிந்து முக்தியடைய இம்மை மறுமைப் பயனளிக்கும் திருவாஞ்சிய லிங்கத்தையும், ஸர்வேச்வரரையும், சச்சிதானந்தத் தாண்டவத்தையும் மார்கழி திருவாதிரையில் சென்று வணங்கக்கடவாய். அந்தணனே! உனக்கு இங்ஙனம் முக்

திக்கு வழி சொன்னேன். இதனை ஒருவருக்கும் கூறாதே' என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு வியாஸர் தமது குடிலில் இருந்தார்.

உடனே ஞானப்தியானவன் கிளம்பித் திருவாஞ்சியம் சென்று தனுர் மாதத்தில் ஆர்த்திரையில் குப்தகங்கையில் ஸ்நாநாதி வாஞ்சிநேயரையும், நடராஜரையும் தரிசித்து நீண்டகாலம் அங்கிருந்து அநேக போகங்கள் அனுபவித்து முடிவில் நடேசரது அருளால் முக்தி யடைந்தான்.

ஆருத்திரா தரிசன மகிமையைக் கூறும் சரிதமானது ஆயுள் தருவதாகும். இதனைப் படிப்பவனும், கேட்பவனும் பாவங்களி லிருந்து விடுபடுவார். அம்மாதத்தில் வியதீபாதத்தில் அத்திரு வாஞ்சியத்தில் ஒரு வறிய சிறந்த அந்தணனுக்காயினும் அன்னமிடு பவன், இவ்வுலகில் பிள்ளை மனைவி முதலியோரால மிக்க செல்வம் அனுபவித்தும், பலவித போகங்கள் துய்த்தும், கைலாயமடைந்து பிறகு பூமியில் பிறந்து அரசர் தலைவனாவான்.

[சாம்போப புராணத்தில் ஆருத்திரா தரிசன மகிமை என்ற பதினைந்தாம் அத்யாயம் முற்றிற்று.

---

## முப்பதாவது அத்யாயம்.

சாம்பர்:— இவ்விஷயத்தில் முன்பு நடந்த ஒரு சரிதம் கூறு கிறேன். முனிவரே! துவாபரயுக முடிவில் ராதந்தர கல்பத்தில் விந்திய தேசத்தில் தோன்றிய ஒருவன் மிகுந்த கொடியவனாய் காக ஜங்கன் என்ற பெயரை உடையவனாகவும் இருந்தான். அவன் நோ யால் துன்புற்றுத் தனது உறவினருடன் வெளிப்புறப்பட்டுக் காட் டில் தென்திசையில் உறைபவனாய் இருந்தான். இங்ஙனம் காட்டின் கண் திரிந்து முடிவில் ஸ்ரீ கந்தாரண்யம் வந்து சேர்ந்தான். ஆங்கு வந்தவுடன் அதனைப்பார்த்து மகிழ்ந்தவனாகி எங்கும் பார்த்தான். அங்கு உணவுப்பொருள் நிறைந்திருத்தலைப பார்த்துத் தனக்கு ஆகாரம் கிடைக்குமென்று எண்ணி அங்கேயே இலை வீடு அமைத்து அங்குச் சிறந்த திருவாஞ்சியேசரது தலத்தையும் அவருக்கு வடக் கில் பெரிய நீர் நிலையையும் கண்டு செல்வமற்றவன் செல்வம் கண் டதுபோல் மகிழ்ந்து தான் அங்கேயே நீண்டகாலமிருந்து விலங்கு களையெல்லாம் கொன்றுகொண்டு தன்னையும் தனது உறவினரையும்

வளர்த்து மிகமகிழ்ந்தவனாகித் திரிந்துவந்தான். இங்ஙனம் அவன் திரிந்துகொண்டிருக்க ஒரு காலத்தில் கந்தாரண்யத்தைச் சுற்றி அனேக யோஜனை தூரம் விலங்குகளே அவனால் இல்லாமற்போயின. பிறகு ஒருகால அறிவிற் சிறியவனான அந்தணனொருவன் அங்கு தற்செயலாகக் கையில் சோற்றுமூட்டையுடையவனாயினும் பசி தாகத்தால் வருந்தியவனாய் மார்கழிமாதம் நண்பகலில் நல்ல தண்ணீர் தேடிக்கொண்டுவந்தான். மிகக் கொடியவனான அக்காகஜங்கன் அவ்வந்தணனைக் கண்டு, துரத்திப் பின்பற்றிச் சோற்றுமூட்டையைப் பிடுங்கிக்கொண்டு பேசாமல் எங்கேயாவது உனக்குப் பிடிப்பான இடத்திற்கு ஓடுவாய்; இல்லாவிடில் நான் உன்னைக்கொன்றுவிடுவது நிச்சயமாயிருத்தலின் உனக்கு உயிரின்கண் பற்று இருப்பின் பேசாமல் போய்விடு என்று பகர்ந்தான்.

உயிர்கொல்லும் வேடனது இத்தகைய மொழியைக்கேட்ட அவ்வந்தணன் அச்சோற்றுமூட்டை போனதால் மிக்க வருத்தமுற்று மூர்ச்சையடைந்தான். அப்பொழுது அவ்வந்தணனது உயிர் பசியாலும் கிழத்தனத்தாலும் பிராணன்கண் கழுத்தளவாகயிருந்தது. அத்தகைய நிலையில் வேடனுக்கு முன்னைய புண்ணியவசத்தால் மனதில் அருள் உதித்தது. உடனே வேடன் திருவாஞ்சியேசருக்கு வடக்கிலிருப்பதும் பிறவியறுப்பதுமான குப்தகங்கையில சென்று தாமரையிலையில நீர்கொணர்ந்து வந்து அவ்வந்தணனது முகத்தில் தெளித்தான். உடனே அவ்வந்தணன் மூர்ச்சைதெளிந்து எழுந்து முன்போல் இயற்கையான நிலையையடைந்தான். பிறகு முன்னைய புணணியப்பயனால் காகஜங்கனுக்கு மீண்டும் அருள் தோன்றியதால் அவன் சோற்றுமூட்டையை மிகவருந்தும் அவ்வந்தணனுக்கு மீண்டும் மார்கழிமாதம் வியதீபாதமாகிய அன்று தானம் செய்தான். அவ்வந்தணன அதைக்கொணடு உண்டு அங்கேயேயிருந்து மிகமகிழ்ச்சியடைந்து தனது இருப்பிடம் சென்றான்.

காகஜங்கனும் அங்கேயே நீண்டகாலமிருந்து இறந்தானாயினும் பாவத்தால் வருந்தாது வியதீபாதத்தில் அன்னதானம் செய்தபுண்ணியத்தால் சந்திரவம்சத்தில் நாபாகன் என்று புகழப்பட்டவனாகி திருவாஞ்சிய மகிமையால் எழுதீவுக்கும் தலைவனாயினன்.

சுயக்ஞர்:—‘முனிவரே மிகுந்த மூடனான காகஜங்கன் யாது அறிவான்? இது சிறந்த தலமென்றும் இதன் மகிமையையாவது விருந்தினரது பெருமையையாவது தினம் யோகம், நித்திய நைமித்

திக கருமங்கள், கொடைக்கேற்ற பாத்திரம், அதன் பயன் ஆகிய இவற்றை மிக்க பாபியாயிருக்கும் அவன் எங்ஙனம் அறிவான்? பாவனைதான் பயனளிப்பதாகும். அதுவாவது அவனிடத்தில் இருக்கிறதா? அன்றியும் பொருளாவது தூயதாக இருக்கிறதா? இவற்றுள் ஏதாவது இவ்வேடனிடத்தில் பொருத்தமாக இருக்கிறதா? அங்ஙனமிருக்க மகாராஜாவின் குலத்தில் அவனது பிறவி எங்ஙனம் நேரும்? நியாயமாக ஈட்டிய பொருளை கொண்டல்லவா மீண்டும் பொருள் விரும்புபவன் தானம் செய்யவேண்டும். மகாராஜாவின் குலத்தில் பிறத்தலாவது அதனை பயனாவது எங்ஙனம் கூடும்? வேறொருவனது பொருளைக் கொண்டு தானம் செய்தால் இவனுக்குப் பயன்யாது? சாம்பரே! நீர் ஐயமகற்றுவதில் வல்லவராதலின் எனக்குக் கூறுவீர். அவ்விஷயத்தில் என்மனம் ஐயுறுகின்றது என்றனர். பெரியோர் தலைவரான சாமபர் இங்ஙனம் சுயக்ஞரால் வினவப்பட்டவராகி சுயக்ஞரைப் பார்த்துக் கூறுகிறார்.

சாம்பர்:—"நீ கூறியது உண்மைதான். நியாயமாக ஈட்டிய பொருள் கொண்டு தருமம் செய்யவேண்டுமென்று நீ கூறுகிறாய். அவ்வேடனுக்கு அதுதான் நியாயம். எவருக்கு எது நியாயம் என்பதாகக் கூறுகிறேன். கேள். நல்ல தானமாயிருப்பின் ஏற்ற பொருள் குறைவாயினும் நிறைவாயினும், அது அந்தணனுக்கு நியாயமான பொருள். அரசன் புவி வென்றீட்டும் பொருள் அவனுக்கு நியாயத்தால் ஈட்டப்பட்ட பொருளாகும். வைசியருக்கு கொடுக்கல் வாங்கல்களால் ஈட்டப்பட்ட பொருள் நியாயத்தால் சமபாதிக்கப்பட்ட பொருளாகும். சூத்திரர்களுக்கு வேளாண்மையால் தோன்றிய பொருள் முறையாக ஈட்டப்பட்ட பொருளாகும். அன்றியும், அந்தணர், அரசர், வைசியர், இவர்கட்குப் பணிபுரிதலால் ஈட்டப்பட்ட பொருளும் முறையான பொருளாகும். இவைமுதல்தரமான முறை. அன்றியும் உபகலபம் (இம்முறைக்குச் சிறிது தாழ்ந்ததும் ஒத்ததாக பாவிக்கப் படுவதும்) வேளாண்மையாகும். உயிர்வதை செய்யும் வேடருக்கு, உயிர்வதையாலாயினும், களவாலாயினும், வஞ்சனையாலாயினும், ஈட்டப்பட்டவை நியாயமாக சம்பாதிக்கப்பட்டதாகும். ஆதலின் அவ்வன்னதானப பயனால் அவ்வேடன் அரசர்தலைவனானன். அவ்வன்னம் அவனுக்கு முறைபபடி ஈட்டிய பொருளாகும். அவனமிக மூடனாதலின் அறிந்து நல்லெண்ணத்துடன் செய்யவுமில்லை. தலைமகிமையையும் அறியான். இதுநற்காலமென்றும் உணரானன. கொடையும் கொடையின்பயனையும் உட்கொள்ளான். ஆதலாலே அவ்வன்னத்தால் அரசர் தலைவனானன். முனிவரே! ஆதலால் அவனுக்குப் பயன் எல்லைப்பட்

டதாக ஆயிற்று. இல்லாவிடில் அவ்வேனுக்கு மார்கழிமாதத்தில் வியதீபாதத்தில் அத்தலத்தில் அன்னதானம் செய்ததற்கு முக்தியும் கிட்டாததில்லை.

ஆகையால் மிக்க முயற்சியுடன் ஸ்ரீ கந்தாரண்யத்தில் மார்கழி மாதத்தில் சிறந்த வியதீ பாதத்தில் தனதாற்றலுக்குத் தக்கபடி முக்தி வேண்டி அந்தணருக்கு அன்னமிடவேண்டும். ஏ முனிவரே! உமக்கு இதிஹாசத்துடன் வியதீபாத மகிமை கூறினேன். கேட்பவருக்கும் சொல்பவருக்கும் எவ்வித வேண்டுகோளுமளிக்கும் இது, மிக அழகியது. மீண்டும் எது கேழ்க்க விரும்புகின்றீர்? அதைக் கேழ்ப்பீர். இச்சரிதமெல்லாம் படிப்பவரும் கேட்பவரும துறக்கத்திலுறைவர். இதன்கண் ஐயமின்று.

[சாம்போப புராணத்தில் வியதீபாத மகிமை வர்ணித்தல் என்ற பதினாறுவது அத்யாயம் முற்றிற்று.

## முப்பத்தொன்றாவது அத்யாயம்.

சுயக்ஞர் :—' சாம்பவ முனிவரோடு குப்தகங்கையில் மகா சங்கராந்தியில மாதப்பிறப்பு நீராடுவதால் மக்கள அடையும் பயன் யாது? மற்றும் சங்கராந்தி புண்ணியகாலங்கள் எல்லாவற்றையும் தேர்ந்தறிதல் எங்ஙனம். மிக்க ஆதரவுடன இவற்றை எல்லாப் சேர்த்துக் கூறவேண்டுகின்றேன. தக்ஷிணாயனத்தில் முன் இருபது நாழிகை புண்யகாலம். உத்தராயணத்தில பின் இருபது நாழிகை புண்யகாலம. மேஷ துலா சங்கிரமணங்களில சித்திரை ஐப்பசி முன்பும் பின்பும் பத்துநாழிகை புண்யகாலம். விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இந்த சங்கிரமணங்களுக்கு முன்பும் பினபும் பதினாறுநாழிகை விஷ்ணுபதி புண்யகாலம. மிதுனம், கன்னி, தனுஸ், மீனம, இந்தசங்கிரமணங்களில பின்பு அறுபதுநாழிகை புண்யகாலமாகும. இரவில் சங்கிரமணம் வந்தால் ஸ்னானதானங்கட்குத் தினத்தின் பாதிநாள்தான் புண்ணிய காலம. அதாவது நள்ளிரவுக்கிமுதக சங்கிரமணம வந்தால் அன்றைய தினம் நண்பகலுக்குமேல் ஸ்னானதானங்கள் செய்யவேண்டும். நள்ளிரவில் சங்கிரமணம் வந்தால இரண்டு நாளும் புண்ணிய காலமென்றறியவேண்டும். மகா

சங்கிரமணமும் கடக சங்கிரமணமும் தையும் ஆடியும் இரவில் வந்தால் கிரகணம்போல் அப்பொழுதே ஸ்நானதானங்கள் செய்யவேண்டும். மற்றைய சங்கிரமணமும் இரவில்வந்தால் சிறந்த அந்தணர்கள் அவ் விதம் செய்யார்கள். இதம் செய்யும் மக்கட்கு இங்ஙனம் புண்ணிய காலத்தைப் பற்றிக் கூறினன். இத்தகைய சங்கராந்தி புண்ணிய காலங்களில் குப்தகங்கையில் நீராடுபவர் அந்தணர் கொலை முதலிய பாவங்களினின்றும் அதற்கொத்த பாவங்களினின்றும் விசேஷ மாகவிடுபடுவர். ஆகையால் யாவரும் குப்தகங்கையில அக்காலத்தில் நீராடவேண்டும்.'

சுயக்ஞர் :—' அந்தணர் கொலைக்கொத்த பாவங்கள் எவை என்று கேட்க விரும்புகின்றேன். அதனை இப்பொழுது உள்ளவாறு கேட்க விரும்புகின்றேன்.'

சாம்பர் :—' பொருத்தமான மனதுடன் அங்ஙனமே உள்ள வாறு கூறுகின்றேன். தனியாக தனக்குமாத்திரம் சமையல் செய்து கொள்பவன், வழி சிதைப்போன், துறவி அந்தணர்களைக் குற்றம கூறுபவன், நெய் முதலியன விற்பவன் ஆகிய இவாகள அநதணர் கொலைபாவத்திற்கு ஒத்தவர்கள் ஆவார்கள். ஒருவன் தான் எவ னிடமிருந்து தருமங்களைக் கேட்டறிந்தானோ அவனுக்குப் பகை செய்பவனும் அந்தணர்களை எவன் தாழ்வாக நினைக்கிறானோ அவனும் அந்தணர் கொலைபாவி என்று சொல்லப்படுவான். நீர்வேட்கையுடன் தடாகத்தை நோக்கி வருபவர்களைத் தடுப்பவனும் அக்கொலைஞ னுக்கொப்பாவான். அந்தணர் முதலியோர்கட்கும் பொருள் கொடுக் கிறேன் என்று சொல்லிவிட்டு மீண்டும் இல்லையென்பவனும் அக் கொலைஞனுக்கொப்பாவான். அந்தணர் கொலைக்கொதத பாவங்கள் வேதம் ஸ்மிருதி இவைகளில் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை யெல்லாம் நீயே அறியவேண்டும். நான கூறியது எல்லை காட்டிய தாகும். விரிப்பிற் பெருகும். கட்குடிக்கு ஒத்த பாவங்கள் சில இருக்கின்றன. அவற்றை இங்கு கூறுகிறேன். கேட்பாயாக.

ஔபாஸனம் விட்டவன் (தீயின்கண் செய்யும் காலை மாலை வேள்வி) இழிந்த அன்னமுண்டவன், கட்குடிக்கும் மங்கையுடன சேர்ந்தவன், கணிகையர் சோறு தின்றவன், கூட்டச்சோறு தின்ற வன், பதிதன் சோறு தின்றவன், ஆகிய இவர்கள் கட்குடியர்களுக்கு ஒப்பாவார். இவர் ஒரு தருமத்திற்கும் உரியவர் அல்லர். மற்றும் கட்குடிக்கொத்த பாவங்கள் அநேகம் இருக்கின்றன. களவுக்

கொத்த பாவம் கூறுகிறேன். கிழங்குகள், பழங்கள், கஸ்தூரி, பட்டாடை, தேன், நெய், தாமிரம், பால், கற்பூரம், பாக்கு, வெண்கலம், உருத்திராக்கம், சந்தனம் ஆகிய இவைகளைத் திருடுவது பொற்களவுக்கொத்ததாகும். மற்றும் ஸ்வர்ணக் களவுக்கொத்த பாபங்கள் பலவிருக்கின்றன. குருமனைவி சேர்தலுக்கு ஒத்த பாவங்கள் கூறுகிறேன். ரஜஸ்வலையிடம் செல்பவன், புத்திரன், நண்பன், உடன்பிறந்தவன் ஆகிய இவரது மனைவிகளையும் கட்குடிக்கும் பிறன் மனையையும் அன்புவைத்துள்ள இழிந்த பெண்பாலையும் விருப்பத்தினால் சேருகின்றவனை குருதல்பகமனம செய்தவனாக மதிக்கலாம். இவன் ஒரு கருமத்திற்கும் உதவாதவன். மற்றும் அநேக பாதகங்கள் குருமனைவிகளுடன் சேருதலுக்கொத்தவைகளாய் இருக்கின்றன. இத்தகைய பாதகிகளுடன் ஒருவரிடம் எவர் சேர்ந்துறைகின்றனரோ அவர் சம்சர்க்க பாதகியாகிய ஐந்தாவது பாதகியாவார். இங்ஙனம் ஐம்பெரும் பாதகங்களுக்கு ஒத்த பாவங்கள் பல கூறினேன். பல சொல்லிப் பயன் யாது? முனிவனே! இப்பாவங்களெல்லாம் சங்கிரமண ஸ்நானத்தாலும் அமாவாசை நீராட்டத்தாலும் சூரியோதயத்திலிருக்கும் இருள் போலவும் தீயின் முன் பஞ்சுபோலவும் ஒழிந்துவிடுவதில ஐயமில்லை. ஆகையால் பாபங்களெல்லாம் நீங்க அமாவாசையிலும் சங்கராந்தியிலும் மக்கள் குப்தகங்கையில் நீராடட்டும். சாத்திரங்களில் செய்நன்றி கொன்ற பாவத்திற்குத் தவிர மற்றையவற்றிற்குக் கழுவாய் கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும் இப்பொழுது ஆச்சரியமான செய்தியொன்று சொல்லுகின்றேன். மகர சங்கிரமணத்தில் செய்நன்றி கொன்றோனும் குப்தகங்கையில் நீராடுவதால் பாபத்தினின்று விடுபடுகிறான். இவ்விஷயத்தில் பண்டையதொரு சரிதம் கூறுவேன்; கேள்.

வியாஸர் பைலர் இருவருக்கும் நடந்த சம்பாஷணையாகும் இது. வியாஸரைப் பைலர் கேட்க பைலருக்கு வியாஸர் சொன்னார். முன்பு மதுரையில் ஹம்ஸன் என்றொரு அந்தணன இருந்தான். அவன் பிறந்ததுமுதல் கெட்ட ஒழுக்கமுடையவன். பிறவுயிரை வருத்துதலே தொழிலாக உடையவன். தினந்தோறும் தாய் தந்தையர்களைக் காலால் உதைத்து அஞ்சச் செய்வான். கைத்தலத்தால் முட்டிகொண்டு அடிப்பான். இங்ஙனம் இவன் செய்ததால் பெற்றோர்கள் மிக்க வருத்தமுற்று மகனைவிட்டுப் பிரிந்தனர். அவனும் தந்தையனை நீக்கு வெளிக்கிளம்பி ஓரிடமிருந்து மற்றொ

ரிடமும் ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டிற்கும் சென்று ஒரு மரவர் ஊரடைந்து வேடக்கன்னிகையை மணந்து வேடரது வீட்டிலேயே நீண்டகாலம் இருந்து ஊனும் கள்ளுமுண்டு வேடமங்கையுடன் நீண்டகாலம் கலந்து மகிழ்ந்திருந்து மக்களையும்பெற்று வேடருடன் நீண்டகாலம் வசித்துவந்தான். இங்ஙனமிருக்கையில் தெய்வச் செயலால் மழையின்மையால் பஞ்சமுண்டாயிற்று. அங்ஙனம் பஞ்சத்தால் துன்புற்ற அந்த ஹம்சன் குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டித் தனது வீட்டினின்றும் புறப்பட்டுப் பொருள்தேடத் தேசாந்திரம் சென்றான். அங்கும் பஞ்சமிகுந்திருந்ததால் அன்னம் அகப்படவில்லை. அவன் இங்ஙனம் அன்னம் அகப்படாததால் மிக்கவருந்தி ஜாடராக்னியினால் தபிக்கப்பட்டு மூர்ச்சையடைந்து ஒரு மரத்தடியில் படுத்தான். தன் உயிரின்கண் பற்றற்றவனாகி மக்களையும் மனைவியையும் நினைத்து அநேகந்தடவை அழுது மூர்ச்சையையடைந்து தன்வயமற்றவனானான். அங்கு தீர்த்தயாத்திரை செய்பவரான பிரம்மவாதிகளான அந்தணர் சிலர் குடும்பத்துடனும் அக்னிஹோத்ரத்துடனும் வேலையாட்களுடனும் உறவினர்களுடனும்புறப்பட்டு மகரசங்கராந்திமுதல் அந்தமாதம்முடிய நீராட வேண்டி மக்கட்கு இம்மை மறுமைப்பயனை அளிப்பதான திருவாஞ்சியத்தைக் குறித்து வருகையில் இந்த ஹம்ஸன் இருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள், மரத்தடியில் படுத்திருப்பவனும் பசிதாகத்தால் உயிர்பிரியும் தசையில் இருப்பவனுமான அத்தாழ்ந்த அந்தணனைக் கண்டு மனமிளகியவராகி, மகிழ்ந்து தமது பாத்திரங்களிலுள்ள நீர் தெளித்தனர். உடனே அவன் கண் திறந்து அச்சிறந்த அந்தணர்களைப் பார்த்துக் கையால் அன்னம் வேண்டுமென்று தெரிவித்தான். உடனே அவர் அன்னமும் நீரும் அளித்தனர். அவன் அதனை உட்கொண்டு எழுந்து அந்தணரை வணங்கி 'உங்களால் யான்மீண்டும் இப்பொழுது பிறந்தவன்போல் ஆயினேன். உங்களுக்கு நன்மை உண்டாகுக. என்னை அடியனாகத் தாங்கள் கொள்ளவேண்டுகிறேன். நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்? எங்குசெல்கின்றீர்' எனக்கேட்டான். அவ்வந்தணர்கள், 'இந்த மகர சங்கராந்தியில் இருமைப் பயனை அளிக்கும் திருவாஞ்சியத்தில் குப்த கங்கையில் நீராட எண்ணிச் செல்கின்றோம். அங்கு நீராடுவதனாலேயே முன்பிறப்புகளிற் சென்ற மகாபாதகங்களெல்லாம் அழிந்துவிடுகின்றன. அன்றியும் ஒருமுறை நீராடினால் பிறந்தது முதல் சாகும் வரையிலுள்ள பாபம் மிக்க விரைவில் அழிந்துவிடும். இது நிச்சயம். அந்தணனே! அதற்காக யாங்கள் செல்கின்றோம். நீ செய்யவேண்

டியது எங்கட்கு ஒன்றுமில்லை. ஆகையால் எங்கு செல்ல உன்மனம் வேண்டுகிறதோ அங்கு செல்வாய்' என்று அவ்வந்தணர்களால் கூறப் பட்ட அந்த ஹம்ஸன் அவர் சொல்லுவதைக் கண்டு தன் மனதிற்குள் சிந்திக்கலானான். 'நான் இப்பொழுது எது செய்வேன். இப்பொழுது இவர்கள் தீர்த்தயாத்திரைக்காக வந்திருக்கிறார்கள். இவர்கள் வேண்டு கோள் எல்லாம் நிறைந்தவராயிருக்கின்றனர். தெய்வமதான் இவர் களை என்னிடம் கொண்டுவந்திருக்கிறது. இவர் நம்பிக்கை கொள் ளும்படி எதத்தொழில் மேற்கொள்வேன். அங்ஙனம் நம்பிக்கையுட னிருந்து இவருடைய பொருள் எல்லாம் கவர்ந்து எனது வீட்டிற் குச் செல்வேன்' என்று தன்மனதிற்குள் நினைத்தான். இங்ஙனம் தீய எண்ணங்களைக் கொண்டும் அவன் தனஎண்ணத்தை மறைத் துக்கொணடும மீண்டும் அவ்வந்தணர்களைப் பார்த்து, 'நீங்கள் தீர்த் தத்தில் விருப்பமுடையவர்களாகவும் அருளுடையவராயும் சிறந்த செல்வமுடையவராயும் இருத்தலின் உங்களுடன் திருவாஞ்சியத் திற்கு நீராட வருகின்றேன். எனக்கு அன்னம் மாததிரம் போட்டு அழைத்துப் போங்கள். உங்கள் சுமைகளைத் தூககி வருவேன். என்னை அத்தொழிற்கு ஏவல் செய்யவேண்டுகின்றேன்' என்று கூறி னான். அவ்வந்தணர் அதற்கு ஒப்புக்கொண்டு அவனை மூட்டை சுமக்கச் செய்து அழைத்துக்கொண்டு யாவரும் ஸ்ரீ கந்தாரண்யம் சென்று திருவாஞ்சேசரையும் கைலாய நாயகியையும் வணங்கி க்ஷௌரபூர்வகம் எல்லை ஸதல உபவாசம செய்து ஒரு இரவு இருந்து மறுநாள காலையில் நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு மகர சங் கிரமத்திலே நீராடக் காலம் எதிர்பார்த்துச் சிந்தித்தனர். நமது பொருளைப் பாதுகாக்க யாராவது ஒருவர் அவசியம இருக்கவேண்டும் என்றெண்ணி ஹம்ஸனைக் கூப்பிட்டு நீ வேகமாகச்சென்று முன்பு நீராடி இங்குவா என்றனர். உடனே ஹம்ஸன் சென்று குப்தகங்கை யில் உலக்கையைப்போல் நீராடிப் பிறகு அவ்வந்தணருக்கருகில் வந்து சேர்ந்தான். பிறகு அவர் உன்னிடத்தில் எங்களுக்கு நம்பிக்கை இருப்பதால் நீராடி வரும் வரையில் இந்த எங்கள் பொருளைக் காப்பாற்றுவாய் என்றனர். இங்ஙனம சொல்லிவிட்டு அவர்கள் நீரா டப்புறப்பட்டுப் போனவுடன் அவ்விழிந்த அந்தணன் அவர்கள் மூட்டைகளைச் சோதித்து அவர்கள் பொருளெல்லாம் எடுத்துக் கொண்டு தனது தேசத்திற்குப் புறப்பட்டான். பாவிகட்கும், செய் நன்றி கொன்றவனுக்கும், துட்டனுக்கும் கடவுள் எங்ஙனம் உதவி புரிவார்? அவ்வந்தணர்களது அதிர்ஷ்ட மிகுதியாலும், ஹம்ஸனது அதிர்ஷ்டக் குறைவாலும், இதுதான் வழி என்று மயங்கி அவ்வந்

தணர்களது முன்னிலையில் ஓடியதால் அவ்வந்தணர்களவனைக் கைப் பற்றித் தமது பொருளைப் பெற்றுக்கொண்டு தயை உடையவராகி அவ்வந்தணன் மிக்கத தாழ்ந்த ஒழுக்கமுடையவனாயினும் அவனைக் கொல்லக்கூடாது. அந்தணன் அவமானப் படுவதால் சிறிதளவு பாபமும் தமக்கு வரக்கூடாதென்று நினைத்தனர். அன்றியும் எவன் அந்தணன் அழும்படி செய்கிறானோ அவனிறந்து எமலோகம் சென்ற போது அவனைப் பூமியிலே தள்ளி மார்பின்மேல் ஏறி நின்று கொண்டு மிக்கக் கொடிய எமன் கண்சிவந்து தீக்கொத்த கொரடா வினால் நாக்கைப் பிடுங்கிவிடுவான். எவன் அந்தணன் அடித்து ரத் தம் வரும்படி செய்கிறானோ அன்றியும் எலும்பு முறித்து உயிர் நீக் குகிறானோ அவன் முறைபபடி இருபதொரு நரகமும் அனுபூர்வ மாக அடைவான். எவன் ஆததிரத்தால் அறிந்தும் உடலினின்றும் குருதி சோச்செய்கிறானோ அவன் இருபத்தொரு நரகத்தையும் முறைப் ப்படி அனுபவிக்கிறான். இங்ஙனம தீர்த்த யாத்திரைக்காகச் சென்ற அந்தணரது மகிமையையுணர்ந்து அந்தணனுக்குத் தீமைபுரிய வும்கூடாது. தீயசொற்கள் சொலலவுமகூடாது என்றெண்ணியும் நகரக் காப்பாளர் பார்ததுகொண்டிருக்கையிலேயே திருடியவனும் செய்நன்றி கொன்றவனுமாகிய அவனை வருத்துவர் என்று அவனை விட்டுவிட்டார்கள். அவன அக்காவலரால் அடிப்பட்டவனாகி உயிரற் வன்போல் கீழேவிழுந்தான். அவர் அவனிறந்தானென்று நினைத்து அவனைவிட்டுச் சென்றார்கள். வஞ்சகனாப் அவ்வந்தணன் உடனே எழுந்து மெதுவாக அவர் இருப்பிடம் சென்றான். வழியிலேயே காலரா கணடு இறந்தான். உடனே யமஉலகம் செல்லவேண்டி பாசக்கயிற்றைகட்டி இழுத்தனர். இதற்கிடையில் சிவபெருமான் கட்டளையால் சிவதூதர் வேகமாக வந்து ஹம்ஸனை சூரியனுக்கொத்த தேரிலேற்றி தேவமங்கையர் இந்திர மங்கையர் சூழ அழைத்துக் கொண்டு செல்லப்புறப்பட்டனர். அப்பொழுது யமதூதர்கள் சிவ கணங்களைக் கேட்டார்கள். 'ஏ! கணங்களே! ஹம்ஸன் நல்வினை யானது அறியப் பற்றுதலுடையவராயிருக்கிறோம்' என்றார். இங் ஙனம் யமதூதரால் ஏவப்பட்ட சிவகணங்கள் பதிலளித்தனர். அதா வது 'இந்த ஹம்ஸன் பிறந்ததுமுதல் பாபியாயும் பிறர் வருத்துபவ ராயும் இருந்து சூததிரப்பெணணை மணந்து சூத்திரவொழுக்கத்தை மேற்கொண்டு சூநதிரவீதியில் வசித்துக்கொண்டு அவ்வேடமங் கையோடு ஊன் முதலியவற்றைச் செய்துகொண்டு அவளிடம் மக்களை புண்டுபண்ணிக்கொண்டும் செய்நன்றி கொன்றலாம் பாபமேற் கொணடிருந்தான். இங்ஙனமிருக்க யாம் அழைத்துப்

போவது முறையாகும். அன்றியும் நீவிர் அழைப்பது தர்மமா? இவன் ஏதாவது சிறிதளவாவது புண்ணியம் செய்திருந்தால் உள்ளவாறு சொல்லுங்கள். அதனைக்கேட்டு நாங்கள் திரும்புகின்றோம்' என்று கேட்கப்பட்ட அந்த கணங்கள் யமதூதர்களைப் பார்த்து ஹம்சன்சரிதம் சொல்லுகிறோமென்று சொன்னார்கள். பூகைலாயமென்று புகழ்பெற்ற கந்தாரண்யத்தில் திருவாஞ்சேசருக்கு வடக்கில் குப்தகங்கையென்று மூவுலகிலும் புகழ்பெற்ற ஒரு தீர்த்தமிருக்கின்றது. அதன்கண் இவன் மகரசங்கராந்தியில் நீராடியுள்ளான். முன்பு ஏதோ ஒரு காரணங்கொண்டு இதன்கண் நீராடியிருந்தும் இவன் இப்பொழுது முக்தியடைவது திண்ணம். அன்றியும் தீர்த்த மகிமையைப் புத்திபூர்வமாகத்தெரிந்து செய்தால் அவனுக்கு முக்தி கையிலிருக்கிறது. அங்ஙனமிருக்கப் பாபங்கள் கழியும் விஷயத்தில் கேட்கவேண்டியதில்லை. ஆகையால்தான் செய்ந்நன்றியற்றானாயினும் முத்தியடைகிறான்.' என்று அச்சிவகணங்கள் கூறிவிட்டு அவனைச் சிவலோகம் கொண்டுபோயினர். எமதூதர் இங்ஙனம் ஹம்ஸனது சிறந்த சரிதத்தையும் தீர்த்த மகிமையையும் கேட்டு அவனைவிட்டு எமபுரம் சென்றனர். முனிவரே! இங்ஙனம் மகரசங்கராந்தியின மகிமையைக் கூறினேன். அயனம், விஷு, சங்கராந்தி, கிரகணம், அமாவாசை இவைகளில் குப்தகங்கையில் நீராடுவதற்கு இப்புவியில் தோன்றியது முதல் செய்துள்ளபாபமெல்லாம் நீங்கும். சங்கராந்தி மகிமையைக் கேட்பவரும் படிப்பவரும் பாவங்களினின்றும் நிச்சயமாக விடுபடுவர்.

[சாம்பபுராணம் ஸ்ரீ வாஞ்சிய மகிமையில் மகரசங்கராந்தி புண்யபலன் என்ற 17-ம் அத்யாயம் முற்றிற்று.

---

## முப்பத்திரண்டாவது அத்யாயம்

சுயஞ்ஞர்:—'ஏ முனிவரே! மக்கள் அமாவாசையில் குப்தகங்கையில் நீராடின் எத்தகைய சிறந்த பயனடைவர். அதனை எனக்குக் கூறவேண்டுகிறேன்.'

சாம்பர்:—'அங்ஙனமே உனக்குச் சொல்லுகிறேன். கேட்பாயாக. நிலைகட்கேற்ப ஒழுகாது ஐயமுறத்தகும் அந்தணர் சூரிய சந்திரர்களது சேர்க்கையான அமாவாசையில் குப்தகங்கையில் நீராடித் தூய்மையடைந்து துறக்கமெய்துகின்றனர். மனதாலும் செயலாலும் உயிர்வருத்தும் பாபிகள் அடங்கியவராகிக் குப்தகங்கையில்

நீராடித் துறக்கமெய்துகிறார்கள். அக்னிஹோத்திரம் செய்யாதவரும்
தினம் விருந்து வழிபடாதோரும் வேதமோதாதவரும் அமாவாசை
யில் நீராடின் தூயவராகித் துறக்கமெய்துவர். பிறரை அவமதிப்
போர், தன்னை உயர்த்திக்கொள்வோர், பிறரை வருத்துவோர், மனத்
தாலோ, செயலாலோ வாசுதேவரையும் சிவனையும் அந்தணரையும்
வழிபடாதவர் தர்மத்திற்காக உயிர்வாழாதோர், மக்கட்பேறு விருப்
பமின்றிக் கூடுவோர், போஜனம் யாத்திரைக்கு என்றெண்ணாதவர்,
பிறன் மனைவியைத் தாய் உடன்பிறந்தாளெனக்கருதாதவர், ரஜோ
குணம் நீங்காதவர், மனமடங்காதவர், சத்வகுணமில்லாதவர், பிற
ரால் வையப்படினும் கோபிப்பவர், பிறவருத்துவர்,
பிராம்மமுகூர்த்தத்தில் எழுந்திராதவர், தன்னைக் கருதாதவர், உரிய
காலத்தில் விதிப்படி ஜலமலம் கழிக்காதவர், பல்துலக்க விதிக்கப்
பட்ட காலத்தில் பல்துலக்காதவர், வைகறைகாலத்தில் நீராடித்
தேவர் இருடித் தர்ப்பணம் செய்யாதவர், அறிவின்மையால் திருபுண்
டரமில்லாது சந்தியாவந்தனம் செய்பவர், காலைச்சந்தியாவந்தனத்
தை நக்ஷத்திரம் அஸ்தமிப்பதற்கு முன்பும், மாலையிற் சந்தியாவந்
தனத்தை அஸ்தமனமாகும் சமயத்திலும் செய்யாதவர், காலைமாலை
ஔபாஸனம் செய்யாதவர், தர்சபூர்ணிமாஸ ஸ்தாலீபாகம் செய்யா
தவர், வேதமோதுதல், பிரம்மயக்ஞம் இவைகளில் பற்றற்றவர்,
நண்பகலில் நீராடாதவர், மாத்யான்னிகம் செய்யாதவர், சூரியன்,
அம்பிகை, சதாசிவர், விஷ்ணு, கணநாதன் இவர்கட்கு தினந்தோ
றும் தனித்தனி பூஜை செய்யாதவர், அந்தணர் ஔபாஸனாக்னியில்
வைஸ்வதேயத்தை அன்னத்தால் செய்யாதவர், காலங்களில் விருந்து
உபசரியாதவர், பேசிக்கொண்டே உண்பவர், இலையைவிட்டுக் கையை
எடுப்பவர், பிராணாகுதி முதலிய தனித்தனி ஐந்தையும் செய்யாதவர்,
நித்யநைமித்யங்களை ஒழுங்காகச் செய்யாதவர், ஒரே ஆடையுடுத்
துபவர், திரிபுண்டரமில்லாதவர், இரவில் வந்துள்ள இருவகை விருந்
தினர்க்கும் இருக்குமிடம், அன்னம் நீர் அளிக்காதவர், பருவம்,
சதுர்த்தசி, அட்டமி, திரிஜன்மங்கள் ஆகிய இவைகளில் மனைவியு
டன் கூடினவர், சஷ்டி, அட்டமி, சதுர்த்தசி, பருவங்களில் நோய்
இல்லாமல் எண்ணெய் தேய்த்துக்கொள்பவர், நோயற்றிருந்தும் ஞா
யிறு செவ்வாய் வியாழன் வெள்ளி இவைகளில் எண்ணெயிட்டுக்
கொள்பவர், சொக்கட்டான் ஆடல், சீட்டாட்டம், நர்த்தனம், சங்
கீதம், சிஷ்டரல்லாதார் சேர்க்கை இவை உடையவர், வேதமோதாது
நீராடுதல் மாத்திரம் செய்பவர், குருவின் உத்திரவில்லாமல் விரதம்
முடித்தவர், தன்னைக்காட்டிலும் மேற்பட்டவளும் உருவம் அழகு

இவை இல்லாதவளும் தனக்கொத்த கோத்திரத்தில் பிறந்தவளு மானவளை மனைவியாக மணப்பவனும், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், செய்ந்நன்றி கொன்றவர் கீழ்மக்கள் ஆகிய இவரிடமிருந்து ரத்னம், தனம், தான்யம், இவைகள் பெறுபவர், மக்களது தவறு, பொய், பொருக்கத்தகாத செயல், தீமை, கொடுமை, புறங்கூறல், ஆண்மை இவற்றைப்பற்றிப் பேசுகிறவர், தம்பதிகள் அணைதலைக் காண்டல், மல ஜல விமோசனம் செய்தலைக் காணல், பிறர் கலவி காண்டல், ஆடையற்றவரைக் காண்டலாகிய இவைகளைச் செய்பவர், புஷ்பவதிமுகம், பிணத்தின்முகம், பிரசவித்தவள்முகம், பித்துப் பிடித்தவள்முகம் இவற்றைப்பார்த்தவர், தனது மனைவி, பிள்ளை, பெண், சிற்றன்னை, பெரியன்னை, அவர்கள் மக்கள் அம்மான் இவர்களோடு சேர்ந்துண்பவர், கால்களால் உதைப்பவர், அங்ஙனம் உதைத்துக் கொள்பவர், விஷமரமாயினும் விரைதெளித்து வளர்த்துப் பூவும் காயும் இருக்கும்பொழுது முறிப்பவர், சூத்திரனுக்கு வேதமுதலிய கொண்டுபதேசம் செய்பவர், பெண்களுக்கு வேதாந்த வாக்கியத்தின் பொருள் கூறுவோர், எப்பொழுதும் கந்தைகளால் தன்னையும் மக்களையும செல்வங்களால அமைதிப்பவர், ஆடையின்றி நீரில் நிற்பவர், இருகையாலும் நீர்பருகுபவர், குளமிருக்கக் கிணற்றில் அடிக்கடி நீர் குடிப்பவர், நீராடாமலும் கடவுள் வழிபடாமலும் உண்பவர், துறவி, பிராமணர்களுக்கு அன்னமிடாதவர், இருசந்தியிலும் தூக்கம், நடை, கலவி, வேதமோதல், உண்டல் இவைகளைச் செய்பவர், கலவிபெண்களற்ற மற்ற இடங்களிலும் நீரிலும் ரேதஸைவிடுபவர், மற்றும் அதனையே பருகுவோர் ஆகிய இவர்கள் அமாவாசையில் குப்தகங்கையில் நீராடித் தூய்மையடைகிறார்கள். புரட்டாசி அமாவாசையில் குப்தகங்கையில் நீராடினால் ஆறு அமாவாசையின் பயன்கிடைக்கும். தை அமாவாசையில் அதன்கண் நீராடின் ஒருவருடம் அமாவாசையின் பயன்கிடைக்கும். ஆடி அமாவாசையில் நீராடின் நான்கு அமாவாசையின் பலன் உண்டு. அமாவாசை, திங்கள், செவ்வாய், வியாழன் இவைகளுடன் சேர்ந்து வந்தால் அது பிதுர்க்களுக்கு முத்தியளிப்பதாகும். அது ஆயிரம் சூரியக்கிரகணங்களுக்கு ஒத்ததாகும். அதற்குப் பௌஷ்யகலை என்று பெயர். அந்த அமையில் பிதுர்க்களைக் குறித்துக் குப்தகங்கையில் எள்ளும் நீரும் விட்டால் அதனால் கயாசிராத்தப் பலனை அடைகிறார்கள். அமாவாசையில் குப்தகங்கையில் சிராத்தம் செய்தால் அப்பிதுர்க்கள், கயாசிராத்தத்திற்குமேல் நூறு பங்கு சிராத்தம் அளித்தவராகிறார். ஒரு அமாவாசையில் அத்தீர்த்தத்தில்

தர்ப்பணம் செய்தால் பிதுர்க்கள் பத்து வருடம் பிரீதியை அடைகிறார்கள். இரண்டு அமாவாசை தர்ப்பணம் செய்தால் பிதுர்க்கள் நூறு வருடம் ப்ரீதியை அடைகிறார்கள். மூன்றாவதுதரம் தர்ப்பணம் செய்தால் ஒரு யுகமும், நான்காவதுதரம்செய்தால் சந்திரன் நக்ஷத்திரமுள்ளவரையிலும் மகிழ்கின்றனர். ஆகையால் பிதுர்க்கள் குறைகளை நீக்கும்பொருட்டுக் குப்தகங்கையில் எள் தர்ப்பணம் செய்யவேண்டும். எவர் பிதுர்க்களைக்குறித்து அங்கு ச்ராத்தம்செய்கிறாரோ அவர் கயையில் அக்ஷயமான ஆலமர நிழலில்-செய்தவராவர். ஆகையால் பிதுர்க்களுக்குத் திருப்தியின்பொருட்டு அங்கு சிராத்தம் செய்யவேண்டும். அமாவாசை நீராட்டப் பலன் சொன்னேன். மற்றும் எது கேட்கவேண்டுமோ கேள். அது சொல்லுகிறேன்.

[சாம்போபபுராணத்தில் திருவாஞ்சியமகிமையில் அமாவாசை மகிமை வர்ணனை என்ற 18-ம் அத்யாயம் முற்றிற்று.]

---

## முப்பத்திமூன்றாவது அத்யாயம்.

சுயக்ஞர்:—'அர்த்தோதய மஹோதயத்தினுடைய இலக்கணமும் அதன் விதிப்படி நீராட்டத்தின் பயனும் கூறவேண்டுகிறேன்.'

சாம்பர்:—'மாகமாதஅமாவாசை வியதீபாதம் ஞாயிறு சிரவணத்தோடு கூடிவருமானால் அர்த்தோதயமென்றும் அதுவே திங்கட்கிழமையோடு சேர்ந்துவந்தால் மகோதயமென்றும் பெயர். எந்த தினத்தில் மகோதயம்வருகிறதோ அன்றைக்கு முதல்நாள் இறைமைப் பயனளிக்கும் திருவாஞ்சியம சென்று, க்ஷௌரபூர்வமாகத் தல உபவாஸமிருந்து மூன்றாவது யாமத்தின் முடிவில் எழுந்து வெளி அழுக்கெல்லாம் அகற்றி நீராடிச சந்தி முதலியவை எல்லாம் அனுட்டித்துக் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு சந்தனம், கடுகு, தயிர், பால், மலர், தர்பபை, ஜலம், அக்ஷதை ஆகிய இவைகளை அர்க்கியம்கொடுக்கக் கைக்கொண்டு சூரியனுடைய அர்த்தோதயத்தில் பாவங்களெல்லாம் போக்கும் குப்தகங்கையில் நீராடிச் சூரியன சந்திரன் வியதீபாதம் சதாசிவன் விஷ்ணு முதலியவர் தனித்தனியே ப்ரீதிகொள்ள எட்டுத் திரவ்யங்களுடன் அர்க்யம்கொடுத்து அவரைக்குறித்து வணங்கவேண்டும்.

அர்க்கிய மந்திரம்:—'தினத்திற்கு அதிபதியாயும், ஒளிவடிவமாயும், உலகுக்குத் தலைவனாயுமுள்ளவனே! நாதனே! யான் உனக்கு

அர்க்கியத்தைக் கொடுக்கிறேன். சிரவணத்திற்குத் தலைவனும் இலக்குமி மணாளனும், ஜனனென்னும் அசுரனைக்கொன்றவனுமுள்ள ஏ! தேவனே! யான் கொடுக்கும் அர்க்கியத்தைக் கைக்கொள்ள வேண்டுகிறேன். உமக்கு வந்தனம் செய்கிறேன். அத்திரியின கண்ணினின்று தோன்றியவனும் இலக்குமிக்குச் சகோதரனும் அமிர்த கிரணனும் ஜலக்கிரணனுமாகிய சந்திரபகவானே! யான் கொடுக்கும் அர்க்கியத்தைக் கைக்கொள்ளவேண்டுகிறேன். உமக்கு யான் செய்யும் வந்தனம், யான் செய்யும் புண்ணியத்தை அழியாததாகச் செய்யவேண்டும். ஆயிரம் கையுடையவனும் மகா பாபங்களெல்லாம் அகற்றுபவனும் எல்லாருள்ளும் கலந்தவனுமான விபதீபாதனே! யான் கொடுக்கும் அர்க்கியத்தைக் கைக்கொள்ள வேண்டும். யோகங்கட்குத் தலைவனே! உனக்கு வந்தனம் செய்கிறேன். திதி நக்ஷத்திரம் வாரங்களுக்குத் தலைவனும் மாதம், இருது, அயனம் ஆகிய இவைகட்குத் தலைவனுமான பரமசிவனே! அர்க்கியம் கொடுக்கிறேன்; ஏற்கவேண்டும். உமக்கு வந்தனம் செய்கிறேன்' என்று இம்மாதிரி முறையே மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு முடிவில் ஐந்து தேவதைகளையும்வேண்டவேண்டும். 'உலகத் தலைவனும் காலத்தலைவனும் கருணைக்கடலும் ஆன தினத் தலைவனே! உனது திருவடிகளில் எனக்கு அசைவற்ற பக்தி உண்டாக வேண்டும். நக்ஷத்திரங்களுக்குத் தலைவனும தேவர்களுக்கு அமிர்தம் அளிப்பவனும் ரோகிணிகாந்தனும் கலை நிறைந்தவனும் ஆகிய உனக்கு வந்தனம் செய்கிறேன். என்னைக்காப்பாற்றுவாய்: சிரவணநக்ஷத்திரத்திற்குத் தலைவனும இலக்குமி மணாளனும் விஷ்ணுவுமாகிய உனக்கு வந்தனம். யான் செய்தது சிறிதளவாயினும் அது குறைவற்றதாக வேண்டும். ஏற்பவர்க்குக் கற்பகம் போன்றிருக்கிறாய். எமன் மன்மதன் இவர்களை அழித்தவரும் மாதம் வருஷம் காலம் இவைகளுக்குத் தலைவனுமாகிய சிவபிரானே! எனது பாவத்தை அகற்றுவாய்' இங்ஙனம் துதித்துப் பிறகு விதிப்படி பாயசத்துடன் கூடிய பொற்பாத்திரமும் வெண்கலப்பாத்திரமும் தானம்செய்யவேண்டும்.

கொடைக்கு மந்திரம்:—பொன் வெண்கலப் பாத்திரங்கள் பரமான்னத்துடன்கூடியதாக இருக்கிறது. இது எங்களைப் பாவத்தினின்று கரையேற்றுவது. ஆதலால் அந்தணனே, இதனை ஏற்க வேண்டும். தேவதைகளுக்கெல்லாம் அமுதமும் மக்கட்கு உயர்ந்த மங்களகரமானதும் பிரமத்தின் வேறுபடாததும் ஆக இருப்பதால் இது எனக்குச் சுகத்தின்பொருட்டு ஆகட்டும். பொன் தூயது.

குற்றமற்றதும் பாபம் அகற்றுவதும் இதம் செய்வதுமாயிருத்தலின் எனக்கு எப்பொழுதும் நன்மை செய்வதாகட்டும்' என்று இம்மாதிரி கூறி வேதமோதியவனும் குடும்பியுமான அந்தணனுக்குக் கொடுத்து ஞாயிறையும் மதியையும் வேண்டவேண்டும். வேத உருவான அந்தணனே! எனக்கு உடல்வளர்ச்சி, அறிவு, பலம், ஆரோக்யம், புண்ணியம் இவற்றை வளர்ப்பதான செல்வம் ஆகிய இவற்றை எனக்கு அளிப்பாய். வேதவடிவனான பகவானே! முன்னைய புண்ணியத்தைப் பயனுக்கச்செய்யவேண்டும். இரவு செய்யும் அமிர்தகிரகணனான மதியே! உமக்கு வந்தனம். முன்செய்த புண்ணியமெல்லாம் அழிவற்றதாக இருக்கட்டும். ஸ்ரீவாஞ்சியத்தில் குப்தகங்கையில், அர்த்தோதய மகோதயங்களில் நீராடும்விதியை இப்பொழுதுயான் கூறியுள்ளேன். இங்ஙனம் எவன் அர்த்தோதயம் மகோதயங்களில் நீராடுகிறானோ அவன் ஆயிரம் கிரகணபுண்ணிய காலங்களிற் செய்த பயன்களை அடைவான். இவ்வுலகில் வேண்டுகோளெல்லாம் பெற்று முடிவில் சிவபுரம் அடைவான். இருமைப் பயனளிக்கும் ஸ்ரீவாஞ்சியத்தில் சூரிய சந்திரகிரகணங்களில் குப்தகங்கையில் நீராடுபவர் பாவக்கூட்டங்களினின்றும் விடுபடுவார். ஆகையால் அவர் துறக்கவீட்டுலகங்களிலும் பாபசமனத்தை விரும்பிக் குப்தகங்கையில் கிரகணகாலங்களில் நீராட எண்ணுகிறார்கள். எவனுக்கு திரிஜன்மங்களில் சந்திர சூர்ய கிரகணங்கள் வந்துசேருகின்றனவோ அவனுக்கு மரணம் நிச்சயமாக வந்துநேரும். பாபமாவது வேறு தேயஞ்சேரலாவது நோயாவது நேரும். ஆதலால் அப்பாபம் நீங்கக் குப்தகங்கையில் சந்திர சூர்யகிரகணங்களில் நீராடவேண்டும்.

[சாம்போபபுராணத்தில் திருவாஞ்சிய மஹிமையில் அர்த்தோதய மகோதய புண்ணியகால நீராட்டவிதி கூறல் என்று 19-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## முப்பத்துநான்காவது அத்யாயம்.

சாம்பர் :—' சூரியகிரணகாலத்து குருக்ஷேத்திரத்தில் நீராடியவர்களுக்கு யாது பயனோ அதனைக்காட்டிலும் நூறு பங்கு அதிக பயன் குப்தகங்கையில் நீராடுவதால் உண்டாகும். தனது நன்மை விழைபவன் இதன்கண் நீராடி ஆற்றற்கேற்றவாறு அக்கிரகணங்களில் வறிஞனும் அத்தல வாசியுமான வேதவந்தணனுக்குத் தானம்

செய்யவேண்டும். இல்லாவிடில் தனக்கு நன்மை விரும்புபவன் சாதி மாத்திரம் அந்தணனுக்காவாது கொடுக்கவேண்டும். உலகத்தில் ஒரு காலத்தில் ஒரு தேசத்தில் ஏதோ ஒரு நதியிலாவது தேவ புஷ்கரணியிலாவது கடலிலாவது குளங்களிலாவது அக்காலத்துத் திதி, கிழமை, நக்ஷத்திரம் முதலியவை சேர்ந்திருந்தால் தெய்வச்செயலாக புண்ணியகால பலன் உண்டாகும். இந்த கங்கையிலோ மக்கட்கு இதம் செய்வதையெண்ணி எப்பொழுதும் புண்ணிய காலமாய் இருக்கின்றது. மீண்டும் புண்ணியத்தால் என்ன பயன்? இங்ஙனம் அறிந்தவர் வேறு எங்கும் செல்லாமல் எப்பொழுதும் புண்ணிய காலங்களில் குப்தகங்கையில் நீரில் அங்கேயே இருந்து முக்தியின் பொருட்டு நீராடவேண்டும். அந்த தேசத்திலுள்ளவர்கள் எவர் குப்தகங்கையைவிட்டு வேறு தீர்த்தங்களுக்குச் செல்லுகின்றாரோ அவருக்குப் பயன் சிரமம்தான் ஆகும். எந்த அந்தணர் முதலியோர் எங்கெந்த தீர்த்தங்களை அண்டியிருக்கின்றனரோ அவர் குப்தகங்கையையும் கங்கையையும்விட்டு வேறு இடத்திற்குச் செல்லக்கூடாது. வேறு எந்தத் தீர்த்தத்தையும் அண்டியவரான அறிவுள்ளோர் குப்தகங்கையையும் கங்கையையும் நாடிவரவேண்டும். அங்ஙனம் அம்மூடர் மீறிச்செல்வாராயின ரௌரவாதம் அடைவார். மக்கள் இந்தப் புண்ணிய காலங்களை அறிந்து புக்தி முத்திக்காக ஆதரவுடன் எப்பொழுதும் குப்தகங்கையில் நீராடவேண்டும். முனிவரே! பலகூறிய பயனென்ன? பாவிகளான பிராணிகள் பச்சாதாபத்துடன் நரகவேதனைக்குப் பயந்து பாவங்கள் கழியவும் மேல் உலகத்தில் இன்பமடையவும் முடிவுக்காலத்தில் விசேஷமாகத் திருவாஞ்சியம் அடையவேண்டும்;

சுயஞ்ஞர்:— 'உயிர்பிரியுங்காலம் எது என்று மக்களால் எங்ஙனம் அறியக்கூடுமென்று அதனை என்னிடத்தில் அருளிருக்குமாயின் கூறியருளவேண்டுகிறேன்.,

சாம்பர்: —' ஒரே மனதுடன் கேள்; சொல்லுகிறேன். பிரத்யக்ஷமான அறிகுறியாலும் ஸ்வப்னங்களின் அறிகுறியாலும் நிலையை அறிந்து திருவாஞ்சியம் அடையவேண்டும். சந்திரனைப் பார்ப்பதுபோல் சூர்யனைகிரணங்கள் இல்லாமல் பார்ப்பாராயின் அப்பொழுது தனக்கு இறுதிகாலம் என்றுணர்ந்து பூகைலாயமடையவேண்டும். ஆகாயம் மஞ்சிஷ்டிபோல் மிக்க சிவந்ததாகத்தோன்றும்காலத்தும் காக்கையின் கூடு தலையில் விழுந்தகாலத்தும் சூரியனுடைய

இடையில் துவாரம் தோன்றுவதுபோலும், தனது நிழலில் துவாரம் இருப்பதுபோலும் தோன்றுங்காலத்தும் (பிளந்தவனபோலும்) மயிற் கழுத்து நிறம்போல் தீயை மனிதன் காணுங்காலத்தும், பூமி எரிவதுபோலும், எப்பொழுது தனது காதை மூடிக்கொண்டு சப்த மில்லாமல் எவன் அறிகின்றானோ அப்பொழுதும், கண்ணாடியிலா வது நீரிலாவது தனது தலை தெரியாமலிருக்குங்காலத்திலும், அவன் அவற்றின்கண்ணே வக்ரமாகத் தெரியுங்காலத்தும், மின்னல்முறைப் படி மேகத்தில் தோன்றாதகாலத்தில் சாவு நேருமென்று அறிய வேண்டும். இவை பிரத்யக்ஷமான அறிகுறிகள். இவற்றை இப் பொழுது மீண்டும் சொன்னேன். இனி ஸ்வப்னத்தினால் அறியும் அறிகுறிகளைச் சொல்வேன்; கேட்பாயாக. அங்ஙனமின்றி புக்தி முக்தி அளிப்பதும், பூகைலாயமென்று பெயர்வாய்ந்ததுமான திரு வாஞ்சியத்தை உடனே மகிழ்வுடன் அடையவேண்டும். இவை பிரத்யக்ஷமான அறிகுறிகள். இவற்றை உனக்கு மீண்டும் கூறி னேன். இனி ஸ்வப்னத்தால் இறுதி அறிவதனைச் சொல்லுகிறேன்; கேள். ஸ்வப்னத்தில் கரும்பல்லுடைய கரியபுருடனைப் பார்த்த காலத்தும், பெருங்காற்று தன்னைத் தூக்கிக்கொண்டுபோகக் கண்ட காலத்தும், பொன்னைக்கடித்து வாரி இறைத்ததுபோல் ஸ்வப்னத் தில் தானே கண்ட காலத்தும், தாமரைத் தண்டுகளை உண்டது போல் கண்ட காலத்தும் தன்னை ஒரு கலை தரிப்பவரைப்போல் ஸ்வப்னம் கண்ட காலத்தும், குரங்கு இழுப்பதுபோல்கண்ட காலத் தும், தேன்குடிப்பதுபோல் கண்டகாலத்தும் கழுதை பூட்டிய வாகனத்தில் ஏறிச்சவாரி செய்ததாகக் கண்டவிடத்தும் எமனால் அனுப்பப்பட்ட வாஹனத்திலேறி மனங்கலங்கிச்செல்வதாகக் கண்ட காலத்தும் காரம்பசுவையும் கறுப்புக் கன்றுக்குட்டியையும் கட்டு வதாகக் கண்டவிடத்தும், கோரமாலையை அணிந்துகொண்டு தெற்கு முகமாக நின்றுகொண்டிருப்பதாகக் கண்டவிடத்தும், உடனேயெழு ந்து சித்தியெல்லாம் அளிப்பதும் வேண்டுவதெல்லாம் அளிப்ப தும், ஸ்ரீ கந்தாரண்யமென்னும் புகழ்வாய்ந்த திருவாஞ்சிய க்ஷேத் திரத்தை அடையவேண்டும். இங்ஙனம் ஸ்வப்ன அறிகுறிகளா லும் தனக்கு ப்ரத்யக்ஷமான அடையாளங்களாலும் தனக்கு இறுதி நேருமென்று உணர்ந்து விரைவாக வேண்டுவதெல்லாம் அளிக் கும் பூகைலாயமென்ற திருவாஞ்சியத்தை அடையவேண்டும். இச் சிறந்த அந்தணனே உனக்கு இறுதிக்காலத்தின் அடையாளத்தைச் சொன்னேன். இதுதான் இதற்கு அறிகுறிகளாகும் என்றுணர்ந்து சோம்பலின்றி உயிர் உடல் நீங்கும்வரையில் அத்திருவாஞ்சியத்தில்

லிருந்து புண்ணியமான நீராட்டம், கொடை முதலியவற்றைச் செய்து, உயிர் பிரிந்தவன் பாம்புபோல் ஜீர்ணமான தோலேயும் பாபங்களேயும் நீக்கிச் சிவலோகமடைகிறான். மீண்டும் திரும்பிப் பிறத்தல் இன்றி இந்த மரணவறிகுறியினைத் தினந்தோறும் கேட்பவனும் பாபங்களேயும் நீக்கிச் சிவலோகமடைவான்.'

[சாம்போபபுராணம் திருவாஞ்சியமகிமையில் பிரத்யக்ஷ அனுபவங்களால் மரணமறிதல் என்னும் 20-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## முப்பத்தைந்தாவது அத்யாயம்.

சுயக்ஞர் :—'அந்த ஸ்ரீவாஞ்சியத்தில் விசேஷமாகப் புண்ணிய காலத்தில் எத்தகைய அந்தணருக்குத் தானம் செய்யவேண்டும்.? அதனை எனக்குக் கூறவேண்டுகின்றேன். பாத்திரங்களுடைய தாராதரத்தை அறியவேண்டுகின்றேன்.

சாம்பர் :—'சுரோத்ரியருக்காவது விப்ரருக்காவது (அந்தணரென்று சொல்லபபடுவர்) அந்தணர் பெயருடையவருக்காவது பார்ப்பனரல்லாதவர்க்காவதுகொடுக்கவேண்டும். அதன்கண் சுரோத்திரியர்க்காவது கொடுத்தல் முதன்மையானதென்றும் பிராம்மணப் நவனுக்குக் கொடுத்தல் மத்திமம் என்றும் அந்தணர்பெயருடையவருக்குக் கொடுத்தல் தாழ்மைப்பட்டதென்றும அந்தணரல்லாதவருக்குக கொடுத்தல் மிக்கத் தாழ்மைப்பட்டதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ச்ரோத்திரிய பிராம்மணனுயிருந்தால் அவனுக்கும் அவனில்லாவிடில் பிராம்மணப் நவனுக்கும் அவனில்லாவிடில் அந்தணர் பெயர் தரித்தோனுக்கும் அவனும் அகப்படாவிடில் அந்தணரல்லாதவர்க்கும் கொடுக்கவேண்டும்.'

சுயக்ஞர் :—'சிறந்தமுனிவரே! முறையாக சுரோத்ரியம் முதலியோர்க்கு இலக்கணம் என்ன? அதனை இப்பொழுது எனக்குச் சொல்ல வேண்டுகிறேன்.

சாம்பர் :—'ரிக்கு, யஜுஸ், ஸாமவேதசாகைகளுக்குள் ஏதாவது ஒரு சாகை அறிந்தவன், சுரோத்திரனுவான் என்று சாத்திரமறிந்தவர் கூறுவர். தனது ஒரு சாகையை அத்யயனம் செய்தவன் சுரோத்திரிய அந்தணர்களுக்குள் சிறந்தவனுவான். அத்தகைய சுரோத்திரியன் இல்லாவிடில் புண்ணிய காலங்களில் விப்ரபுருவனுக்காவது தனது பொருளுக்கேற்றபடி கொடுக்கவேண்டும்.

வேதாத்யயனமாத்திரம் செய்து கர்ப்பாதானுதி சம்ஸ்காரங்கள் செய்யப்பட்டிருப்பவன் பிராம்மணப்புருவனென்று சொல்லப்படுவான். கர்ப்பாதானுதி வேதோபனயனங்கள் செய்யப்பட்டு வேதமோதாதலும் ஓதுவிக்காமலும் இருப்பனும் பிராம்மணப் புருவன் என்று சொல்லப்படுவான். இதுவுமில்லாவிடில் புண்ணிய காலத்தில் விசேஷமாக லோபமின்றி அந்தணர் பெயருடையவனுக்காவது கொடுக்க வேண்டும். எவன் காயத்ரி மாத்திரம் ஏற்றுக்கொண்டு வேதமோதாமல் இருக்கின்றானே அவன் அந்தணர் பெயர் தரிப்போனுவான். காயத்ரியை சாரமாகக்கொண்டு சந்தியாவந்தனஞ்செய்பவன் வேளாண்மைத்தொழிலறியாதோரும் அந்தணப் பெயர் தரிப்போராவர். இத்தகைய அந்தணரில்லாவிடில் லோபமின்றிப் புண்ணிய காலத்தில் விசேஷமாக அந்தணரில்லாதவர்க்கும் கொடுக்கவேண்டும். திருவாஞசியத்தில் சுரோத்திரியமல்லாதான் அந்தணப் பெயர் தரிப்போன் விப்புரப்ருவன் அந்தணர் சாதியிற் பிறந்தோன் ஆகிய யாவரும் புண்ணிய காலங்களில் தானபாத்திரராகின்றனர். வேறு இடங்களில் இவர்கள் கொடைக்கு இலக்காகார். இப்பொழுது பாத்திரங்களின் உயர்வு தாழ்வு எல்லாம் விரிவாகக் கூறினன். இதற்குமேல் சொல்ல வேண்டியது என்னவிருக்கிறதோ அதைக் கேள். அதைக் கூறுகிறேன்.'

சுயக்ஞர்:—'இப்புவியில் எந்தத் தானம் சிறந்தது? எதனைச் செய்தால் எல்லாப் பயனும் பெறலாம்? எதனுல் வறுமை தீரும்? எதனுல் மக்கள் துறக்கம் வீடு இதனைப் பெறுவர்? எதனுல் இப்புவியில் அரசனுவான்? எதனுல் பிதுர்க்கள் மகிழ்கின்றனர்? எதனுல் அரி அயன் அரன் இந்திரன் இவர்கள் மகிழ்வர்? இந்திரன் முதலிய எல்லாத்தேவர்களும் இருடிகளும் மகிழ்கின்றனர். எதனுல் நோய் எங்கும்? எதனுல் மறைமுடிவு பொருளில் ஐயமின்றி அறிவுண்டாகும்? எதனுல் பிறவிக்கடல் கடக்கலாம்? எதனுல் தர்மங்களில் புத்தி எப்பொழுதும் செல்லும்? எந்த தானத்தால் எல்லா தானமும் செய்ததாகும்? அத்தகையதான விசேடத்தை பிராம்மணேத்தமரான சாம்பரே! கூறவேண்டுகிறேன்.'

சாம்பர்:—'எத்தகைய தானததிலும் பூமிதானம் சிறந்தது. இது பாபங்கடியும். துறக்கம், ஆயுள் இவைகளைக் கொடுக்கும். இதனுல் எல்லாம் செய்ததாக ஆகும். இதில் ஐயமில்லை. ஆனதால் பூமிதானம் செய்தவன் வித்துவான் என்று அறிஞரால் கூறப்படுவான். நற்குணங்களமைந்ததும் பயிர் நிறைந்ததுமான பூமியைத்

தானம் செய்பவனுக்குப் பூமியிலிருக்கும் வரையில் உலகங்கள் அழிவதில்லை. பூதானத்தால் அடையும் பயனை நிறைந்த தக்ஷிணையுடன் செய்யும் அக்னிஷ்டோமம் முதலிய யாகங்களாலும் பெறவியலாது. மிக்க கேள்வியுடையவன், வேட்டவன், உண்மை பேசுபவன், தவஞ் செய்பவன், குரு, தேவர், இவர்களிடத்து பற்றுடையவன், ஆகிய இவர்களைக்காட்டிலும் பூதானம் செய்பவன் சிறந்தோனாகிறான். தலைவனுக்காகப் போரில் யுத்தம் செய்து உயிர்விடுபவனைக் காட்டிலும் பூதானம் செய்தவன் மிகவும் சிறந்தவன். முன்பு பெரியோரான ஜமதக்னியானவர் பூமி கீதாகாதைக்கேட்டுச் சிறந்த மனத்துடன் பெரியோரான காசியருக்குப் பூதானம் செய்தார். பூமி கீதைப் பண்ணப்பட்ட காதையாவது:—என்னைக் கொடாதவன் என்னையடையான். என்னைக் கொடுப்பவன் பிரத்யக்ஷமாக என்னையடைகின்றானல்லவா? ஆதலால் என்னை அளிக்கவேண்டும். எவன் என்னை நற்பாத்திரத்தில் புண்ணிய காலத்தில் தானம் செய்கிறானோ, அவன்தான் வித்வான். அவனே நற்குலத்தில் பிறந்தோன். அவன்தான் புருஷன் அவன்தான் புண்ணியம் செய்தவன். பூதானம் செய்தோரை ருத்திரனது கொடிய பாசங்களும் வருத்தாவாம். மிக்கப் பயந்தரும் யமதண்டாயுதமும மிக்க கொடிய பாசங்களும் வருத்தாவாம். பூதானம் செய்தவன் துறக்கமெய்துகிறான். சந்திரன் தினந்தோறும் வளர்வதுபோல் பூமிதானம்செய்தால் அது தினந்தோறும் வளரும். அந்தணர், பசு, செய்ந்நன்றி இவைகளைக் கொன்றவர், பூதானம்செய்தால் அப்பேர்ப்பட்ட பாபத்தினின்றும் நீங்கித் துறக்கமெய்துவர். பொருளில்லாதவர் ஏதோ சில பாவங்கள் செய்திருந்தபோதிலும் சிறிதளவு பூதானம்செய்தால் தமது பாபத்தினின்றும் விடுபடுவார். மிக்க பாபம் செய்தோரும் சிறந்த அந்தணருக்குப் பூதானம்செய்தால் அவர் பாபங்கள் பாம்பின் உடலினின்றும் நீங்கும் தோலைப் போல் அவனைவிட்டு நீங்கிவிடுகின்றன. பெரிய இருடிகள் பூதானத்தை அசுவமேதத்திற்குச் சமமாகச் சொல்வர். முனிவரே! ஒருவன் பூமியைச் சுரோத்ரியனும், ஆகிதாக்னியும், நோன்பு மேற்கொண்டவனுமான அந்தணனுக்குக்கொடுக்க யமவுலகத்தினை அவன் காணான். ஆகையால் நியாயமாகச் சம்பாதித்துப் பூமியைத் தனது பாபம் நீங்கத் தானம் செய்யவேண்டும். இங்ஙனம் பூதானத்தை விசேஷமாகச் சேர்த்துச் சொன்னேன். இனி எதனைக் கேட்கவேண்டுமென்று விருப்பமோ அதனைக் கேட்பாயாக. சொல்லுகிறேன்.

சுயக்ஞர்:—'இப்பொழுது பூமியை அபகரித்தவனுக்கு எத்தகைய பாபம் உண்டாகும்? அதனை உள்ளவாறு கூறவேண்டுகிறேன்.'

சாம்பர்:—'பூதானம் செய்தவன் அறுபதினாயிரம் வருடம் சுவர்க்கத்திலிருக்கிறான். அங்ஙனமே பூமியைக் கவர்வோன் அறு பதினாயிரம் வருடம் நரகம் அடைவான். தான் கொடுத்ததாயினும் பிறன் கொடுத்ததாயினும் பூமியைக் கவர்வோன் அறுபதினாயிரம் வருடம் மலத்தில் புழுவாகத்தோன்றுகிறான். கவர்வதற்கு ஒப்புக் கொண்டவன் இருமடங்கு ரௌரவத்தை அடைகிறான். வேறொரு வனால் கொடுக்கப்பட்ட பூமியை வேறொருவனைக்கொண்டு அறிவில் லாதவனாகிக் கவர்வாராயின் விந்தியக் காட்டில் நிச்சயமாகக் கரு நாகமாய்ப் பிறக்கிறான். அதனால் அறிஞர் பூமியைக் கவரக்கூடாது. கொடுத்தால் துறக்கமும் கவர்ந்தால் நரகமும் உண்டாகின்றது நிச்ச யம். விசேஷமாகப் பூதானம் செய்யவேண்டும். முன்பு சொன்ன குணத்துடன் கூடிய பூமியை இறுமைப் பயனளிக்கும் திருவாஞ் சியத்தில் தானம் செய்பவனுக்கு உண்டாகும் பயன்சொல்லுகிறேன். ஒருவன் தான் வறிஞனாயினும் சிறிது பூமிதானம் செய்யின் எழு கோத்திரத்தில் தோன்றிய நூற்றொருவரைப் பிறவிக்கடலினின் றும் தூக்கிவிடுவான். இதில் ஐயமின்று. இங்ஙனம் சாம்பர் கூற சுயக்ஞர் சொல்லுகிறார்.

சுயக்ஞர்:—'இறுமைப் பயனளிக்கும் திருவாஞ்சியத்தில் குப்த கங்கையில் செய்யும் வேறு தானங்களின் பயன் யாவை? கூற வேண்டுகிறேன்.'

சாம்பர்:—'திருவாஞ்சியத்தில் கன்னிகாதானம் செய்பவனது பயன் கூறுகிறேன். கவனமாய்க் கேள். அக்கன்னிகையின் உட லில உள்ள மயிரளவான ஆயிரவருடங்கள் சிவலோகத்தில் சிறந்து விளங்குகின்றான். கன்னிகைக்கு சுல்கமாகப் பொருள் கொடுத்தா வது கன்னிகையை எவன் கொடுக்கச்செய்கிறானோ அவன் இருபத் தொருகுலத்தைப் பிரம்மலோகத்தில் நீண்டகாலம் வசிக்கச்செய்வான். அவன் சிவபெருமான் அருளால் திருவாஞ்சியத்தில் புண்ணியகாலத் தில் சந்திரபோன்றொளிக்கும் விமானத்தில் ஏறிச்செல்வான். நல்ல சுரோத்ரியனுக்கு விசேடமாக எள்தானம் செய்வதால் அறுபதி னாயிரம் வருடம் பிதுருலகத்தில் இருந்து விளங்குவான். எள்ளும் பசுவும் அந்தணனுக்குக் கொடுப்போன் ஆயிரம் கன்னிகாதானப் பலன் அடைவான். இதில் சந்தேகமில்லை. வறிய சுரோத்ரியனைப் பார்த்துக் கோதானம் செய்பவனுக்கு உடனே பாவங்களெல்லாம் அகன்றுவிடுகின்றன. இவ்வாவின் உடலில் எவ்வளவு மயிர்களிருக் கின்றனவோ அவ்வளவு ஆயிரம் வருடங்கள் கோக்களது உலகத்தில்

இருந்து விளங்குகிறான். முனிவரே! எள், பொன், பசு, அன்னம், கன்னிகை, பூமி ஆகிய இவை அந்தணனுக்குக் கொடுத்தவுடனேயே அவனைக் காப்பாற்றுகின்றன. எவன் திருவாஞ்சியத்தில் அந்தணனுக்கு எருது தானம் செய்கின்றானோ அவன் கோடிவருடம் கோலோகத்திலிருந்து போகங்களையனுபவிக்கிறான். ஒருவன் திருவாஞ்சியத்தில் தீபவொளியுடையதும் படுக்கை, ஆசனம், பாத்திரங்கள், சமையலுக்குவேண்டிய பொருள்கள், தனம், தானியம், வேலைக்காரி, பசு, பூமி இவைகளுடன் கூடிய வீடு தானம்செய்தால் பிரளய காலம் வரையிலும் பிரம்மலோகத்தில் இருப்பான். அந்தணனுக்குத் திருவாஞ்சியத்தில் தன எண்ணம் நிறைவேற நல்ல அன்னம் இட்டு விருப்புடன் கட்டிய படுக்கை கொடுப்பவன் அப்புண்ணிய மகிமையால் பிதுர் உலகத்திலிருக்கிறான். கலிதோன்றாத் திருவாஞ்சியத்தில் எவன் சில்பம், அத்யயனம், வித்தை, மந்திரம், ஔஷதம், இவை அந்தணனுக்கு அளிக்கின்றானோ, அவன் இருடிகளெல்லாம் வழிபட சப்தரிஷி மண்டலத்தில் சேருகிறான். ஏ! முனிவரே! சுரோத்ரியனும், நற்குலத்தில் தோன்றியவனும், வறிஞனும், குடும்பியுமான அந்தணனை ஒருவருடம் காப்பாற்றிவருபவன் கோடி கோதானப்பயன் அடைகிறான். யாவும் அளிக்கவல்ல திருவாஞ்சியத்தில் அந்தணனுக்கு நீர்குடிக்கும் பாத்திரமாவது குண்டிகையாவது அளிப்பாராயின், கந்தருவர் குழுமியிருக்கும் வருண உலகத்தினையடைகின்றான். கோடை நான்குமாதங்களில் குடிநீர் அளிப்பவன் சந்த்ரலோகத்தை அடைகிறான். கலியற்ற திருவாஞ்சியத்தில் தேய்த்துக்கொள்ள எண்ணெய்கொடுப்பவன் மணமினியவனும் அழகுடையவனும் சூரனும் பண்டிதனும் நிச்சயமாக ஆவான். அத்தலத்தில் ஆடைதானத்தால் ஒளியுடையோனும் இனிய பார்வையுடையவனும் மனோக்ஞனும், செல்வமுடையவனும், பெண்கள் மனம் கவர்பவனும் ஆவான். செருப்பு, குடை இவற்றை அத்தலத்தில் அளிப்பவன் தேவர் மங்கையர்வழிபட இந்திரலோகம் அடைகிறான். பல்துலக்கும் குச்சிதானத்தால் மிக்க இனிய சொல்லுடையவனாகிறான். பால், தயிர், மோர் நெய், வெல்லம், தேன் இவற்றை அத்தலத்தில் பக்தியெண்ணத்துடன் மகிழ்ந்தளிப்பவன் ஆயிரம் வருடம் தேஜோவுலகத்தில் வசிப்பான். தானங்களையும் தானங்களின் பலன்களையும் எவர் சொல்ல முடியும்? அயனாலும் சொல்லமுடியாது. ஏதோ தானங்களைச் சிறிது சொன்னேன். முழுவதும் சொல்லின் கோடி வருடங்களாயினும் முடியவே முடியாது. இத்தானப் பயன்களைக் கேட்ப

வரும் படிப்பவரும் எல்லாதானப் பலன்களையும் துறக்கத்தில் சென்றனுபவிப்பார்.

[சாம்போப புராணம் திருவாஞ்சிய மகிமையில் பூதானம முதலிய தானங்களின் மகிமை கூறல் என்ற 21-ம் அத்யாயம் முற்றிற்று.]

---

## முப்பத்தாருவது அத்யாயம்.

'நல்லோரிற் சிறந்த சாம்பரே! நினைத்தமாத்திரத்தில் இருமைப்பயனை அளிக்கும் திருவாஞ்சியத்தைச் சுற்றியிருக்கும் தீர்த்தங்களின் காரணமும் அவைகளின் மகிமையும் என்னிடத்தில் தயவுடன் கூறவேண்டும்' என்று சுயக்ஞர் கூறியவுடன், இதனைக் கேட்டுச் சாம்பர் மகிழ்ந்து கம்பீரமானவாக்கால் அத்தீர்த்தங்களின் பெருமையையும் காரணமும் கூறினர். 'ஏ! சுயக்ஞனே! தீர்த்தங்களின் காரணம் சொல்லுகிறேன கேள். கிழக்குமுதல் வரிசையாக அவைகளை அறிவுக்கெட்டினபடி சொல்லுகிறேன். முன்பு அயன் கல்பத்தின் முடிவில் உலகு நீரினுல் பிரளயம் வந்து அழிய, 'பாதாளம் முதல் பிரம்மலோகம் வரையில் மூழ்கியிருக்க, அங்கு முழுகாத தலம காசியைத்தவிர வேறு இருக்கிறதா? அங்ஙனமிருப்பின் என்னிடத்தில் அருளுடன் காட்ட வேண்டும்' என்று சிவலோகத்தில் பார்வதி பரமேஸ்வரனைப்பார்த்துக்கேட்டாள். இங்ஙனம் பார்வதியால் வேண்டப்பட்ட பார்வதி வல்லபரான சிவபிரான் 'அங்ஙனம் காட்டுகிறேன்; என்னுடன்கூட வா' என்று சொல்லி நந்திதேவரால் கொணடுவரப்பட்டதும வெள்ளிமலை போன்றதுமான இருடபத்தில் பார்வதியுடன ஏறிக்கொண்டு நந்திதேவர் சூழ்ந்து வரவும் தேவமங்கையர் சாமரமிரட்டவும், தங்கத்தடிகள் பிடித்துவரவும் குண்டோதரன் குடைபிடிக்கவும் ஆகாயத்தின் மேருவின் தென்பகுதியில் சென்று காண்பித்தார். 'எனது காதலியான பார்வதியே! பார். இவை காசிக்கொத்த ஆறுதலங்கள் பிரளயத்திற்கிலக்காகாது இருக்கின்றன. அத்தகைய திருவெணகாடு முதலிய தலங்களுக்குள் காவேரியின் தெற்கில இருயோஜனை தூரத்தில் திருவாஞ்சியமென்றொரு தலம் இருக்கிறது. அதை நினைத்தாலே முக்தியளிக்கும். காசியோ அவ்விடத்தில் மரணமானுல்தான் முக்தியளிக்கும். ஆகையால் இவ்விரண்டின் வாசியை நீயே அறிந்துகொள். ஆதலால் மேன்மையை

அதற்கு ஒத்த தலம் பூமியில் இல்லை' என்று பரமசிவனால் சொல்லக் கேட்ட பார்வதியானவள் முக்கட்பிரானைப் பார்த்து 'பிரளயத்திற்கு இலக்காகாத அத்தலத்தைப் பார்க்க ஆவல் அதிகமாக இருக்கிறது. ஆகையால் அதைக்காட்டியருள வேண்டுகிறேன்' என்று வேண்டினாள். உடனே மிக்க அருளுடையவரும் சம்புவுமான பரமசிவன் அவளுக்கு அத்தலத்தைக் காட்டியருள, பார்வதியானவள் ஒப்பற்ற திருவாஞ்சியத்தைப் பார்த்துப் புன்முறுவல் கொண்டவளாகி 'இத் தலம் மிகவும் சிறந்ததாக இருக்கிறது. லிங்கமும் தீர்த்தமும் சோதிவடிவ முடையதாக இருக்கிறது. இதைத்தான் பார்த்து எனக்கு ஆனந்தம் வளர்கிறது. ஏ! மகேசுவரரே! இத்தலத்தில் இருவரும் வசிப்போம்' என்றாள். இந்த அமுதுபோன்ற சொல்லைக் கேட்டு மனமகிழ்ந்து, 'அங்ஙனமே இங்கு உன் மகிழ்ச்சிக்காக உன் னுடன் வசிக்கிறேன்' என்று சொல்லிப் பரமசிவன் இருப்பிடத்தினின்றும் திருவாஞ்சியம் இறங்கித்தனது சுயம்புலிங்கத்தில் மறைந்து விட்டார். தேவியும் பக்கத்திலிருக்கும் ஞான சக்தியில் மறைந்து விட்டாள். பிரளயகாலம் நீங்கிப் படைக்குங்காலம் வந்தவுடன் பரமசிவன் பார்வதியைப் பார்த்து, 'உலகுபடைக்கும் அயனைப்படைப் பாயாக' என்று சொல்லிவிட்டு அவ்விடத்திலேயே மறைந்துவிட்டார். இங்ஙனம் அவர் உத்திரவின்படி நடக்கவேண்டிய தேவி உடல் பூரித்தவளாகி அயனைப் படைக்கவேண்டித்தனது ஆலயத்திலிருந்து வெளிக்கிளம்பிப் புண்ணிய புட்கரணித் தீர்த்தத்தில் பார்த்தாள். உடனே தேவியின் பார்வையால் அந்நீரில் ஆயிரவிதழ்பெற்ற பொன் தாமரை காணப்பட்டது. அதன் கர்ணிகையின் நடுவில் அயன் அப்பொழுது தோன்றினன்; அயன் கிளம்பிக்கரையில் வந்து பார் வதியைக்கண்டு அருகில்வந்து மீண்டும் மீண்டும் வணங்கி வாழவந்த நாயகியின் மகிழ்ச்சிக்காகத் துதித்தான்.

அம்பிகைதுதி :— அயன் :—'பாக்கியமளிக்கும் தேவியை வணங்குகிறேன். ஒளிவடிவளை வணங்குகிறேன். தாமரை இதழ் போல் அகன்ற கண்ணுடையவளை வணங்குகிறேன். ஞாயிறு மதி இருவரையும் கண்ணாகவுடையவளை வணங்குகிறேன். பாக்யவாக் பிராப்த நாயகியை வணங்குகிறேன். முகுந்தனுடன் பிறந்தாளை வணங்குகிறேன். சந்திரகலை தரித்தவளை வணங்குகிறேன். அயன்களால் வணங்கத்தக்கவளை வணங்குகிறேன். புன்முறுவல் வாய்ந்த முகமுடையாளை வணங்குகிறேன். பாசம் அங்குசம் இவற்றைத் தரிப்பவளை வணங்குகிறேன். பாக்யாப்த நாயகியை வணங்கு

கிறேன். தொண்டர்வழிபடும் கழலுடையாளை வணங்குகிறேன். அரவக்குண்டல மணிந்தவளை வணங்குகிறேன். சிறந்த அபயஹஸ்த முடையாளை வணங்குகிறேன். பாக்யாப்த நாயகியை வணங்கு கிறேன். இளஞ் சூரியன்போன்ற ஒளியுடையாளை வணங்கு கிறேன். மதிபோல் ஒளிரும் முகமுடையாளை வணங்குகிறேன். சங்கரனது இடது பக்கத்திலிருப்பவளை வணங்குகிறேன். பாக் யாப்த நாயகியை வணங்குகிறேன்.' கைலாயத்திலிருந்து திருவாஞ் சியத்திற்குப் பாக்யம்பெற வந்ததால் பாக்யாப்த நாயகியென்று பெயர் உண்டாயிற்று. அயன், பஞ்சரத்ன துதியால் இம்மாதிரி பாக்யாப்த நாயகியைத் துதித்து படைக்குந்திறல் பெறவேண்டி கொடியதவம் செய்தான். இங்ஙனம் அயன் தவத்தால் படைக்குந் திறம்பெற்றுப் பரமசிவனையும் பாக்யாப்த நாயகியையும் வணங்கி அவ்விருவருடைய அருளால் உலகம் படைத்துத் தனக்கு உலகின் கண் புகழ் உண்டாகவும் திருவாஞ்சேசரது அருளுக்காகவும் சிறந்த விபவத்துடன் திருவிழாச் செய்தான். மாசிமாதம் சுக்லபக்ஷம் அஸ் வனிமுதல் மகம வரையில கொடியேற்றம் முதல் தீர்த்தங் கொடுத்தல் முடிவாகப் பத்து தினங்கள் மகிழ்ச்சியோடு அயன் திருவிழாச் செய்து தீர்த்தோத்ஸவம் செய்ய எண்ணிப் புண்ணிய புட்கரணியின் முன்பு அம்புவிழும் எல்லையில் ஒரு அகன்ற பொய்கையை வெட்டிக் காவேரியை ஆவாஹனம் செய்து அதில தேவர்களுடன் நீராடி ஒரு தெப்பம்செய்து அதில் தேர் ஒன்றமைத்து அதன்கண் குடை சாமரங்களெல்லாம் அமைத்து கண்ணடி, கொடி, வாழைமரம், பாக்கு மரம், இவைகளெல்லாம் கட்டிப்பலவகை மேற்கட்டிகளமைத்தும் மகாபிஷேகம் நைவேத்தியம் நர்த்தனம் மகா அர்ச்சனங்கள் செய் தும் தீர்த்தத்தைச் சுற்றிலும் பூரதங்களாலும் பாக்கு மரங்களாலும் வாழைகளாலும் மாலைகளாலும் விளக்கின் கூட்டங்களாலும் கொடிகளாலும அணிந்து பிறகு பிறையணி சடையரான சாம்பரை ஆதரவுடன் வேதவாக்கியங்கள் முழங்கப் பல்வகை நடனங் களுடனும் பல்வகை வாணவேடிக்கைகளுடனும பொன் வெள்ளி மற்றும் பல்வகைத் தீவட்டிகளுடனும் தீர்த்தோத்ஸவததைச் செய் தார். அந்த உத்ஸவத்தால் அருள்கடலான திருவாஞ்சேசர் தேவர் கூட்டத்தலைவனான அயனைக் கூப்பிட்டு, 'அயனே! மகிழ்ந்தேன். உனது வேண்டுகோள் யாது?' என்று கூறினார். உடனே, அயன் வேண்டுகோளுக்கு மேற்பட்டு அருளும் பரமசிவனைப் பார்த்துத் தனது வேண்டுகோளை வேண்டினன். 'முன்பு படைக்குந்திறன் தங்களிடம்பெற்றேன். இப்பொழுது யான் வசிக்க ஓர் உலகம்

வேண்டுகிறேன். இத்தீர்த்தம் என்பெயரால் புகழ்பெற்று விளங்கட்டும். மற்றும் எவன் இந்தக்குளத்தில் நீராடிச் சிறந்த தெப்பத்தில் தேவியுடன் எழுந்தருளியிருக்கும் தேவரை மகா நக்ஷத்திரத்தில் தெரிசிக்கின்றானோ அவனுக்கு எட்டுவித விபூதியையும் அளித்து முடிவில் உனது பதவியையும் அளிக்கவேண்டும்' என்று நான் முகன் வேண்டினவுடன், ஈசன் 'உலகுகளையெல்லாம் படைத்து, பூராதி, எழாவதான சத்தியமென்ற உலகில் எனது கட்டளையால் இருப்பாயாக. தீர்த்தமும் உன்பெயரால் வழங்கக்கடவது. தேவியுடன் என்னைத்தேரில் தரிசிப்பவரும் அட்டமா சித்தியும் அடையட்டும். அதன்மேல் மற்றொரு வரமும் தருகிறேன். உன்னால் ஆவாஹனம் செய்யப்பட்ட காவேரியையுடைய இத்தீர்த்தத்தில் மாசி மாதம் மகத்தில் சூர்யோதய காலத்தில் நீராடுபவர் காவேரியில் முறைப்படிசெய்த துலாஸ்நான பலத்தையும் எனது கட்டளையால் மாகஸ்நான பலத்தையும் அடைவர்' என்று சொல்லி அருள்கடலான பரமசிவன் மறைந்துவிட்டார். உடனே அயன் சிவபிரானிடமிருந்து வேண்டுகோளைப்பெற்றுத் தேவர்களுடன் சத்யலோகம் போய்ச்சேர்ந்தார். ஆகையால்தான் இதற்கு பிரம்ம தீர்த்தம் என்று பெயரிருக்கிறது. அயன் தீர்த்தத்தின் காரணத்தை உனக்கு விரிவாகச் சொன்னேன். இதன் காரணத்தை ஒருவழிபட்டுக் கேட்போரும் படிப்போரும் அயனுலகடைவர். இதன்கண் ஆராய்ச்சி வேண்டியதில்லை.'

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் தீர்த்த வர்ணனத்தில் பிரம்ம தீர்த்தத்தின் தோற்றம் என்ற 22-ம் அத்யாயம் முற்றிற்று.

---

## முப்பத்தேழாவது அத்யாயம்.

சாம்பர் :—'வாஞ்சேசருக்குச் சமீபத்தில் அக்னி கோணத்தில் இப்பொழுது இருக்கின்ற தீர்த்தத்தின் உற்பத்தியையும் மகிமையையும் உனக்கு ஆதரவுடன் சொல்லுகின்றேன். கவனமுடன் கேட்பாயாக. முன்னொரு கல்பாந்தரத்தில் அக்னியானவன் தன் மனதில் இப்பொழுது தான் என்ன செய்யவேண்டியதென்று சிந்தித்தான். முன்பு பிரம்ம ரிஷிகளுடைய சாபத்தால் எனக்கு ஸர்வபக்ஷத்வம் (எப்பொருளையும் உண்டல்) விரைவாக வந்தது. அதனால்

எனக்கு உண்ணத் தகாததனை உண்ணும் பாவம் வந்து சேர்ந்தது. இப்பாவம் எப்படிப் போகுமென்று அவிபுண்பவனான அக்கினியானவன் சிந்தித்துக்கொண்டிருக்குங்கால் ஆகாயவாணி தோன்றி, 'அப்பா! பாப நிவிருத்திக்காகத் திருவாஞ்சியம் சென்று "த்விஶீர்ஷம்" (த்விசீர்ஷம்) என்ற மந்திரத்தால் புண்ணிய புட்கரணியில் நீராடின் பாவம் நீங்கும். செல். இதில் ஐயமின்று' என்று அக்னியைப் பார்த்துக் கூறிற்று. ஒளிக்குத் தலைவனான அவிபுண்போன் அதனைக் கேட்டு உடனே சந்தனக்காட்டுக்கிடையிலிருக்கும் ஸ்ரீ வாஞ்சிய நகரத்தை அடைந்து புண்ணிய புட்கரணி தீர்த்தத்திலிருந்து ஸ்ரீவாஞ்சியநாயகரையும் நாயகியையும் வணங்கித் துதித்து அங்கேயே அக்னி திக்கில் சமீபத்தில் பர்ண சாலையை அமைத்துத் தீர்த்தமும் அமைத்து, அத் தீர்த்தத்தின் சமீபமான தென் கரையில் கைலாசநாதர் என்ற சிறந்த லிங்கத்தை ஏற்படுத்தி விதிப்படி பிரதிஷ்டை செய்து எல்லாத் தீர்த்தங்களையும் தனது தீர்த்தத்தில் ஆவாஹனம் செய்து அந்தத் தீர்த்தத்தால அக்கைலாசநாதரை ஆதரவுடன் வழிபட்டுக் கொண்டு அக்னியானவன் தனது பாவம் நீங்கச் சிலநாள் அங்கு இருந்தான். பிறகு கார்த்திகைமாதக் கிருத்திகையில் முருகனைப் பூசிக்கவேண்டுமென்று நினைத்து அவ்வக்னி மனதால் வில்வ கர்மாலை விரும்பினான். அவிபுண்போன் நினைத்தவுடன் வந்த வில்வ கர்மாலையைப் பார்த்து எனது மகிழ்ச்சிக்காக முருகனைச் செய்து தரவேண்டுமென்று சொல்ல அவன் உடனே அழிவில்லாத முருகனை நிர்மாணம் செய்தான். பிறகு சைவாகமமுணர்ந்த சைவரால் பிரதிஷ்டிப்பித்து, சூரியன் விருச்சிகத்திலிருக்குங்கால் முப்பது நாளும் பிரபுவான தேவசேனாபதிக்கு அக்னியானவன் திருவிழாச் செய்தான். கார்த்திகை கிருத்திகையோகத்தில் தேரிலமர்ந்த குகனை வணங்குபவர்க்கு ஏழு பிறவிகளில் அந்தணனாகும் தன்மையும் தனதான்யங்கட்குத் தலைமையும் நிச்சயமாக உண்டாகக் கடவது என்று மனதில் தீர்மானம் செய்துகொண்டு அக்னி தேர்விழாச் செய்தான். அவ்விழாவினால் மகிழ்ந்த அறுமுகன் அக்னி முன் தோன்ற அவ்வவிபுண்போன் தாரகாசுரனைக் கொன்றவனும் பார்வதியின் முகத் தாமரைக்குப் பகலவனுமாயிருக்கிற முருகனைப் பார்த்து, கார்த்திகைமாதம் கார்த்திகையில் மீண்டும் மீண்டும் வணங்கி வேண்டினான். 'எல்லாவற்றிற்கும் தலைவனும் தேவசேனாபதியும் விபுவாயுமிருக்கிற ஏ! சுப்பிரமண்யனே! உன்னை வணங்குகின்றேன். என்னைப் பாதுகாக்க வேண்டும். அருட் கண்ணால் நோக்கவேண்டும்' என்று வேண்டிய அக்னியைப் பார்த்து சேனைத்தலைவனான குகன், 'ஏ! அக்னியே!

என்னை ஏற்படுத்திப் பூஜை செய்ததாலும் தேர்விழாச் செய்ததாலும் உனக்குப் பிரசன்னமானேன். என் மனம் மகிழ்ந்தது. உனக்கு வேண்டியதைக் கேள். உனக்குக் கொடுக்கக்கூடாதது என்னிடத்தில் ஒன்றுமில்லை' என்று சொன்னார். மயிலேறுவோன் இங்ஙனம் கூற அக்னி உலகுக்கு இதம் வேண்டியும் தனது பாவம் நீங்கவும் எணணிப் பிரார்த்தித்தான். 'தலைவனே! யான் செய்த குற்றம் காரணமாக முன்னொருகால் எல்லாவற்றையும் உண்பவனாயும் உண்ணத்தகாதன உண்பவனாயும் விரைவில் ஆகக்கடவாய் என்று மகரிஷியால் சபிக்கப்பட்டேன். உண்ணத்தகாதன உண்டலாலும் எல்லாமுண்டலாலும் வரும் பாபக்கூட்டங்கள் உன்னருளால் அழியட்டும். கார்த்திகைமாதம் கிருத்திகா யோகத்தில் என் தீர்த்தத்தில் நீராடுவதாலும் உனது தரிசனத்தாலும் அழியட்டும். ஏ! தலைவனே! இந்த எனது தீர்த்தம் மூவுலகிலும் உனதருளால் அக்னி தீர்த்தமென்று புகழ்பெறுக. இதுமுதல் இத் தீர்த்தத்தில் உண்ணத்தகாதனவுண்டோர் நீராடித் தூயோராய் எனது ஸ்தானத்தை அடையட்டும். தகுதியும் இன்மையும் விசாரியாது எல்லாவிடங்களிலும் உண்போரும் சிறிதும் கவலையின்றி என் தீர்த்தத்தில் நீராடிப் பாவம் நீங்கி அழியாத எனது உலகத்தை அடையட்டும். ஏ! விபோ! கார்த்திகைமாதக் கிருத்திகையில் ஒரு வருஷம் ஒரு தடவை எனது இந்த அக்னி தீர்த்தத்தில் நீராடி ஏ! தலைவனே! தேரிலமர்ந்த உம்மை இப்புவியில் சேவிக்கின்ற அந்தணர் தனமுடையோராயும் வேதமறிந்தவராயுமாவார். ஸமிதாதானம் செய்யாத பிரமசாரிகளும் ஔபாசனம் விட்ட கிருகஸ்தனும் அக்னிஹோத்ரம் விட்ட யஜ்வாக்களும் விரைவில் என் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் அந்தந்த குற்றங்களிலிருந்து அவரவர் நீங்குவர். அக்னியில்லாதோரும் ஆசாரமில்லாதோரும் விதுரர்களும் விதவைகளும் என்னைப் பூஜிக்காதவர்களும் எனது தீர்த்தத்தில் நீராடி உமது கிருபையால் எனது உலகத்தை அடையட்டும். அறுமுகனே! பூர்ணிமையிலும் அமாவாசையிலும், ஸ்தாலிபாகத்தையும் இஷ்டியையும் ஆதரவோடு செய்யாதவரும் காலை மாலைகளில் வைச்வதேவஞ் செய்யாதவர்களும் இத்தீர்த்தத்தில் நீராடி பாவக்கூட்டத்தினின்றும் விடுபடக்கடவர்' என்று அக்னியால் வேண்டப்பட்ட முருகன், 'அங்ஙனமேயாகுக' என்று கூறிமறைந்தார். அந்த அக்னியும் முருகனிடமிருந்து அநேக வரங்கள் பெற்றுக்கொண்டு தனது லோகம் சென்றான். ஏ! பிராம்மணனே! இம்மை மறுமைப் பயனளிக்கும் அக்னி தீர்த்தத்தின் காரணத்தை உனக்குக் கூறி

னேன். அது முதற்கொண்டு அது அக்னி தீர்த்தமென்று சொல்லப்படுகின்றது.

சுயக்ஞர் :—'ஏ! முனிவரே! அந்த தீர்த்தத்திற்கு இப்பொழுது நாரத தீர்த்தமென்று வேறு பெயர் வழங்குகின்றார்களே, அது எக்காரணங்கொண்டு அப்பெயரால் இப்பொழுது பிரசித்தமாகி இருக்கின்றது. கேட்க விருப்பமுடைய எனக்கு அதனை இப்பொழுதே கூறுவீராக.'

சாம்பர் :—'அதன் காரணங் கூறுகின்றேன்; கவனத்துடன் கேட்பாயாக. ஏ! பிராம்மணனே! முன்பு தேவசபையில் தேவ சன்னதியில் கந்தர்வாதிபதியான சித்ரரதனுக்கும் நாரதருக்கும் சொற்போர் உண்டாயிற்று. அப்பொழுது தேவர்கள் அவர்களைப் பார்த்து உங்களுக்குள் விவாதம் வேண்டாம். நீங்கள் இருவரும் இங்கு பாடுவீராக. எவர் உயர்ந்தவரென்று யாங்கள் அறிகின்றோம் என்று கூற அவ்விருவரும் அப்பொழுது மகிழ்ச்சியுடன் பாடினர். அவர்களுள் சித்திரரதன் பாட்டில் உயர்ந்தவனாகத் தேவர் கருதினர். அப்பொழுது நாரதர் கானவித்தையில் சித்ரரதனைக் காட்டிலும் தனக்கு மேன்மையை விரும்பித் தேவலோகத்தினின்றும் புறப்பட்டார். அப்பொழுது ஆகாயவாணி தேவ விருடியான நாரதரைப்பார்த்து 'ஏ! முனிவனே! சித்தியளிக்கும் க்ஷேத்திரங்களெல்லாவற்றுள்ளும் அப்பொழுதே சித்தியளிப்பதான ஸ்ரீவாஞ்சியம் என்ற க்ஷேத்திரப் பிரசித்தமாக இருக்கிறது. ஏ! முனிவரே! அங்கு சென்று அக்னி தீர்த்தத்தில் நீராடிக் கைலாசநாதரைச் சேவித்து அங்கேயே வசித்துக்கொண்டு புண்ணிய புட்கரணி தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீவாஞ்சிய நாதரையும் ஸ்ரீவாஞ்சிய நாயகியையும் மீண்டும் மீண்டும் வணங்கித் துதித்து அங்கேயே சரஸ்வதியைப் பிரதிஷ்டை செய்து சாஸ்திரப் படி பூஜிப்பாய். சீக்கிரமாக சரஸ்வதி அருள் செய்வாள். அங்ஙனம் சரஸ்வதியின் அருளால் உனக்கு மேன்மை வரும்.' என்று கூறி ஆகாயவாணியும் நின்றது. நாரதரும் மகிழ்ந்தார். அங்கு ஸ்ரீவாஞ்சியத்தில் சென்று, ஏ! முனிவனே! தூய்மையான அக்னி தீர்த்தத்தில் நீராடி அதன் தென்கரையில் குடிலமைத்துக்கொண்டு இருந்து முக்காலமும் பக்தியுடன் கைலாசநாதரைச் சேவித்துக் கொண்டு பிறகு சுபமான ஸ்ரீவாஞ்சியேசரது ஆலயத்திற்குச் சென்று புண்ணிய புட்கரணியில் நீராடி, ஸ்ரீவாஞ்சியநாயகரைச் சேவித்து சரஸ்வதிதேவியை அங்கேயே பிரதிஷ்டை செய்து சிரத்தை பக்தி

யுடன் விதிப்படி பூஜித்தார். உடனே அவருடைய பூஜையால் மகிழ்ந்து சரஸ்வதி தோன்றினாள். முனிவர் தலைவரான நாரதர் அங்ஙனம் வெளிப்பட்ட சரஸ்வதியைப் பார்த்து வணங்கித் துதித்து மீண்டும் வணங்கி மகிழ்வுடன் துதித்தார்.

நாரதர் துதி:—'முல்லைபோலும் மதிபோலும் வெண்மையான நிறமுடையவளும் கிளியுடையவளும் வீணையேந்திய சிறந்த கையுடையவளும் அயனுக்கு நாயகியுமான சரஸ்வதியை வணங்குகின்றேன். தாமரையிலமர்ந்த வாணியை வணங்குகின்றேன். தாமரை இதழ்போல் கண்ணளான வாணியை வணங்குகின்றேன். தேவ கூட்டம் வணங்குபவளை வணங்குகின்றேன். அயனது நாயகியை வணங்குகின்றேன். பொன்னன்ன ஆடையுடையாளை வணங்குகின்றேன். அன்னவாஹனமுடையாளை வணங்குகின்றேன். சரஸ்வதியை வணங்குகின்றேன்.' இங்ஙனம் துதித்த நாரதரைப் பார்த்து, அப்பொழுது, சரஸ்வதி கம்பீரமான வாக்கால், 'நான் உன்னால் பிரதிஷ்டை செய்யப்பட்டு நல்ல பக்தியுடன் நன்றாக பூஜிக்கப்பட்டேன். உனக்கு வேண்டுவதைத் தருகின்றேன். உனக்குக் கொடுக்கக் கூடாதது எனக்கில்லை' என்று கூறினள். வீணைகானத்தில் சித்ரரதனைக் காட்டிலும் எனக்கு மேன்மை இப்பொழுது அளிப்பாய்' என்று நாரதர் வேண்ட, 'அங்ஙனமேயாகக் கடவது' என்று சரஸ்வதி கூறி மறைந்தாள். நாரதரும் மகிழ்ந்தார். மீண்டும் நாரதர் உலகுக்கு அருள் செய்யவேண்டி மகிழ்வுடன் சரஸ்வதியை பக்தியோடு ஒன்பது ராத்திரி பூஜித்தார். அவருடைய பூஜையால் மகிழ்ந்த பாரதி மீண்டும் அவர் முன்பு மகிழ்ச்சியுடன் தோன்றி, 'தேவரிஷியே! உமக்கு என்ன அபீஷ்டம் நான் கொடுக்கவேண்டும். அதனை இப்பொழுதே சொல்லும்' என்று சொல்ல, தனது மாதாவான வாணியைப்பார்த்து நாரதர் 'ஏ! சரஸ்வதியே! இந்த ஆச்வயுஜமாதத்தில் உனக்கு நவராத்திரி உத்ஸவத்தை உனக்குப் பக்தியோடு செய்பவருக்கு இஷ்டத்தை நீ யளிப்பாயாக. அறுபத்துநாலு கலையும் நீயளிப்பாயாக' என்று கேட்க சரஸ்வதி, 'அங்ஙனமேயாகக்கடவது' என்று சொல்லி அப்பொழுதே மறைந்துவிட்டாள். சரஸ்வதிக்கு நவராத்திரி மகோத்ஸவத்தைச் செய்பவர் எல்லா வேண்டுகோளையும் கல்வியையும் பெறுகின்றனர்.' இங்ஙனம சாம்பரால் சொல்லப்பட்டது சுபக்ஞர் மீண்டும் அம்முனிவரைப் பார்த்து, 'பிறகு நாரதர் அங்கு என்ன செய்தார்? எனக்கு இப்பொழுது சொல்லவேண்டும்' என்று கேட்க, சாம்பர் கூறுவர். அங்கு சரஸ்வதியின் அருளால் தனது

வேண்டுகோள் எல்லாம் பெறவும், அக்னிதீர்த்தத்திற்கு தன் பெயரால் பிரசித்தி வரவும் வாஞ்சேசராது மகிழ்ச்சி பெறவும் வேண்டி நாரதர் பெரியதவம் செய்தார். உடனே நாரதர் தவத்தால் மகிழ்ந்து ஸ்ரீவாஞ்சியநாதர் அம்பாளுடன் வெளிப்பட்டுத் தோன்றி, 'நாரத முனிவனே! நான் இப்பொழுது கொடுக்கவேண்டிய வரமென்ன' என்று கேட்க, 'ஏ! சங்கரனே! நீராடினால் விரைவில் எல்லா வேண்டுகோளையும் பெறக்கூடிய அந்த அக்னி தீர்த்தத்திற்குக் கலியுகம் முடியும்வரையில் எனது சரிதம் வெளிப்பட என் பெயரும் அந்தத் தீர்த்தத்திற்கு இருக்கட்டும். தேவரீர் எனக்கு அபீஷ்டத்தை அளித்து உத்தான துவாதசியில் உம்மைச்சேவித்து அத்தீர்த்தத்தில நீராடுபவனுக்கு அபீஷ்டத்தை விரைவில் கொடுப்பீராக.' இங்ஙனம் நாரதரால் வேண்டப்பட்ட கருணைக்கடலான ஸ்ரீவாஞ்சியேசர் 'அங்ஙனமேயாகுக' என்று சொல்லி அந்த லிங்கத்தில் அப்பொழுதே மறைந்துவிட்டார். அதுமுதல் அதற்கு நாரத தீர்த்தமென்று பெயர் உண்டாயிற்று. ஏ! முனிவனே! உனக்கு நாரத தீர்த்தத்தின் காரணம் சொல்லிவிட்டேன். இந்த சரித்திரத்தை நாடோறும் கேட்பவனும் கவனத்துடன் வர்ணிப்பவரும் எல்லையில்லா பாவக்கடல் கடக்கின்றனர். இதில் ஐயமின்று.'

[சாம்பபுராணத்தில் ஸ்ரீவாஞ்சிய மகிமையில் அக்னி
தீர்த்தம் தோன்றல் கூறல் என்ற 23-வது
அத்யாயம் முற்றிற்று.]

---

## முப்பத்தெட்டாவது அத்யாயம்.

சாம்பர்:—' இந்நாரத தீர்த்தத்திற்கு மேற்கில் உலகில் பிரசித்தமான பெரிய யமகுண்டம் இருக்கிறது. அத்தீர்த்தத்தின் உற்பத்தியையும் அதன் பெருமையையும் இப்பொழுது கூறுகின்றேன். நீ கவனமுடன் கேட்பாயாக.

ஏதோ ஒரு பிரம்மகல்பத்தில் எருமை வாகனனான எமன் இப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும் என்று ஒரு சமயம் சிந்தித்தான். நீண்டகாலம் எல்லாப் பிராணிகளும் என்னால் கொல்லப்பட்டன. என்னால் செய்யப்பட்ட எல்லா தர்மங்களும் அந்த ஜீவஹிம்சையில் அடங்கிவிட்டன என்பதில் ஐயமின்று. வேதம், ஸ்மிருதி, புராணங்கள், ஆகமங்கள் இவற்றாலும் இவ்வுலகில் கொல்லாமை உயர்ந்த

தருமம் என்று சொல்லப்படுகின்றது. இந்த விஷயம் தெரிந்திருந்தும் பிராணிகள் என்னால் கொல்லப்பட்டன. அந்தப் பாபம் நீங்க யான் இப்பொழுதே முயல்வேன் என்று பிராணிகளை யெல்லாம் கொன்ற யமன் மனத்தாற் சிந்தித்து இப்புவியில் சீக்கிரமாகச் சித்தி யளிக்கத்தக்க ஸ்தலம் எது என்று சிந்தித்தறிந்து மகிழ்ச்சியால் கண்மலர்ந்தவனாய்த் திருவாஞ்சியம் என்ற பெரிய ஸ்தலம் எனக்கு இப்பொழுதுதான் அறிவுக்கெட்டியது. அது பிரம்மஹத்தி முதலிய பாபங்களை உடனே போக்குகிறது. அந்த ஸ்தலத்தில் இறந்தாலும் நீராடினாலும் வசித்தாலும் இப்புவியிலுள்ள மனிதர்கள் யமவாதனையையும் யமதூதர்களையும் எமலோகத்தையும் பார்க்காமல் விரைவாக விமானத்தில் ஏறிக்கொண்டு சிவபிரானிருப்பிடத்தை யடைவர். அத்தலத்தில் அச்சிவபிரானுடைய ஸ்தானத்தை அடைந்து ஸ்ரீவாஞ்சியநாயகரை வழிபட்டு அந்த யமன் விரைவில் தனது வேண்டுகோளைப் பெற்றான். யமன் புறப்பட்டுச்சென்று புண்ணிய புட்கரணி ஜலத்தில் பஞ்சாங்க விதிப்படி நீராடி, பாக்யாப்தநாயகியையும் ஸ்ரீவாஞ்சேசரையும் வணங்கி முன்புறத்தில் தேவியின் இடக்கண்ணுக்கிலக்கான இடத்தில் ஓர் தீர்த்தத்தை உண்டுபண்ணி அத்தீர்த்தத்தில் எல்லா தீர்த்தங்களையும் ஆவாஹனம் செய்து அதில் மாத்யான்னிக ஸ்நானம் செய்து மாத்யான்னிக முதலிய காரியங்களை முடித்துக்கொண்டு காலையிலும் மாலையிலும் நீராடித் தனது எண்ணம் நிறைவேறவேண்டித் தனது தீர்த்தத்திற்கு வடகரையில் குடில் அமைத்து விதிப்படி இருந்து தவத்தாலும் பூஜையாலும் தானத்தாலும நியமத்தாலும் பிரமதகணங்கள் அம்பிகையுடன் கூடிய ஸ்ரீவாஞ்சியேசரை மகிழ்வித்தான். பிறகு அவனது தவத்தாலும் நியமத்தாலும் மகிழ்ந்த பரமசிவன் பின் வருமாறு சொன்னார்.

ஸ்ரீவாஞ்சிநாதர் :—‘யமனே! உனது தவத்தால் இப்பொழுது உனக்கு அருள் செய்ய முன்வந்துளேன். செந்நாய் போன்ற வயிற்றை உடைய யமனே! என்னால் உனக்கு கொடுக்கப்படவேண்டிய வரன் யாது?’ என்று சிவபிரானால் கூறப்பட்ட யமராஜன் துதித்து மீண்டும் மீண்டும் வணங்கித்தனது வரத்தை ஸ்ரீவாஞ்சியேசரிடம் கேட்டான். ‘உலகுக்கெல்லாம் நாதனான வரத்தைக் கொடுக்கும் சுவாமியான ஸ்ரீவாஞ்சியேசனே! நீண்ட காலந்தொட்டு பிராணிகள் எல்லாம் வதைக்கப்பட்டன. உமது கண்ணோட்டத்தால் அப்பாபத்தினின்றும் தூய்மையை அளிப்பாய். ப்ரபோ! என்னால் உண்டு

பண்ணப்பட்ட இத்தீர்த்தம் என்பெயரால் யமகுண்டமென்று புவியில் பிரசித்தியடையட்டும். இதுமுதல் பிராணிவதை செய்வோருடைய பாபங்கள் எனது இத்தீர்த்தத்தில் நீராடினவளவில் அழகியக்கடவனவாம். ஏ! விபோ! நீர் எனக்கு வேண்டிய வரம் தருவதற்காக காட்சி தந்தநாளாகிய மாகமாஸபரணியில் எனது தீர்த்தத்தில் நீராடி உம்மைத் தரிசிப்பவருக்கு இம்மை, மறுமை இன்பங்களை அளிக்கவேண்டுகிறேன்' என்று யமன் வேண்ட 'அங்ஙனமே ஆகக்கடவது,' என்று ஈசன் அருள்புரிந்து மறைந்தார். பிறகு யமன் சில காலம் யமபுரத்தில் இருந்தான். பிறகு காலாந்தரத்தில் மீண்டும் யமதர்மராஜன் மோகிதனாய்க் காலவசத்தால் சிவநாமா, அடியார், திருநீறு, உருத்திராட்சம், பஞ்சாக்ஷரம் இவற்றின் பெருமையையும் எல்லா வடிவுமான சங்கரனது ஸ்தானங்களின் பெருமையையும். விருதங்களின் பெருமையையும் மறந்து இம்மாதிரி பன்முறை கிரமமாக சம்புவிற்கு அபராதத்தைச் செய்தான். பிறகு காலாந்தரத்தில் பரமசிவனது அருளால் யமன் மோகம் நீங்கி எப்பொருளினும் உறைகின்ற சிவபிரானைத் தன் மனத்தில் நீண்டகாலம் இருத்தினான். அப்பொழுது தன் பாபம் நீங்குவதற்கு ஸ்தானமும் மனதிற்பட்டது. உடனே அவன் புறப்பட்டு ஸ்ரீவாஞ்சியமடைந்து ஸ்ரீவாஞ்சேசரது மகிழ்ச்சிக்காக பெரிய தவம் செய்தான். பிறகு பக்தரிடத் தன்பரான பாக்யாப்தநாயகிநாதர், அவன் தவத்தால் மகிழ்ந்தவராய், வெளிப்பட்டுத் தோன்றி யமனைப்பார்த்துச் சொன்னார்: 'தர்மா தர்மங்களையறிந்த யமனே! இங்கு வந்து மீண்டும் எதற்காகத் தவம் செய்தீர்? உமது வேண்டுகோள் சொல்வாய். அதனை அளிக்கின்றேன்' என்று பரமசிவனால் சொல்லப்பட்ட யமன் விபுவாயும், வரமளிப்பவராயும் இருக்கின்ற வாஞ்சேசரை வணங்கித் தாமரைப் பொற்பாதமுடையவரும், ஐந்து முகமுடையவரும், உமைக்குத் தோழருமான சிவபிரானைப் பார்த்து வரம் வேண்டினான்.

யமன்:—'ஸுத்யும்னன், ச்வேதன், மார்க்கண்டேயாதிகளிடத்திலும், தேவரீரிடத்திலும் அநேக அபராதங்கள் பட்டிருக்கிறேன். கருணைக்கடலே! தூதராகிய என் விஷயத்தில் பொறுத்து எம்மைக் காப்பீராக. ஏ பிரபோ! மஹேச்வரா! அபராதத்தைப் பொறுத்தமையால் உமக்கு அபராதஸஹர் என்று பெயர் பிரசித்தமாகட்டும்.' இங்ஙனம் யமனால் கேட்டுக்கொள்ளப்பட்ட கருணைக்கடலான ஸ்ரீவாஞ்சீசர் அங்ஙனமே ஆகக்கடவது என்று அருள் செய்து அடியாரிடத்தன்பினால் அபராதஸஹர் என்ற பெயர் தரித்தார். அது

முதல் மூவுலகிலும் அபராதக்ஷகர் என்ற பெயர் பிரசித்தமாயிற்று. மீண்டும் யமன் அபராதக்ஷகரான சிவபிரானை வணங்கி மற்றுமொரு வரம்வேண்டி இஷ்டத்தைத்தருகின்ற விபுவான சிவபிரானைத்துதித்தான்.

யமன்துதி:—'இந்திரன் முதலிய தேவர் கூட்டத்தால் வணங்கப்படும் திருவடிகளையுடையவரும், விபுவாயும், அபராதக்ஷகராயுமிருக்கிற வாஞ்சியபுரத்தலைவனை வணங்குகிறேன். வேண்டுவோர்க்கு வேண்டுவன அளிப்பவரும், காமனை எரித்தவரும், கருணைக்கடலும், விஷ்ணுவின் கண்மலரால் பூஜிக்கப்பட்ட அடியுடையவரும், விபுவும், அபராதக்ஷகருமான வாஞ்சியபுராதீசரை வணங்குகின்றேன். சந்திர வடிவினரும், தேவர்தலைவரும், சந்திர சூரிய அக்னியாகிய கண்ணுடையவரும், விபுவுமாகிய வாஞ்சியேசரை வணங்குகின்றேன். மேருவில்லரும் காலகூடமருந்தியவருமான வாஞ்சியேசரை வணங்குகின்றேன். பக்தருக்குப் பாக்கியமளிப்பவரும், பாக்யாப்தநாயகியின் நாதனுமாகிய சிவபிரானை வணங்குகிறேன். திருமாலுக்கு, அவர் தவத்தால் மகிழ்ந்து இலக்குமியை மீண்டும் அளித்தவருமாகிய வாஞ்சியேசரை வணங்குகிறேன். விஷ்ணுவால் காணமுடியாத அடியுடையவரும், அயனால் காணமுடியாத முடியுடையவருமான வாஞ்சியேசரை வணங்குகிறேன். அச்சிவபிரான் முன்னிலையில் கைகுவித்து வணங்குகின்றேன்.' இங்ஙனம் யமனால் துதிக்கப்பட்டு மிகமகிழ்ந்த பாக்யாப்தநாயகிநாதர் உயர்ந்த காணுபத்யத்தையும் தனக்குப் புதிதாக வந்த அபராதக்ஷகர் என்ற பெயரையும் அளித்தார். 'ஏ யமனே! அபராதக்ஷகர் என்று இப்புவியில் பிரசித்தியடைவாய். இதுமுதல் எனது இந்தஸ்தலத்தை பாதுகாத்தல் உனக்கு அளிக்கப்பட்டது. ஆகையால் நீ இதுமுதல் இந்த க்ஷேத்திரமாகிய ஸ்ரீவாஞ்சியத்தில் எனது கட்டளையை பாதுகாத்துக்கொண்டு எனது சன்னதியில் இருப்பாயாக. உனது தீர்த்தத்திற்கு முன்பிருந்து க்ஷேத்திரபாலன் என்ற பெயரைத் தரித்துத் தீயோரை ஒறுத்து நல்லோரைக்காப்பாற்று. நீ இதுமுதல் பூதங்கள், பிரேதங்கள், அரக்கர்கள், தீயபிசாசுகள், அசுரர்கள், இங்கு வந்துள்ள தீய கிரகங்கள், ஆகிய இவர்களை நீ ஒறுப்பாயாக. அத்தீய கிரகங்களை என் உத்தரவின்றி ஒருக்காலும் விடாதே. க்ஷேத்திரங்களுக்குள் சிறந்த இத்தலத்திலிருந்துகொண்டு என்னிடம் பக்தி செய்வோரும் முக்காலங்களிலோ யன்றி ஒருகாலத்திலோ வந்தடைவோரும் எனது மகிழ்வு கருதி எப்பொழுதும் எல்லாக் கருமங்களையும் இங்கு செய்வோரும் ஆகியோர்க்கு

எல்லாச் செல்வமுமளித்து அவர்களைப் பாதுகாப்பாயாக. டம்பமுடையோர், மரியாதைகடந்தோர், பிறர் கொடைப் பொருளிலேயே பற்றுடையோர், எனது க்ஷேத்திரத்திற் பாவம்செய்தோர், என் பூஜையில் விருப்பில்லாதோர் ஆகியோரை இறக்குந்தருவாயில் எனது க்ஷேத்திரத்தைவிட்டு என் கட்டளையால் பிரித்துவிடு. இறப்பதற்காக என் ஸ்தலத்திற்கு வந்த பாபிகளை வேறு இடையூறுகளைத் தந்து இத்தலத்திலிருந்து வேறிடத்திற்குப் போகும்படிசெய். அல்லது பாய், கம்பளி, கட்டில் இவற்றிலாவது இறக்கும்படி செய்.' இம்மாதிரி யமனிடம் கூறி யமனுக்கு அநேக வரங்கள் அளித்துத் தனது லிங்கத்தில் மறைந்தார். மீண்டும் அந்த யமன் அவரைக் குறித்துக் கூறினன். 'பரணியுடன் கூடியதான எனக்குக் காட்சியளித்த நாளில் உமது திருவிழாவில் வருடந்தோறும் ஏ! சங்கரனே! உம்மை நான் வகிக்க எண்ணுகிறேன். என்மேல் ஏறிய உம்மை இவ்வுலகில் சேவிப்போருக்கு இம்மைப் பயனும் முக்தியும் அளிப்பீராக. உமது உத்ஸவத்தில் உமது தீர்த்தமாகிய என் தீர்த்தத்தில் எனக்குப் பிரீதிக்காக ஸ்நானம் செய்து என் மேலே இருக்கிற அம்பிகையோடுகூடிய உம்மை பக்தியோடு சேவிப்பவனுக்கு அணிமா முதலிய எட்டு சித்திகளையும் முடிவில் முக்தியையும் ஏ! பிரபோ! அளிப்பீராக' என்று யமன் வேண்ட ஸ்ரீவாஞ்சேசர் அங்ஙனமே யாகுக என்று யமனைப் பார்த்துக் கூறிமறைந்தார். அதுமுதல் தென் திசைக்கு நாயகனை யமன் க்ஷேத்திரபாலன் என்ற பெயரையும் காணபத்யத்தையும் சங்கரரிடமிருந்து பெற்றான். அந்த யமன் இப்பொழுதும் வாஹனமாக இருக்கிறான். பெரியோராகிய யமனால் உண்டுபண்ணப்பட்ட இத்தீர்த்தம் கிருதாந்தகுண்டம் என்று மூவுலகிலும் புகழ்படும். தைப்பிறைச் செவ்வாய் சதுர்த்தசியில் நீராடி தர்மராஜனது மகிழ்ச்சிக்காக யமாதி நாமாக்களைச் சொல்லிக்கொண்டு தெற்குமுகமாக நின்றுகொண்டு பக்தியுடன் ஸ்வயமாக தேவதீர்த்தத்தினால் ஆதரவுடன் இங்குத்தர்ப்பணம்செய்து "யமோநியந்தா" என்ற மந்திரத்தைப் பத்து தரம் ஜபம் செய்பவருக்கு விரைவில் வேண்டும் பயன் கிட்டும். ஜபமின்று ஏ! ஸுவ்ரத! யம தீர்த்தத்தின் பெருமையை உனக்குக் கூறினேன். இதற்குமேல் கேட்கவேண்டுவதிருந்தால் சீக்கிரம் கேட்பாயாக.

[ஸாம்போபபுராணத்தில் ஸ்ரீவாஞ்சிய மகாத்மியத்தில்
யமகுண்ட மகிமை விவரித்தல் என்ற 24-வது
அத்யாயம் முற்றிற்று.]

---

## முப்பத்தொன்பதாவது அத்யாயம்.

சாம்பர் :—'யமகுண்டத்திற்கு நிருதி திக்கில் சமீபத்தில் சிறந்த பெரிய சர்வ தீர்த்தம் என்றொரு தீர்த்தமுண்டு. அதன் தோற்றத்தையும் அதன் பெருமையையும் மகிழ்ச்சியுடன் உனக்குச் சொல்லுகிறேன். சிறந்த முனிவனே! கவனத்துடன் கேட்பாயாக.

ஸ்ரீமானும் சாகடாயன வம்சத்தில் பிறந்தவராயும் புத்திமானு யும் இருக்கிற ஸர்வர் என்ற முனி த்வாபராந்தத்தில் பிரம்மகல்பத தில், அழகிய ஸர்வாங்கங்களையுடைய கனகதாமை என்ற தனது மனைவியுடன் சரஸ்வதிநதிக்கரையில் அப்பொழுது குடிலமைத்துத் தனது தர்மத்தில் பற்றுடையவராயும் வேதாத்யனத்தில் பற்றுடைய வராயும் விருந்தினரிடத்தில் ப்ரீதியுடையவராயும் ஐம்பெரு வேள்வி செய்பவராயும், நாடோறும் சிவபூஜை செய்பவராயும், சிவத்யானம் செய்பவராயும், தர்மத்தில் பற்றுடையவராயும், அதர்மத்தில் பற்றில் லாதவராயும் இருந்தார். இப்படி ஸர்வர் என்ற சிறந்த அந்தணர் சிலவருஷம் கழித்தார். பிறகு பூவுலகில் யாவருக்கும் தீமை அளிக் கும் கலி புகுந்தான். மக்கள் கலியினால் பற்றப்பட்டவராயும், அதர் மத்தில் பற்றுடையவராயும் ஆயினர். ஸர்வர் என்ற அந்தணர் இவற்றையெல்லாமுணர்ந்து கலியால் மிகப்பயந்து என்ன செய்வது, எங்கு செல்வது, எங்கு சென்றால் கலிக்கொடுமை தோன்றாது என்று சிந்தித்தார். கலியால் என்னிடம் தர்மம் எங்கே இப்பொழுது இருக்கிறது. அதர்மம் தர்ம ரூபமாக எனக்குத் தோன்றுகின்றது. எங்கு சென்றால், கலிக்கொடுமை இருக்காது என்று சிந்தித்தார். அப்பொழுது அசரீரி வாக்கு ஸர்வர் என்ற பிராம்மணோத்தமனைப் பார்த்துக கீழ்வருமாறு கூறிற்று. 'யாவருள்ளும் சிறந்தவனும் நல்ல விரதங்களுடையவனுமான ஸர்வனே! கலிபயம் உனக்கில்லாதபடி இதமே கூறுகின்றேன். காவேரியின் தென்கரையில் இரண்டுயோஜனை தூரத்தில் சிறந்த புகழ்பெற்ற ஸ்ரீவாஞ்சியம் என்ற தலமிருக்கிறது. இது கலியில் இம்மை மறுமைப் பயனளிக்கும். இம்மாதிரி ஸ்தலம் வேறு இல்லை. உனக்கு இக்கலியை வெல்ல எண்ணமிருப்பின் இங் கிருந்து விரைவாகச்செல்' என்று ஆகாயவாணி சொல்லியது. உடனே அதனைக்கேட்டு அவர் மனைவியுடன் புறப்பட்டார். கலி, போகின்ற உயர்ந்த அந்தணனைப் பார்த்து சீக்கிரமாகப் பின் தொடர்ந்து 'என்னால் பிடிபட்ட நீ எங்கு செல்கின்றாய். நில் நில்' என்று சொல்ல, அவ்வந்தணர் பயந்து மிகுந்த வேகத்தோடு ஸ்ரீவாஞ்சியத்தைக் குறித்து ஓடினார். அவ்வந்தணன், தொடரும்

சலியைக் கண்டு உடல் நடுங்கி 'கருணைக்கடலே! உலகத்தலைவனே! ஸ்ரீவாஞ்சியநாதா! என்னைப்பாதுகாக்கவேண்டும். கலியால் விரட்டப்பட்ட யான் சரண்யனான உன்னைச் சரணமாக அடைந்தேன்.' துயருற்றோரைப் பாதுகாப்பதையே மேற்கொண்ட அச்சுரேசுவரன் இந்த தீனமான வார்த்தையைக் கேட்டுப் பக்கத்திலுள்ள அபராதஸகர் என்ற க்ஷேத்ரபாலர் அவ்வந்தணனைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துடன் அருளோடு பார்த்தார். கணநாதர் ஸ்ரீவாஞ்சியேசரது கடாக்ஷத்தில் ஏவப்பட்டு பட்டணத்திற்கு வெளியிற்சென்று நான்கு திசைகளிலும் பார்த்தார். கணநாதராகிய க்ஷேத்திரபாலர் குரோசவளவு தூரத்தில் (இரண்டுமைல்) ஓடிவருகின்ற அச்சம் விளைவிக்கும் கலியைப்பார்த்து ஹூங்காரத்தில் ஸ்தம்பித்துப் போகும்படி செய்தார். அவரால் ஸ்தம்பிக்கும்படி செய்யப்பட்ட கலி அந்த ஸர்வனென்ற அந்தணனை விட்டுவிட்டு அபராதஸகரை வணங்கிப் பல துதிகளால் துதித்து ஸ்ரீவாஞ்சிய க்ஷேத்திரபாலகரைக் கலி வேண்டிக்கொண்டான். 'அஞ்ஞானத்தால் இப்படி வருந்தி வந்த எனனை தேவரீர் கட்டிலிருந்து விடுவிக்கவேண்டும். உமது இத்தலத்திற்கு மேன்மையை விரைவில் செய்கின்றேன். எவ்விடங்களிலும் அமங்களத்தைச் செய்யும் யான் இங்கு மங்களத்தையே செய்கின்றேன். இந்த க்ஷேத்திரத்திற்கு ஐந்துகுரோச தூரத்திற்குட்பட்ட இடத்தில் வசிப்போருக்கு கலியில் எப்பொழுதும் எனது பீடை இருக்காது. ஐந்து குரோசமுடைய இந்தஸ்தலத்திற்குட்பட்ட கால் குரோசமுடைய இந்த இடம் கலிமங்கலம் என்று பிரஸித்தியடையட்டும். ஸ்ரீவாஞ்சியலிங்கத்திற்கு மேற்கில் குரோசமாத்திரமுடைய இடததில யான் வசிக்க உத்திரவு கொடுக்க வேண்டும். என் பெயரையுடைய அநத ஸ்தானத்தில் சூரியனுடைய மேஷசங்கிரமணத்தில் வந்து வருடந்தோறும் ஒருராத்திரி தங்கிக் குப்தகங்கையில் விதிப்படி நீராடி ஸ்ரீவாஞ்சியநாயகரையும் அம்பிகையையும் ஸ்ரீவாஞ்சியநாயகியையும் விதிப்படி வணங்கிப் பலவித துதிகளால் துதித்து ஒருவருடம் செய்த பாவத்தினின்றும் நீங்கியவனாக ஆவேன்' என்று இங்ஙனம் கலியால் வேண்டப்பட்ட க்ஷேத்திரபாலர் மகிழ்வுடன் ஸ்ரீவாஞ்சேசருடைய உத்தரவினால் அங்ஙனமேயாகக்கடவது என்றார். ஏ! முனிவனே! இங்ஙனம் அவரிடமிருந்து வரம்பெற்ற கலி மகிழ்வுடன் தன்னிருப்பிடம் சென்றான். வருடந்தோறும் இம்மாதிரி வந்து நீராடிப் பூஜித்துச் செல்கின்றான். ஏ! முனிவனே! அந்த அபராதஸகருக்குக் கலியை நிக்ரஹம் செய்த தால் கலிநிக்ரஹர் என்ற வேறொரு பெயரும் ஏற்பட்டது. ஸர்வ

தீர்த்தப் பிரசக்தியால் ஸ்ரீவாஞ்சிய க்ஷேத்திரத்தில் வசிப்பவர்க்குக் கலிபாதையும் இல்லையென்பதும் என்னால் விரித்துக் கூறப்பட்டது. சாகடாய வம்சத்தில் தோன்றிய அவ்வந்தணன் தனது மனைவியுடன் விரைவாக மகிழ்ச்சியோடு ஸ்ரீவாஞ்சியக் கோவில வந்து குப்த கங்கையில் நீராடி, அக்காலத்திற்குரிய அனுஷ்டானங்களைச்செய்து கைலாசத்திலிருந்து இங்கு பாக்கியங்களை அனுபவிக்க வந்ததுபற்றி பாக்யாப்தநாயகி என்ற பெயரையுடைய அம்மனை முதலில் வணங்கிப் பிறகு மேற்கு முகமான அழகிய ஸ்ரீவாஞ்சியேசரது லிங்கத்தை வணங்கிச் சிறந்த தோத்திரங்களால் துதித்துவிட்டு லிங்கத்திற்கு நிருதி திசையில் பர்ணசாலை அமைத்துக்கொண்டு விரைவாக ஒரு தீர்த்தத்தையும் அமைத்துக்கொண்டு நீண்டகாலம் தவம் செய்தார். அந்தணர் தலைவனான அந்த ஸர்வனது தவத்தால் மகிழ்ந்த சிவபிரான் அவன் முன் வெளிப்பட்டுத் தோன்றி 'உன் விருப்பமென்ன? உன் தவத்தால் மகிழ்ந்தேன். உன் விருப்பப்படித் தருகின்றேன்' என்று கூறினர். அது கேட்ட ஸர்வர் அப்பிரானை மிக மகிழ்வுடன் வணங்கிப் பலதுதிகளால் துதித்துக் கைகுவித்துக் கீழ்வருமாறு சொன்னர்.'

ஸர்வர் :—'முதற்கண் எனக்குத் தேவத்வத்தை அளித்துப் பிறகு முக்தியும் அளிப்பாய். இங்கு என்னால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தம் என் பெயரால் புகழ்வாய்ந்ததாகக்கடவது. இந்த என் பெயரமைந்த தீர்த்தத்தில் ஆணே பெண்ணே யாவர் நீராடினும் அந்த ஜன்மத்திலேயே தேவனுகும் தன்மையை அடையக்கடவர்' என்று வேண்ட, கருணைக்கடலான ஸ்ரீவாஞ்சேசர் 'அங்ஙனமே யாகுக' என்று சொல்லி மேற்கு முகமான தனது லிங்கத்தில் மறைந்தார். அதுமுதல் அத்தீர்த்தம் ஸர்வதீர்த்தம் என்று கருதப்படும். ஏ! முனிவர் தலைவனே! ஸர்வதீர்த்தத்தின் பெருமையைச் சொல்லி விட்டேன். இனி கேட்கவேண்டியதிருப்பின் கேட்பாயாக.'

[சாம்போபபுராணத்தில் ஸ்ரீவாஞ்சிய மகிமையில் ஸர்வ
தீர்த்த மகிமை வர்ணித்தல் என்ற 25-வது
அத்யாயம் முற்றிற்று.]

---

## நாற்பதாவது அத்யாயம்.

சுயஞ்ஞர் :—'முன்பு பிருமாண்ட புராணத்தில் ஹயக்ரீவருடைய முகத்திலிருந்து கேழ்விப்பட்ட இந்திர தீர்த்தத்தின் பெருமையை விரிவாகச் சொல்லவேண்டும்.'

சாம்பர் :—'சுயஞ்ஞரே! முன்பு தேவேந்திரன் கௌதமரால் சபிக்கப்பட்டு மிகுந்த துன்பப்பட்டவனும் பெண்குறி நிறைந்த உருவமுடையவனும் வெட்கப்பட்டுத் தலைகுனிந்தவனுகித் திருவாஞ்சிய நகரம் வந்து திருவாஞ்சிய இலிங்கத்திற்கு ஈசான்ய திக்கில் தீர்த்தமொன்றமைத்து அதன் வடகரையில் முருகன், தேவி, விருஷபம், இவைகளுடன் அழகிய கைலாயலிங்கம் என்று பெயர் அமைத்து பக்தியுடன் வழிபட்டுத் தன்னால் அமைக்கப்பட்ட தீர்த்தத்தில் மூவுலகினும் உள்ள தீர்த்தத்தை ஆவாஹித்து, அதன்கண் மூன்று வேளையும் நீராடி நித்யகருமங்கள் செய்து அக்கைலாய நாயகருக்கு அத்தீர்த்தத்தில் அபிஷேகம் செய்து, அங்கு சாபம் நீங்கவேண்டி அவரைக் குறித்துத் தவம் செய்தான்.'

சுயஞ்ஞர் :—' அங்கு குப்தகங்கையிருக்கும்பொழுது இந்திரன் தனியாக, ஏன் ஈசானிய திக்கில் வேறொரு தீர்த்தம் அமைத்தான்? அதன் காரணத்தைச் சொல்லவேண்டும்.'

சாம்பர் :—'பெண்குறிகளால் உடல் நிறைந்திருப்பதைப்பற்றி, குப்தகங்கையில் நீராடத் தகுதியின்மையால் தனியாக ஆலயத்தின் வெளியில் தீர்த்தம் ஒன்றமைத்து அங்கேயே நீண்டகாலம் கொடிய தவம் செய்தான். அருட்கடலான வாஞ்சேசர் அவர் தவத்தால் மகிழ்ந்து, இந்திரனுக்கு அருள் செய்யவெண்ணி, சூரியன் மிதுனராசியில் இருக்கும்பொழுது பௌர்ணமி திதியில் சித்திரை நக்ஷத்திரத்தில் ரிஷபத்திலேறி, மகாதேவியுடன் வந்து தோன்றினர். இந்திரனும், அம்பிகையுடன் கூடினவரும் ஈசானரும் அருட்கடலான அத்திருவாஞ்சியேசரைக் கண்டு, பக்தியுடன் துதித்து தனது மனத்திலுள்ள எண்ணத்தை வேண்டினன். ' தலைவனே! யான் அறிவின்மையால் அகல்யயைக் கண்டு மோகித்து, முனிவரில்லாத சமயத்தில் வலுவிற் புணர்ந்து பயந்து வெளியில் வரும்பொழுது, கௌதமமுனிவர் வந்து ஆடையும், முன் மயிரும் கலைந்து இருப்பவளும் தளிரணைய அதரத்தின் செம்மையழிந்து இருப்பவளுமான அகல்யயைப் பார்த்து, கோபத்தினல் உதடு துடித்தவராகி உடல்நடுங்கும் அகல்யயைப் பார்த்து 'உன்னைப் புணர்ந்தவர் யாரென்று பயமின்றி உண்மையாகச் சொல்; அவனை உள்ளபடி அறிகிறேன்' என்றார். உடனே அகலியையானவள், 'தலைவரே! இன்னாரென்று எனக்குத் தெரியாது. ஆனல் அவருக்குக் கண்கள் மிகுந்திருக்கின்றன. அவர் வலுவில் என்னைப் புணர்ந்து பயத்தால் இங்கிருந்து ஓடினர்' என்று அவள் கூறியவுடன் கௌதமர் ஞானக்கண்ணால் யாரென்று

அறிந்து எனது பெரிய குற்றத்தால் என்னைச் சபித்தார். 'தேவேந்திரன் காம மயக்கமுண்டானவனுகி என்னை இகழ்ந்து என் மனைவிக்கு கற்பழித்ததால் அவன் கர்வம் அடங்க அவனை கண்களெல்லாம் பெண்குறிகளாகக்கடவன' என்று சபித்தார். இம்முனிவர் சாபத்தால் உடம்பெல்லாம் பெண்குறியானதுபற்றிக் கவலையடைந்த ஆகாயவாணி 'இந்திரனே! கவலையை ஒழிப்பாய். திருவாஞ்சியேசரை வழிபட்டால் உனது பெண்குறிகள் விரைவில் நீங்கும். இதில் ஐயமில்லை' என்று சொன்னது. அதைக்கேட்டு மகிழ்ந்து தேவர்கட்குத் தெரியாமல் இங்கு வந்தேன். எனது வேண்டுகோளெல்லாம் தேவரீரைத் தெரிசிப்பதால் கிடைத்தது. மகாதேவனே! சரண்புக்க என்னைக் காப்பாற்றுவீர். சாபத்தினின்றும் விடுவித்துச் செய்யவேண்டியன செய்துவிடும்படி செய்வீராக' என்று இந்திரன் வேண்டினன். திருவாஞ்சியேசர் இந்திரனைப் பார்த்து, 'இந்திரனே! என்னைக் காப்பாற்று என்று சொன்னபடியால் என்னை மாம்பாலகேசர் என்று துதிப்பாயாக. எனது புண்ணிய புட்கரணியில் நீராடிச் சாபத்தினின்றும் விடுபடுவாய். உன்னுடற் கண்ணுள்ள பெண்குறிகளெல்லாம் எனது ஆணையால் கண்களாகமாறிவிடும். எனக்குக் கைங்கரியம் செய்வாய்' என்று சொல்லித் திருவாஞ்சியேசர் சுயம்புலிங்கத்தில் மறைந்துவிட்டார். இந்திரன் நீராடிச் சாபம் நீங்கி மீண்டும் கண்பெற்று இந்திராணி தேவர்கள் முதலியோருடன் மகிழ்ந்து விஸ்வகர்மாவை வரவழைத்து சோமஸ்கந்தர், குமரர், சண்டேசர் மற்றுந் திருவிழா உருவங்களெல்லாம் பழையபடிச் செய்வித்துச் சைவ அந்தணரை வரவழைத்துக் காமிகாகம விதிப்படிச் சுபதினத்தில் சைவாசாரியரைக்கொண்டு சிவவேளையில் பிரதிஷ்டை செய்து அந்த சோமாஸ்கந்தருக்குத் தனது பெயராகிய தேவனுதன் என்று பெயரிட்டு சூரியன் மிதுனத்தில் இருக்கையில் ஆனிமாதம் அஸ்வனி முதல் கேட்டைவரையில் பத்து தினம் தேவர் சன்னதியில் கொடியேற்றி பதினெட்டு திருவிழா வாகனத்துடன் செய்து தேர்த் திருவிழா நன்றாய்ச் செய்து மறுநாள் மகிழ்வுடன் தேவர் முனிவருடன் தேவயோகத்தில் அவபிருத ஸ்னானம் செய்து சோமாஸ்கந்தரான தேவனுதரை மஹாபிடேகம் நைவேத்தியங்களால் பூஜித்து மிக மகிழ்ச்சியுடன் திருவாஞ்சேசரை இந்திரன் துதித்தான்.'

இந்திரன் துதி:—'விஷ்ணுவால் வணங்கப்படுபவரும், தக்கன் யாகம் அழித்தவரும், மீனாக்ஷியுடன் கூடியவரும், மதமகற்றுபவரும், மேருவில்லரும், மாம்பாலகேசரான சிவபெருமானுக்கு வந்தனம்.

மைநாகத்தால் பூஜிக்கப்பட்ட பாதுகை உடையவரும் மந்தாகினி யணிந்தவரும் குமாரனால் வழிபடப்பட்ட பாதுகையையுடையவரும், மாம்பாலகேசருமான சிவபிரானை வணங்குகிறேன். பிறை சூடியும் மார்க்கண்டேயருக்கு முக்தியளித்தவரும் புலித்தோல் போர்த்திய வரும் மாம்பாலகேஸ்வரருமான சிவபிரானுக்கு வந்தனம். விஷ்ணு வின் கண்களால் பூஜிக்கப்பட்ட பாதுகை அணிந்தவரும் இளம்பிறை யணிந்தவரும் சிவபிரானும் ஆனந்த சொரூபருமான ஈசனை வணங்கு கிறேன். தேவர்கட்கு மூலகாரணமாயிருப்பவரும் மாம்பாலகேசரு மான சிவபிரானுக்கு வந்தனம். மன்மதனுயிர் கவர்ந்தவரும் பெருந் தோளுடையவரும் யானைத்தோல் போர்த்தியவரும் பெரிய இடபவாக னரும் மாம்பாலகேசருமான சிவபிரானுக்கு எனது வேண்டுகோள் பெற வந்தனம் செய்கின்றேன்.' இங்ஙனம் இந்திரனது பஞ்சரத் தின துதியைக்கேட்டு மகிழ்ந்த மாம்பாலகேசர் மகிழ்வுடன் ஆச்சர்ய மாகத் தோன்றினார்.

பரமசிவன் :—'உன்னால் செய்யப்பட்ட பஞ்சரத்னத் துதியால் மிகவும் மகிழ்ந்தேன். வேண்டுவது என்னிடம் வேண்டுவாய்' என்று கூறினார். உடனே இந்திரன் அங்ஙனமே சிறந்த வரம் வேண்டி னன். 'யான் செய்த இத்துதியால் உம்மை முக்காலமும் துதிப்பவர் இஷ்டம் பெற்று மிக்க போகந் துய்த்து முடிவில் உமதருளால் பிறவி யினின்று விடுபட்டுத் தேவரீர் திருவடி அடைவாராக. இது ஒன்று. சங்கரனே! மற்றுமொன்று அருளுடன் கொடுப்பீர். எனது வஜ்ரா யுதத்தால் உண்டுபண்ணப்பட்ட அத்தீர்த்தத்தில் ஆனிமாதத்தில் சுக்லபக்ஷத்தில் எனக்கு அபீஷ்டமளித்த எனது நக்ஷத்திரமாகிய சித்திரையில் நின்று வழிபட்டு ஆதரவுடன் சேவிப்போரும் மிக்க பக்தியுடன் கைலாசநாயகனை உம்மை வழிபட்டு, பஞ்சரத்னத் துதியால் துதிப்பவரும் இவ்வுலகில் அபீஷ்டங்களெல்லாம் பெற்று அவ்வுலகில் வசிப்பாராக.' என்று வேண்டினன்." சிவபிரான் 'அங் ஙனமேயாகட்டும்' என்று பிரீதியுடன் வரமளித்துத் தனது சிறந்த சிவலிங்கத்தில் மறைந்தார். அதுமுதல் அத்தீர்த்தத்திற்கு இந்திர தீர்த்தமென்று பெயர் வந்தது. இந்திரன் முன்போலத் தனது வடி வம் கொண்டு இந்திராணியோடு மகிழ்ந்தான். முனிவரே! இந்தத் தீர்த்தத்தின் பெருமையைக் கூறினேன். இதற்குமேல் கேட்க வேண்டியதிருந்தால் கேட்பாய்.'

[சாம்போப புராணத்தில் ஸ்ரீவாஞ்சிய மகிமையில் இந்திர தீர்த்தத் தின் புகழ்ச்சி என்ற 26-வது அத்யாயம் முற்றிற்று.]

## நாற்பத்தொன்றாவது அத்யாயம்.

சுயஞ்ஞர்:—'சகல சாஸ்திரார்த்தங்களையும் சகல கலைகளையு மறிந்த சாம்பரே! கழுவாய்களெல்லாம் தேவரீரிடமிருந்து கேட்டேன். முக்தியளிக்கும் திருவாஞ்சியத்திலுள்ள குப்தகங்கை ஞாயிற்றுக்கிழமைக்கு எத்தகைய விசேஷமிருக்கிறது? இப்புவியில் காவேரி முதல் கடல் வரையிலும் ஆறாயிரம் தலங்கள் காசிக்கு ஒத்தவையாக இருக்க, திருவாஞ்சியத்தில் மாத்திரம் முனிதீர்த்தத்தில் நீராடுதல் அந்தணர் கொலை முதலிய பாபங்கட்கும் மற்றைய பாபங்கட்கும் சிறந்த கழுவாய் என்று சொல்லப்படுகின்றது. முதல் ஞாயிற்றுக்கிழமையில் அந்தணர் கொலைஞனும் இரண்டாவதில் கட்குடியனும் மூன்றாவதிற் பொற்கள்ளனும் நான்காவதில் குருமனை கற்பழித்தவனும் அக்குப்தகங்கையில் நீராடின் தூய்மையடைவான் என்று முன் உமது முகத்திலிருந்து கேட்டேன். இப்பொழுது அதனை விரிவாகக் கேட்க விரும்புகிறேன்.'

சாம்பர்:—'முனிவரே! தர்மத்தின் கண்ணே நோக்கமுடைய தாங்கள் நன்றாய்க் கேட்பீராக. இது உலக உபகாரமாக விரித்துக் கேட்கப்பட்டது. முனிவர் தலைவா! காசிக்கு மேற்பட்டதும் முக்தியளிப்பதுமான திருவாஞ்சியத்தில் ஞாயிற்றுக்கிழமையின் பெருமையை விரிவாகக் காரணத்துடன் கூறுகின்றேன்: முன்பு தக்கப்பிரஜாபதியின் வேள்வியில் மிக்கவொளியுடைய சூர்யன் அறிவின்மையால் சிவபிரானுக்குத் தீங்கிழைக்க மனந்தளர்ந்து அறிவற்றவனாயினன். சிவநிந்தை, குருத்ரோகம், இவை சிறந்த பாதகம் என்பர் என்று மனதில் நினைத்துச் சூரியபகவான் மிக நொந்து தேவர் தம் ஏவலால் திருவாஞ்சியம் வந்து சேர்ந்தான். தேவ வருடத்தால் ஆயிரம் வருடம் தவம் செய்து திருவாஞ்சியேசர் அருளால் அப்பாபத்தினின்றும் முத்தனாயினன். அந்தணர் தலைவ! அதுமுதல் திருவாஞ்சியத்தில் முனிதீர்த்தத்தில் ஞாயிற்றுக்கிழமையின் பெருமை கார்த்திகைமாதத்தில் வெளிப்படுத்தப்பட்டது.'

சுயஞ்ஞர்:—'எல்லாமறிந்தவரும் உலகுக்கெல்லாம் சான்றானவரும் புலன்வென்றவருமான தலைவரே! ஒருவன் அறிவின்மையால் பரமசிவனுக்கு அபராதம் செய்கின்றானா, என்ன? அங்ஙனமாயின் தக்ஷன் அயன் மகனாக இருந்தும் வேள்விக்குத் தலைவனான பரமசிவனைவிட்டு ஆதரவுடன் எங்ஙனம் வேள்வி இயற்றினன்? முனிவர் தலைவ! இதனை எனக்கு விவரித்துச் சொல்லவேண்டுகிறேன்.'

சாம்பர் :—'முன்பு தக்ஷன் தாக்ஷாயணி தேவியின் சுயம்வரத்தில் பரமசிவன் தாக்ஷாயணியை அடைய உத்தரவளிக்காது தனது பெண்ணையும் இழித்துக் கூறினன். அத்தக்ஷன் தேவர் முன்னிலையில் கோபத்தால் உதடு துடித்தவனாகி, நிந்தையுடன் பரிகாசம் செய்பவர்போல இவ்வார்த்தையைக் கூறினான். கல்வியற்றவன், கொடியவன், தூய்மையற்றவன், தாய் தந்தையற்றவன், ருத்திரன் ஒருவன், இரண்டற்றவன், உறவினருமற்றவன், மயானவாசி, விடன், பூதம், பிணம், பிசாசம் முதலியவைகளால் அடையப்பட்டவன், குணமற்றவன், முண்டமாலையை உடலில் தரித்து நடிக்கும் கெட்ட புத்தியுடையவன் என்றிங்ஙனம் அவ்வயன் மகனான தக்ஷன் இழித்துக் கூறி தேவர்கட்கிடையில் தேவர் முனிவர், அசுரர், இவர்களையெல்லாம் விட்டுத் தேவலோகத்தில் போகத்துடன் அண்டத்திற்கெல்லாம் தலைமை வகித்தான். அதுமுதல் சிவத்வேஷம் பாராட்டப்பட்டது. இங்ஙனம் தக்ஷன் இருக்கையில் பிரம்மமறிந்தவரிற் சிறந்தவரான அயன் வேட்கவேண்டுமென எண்ணி அங்ஙனஞ் சிறந்த பெரிய வேள்வியை இருடியர் சகாயத்துடன் செய்யுங்கால் வேள்வியிற் சிறந்த இவ்வேள்வியின் கண் ருத்துவிக்குகள் ஓமம் செய்ய அயன் அவிஸ்ஸின் பகுதியை எடுத்துக்கொண்டு வேள்வியில் கவனத்துடன் உருத்திரனுக்கு ஆஹுதியைக் கொடுக்கவெண்ணித் தேவர்களைப் பார்த்துக் கூறினார்.

அயன் :—'தேவர்களே! உருத்திராஹுதியைச் செய்யவேண்டியது இப்பொழுதாகும். இதுமுதல் ருத்திராஹுதி இவ்வேள்விக்குத் தலைவரான ஈச்வரனுக்குப் பொறாமையின்றி அளிக்கவேண்டும்' என்று கூறினர். தந்தையின் இம்மொழி கேட்ட தக்ஷப்பிரஜாபதி முன் கையை உதறி எறிந்துகொண்டு இம்மொழி கூறினன். 'மிக்கத் தூய்மையற்ற ருத்ரனுக்குச் சிறந்த அவிஸ்ஸைக் கொடுக்கக்கூடாது. இந்த அவிஸ்ஸை ஏற்றுக்கொள்ள வேறு யாரையாவது வரிப்பாயாக' என்று கூறினன். அயன், தக்ஷன் கூறும் இத்தகைய இழிந்த மொழியைக்கேட்டு மிகவும் துடித்துக்கொண்டு பின்வருமாறு கூறினர். 'தக்ஷனே! நீ இவ்விதம் சொல்லக்கூடாது. சிறு பிள்ளையாயிருப்பதால் முட்டாளாகி வேள்விக்கெல்லாம் தலைவரான மகாதேவனைப்பார்த்துப் பழித்துப் பேசுகிறாய்' என்றிங்ஙனம் அயன் கூறித் தக்ஷனை நிந்தித்து நந்தியைக் கூப்பிட்டு ருத்ரனுடைய பாகத்தை எடுத்து அவருடைய கையில் மகிழ்வுடன் கொடுத்தார். தேவகணங்களெல்லாம் 'நல்லது, நல்லது' என்று கூறின. இதற்குத் தக்ஷன்

கோபித்து உள்ளங் கலங்கிக் கையை நிறுத்தி அயனைப் பார்த்துக் கசரினான்.

தக்கன்:—'யான் மேருவின் வடபாகத்தில் வேள்வி செய்து அதன்கண் உருத்திரனுக்குக் கொடுக்கவேண்டிய ஆஹுதியை வலுவில் வேறொருவனுக்குக் கொடுத்து அவ்வேள்வியின் பயனைச் சுலபமாக அடைவேன்' என்று சொல்லித் தந்தைக்கு சிறிதும் அஞ்சாது கோபித்து அவ்வேள்விச்சாலையை விட்டுச் சகல மருத்கணங்களுடன் புறப்பட்டுத் தனது நகரம் வந்து தேவர், இருடிகள், மற்றும் அந்தணர் யாவரையும் வரவழைத்து மந்திரிகளுடன் வேள்வி செய்ய மனதால் எண்ணினன். அத்தக்ஷன் பனைமரங்கள் நிறைந்ததும் குமுதங்களின் வாசனையுடையதும் பல்வகை ரத்தினங்கள் விளங்குவதுமான கங்கைப் பொய்கைக்கரையில் தூயவிடத்தில் விளக்கமான வேள்விச்சாலையை யியற்றியும் படிகங்களாலும் வெள்ளியாலுமான உச்சியுடையதும் பொற்றோரணங்களையுடையதும் முத்துமாலைகளால் கட்டப்பட்டதுமான வீதிகளையுடையதும் உப்பரிக்கை மேல்மாடி முதலியன அமைந்ததும் அவைகளிற் கட்டப்பட்ட கொடிகளுடன் கூடியதும் தேவலோகத்திற் கொத்ததுமாக அவ்வேள்விச்சாலையை இயற்றினர். எல்லாப் பொருளும் நிறைந்ததும் சகல ஓஷதிகள் நிறைந்ததுமான வேள்விச்சாலையிற் புகுந்து இருடிகள் கூட்டங்களை வரவழைத்தார்.'

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் ஞாயிற்றுக் கிழமைப் புகழ்ச்சி என்ற 27-ம் அத்யாயம் முற்றிற்று.]

## நாற்பத்திரண்டாவது அத்யாயம்.

சாம்பர்:—'உலகிற் புகழ்பெற்ற தக்ஷன் அவ்வேள்விச்சாலையைப் பார்த்து, ஸ்ருக் ஸ்ருவம் (ஓமம் செய்யும் அகல்போன்ற பாத்திரங்கள்) முதலிய பாத்திரங்களும் மற்றும்வேண்டிய பதார்த்தங்களும் வருபவருக்கு ஆடையாபரண மளிக்கக் கற்பகமரம், காமதேனு, நிதி, சிந்தாமணி இவற்றை வரவழைத்தார். மேலும் தக்ஷன் அயன் அரி முதலியோரை வரவழைக்க எண்ணிச் சில அந்தணரைப் பார்த்து 'நீங்கள் அயன், அரி, இந்திரன் முதலிய தேவர், சூரியசந்திரர், அசுரர் எல்லோருக்கும் அறிவித்து விரைவில் வருவீராக' என்று அனுப்பினர். உடனே அயன் அரி இந்திரன் முதலிய சிறந்த தேவரும் சூர்ய சந்திரர் அசு

ரர் எல்லோரும் தமது பலங்களுடனும் தமது மனைவியுடனும் மகிழ்ந்து வேள்வியைப் பார்ப்பதற்கு விரைவில் வந்துசேர்ந்தனர். தக்ஷர் அவர்கட்கெதிர்சென்று அழைத்து அயன் அரி இருவரையும் மகிழ்வித்து முறைப்படிச் சிறந்த ஆசனத்தில் அமர்த்தி உபசாரங்கள் செய்தும் மற்றைய தேவர் இருடிகட்கும் ஆஸனமளித்து அமர்த்தி தான் மீண்டும் எல்லாத் தேவர்களிடையே இருந்தார். இலக்குமி,ஸரஸ்வதி, இந்திராணி மற்றும் அநேக தேவமங்கையர், இருடி மனைவிகள் முதலிய யாவரும் வந்து சேர்ந்தனர். தக்கர் மிகவும் அழகிய தனது மனைவியாகிய வேதவதியின் மனையிற் புகுந்தும் அவளுடன் மிக மகிழ்ச்சி கொண்டு நீராடி அன்று அனுப்பிய தூதர் திரும்பி வந்திருப்பதால் அவரைப் பார்த்து முகமினியராய் 'தேவர் இருடிகள் அந்தணர்களுக்குள் இங்கு வராதார் யாவர்?' என்று கேட்டார். 'பிரபுவே! தவஞ்செய்தோரிற் சிறந்தவரான நாரதர், வேதா வேதாகமங்கள் அறிந்த ஸனகாதிகள், அகத்தியர் முதலியோர், ததீசி, அத்ரி, வசிஷ்டர், பராசரர் முதலியோர், தவஞ்செய்வோரிற் சிறந்த துர்வாஸர், ஆகிய இவர்கள், உலகுக்குப் பிரபுவான தங்களையும் தங்கள் வேள்வியையும் இழித்துக் கூறிவிட்டு இங்கு வரவில்லை' என்று கூறினர். எனக்கூறிய அத்தூதர் மொழி கேட்ட தக்ஷரும், 'இவர் ருத்திரபக்தர் ஆதலால்தான் வரவில்லை. இவர்கள் வராமலேயே இருக்கட்டும்' என்று அவரைக் குறித்துப் பதிலளித்தார். இஃதிங்ஙனமிருக்க ததீசியானவர் தனது சீடர், பிறசீடர் முதலியோருடன் அங்கு வர இதனைக் கண்ட தக்ஷன், 'இவர் நமக்கு உடன் பிறந்தவர். இவர் ருத்திரபக்தர், ஆதலால் இங்கு வர நியாயமில்லை; ஆயினும் தமது சீடருடன் வந்திருப்பதால் எனக்குப் பயந்து தான் வந்திருக்கிறார்' என்று மனதில் நிச்சயம் செய்துகொண்டு அவருக்கும் அவரது சீடர்கட்கும் ஆஸனமளித்தார். கம்பீரமாகப் பேசுந் திறம்வாய்ந்த ததீசி தக்ஷனைக் குறித்து 'நீவிர் எனக்கு ஆஸனமளித்தது எதற்கு?' என்று வினவினர்.

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில்
தக்ஷன் வேள்வி கூறல் என்ற 28-வது
அத்யாயம் முற்றிற்று.]

## நாற்பத்துமூன்றாவது அத்யாயம்.

தக்ஷர்:—தவத்திற் சிறந்த ததீசிமுனிவரை நோக்கிக் கூறி னார். அஃதாவது:—'முனிவரே! கொடுந்தொழிலனும் பயங்கரனு மான முக்கண்ணன் என் மகளை மணஞ்செய்து இடையில் மணத் தைப் பிளந்துசென்று மீண்டும் வந்து திருட்டுத்தனமாக எனது பெண்ணை அபகரித்துச் சென்றான். அங்ஙனமிருக்க அவரைப் பார்க்கக் கைலாயஞ் சென்றிருந்தேன். அவர், தான் செய்த தவத் திற்குப் பரிகாரம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் ஹுங் கார வார்த்தைகளால் என்னிடம் அபசாரப்பட்டனர். அன்றியும் சிவன் தனது சமீபத்திலிருக்கும் எனது பெண்ணை வஞ்சித்து வேற் றுமையுடையவளாகச் செய்துகொண்டங்கிருந்தார். அதற்காக, பிர மன் செய்த வேள்வியில் அவிசைக் கொடுக்கவேண்டாமென்று மறுத்தேன். அப்பொழுது நந்திதேவர் தோன்றி 'வேள்வியின்கண் பரமசிவனுக்கு அவிஸ் கொடுக்காமல் வேட்பவர் தலைவெடித்து இறக் கக்கடவர்' என்று கோபத்துடன் சபித்து எழுந்தார். தேவர் எல் லாம் நந்தியின் சொல்லைக்கேட்டுப் பயந்து அதுமுதல் பரமசிவ னின்றி வேட்பதில்லை. இந்த யான் மாத்திரம் அவனை அலக்ஷி யம் செய்தும் நந்தியின் மொழியைக் கவனியாமலும் ருத்திரனை விட்டுவிட்டு ஒரு வேள்வி செய்கிறேன். அதற்காக நீவிர் எல் லோரும் தபோதனரெல்லோரும் வரவழைக்கப்பட்டனர்.' தவத் திற் சிறந்த ததீசி இவர் கூறிய மொழியைக் கேட்டுக் கோபத் துடன் சிரித்துக் கையைத் தட்டிக்கொண்டு சொன்னார். 'தக்ஷனே! உனது புண்ணியம் யாவும் சிதைந்துவிட்டன. சாத்திரங்களெல் லாம் அறிந்தும் மயங்கி வேள்விக்குத் தலைவனான மகாதேவனை விட்டுவிட்டு வேட்க எண்ணுகிறாய். ஈசன், அரி, அயன் முதலிய தேவரையும் மற்றும் உயிர்களையும படைத்துவிட்டு முடிவில் காத்து, அழிக்கிறார். சம்புதான் எல்லோருக்கும் தந்தையாவார். பரமாத்மா என்று சொல்லப்படுவார். அவிசையுண்பவரும் அவிஸின் வடிவ மானவரும் அக்னியின் தந்தையும் வேள்விக்குக் கர்த்தாவுமாக இருக்கிற இத்தேவபிரான் உலகினைக் காப்பாற்றுகிறார். சிவன் தான் தேவர் தலைவர். வேறு யாராவது இருப்பின் என் முன்பு இங்கு வரட்டும். இப்பிணக்கினால் ஹரி முதலியோருக்குச் செல்வ மளிக்கப்பட்டது. யாவரையும் படைப்பவர் இவர். இவரைப் படைப் பவர் ஓரிடத்திலுமின்று. மகேஸ்வரனும், சம்புவும், நீலகண்ட னும், முக்கட்பிரானுமான சிவன், அந்தர்யாமியும் பரப்பிரம்மமும்

மேற்பட்டவருக்கு மேற்பட்டவரும் ஆவார். இவர் தேவர்கட்குச் சிறந்த பிராம்மணர் ஆவார். வேள்விக்குத் தலைவனும் ஓமம் செய்பவரும் அழிவற்றவரும் மகாதேவனுமான ருத்திரனை விட்டு இலவமலர் போன்றவரும் இழிந்த பயனைக் கொடுப்பவருமான ஏனையோரைப் பற்றுவது நியாயமாகுமா? நீயேன் நியாயவழி விட்டுக் கெட்டவழியிற் செல்லுகின்றனை? ஆகையால் உனது வேள்விக்குப் பெரிய இடையூறு வரப்போகின்றது. ஆகையால் உனக்கு அழிவு கிட்டிவிட்டது. உனக்கு உண்மை கூறுகின்றேன். வாயு இவருக்குப் பயந்துதான் வீசுகின்றான். இவரது ஏவலால்தான் சூரியன் எப்பொழுதும் பிரகாசிக்கின்றான். தீ உயரமாக எரிகின்றான். இந்திரன் துறக்கம் காக்கின்றான். எமனை அச்சுறுத்திய தத்துவ வடிவங்கொண்ட அத்தேவனுக்கு உன்னால் அபராதம் செய்யப்பட்டது. ஆகையால் நீயும் வேள்விக்குத் தலைவனை சிவபிரானை இந்த யாகத்தில் வேட்பாயாக. அப்பகவான் உன்னைத் தினங் காப்பார். அயன் மகனை தக்ஷனே! அவர் இல்லாமல் வேள்வி செய்யின் உனது தலை அப்பொழுதே அறுந்துவிழுவது நிச்சயம். இங்கு அவிசை உணாவந்த தேவர் முதலிய நீங்கள் எல்லோரும் தாழ்ந்த அந்தணராயும் சாத்திரத்திற் பற்றற்றவராயும் சிவத்துரோகத்திற் பற்றுடையவராயும் தினம் சிவபூஜையிற் பற்றற்றவராயும் நரகத்தில் விழப்போகிறீர்கள்' என்று இங்ஙனம் ததீசி கூறிவிட்டுத் தமது சீடருடன் ஈசுவரரைத் துதித்துக்கொண்டு தமது குடிலுக்குச் சென்றார்.

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் ததீசி சாபம் கூறல் என்ற 29-வது அதயாயம் முற்றிற்று.]

---

## நாற்பத்துநான்காவது அத்யாயம்.

சாம்பர்:—'அச்சிறந்த முனிவர் சென்றவுடன் துட்டரான தக்கருக்குப் பலம், புகழ், வீரியம், செல்வம் முதலியன சென்றுவிட்டன. துட்டனும், மதவெறி பிடித்தவனுமான தக்கன் இந்த யாகத்தைத் தொடங்கி அந்தணர்கட்குத் தானங்கள் செய்தும், அன்னம் முதலியவையிட்டும், தீயை விரைவில் வளர்த்துத் தேவர்களைக் குறித்து மந்திரத்துடன் ஹவிஸ்ஸை ஏற்பவரின் முறைப்படி ஆகுதி செய்தான். ஸ்ரீமானை நாரதர் அதையறிந்து கைலா

யஞ்சென்று மகாதேவனுன பரமசிவனைக் குறித்து இந்த நிகழ்ச்சியைக் கூறினர். 'தக்கன் அயன் மகனுயிருந்தும் வேள்விக்குத் தலைவனுன உமக்கு ஹவிர்ப் பாகத்தைக் கொடுக்காமல் இப்பொழுது எல்லாத் தேவர்கட்கும் கொடுக்கிறுன். அவன் வேள்விக்குத் தலைவனுன சிவபிரான் நீர் இருக்க வேற்றுமையுடன் கொடிய மனமுடையவனுயிருக்கிறுன்' என்றிங்ஙனம் கூறினுர். அப்போது பார்வதியானவள் மனம் வியந்து தேவரும் ஈசனுமான பரமசிவனை வணங்கி, 'யாவுமறிந்த தேவா தலைவ! வேள்வியைப் பார்த்து விரைவில் வந்து சேருகின்றேன். எனக்குப் புறப்பட்டுப்போக உத்திரவு அளிக்க வேண்டும்' என்று வேண்டினள். பரமசிவன் இத்தகைய மொழியைக்கேட்டு புன்முறுவல் பூத்த முகமுடையவராகி, 'கல்யாணி! உன்னை யழைக்காதிருக்க நீ, அறிவின்றிச் செல்வது தகுமா? அத்தக்கன் என்னைவிட்டு எல்லாத் தேவரையும் வரவழைத்து வேட்கிறுன். ஆகையால் நீ அங்கு செல்வது தடைபெற்றிருக்கிறது' என்று கூறினுர். சிவபிரானது மொழியைக் கேட்ட தாக்ஷாயணி தந்தையிடத்து தன்பாலும் உலகெல்லாம் சுற்றிப் பார்க்கவேண்டுமென்ற ஆவலாலும் சில புகன்றுள். 'தேவனே! தேவரீர் அருளுடையவராதலால முற்றுமறியாத தக்கனை மன்னிக்கவேண்டுகிறேன். மேலும் அவர் செய்யும் யாகத்தைப் பார்த்துவிட்டு விரைவில் திரும்பிவருகின்றேன்' என்று சொல்லி மகாதேவரை வினயத்துடன் தண்டம்போல் வீழ்ந்து பணிந்தாள்.

'அங்ஙனமேயாகட்டும்' என்று சொல்லி அப்பார்வதியை அனுப்பவேண்டி உத்திரவிட, கணங்கள் அச்சிவபிரான் ஆணையால் பல ஞாயிறும் கூடியது போன்றதும் பல்வகை இரத்தினங்களால் சித்தரிக்கப்பட்டதும் அணிகலன்களுடன் கூடியதுமாகிய விமானத்தைக் கொண்டுவந்தன. அதன்கண் பார்வதி ஏறப் பலவகை இனிய முழக்கம் புறப்பட்டன. இருடபக் கொடியுடன் குடைபிடித்து வந்தவையும் ஆயுதம் தரித்தவையும் மற்றும் பல்வகையான பூதங்கள் பதினுன்குகோடி பூதங்கள் எல்லாம் சிறந்த ஆரவாரத்துடனும் மிக்க பரபரப்புடனும் பின்தொடர்ந்துவரப் பார்வதி வேள்விச் சாலையையடைந்து விமானத்தினின்றும் இறங்கித் தக்ஷனது சமீபத்தில் சென்றுள். கொடிய அத்தக்ஷன் தனது பெண்ணை அவமதித்து, 'உனது கணவன் மங்கலமற்றவன், குலமறியப்படாதவன், ஒழுக்கமற்றவன். ஆகையால் உனது கணவன் அழைக்கப்படவில்லை. அவனது மனைவியாயிருப்

பதால் நீயும் இச்சிறந்த யாகத்தில் அழைக்கப்படவில்லை. நீ வீணாசைக்குட்பட்டு இங்கு வந்திருக்கிறாய். உனது கணவனிருப்பிடமான மயானத்திற்குச் செல்வாய்' என்று கூறினார். கெட்டநடவடிக்கையுடைய தக்ஷன் இங்ஙனம் கூறப் பார்வதி கூறுவாள்: 'எனதுடன் பிறந்த மங்கையைக் கொண்டாடி இருக்கிறாய். அவர்களது கணவரையும் கொண்டாடினாய். மற்றும் உறவினர் எல்லாரையும் முறைப்படி உபசரித்தாய். என்னையும் எனது கணவரையும் எதுபற்றி மதிக்கவில்லை? அன்றியும் நானாக வந்தவிடத்தும் மிகுந்த கோபத்துடன் இங்குவிட்டுச் செல்வாய் என்கிறாய். யான் செய்த குற்றம் யாது? கூறவேண்டும். இது உன் நன்மைக்காகச் சொல்லுகிறேன்' என்று பார்வதி கூறினாள். இதனைக் கேட்ட தக்ஷப்பிரஜாபதி; 'உனது கணவன் தாமஸன். மயானத்தில் நடிப்பவன். ஆதலால் உன் கணவன் எனக்கு மருமகனும் அன்று. நீயும் பெண்ணன்று. மற்றைய பெண்கள் என்னை எப்பொழுதும் விசாரித்துக்கொண்டு இருக்கிறார்கள். நீ அம்மாதிரி இல்லை. ஆதலால் அவர்களுக்கு எனது இஷ்டமானவற்றை யெல்லாம் கொடுக்கப்போகின்றேன். உனது கணவனுக்குச் சிறந்த அவிசைக் கொடுக்கவேண்டுமென்று வேதத்திற் சொல்லியிருந்தும் யாகத்தில் ஹவிர்ப்பாகம் கொடுக்கப்போவதில்லை. ஆகையால் உனது கணவனை அவமதித்து வேள்வி செய்ய முயன்றிருக்கிறேன். வேலை அதிகமாக இருப்பதால் உன்னுடன் பேசச் சௌகர்யப்படாது. ஆகையால் என் முன்பு வெட்கத்தைவிட்டுப் பேசாமல் போ' என்றான். பார்வதி அவனது மொழியைக்கேட்டுச் சினமிக்கவளாய் இருந்தாள். அப்பொழுது அங்கிருந்த யாவரும் பார்வதியைப் பார்த்துப் பயந்தனர். தேவியின் தோழியான விமலை என்பவள் தேவியை வணங்கி 'தேவர்தலைவி! கோபத்தைத் தணித்துக்கொள். நீ உலகுக்கு எல்லாம் தாய். உனது சினத்தால் உலகெல்லாம் பயமடைகின்றது. பிறரால் கொள்ளமுடியாத இச்சினம்யடக்கி அருள்வீர்' என்று வேண்டிப் பூமியில் தண்டனிட்டும் பணிந்தாள். அப்பொழுது தாக்ஷாயணி கோபத்தையடக்கி அத்துட்டனை தக்ஷனைக்குறித்து மீண்டும் ஒருவார்த்தை பகர்கின்றாள். 'இப்பொழுது நீ தேவர் தேவரை நிந்தித்தது என் மனதுக்கு வருத்தமாக இருக்கின்றது. என்னைத் தூஷித்தால் அம்மாதிரி வருத்தம் தோன்றிராது. அக்கடவுளோ மாயையற்றவர். ஆதாரமற்றவர். குற்றமற்றவர். அழிவற்றவர். எல்லாம் அறிந்தவர். கல்விக்கெல்லாம் முதற்காரணமானவர். தத்துவங்களுக்கெல்லாம் மேற்பட்டவர். இவர்

சம்பு, ' சங்கரர். தொண்டர்துயர் தீர்ப்போர் இத்தன்மையர் ஆவார். அவரைப் பார்த்துத் தாமஸர் என்று கூறினையே. அத்தகைய பாபம் உனக்கு யாது நிகழ்ந்தது? எல்லாம் அழிக்கும் தன்மை வாய்ந்திருப்பதால் தாமஸர் என்று பெயர் வந்திருக்கிறது. ' அவர் தான் வழிபடத் தக்கவர். அவருக்குத்தான் ஹவிர்ப்பாகம் கொடுக்க வேண்டியது. வேறு யாவரும் அதற்குத் தக்கவரல்லர். 'சிவ' என்று இரண்டெழுத்தடங்கிய அவரது திருநாமத்தை ஜபிப்பவர் முக்தி யடைகின்றார். எல்லாவற்றிற்கும் தலைவரும் பிறவிக்கடல் கடப்ப வருமான சிவபிரானை நிந்திப்பவர் சீக்கிரமாக மிக்க பயம் அடைவர் என்று இம்மாதிரி மிகுதியாக வேதத்தில் கூறப்பட்டிருக் கிறது. ஆகையால் நீ மிகுந்த பாபியாயும் சிவத்ரோகியாயும் இருக் கின்றாய். ஆகையால் விரைவில் சிவபிரான் ஆணையால் ஐயமின்றி அழியப் போகின்றாய். மிக்கப் பெரிய பாதகமாகிய சிவத்ரோகம் செய்யும் விஷயத்தில் அதனைச் செய்தவன், அதனைச் செய்வித்த வின், கேட்டவன், பார்த்தவன், செய்யலாமென்று ஒப்புக்கொண்ட வன், இவர்களோடு சேர்ந்தவன் ஆகிய இவர்கள் எல்லோரும் விரை வில் அழிவர்' என்று பார்வதி கூறிவிட்டு எல்லாத் தேவரும் பார்த் துக்கொண்டிருக்கையில் தனது உடலை யோகாப்யாசத்தால் அங் கியில்விட்டு மறைத்துவிட்டாள். அப்பொழுது மிகவும் நிறைந்த தும் மயிர்கூச்செறியும் வண்ணம் ஹாஹாகாரம் தோன்றியது. கணங்களெல்லாம் பயத்தால் சிவன் சமீபம் சென்று கைகுவித்து நடந்த வண்ணம் கூறி விடமுண்ட மகாதேவர் இங்ஙனம் தேவி உயிர் நீத்தது கேள்வியுற்று வீரரும் அஞ்சக்கூடியவரும் உலகினை அழிக்கக்கூடியவரும் பெரும் உடலுடையவரும் வீரர்கட்கு அச்சம் விளைவிப்பவருமான வீரபத்திரனை மனதால் நினைத்தார். உடனே அவர் அப்பரமசிவனது உக்கிரகமான கண்ணுகிர தீக்குண்டத் தினின்றும் 'ஜே, ஜே' என்று சொல்லிக்கொண்டு தோன்றினார். அவர் இமயமலையின் கொடிமுடிகளை ஒத்த ஆயிரம் தலையுடையவரும் பருத்ததும் நீண்டதும் அழகியதுமான இரண்டாயிரம் கைகளுடன் கூடியவரும் சத்தி, கேடயம், கதை, சக்கரம், வஜ்ரம், சூலம், வில், அம்புகள், உலக்கை, பிராசம், நாராசம், பரசு இவற்றைக் கைகளில் தரித்தவரும் 'அயன் முதலிய தேவர்களது முண்டத்தலைகள் தரித் ததால் விளங்கும் வடிவமுடையவரும் பல்வகைச் சிறந்த ரத்னங் கள் பதித்த மிக்க ஒளிக்கும் கழல்களை உடையவரும் தீ கக்கும் மூவாயிரம் கண்ணுடையவரான வீரபத்திரர் விரைவிற் தோன்றி பிஞகியான தேவ தேவரை வணங்கி, வணக்கத்துடன் கூறினர்.

வீரபத்திரர் :—'பெரிய தேவதேவருமான சங்கரனே! என்னை எங்காவது ஏவவேண்டும்' என்று வணக்கத்துடன் சொல்லிக் கைகட்டி நின்றார். உடனே பிரபுவான ஈசன் மிகுந்த பலமுடைய வீரபத்திரனைப் பார்த்து, 'மிக்க வன்மையுடையவனும் எனது ஏவல் கேட்பவனுமான வீரபத்திரனே! தக்ஷன் என்னைவிட்டு எல்லாத் தேவரையும் வேட்கின்றான். அங்கு சென்று அக்கொடிய தக்ஷனைக் கொன்று அவ்விடத்திலுள்ளவரும் எனது தூஷணத்தில மகிழ்ச்சியுடையவருமான மற்ற தேவருக்கும் சிக்ஷை செய்துவா. ஆதலால் எனது மொழியைக்கொண்டு விரைவில் அவ்வேள்விச் சாலைக்குச் செல்வாய்' என்று கூறினர்.

இங்ஙனம் பரமசிவனால் ஏவப்பட்ட வீரபத்திரர் கணங்கள் எல்லோருடனும் சூழ்ந்து தேவர் கூடியிருக்கும் வேள்விச் சாலை சென்று அது காக்கும் காவலரையெல்லாம் கொன்று மிக்க ஆரவாரத்துடன் பிரம்மாண்டத்தைப் பிளப்பவர்போல விஷ்ணுவின் மார்பில் தண்டத்தால் அடித்தார். அப்பொழுது அவரது மார்பிலிருந்த கௌஸ்துபமும் இலக்குமியும் உடைந்து பூமியின்மேல் உதிரலாயிற்று. விஷ்ணு அஞ்ஞானத்தால் கீழேவிழுந்து வன்மையற்றவராயிருந்தார். உடனே அயனை முட்டியால் தலையில் குட்ட உடனே அயன் வேகமாகக் கீழே விழுந்தார். காயத்ரி, சாவித்ரி, பிரம்மாணி இவர் வெளியில்வர அவர்களது மூக்கு, கொங்கை இவற்றைக் கத்தியால் அறுத்தார். பிறகு மற்றைய அங்குள்ள தேவர், வீரரால் விரட்டோடப்பட்டவராய்ப் பயந்து வெளியே ஓடினர். பயந்தோடிய சந்திரனை மிக்க வன்மையுடைய வீரபத்திரர் அழுத்தும் பெரிய சத்தத்துடன் எமனது கொடிய தலையை அறுத்தும் சூரியனைக் கன்னத்தில் அடித்தும் வேள்வி சிதைத்தார். உடனே சூரியனது பற்களுதிர்ந்து பூமியில் விழுந்தன. அன்றியும் மிகக் கொடிய பகனது இரு கண்களையும் பெயர்த்தார். இந்திரன் குயில் வடிவமெடுத்து வெளியிற் செல்ல அவனையும் தகைத்தார். அவிஸ்ஸை யுண்பவனான அக்னியின் கைகளையும் நாக்கையும் அறுத்தார். மேலும் வீரர் தனது நகத்தால் அக்னி மனைவியின் மூக்கைக் கிள்ளி எறிந்தார். இருப்புலக்கையால் வருணனைக் கொன்றார். ஓடும் வாயுவைக் கோடாலியாற் கொன்றார். குபேரனைத் தனது சூலத்தால் மோதி எறிந்து முழக்கம் செய்தார். பதினொரு ருத்திரரும் அச்சத்தால் தொண்டர்துயர் களைபவரான வீரபத்திரரை வணங்கினர். இந்த வீரபத்திரர் அவர்களை அச்சுறுத்தி விடுவித்தார். இவர் அசுரத்

தலைவரை ஒரு அம்பால் உயிரற்றவராகச் செய்தார். வேள்விச் சாலைக்கிடையே மிருகத்தின் வடிவமாகச் செல்லும் யக்ஞபுருடனை முன் சென்று தகைத்துக் கோபத்துடன் ஆத்திரத்தால் கொன்றார். தக்ஷன் இந்த விஷயமெல்லாம் பார்த்துக் கவன்று 'யான் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே இவர் யக்ஞத்தையும் தேவரையும் கொன்றார். முன்பே அயன் சங்கரரது மகிமையைக் கூறினார். இதனை அறிந்து முன்பு ஈசரான தேவரைக் குறித்து மிக்கக் கொடிய தவம் செய்து அப்பரமசிவனது அருளால் செல்வமடைந்தேன். இப்பொழுது பகைமை மேற்கொண்டு இச்சிறந்த வேள்வியில் அவரை இழித்துக் கூறினேன். முன்பு எனது தந்தையான அயன் வேள்வி செய்கையில் சம்புவுக்கு அவிசைக் கொடுக்கக் கூடாதென்று தடுத்தேன். அன்றியும் அவ்வீசரை விட்டு ஏனைய தேவரைக் கொண்டு இந்த வேள்வி தொடங்கப்பட்டது. எனது இதமாகத் ததீசி புகன்றதையும் கேட்கவில்லை. எனது பெண்ணாகிய தாக்ஷாயணியின் மொழியும் கேட்கப்படவில்லை. ஹரி முதலிய தேவருக்கும் தீமை விளைவித்தவனானேன்' என்று இங்ஙனம் கூறி மிக்கச் சினங்கொண்டிருக்கும் வீரபத்திரரையும் பத்திரகாளியையும் கண்டு பூதங்கள் சூழ்ந்திருப்பதனை அறிந்து வெளியேற இயலாது என்று உணர்ந்து பயமற்றவன் போலிருந்து பயந்து பேசாமல் இருந்தான். வீரபத்திரர் கத்தியை எடுத்து வேகமாக தக்ஷனாகிய கொடியவனது தலையைப் பிளந்து அக்னியில் எறிந்தார். அப்பொழுது சாம்பல்தான் மிகுதியாக இருந்தது. சிவநிந்தைக்குக் கழுவாய் இன்னதென்று வீரரால் தெரிவிக்கப்பட்டது. ஏ! அந்தணனே! அத்தக்ஷர் பெண்ணான வேதவல்லியானவள், அவள் உறவினர் யாவரும் அவர் பிள்ளைகளும் கொல்லப்பட்டிருப்பதைப் பார்த்துச் சுற்றிலும் சூழ்ந்தனர். அப்பொழுது வீரபத்திரர் வேதவல்லியின் காதுகளை அறுத்து ஏனையோரது தலைகளையும் தேவவிருடிகளுடையவும் மனிதர்களுடையவும் மிக அழகிய மனைவிகளின் தலைகளையும் அறுத்துப் பந்துபோல் செய்தார். இஃதிங்ஙனமிருக்க வீரரிடமிருந்து தோன்றிய கணங்கள் வேள்விச் சாலையில் வெளியிலிருந்த தகைக்க முடியாத சேனையையும் ஒப்பற்ற மதிலையும் உடைத்து உள்ளே புகுந்து மிக்க ஆரவாரம் விளைவித்தனர். மிக்க அழகிய வீரரிடமிருந்து தோன்றிய கணங்கள் சில கொடியோர் உடல்களை நெய்ப்பாத்திரத்திலிட்டுத் தீயில் கொதிக்க வைத்து உண்டனர். சிலர் சிலரது நரம்புகளை மாலையாகக் கட்டித் தரித்தனர். கத்திகளை ஒலிப்பித்தனர். சிவநாம சங்கீர்த்தனம்

செய்தனர். மற்றும் ஓடி ஒளிக்கும் தேவர்களைக் காலாலுதைத் தனர். தேன், பால், நெய் முதலியவற்றைப் பருகினர். மற்றும் வேள்விக்காக வந்துள்ள பொருள்கள் யாவற்றையும் வருந்தித் தின் றனர். குண்டத்திலிருக்கும் நெருப்பினைக் கோபம் கொண்டு மூத் திரத்தால் நனைத்தனர். சில பூதங்கள் சில விடங்களில் நின்று கொண்டு பார்த்தனர். அங்கிருந்த குடங்களை எல்லாமுதைத்துத் தள்ளினர். கழுகு வடிவமான வேள்விமேடைகளைப் பெயர்த்தெறிந் தனர். இங்ஙனம் தக்கனது கன்னிகைகளையும் மருமகப் பிள்ளை களையும் உறவினரையும் அந்தணர்களையும் பலவகையாகக் கொன் றனர். இங்ஙனம் இத்துட்டர்கள் பலவகையாகக் கொல்லப்பட்ட தும் வேள்வி யாவும் சிதைய மஹாவிஷ்ணுவானவர் வீரர்களுக்குத் தலைவராயும் மிக்க கோரவடிவமுடையவரான வீரபத்திரரை வணங் கினர். அப்பொழுது மஹாவீரர் அவ்விலக்குமிபதிக்கு இரங்கி னர். இதற்கிடையில் பரமசிவன் இருடபாரூடராய் முன் தோன் றினர். இந்த உலகுக்குக் குருவான மகாதேவரைப் பார்த்து மிக்க பக்தியுடன் கைகுவித்து வணங்கிப் பலதுதிகொண்டு துதித்து இவர் வீரபத்திரர் முன்பு நின்றார். அயன் அரி இருவரும் சாம் பரும் ஈசானரும் கருணைவடிவரும் தேவதேவருமான பரமசிவனை வணங்கிக் கைகுவித்துச் சில புகன்றனர். அதாவது: 'தலைவனை தேவரே! அறிவின்மையால் சங்கரனும் பிரபுவுமான உமமைவிட்டு யாகங்களெல்லாம் இந்த நிலையை அடைந்து மிக்க நிந்திக்கப்பட் டவராயினோம். சிவத்ரோகமாகிய குற்றததைப் பொறுத்து எங்களை மீண்டும் உய்யச் செய்யவேண்டும்' என மீண்டும் மீணடும் வணங்கி நின்றனர். கருணைக்கடலான ஈசன் அபபொழுது அம்மொழி களைக் கேட்டு முன்பு கைகுவித்து நிற்கும் வீரபத்திரனைப் பார்த்து 'இவர்களை எனது கட்டளையால் மீண்டும் உய்விப்பாயாக' என்று கூறினர். அந்தணர்தலைவ! அவ்வீரபத்திரர் சிவனுக்ஞையைத் தலை மேற்கொண்டு இந்த தேவரைக் கருணைக்கண்ணாற் பார்த்து உய் வித்தார். முன்பு கொல்லப்பட்ட தேவர்கள் எல்லோரும் தூங்கிய வர்போல் அப்பொழுது எழுந்தனர். இவ்வுலகத் தலைவராயும் விபுவாயுமிருக்கும் ஈசனைதேவரைப் பயந்து தண்டனிட்டு மிகப் பக்தியுடன் துதித்தார். 'மகாதேவரான உமக்கு வந்தனம். வேண் டியதெல்லாம் பொழிகின்ற உமக்கு வந்தனம். முண்டமாலையை யணிந்தவரும் சடை தரித்தவரும் யாவரையும் காத்தலையே மேற் கொண்டவரான உமக்கு வந்தனம்' என்று சொல்லித் தேவர் தொண்டரன்பனைவரும் இடபக்கொடியுடையவருமான மகாதேவரை

வணங்கிக் கைகுவித்துக் கூறினர். 'சிவபிரானே! மிக்க பாபி யாகிய தக்ஷனுக்கு நாசம் சீக்கிரம் வரப்போகிறது. எங்களுக்கும் அறிவின்மையால் விரைவில சேர்ந்தாற்போல் அழிவுண்டாகப் போகிறது. மஹாதேவரே! உன்னைத் தவிர வேறு யார் மிக்க துன்பமடைந்ததேவரைக் காப்பாற்றுவார்? உலகில் துயருற்றால் மிக்க துன்பங்களைபவர் சங்கரன்தானாகிறான். நீர் முன்பு புண்ணிய மான கங்கையைத் தலையில் தரித்தீர்; தேவரெல்லாம் காக்கவேண் டிக் கையில் தீயையும் தரித்தீர்; விஷத்தையும் உண்டீரல்லவா? ஆகை யால் இத்தகைய துன்பங்கள் நேர்ந்தவிடத்து எம்மைப் பாதுகாத்து இருக்கிறீர். நீரே காப்பாற்றுவராகிறீர். ஆதலால் பரமசிவனே! எம்மைக் காப்பாற்றவேண்டும். யாவரையும் காக்கும் நோன்பு பூண்டவருமான மகாதேவரே! உமக்கு வந்தனம். குற்றவாளியான இத்தக்ஷனையும் உய்விப்பாய். மந்திரத்தின் ஆற்றலுடையவனும் யாவுமறிந்தவனும் உயிருக்கெல்லாம் நன்மை செய்ய முயலுபவனு மாகிய ஈசனே! தக்ஷனைக் காக்கவேண்டும்' என்று தொண்டர் வயப் பட்டவனும் கருணைக்கடலுமான தேவனை வேண்டினர். பினாக பாணியான மகாதேவர், அவர்களது மொழியைக் கேட்டு வீரபத் திரனைப் பார்த்தார். அருட்கடலான வீரபத்திரர் ஈசனது குறிப் பறிந்து பாபியான தக்ஷனது கழுத்தில் ஆட்டின் முகத்தை வைத துயிர்ப்பித்தார். உடனே தக்ஷன் எழுந்து பக்தியுடனும் பரபரப் புடனும் வீரபத்திரரை வணங்கித் தனது பாபத்தையும் நினைத்துக் கொண்டு மிக்க அச்சத்துடன் கைகட்டிக்கொண்டு நின்று இடபத் தில் ஏறியிருக்கும் சாம்பரான சம்புவைக் கண்டு பயத்துடன் எதிர்வந்து வணங்கினன். 'மகாதேவரே! உமது தரிசனத்தால் பேறு பெற்றவனுகினேன். தேவரீரை அவமதித்ததால் உண்டான பாபச் செயலின் பயன் இதுவாகும். கருணைக்கடலான தேவனே! இப்பயன் துய்த்தேன். இனி பொறுத்துக்கொள்வீர்' என்று தக்ஷன் சொல்ல அயன், பினாகியான தேவரைக் குறித்துச் சொல் லத் தொடங்கினர்: அதாவது 'தேவகுருவான ஸ்வாமியே! வெய் யோன் மிக்கத் தளர்ந்தவனுகிப் பல்லுடைந்து இப்பொழுது சௌ கர்யம் பெறாது வந்து வணங்கி நிற்கின்றான். இவ்வுலகை விளக்கு பவனுதலின் இவனுக்கு அருள்செய்யவேண்டுமென்று சூரியனை இழுத்துப் பரமசிவன் முன்பு நிறுத்தினர். அப்பொழுது சூரியன் பார்த்துப் பயந்து பணிவுடன் வணங்கிப் பிறவிக்கு மருந்தும், சாம்பரும், கலைகளெல்லாவற்றிற்கும் ஈசனுமான சிவபிரானைத் துதித்தான்.

சூரியன் துதி :—' தேவனும் தேவர் தலைவனும் சங்கரனும் சிதான்மாவும் கருமையான கண்டமுடையவரும் பொறுமையுடையவரும் பசுபதியும் காரணங்கட்குக் காரணமானவரும் உலகுவடிவரும் அயன் அரிகளுக்குத் தலைவரும் உலகினைச் சொரூபமாக உடையவரும் நாதத்தின் முடியுருபுடையவருமான உமக்குப் பல் வகையினும் வந்திக்கின்றேன் ' என்று இங்ஙனம் சூரியன் தொண்டர் துயர்களையும் தேவரைப் பார்த்து ஒரு மொழி கூறினன். ' உலகுக்கெல்லாம் தலைவனை பகவானே! உமது தொண்டனை, என்னைப் பார்த்து என்னிடம் கருணைசெய்ய வேண்டுகிறேன்' என்று மீண்டும் மீண்டும் கூறி ' மேலும் பல்லுடைந்த எனக்குச் சுகமே கிடையாது ' என்று கூறினன்.

இத்தகைய சொற்கேட்ட உலகத் தலைவனை மகேசர் கம்பீரமான வாக்கால் புன்னகைகொண்டு சொன்னர்: ' இவ்வியாகத்தில் தக்ஷன் என்னைப் பல்வகையாக நிந்தித்தான். அப்பொழுது நீயும் சேர்ந்து என்னைப்பற்றிச் சிரித்தாய். ஆகையால் எனக்குத் துரோகம் செய்தவனுக்கு கழுவாய் என்பது ஓரிடத்திலுமில்லை. ஆகையால் எனது துரோகத்தால் உண்டான பாபத்திற்குக் கழுவாய் சொல்வேன் ; கேட்பாயாக. அழகியதாயும் மிக்க தூயதாயும் காவேரியின் தென்கரையில் ஸ்ரீகந்தாரண்யம் என்ற தலத்தில் கலிக் குற்றமகற்றுவதானச் சிறந்த தீர்த்தம் ஒன்று எனது சூலத்தால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. கழுவாயற்ற பாபங்களுக்கெல்லாம் அங்கு நீராடின் சிறந்த பிராயச் சித்தம் ஆகும். அதற்கு ஆனந்த தீர்த்தமென்றும் முனிதீர்த்தமென்றும் புகழ் உண்டு அங்கு சென்று மேற்கு முகமாக இருக்கும் எனக்கு முன்பு தவத்துடனும் நியமத்துடனும் நீராடி என்னை வழிபடுவாய். கார்த்திகை முப்பது நாளுடம் அதிற் சிறந்தனவாகும். எனது லிங்கத்தைப் பார்த்தவுடன் தூயவனுவாய் ' என்றிங்ஙனம் சம்புவானவர் சூரியனைக் குறித்துக் கூறி மறைந்தார்.

சூரியன் இம்மொழிகளைக்கேட்டு மகிழ்ந்து அப்பொழுதே புறப்பட்டுப் பூலோக கைலாயமடைந்து கார்த்திகைமாதம் தினந்தோறும் நீராடி மேற்கு முகமாக உள்ள தேவனை வணங்கல், தீர்த்தத்தில் நீராடல், தானம்செய்தல் முதலியவற்றுலும் நியமங்களாலும் உபசாரங்களாலும் மற்றைய ஓமங்களாலும் தர்ப்பணங்களாலும் திருவாஞ்சியேசரை வழிபட்டுத் தவத்திலிருந்தார். பிறகு மகேஸ்வரரான மகாதேவர் பிரசன்னராகிச் சம்பூர்ணமான

மொழிகொண்டு சூரியனைப் பார்த்துச் 'சூரியனே! மகிழ்ந்தேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். உனக்கு வரமளிப்பதற்கே வந்தேன். சிவத்ரோகத்தால் உண்டான பாபங்கள் நீங்கட்டும்' என்று கூறினார். சூரியன் இத்தகைய மொழிகளைக்கேட்டுத் தெள்ளிய அறிவுடையவனாகித் தேவர் தலைவனான மகேஸ்வரரைப் பார்த்துத் துதித்தான்.

சூரியன் துதி:—'பகவானும் உயர் பொருளுக்குயர் பொருளுமான உமக்கு வந்தனம். ருதனும் சத்தியவந்தனும் சத்தியமான இடமுடையவனுமான உமக்கு வந்தனம். சத்தியமான அறிவுடையோனும் சாந்தனும் பகைவரையழிப்போனும் தூயவடிவமுடையோனும் மூலப்பிரகிருதிக்குக் காரணமானவனும் தங்கமான ரேதஸ்ஸை உடையவனும் அரி அயன் இவர்கட்குத் தலைவனுமான உமக்கு வந்தனம்.' இங்ஙனம சூரியன் மகாதேவரைக் குறித்துத் தண்டனிட்டு வணங்கி, 'எனது வேண்டுகோளைச் செவிசாத்தி அதற்குமேல் எனக்கு விதிக்கவேண்டுகின்றேன். இதுமுதல் இத்தீர்த்தத்தில் எனது கிழமையில் கார்த்திகைமாதத்தில் நீராடின் மகாபாதகங்களும் உபபாதகங்களும் நீங்கி உமது அருள் நோக்கத்தால் தூய்மையடைவர்' என்ற சூரியன் மொழிகேட்ட தேவர் மகிழ்ந்து 'நீ மக்கட்கு நன்மை யாதென்று அறிந்து கூறுகின்றாய். ஆதலால் மக்களும் எனது கட்டளையின்படி பாவம் நீங்குபவராகட்டும்' என்று முக்கட்பிரானும் சம்புவும் பகவானுமான தேவர் கூறி மறைந்தார். அப்பொழுது ஒளிமிக்க சூரியன் தேவர்களோடு மகிழ்வுடன் தனதிருப்பிடம் சென்றான்.

சாம்பர்:—'அந்தணர்தலைவரான சுயஞ்ஞனே! அதுமுதல் அத்தீர்த்தத்தில் பானுவாரத்தில் நீராடுவது அந்தணர் கொலை முதலிய பாவங்கட்கு பிராயச்சித்தம் ஆகும் என்பாறினர். வேள்வி செய்தலினும் கொடையினும் தவத்தினும் ஆயிரம் கோதானத்திலும் இந்நீராட்டம் மிகச்சிறந்தது. திருவாஞ்சியத்தில் முனிதீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் நீராடுபவர் பாபங்கள் எல்லாவற்றினின்றும் ஐயமின்றி விடுபடுவர். வருணநிலையற்றவரும் தந்தை தாயை வெறுப்பவரும் நல்லொழுக்கமில்லாதவரும் மற்றப்பாதகர்களும் திருவாஞ்சியத்தில் குப்தகங்கையில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் நீராடின் அப்பொழுதே தூயவராகித் துறக்கம் எய்துவர். பலசொல்லிப் பயன் என்ன? கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் நீராடுதல் உலகில் பாபிகளான மக்களுக்கு

எல்லாப் பொருளும் அளிப்பதாகும். இஃதர்த்தவாதம் (வீண் புகழ்ச்சி) இல்லை. இஃதெல்லா உலகிற்கு நன்மை புரிவதாகும். அந்தணர்தலைவ! இச்சரிதத்தைக் கேட்டபடியால் கூறினேன். இதனைக் கேட்ட மக்கள் யாவரும் பாவங்களெல்லாவற்றினின்றும் நிச்சயமாக விடுபடுவர். திருவாஞ்சியத்தில் முனிதீர்த்தத்தில் ஞாயிற்றுக்கிழமையின் பெருமை கேட்கப்பட்டது. கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையானது சூரியனருளால் அர்த்தோதயத்திற்கு ஒத்ததாகும். அப்புண்ணிய தீர்த்தத்தில் விசேஷமாக நீராடித் தாம்பூலம் அரிசி பலதானம் முதலிய தானம் செய்பவர் இங்கே பாபத்தினின்றும் நீங்கி முடிவில் கைலாயமடைவர். தூயதும் பாபங்கடிவதும் வேண்டுவதெல்லாம் தருவதும் வேள்விப்பயனெல்லாமளிப்பதான இதனைக் கடவுளில்லை என்பவனுக்கும் அறிவீனனுக்கும் சொல்லக்கூடாது. சாதிப்பிரட்டனும் மிகப்பாபியும் பிறன் பொருள் மனைவி இவை கவர்பவனும் மிகுந்த முட்டாளும் அறிவுச் செயல் அற்றவனும் தந்தை குரு பெரியவர் இவர்களைத் தூஷிப்பவனும் அதர்மங்கள் நிறைந்தவனும் ஆகிய இவர் பாபங் கடியும். இதன் பெருமையைக் கேட்டு அப்பொழுதே பாபம் நீங்கி மகிழ்வுடன் முனிவரெல்லாம் வந்தீண்டிய புண்ணிய லோகமடைந்தனர்.

[சாம்போப புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை மகிமை கூறலில் தக்ஷன் வேள்வி சிதைத்தலைக் கூறல் என்ற 30-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## நாற்பத்தைந்தாவது அத்யாயம்.

### சிவரகசியத்தில் ஏழாவதம்சத்தின் பிற்பகுதியில் ஜைகீஷவ்ய முனிவரைக் குறித்துச் சிவஞானகந்தர் கூறுகிறார்.

கந்தர் :—ஸ்ரீவாஞ்சியம் ஜீவன் முக்தியளிப்பதும் புண்ணியம் வளர்ப்பதுமாயிருக்கிறது. அத்தலத்தில் வசிப்பவருக்குச் சாகுந் தருணத்தில் காதில் தேவர் பஞ்சாக்ஷரத்தைப் பிரணவத்துடன் உபதேசஞ் செய்கின்றார். தீயோரைக் கண்டிப்பவரான பைரவர் செயலற்றுத் தனது தண்டத்தை முன்புவைத்து அங்கேயே ஈச்

வரனைத் தியானித்துக்கொண்டு காத்திருக்கிறார். ஆகையால் ஸ்ரீவாஞ்சியம் காவல்புரியும் பைரவருக்கு "ஆஸீன பைரவர்" என்று பெயர். இச்சிவதலத்தில் மரித்தவர் பாபியாயிருந்த போதிலும் யமனாவது அவர் தூதனாவது வருத்துகிறதில்லை. அப்பாபிகளைக் கண்டிப்பதற்காகவே இப்பைரவர் ஏற்பட்டிருக்கிறார். ஆகையால் இத்தலம் காசியைவிடச் சிறந்தது. இதன்கண் பைரவரது வேதனையே கிடையாது. இங்கு வசிக்கும் மக்கட்கு திருவாஞ்சியேசரருளால் பாபங்கள் அழிந்து, புண்ணியம் மாத்திரம் மேன்மேலும் உண்டாகும். சிவதுரோகம்தவிர எல்லாப் பாபங்களும் போக்கும். சிவத்துரோகமுள்ளவர்கட்கு இத்தலம் மரணகாலத்தில் பொருந்த நேருவதில்லை. இங்கு மரணமும் நேருவதில்லை. ஏதாவது ஒரு காரணத்தால் அத்தலத்தைவிட்டு நீங்குதல் நேரும். வேறு இடத்தில் செய்த சிவத்துரோகமான பாபமும் இவ்விடத்தில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் நீராடுவதால் அழிந்துவிடும். பலசொல்லிப் பயனென்ன? இத்தலத்தில் மரித்தவருக்கு முக்திதான் உண்டாகும் நிச்சயம். ஆதலால்தான் பைரவர் இங்கு செயலற்று உட்கார்ந்திருக்கிறார். வேதமறிந்த முனிவரால் வேதம் ஸ்மிருதி முதலியவைகளில் பாபங்களெல்லாவற்றிற்கும் கழுவாய் விதிக்கப்பட்டிருக்கின்றன. இச்சிவத்துரோகத்திற்கு சாத்திரத்திலாவது வேதத்திலாவது கழுவாய் சிறந்த முனிவரால் விதிக்கப்பட்டிலது. சிவதுரோகியானவன், அநேக நரகவாதனைகளை அநேக கற்பகாலம் இடைவிடாமல் அனுபவித்து அங்கேயே கஷ்டத்தை அடையப்படுகின்றனன். சிவத்துரோகத்தின் கொடுமை என்ன கஷ்டம்! செய்தவன், செய்ததைக் கேட்பவன், செய்விப்பவன், சொல்பவன், பார்ப்பவன், அவர்களிடத்து அன்பு பாராட்டுபவன், ஆகிய இவ்வறுவர் நரகமெல்லாமனுபவிப்பார். சிவத்துரோகியை விசாரமில்லாமலே கொல்லலாமென்பாரறிவுடையோர். ஆகையால் சிவத்துரோகிகளுக்கு திருவாஞ்சியத்தில் மரணம் நேராது. முன்னையப் புண்ணியத்தால் இங்கு மரிப்பவனுக்கு தாரகமான ஐந்து எழுத்தின் உபதேச வழியாக முக்தியுண்டாகின்றது. இதில் ஐயமின்று. அப்பொழுது அத்தீர்த்தத்தில் கங்கை முதலியனவெல்லாம் வந்திருக்கின்றன. திருவாஞ்சியேசரைத் தரிசித்தவன், முக்தியடைந்தவனாவான். முன் ஹரியானவர் லக்குமியை யடைய விரும்பி சங்கரரைக் குறித்துத் தவம்செய்து அவர் பிரீதியால் அசுரர் வசமாகயிருந்த லக்குமியை யடைந்தார். அப்பொழுது அரியானவர் திருவாஞ்சியேசரைப் பூஜித்துத் துதித்தார்.

**விஷ்ணுஸ்துதி :**—'வெற்றிபெறுவாய், வெற்றிபெறுவாய்: மகேச்வரரும், சங்கரரும், அசுரர் காப்போரும், விடந்தரிப்போரும், கணாதிபரும், பிறைசூடியும், மங்களாம்பிகேசரும் ஆகிய பிரபுவான நீர் என்னைக்காப்பீராக' என்று மாதவர் திருவாஞ்சியேசரைவேண்டிச் சிவபிரானால் ஏவப்படுத்தப்பட்டுத் திருக்கணணமங்கையில் இலக்குமியை மணந்தார்.

அத்திருவாஞ்சியத்தில் சம்புவின் சன்னதியில், ஸ்மசானம் தினம் ஒளிர்கின்றதாக இருக்கின்றது. அந்தச் சுவாலையின் ஒளியால் சம்புவுக்கு நீராஜனமாகும். அத்தலத்தில் வசிக்கும் மக்கட்கு உயிர் பிரியுங் காலத்தில் சிவபிரான் பஞ்சாக்ஷரத்தை வலது காதில் ஓதுவதால் மறு பிறப்பின்றி முக்தியுண்டாகின்றது. சிவன் தான் காக்கின்ற புண்ணியமூர்த்தி. சிவன்தான் தேவர்க்கெல்லாம் சக்கரவர்த்தி. சிவன்தான் தேவர். துன்பங்களைபவரும் தேவர் பாடும் புகழுடையவருமாவார்.

[ சிவரகஸ்யத்தில் ஏழாவதம்சத்தில் உத்தரார்த்தத்தில், ஸ்ரீவாஞ்சிய க்ஷேத்திர மகிமை கூறுதலில் இருபத்தெட்டாம் அத்யாயம் முற்றிற்று. ]

---

## நாற்பத்தாறுவது அத்யாயம்.

**ஸ்கந்தர் :**—'முனிவரே! முன்பு ஹரியானவர் காசிக்குச் சென்று மகேச்வரரான விச்வேசரை வணங்கி வாசத்திற்குரிய தர்மங்களைக் கேட்டார். பின்பு சிவபிரான் கூறிய பதிலையுங் கேட்டு விஷ்ணுவும் அச்சமுற்று முக்தியளிக்க மிகவும் சுகமாக விருக்கும் வேறு ஏதேனும் ஸ்தலங்களுண்டா?' என்று கேட்டார்.

**விஷ்ணு :**—'உமாநாதரும், விச்வேசரும், பழமையானவருமான ஜகந்நாதனே! காசியில்வசித்தல் தேவர்கட்கே முடியாது. அங்ஙனமிருக்க மக்களைப்பற்றி கேழ்ப்பானேன். காசியில் புண்ணியமும், பாபமும் ஆலம்விதைபோல் வளர்ந்துகொண்டே இருக்கிறது. அதனை அனுபவிக்க நாங்கள் அசக்தர்களாக இருக்கிறோம். தண்டிப்பதற்கு பைரவர் இருக்கிறார். ஆகையால் அயனது நாழிகையில் மூன்று நாழிகையளவு பாபிகளுக்குத் தண்டனை. பிறகு முக்தி

உண்டாகும் என்று முன்பு அங்கேயே உம்மால் வேடிக்கையாகச் சொல்லப்பட்டது. வன்மைகுறைந்த தேவரும் மக்களும் எங்ஙனம் தாங்கியிருக்கப்போகிறார்கள்' என்று கூறினர். என்று இங்ஙனம் விஷ்ணுவால் வேண்டப்பட்ட பரமசிவன் அவரைப் பார்த்துக் கூறினார்.

மகாதேவர் :—' விஷ்ணுவே ! இம்மறையைக் கேட்பாயாக. இதனை மனதில் மறைத்து வைப்பாய். புண்ணிய பாபங்கள் இரண்டின் வளர்ச்சி ஸ்தலங்கள் எல்லாவற்றினும் சமமாக இருக்கிறது. இலக்குமியை விட்டுப் பிரிந்த நீர் முன்பு தவம் செய்தீர். காவேரியின் தென்கரையில் கீழ்க் கடலின் மேற்கில் எனக்குப் பிரியமான திருவாஞ்சியம் என்னும் ஸ்தலம் இருக்கிறது. அங்கு வசிப்பவர்க்குப் பாபம் வளர்வதில்லை. அத்தலத்தின் மகிமையால் புண்யமே வளர்கிறது. பாவக்கூட்டமும் அனுபவிக்கத் தக்க பயனளிப்பனவாயில்லை. பாபிகளைப் பொறுக்கும் பைரவர் அங்கு தண்டாயுதத்தை வைதது விட்டு உட்கார்ந்திருக்கிறார். அங்கு முடிவில் மக்களுக்கு முக்தியையும் சுகத்தையும் கொடுக்கின்றேன். சிறந்த பஞ்சாக்ஷரத்தையும் உபதேசஞ் செய்கிறேன். அது அவிமுக்தத்தினும் சிறந்தது. அது ஒன்றே சுலபமாக முக்தியளிப்பது. வேறொன்றும் சுலபமானதல்ல. இதனை மறந்துவிடாதே.

கந்தர் :—இங்ஙனம் பரமசிவனால் சொல்லப்பட்ட ஹரியானவர் அங்கு சென்று வழிபட்டு மிக்கப் புகழ்ச்சியுடையவரானார். ஏ முனிவனே ! மிகவும் ரகஸியமான இதனைப் பரமசிவன் தனக்கு கூறியருளியதாக தேவியானவள் ஆதரவுடன் கூறினள்.'

[ஸ்காந்த மாபுராணத்தில் சிவரகசியத்தில் ஏழாவது அம்சத்தில் பிற்பகுதியில் ஹரியைக்குறிதது சிவபிரான்கூறிய திருவாஞ்சியமகிமை என்ற 29-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## நாற்பத்தேழாவது அத்யாயம்.

பகனது கண்ணைக்கெடுத்த பரமசிவன் கீழத்தியாயத்தில் கூறியபடி இங்ஙனம் தேவரால் வேண்டப்பட்டவராகி முன்பு நிற்கும் அகத்தியரைப் பார்த்து விந்தியமலையின் கர்வத்தையடக்கவேண்டி தேவர்கள் கேட்கையில் கம்பீரமான மொழிகொண்டு கூறினர்.

ஈஸ்வரர் :—' அகஸ்தியனே ! தேவரது கவலை நிறைவேறவும் சந்திர சூரியர்க்கு வழியுண்டாக்கவும் வேண்டி விந்தியமலையின்

செருக்கினை அடக்க நீ உடனே என் ஆக்ஞை மேற்கொண்டு செல். முனிவர்கட்குள் என்னைத்தவன் நீ ஒருவன்தான்' என்று கூறினர். குடமுனிவர் பரமசிவனது இம்மொழியைக் கேட்டு மிக வருந்தி மிகவும் தீனன்போல் ஈசனரைப் பார்த்துக் கைகட்டிக் கூறினர்.

அகஸ்தியர் :—' சம்புவே! யான் உனது ஆனந்தவனத்திற்கு வந்து தீது யாது செய்தேன்? இக்காசியில் என்றும் குற்றப்பட்டிலேன். வருண நிலைக்கொத்தபடி உசிதமாக யிருக்கிறேன். வீட்டிற்குள் மலமோசனம் செய்தறியேன். துரோகம், பொறாமை, புறங்கூறல், அதட்டல், மிகக் கொடுமை இவற்றை எப்பிராணிக்கும் செய்தறியேன். பரமசிவனே! நெற்றியில் முப்புண்டரமாக அணிந்துகொண்டும் உருத்திராக்ஷ மணிநதுகொண்டும் பஞ்சாக்ஷரம் ஜபிப்பதில் பற்றுடையவனும், ஐந்து முகம் உடைய உம்மைத் தியானம் செய்பவனும், காசியில் பற்றுடையவனும், ஐந்து லிங்கம் வழிபடுவதில் பற்றுடையவனுகவுமிருக்கிறேன். அவிமுக்தேசனும் விச்வேசனும், ஞானத் தலைவனும், முக்கண்ணனுமாகிய விச்வேசனுகிய உன்னையும், அன்னபூர்ணியையும் எப்பொழுதும் பூஜிக்கிறேன். எனது நாக்கு எப்பொழுதும் சிவநாமத்தை ஜபித்துக்கொண்டே இருக்கிறது. உனது திருவடி அடைதலாகிய முக்தியை இவ்வொரு பிறவியினலேயே அடைய யெண்ணி உன்னை எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறேன். இங்ஙனம், நோற்றுக்கொண்டு வருகின்ற யான் இத்தகைய காசியை எங்ஙனம் விடுவேன்? ஏ மகேச்வரரே! பல பிறவிகளின் முடிவில் தவத்தாலும் உமது அருளாலும், இந்தக் காசிக்கு வந்து சேர்ந்திருக்கிறேன். மிகுந்த ஆபத்காலத்திலும் காசியைவிட்டுப் பிரிந்திருக்கும் துன்பத்தை உமது அருளால் பொறுக்கமாட்டேன். மக்கட்கு ஞானம் நீங்கவேண்டி ஏதாவது மயக்கமுண்டுபண்ணுவதுபோல் எனக்கு இப்பொழுது யிடையூறு செய்கிறர்கள் போலிருக்கிறது. முக்தியளிக்கும் உனது அவிமுக்த தலத்திலும், தேவர் வந்து இடையூறு செய்கின்றனர். ஆகையால் பிரம்மப் பிரகாசமான காசியை விட்டுப்போகமாட்டேன்' என்று சொல்லி துயரால் தவித்துக்கொண்டு பரமசிவனை வணங்கினர்.

அப்பொழுது சம்புவானவர், அவர் வார்த்தையைக் கேட்டு மேல் விளையும் கார்யத்தை நோக்கியும் தேவர்களது கார்ய சித்திக்காகவும் குடமுனியைப் பார்த்துக் கூறினர்.

ஈச்வரன் :—ஏ முனிவர்தலைவ ! கவலற்க; இப்புவியில் காசிக்கும் சிறந்த தலமிருக்கின்றது. பாரத வர்ஷத்தில் காவேரிக் கரையில் முக்தியளிக்கும் தலங்கள் இருக்கின்றன. அப்புண்ய தலங்களுள் திருவாஞ்சியம் முக்தியளிப்பதாகும். முன்பு விஷ்ணுவானவர் லக்ஷ்மியை அடையவிரும்பிச் சிறந்த தவம் செய்து லக்ஷ்மியைப் பெற்றார். அதனால் அதற்கு ஸ்ரீவாஞ்சியமென்று பெயர் வாய்ந்தது. காசியில் பைரவர் பாவிகளை எப்பொழுதும் தண்டிக்கின்றார். இத்திருவாஞ்சியத்தில் பைரவர் தனது வியாபாரமின்றி இருக்கின்றார். பாபங்களெல்லாம் அழிகின்றன. அங்கு புண்ணியம் வளர்கின்றன. முனிவர்தலைவ ! வேறு தலங்களில் இம்மாதிரி இல்லை. அத்தலத்தில் எவ்வுயிர்களுடையவும் அபராதம் பொறுத்துக்கொள்ளுகிறேன். அங்குற்றவர்களுக்குப் பிறவியில் முக்தியுண்டாகின்றது. சீக்கிரமாகச்சென்று தேவர் காரியத்தை முடிப்பாய்; கவலைப்படாதே' என்று பரமசிவன் கூறினர்.

குடமுனி உடனே சிவபிரானை வணங்கி விந்தியமலையை யடக்கி திருவாஞ்சியத்தில் சிவபிரானை வழிபட்டு வசித்து வந்தார். அந்தணர்காள் ! காவேரிக் கரையில் மிகவும் தூயதான திருவாஞ்சியத்தில் வசிப்பவர்க்கு பிறவியில் முக்திபுண்டாகின்றது. அத்தலத்தை இயம்பவுணர்ந்தோர் வேறு தலம் செல்லமாட்டார். அந்தணர்காள் ! இதனை உங்களுக்குச் சொன்னேன். மற்றும் யாது கேழ்க்க விருப்பம்? இச்சரிதமான அமுதானது புண்ணியமும் புகழளிப்பதும் ஆயுளளிப்பதுமாகும்.

[பெரிய கந்தபுராணம் குடகுமலைக் காண்டத்தில் திருவாஞ்சிய மகிமையில் காசியிலிருந்து புறப்பட்டுக் குடமுனிவர் விந்திய மலையைத் தகைத்துத் திருவாஞ்சியத்தில் வசித்ததனைக் கூறும் 90-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## நாற்பத்தெட்டாவது அத்யாயம்.

### பிரம்மாண்டபுராணத்தில் திருவாஞ்சியத் தலத்திற்குட்பட்டதாகிய வரதராஜக்ஷேத்திர மகிமைத் தொடக்கம்.

இருடிகள் :—'வித்தைக்கு நிதியான குதிரைமுகக் கடவுளே ! உம்மிடமிருந்து தீர்த்தங்களின் புகழ் மிகுதியை யாங்கள் ஆதர

வுடன் கேட்டோம். முன்பு தீர்த்தத்தைப் பற்றிக் கூறும் சமயத்தில் இறுமைப் பயனளிக்கும் திருவாஞ்சியத்தில் வீரகத்தி பாதகம் கடியும் இராமதீர்த்தம் என்று ஒன்றிருப்பதாகக் கூறியருளினீர். அத்தகைய இராமதீர்த்தத்தின் பெருமையை இப்பொழுது எங்களுக்குக் கூறவேண்டும். உனது முகக் கமலத்தினின்று தோன்றிய கதாமிருதமாகிய ரஸாயினததைப் பருகிப் பருகித் திருப்தியடைகின்றோமில்லை. மீண்டும் மீணடும் கேட்க வேண்டுமென்ற ஆசை மேற்படுகிறது. ஆகையால் எங்களுக்கு விரிவாகக் கூறவேண்டுகிறோம்.'

அயக்ரீவர் :—' சிறந்த அறிவுடைய இருடிகளே ! நன்றாக நல்ல பேச்சு எடுத்தீர்கள். உங்களுக்குக் கூறுகிறேன்; கவனமாகக் கேளுங்கள்.

இப்புவியில் எதனைக் கேட்டால் மக்கள் விடுபடுவார்களோ அதனைக் கூறுகிறேன். காவேரியின் தென்கரையில் இருயோஜனை தூரத்தில் காசிக்கு மேற்பட்ட திருவாஞ்சியமென்ற தலமிருக்கிறது. அதற்கு இடையில் வைகுண்டமென்ற சிறந்த தலமிருக்கின்றது. அது சுவேத தீவினுள் வைகுண்டத்தினும் விஷ்ணுவுக்குப் பிரீதியளிப்பதாகும். அதன்கண் வரதராஜன் என்ற விஷ்ணுவானவர் இலக்குமியுடன் விளங்குகிறார். அந்த விஷ்ணுவுக்கு மேற்கு, தெற்கு, வடக்கில், லக்குமி, சேஷ, ஸ்ரீராம தீர்த்தங்கள் வழங்குகின்றன. சேஷ இலக்குமி என்ற தீர்த்தங்களின் மகிமையை முன்பு கூறி, பின்பு சகல பாவக் கூட்டங்களும் கடிவதும், இதிஹாசத்துடன் கூடியதும், பிறவியிலிருந்து முக்தியளிக்கக் காரணமும் ஆன இராமதீர்த்தத்தின் பெருமையைக் கூறுகிறேன்.

மாகிஷ்மதியில் கிருதவீரனது மகனும், மிக்க வலிமையுடையவனும், சந்திரவம்சத்திற் பிறந்தவனுமான கார்த்தவீர்யார்ச்சுனன் அயனைக் குறித்துக் கொடிய தவஞ்செய்தான். இங்ஙனம் பதினாறாயிரம் வருடம் தவஞ்செய்ய உலகிற்குப் பிதாமகனான அயன் மகிழ்ந்து கார்த்தவீர்யார்ச்சுனனைப் பார்தது, 'நீ எதற்காகத் தவஞ்செய்கிறாய்? உனது தவத்தால் மகிழந்தேன். உனக்கு வேண்டிய வரம் கொடுக்கின்றேன்; கேட்பாயாக' என்று கூறினார். உடனே அவன் தனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டான். அதாவது முதலில் ஆயிரம் கைகள் வேண்டும். பிறகு குறைவற்ற செல்வம்,

அத்தகைய ஆற்றல் பகைவர் எல்லாரிடமிருந்தும் வெற்றி, ஆகிய இவை வேண்டுமென்று கேட்டான். அவர் அங்ஙனம் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு மறைந்தார். உடனே சிறந்த மதியையுடையவனான அர்ச்சுனன் அபீஷ்டம் பெற்றுச் சிறிது காலம் சென்றவுடன் திக்விஜயங்களெல்லாம்செய்து நீண்டகாலம் மகிழ்ந்து மாகிஷ்மதியில் மிக்க சிறப்புடன் விளங்கினான்.

பிறகு சிலகாலஞ்சென்று அர்ச்சுனன் மதமுற்றவனாகி நருமதையில் பெண்களுடன் சூழ்ந்து நீர்விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது பிறன் வீரம் வாங்குவோனான ராவணனென்ற அரக்கன் முன்பு திசைப் பாலர்களை வெல்ல எண்ணிப் புறப்பட்டு நருமதையில் சேனையுடன் நீராடி அம்பிகாபதியை அழகிய நருமதா நதிக்கரையில் மேட்டில் வைத்து வழிபட ஆரம்பித்தான். அப்போது கார்த்தவீரியன் பெண்களுடன் நீர்விளையாடிக்கொண்டு தனது ஆயிரம் கைகளாலும் வெள்ளத்தைத் தடுத்தான். அப்பெருக்கத்தால் இராவணன் தனது சேனையுடன் மூழ்கினான். பிறகு இராவணன் கரையேறிக் கோபித்துப் போருக்கு ஆயத்தனானான்.

பிறகு இராவண அர்ச்சுனர்கள் ஒருவருக்கொருவர் போர் செய்ய ஆரம்பித்தார். அதன்மேல் மிக்க ஆரவாரத்துடன்கூடியதும் மயிர்க்கூச்செறியத்தக்கதுமான போர் வளர்ந்தது. அப்போது அர்ச்சுனன் இராவணனை வென்று பலமாகக் கைப்பற்றி அவனது கைகளை மகிழ்வுடன் பாசத்தால் கட்டி பிறரால் வெல்ல முடியாத இராவணனைச் சிறைச்சாலையில் அடைத்தான். அயன், இச்சரிதம் கேள்வியுற்று அர்ச்சுனனிடம் வந்து சமாதான வார்த்தைகளால் தெளியவைத்து, கார்த்தவீரியனிடமிருந்து இராவணனை விடுவித்தார்.

பிறகு சிறிது காலஞ் சென்றவுடன் கார்த்தவீர்யார்ச்சுனன் மதம் பிடித்தவனாகிக் கடலுடன் போர்செய்யத் தன் சேனையுடன் நகரத்தினின்றும் வெளிக்கிளம்பிக் கடற்கரை வந்து தீயின் ஜ்வாலைக்கொத்த அம்புகளால் மிக்கத் திமிங்கிலம் முதலியவற்றையுடைய கடலைக் கலக்கினன். உடனே சமுத்திரராஜன் வந்து பகைவரை வெல்லுபவனான அர்ச்சுனனைப் பார்த்துச் சொன்னான். 'அர்ச்சுனனே! என்னை எதற்காக வருத்துகின்றாய்? என்றான். அதற்கு அர்ச்சுனன் "துந்துவயுத்தம் எனக்குக் கொடுக்கவேண்டும்

என்றான். அதற்குக் கடலரையன் மிக்கப் பயத்துடன் 'உன்னோடு போர் புரிய யான் ஆற்றலற்றவன். இப்பொழுது உனதருளால் வசிக்கிறேன். ஆகையால் என்னிடத்து அருள் பாராட்டவேண்டும்' என்று வேண்டினன். அதற்கு அருச்சுனன், 'அங்ஙனமாயின் இப்புவியில் என்னுடன் போர் செய்யக்கூடியவர் யார்?' என்று கேட்டான். கடலரையன் இவனது உயிரை விரைவில் வாங்கக் கூடியவன் யார் என்று மனதாற் சிந்தித்து இவனுக்குச் சொல்ல வேண்டுமென்று நினைத்து இவனைக் கொல்பவன் இன்னானென்று தீர்மானம் செய்துகொண்டு அவனிடம் கூறினான்.

கடல்:—'ஜமதக்னி என்ற பிரம்மமறிந்தவரான சிறந்த அந்தணரது பிள்ளையானவர் மிக்க வலிமையுடையவரும் தந்தையிடத்துப் பக்தியுடையவரும் மிக்க கர்வமுடையவராகவும் இருக்கிறார். அவருக்குப் பரசுராமர் என்று பெயர். அவர் 'என்னோடு போர்செய்பவன் யாரையாவது எப்பொழுது பார்ப்பேன்? அயன் என்னோடு போர் செய்பவரைப் படைக்கவில்லை. இப்புவியில் எனக்குப் போர் அளிக்கப் போகிறவனைப் பார்க்கப் போகிறேனா என்ன' என்று சொல்லிக்கொண்டு வல்லவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். போர்செய்ய விரும்பும் உனக்குப் போரளிப்பவர் அவர்தான். வேறொருவருமில்லை. இப்புவியில் அவரை வெல்பவர் உன்னைத்தவிர வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. உனக்குப் போர்செய்ய விருப்பமிருப்பின் அவரோடு போர்செய்' என்று கடல் கூறிற்று. இங்ஙனம் கூறவே வெற்றிக்காகக் கிளம்பி நால்வகைச்சேனையுடன் ஜமதக்னி குடிலண்டைந்தான். அப்பொழுது பரசுராமர் அவன் போருக்கு வந்திருக்கிறான் என்று பரசுவைக்கொண்டு வேகமாக ஆசிரமத்தின் வெளியே புறப்பட்டார். அப்பொழுது மிகுந்த ஆரவாரத்துடன் கூடியதும் மயிர்க்கூச்செறியக்கூடியதுமான போர் நிகழ்ந்தது. அத்திரசத்திரங்களால் வெல்லமுடியாதவரும் ஒருவர்க்கொருவர் வெற்றி விரும்பியவரும் மிக்க வன்மையுடையவருமான அவ்விருவரும் போர் செய்தார்கள். உடனே மிக்க வன்மையுடைய பரசுராமர் மிக்கக் கோபம் கொண்டவராகி 'யான் இந்த அற்பத்திறமையோனிடம் நீண்டகாலம் சண்டை போடவேண்டியிருக்கிறது' என்று தன்மனதின் கண் எண்ணி கார்த்தவீரியனது தலையை மகிழ்ச்சியுடன் கோடரியால் வெட்டினார். அப்போர்க்களத்தில் கார்த்தவீரியன் கொல்லப்பட்டவுடன் அவனது நால்

வகைச் சேனையும் அவரைக்கொல்ல எழுந்து கோபத்துடன் பரசு ராமனை மதில்போல் சூழ்ந்துகொண்டது. உடனே, மிக்க ஜயிக்க வேண்டுமென்று விரும்பும் பரசுராமனுக்கும் அர்ச்சுனன் சேனைக்கும் மிகுந்த அடிபிடி சண்டையானது நேர்ந்தது. சேனைகளின் பாணங் களால் ராமன் உடைக்கப்பட்டான். ராமபாணங்களால் சேனை உடைக் கப்பட்டது. உடனே பரசுராமன் மிக்க கோபத்துடன் அச்சேனையை, ருத்திரன் முப்புரங்களை எரித்ததுபோல, பரசுவினாலேயே கொளுத் திவிட்டார். மீண்டும் கோபித்து இப்புவியிலுள்ள அரசரை மீண் டும் மீண்டும் இருபத்தொருதலைமுறை கொன்று ஒழித்துப் புவியெல் லாம் தனதாகப் பெற்றுத் தனக்குப் பலத்தில் ஒத்தவனில்லை யென்று நினைத்துக் கர்வப்பட்டான். இங்ஙனம் கர்வப்படுபவரும் பிறர் பலம் கடியவருமான பரசுராமரை வீரஹத்தியானது சூரிய கேதுபோல் பற்றியது. அந்த வீரஹத்தியால் பரசுராமர் யாது செய்வேன் என்று சிந்தித்திருக்கையில் அவரது கூடஸ்தரும் அழிவற்றவரும் ஜனார்த்தருமான விஷ்ணுவானவர் தன்து கூறு பாடானை பரசுராமனுக்கும் உலகிற்கருளவும் வீரஹத்தி நீங்கவும் இப்புவியில் விரைவில் சித்தியளிப்பதால் ராமதீர்த்தத்தை நினைத் துக்கொண்டு வெளிதோன்றினார்.

[பிரம்மாண்டபுராணத்தில் திருவாஞ்சியத்திலுள்ள பூவைகுண்ட மென்ற வரதராஜ தலமகிமையில் இராம தீர்த்தப் புகழ்ச்சியில் 89-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## நாற்பத்தொன்பதாவது அத்யாயம்.

பரிமுகர்:—‘அந்தணர்காள்! தாமோதரர் தனதம்சமான பரசு ராமருக்கு முன்தோன்றி வீரஹத்திபாபம் நீங்குதற்குரிய தீர்த்த மொன்று கூறினர்.’

விஷ்ணு:—‘பரசுராமனே! மிகவும் மறைவானதும் மிக்க தூய துமான ஒன்று உனக்குக் கூறுகிறேன். இதனைக் கேட்டவுடன் மக்கள் பாவமெல்லாவற்றினின்றும் விடுபடுவர். பெருந் தோளுடைய ராமனே! கவனத்துடன்கேட்பாயாக. ராமனே! முன்பொரு கல்பாந் தரத்தில் நான் வைகுண்டத்தில் சேஷசயனத்தில் ஒரு காரியத் திற்காக மகிழ்வுகொண்டு இலக்குமி பூதேவிகளுடன் துயில்

கொண்டிருந்தேன். யான் தூங்குகையில் தேவிகள் சிறிது சண்டை செய்தனர். அப்பொழுது சபத்னிகளாய் இருப்பதால் அவ்விருவருக்கும் கலகம் நிகழ்ந்தது. அப்பொழுது யான் விழித்தெழுந்து பூமியிடத்தில் மோகத்தால் இங்கு உங்களுக்குள் கலகம் வேண்டாமென்று பக்ஷபாதத்துடன் இடது கையால் இலக்குமியையும் வலது கையால் பூமியையும் அணைத்தேன. இலக்குமியானவள் அதனால் கோபித்து என்னைப் பலவகையிலும் இழித்துக்கூறித் தனது சக்தியை வாங்கிக்கொண்டு பிதாவின் ஆச்ரமம் சென்றாள். இலக்குமியைப்பிரிந்ததினால் வருந்துபவனும்சக்தியற்றவனும் ஆயினேன். மீண்டும் இலக்குமியை வரவழைக்க வழிவேண்டினேன். அப்பொழுது ஆகாயவாணியானது 'அச்சுதனே! சந்தனாரண்யத்திற்குச்செல்' என்று கூறிற்று. யான் அதைக்கேட்டு ஸ்ரீசந்தனாரண்யம் சென்று அங்கு அழிவற்றவரும் மகாதேவருமின திருவாஞ்சேசரை வழிபட்டு அவர் அருளால எனது காதலியாண இலக்குமியை மீண்டும பெற்று இப்புவியில் ஸ்ரீ சந்தனாரணயத்தில் திருவாஞ்சிய நகரத்தில் திருவாஞ்சேசரது கட்டளையால் வரதாராஜர் என்று பெயர்கொண்டு இலக்குமியுடன் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் வசித்துக்கொண்டிருக்கிறேன். இது ஸ்வேதத்தீவினும் வைகுண்டத்தினும் எனக்கு மிக்கப்ரீதி அளிப்பதாகும். ஸ்ரீவாஞ்சியம் என்றதலம் பூவைகுண்டமாகும. அது எனக்கு மிகப்ரீதியானது. அங்கு முக்காலமும வரதராஜனான என்னைப்பக்தியுடன் எவர் அடைகின்றாரோ அவர் பிறவிக்கடல் கடப்பதில் ஐயமின்று. அங்கு எனது சன்னதியில் வக்தியுடன் தானம் செய்பவனுக்கு வேண்டுவதெல்லாம் அளித்து அழிவற்றபக்தியும் செல்வமும் அளிக்கிறேன். கோ, பூமி, விசேஷமாகக்கன்னிகை, பொன், ஆடை, வீடு, அன்னம், காளைமாடுவிடுதல், நீர் ஆகிய இவற்றை விசேஷமாக எவர் செய்கின்றாரோ ஆண்டு அவர் எனது இடமடைவர். அங்கே அனேகத்தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றுள் உனது கொலைப்பாவம் நீங்க ஒரு தீர்த்தம் சொல்லுகிறேன். ஆதரவுடன் கேட்பாயாக. முன்பு யான் தவஞ்செய்யுங்கால், லக்குமி, சக்ரம், சேஷன் ஆகிய இவர் என்னை விட்டுப்பிரிந்த துயரால் வருந்தி அம்மூவரும் இனி நமக்குத் தலைவரின் பிரிவுண்டாகக் கூடாதென்று எனது பிரீதிக்காகக் கொடியதவம்செய்ய ஆரம்பித்தனர். அத்திருவாஞ்சிய நகரத்தில் எனது கோயிலுக்கருகில் தெற்கே தீர்த்தமுண்டுபண்ணிக்கொண்டு அந்த ஆதிசேடன் எனதருளுக்காகக் கொடியதவம் செய்தான். எனக்கு மேற்கில் இலக்குமி தீர்த்தமமைத்துக் கொடிய

தவம் செய்தாள். உலகுமயமான இலக்குமியானவள் எனக்குப்ரீதி விளைவிக்க எண்ணிக் கொடிய தவம் செய்தாள். அஸ்திரங்களுக்குத் தலைவரான மஹாபாகரான சக்கரர், தனது வேண்டுகோள்பெற எனக்கு வடபாகத்தில் தீர்த்தமமைத்துக் கொடிய தவம் செய்தார். அப்பொழுது இம்மூவரும் எனது பிரீதிக்காகத் தவம் செய்ய மகிழ்ந்து தனித்தனி அவர் வேண்டுவதளித்தேன். முதலில் ஆதி சேடனைப்பார்த்து, 'பாம்பரையனே! உனது வேண்டுகோளைக்கேள்; தருகிறேன்' என்று கூறினேன். உடனே ஆதிசேஷன் மகிழ்ச்சியுடன் என்னை வேண்டினன். அதாவது 'எப்பொருளினும் அமைந்தவிபுவே! தேவரது பிரிவு எப்பொழுதும் உண்டாகக்கூடாது. எனது சயனத்தில் நீர் எப்பொழுதும் சயனித்துக் கொண்டிருக்கவேண்டும். தேவரீரது வழிபாட்டிற்காக யான் உண்டுபண்ணிய தீர்த்தமானது இவ்வுலகில் நாகதீர்த்தம் என்று புகழ்படட்டும். தேவரீர் எனக்கருள் செய்த சுபதினமான வைகாசி சுக்லபக்ஷம் சிரவணநக்ஷத்ரத்தில் எனது தீர்த்தத்தில் நீராடி எனது வாஹனத்தில் ஏறித்தரிசனம் கொடுக்கும் தேவரீரை மகிழ்ந்து அடைபவர் வேண்டுகோள் எல்லாம் நண்பர்களுடன் பெற்றுப் பிறகு வைகுண்டமடைந்து அங்கேயே விடுபடட்டும். பாம்புகளின் சாபததால் மக்களபெறுதவர்கள் இங்கு நீராடித்தேவரீரருளால் பல பிள்ளைகளைப்பெறட்டும். அமாவாசையில் சூரியசங்கராந்தியில் எட்டுப்பாம்பரையர்கட்கும் தர்ப்பணம் செய்தால் பிள்ளைமுதலியவரால் நற்கதியுண்டாகும்' என்பனவாம். இங்ஙனம் நாகராஜனை சேஷனால் ஆதரவுடன் கேட்கப்பட்ட யான் அங்ஙனமே அவைபெல்வாம் அளித்து இலக்குமியின் அருகிற் சென்றேன். அவ்விலக்குமியும் முன்தோன்றிய என்னைக்கண்டு மீண்டும் மீண்டும் வணங்கி வலம வந்து முன்புகைகட்டி நின்றாள். 'இலக்குமியே! உனக்குவேண்டுவது யாது? அதனைக்கொடுக்கின்றேன். கேட்பாய்' என்றுயான்கூற, இலக்குமியானவள் தன் மனத்தில் தோன்றியதைக்கேட்டாள். அதாவது, 'இதுமுதல் உமது பிரிவு எனக்கு எப்பொழுதும் உண்டாகவேண்டாம். பூமியைக்காட்டிலும் என்னிடத்தில் பிரீதி அதிகமாக இருக்கட்டும். உம்மை வழிபட வேண்டி எந்த தீர்த்தத்தையான் உண்டுபண்ணினேனோ, எந்த தீர்த்தத்தால் யான் வழிபடத் தேவரீர் பிரசன்னரானீரோ அத்தீர்த்ததிற்கு இலக்குமி தீர்த்தமென்று உலகில் புகழுண்டாகட்டும். கணவனுடையவரான எந்த மங்கையர் எனது இலக்குமி தீர்த்தத்தில் சிராவண மாதத்தில் வெள்ளிக்கிழமையில் நீராடி உபவாசமிருந்து சூரியாஸ்தமன சமயத்தில் இரவின் முற்பகுதியில்

விதிப்படி என்னை மகிழ்ச்சியுடன் வழிபட்டு நிறைந்த விளக்குகள் கொண்டும் கற்பூரார்த்திகள் கொண்டும் துதிக்கின்றனரோ அவர்க்குப் பிறவிதோறும் சௌமங்கலியம், நற்கணவர், நற்புதல்வர், அழகிய வடிவம், புண்ணியபூமியில் பிறத்தல், தருமத்தில் பக்தி, நற்குலத்தில் புத்தி செல்வம் நம்மிருவர் திருவடிகளில் பக்தி, புத்தி, முக்தி ஆகிய இவற்றையளிப்பீராக.'

சிவபிரான் அருளால் யாம் மகிழ்ச்சிகொண்டு சேர்ந்த வைகாசி பூர்ணிமையில் வைகாநச விதிப்படி கொடியேற்றம் முதல் தேர்த்திருவிழா நமக்குச்செய்பவர், இப்புவியில் போகங்களெல்லாம் துய்த்துப் பிறகு உமதருளால் உடல் பிரியுங்கால் முக்தி யடைவர். தேரில் என்னுடன் யேறியிருக்கும் உம்மைத் தெரிசிக்க நின்றவர் முயற்சி யின்றி பிறவிக்கடலினின்றும் முக்தியடைவர். புத்தி,முக்தியளிக்கும் இந்த நம்முடைய வைகுண்டத்தில் இந்த வரதராஜரது தலத்தில் என்பெயர்கொண்ட தீர்த்தத்தில்நீராடி என்னைத்தெரிசித்து ஒரு இரவாவது இங்கு வசிப்பவர் சந்திரன், நக்ஷத்திரமுள்ள வரையில் வைகுண்டத்தில் வசிக்கட்டும். அயனங்களிலும், விஷுவிலும், சங்கராந்தியிலும், கிரகணங்களிலும், ஏகாதசியிலும், அமாவாசையிலும், மன்வாதிகளிலும், புண்ணிய நக்ஷத்திரங்களிலும், புண்ணிய திதிகளிலும், யுகாதிகளிலும், மற்றைய புண்ய வாரங்களிலும், புண்ய யோகங்களிலும், இத்தீர்த்தத்தில் நீராடி, அத்தல வாசிகளுக்குத் தானம்செய்து ஒருதினமாவது அங்குவசிப்பவர் உனதருளால் முக்தராவார். நமது ஆலயத்திற்கு வெளியில் விசேஷமாக நம்சமீபத்தில் அந்தணனாயினும், அரசனாயினும், வைசியனாயினும், சூத்திரனாயினும், ஸங்கரராயினும், பெண்களாயினும், வேறுயாவர்களாயினும் மகிழ்வுடையவராகி, வறிஞரும், அநேக மக்களுடையவரும், அந்தணரும், மிகப்பூஜ்யரும், ஆனதலவாசிகளுக்கே வீடுகளமைத்துக் கொடுத்து, அதற்கு வேண்டிய பொருள்கள் கொடுத்து எவ்வளவு பூமிகொடுத்தால் குடும்பத்திற்குப் போதுமோ அவ்வளவு கொடுத்தும் பயிர் நிறைந்த பூமியை தக்ஷிணையுடன் எவன் கொடுக்கிறானோ, அவன் இப் பிறவியிலேயே விரைவில் சார்வபௌமத்துவத்தையும் அடைந்து, போகங்களெல்லாம் அடைந்து, தமது உறவினருடன் அவற்றைத் துய்த்துப் பிறகு இப்பூமியுள்ளளவும் வைகுண்டத்தில் வசிக்கட்டும். வறிஞனான அந்தணனையாவது நிலைநாட்டுவானாயின் இவ்வுலகில் வறுமையற்று அப்பொழுதே செல்வமுடையவனாவான். இவ்வுலகில் கன்னிகை, கோ, எள், பொன், விதை, தானியம், ஆடை, படுக்கை,

முதலிய பல தானியங்களையும் இத்தலத்திற்செய்தால் ஏனையதலத்திற்குக் கிடைக்கும் பலத்தினும் கோடிகுணமாக ஆகும். இத்தலத்தில் நெல்லிக்காயளவு அன்னம் பக்தியுடன் இட்டால் அது உமதருளால் மேருவுக்கொத்ததாகும்' என்றவாறு இலக்குமியானவள் வேண்டினள். இங்ஙனம் இலக்குமியால் வேண்டப்பட்ட பகவான் அவள் வேண்டுவதெல்லாம் அங்ஙனமே தந்து சக்கிரத்தின் சமீபம் சென்றேன்.'

[பிரம்மாண்ட புராணத்திற் திருவாஞ்சியத்தலத்துப் பூவைகுண்ட வரதராஜ தலமகிமையில சேஷ இலக்குமி தீர்த்தப்புகழ்ச்சி என்ற 90-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## ஐம்பதாவது அத்யாயம்.

மகாவிஷ்ணு:—'பரசுராமனே! சக்கிரமும் என்னைப் பார்த்து மீண்டும் மீண்டும் வணங்கிப் பலவகைத் துதிகளால் துதித்து வினயத்துடன் முன்பு நின்றான். 'சக்கிராயுதனே! உனது தவத்தால் மகிழ்ந்து இப்பொழுது முன்தோன்றினேன். தொண்டர் காவலனை என்னிடத்துனது வேண்டுகோள் கேட்பாயாக' என்று கூறினேன். உடனே சக்கிரமானவன் என்னிடத்து அனேக வரங்களைக் கேட்டான். அவையாவன:—'எனக்கு மீண்டும் எப்பொழுதும் உம்முடைய பிரிவு உண்டாகவேண்டாம். எனது செல்லுகை உம்மிடமிருந்தல்லாமல் வேறெங்கும் தடையிடவேண்டாம். கருடக்கொடியோனே! பெரும்போரில் என்னால் பல வீரர்கள் கொல்லப்பட்டிருப்பதால் எனக்கு வீரர் கொலைக்குற்றம் ஏற்பட்டிருக்கிறது. அக்குற்றம் நீங்கத் தீர்த்தமொன்று அமைப்பாய்' என்றிங்ஙனம் சக்கிரனானவன் வேண்டத் திருவாஞ்சியேசரை நினைத்து பிறர் அப்பாவம் நீங்கத் தீர்த்தங்களுக்குள் மிக்கவாற்றலுடையதும் வீரர் கொலைப் பாவம் நீக்குவதுமான தீர்த்தத்தையாராய்ந்து மந்திரத்துடன் அவனாலேயே அமைக்கப்பட்ட தீர்த்தத்தில் ஆவாஹனம் செய்து அப்பொழுது ஆதரவுடன் நீராட்டினேன். உடனே சக்கிரனானவன் வீரர் கொலைப்பாவத்தினின்றும் விடுபட்டுத் தோன்றி மீண்டும் வேறொரு வரம் வேண்டினன். 'இதுமுதல் வீரர் கொலை செய்தவர் இதன்கண் நீராடி இப்புவியிலுள்ளளவும் அக் கொலை பாவத்தினின்றும் விடுபடுவர். தேவரீர் எந்நிமித்தமாக இத் தீர்த்தம் உண்டுபண்ணினபடியால் இதற்குச் சக்கரதீர்த்தமென்றே புகழ்

உண்டாகட்டும்' என்று வேண்டிய சக்கரனுக்கு முன்பு எல்லாங் கொடுத்தேன். ஆகையால், இம்மைப் பயனளிக்கும் திருவாஞ்சிய நகரத்தில் எனது ஆலயத்தின் சமீபத்தில் எனது இடதுபக்கத்தில் மிக்க தூய சக்கரதீர்த்தத்தில் வீரர்கொலைப் பாவத்தினின்றும் விடுபட நீராடுவாயாக' என்று சொல்லிவிட்டு கிருஷ்ணனானவர் தனதிருப்பிடம் சென்றார். அந்தணர்காள்! பிறகு பரசுராமன் அரிவசனத்தைக் கேட்டுத் திருவாஞ்சியநகரம் சென்று, திருவாஞ்சியேசரை வணங்கித் தனது செல்வப் பாப்பினளவாக மூங்களாம்பிகையையும் வழிபட்டுப் பிறகு, தான் தூய்மையடைய வரதராஜரை வணங்கி க்ஷெளரபூர்வமாக விதிப்படி தல உபவாசஞ் செய்து மறுநாள் சிராவண மாதத்தில் சிரவணத் துவாதசியில் காலையில் சங்கற்பத்துடன் சக்கரதீர்த்தத்தில் நீராடி வீரர்கொலை பாவத் துன்பம விட்டு மிக்க சௌக்யத்துடன் தான் மீண்டும் ஒப்பற்ற வாற்றலுடைய பரசுராமன் தனது மனதில் ஒப்பற்றவனும் ஸ்ரீ பூமிகளோடு கூடியவனும் விபுவுமான ஸ்ரீ வரதராஜனைக் குறித்து ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு தவஞ்செய்ய, வரதராஜன் மகிழ்ந்து 'இவன் எதற்காகத் தவஞ்செய்கின்றான்?' என்று கேட்க, அவ்விராமன் 'இலக்குமிக்கு நாயகனான தலைவனே! உமது வரதராஜன் என்ற பெயரை உண்மைப் பொருள் உள்ளதாகச் செய்வீர். ஏனெனில் தேவரீர் பெயர் வரங்கொடுப்பதாலும் மக்கட்கு தலைவராயிருப்பதாலும் வரதராஜர் என்று இப்புவியில் அறிஞரால் புகழப்படுகிறீர். ஆகையால் தான் வரதராஜரான உம்மிடம் வரம் வேண்டினேன். மக்கள், எதன்கண் நீராடுவதால் வீரர்கொலைப் பாவத்தினின்றும் விடுபடுகிறார்களோ அத்தகைய வீரர்கொலைப் பாவம் கடியும் தீர்த்தம் என் பெயரால் ராமதீர்த்தமென்று உலகின்கண் புகழடையட்டும். தேவர்தலைவனே! யாம் வேண்டுவது பெற்ற இந்த ஆவணிமாத சிரவண துவாதசி சுபதினத்தில் நீராடி மிக்க பூஜ்யர்களான அந்தணர்களுக்கு வேண்டியவை எல்லாம் கொடுப்பவர்களுக்கு நீர் வேண்டுவன யாவும் கொடுத்து இங்கே லக்குமியுடன் வசிப்பீராக.' இங்ஙனம் வேண்டப்பட்ட வரதராஜன் ஆதரவுடன் வேண்டுவதளித்து பூவைகுண்டம் என்ற அத்தலத்தில் லக்குமியோடு வசிக்கின்றார். அந்தணர்காள்! மிகக அறிவுடைய பரசுராமன் இங்ஙனம் விஷ்ணுவிடம் வரம் பெற்று நாம் செய்ய வேண்டுவது யாது என்று மனதில் சிந்தித்து இத்தலத்திற்குத் தலைவர் சம்புவும் மகேஸ்வரருமான திருவாஞ்சேசர் அருளால் எது பெறப்பட்டதோ அதுதான் ஸ்திரமாய் இருக்கும் தன்மை அடை

யும் என்று ஆராய்ந்து அவரைத் தவத்தால் வழிபட்டார். வர மளிப்பவரும் விபுவுமான திருவாஞ்சேசர் நீண்டகாலம் வழிபட்டுத் தேறின்றப் பரசுராமர் அம் மகாதேவரை வணங்கித் துதித்து, 'பகவானே! உமது தலத்தில் வாயுமூலையில் இருப்பதும் வீரர் கொலைபாவங் கழிவதுமான சக்கரதீர்த்தத்தில் நீராடியதால் வீரர் கொலைபாவத்தினின்றும் விடுபட்டேன். ஆதலின் என் பெயர் கொண்டு ராமதீர்த்தமென்றும புகழ்பெறட்டும்' என்று தனது மன திலுள்ளதோர் வரம் வேண்டினன். அருட்கடலான திருவாஞ் சேசர் 'ஆகட்டும்' எனறருளித் தனது அழகியத் திருவாஞ்சிய லிங்கத்தில மறைந்துவிட்டார். பிறகு பரசுராமர் தனது வேண்டு கோளெல்லாம பெற்று மகிழ்ந்து தனது இருப்பிடம் சென்றான். அதுமுதல் அந்தணர் தலைவர்களே! அது ராமதீர்த்தம் என்று சொல்லப்படுகிறது. ராமதீர்த்த மகிமை கூறிவருகையில் உங்க ளுக்கு யான் ஆதரவுடன் நாகதீர்த்தம், லக்குமிதீர்த்தம் ஆகிய வைகளின் தோற்றமும் மகிமையும கூறினேன். மீண்டும் ஒரு தீர்த்தம் இருக்கிறது. அது தேவரால் உண்டுபண்ணப்பட்டதா தலின் தேவதீர்த்தமென்று பெயர் பெறும். அத்தலத்தில் அதன் பெருமையைச் சுருககமாகக் கூறுகிறேன. இதனைக் கேட்ட மக் கள் இப்புவியில் பிறவிக கடலினின்றும் விடுபடுவர்.

பரிமுகர்:—' அந்தணர்காள்! முன்பு பஞ்சமேட்ரன் (ஐந்து ஆண்குறிகளுடையவன்) என்றொரு அசுரன் இருந்தான். அவன் ஐந்து தலையுடனும் ஐந்து கால்களுடனும் பன்னிரண்டு கைகளு டனும் கூடியவனாக இருந்தான். அவன் மிக்கச் செருக்குடைய வனாக வளர்ந்தான. அவன் தேவர்களுடன் நூறுவருடம் ஆச் சர்யமாகப் போர்செய்து பலதடவை விரட்டப்பட்டு ஓடியும் கொல் லப்படவில்லை. ஒருகால் தனது குருவான சுக்கிரனைப் பார்த்து 'நூறுதரம் பகைவர் போரில் என்னால் பிடிக்கப்பட்டார்கள். அவர் எனது வயிற்றைப் பிளந்துவிட்டும் சென்றார்கள். அதனால் யான் ஒருதரமாவது செத்தவனாகவில்லை. அப்போதப்போது உன் னால் முன்பு பிழைப்பூட்டப்பட்டேன். இப்பொழுது எமனுடன் பெரிதும் மிக்கக் கொடியதுமான போர் நிகழ்ந்து அவன் என் னால் நழுவவிடப்பட்டான். அவன் எனது வயிற்றைப் பிளந்து கொண்டு விரைவில் வெளிக்கிளம்பி பெருஞ்சிரிப்புடன் பரிகசித்தான். மீண்டும் இறந்த யான் உன்னால் மீண்டும் பிழைப்பூட்டப்பட் டேன். இனி எனது வயிற்றில் சேர்ந்தவர்கள் மரிக்கத் தவம்

செய்யப் போகின்றேன். குருவே! விரைவில் சித்தியளிக்கும் தலம் எது? அதனை எனக்கு இப்பொழுது சொல்லவேண்டும்.' என்று வேண்டினன். இங்ஙனம் வேண்டப்பட்ட சுக்கிரன் பஞ்சமேட்ரனைப் பார்த்து 'சியமந்தபஞ்சகம் என்ற தீர்த்தம் இருக்கிறது. அது தவம் செய்யத் தகுதியுடையது. மிக மகிழ்ச்சியுடன் முக்கண்ணனைக் குறித்துத் தவத்தால் வழிபடுவாய்' என்றான். இதனைக்கேட்ட அவன் அவரது பிரீதிக்காக அங்ஙனமே செய்ய முக்கண்ணன் வெளித் தோன்றவில்லையாதலால் தலைகளை ஒவ்வொன்றாகவும் நாக்கினையும் கை நகங்களால் அறுத்துத் 'திரியம்பகாயநம:' என்று அக்னியில் ஹோமம் செய்து ஐந்தாவதனை அறுக்க முயலுகையில் அவ்வஞ்சியன் இடையினின்றும் தூய பளிங்குபோன்ற ஒளியுடையவரும் இளம் பிறை சூடியும் பகவானுமான அம்பிகாபதி வெளிக்கிளம்பி அப்பஞ்சமேட்ரனைப் பார்த்து 'இத்தறுகண் ஒழிப்பாய். உனது தவத்தால் மகிழ்ந்தேன். உனக்கு வேண்டுவது கொடுக்கின்றேன்.' நீட்டியாதே விரைவில் இப்பொழுதே சொல்வாய்' என்று கூறினர். இதனைக்கேட்ட அசுரன், முக்கண்ணனைப்பார்த்துக் கேட்டான். அசுரன், 'மகேஸ்வரனே! எனக்கு அனேக வரங்கள் கொடுக்கவேண்டுகிறேன். ஓமம்செய்யப்பட்ட தலைகள் உண்டாகவேண்டும். பிடிபட்ட ஜீவன்கள் மரிக்க வேண்டும். உனது சடையிலிருந்து தோன்றிய பூதத்தால் எனக்கு மரணம் வேண்டுமேயொழிய வேறு ஒருவராலுமுண்டாகக்கூடாது' என்று இங்ஙனம் அசுரன் வேண்டப் பரமசிவனும் கொடுத்து மறைந்தார். பிறகு அப்பஞ்சமேட்ரன் தேவரை மிகவும் வருத்தினன். உடனே இந்திரன் முதலியதேவர் அத்துன்ப மாற்றாராகி திருவாஞ்சிய நகரம் வந்து நீண்டகாலம் அங்கிருந்து ராமதீர்த்தத்தினருகில் கிழக்கில் பூசிக்கத்தீர்த்த மேற்படுத்தி அதன்கண் எல்லாத் தீர்த்தங்களையும் ஆவாஹனம் செய்து முக்காலமும் அத்தீர்த்தத்தால் திருவாஞ்சியேசரைப் பார்வதியோடுகூட அபிடேகஞ்செய்து பெரும் பூஜைசெய்து ஆதரவுடன் தனது வேண்டுகோள் விரும்பிச் சிலகாலமிருந்தனர்.

அந்தணர்காள்! சில வருடங்கழித்தவுடன் பரமசிவன் வெளிப்பட்டுத்தோன்ற அங்ஙனம் தோன்றிய திருவாஞ்சியேசரை அத்தேவர்கண்டு வணங்கித்துதித்து வாஞ்சேசரை வணங்கி வரம் வேண்டினர். 'உலகத்தலைவனும் பார்வதி கணவனும் பகவானுமாகிய பிரபுவே! பஞ்சமேட்ரனால் வருத்தப்பட்ட எங்களைக்காப்பாற்ற

வேண்டுகின்றோம். தேவர்தலைவ! அம்மகாசுரன் போரில் தேவராகிய எம்மைத்தின்கின்றான். விரைவில் தேவர்கள் அழிந்துவிடுவார்கள். ஆகையால் எங்களை நன்றாகக்கொல்லும் அவ்வசுரனை அழிப்பீராக. சங்கரனே! தேவரீர் எங்கட்கு எந்தத்தீர்த்தம் பூசையால் மகிழ்ந் தீரோ அந்தத்தீர்த்தத்திற்கு இப்புவியுள்ளளவும் தேவதீர்த்த மென்று புகழ் உண்டாகட்டும். இத்திருவாஞ்சிய நகரத்தில் விசேஷ மாகத் தேவதீர்த்தத்தில் எப்பொழுதாவது எவராவது விதியில்லாம லாவது ஒரு தடவை நீராடி லிங்கவடிவமான உம்மையடைவராயின், அவர் அமரராகி வெள்ளிமலையில் வசிக்கட்டும். முப்புரமெரித்தவும் மால் எங்கட்கு வேண்டுகோளளிக்கபட்ட தினமாகிய ஆவணி மூல நக்ஷத்திரத்தில்நீராடியவர்க்கு முக்தியளிப்பவனுவாய்' என்று தேவர் வேண்ட முக்கண்ணனை திருவாஞ்சியேசர் 'அங்ஙனமேயாகக் கட வது' என்று கூறித்தனது இலிங்கத்தில் மறைந்தார். தேவர்களும் அவனைக்கொல்லுமளவும் அங்கு வசித்தார். பிறகு சிலநாள் கழித் துப் பஞ்சமேட்டிரன் வீரபத்திரனால் கொல்லப்பட்டபொழுது தேவர் தத்தம் இருப்பிடமடைந்தனர். நல்லவிரதமுடைய அந்தணர் காள்! உங்கட்குத் தேவதீர்த்தத்தின் மகிமையும் கூறப்பட்டது. அத்தேவதீர்த்தத்தில் நீராடியவர்க்குத திருவாஞ்சியேசர் பிறவிக் கடலினின்றும் முக்தியளிப்பதில் ஐயமே இல்லை. இந்த அத்யா யத்தை சிரத்தையுடன் படிப்பவரும் கேட்பவரும் அவர்கட்குத் துறக்கத்தில் வாசமானது நித்யமாக உண்டாகிறது. இதற்கைய மில்லை. ஏதோ பேச்சுவகையில் தேவதீர்த்தத்தின் தோற்றமும் மகிமையும் உங்கட்குச் சொல்லப்பட்டது. உங்களுக்கு மங்கள முண்டாகக்கடவது.'

[பிரம்மாண்ட புராணத்தில் பூவைகுண்டவரதராஜக்ஷேத்ர மகிமையில் சக்கர தீர்த்தம், வீரகதீர்த்தம், ராமதீர்த்தம், தேவதீர்த்தம் இவைகளின் பெருமை வருணித்தல் என்ற 93-வது அத்யாயம் முற்றிற்று.

---

## ஐம்பத்தொன்றாவது அத்யாயம்.

### திருவாஞ்சியமகிமைக்குட்பட்ட தப்ராளிகான மகிமை கூறும் பிரகரணம்.

இருடிகள் :—'சிறந்த அறிவுடையவரும் முனிவர்தலைவரும் பகவானுமான குடமுனியே! வசிட்டர் முதலிய முனிவராகிய

யாங்கள் செய்யவேண்டுவன செய்தவராயினும். திருவாஞ்சேசரைச் சுற்றி ஐந்து நாழிவழிக்குட்பட்ட ஸ்தலங்களும் தீர்த்தங்களும் யாவை? அவைகளின் பெயர்யாவை? கருணைக்கடலான முனிவரே கருணையுடன் அவற்றை எமக்குச்சொல்லவேண்டுகிறேன். சிவ தலத்தின் பெருமை கேழ்க்க விருப்பமுடையவராக இருக்கிறோம்.' அகஸ்தியர் 'சிவபக்தியில் ஈடுபடும மிக்க அறிஞர்களே! மிகவும் நன்று; சதாசிவரைப் புகழ்தலில் இத்தகைய முத்திதருவது அரிது' என்று எல்லாரையும் குடமுனி புகழ்ந்து திருவாஞ்சியத் தலத்தின் பரப்பைக்கூற ஆரம்பித்தார். 'வாஞ்சேசருக்கு வடக்கில் அக்ஷஸந்தி என்ற தலத்தில் மக்கட்குப் பயன எல்லாம் அளிப்பவரான சோமனா தர் இருக்கிறார். அததலத்திற்கு முன்பு பிராக்கிரகேசுவரர் என்ற வர் விளங்குகிறார். அந்தணர்காள்! அதற்கு முன்பு ஸாரர்ரண் யம் என்று சொல்லப்படுவது. அழகிய அத்தலத்தில் ஜகந்நாதர் இப்பொழுதும் இருக்கிறார். அவருக்கு அக்னிதிக்கு மூலையில் ககோள ஆஸ்ரமம் என்பது ஒன்று இருக்கிறது. அந்தப் புண்ணிய மான ககோளரது குடிலில் திருவாஞ்சேசர் விளங்குகின்றார். அதற்கு மேல் திசைப்பகுதியில் இருநாழி வழி தூரத்தில் மக்கட்கு எல்லாப் பயன் அளிப்பதான மலப்பொய்கை இருக்கிறது. அத்தலத்தில் அகத்யேசர் என்ற தேவர்பிரான் இருக்கிறார். இது அகத்தியரால் முன்பு செய்யப்பட்டது. பார்ப்பதனாலேயே முக்தியளிப்பது. அதற்கு ஒருநாழிவழி மேற்கிலும் திருவாஞ்சேசரது விமானத்திற்கு நிருதிதிக்கிலும் புற்றுற்றிற்குத் தெற்கில் அர்த்தப்பிரகரமாத்திரத் தில் தப்பிராளிவனம் (சிறுவண்டூர்) என்ற மிகச் சிறந்த தலம் இருக்கிறது. இது மக்களின் பாபமகற்றுவதும், திருவாஞ்சியேசருக்கு மகிழ்ச்சி விளைவிப்பதும், பார்த்ததினாலேயே முக்தியளிப்பதுமாகும். இவ்வுலகில் கடவுள் இல்லை என்பானுக்கு இது சொல்லக்கூடாது.

அச்சிறந்த புண்ணியதலத்தில் பைரவர் என்ற பெயருடைய தீர்த்தமொன்று இருக்கிறது. அத்தீர்த்தத்தில் பாபம் செய்தவனா யினும் ஒருதரம் நீராடின் தூய்மை அடைகின்றான். அது பைர வரால் செய்யப்பட்டது. கலிதோஷங்களை அழிப்பது. அத் தீர்த்தக்கரையில் பைரவர் பெரியவடிவத்துடன் கொடிய தவங்கள் தேவவருடத்தால் ஆயிரம்வருடங்கள் செய்து சிவபிரானைப் பக்தியு டன் வழிபட்டு, மிக்க மகிழ்ச்சியுடன் அனேக வரங்கள் திருவாஞ் சேசரது அருளால்பெற்று இப்பொழுதும் தியானத்திற் பற்றுடைய வராகவே இருக்கிறார்.

அந்தணர்காள்! உலகில் மக்கள் ஆஸீனபைரவரின் அருள் பெற்று இறந்தவுடன் கைலாயமடைகின்றனர்.' 'இருடிகள், எக்கார யத்தால் பைரவர் விகாரமான வடிவமுடையவராகி எதற்காகத் தவத் தால் திரேகத்தை வற்றச்செய்வதிலேயே பற்றுடையவராய் இருக் கிறார்? இவர் எந்த பரமேசுவரரிடமிருந்து வரம் வேண்டியிருக்கிறார்? இவ்விஷயங்களெல்லாம் நன்றாக ஆராய்ந்து விரிவாக எங்கட்குச் சொல்லவேண்டுகிறேன்' என்று வேண்டினர். இங்ஙனம் முனிவர் வினவிணக்கேட்ட குடமுனிவர் மனமகிழ்ந்தவராகி முனிவர் முன் னிலையில் சொல்லுவதற்கு ஆரம்பித்தார்.

'முனிவர் தலைவர்களாகிய உங்களால் நன்கு வினவப்பட்டது. தப்ராளிகானகத்தின் மகிமை புண்ணியத்தை வளர்ப்பதாகும். மேலும், இருமைப்பயனும் அளிக்கும்; சிறந்தது; சிவபிரானுக்கு பிரீதிவிளைவிப்பது; சுபமானது. திருவாஞ்சியதலத்திற்கொத்தது இருக்கவுமில்லை, உண்டாகப்போவதுமில்லை. இருந்தாலும், இத்தலத் தில் இப்புராணக் கதை ஒன்று சொல்லுகிறார்கள். அதைக் கேட் பவருக்குப் பாபம் நீங்குவதும், பிள்ளைப்பேறு முதலிய வழித் தோற்றங்கள் உண்டாவதாகும்.

முன்பு கைலாயசிகரத்தில் தாதுக்களால் பலவர்ணங்களாகச் செய்யப்பட்டதும் பல வீதிகளுடன் கூடியதும் பலவகை மரங்கள் நிறைந்ததும், காமதேனுவின் பால்பெருகி சேராயிருப்பதும், விருஷ ராஜனின் காலடிவைப்புடையதும், கங்கைப்பெருக்கால் அழகியவை களும், பொன்மலை ஒளியுடையவைகளும், சங்கு, வளை, ஆம்பல், நிறைந்தவையும், படிக்கட்டுகளுடன் கூடியவையுமான, பல பொய் கைகளால் விளங்குவதும், உருக்கிவார்த்தத் தங்கமயமான மிக அழகிய கோமுடிகளால் நிறைந்ததும், சித்தர், கந்தர்வர், வசிக்கப் பட்டதும், தேவமங்கையருடன் கூடியதும், முக்குணம் அமைந்த குளிர்ந்த காற்றுகளுடன்கூடியதுமான சுமேருவின் தாழ்வரையில் சந்திரசாலைக்கிடையில தேவியுடன் சதாசிவர் அரம்பை முதலிய தேவமங்கையருடனும் கந்தர், நந்தி முதலியவருடனும், இருந்து ஊர்வசியால் செய்யப்பட்ட நடனத்தைப் பார்த்துக்கொண்டு பல் வகை ரத்தினங்கள் பதித்த பொன்மயமான ஆதனத்தில் அமர்ந் திருந்தார். அப்பொழுது கணநாதரும், சிவவடிவருமான பைரவர் அங்கமுழுதும் திருநீறுபூசியவரும், அரவக்குண்டலமுடையவரும், முப்புண்ட்ரமணிந்த அழகிய முகமுடையவரும் பார்வதிக்கு கண வரும் சங்கருமான சிவபிரானைக் கை குவித்துக்கொண்டு வணங்

கினர். அறிவுவடிவரும் தொண்டரன்பரும், எல்லாவற்றிற்குத் தலைவனும், அருளுறையுறும் எனதெண்ணம் நிறைவேற்றுபவரு மான சதாசிவவிபுவே! உமக்கு வந்தனம். உம்மைச் சரண்புகுந் தேன். பார்வதீ கணவனே! படைப்பின் ஆதியில் தேவர்களாகிய இந்திரன் முதலிய உலகக் காவலருக்கும் எனக்கும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. தேவரீர் என்னைக் குறித்து "நீ சிவதலத்தில் மரித்தவருக்குத் துன்பம் செய்வாய்; அதாவது தாதுக்களெல் லாம் தீயிற்போட்டவுடன் தூய்மை அடைவதுபோல் பாவிகளை உனது சூலத்தால் தூய்மைப்படுத்துவாய்" என்று உத்தரவிட்டீர் கள். ஆதலால் சம்புவே! (உமது ஆணையைக்கொண்டு) தேவர் தலைவனான சங்கரனே! அதுமுதல் பிராணிகள் என்னால் வருத்தப் படுகின்றனர். பிற உயிர்களை வருத்தாமைதான் சிறந்த தர்மமும், சிறந்த தவமும், சிறந்ததானமும், சிறந்த அருளும், சிறந்தவேள் வியும், தீர்த்தசேவையும், சிறந்த யோகமும், சிறந்த சுகமும், சிவ பக்தியும், சிவபூஜையும் பிதுர்க்களின் மகிழ்ச்சியும் ஆகுமென்று முனி வர் தேவர் யாவரும் கூறுகின்றனர். சங்கரனே! அப்பாவசாந்தி யை விரும்புகின்றனனாதலால் எனக்குச் சற்று ஓய்வு கொடுக்க வேண்டும். ஈசுவரன், பைரவனே நன்றாகக் கேட்டாய். உனக்கு மங்களமுண்டாகக் கடவது. எனக்கு பக்தனும் நல்விரதமுடைய வனும் ஆயினை. தன்னலமாத்திரமன்றியும் உலகின நலத்துக்கா வும், இங்ஙனம் கேட்டாய். கணங்கள் தலைவனே! இப்பொழுது யான் கூறுவதைக் கேட்பாயாக. மேருவின் தெற்கில் நாவலன் தீவு விளங்குகின்றது. அது லக்ஷம் யோஜனை பரப்புடையதும் தேவர், விலங்கு மக்களால் இரட்டையாக நிறைந்ததாயுமிருக்கிறது.

அத்தகைய அழகிய நாவலன் தீவின்கண் கீர்த்தியில் இக்கங்கை யானது பெருகுகின்றது. இது முக்தியளிப்பதாகும். கங்கைக் குத் தோழிகளான சரயூ, யமுனை, நருமதை, சரஸ்வதீ, கிருஷ்ண வேணி, துங்கபத்திரை, கௌதமி, காவேரி, இவைகள் முக்தி அளிப்பதாகும். அங்ஙனமிருந்தபோதிலும் காவேரியின் பெருமை யை உனக்குச் சொல்லுகிறேன். கங்கைக்கரையில் மூன்றுநாள் வசிப்பவருக்குத் தூய்மை உண்டாகுமென்று சொல்லப்பட்டிருக் கிறது. காவேரிக்கரையில் ஒரு க்ஷணப்பொழுது வசித்தாலும் உடனே மரணம் வரையில் தோன்றும் பாவங்களெல்லாம் நீங்கு கின்றன. இக்காவேரிக் கரைக்கும் மிகுந்ததொரு ஆச்சரியமிருக் கின்றது. காவேரியின் இருகரையிலும் ஆறாயிரம் தலங்கள் கலி

மலங்கடிவதாக இருக்கின்றன. அத்தகைய எனது ஆறாயிரம் தலங்களிலும் காசிக்கொத்த தலங்கள் ஆறு இருக்கின்றன. அவ்வாறு தலங்களுக்குள்ளும் காசிக்கு மேற்பட்டதாகச் சிறந்தது ஒன்று இருக்கிறது. காவேரியின் தென்கரையில் இருயோஜனை தூரத்தில் கலிதோஷங்கடிவதான பூகைலாயம் என்றவொரு தலமிருக்கின்றது. காசியிற் சிறந்ததும், தாமரைக்காடுகள் நிறைந்ததுமான பூபாகத்தில் கங்காபுஷ்கரணி என்னும் மூவுலகிலும் புகழப்படும்படியான புண்ணியாப்ஜநளினி விளங்குகிறது. அப்புண்ணிய புஷ்கரணியின் தென்கரையில் அழகிய இடத்தில் எனது சிறந்த ஜோதி வடிவமான லிங்கமிருக்கிறது. அது மேற்கு முகமாக இருக்கின்றது. தரிசிப்பதனாலேயே மக்கட்கு முக்தியளிப்பதாகும். அந்த லிங்கத்தின் மேற்கில் நிருதி திக்கில் எனக்குப் பிரியமான தப்ராளிவனம் இருக்கிறது. அது வண்டுக்கூட்டங்கள் நிறைந்ததும், பலவகை மரங்கள் நிறைந்ததும், பலவகைப் பறவைகள் நிறைந்ததுமாயிருக்கின்றது. அந்த எனது தலஞ்சென்று வலிய விரதம் மேற்கொண்டு தவம் செய்வாய்.

மாணவனே! என்னைப்பற்றிய தவத்தாலும், நியமத்தாலும் துதியாலும், திருவாஞ்சியத்தில் என்னை வழிபடுவதாலும் பாபக்கூட்டத்தினின்றும், விடுபடுவாய்.' இங்ஙனம் சிவபிரானது மொழியைக் கேட்ட பைரவர் மகிழ்ந்து வேறிடத்தில் புத்திசெல்லாதவராகிச் சதாசிவனைத் தண்டாகாரமாகப் பூமியில்வீழ்ந்து வழிபட்டுப் பூகையாலத்தைக்குறித்துப் புறப்பட எண்ணினார்.

[பிரம்மாண்டபுராணத்தில், திருவாஞ்சியப் பெருமையில் தப்ராளிவனப்பெருமை கூறல் என்ற பன்னிரண்டாம் அத்யாயம் முற்றிற்று.]

---

## ஐம்பத்திரண்டாவது அத்யாயம்.

அகத்தியர் :—' அந்தணர்காள்! மீண்டும் தப்ராளிவனத்தின் பெருமையைப் பைரவரருளால் சிரத்தையுடையவராகிக் கேட்பீராக. அப்பைரவரும் கதையேந்தியவராகிக் கைலாயத்தினின்றும், சூரியன் உதயகிரியினின்றும்போலக் கிளம்பித் தெற்குமுகமாக நின்று நாற்றிசையினும் கணபரப்பினார்.

அந்தணர்காள்! காசிக்குங் கைலாயத்திற்குமொத்த பலதலங்களையும் அப்பைரவர் தரிசித்துக்கொண்டுவந்து அங்கு மாகிஷ்மதிக்

கரையில் சிவபிரானுக்குப் பிரியமானதும் காசி, கைலாயங்கட்கு ஒத்ததுமான "மகாகானம்" என்னும் தலத்தைக்கண்டார். காவிரி திக்கரையில் முக்தியளிப்பதான மதுரை காசிக்கொத்ததாக விளங்குகிறது. அதன்கண் சிவபிரான் தானே எழுந்தருளியிருக்கின்றார். கோதாவரிக்கரையில் எல்லாவற்றிலுமுயர்ந்ததான திராக்ஷாக்காடு என்ற ஒரு சிவதலமிருக்கின்றது. அங்கு பிரார்த்தித்த மாத்திரத்தாலேயே முக்தியளிக்கும் "ஸ்ரீசைல" சிகரமிருக்கின்றது. நந்தியானவர் பழங்களை எல்லாமுண்பது பிரத்யக்ஷமாகத்தெரிகின்றது; பார். சுவர்ணமுகிக்கரையில் "காளஹஸ்தி" என்றதொரு சிறந்த தலமிருக்கின்றது. ஞானபுஷ்பாம்பிகையுடன் கூடிய அவரது லிங்கம் விளங்குகின்றது. அங்கு யானைத்துதிக்கை அளவான ஆகாயலிங்கத்தில் சிவபிரான் வசிக்கின்றார். அந்தத் தலங்களைப் பைரவர் தெரிசித்தபிறகு, பாலாற்றங்கரையில் அழகியவிடத்தில் காசிக்கொத்த சிறந்த "காஞ்சி" என்னும் நகரத்தைப் பார்த்தார். இங்கு உலகத்தலைவர் மாமரத்தடியில் வசிப்பதால் இஃது அவருக்கு உயிருக்கொத்த தலமாகி இருக்கிறது. மிக விளக்கமான கம்பைக்கரையில் கருணைவடிவுடைய காமாக்ஷி தேவியானவள் தொண்டரிடத்தன்பு பூண்டவளாகி உலகு காக்கவேண்டி, அங்கு இருக்கிறாள்.'

பைரவர் அழகிய ஏகாம்பர லிங்கத்தையும், காமாக்ஷியையும் தரிசித்து வணங்கி காசி கைலாயத்திற்கொத்த அயன்புறம் வந்து, மார்க்கசகாய லிங்கத்தைத் தரிசனம்பண்ணினர். பிறகு அருணாசலஞ்சென்று தனதுவேண்டுகோள் நிறைவேற மலையைவலம் வந்து, சிவபிரானை மகிழ்வித்து, மணிமுக்தாநதிக்கரையிலுள்ள விருத்தாசலம் சென்று விருத்தாம்பிகையுடன்கூடிய விருத்தாசலேச்வரரை மீண்டும் மீண்டும் வணங்கிப் புண்ணியத்திற்சிறந்த காவேரியின் வடகரையில் சிதம்பரத்தில் மக்கட்கு அறிவளிப்பதான "ஞானசபை" இருக்கிறது. இச்சிற்சபையைத்தரிசிப்பவர் முக்தராவதில் ஐயமின்று. சிவதேவபிரானதுச் சிதானந்தத் தாண்டவத்தையும், சிதம்பர சபாம்பிகையான தேவியையும் தரிசிப்பவர்க்குச் சிதானந்தம் தோன்றுகிறது. மேலும் அக்கணத்திலேயே மூவகைத்தான ஆனந்தமும் உண்டாகின்றது. அதற்கறிகுறி மயிர்க்கூச்செறிவதாகும். அங்கு பைரவர் சிவகங்கையில் நீராடி மனந்தூயவராயும் புலன்வெல்பவராயுமாகி அடிக்கடி சிவகாமேசுவரியையும் எல்லோர்க்கும் உயர்ந்தவரான ஸ்ரீ மூலேசரையும் வணங்கித்துதித்துத் "திருவெண்காடு" சென்று

காவேரியின் தென்கரையில் காசி கைலாயத்திற்கொத்த "சாயாரணியம்" என்ற சிவதலத்தையுந்தெரிசித்துப் பெரியகுடபுரமும் தெரிசித்தார். பிறகு காசி கைலாயத்திற்கொத்த கைலாயவனத்தையும், வன்மீக கானகத்துக் கமலாலய நாதரையும், கடலுக்கு மேற்றிசையிலிருக்கும் வேதாரண்யத்தையும், தாமிரபரணி நதிக கரையிலிருக்கும் கைலாயமென்று பெயருள்ள திருநெல்வேலீச்வரரையும் தரிசித்து அவருக்கு ஈசான்யத்திசையிலிருக்கும் ஜீவன் முக்திபுரம் வேகமாகவந்து, பைரவர் மகிழ்நது பொற்றாமரையில் நீராடி மீனாக்ஷியுடன்கூடிய பிரபுவை வணங்கித் துதித்துப் புறப்பட்டு நடுக்காவேரியையும் ஆனைக்காவையும், சப்பேசத்தையும் (ஐயாறு) தெரிசித்தார். இவை தரிசித்த மாத்திரத்திலேயே, பாபங்கடியுஞ் சிறபபு வாய்ந்திருககின்றமையின் காசிகைலாயங்கட்கொத்திருக்கின்றன.

ஆதலின் பைரவர் தெரிசித்தார். மேலும் காவேரியின் தென்கரையில் கைலாயத்திற்கொத்த கும்பகோணம் என்ற சிறந்த தலத்தையும், கும்பகோணத்திற்குக் கிழக்கே காவேரியின் தென்கரையில் காசிக்கொத்த சிறந்த மததியார்ஜுனத்தையும் திருமங்களநாயகரையும், மாங்காட்டையும், வாகீசரையும், கைலாயததிற்கொத்த முக்கோடி குடந்தோன்றிய தலததையும், ஆச்சரியமான கைலாயத்திற்கொத்த திருப்பனங்காட்டையும், கானநர்த்தன சங்கரரையும் தரிசித்துக் கைலாயத்திற்கொத்த சிறந்த கௌரிமாயூரத்தையும் தரிசித்து, காவேரிதென்கரையில் இருயோஜனை தூரத்தில் திருவாஞ்சியமென்ற சிறந்த தலமிருக்கிறது. அது காசிக்குமேற்பட்டது. அது விசுவநாதருக்கு மகிழ்வுண்டாக்குவது; அங்கு பைரவர் சென்று அறுபத்தாறுகோடி தீர்த்தங்களுக்குள் மிகச் சிறந்ததான தீர்த்தத்தில் நீராடி, தெள்ளறிஞராகி, மேற்குமுகமான திருவாஞ்சியேசரது லிங்கத்தையும், வாழவந்த நாயகியையும்வலம்வந்து வணங்கி விதிப்படி வழிபட்டு, லிங்கத்திற்கு மேற்கே நிருதி திசையில் சென்று பொன்வண்டுகள் நிறைந்த சிறுவண்டூர் அடைந்து சிவபிரான் வெள்ளி மலையில் குறிததபடி இருயோசனை தூரத்திற்குச் சுற்றிப்பார்த்தார். திருவாஞ்சிய விமானததைச்சுற்றி ஆறுதலங்கள் காணப்பட்டன. மேலும் தனது சூலத்தாலுண்டாக்கப்பட்டதும், இரத்தினப் படிக்கட்டுகள் அமைந்ததுமான தீர்த்தமொன்று காணப்பட்டது. அத்தீர்த்தத்திற்கு மேற்கில் தவஞ்செய்ய உயர்ந்த தலமிருந்தது. அதன்கண் லிங்கததை ஆதரவுடன் கூறியபடி,

பிரதிட்டைசெய்து, முக்காலத்திலும் வழிபட்டு, முனிவர் கொண்டுள்ள நியமங்களெல்லாம் மேற்கொண்டு எப்பொழுதும் பஞ்சாக்னி மத்தியிலிருந்து கால்கட்டைவிரலால் நின்றுகொண்டு, இரவில் ஆம்பலைப்போலவும் பகலில் தாமரைபோலவும் கண்ணமைத்துக் கொண்டு, இருதயம், கழுத்து, கன்னம், புருவத்திற்கிடை முதலிய பனிரண்டந்தமான இடங்களிலும், சிறிதுங் கண்ணயராது தேவர் தேவனும் மகாதேவனும், முப்புராரியும், ஈசுவரனும், நீலகண்டனும், வேறுபாடான கண்ணுடையவரும், உமைக்குப் பாதிவுடலை தந்தவரும், யமனைவென்றவருமான சிவபிரானைத் தியானித்து, இலிங்கத்தில் முக்காலத்தும் பாவமான இருக்கும் கணங்களாலும் உருத்திர ஸூக்தங்களாலும், அதர்வணங்களாலும், சதருத்ராதி மந்திரங்களாலும், ஒவ்வொரு பொருளுக்கும் ஆயிரம் முறை சிவபிரானது மகிழ்ச்சிக்காக அங்கியில் ஓமம் செய்தார். அப்பைரவர் ஒருவருக்கும் தெரியாமல் பொன்வண்டின் வடிவமெடுத்து ஆயிரம் வருடம்கொடிய தவஞ்செய்தார். அதன் பெருமையால் மகாத்மாவான பைரவரது பிரம்மரந்திரத் (தலையினுச்சியிலிருக்கும் ஒரு நாடி) திலிருந்து தீயானது கிளம்பித் தேவலோகஞ்சென்று இந்திரன்முதலிய தேவரிடம் பரவிற்று. அதனைப்பார்த்து தேவரெல்லாம் பயந்து மிக்க வியந்த மனத்துடன் உலகநன்மையறியுஞ் சங்கரரை அடைந்து ஒவ்வொருவரும் தனித்தனி வணங்கினர். மேலும்தமதுறைவிடத்துக்கு ஏதாவது அழிவுநேருமோ என பயங்கொண்டு சிலர் கூறினர். தேவர்கள் உலகுக்கெல்லாம் தலைவனும் தொண்டரருள் புரிபவனும் துயருற்றோர் துன்பம் களைபவனும் ஈசனுமாகிய பிரபுவே! எம்மைக் காப்பீராக. பூவுலகில் புண்ணியபாகமாகிய நாவலந்தீவில், கலிதோஷமகற்றவல்ல திருவாஞ்சியம் என்று ஒரு தலம் இருக்கிறது. அத்தலத்திற்கு மேற்கே அருகில் சிறுவண்டூரில் பைரவ தேவர் கொடிய தவஞ்செய்து மனிதன்போல் எதற்காக உடல் வாட்டினார்? அவரது கொடுந்தவத்தால் பெருந்தீ கிளம்பி மூவுலகினையும் விரைவில் கொளுத்திற்று. அஃதாற்றாராக யாம் இங்கு வந்துற்றோம். உமது அம்சமாயும் எல்லோருக்கும் தலைவரான பைரவர் எக்காரணங்கொண்டு தவஞ்செய்கின்றார் என்றையமுற்றவராகி உம்மைச் சரணமாக அடைந்தோம் என்றனர். மாரன் பகைவனான சிவபிரான் அத்தேவரது அம்மொழிகேட்டு அப்பொழுது அத்தேவர் எல்லோரையும்பார்த்துப் பரிகசித்து உமது ஸ்தானம் போய்விடும் என்று ஐயுற அகற்றுக. பைரவரிடமிருந்து

பயமற்றவராகிச் செல்வீர் என்று கூறினர். இத்தகைய சம்புவின் மொழிகேட்டுத் தேவர் வணங்கி மனமகிழ்ந்து தம்மிருப்பிடம் சென்றனர். இங்ஙனம் தேவர்சொல்ல முக்கட்பிரான் பைரவருக்கு வரம் கொடுக்க அம்பிகையுடன் வெள்ளிமலைக்கொத்த இருடபவாகனத்தில் ஏறிக்கொண்டு புறப்பட்டுப் பைரவர் தவஞ்செய்யும் காடடைந்தார். தேவர் கூட்டத்தால் வழிபடப்பட்டவரும் பார்வதி கணவரும் பிரமத கணம் தேவர் இவர்களால் தரிசித்து வணங்கி வழிபடற்குரிய கீழலுடையவருமான பிஞகியானவர் இந்திரன் வேண்டுகோட்கு இணங்கிப் பார்வதியுடன் சிறுவண்டூர் வந்துசேர்ந்தார்.

[பிரம்மாண்டபுராணம் திருவாஞ்சியமகிமையில் சிறுவண்டூர் மகிமைகூறல் என்ற 13-ம் அத்யாயம் முற்றிற்று.]

---

## ஐம்பததிமூன்ருவது அத்யாயம்.

### பிறகு தேவபிரான் அப்பொழுது பைரவருக்கு சந்நித்யம் செய்து பொன்மலைபோல் முன்பு வந்து நின்றார்.

ஈசுவரன்:—'தேவர் தலைவனான பைரவனே! கண்விழித்து என்னைப் பார்ப்பாய். உனக்கு வரங்கொடுக்கவேண்டி இங்கு வந்திருக்கிறேன். உனக்கு நன்மை உண்டாகட்டும். எதனை நீ மனதின்கண் விரும்புகின்றனையோ அதனைக் கொடுக்கிறேன். இதன்கண் ஐயமின்று' என்று கூறினர். பைரவர் பரவசிவனது இத்தகைய மொழிகேட்டு மகிழ்ந்து பரபரப்புடன் எழுந்து நின்று சனகாதி முனிவர், சிறந்த யோகிகள், இந்திரன் முதலிய தேவர், சிறந்த முனிவர், கந்தர்வர், தேவர், சித்தர் ஆகிய இவரால் தனித்தனி துதிக்கப்படுபவரும் நந்தி பிருங்கி முதலிய கணதிபதிகளால் சேவிக்கப்பெற்றவரும் இருடிகளால் முதன்மையான தேவதுதி கொண்டு துதிக்கப்பட்டவரும் பிரம்மவாதிகளால் துதிக்கப்படுபவரும் முன்பக்கத்திலிருப்பவரும் முப்புராரியுமான ஈசனைக் கண்டு தலையாலும் முக்கரணங்களாலும் வணங்கினர். அங்ஙனம் பைரவர் வணங்கிப் புராண வாக்கியங்களாலும் இனிய ஸ்மிருதி மொழிகளாலும் மற்றும் பல வசனங்களாலும் முறைப்படி துதிக்க ஆரம்பித்தார். தலைவரும் உலக குருவும் மகாதேவேசரும் தேவோத்தமரும் உயிருக்கு ஆதாரமானவரும் எல்லாப் பிராணிகளின் ஹிருதய கமலத்துள்ளே ஜீவாத்மாவிற்குள் விளங்குபவருமான தேவரீர் அண்டங்கள்தோறும் அயன் அரி அரன் வடிவம் பெற்றிருக்கிறீர்.

அத்தகைய மும்மூர்த்தியானவரே! தேவரீர் உயர்ந்த சக்தியுடன் கூடியிருக்கின்றீர். யாவரும் வணங்கும் உம்மை என் மனதில் தியானிக்கிறேன். தேவரீர் ஆகாயம், காற்று, தீ, நீர், பூமி, சூரியன், சந்திரன், ஆகிய வடிவம் பெற்றிருக்கின்றீர். பிறைசூடியே! நீர்தான் யாவுமறிந்தவர். உமைக்குக் கணவருமாய் இருக்கின்றீர். அன்றியும் தேவரால் வழிபடக் கறியார். மேலும் ஆத்மாவாகவும் இருக்கிறீர். உலகத் தலைவரும் பசுபதியுமான சிவபெருமானே! உமக்கு எப்பொழுதும் வந்தனம். தேவரீர், முருகர் விநாயகர்கட்குத் தந்தையாக இருக்கின்றீர். முனிவர் தொழும் பாதபங்கயமுடையவனும் பல்வகை முடிவின் சிறந்த பொருதிற்றேனறியவரும் பக்தர் வழிபடுதலால் முக்தியளிப்பவரும் சிறந்த ஜோதி வடிவருமாக இருக்கின்றீர். லக்ஷ்மி, சரஸ்வதி இவர்களால் வணங்கப்படுகின்றீர். பார்வதிக்கன்பரான உமக்கு வந்தனம் செய்கின்றேன். பிராணிகளை வருத்தும் பாவக்குழுகுலைய உன் பாதாம்புயம் தெரிசித்தலும் ஓர்முறை உமது பெயர் கூறலும் கழுவாய் ஆகுமென முனிவர் உமது ஆணையான் சாத்திரவிதிப்படி கூறினர். வேதமெல்லாவற்றிலும் துதிக்கப்படும் ருத்திரனும் கௌரி கணவனுமாகிய திருவாஞ்சியேசுரனே! உமதிரண்டு தாளிலும் மனமதை வைத்துக்கொண்டு உமது தாள்களில் விழுந்துவிட்டேன். அருட்கடலே! என்னைக் காப்பீராக. ஜீவாதமாவாயும பிராணிகளது ஹிருதயத்தில் இருப்பவராயும் எல்லாம் அறிந்தவராயும் சித் அசித்தாகிய உலககாரணமாயும் இருக்கிற உமக்கு எப்பொழுதும் வணங்குகின்றேன்.' இங்ஙனம் பைரவர் துதித்து, 'தேவர்தலைவா! உமக்கு வந்தனம். 'தேவர்தலைவா! உமக்கு வந்தனம்! உமது கழலிற் சரண் புக்க அடியேனைக் காப்பீராக' என்று வேண்டினர்.

ஈசுவரன்:—'வீற்றிருக்கும் பைரவனே! யான் கொடுப்பதைக் கொள்வாய். திருவாஞ்சியத்திற்கிடையிலிறக்கும் உயிர்கட்கு மீண்டும் அநாதியாகப் பாவமில்லாதிருப்பதால் துன்பம் சிறிதளவுமில்லை. திருவாஞ்சேசர் அருளால் புண்ணியமே வளர்கின்றது. ஆதலால் அங்கு இறந்தவர்க்குச் சௌக்யமே தவிர துக்கமே கிடையாது. இத்தலமல்லாதவிடத்தில் மரிப்பவருக்குப் பைரவரது ஆணையால் தேவமானப்படி மூன்று வருடங்கள் சூலத்தினின் [illegible]யிலிருப்பது உண்டாகின்றது. பைரவனே! சம்புவை மனதில் தியானித்துக்கொண்டு கவலையற்றவனாக இருப்பாய். உனக்கு உயிர் வருத்தம் குற்றம் எனது ஆணையால் இல்லை. பைரவனே! கேட்பாய். எனக்கு உன்னிடத்தில் அன்பு இருக்கவே இருக்கிறது'

என்று பரமசிவன் கூறி அக்கணத்தில் லிங்கத்தில் மறைந்தார். அதுமுதல் பைரவர் சிவாக்ஞையைத் தலைமேற்கொண்டு உயிர்களை ஓரிடத்திலும் வருத்தாமல் தவத்தை விட்டு விட்டு சிவத்யானத்தையே மேற்கொண்டு துன்ப மின்பங்களில் வேற்றுமையற்றவராயும் உயிர்களிடத்தில் அருள் பாராட்டுபவராயும் சிவபிரானால் ஏவப்பட்ட கருமங்கள் செய்பவராயும் சிவனுக்கொத்தவனும் ஆயினர். இந்த ஆச்சரியமான சரிததை படிப்பவரும் கேட்போரும் பைரவன் அருளால் ஜீவன்முக்தர் ஆகின்றனர்.

[பிரம்மாண்ட புராணத்தில் திருவாஞ்சிய மகிமையில்
தப்பாளி வனத்தின் பெருமை கூறல் என்ற 14-வது
அத்யாயம் முற்றிற்று.]

# ஆக்னேய புராணம்.

## ஐம்பத்திநான்காவது அத்யாயம்.

இருடிகள்கூற்று :—'புராணங்கூறுபவருட் சிறந்தவரும் சாத்திர மெல்லாம் நன்கறிந்தவருமான சூதரே! உமது முகத்தாமரையி னின்றும் கதையாகிய தேன் மிகப் பருகிறோம். புண்ணியம் வளர்ப் பதாகச் சரிதம் கூறவேண்டுகிறேன். மகேஸ்வரர் முன்பு கைலாய சிகரத்தை விட்டு ப்ராகிருகஞ் சென்றதாகக் கூறியருளினீர். அதனை அருளிருப்பின் எங்கட்கு விவரித்துக் கூறவேண்டுகின்றேன்.'

சூதர் :—'இருடிகாள்! பாவம் யாவும் கடியும் சுபமான பார்வதி ஈசரது சம்வாதத்தை வியாஸரிடமிருந்து யாம் ஆதரவுடன் கேட்டோம். அதனை இப்பொழுது உங்களுக்குக் கூறுகின்றேன். முன்பு பார்வதியானவள் பகவானுன மகேஸ்வரனைப பார்த்துக் காரணத்துடன் கூடியதும் இதிஹாஸத்துடன் கூடியதுமான பழைய தொரு சரிதம் வினவினள். 'தலைவ! இக்கைலாயம்விட்டு வேறு எங்கு செல்லுகின்றீர். இதனினும் சிறந்தது வேறு இருப்பின் கூறவேண்டுகிறேன். பிறைசூடியே! கைலாயத்தினும் சிறந்ததும் அணிகலம் எல்லாம் விளங்குவதுமாய் இருப்பது யாது? பக்ஷ பாதமின்றி சொல்லவேண்டுகிறேன' என்று இங்ஙனம் பார்வதி வேண்ட அருட்கடலான சம்புவானவர் பிரசன்னமாகிப் பார்வதியைப் பார்த்து அருளுடன் கூறினர்.

ஈஸ்வரன் :—'பார்வதி! மிகத் தூயதும் ரகஸ்யமானதும் கைலாயத்தைவிட முதன்மையானதும் தலங்களெல்லாவற்றைக் காட்டிலும் முக்தியளிப்பதும் இப்புவியில் யோகப் பிரசித்தமான காசி முதலிய தலங்களுக்குள் சிறந்ததும் மூவுலகிலும் இணையற் றதுமான பிராகிருகம் என்பது சிறந்த தலமாகுமென்று அறிந்து கொள். அழகியே! அதனைக் கேட்பாயாக. இதனைக் கேட்பதால் பாபமழியும் தன்மை யாவும் உண்டாகும். மக்கட்குச் செல்வ மெல்லாமுண்டாகும். புழுக்களும் முக்தியடையும். பெரிய வியப் பான சரிதமொன்று சொல்லுகிறேன். விந்திய தேசத்தில் பிங்கலன் என்ற ஒரு அந்தணன் இருந்தான். அவன் ஊழ்வினைப் பயத்தால் பறைச்சியுடன் கூடி ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குமாக நீண்டகாலம் அலைந்துகொண்டு அவளுடன் மகிழ்ந்து அப்பிராகிருத லிங்கத்தின் சன்னிதியில் வசிக்க எண்ணி மறுநாள்

பர்ணசாலையொன்றமைத்து, பிறவுயிர் கொன்று, ஊனுண்டு, வழிப் பறித்தல், முதலியன செய்து அத்தலத்திலேயே அவளுடன் வசித்துவந்தான். இங்ஙனமிருக்கையில் அவனுக்கு அவளிடத்தில் இரண்டுபிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டாயிற்று. அவ்வந்தணன் அப்பெண்ணை வளர்த்து யௌவனபருவம் அடையுங்காலத்து அவ ளிடம் மோகித்து அவளை மனைவியாக்கிக்கொண்டு, கூடி, கட்குடியிற் பற்றுடையவனாயினன். அவன் எப்பொழுதும் விளையாடுவதும் பிற வுயிர் வருத்துவதுமே செய்துவந்தான். அவன் தனது பெண்ணி டத்தில் மூன்று பிள்ளைகளை உண்டுபண்ணினான். இங்ஙனம் அவன் பாபத்தொழிலின்கண்ணே பற்றுடையவனாகி இருக்கையில் தெய்வச் செயலால் ஆயுள்குறைய இறந்தான். அப்பொழுது எமதூதர் தண்ட பாணிகளாயும் பாசத்தைக் கையிலேந்தியவராயும் மிக்கக் கோரமான வடிவமுடையவராயும் பயமுறுத்துபவராயும் தனித்தனி 'இவனைக் கொல்லுங்கள், பிளவுங்கள், வெட்டுங்கள், உடையுங்கள், அறுங்கள், வற்றச் செய்யுங்கள், பிழியுங்கள்' என்று சொல்லிக்கொண்டு பாசக் கயிறுகொண்டு அவ்விழிந்த அந்தணனை வலுவாகக் கட்டி எமலோ கம் சென்றனர். அப்பொழுது இடைவழியில் சிவகணங்கள் சிறந்த விமானம் எடுத்துக்கொண்டுவந்து யமதூதரால் கட்டுண்டுகிடக்கும் சண்டாளத்தன்மை அடைந்த அவ்வந்தணனைப் பார்த்து, எமதூத ரை அச்சுறுத்தி 'அவனை விரைவில் விட்டுவிடுங்கள், விட்டுவிடுங் கள்' என்றனர். மிக்க வன்மையுடைய எமதூதர் அவர் மொழி கேட்டும் அவர்களையெல்லாம் கவனியாமல் எமபுரம் சென்றனர். சிவதூதர் சினத்தாற் கண்சிவந்து 'விடுங்கள் விடுங்கள்' என்று மிக்க கோபத்துடன் உதறி எறிந்து அப்பறைச்சி கணவனை விமானத்தில் ஆதரவுடன் ஏற்றிவைத்துக்கொண்டு திசைகளெல்லாம் ஒளிபரவச் செய்து ஆகாயமார்க்கமாகக் கைலாசம் சென்றனர். உடனே எம தூதர் விரைவில் ஆயுதந்தரித்தவராகிச் சிவதூதரிடம் கதை, பரி கம், தோமரம் இவைகொண்டு போர் நிகழ்த்தினர். சிவதூதரும் எமதூதரும் ஒருவர்க்கொருவர் மயிர்பிடித்துச் சண்டைசெய்தனர். எமதூதர் மர்மஸ்தானங்களில் பலமாக அடிபட்டு மிகப் பயங்கரமான போர் நிகழ்த்தினர். அவ்வமயம் கிங்கரர்களிற் சிலர் தலை அறுபட் டவரும், சிலர் கை அறுபட்டவர்களும், சிலர் மார்பு அறுபட்ட வர்களும், சிலர் அங்கங்குறைந்தவருமாகி பயந்தோடி எமனருகிற் சென்று, 'கொல்லப்பட்டோம்' என்று மயங்கி வீழ்ந்து நடந்ததெல் லாம் தெரிவித்து 'யாம் தலைவனுடையவராயிருந்தும் காக்கப்படா

மற்போய்விட்டோமல்லவா' என்று மனம்நொந்து அழுதார்கள். அச் சிவகிங்கரரும் அவனைத்தூக்கி விமானத்தில் வைத்துக்கொண்டு சிவ பிரானிடத்திற்சென்று எல்லாம் தெரிவித்தனர். சிவபெருமானும் நடந்ததெல்லாம் பார்த்தும் கேட்டும அவ்வந்தணரது முன்னைய பாபமயமான கதியை நீககி அவனை வாசனையொளி உடையவனும்பட செய்தார். அவ்வந்தணனும் சிவபிரானிடமிருந்து காணுபத்தியம் பெற்று அவர் திருவடிகளிற் வணங்கி 'யமதூதரிடமிருந்து எம்மைக் காப்பீராக' என்று இனிய எழுத்தமைந்த வாக்கியங்களைக் கூறி னன். அவன் இங்ஙனம்கூறிச் சிவபிரானிடமிருந்து விமானம் பெற்று மகிழ்ந்து சிறந்த விமானத்தில் ஏறித் தேவமங்கையர் புடை சூழத் தடையற்றவனுகிக் காரணமில்லாமல் சஞ்சரித்தான். யமன் தூதர் மொழிகேட்டுக் கோபத்துடன் உதடு துடித்துக்கொண்டு சித்ரகுப்தனைப் பார்த்து 'இவ்வந்தணன பறைச்சியையே பெண் டாண்டு பிறந்ததுமுதல் பாபத்தையே ஈட்டியிருக்கின்றான். இவ னுக்குச் சிறந்த புண்ணியமில்லாவிடில் இத்தகைய வலிய சிவலோ கம் கிடைக்காது. இதனை ஆராய்ந்துபார்த்துச் சொல்வாய்' என்று கூறினன. இத்தகைய மொழிகேட்ட சித்ரகுப்தன அறிவோனாத லின் இதழையெடுத்து விரைவிற்பார்த்துக் கூறினன். 'இவன மிக்க பாபியாயிருத்தலின் தர்மத்தில் புத்தி செல்லவில்லை. மேலும் இவன் பறைச்சியுடனும அவள் பெண்ணுடனும கூடி அவ்விருவ ரிடமும் மக்களைபெற்றுக்கள், ஊன் இவற்றையும உண்டிருந்தான். இவன் பிறந்ததுமுதல் உயிர்க்கொலை செய்பவனே யாவான். மகா பாபத்திற் பற்றுடையவன். பிரபுவே! அவனுக்கும் புண்ணியமா வது நல்வினையாவது இருக்கின்றதா என்று எனக்குத் தெரியாது' என்றிங்ஙனம் சித்ரகுப்தன் கூற எருமை ஊர்தியனான யமன் கையைக்கொட்டி மிகுந்த கோபத்துடன சிவபுரம சென்றான். அந்த யமன அக்கணத்திலேயே சனகர் முதலிய முனிவராலும் கங்கை முதலிய நதிகளாலும் சூழப்பட்டுப பார்வதியுடன் கூடிநிற்கும் பரம சிவனைப் பார்த்து எல்லாத் தேவவடிவான அவர் கால்களில் தனது பட்டம் கண்டம் முத்திரை இவைகளை போட்டு மிகக் கலங்கி வணங்கிச் சிவபிரானைக் குறித்துக் கூறினன. 'அருட்கடலும் நாத ரும் விபுவுமான தேவரீர் கட்டளையிடுபவராய் இருக்கக் கரை கடக்குமாயின் எல்லாம் கடந்ததாகும். காற்றுவீசாது. வெய் யோன் இருளகற்றான். அங்கியும வெம்மை நீங்கிக் குளிர்வடை யான். இவன் பிராம்மணஜாதியிற் பிறந்து பதிதனுகிப் பறைச்சியு டனும் அவள் பெண்ணுடனும் கூடிக்கலந்து மக்களையும் உண்டு

பண்ணிக்கள் ஊன் இவற்றையே ஆகாரமாகக்கொண்டு பிறந்தது முதல் உயிர்நீங்கும் வரை பிறவுயிர் கொல்பவனும் மகா பாபத்திலேயே பற்றுடையவனுமாக இருந்தான். அங்ஙனமிருக்க இவன் இங்ஙனம் சிவலோகம் அடைந்து காணபத்தியம் பெற்றான். தேவ பிரானே! புண்ணியமற்றவனுக்குக் கதி இத்தன்மையதாயின் எனக்கு அதிகாரம் தன்வயமாதல் வேண்டாம். உமது முன்பு வைத்துவிடுகின்றேன்' என்று யமன் கூறினன். இம்மொழிகேட்ட ஸ்ரீகட்டேசபிரான் சமாதானத்தைமுன்னிட்டுப் புன்சிரிப்புடன் யமனைப் பார்த்துக்கூறுவார். 'தண்டபாணியும் அந்தகனுமான யமனே! பிராகிருதேசரது மகிமையாலும் அத்தல வாசத்தாலும் அக்கோயிலைப் பெருக்கியதாலும் மதுதீர்த்தத்தில் நீராடியதாலும் சிவலோகம் சேர்ந்து காணபத்தியம் அடைந்தான்.

'ஏகாந்தமான தரிசனத்தாலும் முக்தனாவதில் வேற்றுமையின்று. மக்கள் கோடி பிறவிகளிற் செய்த பாவத்தையும் சூலடங்கரைத் தரிசிப்பதால் ஒரு கணத்திற்குள் உதறி எறிந்து சிவலோகம் பெறுவார். அஃது எதனாலென்றால் ஆதிகாலத்தில் அங்கு யான் சாந்நித்யம் செய்த ஆற்றலாலேயாகும். நான்கு வருணத்தில் யாவனாயினும் பறைச்சியுடன் கூடியும், கட்குடித்தும், பாஷாண்டி தருமம் மேற்கொண்டிருப்பினும் எனதருகில் வந்து ஒரேகண நேரம் விளையாடிக்கொண்டிருந்து போவானாயின் அவன் பாபியாயிருந்த போதிலும் சூலதபனாகி முக்தியடைகின்றான். சிவதலத்தில் வசிப்பவனுக்கு இத்தகைய பெருமை இருக்கின்றதென்றறிந்து எனது வடிவு பெற்ற அவரை வணங்கி இஷ்டப்படிச் செல்வாய். சிவதூதர் செய்த குற்றம் பொறுப்பாய். தண்டம், பட்டங்கள் கைக்கொண்டு விரைவிற் செல்வாய்' என்று பரமசிவன் கூறினார். இதனைக் கேட்ட யமன் சைவ மகிமையுணர்ந்து மீண்டும் சிவபிரானை வணங்கிச் சித்ரகுப்தனுடன் சம்யமினி (யமபுரம்) குறித்துச் சென்றான்.

முனிவர்காள்! ஒருநாளாயினும் பிராகிருதேசரைத் தரிசித்தவன் பாபங்களினின்றும் முக்தனாகிச் சிவனுடன் மகிழ்கின்றானாதலின் நீவிரும் பாபம் நீங்க ஆண்டு வசிப்பீர்களாக.

[ஆக்னேயபுராணத்தில் பிராகிருதேச்வர மகிமையில் 21-வது அத்யாயம் முற்றிற்று.

## ஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

சூதர்:—'முனிவர்காள்! கவனமான மனத்துடன் கேளுங்கள். மல்லிகை, ஜாதி, அரளி, துரோணம் இவைகளின் மலர்களும் செங்குவளை மலர், மிக்க நறுமணம் வாய்ந்த ஆம்பல்மலர், தாமரை, கருநெய்தல், வாஸந்திமலர், பாதிரிமலர்கள் ஆகிய இம்மலர்கொண்டு பிராகிருதகேசரைப் பூஜித்து நைவேத்யம் செய்பவன் இந்திரன் முதலிய தேவகணங்களாலும் தேவமங்கையர்களாலும் பூஜிக்கப்பட்டவராகித் துறக்கத்தின்மேல் பதினான்கு இந்திரன் ஆளும்வரை இருப்பான். பகவானாகிய அகத்திய முனிவர் லோபமுத்திரையை மணப்பதற்காகச் சித்தர்கள், வியாஸர் முதலிய முனிவர், நாரதாதித் தபோதனர்கள், சனகாதிகளான சிறந்த முனிவர், சகல தேவர், சிறந்த விமானத்திலிருக்கும் ஆதித்யரும், வசுக்கள், ஆறங்கத்துடன் கூடிய வேதமறிந்த ஏனைய முனிவர்கள் ஆகிய இவரால் எப்பொழுதும் அடையப்பட்டிருக்கிற அத்தகைய பிராகிருதத் தலத்தில் ஆதீஸ்வரருக்குச் சோம்பலின்றி முக்கரணங்களுடனும் வழிபாடியற்றிப் பிரம்மத்திற்கொத்தவராகித் தவம்செய்தார்.'

இருடிகள்:—'மானஸிகபூஜையும், காயிகமான பூஜையும், வாசிகமான பூஜையும் யாவையும் அவைகளின் வேற்றுமையும் இப்பொழுது கூறவேண்டுகிறோம்.'

சூதர்:—'மானஸபூஜையாவது இருதயகமலத்தில் மோக்ஷ சூரியனுக்கொத்த ஒளியுடையதும் இச்சா, ஞான, கிரியா சக்திகளுடன் கூடியதும் முக்காலத்துடன் கூடியதும் உலகமண்டலம் நிறைந்ததும் தூயபளிங்கொத்ததும் வைடூரிய மணியாலமைக்கப்பட்டதும் யோகத்யானத்தால் படைக்கப்பட்டதுமான திவ்ய சிங்காதனத்தில் கலையுடையவராயும் கலையற்றவராயுமான ஈசனைத் தியானிக்க வேண்டும். இதுதான் மானஸபூஜை என்று சொல்லப்படும். முனிவர்காள்! வாசிகபூஜையை இப்பொழுது கூறுகிறேன். மிக்க இன்பமடைந்தவனும், மயிர்க்கூச்செறிந்த வடிவமுடையவனும், வேதம் உபநிடதம் இவைகளின் வாக்கியங்களாலும் அனேகவிதமான துதி பாடல்களினாலும் புராணம்படித்தல்களாலும், வேதபாராயணம் செய்வதாலும், பகலும் இரவும் துதிப்பது வாசிகபூஜை என்று சொல்லப்படும். மிக்கக் கஷ்டத்துடன்கூடிய காயிகமானபூஜையைச் சொல்லுகிறேன்; கேள். பெருக்குதல், மெழுகுதல் இவைகளாலும், தூபம், சந்தனம், கஸ்தூரி, குங்குமப்பூ சேர்ந்த பூச்சினாலும், மதில் கோபுரம்

பெருமண்டபம் முதலியன செய்வதாலும், நந்தவனம் தோட்டங்கள் அமைத்து அதன்கண் மரங்கள் வைப்பதாலும், மகாநைவேத்தியத்துடன் கூடிய பழங்கள் முதலிய பூஜைகளாலும் தினந்தோறும் பக்தியுடன் பூஜைசெய்தல் காயிகி என்று சொல்லப்படுகிறது. ஆகிய இத்தகைய பூஜைகளால் பகலும் இரவும் உபசாரங்களாலும் ஆதீஸ்வரனை ஆயிரவருடம் வழிபட்டதால் பிறகு தேவர் மகிழ்ந்து அகத்தியருக்கு வரமளிப்பவராயினர்.'

ஈஸ்வரன்:—'பெரும் புத்தியுடைய குடமுனிவா! உனது இஷ்டப்படி வரம் வேண்டுவாய். வரங்கொடுததற்குரிய உமக்கு வரமளித்து மிக்க மகிழ்ச்சி விளைவிக்கின்றேன்' என்று பரமசிவன் கூறினர். அதுகேட்டுக் குடமுனிவர், சிவபிரானை வணங்கித் துதிக்க ஆரம்பித்தார்.

அகத்தியர் :—'உயர்ந்த உருவும் பரத்திற்கும் மேற்பட்ட பரதரும் (உயர்ந்த பொருளுக்கும் மேற்பட்டு உயர்ந்தபொருளும்) அணுவுக்குள் அணுவும் பெரியவைகட்குள் பெரிதும் ஆன உமக்கு வந்தனம். முக்காரணமற்றவரும் காரணங்கட்குக் காரணரும் உலகிற்குக் காரணவடிவரும் உலகுவடிவரும் உலகிற்குத் தலைவரும் பசுபதியுமான உமக்கு வந்தனம். ஆதியந்தம் நடுவற்றவரும் எல்லாவுலகுக்கும் இதமானவரும், தொண்டரிதய கமலத்திலுள்ளவரும் பராபரங்களைச் செய்பவரும், பரப்பிரம்ம சொரூபரும், பரமாத்மஸ்வரூபரும், எண்ணத்தின் வழிக்கு எட்டாத வழியிலிருப்பவரும், உருவமில்லாத உருவமான உமக்கு வந்தனம். தத்துவமுதலிய மூர்த்திவடிவமானவரும் உலக மூன்றினைத்தரிப்பவரும் அயனரிஈசவடிவமானவரும் உலகுக்குக் காரணரும், ரிக், யஜுஸ், சாம, அதர்வண வேதங்கள் வடிவரும், சோத்திரவடிவரும், சகல சக்தி மகாவித்தை தரிப்பவரும், எல்லையற்ற ஆற்றலுடையவருமான உமக்கு வந்தனம். வேதாந்தத்தால் அறியக்கிடப்பவரும், புராணபுருடரும், இயற்கையாக மாயையால் மறையப்பட்ட வடிவமுடையவரும், கொடியவடிவமுடையவரும்,, வித்யாவடிவமுடையவரும், நீலரும், கதிகட்குத் தலைவரும், வருடம், அயனம், மாதம், பக்ஷம், நக்ஷத்திரம், யோகம் சம்சர்ப்பம், அம்கஸ்பதி, இவைகளின் வடிவுடையவரும், உயர்ந்த செல்வவடிவரும் முக்குணவடிவானவரும் குணங்கடந்தவருமான உமக்கு வந்தனம்' என்று வேண்டினர். ஏதோ ஒரு பொருளை விரும்புபவரும், குற்றமற்ற மனமுடையவருமான குடமுனியால

இங்ஙனம் துதிக்கப்பட்ட பரமசிவன் வரங்கொடுக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு அவ்வந்தணனது பிரம்மரந்திரத்தில் அங்குசத்தின் அடையாளமுள்ள தன் கையால் தொட்டார். அவ்வகத்தியரும் அக்கைப்படலால் தியானம் குலைந்து கைலாயத்திற்கொத்த பிரபுவும் திருநீரணிந்துள்ள அங்கமுடையவரும், முப்புண்டரம் அணிந்த நெற்றியுடையவரும், அரவுமயமான பூணூலையுடையவரும் யானைத்தோல் போத்தியவரும், அரவணி அணிந்தவரும், பாம்பு ஆரம் அணிந்தவரும் பசுபதியும் முடிவற்ற தேவரும் பிறரால் வெல்லப்படாதவருமாகிய சிவபிரானைக் கண்டு தலையால் வணங்கிக் கை குவித்துக் கொண்டு ஆதியற்றவருமான ஆதீசனை வரம் வேண்டினர்.

அகத்தியர்:—'பார்வதிப் பிரியரே! சமஸார சௌக்யத்தை அடைந்து நன்மனைவியுடன் வேள்வி முதலியன செய்து உமது ஆக்ஞையின் வசமாகி முக்தியடைப்போகிறேன். சிவபிரானே! உலகம் உமக்கு வசப்பட்டதாயிருப்பதால் உம்மை வேண்டுகிறேன்' என்று கூறினன். இங்ஙனம் அகத்தியரால் வேண்டப்பட்ட பிறைசூடிய தேவர் அம்முனிவர்க்கு இல்லறமினிது நடத்த வரங்கொடுத்தார். 'அகத்தியனே! அயன் மகளான லோபாமுத்திரையை விதிப்படி மணந்து இப்பிறவியில் வேள்வியெல்லாஞ்செய்து சத்தியவிரதனைக் கடவாய்' என்று வரமளித்தார். அக்குடமுனிவரும் ஆதீசனை வணங்கி வரம்பெற்றுக் கவேரனது குடிலடைந்தார். கவேரன் குடமுனிவரான அகத்தியரைக் கண்டு பல உபசாரங்கள்செய்து சௌக்யத்தைக் கேட்டார். 'அந்தணர்க்கும் முனிவோருக்கும் நல்லோர்க்கும் அபிமதமான தர்மம் காக்கப்பட்டதால், அறிஞரே! நன்மைதானா? எனது ஸந்நிதியில் சொல்லவேண்டும்' என்று கவேரர் கேட்க மைத்ராவருணியான அகத்தியர் 'அறிஞரே! வேத விதிப்படி தர்மமெல்லாம் காக்கப்பட்டன. அத்தருமங்களை பயனுடையதாகச் செய்யவேண்டும். மறுக்கக்கூடாது' என்று வேண்ட தனதருகிலிருக்கும் அயன் மகளை விதிப்படி அந்த அந்தணனுக்குக் கொடுத்தார். உடனே அகத்தியர் மீண்டும் பிராகிருகஸ்தலம் வந்து பர்ணசாலையமைத்துத் தனது குடிலில் புகுந்தனர். சிறிது காலம் சென்ற பிறகு பரமசிவனை ஆதரவுடன் மகிழ்ச்சிகொண்டு 'கருணைக்கடலாகிய ஆதீஸ்வரரே! எனது பெயர் அதாவது அகத்தியேஸ்வரர் என்ற பெயர் 'உமக்கிருக்கட்டும்' என்று வேண்டினர். ஆதீஸ்வரரும் அதுமுதல் அகத்தியேசுரர் என்ற பெயர் பெற்றார். அகத்தியரும் பிறகு ஆலயத்திற்கு மேற்கில் மதுகானனத்திடை

யில் மதுதீர்த்தத்திற்கு மேற்கில் லோபாமுத்திரையுடன் அக்னிஷ்டோமம் முதலிய வேள்விகள் செய்து மோக்ஷத்திற்காக வாசம் செய்தார். சிறந்த அந்தணரும் உண்மையே பேசுபவருமான அகத்தியர் தீர்த்தங்களுக்குள் உயர்ந்ததான மதுதீர்த்தத்தில் மூன்று தரம் நீராடி பிரம்மயக்ஞம் முதலியவைகளையும் தேவயக்ஞம் முதலியனவைகளையும் லோபாமுத்ரையுடன் செய்து புண்ணியாத்மாவாக விருந்து நிலைபெற்று வந்தார். எவன் மனமொழி மெய்களால் மிகுந்த பக்தியுடையவனாகி வழிபடுகிறானோ அவன் சிவலோகமடைவான். நிஷ்கம் அளவான எண்ணெயிட்டு அதற்களவான திரியைப் போட்டுத் தீபமேற்றுவானாயின் உடனே சிறந்த அறிவு பெறுவான. இங்ஙனம் மூன்று தீபமிடுபவன் திசைகளை ஒளிபெறச்செய்துகொண்டு சிறந்த மலையான கைலாயமடைகிறான. கபிலைப் பசுவின் பால் ஒரு படி கொண்டு தேனுடனும எள் எண்ணெயுடனும ஆதீசரை அபிஷேகஞ் செய்தால் அவன் முக்கட்பிரானுக்கொத்தவனாவான். ஒரு மரக்கால் ஆவின்பால் சோமவாரம் மாலையில் அபிஷேகம் செய்பவன் புனிபோல் வெள்ளிய விமானத்தில் ஏறிச் சிவமந்திரம் அடைகிறான். மாம்பழம், தேங்காய், தயிர், நெய், தேன் இவைகளோடு கூடிய பாலாபிஷேகம் வைகாசிவிசாகத்தில் செய்பவன் இங்கு போகங்களையெல்லாம துய்த்து மகன் பேரன் முதலியவர்களோடு மகிழ்ந்து முடிவில் சிவசாலோக்கியமடைந்து சாயுஜ்யமும் அடைவான். மதுதீர்த்தத்தில் உண்டாகிய சுத்தநீர் நிறைந்த நூறு குடங்களால் ஆதிலிங்கத்தை நீராட்டுகிறவன் நிச்சயமாகக் கங்கையைத் தரிக்கிறான். கௌசும்பநூல் அலங்கரிக்கப்பட்ட ஆடைகளை அலங்கரிப்பவர் பதினன்கு இந்திரர் இருக்கும்வரையில் ஊர்வசியுலகில் மகிழ்ந்து விளையாடுவான். ஐந்து பக்ஷயத்துடன் நைவேதயம் அளிப்பதனல் தேவர் அசுரர் முதலிய குழுவெல்லாம் மகிழ்ச்சியடைகின்றனர். அது செய்ய ஆற்றலற்றவன அதில் பாதியாவது அதிலும் பாதியாவது தனது ஆற்றலளவு நிவேதனம்செய்து, அந்தணரை உண்பித்து அம்மிகுதியை உண்பவன் அக்கணத்திலேயே காணுபத்தியத்தை அடைகிறான். மதுகானனத்திடையில் பிரகிருதேஸ்வரர் சன்னதியில் பசு, பறவை, விலங்கு, இவை பசித்திருந்ததுபோலும் அவைகட்கு எல்லாவுயிர்க்கும நன்மை செய்வதில் பற்றுடைய எவன் அன்னமளிக்கிறானோ அவன், சாசுவதமானபதம் பெற்று அங்கேயே நீண்டகாலம் வசிக்கிறான். ஆதீசரைச் சணபகமலரால் மாலைசூட்டி சிவபூஜை செய்பவன் வருணத்தின வெளிப்பட்டவனாயினும் நாகாபரணனாகவே ஆவான். நூறு வில்வதளத்தாலும், ஆயிரம் புங்க

மலராலும் கார்த்திகைத் திங்கட்கிழமையில் பூஜிப்பவன் கங்கை பிறைச் சந்திரர்களுடன் இருடபாரூடனாய் விளங்குவான். சித்திரை வைகாசி மாதங்களில் எப்பொழுதும் அபிஷேகஞ்செய்பவன் பிரம்ம ஹத்தி முதலிய தோஷங்களினின்றும் விடுபடுகிறான். இதன்கண் ஐயமின்று. சௌரமான கார்த்திகை மாதத்தில் ஒருமாதம் நோன்பு கொண்டு இலை அடிபடாத நெல்லியிலைகளால் அந்தணராயினும், க்ஷத்திரியராயினும், வைசியனாயினும், சூத்திரனாயினும், ஆதிதேவனைப் பூஜிப்பவனாயின் அவர்கட்கு முக்தி கையிலிருக்கின்றது. இது தினம் கவனமுடையவனாகி அந்தணரைக் கேட்பிக்கின்றானோ அன்றியும் பக்தியுடன் கேட்கிறானோ அவன் உயர்ந்தகதி அடைகிறான்.

[ஆக்னேயபுராணத்தில் பிராகிருகேசுர மகிமையில்
26-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## ஐம்பத்தாறுவது அத்யாயம்.

இருடிகள் :—'மதுகானனத்திடையில் மதுதீர்த்தமொன்றிருக்கிறதென்று கேட்கப்பட்டது. அது யார் முன்பு படைத்தது? அதன்பெயர் எப்படி அமைந்தது? அதற்குத் தேவன், மரம் இவற்றை விரிவாக உள்ளபடி கூறவேண்டும். அதன்கண் நீராடும் காலம் விசேஷம், மாதம் வாரம் முதலியவை எங்களுக்குக் கூறவேண்டும். சூதரே! உமது கதையமுதுபருகும் எங்கட்கு மீண்டும் கதை கேட்கவேண்டுமென்னும் ஆவலால் மகிழ்வு பிறக்கவில்லை. பிராகிருகேஸ்வரர் என்ற பெயரின் காரணத்தை விரிவாகச் சொல்லவும்.'

சூதர் :—'முனிவர் யாவரும் கேளுங்கள். சுருக்கமாகச் சொல்லுகின்றேன். விரிக்கவில்லை. இவற்றின் காரணத்தை நடந்தபடி சொல்லுகின்றேன். முன்பு அக்காட்டில் மதுகைடபர் என்ற இரண்டு அசுரர்கள் வசித்துக்கொண்டு உலகிற்குப் பகலும் இரவும் துன்பம் விளைவித்துக்கொண்டு இருந்தார்கள். அரனனவர் இந்திரன் முதலிய தேவர்களாலும் ஏவப்பட்டவராகி மதுகைடபர்களை ஆதிகாலத்தில் கொல்ல முயன்று கொன்று புவியெல்லாம் காத்தார். ஆதலால் மதுகானனம் என்ற பெயர் வந்தது. மது தீர்த்தம் பூமியிற் புகழுடையக் காரணம் கூறுகின்றேன். முன்பு

பிரம்மப் பிரளயம் ஆனவுடன் சூலபாணியான பரமசிவன் பார்வதியுடன் இருடபாரூடராய் நந்திசர் முதலிய பூதகணங்களுடனும் யோகினி முதலிய மாதிருகைகளுடனும் பசுக்களுடனும் சகல தேவர்கள் முதலியவர்களுடனும் இந்திரன் முதலிய லோகபாலர்களுடனும் சனகாதி முனீந்திரர்களுடனும் கந்தர்வர், இயக்கர், கின்னரர், உரகர் முதலியவர்களுடனும் பாதாளத்தில் வசிப்பவர்களுடனும் நாகத்தில் வசிப்பவர்களுடனும் கூடியவராகிக் கைலாய சிகரத்தினின்றும் பிராகிருகத்தில் வந்து அவதரித்தார். கைலாயத்திலிருந்து வந்ததால் களைபபடைந்து பசி நீர்வேட்கைகளால் வருந்திய இந்திரன் முதலிய தேவகணங்கள் மதுகானனத்தில் மரக்காலள்வும் மதுவினைக் குடித்து அத்தலத்தை அதனால் சேறுக்கி மதுவினையுண்டு மகிழ்ந்தவராகி விரைவில் ஓர் மடு தோணடினர். பிறகு தேவர் யாவரும் வந்து உமாபதியான சம்புவைத் தனித் தனி வணங்கத் தேவர் அவரைப் பார்த்து, 'நீங்கள் எங்கு சென்றீர்கள்? எங்கு திருப்தியடைந்தீர்கள்? எதனை அடைந்தீர்கள்? இவற்றை என் முன்பு உண்மையாகச் சொல்லுங்கள்' என்று கேட்டார். அப்பொழுது தேவர்கள யாவரும், 'பிரபுவே! மதுபருகினேம். அமமதுகானனத்தினிடையில் மதுபானம பணணுமிடத்தில குடித்து மிகுந்த மதுவால் விரைவில் ஒரு சிறந்த குழி வெட்டினேம். ஆதலின் அதற்கு மதுதீர்த்தமென்ற பெயர் உணடாகப் போகின்றது. அது எல்லாத் தேவருக்கும் மகிழ்வு விளைவித்ததாதலின் அங்கு நீராடுபவர்க்குப் பாக்கியங்கள் எல்லாம் வளர அருளவேண்டும். அத்தீர்த்ததிற்குப் புகழுண்டாக ஓர் மரத்தினையும் அருள்வீராக என்றனர். உடனே தேவர் நீராடி நோக்கும் பயனளிக்கும் விக்னேஸ்வர தேவனையும் அத்தீர்த்தத்திற்குப் புகழ் உண்டாக அம்மதுக மரத்தையும் (இலுப்பை) தனித்தனியாக ஏற்படுத்தினர்.

நீராடும் காலத்தைப் பற்றி உலகங்கட்கெல்லாம் நன்மை விளைவிப்பதால் கூறுகின்றேன். சைத்ரமாதததில் திங்கட்கிழமையில் பகலில் பக்தியுடன் நீராடுபவன் சிவபிரானுக்கொப்பினை அடைகிறான். வைசாகம் வெள்ளிக்கிழமையில் அருகம்புல், அக்ஷதை பழங்களுடனும் பக்திகொண்டு நீராடுபவனுக்கு இலக்குமி ஸ்திரமாக இருப்பாள். அவனைப் பிறவிகள்தோறும் வறுமையே அணுகாது. நிறைந்த செலவமுணடாவதில் சந்தேகமில்லை. ஜேஷ்

டை (ஆனி) மாதத்தில் சனிக்கிழமையில் விசேஷமாகக் கறுப்பு எள்ளுடன் சனி நாமங்களை ஜெபித்துக்கொண்டு அறிஞன் நீராடட்டும். சனியின் பெயர்களாவன :—கோணன், சனீஸ்வரன், மந்தன், சாயையின் மனத்திற் தோன்றியவன், மார்த்தாண்டஜன், சௌரி, பாதங்கி, கிருகநாயகன் ஆகிய இவைகளாகும். இந்தச் சனியின் பெயர்களைத் தீர்த்த சன்னிதியில் ஜபிப்பவனுக்கு சனி உபத்திரவம் ஒருக்காலும் இருக்காது. அதன்கண் நீராடின் ராகு கேதுக்களின் உபத்திரவமும் மிருத்யு உபத்திரவமும் இருக்காது. ஆஷாடம் (ஆடி) மாதத்தில் தேய்பிறையில் குருவாரத்தில் ஒன்றுமருந்தாத வனுகி மௌனத்தை மேற்கொண்டு தொப்புள் அளவான நீரில்நின்று கொண்டு நீராடுபவனுக்குப் பன்னிரண்டு ஸ்தானங்களிலும் செல்லும் குருவினுடைய உபத்திரவம் இருக்காது. இது ஒருதரம் ஸ்னானத்திலேயே உண்டாகிறது. ஶ்ராவணம் (ஆவணி) மாதச சிரவணத்தில் சனிக்கிழமையோடு கூடிய தினததில் அந்தணர் கொலைபாவம் நீங்கப் பக்தியுடன் நீராடுபவனுக்கு அப்பாபம் நீராடியவுடன் அழிந்து விடுகிறது. கூஷ்மாண்ட கிரகம், டாகினி, பூதனை, வேதாளம், பிசாசு ஆகிய இவைகளின் பீடைகளெல்லாம் நீராடியவுடன் அழிந்துவிடுகின்றன. புரட்டாசி (பாத்ரபதம்) வளர்பிறைச் சதுர்த்தசி புதன்கிழமையுடன் கூடுமாயின் அது பொற்களவு பாபத்தை நீக்குவதாகும். அதன்கண் ஒருவன மனந்தூயவனும் வாய பேசாதவனும் புதன் மந்திரத்தால் புதனை எழுப்பி, வேண்டி, ஈசான்யதிக்கு முகமாகத் திக்கின் ஈசனைப பணிந்து பொற்களவு செய்ததாகத் தோன்றிய குற்றத்தை நீக்குவீராக என்று பணிந்து கழுத்தளவு நீரில் மதுதீர்த்தத்தில் மூன்றுதரம் நீராடுவானுயின் கோடிபிறவிகளில் களவு செய்தவனுயினும், அக்கணத்திலேயே ஆதிநாதர் அருளால் தூய்மையடைவதில் மாறுபாடின்று. ஆச்வயுஜம் (ஐப்பசி) மாதம் வளர்பிறை (நவமி) வெள்ளிக்கிழமையுடன் கூடிய நவமியானது துர்க்கைக்கு மிக்கப் பிரீதி விளைவிப்பதாகும். சிறந்த செல்வமளிப்பதுமாகும். அதில் மதுதீர்த்தத்தின்கண் நீராடுபவன் தேவபிரானுடன் மகிழ்கின்றனன். முன்பு வலம் வந்து மூன்றுதரம் வணங்கி பக்தியுடன் வெள்ளெள்ளுடன் நீராடுபவன் அணிமாதி சித்திகட்கு அரசனுகின்றுன். இங்ஙனம் மூன்றுவருடம் நியமத்துடன் செய்கின்றவன் மகாசேனுதிபதியாகி பிள்ளை பேரன் முதலியோரைப் பெறுகின்றுன். அவன் வழித்தோன்றியவர்களும் பாக்யங்களெல்லாவற்றையும் பெற்றவராகிறுர். அருணனைத் தேர்ப்பாகனுகக்கொண்ட சூரியன்

விருச்சிகத்தில வரும்போது ஞாயிற்றுக்கிழமையில் நீராடுபவர் ஆறு தொழில் காப்பவராவார். அவர்கட்கு ஆயுள், உடல்நலம், துன்பத்தின் நீக்கமுமுண்டாகும். சூரியன் தனுசிலிருக்கையில் சோமவாரத்தில் திருவாதிரையிருக்குமாயின் அப்பொழுது அம்மதுதீர்த்தத்தில் நீராடுபவருக்கு கோவதைப்பாவம் அக்கணத்திலேயே அழிகின்றது. அன்றியும் ஆயிரம் பிறவிகளில் ஈட்டியகொடிய பாவங்களெல்லாம் அக்கணத்திலேயே அழிந்துவிடுகின்றன. இதன்கண் ஐயமின்று. தேவர்களால் பூஜிக்கப்படும் சூரியன் மகரத்தில் வந்தது முதல் மீதுதீர்த்ததில் நீராடுபவன் ஆயிரம் அஸ்வமேதத்தின் குறைவற்ற பயனை அடைகின்றான். அவனுக்குச் சிவபிரானுலகு குறைகிறதில்லை. சூரியன் கும்பராசியில் வரும்போது செவ்வாய்க்கிழமையும் நேருமானால் மதுதீர்த்ததில் நீராடவேண்டும். அவன் இழிந்த ஒழுக்கமுடையவனாயினும், மிக்க பாவியாயினும், கட்குடி களவு, இக்குற்றமுடையவனாயினும் முழந்தாளளவு நீரில் நின்று கொண்டு 'மயோபுக்' என்ற மந்திரங்கொண்டு நீர் குடித்தாவது நீராடுவானாயின் உடனே கட்குடி, களவு, குற்றத்தினின்று நீங்குகிறான். கட்குடித்த பெண் முகம் கவர்ந்தவனும் விடுபடுவதில் ஐயமின்று. அப் மோகத்தினாலாவது பொருள் லோபத்தாலாவது பிறர் மனை முக சம்பனம் செய்பவன் இங்குதான் விடுபடுவான். வேறு இடத்தில் நூறுவருடமிருந்தும் விடுபடமாட்டான். மீனராசியில் சூரியனிருக்கையில், பௌர்ணமியில் விசேஷமாக நீராடுபவன், குரு மனைவி விழைந்தவனாயினும் விடுபடுகிறான். அந்தரிக்ஷ மந்திரத்தால் நீராடி நீர் குடிக்கவேண்டும். அம்மந்திரத்தால் தூய்மை செய்யப்பட்ட நீரினால் அக்கணத்திலேயே அநேக கோடி பிறவிகளில் சேர்த்து வைக்கப்பட்ட பாபக் கூட்டங்களால் விடுபடுகின்றான். இக்காரணங்களால்தான் மதுதீர்த்தம் சிறந்ததாகும். இப் புண்ய யோகங்களில் எவ்வந்தணன் பற்றுடையவனாகி நீராடுகின்றானோ அவன் சித்த புருடனாகிப் பதினான்கு உலகங்களிலும் சஞ்சரிக்கின்றான்.

அநேக இருடிகளும், முனிவரும் வேறு இடங்களில் நோன்பு பயன் பெறுதென்று ஐயமுற்றவராகி ஈண்டு மனைவி மக்களுடன் வந்து சுகிருதமுடையவராயும் ஆகி வருகின்றார்கள். சிறந்த அந்தணர்காள்! பிராகிருகத்தின் பெருமை கூறுகின்றேன்; கேளுங்கள். கைலாயத்தினின்று இந்திரன் முதலிய தேவர்களுடன் வந்த சம்புவானவர் அந்த இந்திரன் முதலிய தேவரால் செய்யப்பட்டதும்

அணிகலங்கள் எல்லாம் அமைந்ததும், பிரகாரங்கள் கொடுங்கைகள் அமைந்ததும், மண்டபங்களால் அமைந்ததும் தேவர்கள் யாவருடனும் கூடியதுமான ஆலயத்தையடைந்து பகவானை அரன், 'நீங்கள் ஆதரவுடன் செய்தமைத்த இந்த எனது ஆலயம் பூவுலகிலும் பிராகிருகமென்று புகழ்படட்டும். தேவர்காள்! இப்புவியில் சுயம்புவான இது காசி முதலியவற்றினும் சிறந்தது. இது புவியில் உலகிற்கு நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது எனக்கு மிக்க பிரீதி விளைவிப்பது' என்று கூறியருளினர். உடனே இந்திரன் முதலிய தேவர் அவரிடம் விடைபெற்றுத் தத்தம் உலகிற்கு விமானத்தில் சென்றனர். இருடிகள், முனிவர் யாவரும் புத்ர பௌத்திரர்கள் ஸௌரவும் முக்தியடையவும் அக்னிஹோத்திரத்துடன் கூடியவராகி இங்கேயே வசித்துவந்தனர். நீங்களும் இத்தலத்திலிருந்து இதன் கண பற்றுவைப்பீராக. இதனை ஆதீசனுடைய சன்னதியில் கேட்பவனுக்கு முக்தி கையிலிருக்கிறது. கைவல்யம் நிச்சயமாகக் கிடைக்கும். இத்தீர்த்தத்தின் பெருமையை உனக்குச் சுருக்கமாகச் சொன்னேன். விரித்துச் சொல்வதாயின் ஆதிசேடனாலும் முடியாது.'

[ஆக்னேய புராணத்தில் பிராகிருகேச்வர மகிமையில் தீர்த்தத்தின் மகிமை கூறலென்ற இருபத்தி ஏழாவது அதயாயம் முற்றிற்று.]

---

## ஐம்பத்தேழாவது அத்யாயம்.

சூதர்:—'முனிவர்காள்! இத்தீர்த்தத்தின் பெருமை யறிந்த முனிவர் புண்ணிய மிகுதியினை யுணர்ந்து இங்கேயே வசித்தனர். அவர்கள் யாவரெனக் கூறுகின்றேன்.

முன்பு ராதந்திரகல்பத்தில், அகத்தியர், கௌதமர், கார்க்கியர், புலஸ்தியர், புலகர், க்ரது, ரதீதரர், அங்கிரஸ், சுமந்து, பைலர், ஒற்றைக்காலர், உயர்தோளர், இலைபுண்பவர், புல்லுண்பவர், உரோமசர், குணகாரி, வக்கிரகேசர், பிப்பலாதர், பிருகத்குக்ஷி, ஆகிய இவர்கள் பிள்ளை பேரன்களுடன் கூடியவர்களாகித் தொங்குஞ் சடை தரித்து வேதாத்யயனத்திற் பற்றுடையவராகி மதுகானனத்தினிடையில் மது தீர்த்தக் கரைகளில் முக்திக்காக வசித்தனர்.

அப்பொழுது சூர்ய வம்சத்திற் பிறந்த அக்னித்வஜன் என்ற சிறந்த அரசனொருவனிருந்தான். அவன் தசாருணங்கட்கு அதிபனும், பாஷண்டி குடிலையடைந்து வருணநிலை, ஒழுக்கம் விட்டவனும் சடைலிங்கம் தரித்து திருநீறு அக்னிஹோத்ரம் செய்தும் பிதுர்காரியம் விட்டவனும் தேவகாரியத்திற்றவறியவனு யும் இருந்து பாஷாண்டியுடன் கூடி பகலும் இரவும் பெரிய பாவம் செய்துகொண்டிருந்தான். இங்ஙனமிருக்கையில் அவன அப் பாஷாண்டிகளுடன் தெய்வச் செயலால் காவேரிக் கரைக்கு வந்து கௌரீமாயூர வன்மீகததலங்களினும சிறந்ததும் சுபமுமானது மான மதுகானனத்திடையிலிருக்கும் மதுதீர்த்தம் அடைந்தான். அவன் ஆங்கிருப்பவரும் இருடிகட்கிடையே விளங்குபவரும் சடை தரித்தவரும், ருத்திராக்கமாலை அணிந்தவரும் முப்புண்டர மணிந்த முகமுடையவரும் சாக்ஷாத் ஈஸ்வரனுக் கொத்தவரும் தரிசித்தோர் வியக்கும் வடிவமுடையவரும் ஆகிய அகத்தியரைப் பார்த்து அனுட்டானத்திற்கிடையே இடங்கிடைக்குமா என்று எதிர்பார்த்திருந்து அவ்வந்தணத் தலைவனைப் பாஷாண்டியுடன் கூடி வணங்கினன். அப்பொழுது குடமுனியான அகத்தியர் 'இச்சடை தரித்தோர் யாவர்? இவர் உன்னை எதற்காக அணடி யிருக்கின்றனர்?' என்று வினவினர். அப்பொழுது அரசன் ஆதர வுடன் கூறியதாவது:—'தலைவரே! யான் அரசர் தலைவன். பாஷாண்டி தர்மத்தில் மிக மயங்கி இத்தகைய பாவமெய்தினன். இப்பொழுது உமது தரிசனத்தாலும் தலமகிமையாலும் முக்தி யடைந்தேன். யான் எங்ஙனம் பாபத்தினின்றும் நீங்குவேனோ அங்ஙனம் அருள்புரிவீர். மக்களிற் தாழ்ந்தவரான பாஷாண்டி கள் என்னைப் பாவியாயும் இததகைய நிலையை அடையும்படியு மாக்கிப் பேசாமல் இருக்கின்றனர். அருட்கடலான முனிவனே! இவர்கட்கும் எனக்கும் பாபவிமோசனம் செய்வீர். வேறு இடம் செல்லேன். தேவரீர்தான் இப்பொழுது எனக்குக் கதியாவீர்.' உடனே அகத்தியர் 'நீவிர் யாவரும் பாவமெல்லாவற்றினும் நீங்க வும் பாஷாண்டித் தன்மை நீங்கவும் பாக்கியத்தால் இத்தலம் வந்து சேர்ந்தீர்கள். இவர்களுக்கும் உனது சகாயத்தால் பாவ மோக்ஷம் உண்டாகப் போகிறது' என்று கூறினர். இதனைக்கேட்ட அரச னும் பாஷாண்டிகள் எல்லாரும் இப்புண்ணிய தலத்தில் மதுதீர்த் தத்தில் விசேஷமாக நீராடி ஆதிலிங்கத்தைத் தரிசித்து மன மொழி மெய்களால் பாவம் நீங்க வணங்கி வரம் பெற்று மது தீர்த்தத்தில் தனித்தனி விதிப்படி நீராடினர். பிறகு அவர் எல்

லோரும் அக்னித்வஜனை முன்னிட்டுக்கொண்டு ஆதிதேவேசரும் எல்லையற்றவரும் தோல் ஏற்றவருமான ஈசனை வணங்கி மூன்று தரம் வலம்வந்து வாயிற்படியில் நின்றனர். அப்பொழுது தெய் வச்செயலால் பெருமலைகள் போன்ற பெரு மேகங்கள் இடிகளு டன் ஆலங்கட்டிகளாகப் பொழிந்தன.. அவ்வரசனும் ஏனையோ ரும் விழுந்த இடியினால் வருந்தி உயிர் தரிக்க ஆற்றாராகி இறந் தனர். உடனே அக்கணத்திலேயே நூற்றெட்டு விமானங்கள் வந்து சேர்ந்தன. அவை கிங்கணி மாலைகள் கட்டப்பட்டவையும் கொடிபதாகைகளால் அணியப்பட்டவையுமாக இருந்தன. யாவரும் அதன் மேலேறி இந்திரலோகம் சென்றனர். இத்தலத்தை நினைக் கவும் இத்தலத்திற்குச் செல்லவும் இத்தலத்தைத் தியானிக்கவும் பார்க்கவும் வணங்கவும் பக்தியுண்டாவது ஆயிரம் கோடிப் பிறவி களில் தோன்றுவதாகும். நான்கு வேதமும் அத்யயனம் செய்த பயன் கங்கை முதலிய தீர்த்தங்களெல்லாவற்றினும் நீராடிய பயன் பூதானம் செய்த பயன் கோதானம் செய்த பயன் ஆகிய இவை ஆதிதேவரைத் தரிசிப்பதாலேயே மக்கள் பெறுகின்றனர். இவ்வக்னித்வஜனது அத்யாயத்தைக் கவனமாகப் படிப்பவனும் எழுதுபவனும் கேட்பவனும் அச்வமேதப் பயனை அடைகின்றான். ஆதீசருக்கு மேற்கே மதுதீர்த்தத்திற்குக் கிழக்கில் பிதுர்க்களைக் குறித்துப்பிண்டதானம செய்யும் சிறந்த அந்தணன் கர்மப் பிரஷ் டத்திலும் கங்கையிலும் நூறுதரம் செய்த பயன் பெறுகின்றான். கயையில் வடமூலைத்தில் செய்யும் பயனடைவான். எள் கோதுமை மாவாலும், சாலி நெற்களாலும், உளுந்து மாவினாலும சேர்ந்த பிண்டமளித்தால் அது குறைவற்ற பயன் அளிக்கும். பிராகிரு கத்தில் ஆணாயினும் பெண்ணாயினும் எவனும் மாத உபவாசம் செய்வானாயின் ஜீவன்முக்தனாவது திண்ணம். பிதுர்க்களுககு முக் திக்காக மதுதீர்த்தத்தில் ஆதீசர் ஸன்னதியிலேயே சிரத்தை யுடன் சிராத்தம் செய்பவனது பிதுர்க்களுக்கு முக்தியுண்டாவது நிச்சயம். அமாவாசையில் கோத்திரம் பெயர் கூறிக்கொண்டு எள் ளுடன் கலந்து தர்ப்பணம செய்தால் எல்லையற்ற மகிழ்வுண்டா கும். நிச்சயமாகத் துறக்கமும் உண்டாகும். மாகமாதத்தின் முடிவில் சிவராத்ரியில் விழித்துக்கொண்டு புராணம் படிப்பானா யின் பரமசிவனாகவே ஆவான்.

சூதர் :—' மதுவனத்தினிடையில் அகத்தியர் முதலிய முனி வரால் எப்பொழுதும் சூழப்பட்டவரும் பார்வதியின் உயிர்த்துணை

வருமான பரமசிவனைப் பக்தியுடன் தியானம் பூஜை உபசாரங் களால் வழிபடுங்கள். வணங்குங்கள்.'

[ஆக்னேய புராணத்தில் பிராகிருக மகிமையில் 28-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## ஐம்பத்தெட்டாவது அத்யாயம்.

இருடிகள் :—' முனிவரே! பிராகிருகமானது எவ்வளவு பரப் புடையது? உமது கதையமுதுபருகிவரும் எங்கட்குக் கூற வேண்டும்.'

சூதர் :—' அந்தணர்காள்! இத்தலப் பரப்பின் அளவினைக் கூற வுங் கோடி வருடமாயினும் முடியாது. அங்ஙனமிருக்க ஆதிசேட னைப் பற்றிக் கேட்பானேன்? அனந்தன், வாசுகி, தக்ஷகன், குளி கன், சங்கன் ஆகிய ஐந்துநாகர் தலைவர்கள் இடையிலும் நான்கு திசைகளிலும் மிகக மகிழ்ச்சியுடன் இததலத்தின் புகழுக்காக வசிக்கின்றனர். அனந்தன் நாகபுரியிலும் வாசுகி வன்மீகத்திலும், தக்ஷகன் சாரக்ஷேத்திரத்திலும், குளிகன் மாயூரத்திலும், சங்கன் இச்சன்னிதியிலும் இருந்துகொண்டு இததலத்தைப் பார்க்கவேண்டு மென்றவாசையால் வசிக்கின்றனர். இத்தலத்திலிறந்தவரும், பிறந் தவரும், உறைபவரும், தேவராவதில் ஐயமின்று. இதன் கண் அந்தணர் தேவரும், க்ஷத்திரியர் கந்தர்வரும், வைசியர் தேவமங் கையரும், சூத்திரர்கள் உரக்கரும், கின்னரர் இழிபிறப்பாளர் பிசா சரும் ஆவர் என்று ஆதரவுடன் எண்ணவேண்டும். அவர்கள் யாவரும் பிராகிருகேசரைத் தரிசிப்பதில் ஒத்தவராவார். அவர் எல்லாரும் ஆதீசர் மகிமையால் கைலாயத்தில் வசிக்கும் முக்கண் ணரும் திருநீறணிந்த வடிவமுடையவரும் சூலங் கைக்கொண்ட வரும் சாரூப்யங்கண்டவரும் சடைமுடி தரித்தவருமாகி நீண்ட காலம் விமானத்தை ஆஸ்ரயித்திருககின்றனர். பிராகிருகத்தில் இருடிகளுக்கும் அந்தணர்களுக்கும் ஜீவனத்திற்கு வழிசெய்பவன் அடையும் புண்ணியம் யாவையென்று கூறுகின்றேன். கேட்பா யாக. அவன் இடபவாகனத்தில் ஏறிக்கொண்டு கைலாயத்தில் உலகபாலர்களால் வழிபடப்பட்டவனும் பிரமதகணங்களால் பூஜிக் கப்பட்டவனும் பார்வதியால் கொண்டாடப்பட்டவனும் இருந்து

கொண்டு கங்கையணி சடையரான ஈசனுடன் விளையாடிக்கொண்டு பதினாயிரம் அயன் கற்பம் உள்ளளவும் வசிப்பான். இங்கு வழி தோறும் தண்ணீர்ப் பந்தலமைத்து நீர்மோரளிப்பவனும் அப் போகங்களெல்லாம் துறக்கத்திற் றுய்த்துத் துறக்கத்தினின்றும் அவன் ஒருநாளும் நழுவுவதின்று. கன்னிகை, கோ, பூமி, இவற் றைச் சிவலோகம் பெறவேண்டித் தானஞ் செய்பவனது பயனைக் கூறுகின்றேன். கன்னிகை தானம் செய்தோன் அயனுலகமும், பூதானம் செய்தோன் சத்திய உலகமும், கோதானம் செய்தவன் கோவுலகமும் பெற்று இஷ்டப்படி வசிக்கின்றனர். ஐந்தக்ஷர முடையதும் பிரணவத்துடன் கூடியதும் சாந்தத்துடன் கூடியது மான மந்திரத்தை ஜெபிக்கவேண்டும். அதாவது சாந்தம் 'ஹ' யாந்தம் 'ர' இவற்றை முன்பு சேர்த்து 'ஹர ஓம் நமசிவாய' என்று கூறவேண்டுவதாகும். ஜபம் வேள்விகளிற் பற்றுடையோர் இம் மந்திர சித்திக்காகச் சித்திக்ஷேத்திரமாயிருத்தலின் இத்தலத்து அகோரமான பீஜத்துடன் கூடியதாயும் அறுசக்கரமுடையதாயும் புவனேஸ்வரியுடன் கூடியதாயும் மாரி யந்திரத்துடன் கூடியதாயும் இம்மந்திரத்தை ஜபிக்கவேண்டும். சித்திக்ஷேத்திர மகிமையும் பார் வதியின் சன்னிதியிலாகும். மதுதீர்த்தத்தின் வடகரையில் பய னெல்லாம் அளிப்பதான மதுகானனத்திடையில் இலுப்பை மரத் தடியில் ஜெபித்தால் அணிமா முதலிய ஐச்வர்யங்களின வெற்றி யுண்டாகும். அன்றியும் இவ்வுலகின் கண்ணும் சிறப்புண்டாகும். வெண்கலப் பாத்திரத்துடன் எள் தானம் செய்பவனுக்கு எப் பொழுதும் செல்வம் ஆயுள் சித்திப்பதுடன் கடன் நீங்குதலும் உண்டாகும். கார்த்திகைப் பௌர்ணமியில் விசேஷமாக இதநீர்த் தத்தில் நீராடி கோபி சந்தனம் விபூதி இவை தானம் செய்பவ னுக்குச் செல்வமெல்லாம் வளர்வதுடன் மக்கள் பேரன் முதலி யோரது வளர்ச்சியுமுண்டாகும். சிவலோகம் பெறவேண்டி வைகாசி மாதததில் பழங்களுடன் வெல்லம் தானம் செய்வோன் யமலோகம் அடையான். ஆதீஸரின் நிர்மாலிய நீரினால் நீராடு வோனுக்கு உடனே அபஸ்மாரசம்பந்தமான நோய் நீங்குகின் றது. வேறு தேயத்தவன் தான் தூய்மையடைய இத்தலம் வந்து மூன்று மாதமாவது ஒரு மாதமாவது ஒரு பக்ஷமாவது அரைப் பக்ஷமாவது இருக்கவேண்டும். நாய் மாமிஸம் உண்டவ னாயினும் இத்தலத்தில் மூன்றுதரம் வலம் வந்து ஐந்து தரம் வணங்கி மீண்டும் வலம்வந்து வழிபடுவானாயின் துறக்கம் எய்து வான். சாதி வருணம் நிலைகளிற் குறைந்த மக்களும் நீராடிப்

பாபமற்றவராகி உயர்ந்த கதியடைகின்றனர். முனிவர்காள்! இப் புராணம் உண்மையாக உலகின் சாரமாயும் சாத்திரங்களின் உண் மைப் பொருளாயும் வேதமெல்லாவற்றினும் அறியப்படும் பொரு ளாயும் நல்லோரால் மிகுதியாக எடுத்துரைக்கப்படுவதாயும் பிறப்பு இறப்பு நோயாகிய சம்சார வைத்யமாயும் சொல்லப்படுகின்றது. பாவமற்ற முனிவராகிய நீவிர் யாவரும் மிக்க நல்லறிவு தோன்ற சுத்தமாயிருப்பதான இவ்வுண்மைப் பொருளை யோகியானவன் சித்தரஸத்தைப்போலக் கவனமாகக் கேளுங்கள். முனிவர்காள்! நீவிர் சிறந்த பெருமையையுடையவராயும், பாக்கியமுடையவராயும், குற்றமற்றவராயுமிருக்கின்றபடியாற்றான் உமக்கு இத்தகைய நற் புத்தி தோன்றிற்று. இது பாபமெல்லாமகற்றுவதும் புண்ணியம் வளர்ப்பதுமாகும். இதனைத் தினந்தோறும் பக்தியுடன் கேட்பவர், பக்தி மிகுதியால் எவ்வித சௌபாக்யமும் பெறுவதில் ஐய மின்று.

[ஆக்னேய புராணத்தில் பிராகிருகேஸ்வர மகிமையில் 59-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## ஐம்பத்தொன்பதாவது அத்யாயம்.

முனிவர்:—'மிக்க அறிஞனும் சாதகிரமெல்லாமறிந்தவனும வியாஸரருளால் பெற்ற சிவத்யானத்தில் பற்றுடையவனும் ஆகிய சூதரே! உமது முகத்தாமரையிற்றோன்றிய பரமசிவ கதையாகிற அமுதை காதாகிய பாத்திரத்தாலே பருகியும் யாம் மகிழ்வு பெற் றேமில்லை. மிக்க அறிஞர் தலைவரே! சுத்யானந்த வடிவரான மகேஸ்வரரது மற்றொரு கதையினை மீண்டும் எமக்கு விரித்துக் கூற வேண்டுகின்றனம்.

சூதர்:—' இங்ஙனம் அம்முனிவர் தலைவர்களுள் வேண்டப் பட்ட பௌராணிகரிற்றலைவரான சூதர், தொண்டர் கருத்தளிக் கும் பரமசிவனைப் பார்வதி, விக்னேஸ்வரர், கந்தர் இவர்களுடன் கூடியவராக மனதில் நினைத்துக்கொண்டு, நைமிசாரணியத்தில் வசிக்கும் முனிவரைப் பார்த்துக் கூறினர். ' முனிவர்காள்! உல குக்கருள் புரியும் அம்பிகையுடன் கூடிய பரமசிவனது மிகத் தூயதான கதையை, இருபகள் யாவரும் கேளுங்கள். ' முன்பு

அயனது இரண்டாவது பாரதத்தில் துவாபரயுகத்தில் விந்திய மலைக் காட்டில் கடன் என்ற மிக்க பலமுடைய ஒரு வேடனிருந்தான். அவன் தனது மனைவியாகிய அனிந்தை முதலியோருடன் கூடிவனுகிக் கிழங்கு, வேர், பழம் முதலியவற்றையும், மிருகங்களின் ஊனையும் மகிழ்ந்தவனுயும, தடையற்றவறிவுடையவனுயும் சிலகாலந் திரிந்து வந்தான். இங்ஙனம் சுகமாக இருக்கிற அவனது காடுகளில் தெய்வச்செயலால் மழையில்லாதிருக்க, மரங்களெல்லாம் பயனற்றதாயின. மிருகங்களெல்லாம் புல் கொடிகளில்லாமல் வேறு காட்டிற்குச் சென்றன. அவனும் நீர் கூடக் கிடைக்காமையால் காட்டினைவிட்டு மிருகங்களுடையதும், நீர் நிறைந்ததும் பயன் மரமுள்ளதும் ஆகிய காட்டினைத் தேடிக்கொண்டு, மனைவியுடன் பகலுமிரவும் எல்லாத் தேயங்களிலுமலைந்து பசி தாகங்களினுல் மிகவும் வருத்தப்பட்டவனுகி இரவும் பகலும் உணவின்மையால் வாடிய வடிவுடையவனுகிச் சிரமமாக அனேக தேசங்கள் சென்று முடிவில் முன்னைய ஊழ்வினையால் சந்தனுரணியம் வந்து சேர்ந்தான். அவன் அங்குள்ள தென்னை, மாதுளை, மா, பலா, நாரத்தை, ஆச்சா, அரசு, ஆல், விளா, நெல்லி முதலிய பழமுள்ள மரங்களையும் ஜாதி செண்பகம், புன்னை, மருதம் ஆகிய புஷ்பமுள்ள மரங்களையும் மற்றைய மரங்களையும் மல்லிகை முல்லை முதலிய பூங்கொடிகளையும் மற்றும் அழகிய மலருடையவைகளையும் மான், பன்றி, எருமை, யானை, புலி, கிரி, ஒந்தி முதலிய உண்ணுதற்குரிய பிராணிகளையும், பலா, மாம் பழங்களையும் அழகிய வாழைமரத்தின் வாழைப்பழங்களையும் தேன்களையும், தாமரை, கருநெய்தல், மீன், *ஆமை* இவைகளுடன கூடியனவும் தெளிவான அழகிய தீர்த்தம் நிறைந்த தடாகங்களையும், தெள்ளிய நீரமைந்தவையும் அனேகம் பறவைக் கூட்டங்கள் சூழ்ந்தவையும் பல்வகை அழகுவாய்ந்தவையான பெருங் குளங்களையும் கிணறுகளையும மான் பறவைகள் நிறைந்தவையும் ஒருவர்க்கொருவர் பகையற்ற இருடிகள் தினந்தோறும் நிறைந்தவையுமான முனிவர் குடில்களையும் பிராகாரம், கோபுரம், முதலியவற்றுடன் கூடிய தேவாலயத்தையும், சிறந்த தொண்டரால் வழிபடப்படும் மேற்கு முகமான இலிங்கத்தையும் பார்த்து, மனைவியோடுகூட மகிழ்ந்த மனமுடையவனுகி, காடு மிக அழகாயிருப்பதால் இங்கேயே வசிக்கவேண்டுமென எண்ணினுன். அவன் கந்த மூல பழங்கள் நிறைந்ததும் மரநிழலுடையதும் கூடிய அக்காட்டில் தனியாக தனக்கு இருப்பிடம் அமைத்துக்கொண்டான். அவ்

வேடர் தலைவன் மனைவியுடன் தனது குடியின்கண் சுகமாக இருந்துகொண்டு கிழங்கு, பழம், ஊன் இவைகளால் தனக்கு ஜீவனஞ் செய்துவந்தான். தவத்தினர் பலர் வசிக்கும் சந்தனவனத்தில் சுகமாக ஐந்தாறு வருடம் இவ்வேடன் வசித்த பிறகு தனது தேயத்திலுள்ள தனது உறவினரைப் பார்க்கவேண்டுமென எண்ணினான். கடன் தனது மனைவியைக் கூப்பிட்டு, 'நாம் நமது தேசத்தைவிட்டு வேறு தேசத்திற்கு வந்து நீணட நாளாயிற்று. நமது உறவினர் யாவரும அங்கிருக்கின்றனர். அவரையும் அவ்விடத்தையும் பார்க்க ஆவலாயிருப்பதால் ஒரு விஷயம் சொல்கிறேன் கேட்பாயாக. அதாவது அழகும் கற்புமுடைய காதலி! யான் இரண்டு மாதம் சென்று அங்கிருக்கும் உறவினரையும் விலங்கு பறவைகளுடன் கூடிய அவ்விடத்தையும் பார்த்துவிட்டு மீண்டும் விரைவில் உனதருகில் வந்துசேருகிறேன். அதுவரையில் எப்பொழுதும் மொழி மெய்களை அடக்கிக்கொண்டு இங்கேயே இருப்பாய்' என்று கூறினான்.. 'அழகிய முகமுடையவளே! நீ கற்புடையவளாயின் நீ இம்மொழிக்கு மாறுபாடான பதில் கூறக்கூடாது. நான் கூறியபடி செய்வாய்' என்று கூறினான். இங்ஙனம் கணவரால் கூறப்பட்ட அனிங்கையானவள் மிக வருந்திக் கணவனருகில் வெட்கத்தால் தலைவணங்கி, நாதனே! நான் மிக்க கருணை பாராட்டத் தக்க அபலை. மேலும் எனது உறவினர் எல்லாம் விட்டும் தேவரீரைவிட்டும் வேறு மக்களில்லாத காட்டில் யான் தனியாக யிருக்கவாற்றேன். தேவரீர் என்னைத் தனியே விடுதல் தகுதியன்று?' என்று கூறினாள். உடனே வேடன் இங்ஙனம் கூறிய அவளைத் தேற்றிக்கொண்டு, 'பெண்ணே! எனக்கு உன்னைப் பிரிந்து ஊணும் உறக்கமும் ஓரா. ஆகையால் உன்னருகில் விரைவில் வந்துவிடுகிறேன்' என்று கூறினன். கடன் அப்பொழுது தன் மனைவியினின்றும் விடைபெற்று, அவளால் விடப்பட்டவனாகித் தனது தேயத்திற்கு மகிழ்ச்சியுடன் சென்றான். அனிங்கையும் அவன் சென்ற பிறகு தன்னிடத்திலிருந்து வெளியிற் செல்ல மனமில்லாதவளாயும் வேறுபட்ட முகமுடையவளாயுமானாள். அப்பொழுது வேறு தேசத்திலிருந்து இளைஞனும் அழகனும் பேசுந்திறம் வாய்ந்தவனும் அழகிய கண்ணுடையவனாகிய ஒரு வேடன் சந்தனாரணியத்தில் அவ்வேடனது இருப்பிடத்திற்கருகில் அங்கிருக்கும் அவ்வனிங்கையைப் பார்த்து காமனம்புக்கு இலக்காகினன். அவளும் தன்னிடத்திலிருந்து வெளிக்

கிளம்பி ஆகாரத்திற்காக அலைந்துகொண்டிருக்கையில் அவ்வழகிய வேடனைப்பார்த்து வியந்து காமனம்புக்கு வயமாயினள். இங்ஙனம் அவ்விருவரும் காட்டில் வசித்து வரவர சினேகிதத்தால் அன்புண்டாகி அவளுடன் அவனுக்குக் கலவியும் நேர்ந்தது. இங்ஙனம் கெட்ட ஒழுக்க மேற்கொண்டு அவளுக்குக் கர்ப்பம் உண்டாகிச், சிறிதுசிறிதாக வளர்ந்தது கண்டு அவளும் அக்கருவின் குறிகண்டும் தன் கணவன் வேறு தேயத்திலிருந்து மீண்டும் வருங்காலத்தையும் பார்த்துக்கொண்டும் கவலைகொண்டவளாயினள். ஒரு முகூர்த்தகாலம் சிந்தித்து அந்த ஜாரனைக் குறித்து, 'அன்பனே! எனது கணவன் வருங்காலம் நெருங்கிவிட்டது. விரைவில் உமது தேசம் செல்வீர். அங்கு சென்று என்னை நினைக்க வேண்டும். என்னை மறந்துவிடாதே' என்றும் கூறினாள். அவனும் மகிழ்வுடன் சென்றான். அணிந்தையும் தன் கணவன் வரும் வழியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு கருத்தரித்திருப்பதால் மிகவும் பயந்து வீட்டிலிருந்தாள். இங்ஙனமிருக்கக் கடன் குறித்தகாலம் வராமல் அங்கேயே தாமதித்து மீண்டும் வந்தான். மெல்லிடையளான அவளும் தனது கணவனை எதிர்கொண்டழைத்து அக்கடனுடன் தனது உறவினர் குழுவினைப் பற்றியும் தனது தேய சரித்திரத்தைப்பற்றியும் முறையாகக் கேட்டாள். அவனும் எல்லாம் கூறினான். பிறகு கடன் தனது மனைவி கருத்தரித்திருக்கும் குறியுடையளாயிருத்தல் கண்டு மனத்தில் ஐயங்கொண்டு, 'கொடியவளே! நீ இப்பொழுது கருவுற்றவளாகத் தோன்றுகின்றாய். யான் வேறு தேயம் சென்ற பிறகு இஷ்டப்படி வேறு எவனோடு இருந்தாய்? பொய்யின்றி என் முன்னிலையில் உண்மையாகக் கூறு. இல்லாவிடில் உன்னைக் கத்தியால் வெட்டிக் கொன்றுவிடுவதில் ஐயமில்லை' என்று கூறினான். அவள் கோபத்துடன்கூடிய கடன் மொழியைக்கேட்டு அக்காலத்திற்கொத்த மொழி அப்பொழுது கூறினாள். 'நீர் என்னிடத்தில் அன்பின்மையால் இக்கொடிய மொழி கூறுகிறீர். உம்மைத் தவிர வேறு யாரையும் இங்கு கண்ணாற்கூடப் பார்த்தறியேன். இக்கருத்தரிக்கச் செய்தது நீர்தான். வேறு ஒருவருமின்று. நீர் ஊரைவிட்டுப் போவதற்கு முன் தினங்களில் செய்தது இது என்பன' என்றிங்ஙனம் கூறியும், மனைவியை அச்சுறுத்தி மீண்டும் கோபத்துடனும் யுக்தியுடனும் கூடிய சில வார்த்தையை யோஜித்துச் சொன்னான். 'கொடியவளே! நான் ஊருக்குச் செல்லுதற்கு முன் இதைப் பார்க்கவில்லை. நீ நிச்சயமாக வியபசாரணியாவாய்.

கலியாணம் ஆனநாள் முதல் இதுகாறுமில்லாது இக்கரு இப்பொழுதுமாத்திரம் என்னமாகத் தோன்றும்? ஆகையால் எனது வீரியத்திற்றோன்றியதல்ல' என்று அக்கடன் கூறியவுடன் பெண் தன்மையில் சாகசமாக மீண்டும் கூறினள். அதாவது கருத்தருப்பித்தலும் மழையின் யோகமும் மக்களது ஆயுள் நிச்சயித்தலும் மக்களது வாழ்க்கையும் இப்புவியில் யார் அறிவார்? ஆகையால் எல்லாம் தெய்வச் செயலால் உண்டாவதில் ஐயமில்லை' என்றவாறு கூறினள். உடனே அவ்வேடன் பற்களைக் கடித்துக்கொண்டு கோபத்துடன் 'எல்லாம் தெய்வச் செயலால் உண்டாவதாயின் கொடியவறிவினளே! கடவுளருகில் வந்து சூளுரைப்பாய்' என்றனன். இவன் இங்ஙனங் கூற அவள், 'உனக்கு எங்கு நம்பிக்கை இருக்கிறதோ அக்கடவுள் சன்னிதியில் சூளுரைக்கிறேன். ஐயுறேல்.' என்றனள். இங்ஙனம் தன் மனைவி கூறக் கேட்ட அவ்வேடன் கோபத் தீயால் தவித்தவனாகி 'யாவுக்கும் தலைவனான சங்கரர் இச்சிவாலயத்திலேயே மேற்கு முகமாக இருக்கிறார். அவர் சன்னதியில் வந்து உண்மையாகச் சூளுரைப்பாய்' என்றனன். இங்ஙனம் நாயகனால் கூறப்பட்ட அவ்வனிதையும் மிக்க சாகசத்துடன் நந்தீசருக்கிடையில் விரைவாகச் சென்று பயமின்றி, 'தலைவரே! என் வயிற்றிலிருக்கும் கரு இவர் வீரியத்தினின்றும் தோன்றியது. இதில் ஐயமின்று' எனச் சூளுரைத்தாள். அக்கொடியவள் பயமின்றி நந்தீசருக்கிடையில் நல்லறிவுடன் பொய் கூறியவுடனே அவளது கரு கணத்திற்குள் கீழே விழுந்தது. ஈசரும் உடனே கிழக்குமுகமாக ஆகிவிட்டார். அந்தணர்காள்! பொய் கூறிய தாய் கருவானது புவியில் நழுவிக் கீழேவிழுந்தது. ஆதலால் சிந்தனவனேசரான சம்புவுக்கு புரூணக்னேசர் என்று பெயர்வந்தது. திருவாஞ்சியேசத் தேவரும் பூகைலாயபதியுமான அச்சிவபிரானது கதையைச் சிரத்தையுடன் கேட்பவர் பொய் கூறுவதிலேயே பற்றுடையவராயினும் விடுபடுவோராவர். இக்கதை கேட்டதினால் மலடியும் மக்கள் பெறுகின்றாள். மக்களில்லாதவரும் இக்கதையை படிப்பதினாலும் கேட்பதினாலும் மக்கள் பெறுகின்றனர்.'

[ஸ்காந்த மகாபுராணத்தில் சிவரகஸ்ய காண்டத்தில் ஏழாவதம்சத்தில் மேற்பகுதியில் தலமகிமையில் சிவபிரானுக்குப் புரூணக்னேசர் என்ற பெயர் வந்தவகை கூறல் என்ற 59வது அத்யாயம் முற்றிற்று.]

# அறுபதாவது அத்யாயம்.

முனிவர் :—' இங்ஙனம்கேட்டுப் புராணமறிந்தவறிற்றலைவரான சூதரைப்பார்த்து அவ்வேடன் மனைவி என்னகதியடைந்தாள்? என்று வினவினர். இங்ஙனம் முனிவரால் கேட்கப்பட்ட அச்சூதரும் அவ்விருடிகளைப்பார்த்து, 'கேட்பீராக. அத்தலமகிமையால அவ் வேடனும் அவன் மனைவியுமாகிய இருவரும் அச்சந்தனாரண்யத்தி லிருந்து முடிவுகாலத்தில் துர்க்கதியடைந்தாரில்லை. ஆனால் அவ் விடத்திலேயே நீண்டகாலம் அவ்விருவரும் வசித்து சுகம் அனுப வித்து முடிவில் நன்கு கைவல்யமடைந்தனர்' என்று கூறினர். மீண்டும் இங்ஙனம கூறிய சூதரைப்பார்த்து, அவ்விருதம்பதிகட்கும் எங்ஙனம் நட்புண்டாயிற்று? என்று கேட்க சூதர் அப்பொழுது முனிவரைப் பார்த்துக் கூறினர். 'பிறகு வேடன் மனைவியானவள் எனக்கு அறிவில்லாமையால் இது நேர்ந்ததல்லவா; யான் செய்ய வேண்டுவது யாது? எங்கு செல்லவேண்டுமென்று கவலையுடைய வளாகி இருந்தாள். அவள் சிவபிரானால் தண்டிக்கப்பட்டபடியால் பிரமரகீட நியாயம்போல் பயத்தால் அவ்விலிங்க வடிவத்தையே நினைத்துக்கொண்டிருந்தாள். அவள் பொய் கூறிய கணத்திலேயே கரு கீழ் விழுந்து அதுமுதல் அவ்விலிங்கத்தில் பயமும் பக்தி யும் உண்டாயிற்று. அவளது மனம் பக்தியாலும் பயததாலும் தெள்ளியதாயிற்று. பிறகு அவள் சங்கரரைத் தைரியத்தால் சரண்புக்காள். வேதமறிந்தவருக்குள் சிறந்தவளான அவள் பக லும் இரவும் இடைவிடாமல் சிவபிரானிடத்துப் புக்தியால் மஹா லிங்கத்தைத் தியானித்து பற்றுடையவளாயும் சிவபிரானிடத் தில் அறிவு ஒழுங்கு இருப்பதினால் ஊணுறக்கமின்றி இருந்தாள். அந்தணர்காள்! மனம் ஒற்றுப்பாட்டினால் அந்தஃபமானது ஏற்பட் டது. முயற்சியின்றியே உலகினை மறத்தலும் உண்டாயிற்று. இங்ஙனம் சிறிது காலமிருந்து விருப்பத்தால் துதிக்க ஆரம்பித் தாள். அந்தணர்காள்! நடந்தது நடக்கப்போவது எல்லாம் பரம சிவனது விளையாட்டு என்றும், இத்தலத்தின் மகிமை என்றும், அவள் மனதிற்றோன்றியது. ஆதலால் சிவபிரானுக்கு முன்பு அவள் கூறத்தொடங்கினாள். 'திருவாஞ்சியநாயகரான சிவபிரானே! உனது மாபாசத்தால் கட்டுப்பட்டிருக்கிறேன் என்று கூறிய என்னைப்பார்வதி காதலரும் கருணைக்கடலுமாகிய தேவரீர் என்னைக்காக்க வேண்டும். இயங்கும் பொருளும் இயங்காப் பொருளும் அமைந்த இவ் வுலகு உமது விளையாட்டாற்றோன்றியது. சிவன் முதலிய யாவ

ரையும் மேவுபவரும் தேவரீரே யாவீர். சங்கரரும் தூர்சடியுமான உமது ஏவலின்றிப் புல்லுமசையாதாமாயின. யான் செய்வது யாது இருக்கிறது? அதனால் நான் குற்றமுடையவனாக எங்ஙனமாவேன்?. எல்லா பூதங்களும் யந்திரமாகவும் தேவரீர் இயந்திரியாகவும் இருக்கிறீர். ஏ! ஈசுவரனே! நான் யந்திரம், நீர் யந்திரி. ஆதலால் எனக்குக் குற்றமின்று. சிவபிரானே! நீர் மக்களது கருமத்திற்கு ஒத்தபடி ஏவுகின்றீர் என்று சொல்வீராயின் தலைவராகிய உமக்குச் சாத்திரங்களில் விதிக்கப்பட்டதன் பயமாதல் அழிந்துவிடும். மார்க்கண்டேயர் முதலிய தொண்டரைக் காத்தலில் உமது ஸ்வாதந்திரியம் காட்டப்பட்டது போல் பிரபுவே! என்னிடத்திலும் காட்டி எளியேனைக் காக்கவேண்டும. நீர்தான் எனக்குக் கதி யாவீர். வேறு என்னைக் காப்பார் இன்று' என்று இங்ஙனம் கூறித் துதிக்க ஆரம்பித்தாள். 'மகாதேவரான உமக்கு வந்தனம். எனது குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். முப்புராரியும் உலகநாதனும் சந்தனக் காட்டின் தலைவரும் கங்கை தரித்தவருமாகிய உமக்கு வந்தனம். எனது குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டுகின்றேன். முதல் முடிவற்றவரும் எப்பொருளின் கண் வசிப்பவரும் சச்சிதானந்த வடிவரும் பிறைசூடியுமான உமக்கு வந்தனம். எனது குற்றங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறேன். மங்களாம்பிகையுடன் விளையாடுதற் கண் ஆசையுடையவரும் எமன் செருக்கடக்கியவரும் மதனன் பகைவருமாகிய உமக்கு வந்தனம். எனது குற்றங் கடிந்து பொறுத்துக்கொள்வீர். குப்தகங்கைக் கரையின் கண்ணுள்ள அழகிய ஆலயத்தில் விளங்குபவரும் எட்டு மூர்த்தியுடையவருமாகிய உமக்கு வந்தனம். எனது குற்றங் களைந்து பொறுத்துக்கொள்வீராக. கபாலமாலையும் என்புக் கூட்டங்களும அணிகலமாக அணிந்தவடிவமுடையவரும் ஆகிய உமக்கு வந்தனம். எனது குற்றங் களைந்து பொறுத்துக் கொள்வீராக. திருநீறு பூசியிருத்தலால் மிகத் தூய்மையாயிருக்கும் முழுவடிவமுடையவரும் அரவமணிந்த பிரபுவும் முக்கண்ணனுமாகிய உமக்கு வந்தனம். எனது குற்றங்களைப் பொறுத்துக் கொள்வீராக. அயன் முதல் தம்பமெல்லையான பிராணிகளின் வடிவந் தாங்கிய பிரபுவும் எப்பொருளின் உள்ளும் உள்ளுநரைப் பொருளுமான உமக்கு வந்தனம். எனது குற்றமகற்றிப் பொறுத்துக் கொள்வீராக. உமக்கு ஆரத்தியாகப் பாவிக்கப்படும் மயானத்தின் அங்கிக்குச் சமீபத்திலுள்ள தொண்டரன்பனை உமக்கு வந்தனம். எனது குற்றங்களைப் பொறுத்துக் கொள்வீராக. அருட்

கடலான 'பிரபுவே! எனக்கு முன்போல் எனது கணவனுடன் கூடியிருக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. ஆகையால் எனது கணவரது கோபமாகிய காட்டுத்தீயை அணைத்து இப்பொழுது விரைவில் என்னிடத்தில் முன்போல் அன்புசெலுத்தச் செய்வாய். சிவபிரானே! எனது குற்றத்தால் நேர்ந்த பாவக்கூட்டங்களை விடுவித்து முடிவில் உமது சாயுஜ்யத்தைக் கொடுக்கவேண்டு' மென்று, இங்ஙனந் துதித்து அனிந்தையானவள் இருந்தாள். பிறகு அவள் கணவனுக்குத் தெய்வச் செயலால் காம மயக்கத்தால் நட்புண்டாயிற்று. இங்ஙனம் ஈஸ்வரனருளால் ஏற்பட்ட பிரிவின்மையடைந்து அத் தம்பதிகளுக்கு அன்பு வரவர வளர்ந்தது. அவ்வேடத் தம்பதிகள் மகேசரரது மகிமையை உணர்ந்து ஈஸ்வரனிடத்தில் பக்தி செய்துகொண்டு அங்கேயே நீண்டகாலம் வசித்தார்கள். பரமசிவனது வழிபாட்டினாலும் அத்தலத்தில் வசிக்கும் மகிமையினாலும் அவ்விருவரும் பாவங்களெல்லாம் விட்டு நீங்கிச் செய்வன செய்த வருமாயினர். அவ்விருவரும் நீண்டகாலம் ஸ்ரீசந்தனாரண்யத்தில் போகங்கள் துய்த்துச் சாயுஜ்யமடைந்தனர். அந்தணர்காள்! அது முதல் சந்தனவனத் தலைவருக்கு சர்வாபராதசகர் என்ற பெயர் வந்தது. திருவாஞ்சியத்தில் செய்யப்பட்ட பாபம் அங்கேயே விரைவில் அழிந்துவிடுகின்றன. வேறு ஆலவாய் முதலாய தலங்களில் நீங்காவாம். முனிவர்காள்! ஆலவாய் முதலிய தலங்களில் பாபம் செய்தோருக்கு வேறு தேயத்தில் செய்த பாபமும் முற்பிறவியிற் செய்த பாபமும் அழிகின்றன. திருவாஞ்சியத்திலே கோடி பிறவிகளிற் செய்த பாவமும் இங்கிருந்து செய்த பாவமும் எல்லாமழிந்துவிடுகின்றன. அத்தல மகிமையை நீண்டகாலத்தால் எடுத்துக்கூற சரஸ்வதியாலும் அயனாலும் அரியாலும் முடியாது. இங்கு எமனுக்கும் பைரவருக்கும் அதிகாரம் இல்லை. முனிவர்காள்! திருவாஞ்சியம் காசிக்கு அதிகமாய் இருப்பதாகும். காசியில் எல்லாப் பாபங்களும் அழியாததாலும் பைரவர் தண்டம் தரித்தவராகிப் பாவிகளைத் தண்டிப்பவராயிருக்கிறார். இத்தலத்தில் பாபங்கள் அழிவு அடைகின்றன. புண்ணியந்தான் வளருகின்றது. ஆதலின் திருவாஞ்சியத்தில் சுகமாக உட்கார்ந்திருக்கிறார். காசியில் அத்தலத்தில் செய்த பாபம் அழிகின்றதில்லை. ஆனால் வேறு தேயத்திற் செய்த பாபக்கூட்டங்களெல்லாம் அழிந்துவிடுகின்றன. காசியில் புண்ணியமும் பாபமும் ஆலம்விதை போல் வளர்கின்றது. திருவாஞ்சியத்திலோ அம்மாதிரி இல்லை.

ஆனால் புண்ணியம் மாத்திரம் வளர்கின்றது. இறந்த பிராணிக ளுக்கு, சாம்பரான திருவாஞ்சியநாயகர் அப்பொழுதே வலதுகாதில் தாரகத்தினை உபதேசம் செய்கிறார். அங்கு முன்பு அரியானவர் லக்குமியைப் பெற கொடிய தவம் செய்து ஈசனருளால் இலக்கு மியைப் பெற்றார். முனிவர்காள்! இத்தலம் இலக்குமிக்கு விருப்பமாயிருப்பதால் திருவாஞ்சியமென்னும் பெயருடையதுமா கும். அதற்கு ஈஸ்வரரான மகாதேவர் திருவாஞ்சியேசர் என்று சொல்லப்படுகிறார். மற்றும் பல்வகைக் காரணங்கொண்டு பல நாமங்கள் இருக்கின்றன. முனிவர்காள்! பக்தர் வேண்டுகோள் அளிக்கும் இந்த ஈசரது திருவாஞ்சியேச மகாலிங்கத்தின் பெருமை யைக் கோடிவருடங்களாயினும் அயன், அரி, தேவர் முதலியோ ராற் சொல்லமுடியாது. உருத்திரன் எடுத்துக் கூற வாற்றலு ண்டயவரா, இல்லையா, என்ற விஷயத்தில் ஐயமுண்டு. ஏனெனில் அந்தணர்காள்! இதன் பெருமை எவ்வளவென்பதில்லை. தொண் டர் வேண்டும் பொருளளிப்பதும் ஸ்வயம்புவுமான இந்த லிங்கத் திற்கு ஒத்தது மூவுலகிலுமில்லை. முனிவர்காள்! லிங்கமானது ஏழுபாதாளத்திலிருந்து உலகுக்கெல்லாம் நன்மைக்காகத் தோன் றிய பழமையானதாகும். லிங்கம் கணக்கற்ற அயனாலும் கணக் கற்ற அரியாலும் கணக்கற்ற தேவேந்திரன் முதலியோராலும் மகிழ்வுடன் வழிபட்டதாகும். முனிவர்காள்! பழமையான அவ் விலிங்கத்தை ஒரு தரம் பார்த்தப பாபிகளும் சிறந்த முக்தியை அடைகின்றனர். இதன் கண் ஐயமின்று. திருவாஞ்சியேசருக்கு வடக்கில் சிவசூலததால் ஏற்படுத்தப்பட்டப் புண்ணிய புட்கரணி மிக்கத் தூய நீர்மையுடையதொரு பொய்கையிருக்கின்றது. கங் கையானவள் ஏதோ ஒரு காரணத்தால் பின்வேஸரால் ஏவப்பட் டவளாகி தொளாயிரத்துதொண்ணூற்றொன்பதம்சத்துடன் மறைந் திருக்கிறாள். இப்புவியில் மக்கள் நீராடியதனல் அந்தணர் கொலை முதலிய பாபங்களும அழிந்துவிடுகின்றன. மக்கள் வேண்டுவதும் பெறுகின்றார்கள். ஒருதரம் நீராடினாலேயே மனிதன் முக்தி நிச்சயமாக அடைகின்றான். அத்தீர்த்தத்தின் பெருமை ஆதி சேஷனாலும் கூறவாற்றாது. முனிவர்காள்! இப்புவியில் நூற்றி லொருவனும் ஆயிரத்திலொருவனும் அறிகின்றான். எவர் இக் கதையினை மகிழ்வுடன் கேட்கின்றனரோ, படிக்கின்றாரோ, எழுது கின்றனரோ அவர் புத்தி பூர்வமாகச் செய்த பாபத்தினின்றும் நீங்குவர். இங்கு மக்கள், பொன், மனைவி முதலியனவும் செல்வம்

தானியம் முதலியனவும் ஆகிய சுகத்தை அனுபவித்துப் பிறகு முடிவில் கைலாயத்தை நிச்சயமாக அடைவர்.

[ஸ்காந்தபுராணத்தில் சிவரகசிய காண்டத்தில் ஏழாம் பகுதியில மேற்பகுதியில் திருவாஞ்சிய மகிமையில் வேடத் தம்பதிகள் சாயுஜ்யமடைதலென்ற 73-வது அத்யாயம் முற்றிற்று.]

---

## அறுபத்தியொன்றுவது அத்யாயம்.

சூதர் :—' சிவபெருமானைத் தனது இருதய கமலத்திற் தியானித்துக்கொண்டு குருவின் முகத்தினின்றும் திருவாஞ்சியத்தலப் பெருமையைச் சிவபெருமான் கட்டளையால் கேட்பவரும் படிப்பவரும் சிவபிரானது சாயுஜ்யமடைவதில் சந்தேகமில்லை. திருவாஞ்சியத் தலமகிமை கூறுவோனைப் பதினாறு உபசாரங்களுடன் வழிபடுபவன் உயர்ந்த கதியடைவான். சாத்திரமறிந்தவனான இத்தல மகிமையைக் கூறுவோனைப் பல்லக்கிலேற்றிக் கிராமப் பிரதக்ஷிணம் செய்வித்து அவன் வீட்டிற் புகச்செய்து அவன் கட்டளையைத் தலையால் ஏற்று, மீண்டும அவனுடன் அவன் வீட்டில் பொருள்களையும் உதவிகளையும் அளித்து அவனுடன் உண்பவர் சிறந்த சௌக்கியம் பெற்று ஜீவன் முக்தியடைகின்றனர். அத்தல மகிமையைக் கூறுவோனுக்குத் தனம் முதலியன கொடுப்போர் தமது மக்கள் பேரன் முதலியவர்களுடன் குபேரனுக்கு ஒத்தவராவார். திருவாஞ்சியத்தலமகிமைப் புத்தகம் இருக்கும் வீட்டினை நைமிசத்தினும் சிறந்ததாகச் சிவபிரான் அறிகின்றார். ஆகையால் மிக்க முயற்சியுடன் சிவ மகிமை கூறும் நூலைத் தினந்தோறும் வழிபட்டுப் பின்பு உண்ணவேண்டுமென்று வேதத்தின் கட்டளையாகும். புராணங் கூறிய அந்தணனுக்குக் கொடுக்கப்பட்ட பொருளைச் சிவபிரானுக் கொடுத்ததாக விஷ்ணுவானவர் மகிழ்கின்றார். சிவபக்தியுடையவர் மீண்டும் சிவபக்தனுக்கு அன்ன முதலிய யாவும் சிவபிரான் மகிழ்ச்சிக்காக அளிக்கவேண்டும். திருவாஞ்சியத் தலமகிமைச் சரித்திரம் கேட்கும் மக்கள் சிவனையொத்தவராயினர் என்று வேதத்தின் பொருளுணர்ந்தோர் கூறுகின்றனர். எதை அந்தணர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லி

யிருக்கின்றனரே அதை ஒரு சிவபக்தனுக்குக் கொடுத்தாலே பயன் பெறுகின்றது. யாவும் அறிந்த புராணங் கூறுபவன் அந்த ஸண்டத்தில் மீண்டும் மிக்கச் சிறியதும் தூயதுமான புத்தியினலேயே உண்மையை அறிவுறுத்திக் கேட்போருக்குத் தனது ஆத்ம ஞானம் தோன்றும்படி செய்வோன் தன்னையறிந்தவனும் உத்தமனும் ஆவான். நல்ல அந்தணருடன் நாம்தான் சிவன் என்ற எண்ணத்துடன் இருக்கவேண்டுமென்று அனுசாஸனம் பண்ணுபவனை அந்தணர் தலைவனும் புராணம் அறிந்தவனும் வேதத்தின் முறைப்படி ஒழுகும் அந்தணனுவான். இங்ஙனம் அரசர் வைசியர் முதலியோருக்குப புராணம் கேட்பதில் மனம் தூய்மை உண்டாகி அதனுல் தன்னறிவு ஆசிரியரின் அருளால் தோன்றும். மைத்ரேய கார்க்கி என்ற இரு பெண்களும் ஒளிரும் ஈசன் பாவனையை மனதில் அனுபவித்து சித்தாந்தக் கடலாயிருக்கிறேம் என்ற எண்ணத்தைச் செய்தார்கள், என்று பிருகதாரண்ய சுருதியில் நன்கு கேட்கப்பட்டது. ஆதலால் பெண்களுக்கும் மறை முடிவு பொருள் கேட்பதில் சிரத்தை உண்டாகலாம். திருவாஞ்சியேசர் அருளால் அதிகாரமும் உண்டு. வாஞ்சேசரை முக்கரணங்களாலும் வழிபட்டு சாக்ஷாத் மிக்க ஜோதியும் உயர்ந்ததற்கு உயர்ந்ததுமாகிய வாஞ்சினுதராகவே இருக்கிறேன் என்றும் பாவனை சிரத்தை பெண்களுக்கும் தோன்றுமாயின் அப்பொழுது உயர்ந்த ஜோதி ஒளிர்கின்றது. உயர்ந்த கதியும் உண்டாகின்றது. ஆக புராணம் சொல்லுபவனது பாதாப்ஜ சேவையால் எல்லாச் சாஸதிரங்களிலும் எல்லோருக்கும் மீண்டும் அதிகாரம் உண்டாகின்றது. ஆகையால் புராணங் கூறுபவனை அறிஞர் இகழக்கூடாது. அங்ஙனம் இகழ்பவன் மீண்டும் கொடிய ரௌரவாதி நரகங்களில் பதிந்து அழுகின்ருன். இவ்வத்யாயம் படிப்பதால் இம்மை மறுமை இரண்டும் அடைகின்ருன்.

[ஸ்காந்தமகாபுராணத்தில் குடகுமலைக் காண்டத்தில் திருவாஞ்சிய மகிமை புராணங் கூறுபவனைப் புகழ்தல் என்ற 12-வது அத்யாயம் முற்றிற்று.]

சுபம்! சுபம்!! சுபம்!!!

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

Printed at the "Sri Mahabharata Press,"
Kumbakonam.